A TALE OF BETRAYAL

சாரங்கதரன் யட்சகானம்



Institute of Asian Studies
Madras - 600 096, India.

A TALE OF BETRAYAL

சாரங்கதரன் யட்சகானம்

General Editors

Dr. SHU HIKOSAKA, Dr. G. JOHN SAMUEL

Editor

Dr. P. SUBRAMANIAM

Rendered into English

G.S. BALAKRISHNAN

Institute of Asian Studies

Chemmancherry, Madras - 600 096

India.

A TALE OF BETRAYAL

Editorial Assistance (English) - **V. Ganesan**

© Institute of Asian Studies

First Edition - 2nd March, 1996

Publication No. 39

PRICE Rs. 400/- US $ 65

Copies can be had from :
Publications Division
Institute of Asian Studies
Chemmancherry,
Madras - 600 096.
India

Phone . Office : 4928628, 4928662
Residence : 4925085
Fax : 91-44-4928959

CONTENTS

		Page
1.	பதிப்புரை	1—8
2.	Editor's Note	9—11
3.	ஆய்வுரை	13—58
4.	Preface	59—84
5.	A Tale of Betrayal (Text - Tamil and English)	85—407
6.	துணை நூல்கள்	408
7.	சொல்லடைவு	409—418
8.	பாட்டு முதற்குறிப்பு	419—421

பதிப்புரை

உலகளாவிய நிலையில் சுமார் அறுபதினாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் ஓலைச்சுவடிகள் உள்ளன என்பதை ஆசியவியல் நிறுவனம் கண்டறிந்துள்ளது. என்றாலும் அவ்வனைத்துச் சுவடிகளின் பெயர் முதலியவை அடங்கிய அட்டவணைகள் முழுமையாக உருவாக்கப்பெறவில்லை. பெயர் முதலான செய்திகள் அறியப்பட்ட தமிழ்ச் சுவடிகளுள் யட்சகான இலக்கியங்கள் என்ற பெயரில் ஆறுசுவடிகளே கிடைத்துள்ளன. அவை ஆறுமே சென்னை, அரசினர் சுவடி நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆறு சுவடிகளையும் பதிப்பித்துத் தொடர்ந்து வெளியிட வேண்டும் என்று இந்த நிறுவனச் சுவடித்துறையில் முடிவெடுக்கப்பட்டது. மேலும்,

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்" (பாரதியார்)

என்னும் கோட்பாட்டின்படி நம்முடைய சுவடிச் செய்திகள் வெளிநாட்டவருக்கும் சென்று சேரவேண்டும் என்ற பெருநோக்கில் அவற்றை ஆங்கில மொழி பெயர்ப்புடன் வெளியிடுவது என்பது நிறுவனக் குறிக்கோளாக இருந்து வருகிறது. இந்தச் சுவடிப் பதிப்புகள் அனைத்தும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிடப்பெறவேண்டும் என்பதும் அந்தக் குறிக்கோளுள் அடங்கியதாகிறது.

நிறுவனச் சுவடித்துறை எடுத்துள்ள இந்த முடிவின்படி 'நீலி யட்சகானம்' என்னும் சுவடி தேர்ந்தெடுக்கப்பட்டு, 1994 டிசம்பரில் பதிப்பித்து அச்சிடப்பட்டது. அந்நூல் தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டின்போது 1.1.95இல் தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. தமிழக அரசின் முடிவிற்கிணங்க அந்த நூல் தமிழில் மட்டுமே வெளியிடப்பட்டது. என்றாலும் நிறுவனக் குறிக்கோளின்படி, ஆங்கில மொழி பெயர்ப்போடு கூடிய தனிநூலாக A TALE OF NEMESIS என்னும் பெயரில் இன்று (2.3.96) வெளியிடப்படுகிறது.

'சாரங்கதரன் யட்சகானம்' என்னும் இந்நூல் யட்சகான வரிசையில் இரண்டாவது நூலாகப் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. முதல் யட்சகான நூல் எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டின் தொடக்கவிழாவில், தமிழக அரசால் வெளியிடப்படும் சிறப்பினைப் பெற்றது போலவே, இரண்டாவது யட்சகான நூலாகிய இது, நிறுவனச் சொந்தக் கட்டிடமாகிய செம்மஞ்சேரி வளாகக் கட்டிடத் திறப்பு விழாவில் வெளியிடப்பெறும் பேற்றினைப் பெறுகிறது.

பதிப்புச்சுவடி

இந்நூலுக்கான ஓலைச்சுவடி. சென்னை, அரசினர் சுவடி நூலகத்தில் டி.501ஆம் எண்ணில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. 125 ஏடுகளையுடைய இச்சுவடி, பல ஏடுகள் முறிந்தும், பிழைகள் மலிந்தும், கையெழுத்துத் தெளிவில்லாமலும் காணப்படுகிறது. டி.505ஆம் எண்ணில் உள்ள இதே யட்சகானச் சுவடி ஒன்று ஒப்பிட்டுத் திருத்தங்களை மேற்கொள்ளுவதற்குப் பெரிதும் உதவியது.

பதிப்பிற்குரிய டி.501ஆம் எண்ணுள்ள சுவடியின் தொடக்கத்தில் 'ராம சிங்கு படிக்கின்ற சாரங்கதார யட்சகானம்' என்னும் தொடர் காணப்படுகிறது. அடுத்துக் கடவுள் வணக்கப் பாடல் தொடங்கிவிடுகிறது. அடதாளம், ஏகதாளம் சம்பை, திரிபுடை என்னும் நான்கு வகைத்தாளப் பெயர்களும், அர்த்த சந்திரிகை, கந்தபத்தியம், குறளடித்தரு, சிந்து, தரு, திபதை, வெண்பா என்னும் பாட்டு நடைப் பெயர்களும் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று ஒவ்வொரு பாடலின் தலைப்பிலும் அமைந்துள்ளது. 174 பாடல்களால் இயன்ற இச்சுவடி வாழ்த்தும் மங்களமும் கொண்டு முடிகிறது.

"துன்மதி வருடம், ஆனி மாதம், 6 ஆந்தேதி புதவாரநாள் சத்தமியும் பூர நட்சத்திரம், மிதுனலக்கினமும் கூடின சுபதினத்தில், சோமங்கலமுடையார்... அவர் புத்திரன் ராமசிங்குக்கு எழுதிக்கொடுத்த சாரங்கதரன் யட்சகானம் எழுதி நிறைந்தது" என இச்சுவடியின் இறுதியில் காணப்படும் செய்தியால் இச்சுவடி, படி எடுக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. இதனால் இந்தச் சுவடி எழுதப்பட்ட காலத்தை மட்டுமே அறிய முடிகிறது. நூலாசிரியரின் காலம் எது என்பது இச்செய்தியால் உறுதிப்படுத்த முடியவில்லை. நூலாசிரியரைப் பற்றிக் கிடைக்கின்ற பிற செய்திகள் ஆய்வுரையில் இடம்பெறுகின்றன.

பதிப்புப் பணிகள்

அஷ்ஷகானம், திருவிளங்கொண்டோன், பசுபதினாயகர், விநாயகன் கடாஷ்ஷம், உண்ணாமலையம்மை, வெள்ளைவாறணன், தாயருளுண்டாமே, சரஸ்துபதி, றாசறாசாக்கள், புன்றியங்குறைவன்றி என்று சுவடியில் எழுதப்பட்டிருந்த சொற்களும் தொடர்களும் முறையே,

யட்சகானம், திருவுளங்கொண்டோன், பசுபதிநாயகர், விநாயகன் கடாட்சம், உண்ணாமுலையம்மை, வெள்ளைவாரணன், தாயருளுண்டாமே, சரஸ்வதி, ராசராசாக்கள், புண்ணியங்குறைவன்றி எனத்திருத்தம் செய்து பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளன.

பூஷணங்களும் - **யிரவலர்க்கருள்** (12)
வாழ்ந்திடும் **யில்லில்** அணைந்தான் (40)
மயலாகினேன் **யென்னைநீ** (55)

—என்பன போன்று சுவடியுள் பெரும்பாலான இடங்களில், யகர, யிகர உயிர்மெய்கள், உடம்படுமெய்யாக அகர, இகரங்களுக்குரிய இடங்களில் அமைகின்றன. அவையும் மெய்யெழுத்துக்களை யடுத்தும், வாக்கியத் தொடக்கத்திலும் கையாளப்பெற்றிருக்கின்றன. அவை பதிப்பில் திருத்தப்பெற்றன.

இகர, எகர, ஒகர உயிர் மெய்களின் நெட்டெழுத்துகள் பெரும்பாலும் உயிர்மெய் நெடில் வடிவம் பெறுவதில்லை. அவை முழுமையாகத் திருத்திப் பதிப்பிக்கப்பட்டன. ஆனால் இவை சுவடிச்சொற்கள் என்று கொடுக்கப்பட்ட அடிக்குறிப்பில் கொடுக்கப்படவில்லை.

வெண்டிய பெர்வந்து வெண்டியரு ளுதவும்
.....பதம்பணி வெனெ (2)
மொக மயலெலாந் திர்க்க - (7)
பலவந்தன் பெயர்நிதி மைந்தன் (8)
மைந்த ரில்லாத விடுமொரு விடொ (9)

விபரிதம், உன்மிதில், தொஷம் என்பனபோன்ற பல தொடர்கள் முறையே,

வேண்டிய போர்வந்து வேண்டியரு ளுதவும்
.....பதம்பணி வேனே எனவும்,

மோகமயல், தீர்க்க, நீதிமைந்தன், வீடுமொரு வீடோ, விபரீதம், உன்மீதில், தோஷம் எனத் திருத்திப் பதிப்பிக்கப்பட்டன. இந்தத் தவறுகள் ஏற்பட்டதன் காரணத்தை அறிந்தால், திருத்திப் பதிப்பிக்க வேண்டியதன் அவசியத்தை உணரலாம். அதாவது,

எகரம், ஒகரம், மெய் ஆகியவை புள்ளியிட்டு எழுதிவந்த முறையில் எகர, ஒகர உயிர்மெய்க் குறில்கள் புள்ளியிட்டும், உயிர்மெய் நெடில்கள், புள்ளியிடாமலும் எழுதப்பட்டு வந்தன. அப்போது உயிர்மெய்க் குறில் கெ, செ, பெ என்ற வடிவிலும், நெடில் கெ, செ, பெ என்ற வடிவிலும் எழுதப்பட்டு வந்தன. இதே போல ஒகர உயிர்மெய்க்குறில் கொ, சொ, பொ என்ற வடிவிலும், நெடில் கொ, சொ, பொ என்ற வடிவிலும் எழுதப்பட்டு வந்தன. மெய் எழுத்து உட்படப் புள்ளியில்லாமல் ஓலைச் சுவடிகளில் எழுதும் நிலை ஏற்பட்டபோது எகர, ஒகர உயிர் மெய்களின் குறில், நெடில் வடிவங்களிடையே வேறுபாடு இல்லாத நிலை உண்டாகிவிட்டது. எனவே பொருளமைதி, யாப்பமைதி போன்ற அடிப்படையில் இடத்திற்கேற்பக் குறில், நெடில் வடிவங்களை அமைத்துப் பதிப்பிக்க வேண்டிய நிலை பதிப்பாசிரியர்க்கு உண்டாயிற்று. மேலே குறிப்பிட்ட குறில் நெடில் அமைப்புகள் அவ்வாறு திருத்தப்பட்டவையாகும். இகர, ஈகார உயிர் மெய் வடிவங்களும் ஓரேமாதிரியாக எழுதும் வழக்காற்றால் ஏற்பட்டுவிட்டது. எனவே அந்த வடிவங்களையும் திருத்தி அமைக்க வேண்டியதாயிற்று.

சுவடிகளில் உள்ளவற்றைத் திருத்திப் பதிப்பிக்கக் கூடாது. அவ்வாறு பதிப்பிப்போர் அதமர் ஆவர் என்பன போன்ற கருத்துகள் சான்றோர்களால் கூறப்பட்டு வருபவையாகும். அக்கருத்துகள் நூலாசிரியரின் சொற்களையோ தொடர்களையோ கருத்துகளையோ திருத்திப் பதிப்பிக்கக்கூடாது என்னும் பொருளில் கூறப்பட்டவையே யாகும். ஆனால் இன்று நமக்குக் கிடைக்கும் ஓலைச் சுவடிகள் பெரும்பான்மையும் நூலாசிரியர் எழுதிய சுவடிகளிலிருந்து படியெடுக்கப்பட்டவை யாகும். இச்சுவடிகளில் உள்ள பிழைகள் பெரும்பாலும் நூலாசிரியருடைய பிழகளாகா. படியெடுத்தோரால் ஏற்பட்டவையே யாகும். சான்றாக, நீலியட்சகானம் என்னும் சுவடி, பதிப்பிப்பதற்காகப் படியெடுக்கப்பட்டது. ஓலைச்சுவடியிலிருந்து படியெடுத்து வந்தவர்,

"ஐந்து வாண்முக மைந்திரு செங்கைசேர்
தந்தி வாண்மலர்த் தாள்கள் சிரங்கொள்வாம்" (பா.1.)

என்னும் அடிகளை,

"ஐந்து வாண்முக னமர்ந்திரு செங்கைசேர்
தந்தி வாண்மலர்த் தாள்கள் சிரங்கொள்வாம்"

என்று எழுதி வந்தார்.

பொருள் புலப்பாட்டில் சிக்கல் ஏற்பட்டது. உரிய ஓலைச்சுவடியை எடுத்து ஒப்பிட்டபோது, 'னமர்ந்திரு' என்னும் தொடரில் ரகர எழுத்து உள்ள இடத்தில் காலோ(ர) ரகரமோ காணப்படவில்லை. தொடர்ச்சியாக 'மைந்திரு' என்று மட்டுமே இருந்தது. படியெடுத்தவர் 'ன' என்பதை னகரமாகக் கொண்டு, 'மைந்திரு' என்றால் பொருள் இல்லை என்றும் ரகரமெய் ஒன்று சுவடியில் விடுபட்டு விட்டது என்றும் கருதி அதைச் சேர்த்து 'னமர்ந்திரு' என்று எழுதி வந்தார். ஒப்பிட்ட பிறகு, ஐந்து வாண்முகம் ஐந்திரு செங்கை என்னும் தொடர்முறையாகப் புலப்பட்டது. இவ்வாறு சுவடிகளிலிருந்து படியெடுத்தவர்கள் பார்த்து எழுதுவதிலும், ஒருவர் சுவடியைப் படிக்க, ஒருவர் எழுதுவதிலும் நிகழ்ந்துள்ள பிழைகள்பல சுவடிகளில் நிறைந்து விட்டன. அவற்றைத் திருத்திப் பதிப்பிப்பது நூலாசிரியரின் தொடரை மாற்றுவதாகவோ அவருக்கு இழுக்குக் கற்பிப்பதாகவோ ஆகாது, சான்றாக,

"பச்செலை பலநிறால்ப் பூசனை புறிந்து.....
மன்னவன் சாகூஷிட்டாங்க வணக்கமுஞ் செய்து" (பா. 13)
"பன்றுகிரோம ன்றன்றிக் கொண்டிருக்க" (வசனம் 7)

என்பன சுவடித்தொடர்கள். சுவடியில் உள்ளதைத் திருத்திப் பதிப்பிக்கக் கூடாது என்போர் கருத்துக் கிணங்கப் பதிப்புப் பணியை மேற்கொண்டால் இந்தச் சுவடித் தொடர்களைப் படித்தறிவதற்கு மிகுதியான உழைப்பு வேண்டியதாகிவிடும். இந்த அளவு பெருமுயற்சி செய்து படித்தறிய யாருமே முன்வரவும் மாட்டார்கள். அத்தனை உழைப்பையும், முயற்சியையும் பதிப்பாசிரியர் மேற்கொண்டு விட்டால் நூல் அனைவருக்கும் எளிமையானதாகிவிடும். மேற்கண்ட தொடர்கள்,

"பச்சிலை பலநீரால் பூசனை புரிந்து....
மன்னவன் சாஷ்டாங்க வணக்கமுஞ் செய்து"
"பண்ணுகிறோ மென்றெண்ணிக் கொண்டிருக்க"

—என்று திருத்திப் பதிப்பிக்கப்பட்டன. இவற்றுள் பிழைபட இருந்தவை திருத்தப்பட்டனவே தவிர மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. மேலும் சுவடியில் இருந்த தொடர்களும் அடிக்குறிப்பில் அப்படியே கொடுக்கப்பட்டுள்ளன.

"சுதனில்லாத் துயரம் ஞானவெ கிறுபையது"
"நின்மனவி யரிலொர் நின்றைய மான....
முற்ற பூவைதன் வயத்தில்" (13)
"எந்தன் மனதில் என்றிய வன்றம்"
"குன்றடி யினிரப பிலா குளிக்கவெ குளமும்" (14)

என்பன முறையே,

'சுதனில்லாத் துயரம் நாணவே கிருபையது'
'நின்மனைவி யரிலோர் நின்னய மான....
'மூத்த பூவைதன் வயிற்றில்'
'எந்தன் மனத்தில் எண்ணிய வண்ணம்'
'குன்றடி யினிற்பலர் குளிக்கவே குளமும்''

எனத்திருத்தம் செய்து பொருள் புரியுமாறு முறையாகப் பதிப்பிக்கப்பட்டன.

'எற்குமொ மகனிறநதிதிர பெறுநதாதை' (166)
'கயயில் வந்து மண்டுதந்த காண்டிபன் வாளி' (170)
'திரகாயிசயதி வாழ நதனனெ' (172)
'செயசெஷாலபதிவாகனாறணாபுட்பவஞ்சியறகு' (174)

என்னுந் தொடர்கள் சாதாரணமாகப் படித்துப் பொருளறிய இயலாதவை. இவை முறையே,

'ஏற்குமோ மகனிறந் ததிற்பெருந் தாதை'
'கய்யில் வைத்து மீண்டுதந்தக்(மீண்டது) காண்டீபன் வாளி'
'தீர்க்காயுசா யதிவாழ்ந் தனனே'
'செயசேஷா சலபதி வாகநாரணர்-புட்பவஞ்சியர்க்கு'

என்ற முறையில் பதிப்பிக்கப்பட்டன.

சுவடியில் உள்ள கையெழுத்துப் புரியாத இடங்கள், பிழையான தொடர்கள் போன்றவை நூல்முழுமையும் மலிந்து கிடக்கின்றன. எனவே பலவிடங்கள் திருத்தியே பதிப்பிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு, மிகுதியான காலத்தையும் எடுத்துக்கொண்டது.

"கூத்தனென் பார்கள் கூத்திநீ என்றுஞ்
சாத்தியே பின்னையுந் தான்புகல் வானே" (67)

என்னுமடிகளில் 'சாற்றியே' என்பது சாத்தியே என்று எழுதப்பட்டுள்ளது. எதுகை நோக்கி இதனைத் திருத்தாமல், பொருள் கூறும்போது சுட்டிக் காட்டப்பட்டது. பதிப்பு முறையில் மேலும் திருத்தம் பெற வேண்டிய இடங்கள் பல உள்ளன என்பதை மறுக்க முடியாது.

பாடல்களின் பொருளுக்கேற்பச் சுருங்கிய தலைப்புகள் ஆங்காங்கு கொடுக்கப் பட்டன. அவை அடைப்புக் குறிக்குள் அமைகின்றன. அந்தத் தலைப்புகளை மட்டும் தொடர்ந்து பார்த்தால் ஓரளவு கதையின் போக்கு முழுமையாகக் கிடைத்துவிடும். மேலும் ஒருவர் கூற்று, ஒருபொருள் பற்றிய செய்தி போன்றவற்றில் ஏதேனும் ஒரு கருத்தை அறிய இத்தலைப்புகள் பெரிதும் பயன்படக்கூடும். பாடல்களுக்குத் தொடர்ச்சியாக எண்கள் கொடுக்கப்பட்டன. அதேபோல வசனங்களுக்கும் தொடர் எண் கொடுக்கப்பட்டுள்ளது. அவ் வெண்கள் வசனத்தின் இறுதியில் வலதுபுறம் இடம் பெறுகின்றன. இவ்வாறு எண் கொடுக்கப்பட்டு நூலினுள் 174 பாடல்களும் 95 வசனங்களும் இடம்பெறுகின்றன என்பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள சொல்லடைவில் சொற்கள் இடம்பெறும் பாடல்களின் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வசனங்களில் இடம்பெறும் சொற்களுக்கு வ.5, வ.10, வ.26 என 'வ' என்னும் எழுத்துடன் வசன எண்கள் தரப்பட்டுள்ளன.

நன்றி

ஆசியவியல் நிறுவனமாகிய இந்நிறுவனத்தில் சேர்ந்தபோது 'வர்ம சூத்திரம்' என்னும் சுவடியைக் கொடுத்துப் பதிப்பிக்கச் செய்து பெருமைப்படுத்தியதோடு, தொடர்ந்து யட்சகான நூல்களைப் பதிப்பிக்கும் பொறுப்பையளித்து, முதல் யட்சகான நூலாக 'நீலியட்சகானம்' என்னும் நூலைப் பதிப்பிப்பதில் பலவகையிலும் ஊக்கமளித்துத் தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டின் தொடக்கவிழாவில் அதை வெளியிட்டுச் சிறப்பித்தது போலவே, இரண்டாவது யட்சகான நூலாகிய 'சாரங்கதரன் யட்சகானம்' என்னும் இந்நூலை, நிறுவனத்தின் சொந்தக் கட்டிடமாகிய செம்மஞ்சேரி வளாகக் கட்டிடத் திறப்பு விழாவின்போது வெளியிட வேண்டும் என்று கூறி எனக்கு ஊக்கமளித்து நூலைச் சிறப்புற முடிக்கத் தூண்டியவர்களாகிய நிறுவன இயக்குநர்கள், வணக்கத்திற்குரிய

டாக்டர் ஜி.ஜான்சாமுவேல், டாக்டர் ஷ.ஹிகோசகா

ஆகிய அறிஞர் பெருமக்களுக்கு என்றும் நன்றியுடையேன்.

பதிப்புப் பணியின் போது சாரங்கதரன் வாசகப்பா போன்ற சுவடிகளை ஒப்பிட்டுக் காண்பதற்கு அச்சுவடிகளைப் படியெடுத்து **உதவியவர்கள், புலவர் இராதா.ஜெயலட்சுமி** அவர்களும் திரு.**எம்.மருதமுத்து** அவர்களுமாவர்: சாரங்கதரன் அம்மானை, சாரங்கதரன் - தமிழ் நாடகம் ஆகிய நூல்களைத் தேடிக் கண்டு, படியெடுத்து (Xerox Copy)க் கொடுப்பதில் தங்கள் **உழைப்பை நல்கியவர்கள்,** புலவர் **பா.கண்ணையன்** அவர்களும் **திரு.செந்தூர்பாண்டியன்** அவர்களுமாவர். சுவடியிலிருந்து எழுதிய ஏடுகளையும் உரை, குறிப்புரை ஆகியவற்றையும் முறைப்படுத்தித் தூயபடி எடுத்துக்கொடுத்து **உதவியவர்கள் திருமதி.மேகலா இளங்கோவன், திருமதி.வெண்ணிலா இளவரசு** ஆகியோர். இராச மகேந்திரபுரம் பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் தெலுங்கு நூல்கள், ஆய்வேடுகளிலிருந்து எடுத்துக்கொடுத்து உதவியவர்கள் டாக்டர் **ஜே.விசத்தியவாணி** அவர்கள். சொல்லடைவு தயாரித்தல், அச்சுப்படித்திருத்தம் செய்தல் போன்றவற்றில் துணைபுரிந்தவர்கள், செல்வி.ச.சுமதி, திரு.**கி.பன்னீர்செல்வம்** ஆகியோராவர். சுவடிகளைப் பயன்படுத்திக்கொள்ள உதவியவர்கள் அரசினர் சுவடி நூலக அன்பர்கள். தட்டச்சுப் பணியில் முழுமையான உழைப்பை அளித்தவர்கள் திருமதி.நே.உமாராணி அவர்கள். அட்டைப்படத்தை உருவாக்கி நூலை அழகுபடுத்தி முழுமைபெறச் செய்தவர் ஓவியர் திரு.**அ.செ.நடராசன்** அவர்கள். அழகுற அச்சிட்டு நூல் முழு வடிவம்பெற உதவியவர்கள் அக்ஷரா நிறுவனத்தினர்.

அனைத்துப் பெருமக்களுக்கும் அன்பு உள்ளங்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

பூ.சு.

The Editor's Note

The Institute of Asian Studies has estimated that there are more than sixty thousand unpublished Tamil manuscripts lying scattered all over the world. No exhaustive index for them is available. Six manuscripts, which have been salvaged, are on *Yaṭcakāṉam*. These are well-preserved in the Government Oriental Manuscripts Library, at Madras. It has been decided by the Institute to bring out these manuscripts in book form with elaborate notes and annotations.

In keeping with the wishes of poet Bharati, who has stressed the need for bringing to light the literary treasures of our country and sharing them with the rest of the world, this institute has decided to publish manuscripts with English Translation. With this end in view, the *Yaṭcakāṉam* manuscripts are now published with English translation.

Nīli Yaṭcakāṉam was published in December 1994 and was formally released on 1.1.1995 by the Chief Minister of Tamilnadu at the Eighth World Conference of Tamil held at Tanjore. As suggested by the Government, the edition was exclusively in Tamil. The book is now published with an English translation under the title 'A TALE OF NEMESIS'.

The second in the *Yaṭcakāṉa* series, which is being published now, is *Cāraṅkataraṉ Yaṭcakāṉam* proposed to be formally released on the auspicious occasion of the opening of the new buildings of the Institute of Asian Studies at Chemmancherry.

The Manuscript

The palm leaf manuscript of *Cāraṅkataraṉ Yaṭcakāṉam* is preserved in the Government Oriental Manuscripts, Library, Madras and bears the number D.501. This contains 125 leaves. Many of them are broken and crumbled and the writing is illegible. They also contain serious and glaring mistakes. Another manuscript bearing the number D.505 on the same theme was useful in making a comparative study and correcting the mistakes.

The manuscript No.501 has the following legend at the beginning: The *Yaṭcakāṉam* is being read by Rām Singh. This is immediately followed by the invocation. Besides an enumeration of the following four *Tālās*, *Aṭitāḷam*, *ĒkaTāḷam*, *Tiriputai* and *Campai*, the following types of verses are also mentioned namely *Arttacantirikai*, *Kantapattiyam*, *Kuṟaḷaṭittaru*, *Cintu*, *Taru*, *Tipatai* and *Veṇpā*. They are written as captions to individual verses. In all, there are 174 verses including the invocation and the auspicious finis.

At the end of the manuscript is found the following piece of information: In the year *Tuṉmati* on the 6th day of the month of *Āṉi*, when the star *Pūram* was in the ascendant, in the *Lakṉam* called *Mituṉam*, this manuscript was prepared by Cōmaṅkala muṭaliyār on behalf of his son Rām Singh. This information helps us to date the manuscript. But it does not help us to fix the author. Details collected about the author from various sources are included elsewhere.

The following words and many others which have got distorted in the palm leaf version have been corrected: *Aṣṣakāṉam*, *Tiruvilaṅkoṇṭōṉ*, *Pacupathināyagar*, *VināyakaṉKataṣaṣam*, *Uṇṇāmalaiyammai*, *Veḷḷai Vāṟaṇaṉ*, *Tāyaṟuluṇṭāmē*, *Sarastupati* etc. Other grammatical errors have also been rectified.

There is a traditional belief that those who attempt to meddle with palm-leaf manuscripts are mean and despicable. While distortions in meaning and arbitrary verbal changes have to be condemned outright, an editor has to necessarily correct mistakes committed by the copyist and also mistakes in syntax, diction etc. After all, the aim of the editor is to make the text intelligible to the reader of today.

Peculiarities of the script pose many problems. The use of the short syllable for the long one is very common in palm leaf manuscripts. A few examples will suffice. In verse 7 the word *Mōka mayil* is written as *Moka mayil*. Similarly in verse 8, the word *Nītimaintaṉ* is written as *Nitimaintaṉ*. These have to be corrected in the interest of intelligibility. Similarly in laying the dot on letters, a bizarre practice obtains among the palm leaf scribes which is not in consonance with modern practice. Here again, the editor has to make changes so that the text will be clear to the reader of today. Verse 1 in the original form did not make much sense. The editor had to strive hard to restore sense. The culprit was a sign which had been mistaken for a letter (*Vāṇmuka maintiru* had got distorted to *Vāṇmukaṇa maintiru*)

Similarly in the prose passage 7 *Paṉṟukiṟōm* was obviously a mistake for *Paṇṇukiṟōm*.

It will not be possible to refer to the many corrections made in the text in this brief introduction. But any discerning reader can imagine the enormous labour that has gone into the editing of this work. No claim however, is made that all the corrections have been made. The work is still imperfect and offers scope for further refinement and polish.

The editor has given captions to individual verses. By merely reading the captions, a layman can easily follow the course of the story. The captions also will help the serious student of literature to locate the traits of individual characters at a glance. In fact, the captions clarify many points which would have been otherwise obscure and unintelligible. The verses and prose passages have been numbered serially. In all, there are 174 verses and 95 prose passages.

I am grateful to Dr. G.John Samuel and Dr. Shu Hikosaka, Directors of the Institute of Asian Studies, who entrusted me with the work of editing the manuscript *Varma Cūttiram* at the commencement of my career here and who further encouraged me to edit the *Yaṭcakāṉam* series, one of which *Nīli Yaṭcakāṉam* was formally released by the Chief Minister of Tamilnadu at the Eighth World Conference of Tamil held at Tanjore. The constant help of the directors has given me the confidence to edit yet another palm leaf manuscript entitled *Cāraṅkataraṉ Yaṭcakāṉam* to be released on the occasion of the opening of the Institute's new buildings at Chemmancherry.

I thank wholeheartedly Pulavar Radha Jayalakshmi and Thiru. M.Maruthamuthu who helped me in making a comparative study with *Vācakappā* and other palm leaf manuscripts. Let me express my gratitude to Pulavar Kannayyan and Thiru. Chentur Pandian for making xerox copies of *Cāraṅkataraṉ Ammāṉai* and *Cāraṅkataraṉ Nāṭakam*. Mrs. Mekala Ilangovan and Mrs.Vennila Ilavarasu helped in copying the manuscripts and arranging the meaning etc. in an orderly manner. Dr.J.V.Satyavani obliged me by collecting information on Rājamakēntirapuram from Telugu texts and other sources. I must express thanks to Miss. C. Sumathi and Thiru K. Panneer Selvam for preparing the index. Let me acknowledge the cooperation extended by the staff of the Government Oriental Manuscripts Library in the scrutiny of manuscripts and Mrs. N. Umarani in typing and preparing the manuscripts for the press. Thanks are due to Thiru. A.S.Natarajan, the artist, for the impressive cover page and the Akshara press for the printing.

P.S.

ஆய்வுரை

யட்சர் - இசையில் தேர்ச்சிப்பெற்றுப் பாடுவதையே தங்கள் தொழிலாகக் கொண்டுள்ளவர்கள் கந்தருவர் (காந்தருவர்) என்னும் இனத்தவர். இவர்கள் நேப்பாலில் வசித்து வருகிறார்கள். இவர்கள் பாடும்பாடல் 'கந்தருவகானம்' என்றே வழங்கப்படுகிறது. கந்தருவர், கிம்புருடர், கின்னரர், சாரணர், யட்சர், வித்தியாதரர் என்னும் தேவ வகுப்பினருள் ஒரு பகுதியினராகிய கந்தருவர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றே தங்களைக் கூறிக் கொள்ளுகிறார்கள் நேப்பால் நாட்டுக் காந்தருவ இனத்தவர்கள்.

கந்தருவர் எனப்படும் இந்த இனத்தவரைப் போன்று யட்சர் என்போரும் தங்களைத் தேவவகுப்பினருள் ஒரு பகுதியினராகிய யட்சர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். பிரமதேவரால் சிருஷ்டிக்கப்பட்ட இவர்களுள் ஒரு பகுதியினர் கூடித் தங்களை 'இரட்சிக்க வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார்கள். மற்றொரு பகுதியினர் நாங்கள் உடவே 'பட்சிக்கவேண்டும்' (உட்கொள்ள வேண்டும்) என்று கேட்டுக்கொண்டார்கள். இரட்சிக்குமாறு வேண்டிவர்களை 'யட்சர் ஆகுக' என்றும், 'பட்சிக்க' வேண்டியவர்களை 'இராக்கதர் ஆகுக' என்றும் அருளிச் செய்தார். இவர்கள் இரு திறத்தினருமே இயக்கரும் இராக்கதரும் ஆயினர் என்பர். இயக்கர், யக்கர், யட்சர் என்பன ஒருபொருள் தரும் சொற்களாகும்.

காசிபனுக்கும் சுரை என்பாளுக்கும் பிறந்தவர்கள் குபேரன் முதலானவர்கள். இவர்களே தேவசபையில் யாழ்வாசிப்போரா யிருந்துவந்தனர். குபேரனைத் தலைவனாகவும் மூத்தவனாகவும் கொண்ட இவர்கள் 'இயக்கர்' எனப்பட்டனர். குபேரன் இயக்கராசன் ஆனான். இயக்கர்கள் குபேரனுடைய செல்வத்தைக் காக்க வேண்டி, இசைபாடி இலக்குமியை வணங்கிவந்தார்கள். அவள் அருள் பெற்றுக் குபேந்திரனின் செல்வத்தைக் காக்கும் தொண்டர்களாயினர்.

சௌராஷ்டிர நாட்டில் வாழும் மக்களுள் ஒரு இனத்தவர் 'சாரணர்' என்று வழங்கப்படுகின்றனர். தமிழ் நாட்டின் தென்மாவட்டங்களில் ஒரு இனத்தவர் 'தேவர்' என்று வழங்கப்படுகின்றனர். நேப்பால் கந்தருவர், சௌராஷ்டிரா சாரணர், தென்னாட்டுத் தேவர் என்னும் பெயர்களைப் போன்று தேவ வகுப்பினர் பெயர்களுள் ஒன்றான யட்சர் என்ற பெயரையும் ஒரு குழுவினர்

பெற்றிருக்கிறார்கள். அவர்கள் கன்னடம், ஆந்திரம் ஆகிய நாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் முறையே ஜக்கினி என்றும், ஜக்குலு என்றும் வழங்கப்படுகிறார்கள். ஜக்கசானிகுண்ட, ஜக்கல செருவு என்னும் பெயர்கள் இம்மக்கள் வாழும் பகுதிகளின் பெயர்களாகின்றன.

மிகப் பழைய இசைகளாகிய 'மத்தியகிரமா' என்பதிலிருந்து கர்நாடக இசையும், 'சட்ஜகிரமா' என்பதிலிருந்து இந்துஸ்தானி இசையும் தோன்றியது போல கந்தர்வ கானத்தில் இருந்து 'யட்சகானம்' தோன்றியது என்பர். ஆனால் கந்தர்வகானம் 'மார்க்' இசையையும் 'யட்சகானம்' 'தேசி' இசையையும் சார்ந்தவையாகும்.

யட்சர்கள் தங்கள் தலைவனாகிய குபேரனுடைய செல்வம் மேலும் மேலும் பெருக வேண்டும் என்பதற்காக இலக்குமியைப் புகழ்ந்து பாடினார்கள். அப்பாடலே யட்சகானம் எனப்பட்டது. மந்திர சாஸ்திரங்களில் காணப்படும் **யட்சணி வித்யா** என்பது மக்கள் சந்ததி வளரவும், அவர்கள் செல்வம் பெருகவும் யட்சர்களால் பாடப்பட்டதாகும். இதே நோக்கத்துடன் யட்ச ராத்திரி என்னும் பண்டிகை நாளில் யட்சதேவதை பூசை செய்யப்படுகிறது. அந்தப் பூசைக்காலத்து இரவு முழுவதும் பாடும் யட்சர்களின் பாடல் யட்சகானமே ஆகும். இன்றும் தெலுங்கு அந்தணர்கள் யக்கதேவதா பூஜை நடத்தி வருகிறார்கள். அப்பூஜையில் யட்சர்கள் யட்சகானப் பாடல்களையே பாடி வருகிறார்கள். கன்னட நாட்டில் 12ஆம் நூற்றாண்டு முதலே யக்கலகானா என்னும் பாடல் பாடப்பட்டு வருகிறது.

கிராமதேவதையாக விளங்கும் காமவல்லி ஈஸ்வரியார்க்குத் தொண்டு செய்யச் சிவபெருமான் சில யட்சர்களை அனுப்பினார். அவர்களுக்கு இசைக் கருவிகளையும் கொடுத்தனுப்பினார். அவர்களை அனுப்புவதற்கு முன்பு சுக்ராச்சாரியாரிடம் இசையைக் கற்கச் செய்தார். அவர் கற்பித்த இசையே யட்சகானம் எனப்படும் என்பது 'காமேஸ்வரிகாடா' என்னும் தெலுங்கு நூலால் அறியவருகின்றது.

கிராம மக்கள் யட்சா என்னும் ஆண் தேவதையையும், யட்சி என்னும் பெண் தேவதையையும் வணங்கும் போது யட்சகானப் பாடலைப் பாடி வருகிறார்கள். ஒருவரே வந்து பாடுவது என்னும் பொருளில் யக்கலகானா எனப்படுகிறது என்பர் சிவராமகாரந்தா அவர்கள்.

இன்றும் காலை நேரத்தில் உதயராகத்தில் பாகவதக்கதையை நீண்ட பாடல்களாகப் பாடி வரும் வழக்காறு கன்னட நாட்டு மாவட்டங்களில் இருந்து வருகிறது. 12ஆம் நூற்றாண்டில் தோன்றிய சந்திர பிரபு புராணம், நாக சந்திரர் எழுதிய மல்லி நாத புராணம், சாரங்கதேவா எழுதிய சங்கீத ரத்தினாகரா (13ஆம்

நூ.ஆ.) ரத்தினாகரவர்ணி எழுதிய பரதேச வைபவம் போன்ற பல நூல்கள் யட்சகானப் பாடல்களைப் பற்றித் தெளிவுபடுத்துகின்றன.

பால பாப்பம்மா அவர்கள் அக்கமாதேவி சரித்திரம் என்னும் யட்சகான இலக்கியம் ஒன்றினை எழுதியிருக்கிறார்கள் (16ஆம் நூ.ஆ.) இவர்களே தெலுங்கில் யட்சகானம் எழுதிய முதல் ஆசிரியை ஆவார்கள்.

17, 18ஆம் நூற்றாண்டுகளில் கன்னடமொழியில் சுமார் 300க்கும் மேற்பட்ட யட்சகான நூல்களும், தெலுங்கு மொழியில் 500க்கும் மேற்பட்ட நூல்களும் தோன்றியுள்ளன. புராண, இதிகாச கருத்துகளை மட்டுமே யட்சகானத்தில் உருவாக்குவது என்ற நிலைமை மாறி வரலாற்றுக் கருப்பொருள்களும், சமூக நடைமுறைக் கருப்பொருள்களும் யட்சகான நூல்களில் இடம்பெற்று விட்டன.

கி.பி. 1950க்குப் பிறகு இந்துஸ்தானி, கர்நாடக இசைகள் பரவத் தொடங்கியபின் இந்த இசை நடைகளும் இணைந்து யட்சகான நடையே மாறிவிட்டது. இறுதியில் சிறிது சிறிதாக யட்சகான நடை குறையவும் தொடங்கி விட்டது.

யட்சகான நாடகம்

மக்கள் மரபும், செல்வமும் தழைக்க யட்ச தேவதைகளைப் புகழ்ந்து பாடும் பாடலாகத் தோன்றிய யட்சகானப்பாடல், கோயில்களில் நடைபெறும் காலை, மாலை பூசைநேரங்களிலும் திருவிழாக் காலங்களிலும் பாடப்பட்டது. தொடர்ந்து திருமணம்போன்ற சடங்குகளிலும் பாடலாகவும், நாதசுர இசையாகவும் பாடப்பட்டது. அடுத்து இராமாயணம், மகாபாரதம், பாகவதம் ஆகியவற்றிலிருந்து இறைவனது கலியாண குணங்கள் அடங்கிய பொருள்களை விளக்கிச் சொல்லும் கதா காலச்சேப நடைக்குப் பயன்படுத்தப்பட்டது. இந்த நிலையில் பிரசங்கங்கள் நிகழ்த்தும்போது கதைப்பொருளுக்கேற்ப ஆடவும் தொடங்கினர். இந்த ஆடல் முறை வளர்ச்சியடைந்து யட்சகானப் பிரசங்கம் என்பது யட்சகான இசை நாடகம் என மாறியது.

இந்த இசை நாடகங்கள் பாட்டும், நாட்டியமும் இணைந்து நடிக்கப்படுவதாக உருவாயின. அவை ஒவ்வொன்றும் ஒரு கதைப் பொருளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டன. அந்த இசை நாடகங்களுக்குச் சதிகளைச் சேர்த்து மாற்றி அமைத்தபோது அவையே நாட்டிய நாடகம் எனப்பட்டன. இவற்றில் இசைப்பாடல்களோடு இடையிடையே விருத்தம், திபதை, கந்தபத்தியம், அர்த்தசந்திரிகை போன்ற நடைகளும் சேர்க்கப்பட்டன.

தமிழ்நாட்டில் நடைபெறும் தெருக்கூத்து, ஆந்திர நாட்டில் நிகழும் குச்சிப்புடி, வீதிநாடகம், கேரள நாட்டில் நடத்தப்பெறும் பயலாட்டா ஆகியவற்றைப் போன்ற ஒரு நிகழ்கலையாக யட்சகான நாடகம் உருவாக்கப்பட்டது.

பாட்டு, இசை, பழக்கம், நடத்துமுறை, நடத்துமிடம், கருத்து ஆகியவற்றால் இந்தத் தெருக்கூத்து முதலான அனைத்து நிகழ் கலைகளும் ஒன்றுபட்டவை ஆயின.

யட்சகானம் நாடகநிலையை அடைந்த பிறகு புராண இதிகாசங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் நாடகக் கருத்துகள் பெரும்பாலும் வீரம் நிறைந்த பகுதிகளாகவே அமைந்தன. போர்க்கலை சார்ந்த நாட்டியத்தை ஆடிக் காட்டுவதில் நடிகர்கள் ஈடுபாடு கொண்டனர். கிராம மக்களும் அதை விரும்பி வரவேற்றனர்.

யட்சகான நாடகத்தைத் தயாரித்துப் பயிற்சி அளிப்பவர் பாகவதர் என்று அழைக்கப்படுவார். அவர் தலைமையில் அமைந்த ஆடுவோர், பாடுவோர், இசைக்கருவிகளை இசைப்போர் ஆகியோர் அடங்கிய குழு மண்டலி எனப்படுகிறது. இக்குழுவின் உறுப்பினர் அனைவரும் ஆடவரே ஆவர். பெண் பாத்திரங்களையும் ஆடவர்களே பெண் வேடமணிந்து நடிப்பர்.

தெலுங்கில் நன்னய்யா அவர்கள் (கி.பி. 11 ஆம் நூ.ஆ.) எழுதிய கருடாசல யட்சகானம் என்பதே முதல் யட்சகான நாடகமாகும். சித்திரகனி பெத்தண்ணா அவர்கள் (கி.பி.16ஆம் நூ.ஆ.) யட்சகான நாடகத்திற்கான இலக்கணம் வகுத்து இருக்கிறார்கள். விசயநகர மன்னர் சாளுவ நரசிம்மய்யா அவர்கள் காலத்தில் (கி.பி.1485 - 1491) பொல்லு கண்ட சன்னசௌரி (ரங்கண்ணா) என்பவர் சௌபரி சரித ஜக்குலகதா என்னும் யட்சகான நாடகத்தைத் தெலுங்கில் எழுதி இருக்கிறார். கிருஷ்ணதேவராயர் காலத்தில் கந்துகரிருத்திரகவி என்பவரால் கி.பி.1570இல் சுக்கிரீவ விசய யட்சகானம் என்னும் நூல் எழுதப்பட்டது. தஞ்சையை ஆண்டுவந்த பாடற்கலைஞராகிய மன்னர் ரகுநாதநாயகரின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு இராமபத்திராம்பா என்பவர் 'இரகுநாதாப்யுதய' என்னும் யட்சகான நாடகத்தை எழுதியிருக்கிறார்.

தமிழில் யட்சகானம்

"கூத்தும் கானமும் இணைந்தது தெருக்கூத்து இயக்கானம். இந்தத் தெருக்கூத்து இயக்க கானந்தான் வேற்றுமொழி தொடர்பால் யட்ச கானமாகியிருக்கிறது இத்திராவிட மரபே வட்ட வழக்கிற்கேற்ப யட்சகான தெருக்கூத்து என்றும் யட்சகான பயலாட்டம் என்றும் யட்சகானவீதி நாடகம்

என்றும் வழங்கி வந்திருக்கிறது[1]" என்னும் கூற்றுகள் பொருத்தமற்றவை யாகின்றன.

தஞ்சைப் பகுதியிலும் கன்னடநாடு, ஆந்திரநாடு ஆகியவற்றை அடுத்துள்ள தமிழ் மாவட்டங்களிலும் யட்சகான நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளன. அந்த நாடகப் பாடல்களிலும், உரைநடைகளிலும் பல தமிழ்ச்சொற்கள் கலக்கப்பட்டன. அதனால் அந்த நாடகப்பொருள் தமிழ் மக்களுக்கு நன்றாக விளங்கியது. தியாகராச சுவாமிகள் இயற்றிய நௌக சரித்திரம், பிரகலாத பக்த விஜயம் ஆகிய யட்சகான நாடகங்கள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டன. ஒய்சள மன்னரான வல்லாளராசன் யட்சகானம், சிறுதொண்டர் யட்சகானம் போன்ற யட்சகான நாடகங்கள் தமிழில் உருவாகி இருக்கின்றன. 1. வல்லாளராசன் யட்சகானம் 2. சிறுதொண்டர் யட்சகானம் 3. நீலி யட்சகானம் 4. நரசிங்க விஜய யட்சகானம் 5. தேரூர்ந்த யட்சகானம் 6. சாரங்கதரன் யட்சகானம் என்னும் ஆறு நாடகங்கள் சுவடி வடிவில் கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்றாகிய சாரங்கதரன் யட்சகானம் என்னும் சுவடியே இந்தப் பதிப்பிற்குரியதாகிறது.

நூல் தொடக்கம்

"விநாயகன் கடாட்சம் மிகவுண் டதனால்
தான சாரங்க தரன்கதை யட்ச
கானப்பிர பந்தக் கவிதைசொல் வேனே"

நுதலிப்புகுதல் என்னும் உத்தியைக் கையாண்டுள்ள இவ்வடிகள் சாரங்கதரன் கதையை யட்சகான நடையில் கூறுவதாகப் புலப்படுத்துகின்றன. இந்த உத்தி எல்லா யட்சகான நூல்களிலும் கையாளப்படுகிறது. இக்கவிதையை நான் நன்றாகச் சொல்லுவேன் என்னும் ஆசிரியர் கூற்று தற்பெருமையை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. ஆனால் இந்தக் கவிதையை எழுதுவதற்கு விநாயகனுடைய அருள் மிகுதியாக உண்டு; அதனால் இக்கவிதை சிறப்பாக அமையும் என்பதே ஆசிரியர் கூற்று. இது தற்பெருமையாக அல்லாது இறையருளால் சிறப்படையும் என்ற நோக்கத்தை உடையதாகிறது.

திபதை, கந்தபத்தியம், தரு, வசனம், சிந்து போன்ற நடைகளில் ஏகதாளம், சம்பை, திரிபுடை, போன்ற தாள அமைப்புகளோடு செய்யப்பட்டுள்ள இந்நூல் நாடக வடிவில் அமைந்ததாகக் கொள்ளமுடிகிறது. ஆனால்,

---

1. தமிழகக் கலைச் செல்வங்கள், பக். 303

"சுதனில்லா திருந்த தொருபெருந் துயரால்
நிதிநரேந் திரனொரு நினைவுகொண் டனனே" (11)

"பாலகன் பிறந்தான் - இளம்
பானு போலவே" (18)

"இறையவனுந் தொட்டில்மிசை
ஏற்றுவித் தனனே" (21)

என்பன போன்ற பெரும்பாலான இடங்கள் நாடகமாந்தரைத் தவிர்த்த மூன்றாமவர் கதையை எடுத்துச் சொல்லும் முறையிலேயே அமைகின்றன. எனவே இந்நூல் இராகம், தாளம், பாட்டு நடை ஆகியவற்றால் யட்சகான நடையைத் தழுவி எழுதப்பட்ட ஒரு இசை நாடகமாக அமைகின்றது. யட்சகான நாடகத்திற்குச் சுமார் 150 இசைகள் உண்டு என்பதைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்கள் சிவராம காரந்தா அவர்கள். ஆனால், யட்சகான நடையில் அடதாளம், ஏகதாளம், சம்பை, திரிபுடை, துருவம், மத்திமம், ரூபகம் என்னும் ஏழுவகைத் தாளங்கள் இடம்பெறும் என்னும் அளவிற்குக் குறைந்து போயின. அதிலும் யட்சகான இசையில் மிகவும் புகழ்பெற்றவை என்று இசை அறிஞர்கள் கருதிவந்த பூபதி ராகம், மோகன ராகம் போன்றவையும், யட்சகான நாடகத்தின் முதல்பாடலை அமைத்துப்பாடி வந்த சௌராஷ்டிர ராகமும் முழுமையாக இடம் பெறவில்லை. இந்த நூல் முழுமையும் நான்கு தாளங்களே இடம்பெறுகின்றன. அவை முறையே,

1. அடதாளம் - (நூலில் அட்டதாளம் எனப்படுகிறது) 14 மாத்திரைகளையுடையது.

   1, 4, 6, 8, 9, 11, 13, ஆகிய மாத்திரைகளில் தாளத்தட்டும், பிற மாத்திரைகளில் வெற்று எண்ணிக்கையும் உடையது.

   அதாவது மாத்திரை-1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14. அடி (தட்டு) - 1 - 4 - 6 - 8, 9 - 11 - 13 - ஒரு தட்டு - 2 எண்ணிக்கை, ஒருதட்டு - ஒரு எண்ணிக்கை; ஒருதட்டு - ஒரு எண்ணிக்கை, 2 தட்டுகள் - ஒரு எண்ணிக்கை; ஒருதட்டு - ஒரு எண்ணிக்கை, ஒருதட்டு - ஒரு எண்ணிக்கை என அமைவது. இதேபோல,

2. ஏகதாளம் - 4 மாத்திரைகளையுடையது. முதல் மாத்திரை மட்டும் தட்டுதலும், பிற மூன்று மாத்திரைகளும் எண்ணுதலும் உடையது.

3. சம்பை - 5 மாத்திரைகளையுடையது. 1, 3, 4ஆம் மாத்திரைகளில் தட்டுதலும் 2, 5ஆம் மாத்திரைகளில் எண்ணுதலும் உடையது.

4. திரிபுடை - 7 மாத்திரைகளையுடையது. 1, 4, 6ஆம் மாத்திரைகளில் தட்டுதலும், 2, 3, 5, 7ஆம் மாத்திரைகளில் எண்ணுதலும் உடையது. பிற தாளங்கள் நூலுள் இடம் பெறவில்லை.

இந்த நூலுள் இடம்பெறும் 174 பாடல்களில் அடதாளத்தில் ஒரு பாடலும், ஏக தாளத்தில் 19 பாடல்களும், சம்பையில் 64 பாடல்களும், திரிபுடையில் 31 பாடல்களுமாக 115 பாடல்கள் தாள அமைப்பை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. நாடக ஆசிரியர்கள் இராகங்களைத் தங்கள் விருப்பம்போல அமைத்துக்கொள்ள இவை இடந்தருகின்றன. எஞ்சிய 59 பாடல்களில் அர்த்தசந்திரிகை 6, கந்த பத்தியம் 2, குறளடித்தரு 1, சிந்து 6, தரு 4, திபதை 38, வெண்பா 1, எனப் பாட்டு நடைகளின் பெயரால் 58 பாடல்கள் அமைகின்றன. இறுதியில் 174ஆம் பாடல் வாழ்த்தும் மங்களமுமாக முடிகிறது.

கருப்பொருள் - இளைய மனைவியின் மோகவலையில் சிக்கிய பேரரசன் தன் அரசமாதேவியின் மகனுடைய கை, கால்களை வெட்டச் செய்கிறான். அமைச்சர் முதலான சான்றோர் அறவுரைகளும் பிறசாட்சியங்களும் இளையவள் மோகத்துக்கு முன் தோல்வியடைகின்றன. இளையவளின் சூழ்ச்சிகள் வெளிப்பட்டபின் தன்னைத் தானே நொந்து கொண்டாலும், இழந்த மகனை மீண்டும் அடைய முடியாதவனாகிறான்.

நாடகச்சுருக்கம் - இராசமகேந்திரபுரம் என்னும் பெருநகரத்தில் இருந்து செங்கோல் செலுத்தி வந்தவன் இராசநரேந்திரன். அரசமாதேவி இரத்தினாங்கி; இரண்டாம் மனைவி சித்திராங்கி. அந்நாட்டு அமைச்சன் நீதிமைந்தன்.

குழந்தைச் செல்வம் இல்லாது வருந்திய மன்னன் சான்றோர் அறவுரையின்படி பலகாலம் தவம் செய்கிறான். இறைவன் தோன்றி,

> "..... மன்னவனே!
> நின்மனை வியரிலோர் நின்னய மான
> பொன்மனை யாள்மூத்த பூவைதன் வயிற்றில்
> சந்திரசூ ரியரொளி தருமது போலோர்
> மைந்தனுண் டாகவே வரமது தந்தோம்" (13)

என்று கூறி மறைகிறார். அதன்படி தேவி இரத்தினாங்கியின் மகனாகப் பிறந்தவனே சாரங்கதாரன் என்னும் இந்நூலுடைத் தலைவனாகிறான்.

மூத்தவளுக்கு மகன் பிறந்தான் என்பதனால் இளையவளாகிய சித்திராங்கி பொறாமை கொள்ளுகிறாள். இரத்தினாங்கிக்கு மகன்பிறந்த பிறகு இராச நரேந்திரன் சித்திராங்கியிடம் மிகவும் அன்பாக இருக்கிறான். ஒருநாள் காட்டில் வாழும் வேடுவர்கள் வந்து அரசனுக்கு அன்பளிப்பாகக் காட்டுப் பொருள்கள் பலவற்றை அளித்துத் தாங்கள் வேட்டையாடும் முறையை வந்து காணுமாறு மன்னனை அழைக்கிறார்கள். அவர்கள் விருப்பப்படியே மன்னன் தன் பரிவாரங்களோடு காட்டுக்குச் சென்று சில நாட்கள் வேடுவர்களோடு இருந்து வேட்டையாடி மகிழ்கிறான். அப்போது நாட்டில் சாரங்கதரன் தன் தோழனான சுமந்தனுடன் புறாப் பந்தயம் வைத்து விளையாடுகிறான். பறக்கவிட்ட புறாக்களில் ஒன்று சித்திராங்கியின் அரண்மனையில் போய் இறங்கிவிடுகிறது. சித்திராங்கி வேட்டைக்குச் சென்ற மன்னவனை எண்ணி விரக வேதனையோடு இருக்கும்போது சாரங்கனின் புறா அவளிடத்திலே போய்ச் சேருகிறது. புறா அங்குச் சென்றதைப் பார்த்த சாரங்கன் தானே சென்று புறாவைப் பெற்றுவரப் புறப்படுகிறான். மகளிர் இருக்கும் இடத்திற்குத் தனியே செல்லக்கூடாது என்று சுமந்தன் தடுக்கிறான். சிற்றன்னையைப் பார்க்கச் செல்லுவது தவறில்லை என்று கூறிச் சுமந்தனுடைய அறவுரைகளைக் கேட்காது அரண்மனைக்குள் செல்லுகிறான். சிற்றன்னையை வணங்கிப் புறாவைத் தருமாறு கேட்கிறான். ஆனால் சித்திராங்கி பலவகை உபச்சாரங்களோடு சாரங்கனை வரவேற்று அவனிடம் காதல் மொழி பேசுகிறாள். நாம் தாயும், மகனும் ஆவோம் என்று பலவாறு மன்றாடியும் அவள் கேட்கவில்லை. அவள் விருப்பத்திற்கிணங்காமல் அவன் அரண்மனையை விட்டு வெளியேறும்போது சித்திராங்கி அவனுடைய மேலாடையைப் பிடித்து இழுக்கிறாள். மேலாடை நழுவி விழவும் அதைப் பொருட்படுத்தாமல் விரைந்து ஓடிவிடுகிறான்.

வேட்டை முடித்துத் திரும்பிய மன்னவன் சித்திராங்கியின் அரண்மனைக்கு வருகிறான். சித்திராங்கி தன் அணிகலன்களை எல்லாம் அறுத்துத் தரையில் சிதறவிட்டு உடம்பில் பலவாறு தானே கீறிக் கொண்டு அலங்கோலமாய்ப் படுத்துக் கிடக்கிறாள். அவள் நிலைமையைக் கண்ட மன்னவன் அவள் வருத்தத்திற்குக் காரணம் கேட்கிறான்.

நான் இனி உங்கள் மருமகளாவேன்; நீர் இங்கே நிற்க வேண்டாம் என்று வெறுப்பர்கக் கூறிச் சாரங்கதரன் வந்து வலிய தன்னைக் கெடுத்துச் சென்றதாக மன்னவனிடம் கூறுகிறாள். அவள் பேச்சை முழுமையாக நம்பிவிட்ட அரசன் அரசவையைக் கூட்டித் தனக்கு நேர்ந்த கொடுமைகளைச் சித்திராங்கி கூறியவாறே சபையில் எடுத்துக்கூறி, சாரங்கனின் கால், கைகளை வெட்டவேண்டும் என்ற முடிவிற்கு வருகிறான். அமைச்சர் முதலானோர் சாரங்கதரன் தவறு செய்திருக்க மாட்டான் என்று கூறுகிறார்கள். மேலும் மன்னர் அவசரப்படக்கூடாது என்பதற்கு அந்தணமாது கிளியைக் கொன்றகதை முதலான

பல சான்றுகளைக் கூறி அரசன் ஆணையைத் தவிர்க்குமாறு வேண்டுகிறார்கள். சாரங்கனின் தோழன் நடந்த உண்மைகளை எடுத்துக் கூறியதோடு நீதிக்கதைகள் பலவற்றையும் கூறுகிறான். மேலும் சாரங்கனின் தாய் இரத்தினாங்கியும் பலவாறு முறையிடுகிறாள். எதையுமே ஏற்காத மன்னன், சித்திராங்கியின் முடிவை மட்டுமே ஏற்றுச் சாரங்கதரனுக்குத் தண்டனையை நிறைவேற்றுமாறு தூதுவரைப் பணிக்கிறான்.

தூதுவர் வந்து அழைக்கும்போது நண்பன் சுமந்தனின் பேச்சைக் கேளாமைக்கு வருந்தி அவனைத் தன் தாயிடம் ஒப்படைத்துவிட்டுச் சாரங்கதரன் தூதுவருடன் புறப்படுகிறான். தூதுவர்கள் காட்டிற்கு அழைத்துச் சென்று சாரங்கதரனின் கை, கால்களை வெட்டிவிடுகிறார்கள். வெட்டுண்ட சாரங்கன் மூர்ச்சித்து விழுகிறான். மூர்ச்சை தெளிந்த பிறகு, தன் நிலைமை, தன் தாயின் வருத்தம் போன்றவற்றை எண்ணி எண்ணி இறைவனிடம் முறையிடுகிறான். அச்சமயம் ஆகாசவாணி தோன்றி இது உன் முற்பிறப்பில் செய்த வினையால் நிகழ்ந்தது என்று கூறி முற்பிறப்பின் வரலாற்றையும் எடுத்துச் சொல்லித் தேற்றுகிறாள். இப்பிறவியில் உன்மீது எந்தப்பழி பாவங்களும் இல்லை; இறைவன் அருளால் விரைவில் உன் கை, கால்கள் வளரும் என்று கூறி மறைகிறாள். ஆகாசவாணி மறைந்த பிறகு சாரங்கதரன்முன் சித்தர் ஒருவர் தோன்றுகிறார். சாரங்கதரனை வினவி அவன் வரலாற்றை அறிகிறார். தன்னிடம் இருந்த கரகநீரால் அவனை நீராட்டி அவன் செவியில் மந்திரம் ஒன்றைச் சொல்லி அவனை உச்சரிக்கச் செய்கிறார். சிறிது நேரத்தில் அவன் கை, கால்கல் வளரப் பெற்று மகிழ்ச்சியோடு சித்தரை வணங்குகிறான்.

சாரங்கதரனின் கை, கால்களைத் துணித்த தூதுவர்கள் வெட்டுண்ட சாரங்கதரன் என்ன பேசுகிறான் என்பதை அறிய காட்டில் ஒளிந்திருக்கிறார்கள். ஆகாசவாணியின் கூற்றையும் சித்தரின் செயலையும் அறிந்த பிறகு நகரம் செல்கிறார்கள். மன்னனிடம் நிகழ்ந்ததை எடுத்துக் கூறுகிறார்கள். உடனே மன்னவன் சித்திராங்கியிடம் சொல்ல, இதெல்லாம் இரத்தினாங்கியின் கட்டுக்கதையாகும்; அவளிடம் பணம் வாங்கிக் கொண்டு தூதுவர்கள் பொய் கூறுகிறார்கள், இது உண்மையானால் அங்கு வந்து சொன்ன ஆகாசவாணி இங்கு வந்து சொல்லட்டுமே என்று வெறுத்துப் பேசுகிறாள். அரசர், அமைச்சர் முதலானோர் கூடியிருந்த இடத்தில் ஆகாசவாணி தோன்றி சித்திராங்கியின் கொடுமைகளை எடுத்துக் கூறி இதெல்லாம் விதிப்பயன் என்றும் கூறி மறைகிறாள்.

ஆத்திரம் அடைந்த மன்னவன் சித்திராங்கியைக் கொன்று இரத்தினாங்கியுடன் கானகம் நோக்கிச் செல்லுகிறான். பல இடங்களிலும் தேடிச் சித்தர் மூலமாகச் சாரங்கதரனைச் சந்திக்கிறார்கள். தான் சிரஞ்சீவி ஆன

செய்தியைச் சொல்லிப் பெற்றோரை வணங்கி மறைகிறான் சாரங்கதரன். துன்பம் மேலிட்ட இராச நரேந்திரன் இறக்கத் துணிகிறான். உடன் இருந்த அமைச்சன் பாரதப் போரில் அபிமன்னன் இறந்தவுடன் தானும் இறக்கத் துணிந்த அருச்சுனனுக்கு ஆறுதல் கூறக் கண்ணன் மேற்கொண்ட உபாயங்களைச் சொல்லி அபிமன்னன் தேவருலகு அடைந்ததை எடுத்துக் கூறுகிறான். அவ்வாறே தங்கள் மகனும் சிரஞ்சீவி ஆனான் என்பதைக் கூறி மன்னனையும், தேவியையும் நீதி மைந்தன் என்னும் அமைச்சன் நாட்டிற்கு அழைத்துச் செல்கிறான். நீதிமைந்தனையே தங்கள் மகனாக ஏற்று நாடு அடைந்து மகிழ்ச்சியாக அரசு புரிகிறார்கள்.

நூல் ஆய்வு

நூலுடைத் தலைவனாகிய சாரங்கதரனின் தந்தையாகிய இராசநரேந்திரனின் நாடு, நகரம் முதலான வரலாறு யாது? சாரங்கதரனை அடைய விரும்பும் சித்திராங்கியின் பிறப்பு முதலாய வரலாறு கிடைக்கிறதா? கதை மாந்தர் படைப்புகளால் அறியப்படும் அவர்தம் குண நலன்கள் எவ்வாறு அமைகின்றன? ஆய்வுக்குரிய நூல்களாக சாரங்கதரன் வரலாற்றைப் பற்றிய வேறு நூல்களோ சுவடிகளோ கிடைக்கின்றனவா? அவை ஒவ்வொன்றிலும் கதைமாந்தர் படைப்புகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றனவா? இந்த வேறுபாடுகளால் வரலாற்றுச் செய்திகள் எவ்வாறு பாதிக்கின்றன? கிடைக்கும் நூல்களின் தொடக்கம் முடிவுகளில் என்ன என்ன பண்புகள் அமைகின்றன? அந்த அமைப்புகள் ஏற்கக்கூடியவையாக இருக்கின்றனவா? கதை மாந்தர்களின் சந்திப்பில் சிக்கல்கள் எவையேனும் உண்டா? இவ்வளவு நிகழ்ச்சிகளையும் தொகுத்தளிக்கும் ஆசிரியர் யார்? நூலால் அறியப்படும் நூலாசிரியரின் தனித்திறன்கள் யாவை? நூல் தரும் கருத்து உலக நடைக்கு ஏற்புடையதாக அமைகிறதா? வாழ்வியலுக்கு ஏதேனும் பயன்தருவதாக அமைகிறதா? இந்நூல் ஒரு இலக்கியம் ஆதலின் நூலுள் இலக்கிய நயங்கள் இடம்பெறுகின்றனவா? நூலுள் அமையும் சொற்கள், சொற்றொடர்கள் போன்றவற்றில் சிறப்புற அமைவன எவையேனும் உண்டா? குறிப்பிடத்தக்க பிழைகள் எவையேனும் இடம்பெற்றுவிடுகின்றனவா என்பன போன்ற வினாக்களுக்கு விடையளிக்க முயற்சிசெய்கிறது இந்த நூலாய்வுப் பகுதி.

இராசநரேந்திரன் வரலாறு

இராசமகேந்திரபுரம் கனத்த சோலைகள் சூழ்ந்தது; ஆடரங்குகளும் நீண்ட மண்டபங்களும், கூட கோபுரம், மாடமாளிகைகளும் நிறைந்தது; யானைகள் உலாவும் தெருக்களை உடையது; இத்தகு பெருமைமிக்க நகரத்தில் மங்கையர் சூழ மகிழ்ச்சியோடு வீற்றிருப்பவன் இராசநரேந்திரன். அவன் மன்னர் மன்னனாக

விளங்கியவன், இனிமையும் வாய்மையும் உடையவன்; பாரியை நிகர்த்தவன் என்று பலவாறுசிறப்பிக்கப்படுகிறான்.

"பாம்பு மணியணி அரசன் சிவிகை
மேல்வரப் பயண மானார்" (45)

என்பது அரசச் சின்னங்களுள் ஒன்றான மாலையாக, மாணிக்கமாலையை உடையவன் என்ற சிறப்பினை உணர்த்துகிறது.

"ராசாதி ராச ராச பரமேஸ்வரன்
ராசமார் தாண்ட ராச கெம்பீரன்" (47)

என்னும் அடைமொழிகளால் இராசநரேந்திரன் மன்னர் மன்னனாக (சக்கரவர்த்தி) அரசர்களில் மிகச்சிறந்த இறைவனாக, அரசர்களின் சூரியனாக, வீரமிக்கவனாக விளங்குபவன் என்றெல்லாம் சிறப்பிக்கப் பெறுகிறான். யட்சகான இலக்கியத்தில் பொதுப்பட இத்தகு சிறப்புகளே கூறப்படுகின்றன. ஆனால், அம்மானை இலக்கியம்,

"சந்திர வமிசத்தில் சந்தனராஜன் பிறந்தான்
சந்தனமகா ராஜனுக்குச் சித்திரவீரியன் பிறந்தான்
சித்திர வீரியனுக்குப் பாண்டுராஜன் பிறந்தான்
பாண்டு மகாராஜன் புத்திரர் ஐவர்களில் அர்ச்சுனன்
தனக்குமல்லோ அபிமன்னன் தான்பிறந்தான்
அந்தஅபி மன்னுவிற்குப் பரிசித்து தான்பிறந்தான்
பரிசித்து ராஜனுக்கு ஜனமேஜெயன் பிறந்தான்
ஜனமேஜெய ராஜனுக்குச் சீராகத் தானுமல்லோ
நரேந்திர மகாராஜன் நலமாகத் தான்பிறந்தான்" (ப.12)

என்று இராசநரேந்திரனின் பிறப்பு வரலாற்றைப் புராண அடிப்படையில் எடுத்துக் கூறுகிறது.

இராசமகேந்திரபுரம்

'தோநூரி கோநேரு நாதகவி' என்னும் தெலுங்குக் கவிஞர் கி.பி.1547இல் 'துவிபத-பாலபாகவதம்' என்னும் நூலை உருவாக்கியிருக்கிறார். அந்த நூலில் சாரங்கதரன் கதை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதுவே முதன் முதலில் எழுத்துவடிவில் எழுதப்பட்ட சாரங்கதரன் கதையாகும். இதில்,

இராச மகேந்திரபுரத்தையாண்ட இராசநரேந்திரனின் மகனான சாரங்கதரன், தன் சிற்றன்னையால் ஏற்பட்ட பழியிலிருந்து தப்பித்துக்கொண்டு சித்தர்களுள் ஒருவனானான் என்று சாரங்கதரனின் கதைப்பொருளை எடுத்துக் காட்டியிருக்கிறார் நூலாசிரியர்.

முதன்முதலில் இக்கதையை எடுத்துக்காட்டிய தோநூரி கோநேரு நாதகவி அவர்களைப்போலவே, பாணால சம்புதாசடு, கூசிமஞ்சி திம்மகவி ஆகிய கவிஞர்களும் சாரங்கதரன் வரலாறு இராசமகேந்திரபுரத்தில் நிகழ்ந்தது என்றே கூறுகின்றனர். ஆனால், கௌரனா, சேமகூர வேங்கடகவி ஆகியோர், இராச நரேந்திரன் மாளவ நகரத்தை ஆண்டவன் என்று கூறுவர்.

வேங்கி நாட்டின் தலைநகரமாக விளங்கியது இராசமகேந்திரபுரம். இது கோதாவரியாற்றின் கரையில் அமைந்தது. இதுவே இன்று கோதாவரிக் கரையிலுள்ள ராஜமந்திரி எனப்படுவது; கிழக்குக் கோதாவரி மாவட்டத்தைச் சார்ந்தது. மேலும் கோதாவரி யாற்றங்கரையிலுள்ள சித்திராங்கி மேடை, இரத்தினாங்கி மேடை என்னும் கட்டிடங்கள் சாரங்கதரன் வரலாற்றுக்குரிய சின்னங்களாக இன்றும் விளங்குகின்றன. இந்தக் கட்டிடங்களை அடுத்துச் சுமார் 3 கி.மீ. தூரத்தில் 'சாரங்கதருநிமெட்ட' என்று அழைக்கப்படும் இடமும் உள்ளது. அங்கு உள்ள 'சாரங்கதரேசுவரம்' என்னும் கோயிலில் சாரங்கதரனின் சிற்பம் அமைந்துள்ளது. தைப்பொங்கலின் இறுதிநாளாகிய கன்னுப் பொங்கலன்று சாரங்கதரன் மோட்சம் அடைந்த நாளாகக் கருதி, சிறப்புப் பூசைகளை நடத்தி வருகிறார்கள். 'சேஷாயமெட்ட' என்னுமிடமே இராசமகேந்திரபுரத்தின் நீதி மன்றங்கள் இருந்த இடமாகவும் கருதப்படுகிறது.

குண்டூர் மாவட்டம், பல்நாடு வட்டத்தில் கிருஷ்ணா நதிக்கரையில் சாரங்குனிபல்லே என்ற பெயருடன் ஒரு கிராமம் உள்ளது. அங்கு சாரங்கதரகுட்ட என்னும் குன்று ஒன்று உள்ளது. அதன் மேல்தான் சாரங்கதரனின் கை, கால்கள் வெட்டப்பட்டன என்றும் கூறுகிறார்கள். நெல்லூரின் அருகில் உள்ள கோவூர் என்னும் இடத்தில் சித்திராங்கிக் கோட்டை, இரத்தினாங்கி கோட்டை என்னும் இரண்டு கோட்டைகள் காணப்படுகின்றன. இவை வரலாற்றுச் செய்திகளுக்கு நெருங்கிய தொடர்பு இல்லாதவை என்றாலும் அவ் வரலாறு நிகழ்ந்த பகுதிகளைச் சுட்டுவதாக அமைகின்றன. கர்னூல் மாவட்டம், ஸ்ரீசைலம் என்னுமிடத்திலும் 'சாரங்கதரமடம்' என்னும் மடம் ஒன்று உள்ளது. 'சவுரங்கிநாதர்' என்னும் பெயரால் அமைந்துள்ளமடம், சாரங்கதரன் பெயரால் ஆனது என்பர். அவன், நவநாத சித்தர்களுள் ஒருவனான பிறகு சவுரங்கி நாதர் என்று வழங்கப்பட்டிருக்கிறான்.

பதிப்பு நூலாகிய சாரங்கதரன் யட்சகானம், சாரங்கதரன் வாசகப்பா ஆகிய இரண்டு நூல்களும் இராசநரேந்திரனின் நகரம் இராசமகேந்திரபுரம் என்றே கூறுகின்றன. வாசகப்பாவில் இது மயேந்திரபுரம் என்று காணப்படுகிறது. மற்ற

நூல்களாகிய நாடகம், அம்மானை ஆகிய நூல்கள் இராச நரேந்திரனின் நகரம் அத்தினாபுரம் என்று குறிப்பிடுகின்றன.

"பட்டணமாம் பட்டணமாம் அஸ்தினாபுரிப் பட்டணமாம்
அஸ்தினாபுரிப் பட்டணத்தை அன்பாகத் தானாளும்....
நரேந்திர மகாராசன் நலமாகத் தானுமல்லோ
மாதுரத்தி னாங்கியென்று மங்கையரைத் தான்மணந்து"

(அம்மானை - பக்.4)

"அஸ்தினாபுரத்தையாளும் நரேந்திரபூபதியாகிய நானே, உன்னை வந்து வேண்டியும் நீ சம்மதியாதது என்ன விந்தையோ?...." (நாடகம். பக். 17)

என்பன நூல் தொடர்கள். இந்த நூலாசிரியர்கள் குறிப்பிடும் அத்தினாபுரம் என்பது டில்லியின் வடக்கே வங்காள நாட்டில் இடம் பெற்றுள்ளது. கங்கைக்கரையில் மீரத் நகரின் வடகிழக்கே சுமார் 35 கி.மீ. தூரத்தில் உள்ளது. இதுவே பழைய குருகுல மன்னர்களின் தலைநகரமாக விளங்கியது.

சித்திராங்கி வரலாறு

சித்திராங்கியின் வரலாறு பற்றி,

"பொற்பிரமை மேனியாள் பூவை ரத்தினாங்கி
விற்புரு வத்தினாள் மெல்லி சித்திராங்கி
இவர்களை மணஞ்செய்து ..... மகிழ்ந்திருந்தானே" (பா.7)

என்று மட்டுமே யட்சகானம் கூறுகின்றது. ஆனால், சாரங்கதரனின் படத்தை எடுத்துக் கொண்டு பல நாடுகளுக்கும் சென்று திரிந்த அந்தணர்கள் தென்னாடாகிய பாண்டியநாட்டை அடைந்து,

"மதுராபுரி பட்டணத்தை மகிழ்ச்சியுடன் அரசுசெய்யும்
சிறந்ததோர் கீர்த்தியுள்ள சித்திராங்கத பாண்டியன்தன்
அரண்மனை வாயிலுக்கு அந்தணரும் போய்நின்று" (ப.9)

சாரங்கதரனைப் பற்றிய செய்தியைத் தெரிவிக்கிறார்கள். சித்திராங்கத பாண்டியனும் தன் மகள் சித்திராங்கியின் விருப்பத்தை அறிந்து மணம்முடிக்க

இசைவு அளிக்கிறான் என்பது அம்மானை இலக்கியம் தரும் சித்திராங்கியின் வரலாறாகும்.

கருப்பொருள் ஆய்வு

சாரங்கதர யட்சகானம் என்னும் இந்தப் பதிப்பு நூலுக்கு அடிப்படையான சுவடியோடு,

1. திரு. சிங்காரவேல் முதலியார் அவர்களால் இயற்றப்பட்ட சாரங்கதரன் வாசகப்பா என்னும் ஓலைச்சுவடி, 2. செஞ்சி-திரு. ஏகாம்பர முதலியார் அவர்களால் இயற்றப்பட்டு பூவிருந்தவல்லி சு.துளசிங்க முதலியார் அவர்களால் 1906 இல் வெளியிடப்பட்ட சாரங்கதர அம்மானை என்னும் சித்திராங்கிமாலை என்னும் அச்சுநூல், 3. பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் இயற்றி 1912இல் (பதி2) வெளியிட்ட சாரங்கதரன் - தமிழ் நாடகம் என்னும் நாடகநூல் ஆகிய மூன்றும் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டன. அவற்றின் அடிப்படையில் கருப்பொருள் ஆய்வு என்னும் இப்பகுதி மேற்கொள்ளப்படுகிறது. இந்நூல்களைத் தவிர கிரேக்க மொழியிலுள்ள ஒரு கதையும் இந்நூல்களின் கருப்பொருள்களையுடையதாகக் கிடைக்கிறது. அக்கதை:

மைனாஸ் என்பவன் கிரீட் (Crete) என்னும் நாட்டை ஆண்டு வந்த மன்னவன். அவனுடைய மகள் பிரீடா (Freeta) என்பவள், ஏதன்ஸ் நாட்டு மன்னனான 'தீசியஸ்' என்பவனுக்கு இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்படு கிறாள். தீசியஸ்ஸின் முதல் மனைவிக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் ஹிப்போலிட்டஸ். சிற்றன்னையாகிய பிரீடா ஹிப்போலிட்டஸைக் காத லிக்கிறாள். ஆனால் அவன் மறுத்துவிடுகிறான். அதனால் அவமானமடைந்த பிரீடா, அவன் மீது வீண்பழி சுமத்தி மன்னனிடம் முறையிடுகிறாள். மன்னன் தன் மகன் என்றும் பாராது ஹிப்போலிட்டஸைக் கொலை செய்து விடுகிறான். உண்மை வெளியாகிப் பலவகையான இடையூறுகள் நேர்ந்த பொழுது பிரீடா தற்கொலை செய்து கொள்கிறாள். இது கிரேக்க மொழியில் உள்ள ஒரு கதையாகும். அரசன் வயது முதிர்ந்த காலத்து இளமைவாய்ந்த ஒரு பெண்ணைத்தன் அதிகார ஆணவத்தால் கட்டாயப்படுத்தி மணந்து கொள்ளுவதும், அதே மன்னனின் மூத்த மனைவிக்குப் பிறந்த இளவரசன் மீது அந்த இளம் பெண் காதல் கொள்ளுவதும் இளைய மனைவியின் வார்த்தைகளை மீறாமல், மன்னன் நீதி தவறி நடந்து கொள்ளுவதுமாகிய அடிப்படை இயற்கைத் தன்மைகளைக் கருப்பொருளாகக் கொண்ட இக்கதை சாரங்கதரன் கதைக்கு ஒப்புமை உடையதாகவே அமைகிறது.

கதைமாந்தர் பெயர்கள்

யட்சகான நடையில் ஆன இந்தக் கதையில் அமைந்த,

இராசநரேந்திரன்	–	அரசன்
இரத்தினாங்கி	–	அரசமாதேவி
சித்திராங்கி	–	இளையமனைவி
சாரங்கதரன்	–	இரத்தினாங்கியின் மகன்

என்னும் நான்கு கதை மாந்தர்களும் எல்லா நூல்களிலும் ஒரே பெயரில் இடம் பெறுகிறார்கள். இவர்களைத் தவிர இராச நரேந்திரனின் அமைச்சனான நீதி மைந்தன் என்பவன் குறிப்பிடப்பெறுகிறான். அவனுடைய மகன் சுமந்தன் என்பவனே இளவரசனாகிய சாரங்கதரனின் நண்பனும், அமைச்சனுமாகிறான். சாரங்கதரனின் முற்பிறவியைக் கூறுபவள் ஆகாசவாணி. சாரங்கதரனுக்கு மந்திர உபதேசம் செய்து நிலைபேறு அடையச் செய்பவர் மகேந்திரசித்தர். அவர் அட்டமாசித்தர்களிலே ஒருவராவர். இவர்களைத் தவிர இராச நரேந்திரனின் அவையிலே தூதுவர், அமைச்சர், மறையவர், வழக்குரை சான்றோர், பாவ புண்ணியம் அறிந்த பெரியோர், பேச்சில் வல்லோர், மன்னரை நிகர்த்த பெருங்குடிமக்கள், கொலைஞர்கள், ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெறுகிறார்கள். இவர்களே யட்சகான நாடகத்தில் உறுப்பினர்கள் ஆகிறார்கள்.

"சாரங்கதரன்" என்னும் நாடகத்தில் வசூதி என்பவனே நரேந்திரனின் அமைச்சனாகச் சுட்டப்படுகிறான். சாரங்கதரனின் தோழன் பெயர் சுமந்திரன் என்றமைகிறது. மதுரகவி என்னும் கவிஞர் ஒருவரும், சுந்தரகன் என்னும் நகைச்சுவைமாந்தர் ஒருவரும், மதனிகை என்னும் சித்திராங்கியின் தோழி ஒருத்தியும் புதிதாகப் படைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களைத் தவிர வேடுவர், இரத்தினாங்கியின் தோழி, கொலையாளிகள் ஆகியோரும் இடம்பெறுகின்றனர்.

"சாரங்கதரன் அம்மானை" என்னும் "சித்திராங்கி மாலை" இலக்கியத்தில் சாரங்கதரன் தோழனுக்குச் சுமந்திரன் என்னும் பெயரே சுட்டப்படுகிறது. சித்திராங்கியின் தோழி சிங்காரமாலை என்று பெயர்பெறுகிறாள். சித்திராங்கியின் தந்தையாக மதுராபுரி மன்னன் சித்திராங்கதன் என்னும் பாண்டிய மன்னன் படைக்கப்பட்டு இருக்கிறான். காவற்காரன் கெடிவீர சிங்கன் என்ற பெயரால் அழைக்கப்படுகிறான். ஆகாசவாணி அந்தணப்பெண்ணாகக் காட்டப்படுகிறாள். சித்தர் மீனநாதர் என்னும் பெயரால் சுட்டப்படுகிறார். இவர்களைத் தவிர சேர்வைக்காரன், சாஸ்திரிமார், அந்தணர்கள் போன்றோரும் அம்மானையில் இடம் பெறுகிறார்கள்.

"சாரங்கதரன்வாசகப்பா" என்னும் நூலில் இராசநரேந்திரன் அரசவையில் நான்கு அமைச்சர்கள் இடம்பெறுகிறார்கள். முதலாம் அமைச்சர், இரண்டாம் அமைச்சர்.... என்றே இவர்கள் சுட்டப்படுகிறார்கள். சாரங்கதரனின் தோழன் சுமுந்தன் எனப்படுகிறான். இவர்களைத்தவிர சேர்வைக்காரன், சேவகர்கள், கொலைஞர்கள் ஆகிய பெயர்களில் மிகப்பலர் இடம்பெறுகிறார்கள்.

கதை மாந்தருள் சித்திராங்கி - யட்சகானத்தில் சித்திராங்கி

பொற்பிரமை மேனியாள் பூவைரத்தி னாங்கி
விற்புரு வத்தினாள் மெல்லிசித்தி ராங்கி
இவர்களை மணஞ்செய்து (பா.7) என்னும்

யட்சகானப் பாடலடிகள் இரத்தினாங்கி, சித்திராங்கி என்னும் இருவரையும் நரேந்திரன் திருமணம் செய்து கொண்டான் என்பதைப் புலப்படுத்துகின்றன.

செல்வமும், புகழும் இருந்தும் குழந்தை இல்லாக் குறை அவர்களுக்கு இருந்தது. அறவோர் கட்டளைப்படி மன்னன் இறைவனை வேண்டித் தவம் இயற்றி வருகிறான். இறைவன் மனம் இரங்கித் தேவியுடன் காட்சி தந்து,

"..... மன்னவனே!
நின்மனை வியரில் ஓர்நின்னய மான
பொன்மனை யாள்மூத்த பூவைதன் வயிற்றில்
மைந்தனுண் டாகவே வரமது தந்தோம்" (பா.13)

என்று அருளி மறைகிறார். இந்தச் செய்தியாலும் நரேந்திரன் இரண்டு மனைவியரை மணந்தவன் என்பதும், அவருள் மூத்தவளே மேன்மையும், பண்பும் உடையவள் என்பதும், அதனால் அவளுக்கு மகப்பேறு உண்டாக அருள்புரிகிறான் இறைவன் என்பதும் தெளிவாகின்றன.

இருவரை மணந்தவன் என்ற இந்தச் செய்தியை யட்சகானம், வாசகப்பா ஆகிய இரண்டு படைப்புகளும் ஒரே மாதிரியாக எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் அம்மானைநூல் இராசநரேந்திரன் தன்மகன் சாரங்கதரனுக்கு மணம் பேசிய பெண்ணைத்தானே மணந்து கொள்ளுவதாக எடுத்துக்காட்டுகிறது.

அம்மானையில் சித்திராங்கி

பலவகைக் கலைகளிலும் தேர்ச்சி பெற்ற சாரங்கதரன் 12 வயதை அடைகிறான்.

"கண்டு அரசனுமே கண்ணான மைந்தனுக்கு
மணம்செய்து வைக்கவேதான் மன்னன் மனத்தில்எண்ணிப்
பாலன் வடிவுக்கேற்ற பைங்கிளியாள் வேணுமென்று" (பக்.4)

சிந்திக்கிறான். அமைச்சர்களைக் கலந்து ஆலோசிக்கிறான். ஓவியன் ஒருவனை வரவழைத்து, சாரங்கதரனின் படம் ஒன்றினை எழுதச் செய்கிறான். அந்தணர்கள் மூலமாக அப்படத்தைப் பல நாடுகளுக்கும் அனுப்புகிறான். அவர்கள் மணமகளுக்காகப் பல நாடுகளையும் சுற்றி இறுதியில் மதுரைமாநகர் அடைந்து பாண்டிய நாட்டை அரசுபுரியும் சித்திராங்கத பாண்டியனைக் காணுகிறார்கள். செய்தி அறிந்த பாண்டியன் தன் மகள் சித்திராங்கியின் விருப்பத்தையும் கேட்டறிந்து, சாரங்கதரனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுக்க உடன்பட்டு அவள் படத்தையும் கொடுத்து அனுப்புகிறான்.

அந்தணர்கள் கொண்டு வந்த படத்தைப் பார்த்த இராச
நரேந்திரன், "இந்தச் சித்திராங்கி என்னும், எழிலான
கன்னிகையை நான் வதுவை செய்து கொள்ள
விரும்புகிறேன்; முறையான திருமணத்திற்கு ஏற்பாடு
செய்யுங்கள்" (பக். 21)

என்று அந்தணர்களிடம் கூறி அரசமுறைப்படி தன்னுடைய வாளை எடுத்து அந்தணர்களிடம் கொடுத்து அனுப்புகிறான். அந்தணர்கள் கொண்டுவந்த வாளைப்பெற்ற பாண்டியன்.

"நரேந்திர மகாராஜனால் நலமாக அனுப்பப்பட்ட
வாளா யுதத்தையும் வன்மையுடன் அப்போது
வஞ்சிசித்தி ராங்கியர்தன் வலப்பக்க மதனில் வைத்து.....
மறையின் விதிப்படி ஓமமது வளர்த்தி....
அனைவரும் வாழ்த்திநிற்க அரசன் மனமகிழ்ந்து" (பக். 29)

திருமண நிகழ்ச்சிகளை முடித்து அந்தணர்களோடு தன் மகளை அத்தினாபுரம் அனுப்பி வைக்கிறான். தன் அரண்மனைக்கு வந்த சித்திராங்கியிடம் நரேந்திரன் தன் கருத்தைத் தெரிவிக்கிறான். செய்தி முரண்பாடாக இருப்பதை நினைத்துச் சித்திராங்கி வருந்துகிறாள். என்றாலும் அரசமுறைப்படி வாளுடன் தனக்கு நடந்த திருமண நிகழ்ச்சிகளை நினைத்து, எல்லாம் விதிப்பயன் என்ற முடிவோடு திருமணத்திற்குச் சம்மதிக்கிறாள். இருவரும் மாலை மாற்றிக்கொண்டு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இது அம்மானை இலக்கியத்தில் காணும் சித்திராங்கி பாத்திரப் படைப்பு ஆகிறது.

நாடகத்தில் சித்திராங்கி

"தன் மைந்தனுக்கு மணம் பேசிய பெண்ணின்மீது மோகம்கொண்டு, தானே மணம்புரிய விரும்புவது உண்டோ இப்புவியில்? அது போனால் போகிறது. அதன் பொருட்டு அவன் இங்கு இச்சமயத்தில் இராவண்ணம் காட்டிற் சென்று வேட்டையாடி வர மனம் துணிந்து அனுப்புவதா? இவர் சித்திராங்கியை மணம் செய்து கொள்ளுவதை அவன் வேண்டாமென்றானா என்ன? சக்களத்தி ஆவாள் என்றும் பாராமல் நானே சரிதான்! உமது இஷ்டம் என்று சொன்னேனே!" (பக். 8) என்பது நாடக முதல் அங்கத்திலேயே பேசப்படுகின்ற இரத்தினாங்கியின் கூற்றாகும். இது அம்மானையில் உருவாக்கப்பட்டுள்ள சித்திராங்கியின் படைப்பை நிகர்த்ததாகிறது. அதாவது சாரங்கதரனுக்குப் பெண் பார்ப்பதும், தேர்ந்தெடுத்த அப்பெண்ணின் உருவப்படத்தைப் பார்த்து மன்னன் அவளை இரண்டாம் மனைவியாக ஏற்க விரும்புவதுமாகிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டதாகிறது.

ஆனால், "நான் ஈசன் அருளின்றி பிறந்தேன்! இல்லாவிடில் இப்படிப்பட்ட கதி எனக்கு வாய்க்குமோ? மைந்தனுக்கென்று மணம்பேசி, பிறகு எனக்கு மறலியாகிய இம்மகானுபாவன், தானே, மணம் புரிய விரும்புவாரோ?..... அம்மட்டும் மதனிகை கூறிய வண்ணம் நான் விரதம் பூண்டிருப்பதாகக் கூறியதே எனக்கு இப்பொழுது பெரும் நலமாய் முடிந்தது..... என் பிராணநாதனாகிய சாரங்க தரனையே மணம் புரிவேனே ஒழிய வேறொரு புருஷனையும் நான் கனவிலும் நினையேன்" என்பது நாடகத்தில் காட்டப்படும் சித்திராங்கியின் பேச்சு. (பக். 13)

நரேந்திரனைத் திருமணம் செய்துகொள்ள விரும்பாமல், தான் விரதம் பூண்டிருப்பதாகப் பொய்ச் சொல்லித் தனித்திருக்கின்ற சித்திராங்கியின் கூற்றாகிய இச்செய்தி அவள் சாரங்கதரனின் படத்தைக் கண்டது முதல் அவனையே தன் கணவனாக மனத்தில் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறாள் என்பதைப் புலப்படுத்துகிறது. மேலும் நரேந்திரனை மணப்பதற்கு மறுப்பு தெரிவிப்பதற்கு மாறாக நோன்பு இருப்பதாகக் கூறிக் காலங்கடத்தி வந்தால் இறுதியில் தன்னைச் சாரங்கதரனுக்கே மணம் முடித்து விடுவான் என்று எண்ணும் அவளுடைய உள்ளக் கருத்தும் இங்குப் புலப்படுகிறது. ஆனால் சித்திராங்கியின் விரதம் முடிந்து தன்னை மணக்க விரும்பும் வரை அவள் சாரங்கதரனைப் பார்க்கக்கூடாது என்பதற்காகவே சாரங்கதரனை வேட்டைக்கு அனுப்பிவிடுகிறான் மன்னன்.

விரதம் முடியவில்லை என்று காலம் கடத்தி வருகின்ற சித்திராங்கியிடம் மன்னன் வருகிறான். "சாரங்கதரன் மீது நீ காதல் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவனோ புத்தி ஹீனன்; அவலட்சணமுடையவன்; உனக்கு அனுப்பிய படம் அவனுடையது என்று நீ ஏமாந்து இருக்கிறாய்..... அது சில

வருஷங்களுக்கு முன்பு நான் இருந்த ஸ்திதியில் எழுதிய என்னுடைய படம்" (பக்.17) என்றெல்லாம் பலவாறு கூறி அவள் மனத்தை மாற்ற முயற்சிசெய்து வருகிறான்.

மதனிகை என்னும் தோழியின் மூலம் சித்திராங்கி அரண்மனை நந்தவனத்தில் சாரங்கதரனைச் சந்தித்துத் தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறாள். ஆனால் சாரங்கதரனோ நீங்கள் எனக்குச் சிற்றன்னை ஆவீர் என்ற உறவினைச் சொல்லி மறுத்து விட்டு வெளியேறுகிறான். சோலையில் சந்திக்கும் இந்தச் சந்திப்பு இந்நாடக நூலில் மட்டுமே காணப்படுகிறது. சித்திராங்கிப் பாத்திரப்படைப்பு நாடக நூலில் தனித்தன்மையைப் பெறுகிறது என்றே கூறவேண்டும்.

புறாவும் சித்திராங்கியும்

சாரங்கதரன் சுமந்தனுடன் கூடிப் புறாப்பந்தயம் விடுவதும் ஒரு புறா சித்திராங்கியின் அரண்மனையில் சென்று இறங்கிவிடுவதும் ஆகிய செய்திகள் எல்லா நூல்களிலும் ஒருமித்துக் காணப்படுகின்ற செய்திகளாகும்.

"வேடரிட வேட்டையிரு — விழிகளாற் பார்க்கவே
மேவினார் எப்போ வருவார் — கிளியே.....
அவசியம் உங்களையன் நரேந்திர மகிபதிக்கென்
வார்த்தை சொல்லி அழைத்தோடிவா — கிளியே" (பா. 48)

என்று கிளியோடு தன் காம வேதனைகளைச் சொல்லி இராசநரேந்திரன் வருகைய எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில் புறாவைக் கேட்டுச் சாரங்கதரன் செல்லுவதாகவும், சித்திராங்கி தன் காமவேதனையைத் தீர்த்துக் கொள்ள அவனோடு காதல் பேச்சுகளைப் பேசுவதாகவும் காட்டுகிறது யட்சகானம், ஆனால்,

கும்பிடப் போன தெய்வம் குறுக்காக வந்ததுபோல்.....
வாகாக நம்மைத்தேடி வருகின்றார் யிப்பொழுது
இன்றல்லோ என்நோன்பு ஈடேறி வந்ததுவே. (பக். 61)

என்னும் அம்மானைக் கூற்று, சித்திராங்கி சாரங்கதரனையே நினைத்துக் கொண்டிருந்தாள்; புறா அவள் அரண்மனைக்குச் சென்றது அவளுடைய காதலை வெளிப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது என்ற நிலையை எடுத்துக் காட்டுகிறது.

நரேந்திரனை மணக்காமல் சாரங்கதரனையே நினைத்துக்கொண்டிருக்கும் சித்திராங்கியிடம் புறா சென்றடைவது அவளுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. சேவகன் வந்து கேட்டபோதும் அவனிடம் புறாவைக் கொடுக்காமல் சாரங்கதரன் வந்தால்தான் அவரிடம் கொடுப்பேன் என்று சொல்லி அனுப்புகிறாள் சித்திராங்கி. இது நாடகம் காட்டும் சித்திராங்கியும் புறாவும் பற்றிய செய்தியாகும். பிற இலக்கியங்களும் இவ்வாறே காட்டுகின்றன.

சாரங்கதரன்-சித்திராங்கி சந்திப்பு

சித்திராங்கியின் அரண்மனையில் இறங்கிய புறாவைப் பெற்றுவரச் சாரங்கதரன் நேரே புறப்படுகிறான். நரேந்திர மன்னன் வேட்டைக்குச் சென்றிருக்கிற சமயமாதலின் சித்திராங்கி தனிமையில் இருக்கிறாள். எனவே அங்குச் செல்லக்கூடாது என்று தடுக்கிறான் சுமந்தன். சிற்றன்னையைப் பார்க்கச் செல்வது தவறில்லை என்று கூறிவிட்டுச் சித்திராங்கியின் அரண்மனைக்குள் செல்லுகிறான். வேட்டைக்குச் சென்ற மன்னன் சில நாட்களாக அரண்மனைக்கு வராததால் அவன் மீதே எண்ணம் கொண்டிருக்கிறாள் சித்திராங்கி. அந்தச் சமயமே புறா சென்று இறங்குவதும், சாரங்கதரன் நேரே செல்வதுமாகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன இது யட்சகானம் காட்டும் சாரங்கதரன்-சித்திராங்கி சந்திக்கும் முறையாகும்.

பிற எல்லா நூல்களிலும் புறாவைப் பெற்றுவர முதலில் ஒரு சேவகனை அனுப்புகிறான் சாரங்கதரன். சாரங்கதரன் வந்தால் அவனிடம் தான் புறாவைக் கொடுப்பேன் உன்னிடம் கொடுக்க மாட்டேன் என்று மறுத்து விடுகிறாள் சித்திராங்கி. இந்த முறைவைப்புச் செய்தி சாரங்கதரனை வலிய தம் அரண்மனைக்கு வருமாறு அழைப்பவள் சித்திராங்கியே என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இருவரும் சந்தித்தும், சித்திராங்கியின் விருப்பத்திற்கு இணங்காமல் சாரங்கதரன் வெளியேறுகின்ற பொழுது சித்திராங்கி அவனுடைய இடுப்பில் இருந்த கச்சையைப் பிடித்து இழுக்க, கச்சை அறுந்து மணிகள் சிதறிவிடுகின்றன என்பதும், மேலாடையைப் பிடித்து இழுக்க, ஆடையை விட்டு விட்டுச் சென்று விடுகிறான் என்பதுமாகிய இரண்டு வகையான சான்றுகள் நூல்களில் கிடைக்கின்றன.

நரேந்திரமன்னன் சித்திராங்கியின் அரண்மனைக்கு வந்தபொழுது சித்திராங்கி அலங்கோலமாய்த் தரையிலே விழுந்து கிடப்பதும், அவளுடைய அணிகலன்கள் அறுந்து சிதறுண்டுக் கிடப்பதும், சாரங்கதரனின் கச்சை மணிகள் அல்லது மேலாடை அந்த இடத்தில் கிடப்பதுமாகியவை சாரங்கதரன் தன்னை

வலிந்து கெடுத்தான் என்று கூறும் சித்திராங்கியின் கூற்றுக்குச் சான்றுகளாகின்றன. இவை எல்லா நூல்களிலும் ஒரே மாதிரியாய் அமைபவை.

சித்திராங்கியின் விருப்பத்திற்கிணங்காத சாரங்கதரனின் செயல், அவளுக்கு இழிவை ஏற்படுத்துவதாக எண்ணி அவனைப் பழிவாங்க வேண்டும் என்ற உள் நோக்கத்தோடு அரசனிடம் சாரங்கதரன் மீது பழிசுமத்திப் பேசுகிறாள் சித்திராங்கி. இந்த முறையில் நாடக இலக்கிய மட்டும் வேறுபடுகிறது. அதாவது,

சாரங்கதரனின் படத்தைக் கண்டவுடன் அவனையே தன் கணவனாக வரித்துக்கொண்ட சித்திராங்கி இறுதிவரை இராசநரேந்திரனை மணந்து கொள்ளாமலே இருந்து வருகிறாள். இடையில் சாரங்கதரனுக்குச் சாளுவதேசத்து அரசன் மகளைத் திருமணம் செய்யப்போவதாக மன்னனும் இரத்தினாங்கியும் முடிவு செய்திருக்கிறார்கள் என்ற செய்தியையும் சித்திராங்கி அறிகிறாள். இந்த நிலையில் மனப்பூர்வமாக விரும்பும் தன்னை விட்டுவிட்டு அவளை மணப்பதா? மணக்க விடலாமா என்பது அவள் எண்ணம். பலவந்தமாகத் தன்னைக் கெடுத்துச் சென்றான் என்ற செய்தியை அரசன் கேட்டால்,

"காரியம் மிஞ்சி விட்டதே! இனி என்ன செய்யலாம் என்று யோசித்து நீ சித்திராங்கியின் கற்பைக் கெடுத்தமையால் நீயே அவளை மணம்புரிய வேண்டும் என்று கூறிக் கட்டாயப்படுத்தித் தன்னைச் சாரங்கதரனுக்கே மணம்முடித்து வைப்பான்" (பக். 65) என்ற உள்நோக்கத்தோடு சித்திராங்கி சாரங்கன் மீது பழிசுமத்திப் பேசத் துணிகிறாள் என்பதையே நாடகம் புலப்படுத்துகிறது.

"கூடித்திரியனாயிற்றே என்று காந்தர்வ மணம்புரியும்படி வேண்டினேன். அவ்வளவு தானே? அதில் என்ன தவறு? ஆ! தோழி, நான் அவன்மீது கொண்டிருந்த காதல் என்ன! அவன் என்னைக் கண்ட கோலமென்ன! இவைகளையெல்லாம் எண்ண எண்ண எனக்கு நெஞ்சம் பகீர்என் றெரிகிறதடி!" (பக். 64) என்று வருந்துகிறாள் சித்திராங்கி. ஆனால் கைகேயியின் தோழியாகிய மந்தரையானவள் கையேயின் மனத்தைக் கெடுப்பது போல, தோழி மதனிகை சித்திராங்கிக்குத் தூபம் போடுகிறாள்.

"கேட்கும் பொழுதே அனலிலிட்ட புழுவைப் போல் ..... துடிக்கின்றது என்மனம். நேராக அனுபவித்தவர்களுக்கு எப்படி இருக்கும்? ..... என்னை இக்கோலம் கண்டிருந்தால் அந்தச் சனமே அவனது உயிர்க்கு உலைதேடியிருப்பேன்..... தன்னையன்றி வேறொரு புருஷனைக் கனவிலும் நினையாத பெண் தானாக வந்து மானமெல்லாம் விட்டு வேண்டியும் வெறுத்துச் செல்லுவதா" (பக். 64) என்று தூபம் போட்டு அவனைப் பழிவாங்கும் நிலைக்குச் சித்திராங்கியை உருவாக்கிவிடுகிறாள் தோழி.

சாரங்கதரன் தன்னைக் கெடுத்துச் சென்றதாகச் சித்திராங்கி நரேந்திரனிடம் சான்றுகளுடன் கூறியவுடன், மன்னன் சாரங்கதரனுக்கு மரணதண்டனை கொடுக்கிறேன் என்னும் முடிவுக்கு வந்துவிடுகிறான். அப்போது சித்திராங்கி மனம் மாறி விடுகிறாள். தான் கிடந்த அலங்கோலத்தில் இருந்து மெல்ல எழுந்து,

"மகாராஜா நடந்தது நடந்து விட்டது. கற்பழிந்த பின் வரப்போகின்றதா? அன்றியும் இனி நான் உம்மை விவாகம் செய்து கொள்ளலாகாது..... என் கற்பிற்குப் பின்னம் வராமல் என்னை அவருக்கே ....." (பக். 70) என்று கூறும்போது மன்னன் இடைமறித்து,

"சித்திராங்கி உனக்கொன்றும்தெரியாது! அவனை மன்னிப்பதாவது" என்று கூறித் தன் முடிவையே நிறைவேற்றும்படியும் ஆணையிட்டுவிடுகிறான்.

கதை முடிவுகள்

நாடகம்: "என்னைக் கெடுப்பவர்கள் கெடுத்தார்களே ஒழிய சுபாவத்தில் நான் தீய குணம் உடையவள் அல்லவே. என் இஷ்டப்படி சாரங்கதரராஜனை மணந்திருப்பேனாயின் தீமை என்பதை மனத்திலும் நினையாதவளாய்..... வாழ்ந்திருப்பேனே!..... நரேந்திரராஜன் எனக்கு எமனாய்த் தோன்ற வேண்டுமா? மதனிகை ஆகிய தோழி ஒருத்தி எனக்கு வாய்க்க வேண்டுமா?..... இதெல்லாம் வீண் யோசனை. நடந்த உண்மைகளை யெல்லாம் எழுதிச் சாரங்கதரராஜனை மன்னிக்கும்படி நான் கேட்டுக்கொண்ட நிருபத்தைத் தோழி மன்னனிடம் சேர்ப்பதற்குமுன் நான் என்உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும்..... சாரங்கதரராஜன் கொலையாளிகளால் இறப்பதற்கு முன் அரசன் உண்மையை அறிந்து இளவரசன் இறவாதிருக்கும்படி செய்வாராக" (பக். 89-90) என்று வேண்டிக்கொண்டவளாய்ச் சித்திராங்கி தீயில் விழுந்து இறக்கிறாள். அரசன் ஆணையின்படி சாரங்கதரனையும் கொலைசெய்து விடுகிறார்கள். இவை நாடகம் காட்டும் முடிவுகளாகின்றன.

வாசகப்பா

சிற்றன்னையைக் கெடுத்ததாக நிரூபிக்கப்பட்ட சாரங்கதரனின் மாறுகை, மாறுகால்களை வெட்டிவிடும்படி அரசன் ஆணையிட, அதன்படியே காட்டில் கொண்டுபோய் அவன் கை, கால்கள் வெட்டப்படுகின்றன. வருந்தியிருக்கும் சாரங்கதரன் முன்பு ஆகாசவாணி தோன்றி இது முன்வினைப் பயனால் நிகழ்ந்தது. சித்தர் ஒருவரால் உன் கை, கால்கள் பழையபடி வளரப்பெற்று நற்கதி அடைவாய் என்று கூறிச் செல்லுகிறாள். மறைந்திருந்து கேட்ட தூதுவர்கள் அரசனிடம் ஆகாசவாணியின் கூற்றைக் கூறுகிறார்கள். அரசவையிலும் ஆகாசவாணி தோன்றி உண்மை நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கிறாள். உண்மை அறிந்த இராச நரேந்திரன், சேனைத் தலைவனை அழைத்து,

சாற்றரிய சித்திராங்கி தன்னை இப்போ
தவறுதலில் லாமல்ஒரு நொடிக்குள் ளாகப்
பார்த்தெவரும் திடுக்கிடச்சுண் ணாம்புத் தீயிற்
பதைத்திடவே தள்ளியிவள் பாங்கி தன்னை
நேத்திரத்தைக் குறடுகொண்டு பிடுங்கி விட்டு
நிலைமையுடன் மறுசெய்தி நிகழ்த்து வாயே. (பக். 177)

என்று ஆணையிடுகிறான். அதன்படியே ஆணையை நிறைவேற்றி வந்த சேனைத்தலைவன்,

"காசினியி லொவ்வாத கரும மான
காதகமாஞ் சுண்ணாம்புக் காள வாயில்
ஈசனிடப் பாகம்வா ழுமைக்கொப் பாகும்
ஏந்திழைரத்தி னாங்கிமன மெரிந்து வாடும்
வேதனையே மீண்டெரியுந் தீய தாகி
வெய்யகொடும் பாவியதில் வெந்தா ளையா". (பக். 230)

என்று தான் செய்த செயலைக் கூறிவிடுகிறான்.

மன்னவனும் இரத்தினாங்கியுமாகச் சாரங்கதரனைத் தேடிக்கொண்டு காட்டில் அலைகிறார்கள். மகனே சாரங்கதரா என்று கூறிப் புலம்புவதை அறிந்த சித்தர் ஒருவர் சாரங்கதரனுக்கு அறிவிக்கிறார். சித்தர்களுடன் தோன்றிய சாரங்கதரனைக் கண்டு, தங்கள் தவறுகளைச் சொல்லி புலம்புகிறார்கள். ஆனால் சாரங்கதரன்,

"அருகில்வந்தா லுங்களுக்கு மெனக்குந் தொந்த
மாகுமோ வாகாகா வென்ன பேச்சு
வருகிறபோ தேதானே வருமே யல்லால்
வருத்தஞ்செய் தால்வருமோ மனத்தி லெண்ணிப்
பெருமையதாய்ப் பார்த்திடுவீர் பிள்ளை பெண்டிற்
பெற்றதாய் தந்தைசமு சார மேது
உருகுவதும் உழலுவதும் வீணே யிந்த
உலகவா தனையாகு முண்மை யாமே". (பக். 290)

என்று கூறிவிட்டுச் சித்தர்களோடு மறைந்துவிடுகிறான். இச்செய்திகளே 'வாசகப்பா' தரும் முடிவுகளாகின்றன.

அம்மானை இலக்கியம்

சித்திராங்கியைத் கற்பழித்ததாகச் சாரங்கதரனின் கைகால்கள் வெட்டப்படுவதும், உண்மை வெளியானதும் சித்திராங்கி கொல்லப்படுவதும் ஆகிய செய்திகள் அம்மானை இலக்கியத்திலும் ஒரே மாதிரியாக அமைகின்றன.

சாரங்கதரனின் பெற்றோர்கள் கானகத்தில் தேடிச்சென்று சித்தர் அருளால் கைகால்களோடு விளங்கிய சாரங்கதரனைக் கண்டபொழுது சாரங்கதரன்,

"வினைவந்து மூண்டதினால் வேந்தேநீர் என்னையுமே
தண்டனை செய்துவிட்டீர் தேவரீர் தானுமல்லோ
அப்போதே யான்இறந்து விட்டேன் ஆகையினால்
உனக்கும் எனக்குமொரு ஒட்டுறவு தானுமில்லை" (பக். 131)

என்று கூறி, இவ்வுலக வாழ்வில் இருந்து விடுபட்டவனாக நிற்கிறான் என்றாலும் சித்தரின் கட்டளைக்கு இணங்க நரேந்திரனிடமிருந்து அரசச் சின்னங்களுள் ஒன்றான வாளைப் பெற்று அருகிலேயிருந்த அமைச்சன் சுமந்திரனிடம் அந்த வாளை ஒப்படைக்கிறான். சித்தர்களுடன் தானும் அஸ்தினாபுரம் சென்று சுமந்திரனுக்கு முடிசூட்டிவைத்துச் சித்தர்களுடன் திரும்பிவிடுகிறான். இது அம்மானை காட்டும் கதை முடிவாகிறது.

யட்சகானம்

பழி சுமத்தப்பட்ட சாரங்கதரனின் கைகால்கள் வெட்டப்படுவதும் உண்மை அறிந்தபின் சித்திராங்கியைக் கொல்வதும் ஆகிய நிகழ்ச்சிகள் யட்சகானத்திலும் பிற இலக்கியங்களையொத்தே அமைகின்றன. இறுதியில் சித்தர்களோடு இருந்த சாரங்கதரனைப் பெற்றோர்கள் சந்தித்தபோது சாரங்கதரன்,

"அய்யாஎன் மீதிலே யவதூறு மில்லைநான்
செய்யாத காரியங்கள் செய்ததுவு மில்லை
பண்டுநான் செய்ததொரு பழிஉத் தரிக்கயிந்த
மண்டலத்தி லுந்தனிட மகனாக வந்தேன்" (பக். 160)

என்று கூறிப் பெற்றோரை வணங்கிச் சித்தர் அருளால் மறைந்து போகிறான். மகனை அடைய முடியாத நரேந்திரன் அங்கேயே இறக்கத் துணிகிறான். அப்போது நீதிமைந்தன் என்னும் அமைச்சன் பாண்டவர் கதையைச் சொல்லி, அபிமன்னன் இறந்தபோது தானும் இறக்கத் துணிந்த அருச்சுனனைப் போல நீயும் உன் மகன் பிரிவைத் தாங்கியே ஆக வேண்டும் என்று வற்புறுத்தி நாட்டிற்கு அழைத்து வருகிறான். இராச நரேந்திரனும் இரத்தினாங்கி தேவியும்

நீதி மைந்தனையே தங்கள் மகனாக ஏற்று நாடு வந்து வாழ்கிறார்கள் என்பது யட்சகானம் தருகின்ற கதை முடிவாகிறது.

சித்திராங்கி மானமிழந்து வாழ்வது கூடாது என்ற கருத்தோடு தானே தீக்குளித்து இறப்பதும், சாரங்கதரனை மன்னன் ஆணைப்படி கொலை செய்து விடுவதும் ஆகிய நாடக முடிவுகள் துன்பியல் நாடகத்திற்கு உரியனவாக அமைந்து விடுகின்றன. ஆனால் பிற இலக்கியங்கள் அனைத்தும் துன்பியல் முடிவை எடுத்துக்காட்டாமல் சில கற்பனைகளோடு முடிவை மாற்றி அமைக்கின்றன. சான்றாக யட்சகானத்தில்

1. கொடுமைக்காரி என்ற முடிவோடு சித்திராங்கி சுண்ணாம்புக் காளவாயில் வைத்துச் சுடப்படுகிறாள்.

2. பழி சுமத்தப்பட்ட சாரங்கதரனின் கைகால்கள் மட்டுமே வெட்டப்படுகின்றன. அவன் கானகத்தில் விடப்படுகிறான்.

3. இந்தத் தண்டனைகளை அடுத்து, சாரங்கதரனின் பெற்றோர்கள் சாரங்கதரனைத் தேடிச் செல்லுகிறார்கள்.

4. கைகால்கள் வெட்டுண்ட சாரங்கதரன் இறைவனை நினைத்து முறையிடுகிறான். அப்போது ஆகாசவாணி தோன்றுவதாகவும், அவள் சாரங்கதரனின் முற்பிறவியினைக்கூறி அந்த முன்வினைப் பயனாலேயே உனக்கு இந்தத் துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன; நீ இப்பிறவியில் தூய்மையானவனே என்று சாரங்கதரனுக்கு ஆறுதல் கூறுவதாகவும் உருவாக்கப்படுகின்றன. மேலும் சித்தர் ஒருவர் தோன்றி உனக்கு அருள் புரிவார் என்றும் ஆகாசவாணி கூறிச்செல்லுகிறாள்.

5. திருநீறும், குங்குமமும் அணிந்து தண்டும், கமண்டலமும் தாங்கி உத்திராட்ச மாலையும் புலித்தோல் ஆடையும் உடையவராகிய ஒரு சித்தர், மகேந்திர சித்தர் என்னும் பெயரால் படைக்கப்படுகிறார். அவர் சாரங்கதரன் காதுகளில் மந்திரங்களையோதி துண்டிக்கப்பட்ட அவனுடைய கைகால்களை வளரச் செய்கிறார்.

6. கைகால்கள் வளர்ந்து சித்தர்களுள் ஒருவனாக மாறிய சாரங்கதரனை அவனுடைய பெற்றோர் சந்திக்கிறார்கள்.

7. அவன் பெற்றிருக்கின்ற இந்தப் பிறவி உங்கள் மகனாகிய சாரங்கதரன் பிறவி அல்ல. இனி அவன் சித்தர்களுள் ஒருவனாகவே இருக்கும் நிலையை அடைந்து விட்டான் என்று சாரங்கதரனே கூறிவிடுகிறான்.

8. தங்களுடன் கானகம் வந்திருந்த நீதி மைந்தன் என்னும் அமைச்சனைத் தங்கள் மகனாக ஏற்று நாடு அடைகிறார்கள்.

இந்த முறையில் அமைந்த யட்சகான அமைப்பு, துன்பியல் முடிவை மாற்றி ஆகாசவாணி, முற்பிறவி, முன்வினைப்பயன், சித்தர் அருள் போன்ற கற்பனைப் படைப்புகளோடு ஒரு இன்பியல் இலக்கியமாக உருவாக்கிக் காட்டுகிறது. அம்மானை, வாசகப்பா ஆகிய இலக்கியங்களும் இத்தகு முடிவையே எடுத்துக்காட்டுகின்றன.

சித்திராங்கி படைப்பில் சில ஐயங்கள்

நாடக அமைப்பு

சாரங்கதரனின் படத்தை அனுப்பி அவனுக்காகப் பார்த்துவந்த பெண்ணைத் தானே மணக்க விரும்புகிறான் இராசநரேந்திரன்.. இந்தச் செய்தி சாரங்கதரனுக்குத் தெரியவேண்டாம் என்றெண்ணி அவனை வேட்டைக்கு அனுப்பிவிடுகிறான். பிறகும் அவன் அறியாவண்ணமே சித்திராங்கியை மறைத்து வைக்கிறான். இருந்தாலும் படத்தைப் பார்த்து அவன்மீது முழுமையாகத் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த சித்திராங்கி இறுதிவரை நரேந்திரனை மணக்காமலே காலந்தாழ்த்தி வருகிறாள். சாரங்கதரனை அடையப் பல வழிகளில் முயற்சியும் செய்கிறாள். அம் முயற்சிகளில் தோல்விகண்ட சித்திராங்கி தோழியின் தூண்டுதலால் சாரங்கதரன் மீது பழி சுமத்தி அவனை வீண் பழிக்கு ஆளாகுமாறு செய்துவிடுகிறாள். இறுதியில் தன் செயலுக்கு வருந்தித் தானே தீக்குளிக்கிறாள். நாடக இலக்கியத்தில் கொடுக்கப்படும் இந்தச் செய்திகள் உலக நடைமுறைகளுக்கு ஏற்ப அமைகின்றன. சாரங்கதரனைப் பற்றிய பிற இலக்கியங்களுக்குப் பிற்பட்ட நூலாதலின் நாடக இலக்கியம் உலக நடைமுறைக்கு ஏற்ப நிகழ்ச்சிகளை மாற்றி அமைத்திருக்கின்றது.

அம்மானை அமைப்பு

இரத்தினாங்கியின் மகனாகிய சாரங்கதரனின் படத்தை அனுப்பி அவனுக்குப் பார்த்து வந்த பெண்ணை இராசநரேந்திரன் தானே மணக்கவிரும்புகிறான். உடனே தன் வாளையனுப்பி அதற்கு மணமுடித்துச் சித்திராங்கியைத் தன் நாட்டிற்கு அழைத்து வரவும் செய்துவிடுகிறான்.

நாட்டிற்கு வந்தபிறகுதான் படத்தில் கண்டவன் வேறு; வாளையனுப்பி மணம் முடித்துக் கொண்டவன் வேறு என்ற உண்மையை அறிகிறாள் சித்திராங்கி.

வேறு வழியில்லாமல் இதுவே நம் தலையழுத்து என்றெண்ணி இராசநரேந்திரனோடு மாலைமாற்றிக்கொண்டு சுகமாக இருந்து வருகிறாள்.

மன்னன் வேட்டைக்காகக் காட்டிற்குச் சென்று சில நாட்களாக வராமல் இருக்கிறான். தனிமையில் சித்திராங்கி அவன் வரவையே எதிர்பார்த்து ஏங்கி

இருக்கிறாள். அச்சமயமே சாரங்கதரனின் புறா அவளை அடைகிறது. புறாவைப் பெறவந்த சேவகனிடம் புறாவைக் கொடுக்காமல் சாரங்கதரனையே வரச்சொல்லுகிறாள். இராசநரேந்திரனின் மூத்த மனைவியின் மகனாகிய அவன் வயதும் அவனுக்காக எடுக்கப்பட்ட திருமண முயற்சிகளும் அவன் மீது மோகம் கொள்ளுவதற்குப் பொருத்தமாக அமைந்து விடுகின்றன.

அமைப்பு - வாசகப்பாவும் யட்சகானமும்

சாரங்கதர வாசகப்பா என்னும் சுவடியும் யட்சகானம் என்னும் இப்பதிப்புச் சுவடியும் இராசநரேந்திரனுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர் என்றே தொடக்கத்தில் சுட்டி விடுகின்றன. இராசநரேந்திரன் குழந்தைப்பேறு இல்லாது இறைவனை வேண்டித்தவம் செய்கிறான். இறைவன் தோன்றி,

> "நின்மனை வியரிலோர் நின்னய மான
> பொன்மனை யாள்மூத்த பூவைதன் வயிற்றில்.....
> மைந்தனுண் டாகவே வரமது தந்தோம்" (பா. 13)

என்று அருள்புரிகிறார். இரத்தினாங்கி கருவுற்றதையும் மகப்பேறு அடைந்ததையும் கண்டு அவ்வப்போது பொறாமைப்பட்டு வருகிறாள் இரண்டாவது மனைவியாகிய சித்திராங்கி. இந்த வயது வித்தியாசத்தில் சாரங்கதரன் பிறந்து வளர்ந்து வயது அடைந்த பிறகு அவன் மீது மோகம் கொண்டு, அதனால் அடாத செயல்கள் பல நிகழ்வதும் சாரங்கதரன் மீது பழி சுமத்தப்பட்டுத் தண்டனைக்குள்ளாக்குவதும் ஆகிய நிகழ்ச்சிகள் வயது முதலான பலவகை அடிப்படைகளில் பொருத்தமானவையா என்ற ஐயங்களுக்கு இடந்தருகின்றன.

கதை மாந்தருள் இராசநரேந்திரன்

சிறந்த பண்புகளும் பெருமையும் புகழும் உடையவனாகப் படைக்கப்படும் இராசநரேந்திரன் குழந்தைச் செல்வம் இல்லாமல் வருந்துகிறான். பணமும் பாக்கியமும், கணமும் காணியும், உறவும் உற்றாரும், அறிவும் ஆண்மையும், மனையும் மாளிகையும் ஆகிய எல்லாம் இருந்தும் மைந்தர் இல்லா வாழ்வு ஒரு வாழ்வாகாது. அது மணமில்லா மலர், இசையில்லா குரல், மதியில்லா வான், மலர் இல்லா குளம் ஆகியவற்றைப் போன்றது என்று பலவாறு எண்ணி வருந்துகிறான்.

அந்தணர், சோதிடர் ஆகியவர்களின் அறவுரைப்படி பலநாள் இறைவனைப் பூசித்துத் தவம் இருந்து வருகிறான் மன்னன். அத்தவத்தின் பயனாய் இரத்தினாங்கியிடம் பிறந்தவனே சாரங்கதரன். இராசமாதேவி கருவுற்றது முதலே தான தருமங்கள் பலவற்றைச் செய்து மகிழ்ந்து வருகிறான். மகன் பிறந்த பிறகு மேலும் பலமடங்கு தான தருமங்கள் செய்து மகிழ்கிறான். இறைவனுக்கு விழா வெடுத்தும், கோபுரம், மதில் ஆகியவற்றைப் புதுப்பித்தும் பல தொண்டுகளைச்

செய்கிறான். மகனின் வயதுக்கேற்பக் குதிரையேற்றம் முதலான பலவகைக் கலைகளையும் ஊட்டி வருகிறான்.

இரத்தினாங்கி கருவுற்றது முதல் இளையவளாகிய சித்திராங்கியின் மீது மிகுதியான பாசத்தைக் காட்டி வருகிறான் மன்னன். சாரங்கதரன் வளர்ந்து நாட்டு அமைச்சன் மகன் சுமந்தனைத் தன் நண்பனாகக் கொண்டு பலவகைக் கல்விகளிலும் சிறந்து விளங்குகிறான். இந்த நிலையிலேயே மன்னன் வேட்டைக்காக நாட்டை விட்டுச் செல்லுவதும், சாரங்கதரன் புறாவை வைத்து விளையாடுவதும், புறா சித்திராங்கியின் அரண்மனையில் புகுவதும், அப்புறாவைப் பெற்றுவரச் சிற்றன்னையிடம் சென்று பழிக்கு ஆளாவதும் ஆகிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்து விடுகின்றன.

மன்னனிடம் சாரங்கதரனைப் பற்றிப் பல அவதூறுகளைச் சொல்லி அவனை நம்ப வைக்கிறாள் சித்திராங்கி. அவள் பேச்சை முழுமையாக நம்பிய மன்னன், அமைச்சர் முதலானோரைக் கூட்டிச் சாரங்கதரனின் தீச் செயலை எடுத்துக் கூறுகிறான். அமைச்சர் முதலானோர் சாரங்கதரன் மீது வீண்பழி சுமத்துவது பெரும் பாவம்; அவன் அத்தகு செயல்களில் ஈடுபடுபவன் அல்லன்;

"உன்பிள்ளை போல்பிள்ளை உலகினி லுண்டோபிள்ளை
உன்பிள்ளை அபகீர்த்திக் குள்ளாவ தில்லை
எவர்பிசகி னாலுமுரை எவர்தவறி னாலும்பிள்ளை
அவரிடத்தில் பிசகென்ப தனியாய மலவோ" (பா. 87)

என்றெல்லாம் கூறிப் பெண்ணால் நிகழ்ந்த கேடுகள் பலவற்றிற்குச் சான்றுகளையும் காட்டுகிறார்கள். சாரங்கதரனின் தோழனாகிய சுமந்தன் நிகழ்ந்த செய்திகளை எடுத்துக்கூறுகிறான். இரத்தினாங்கி தேவியும் உண்மைக்காக மன்றாடுகிறாள். மன்னன் சித்திராங்கியின் கூற்றை மட்டுமே நம்பி விடுகிறான். மற்றவர்கள் பேச்சு அவன் காதுகளுக்கு ஏறவில்லை. மகன் என்றும் பாராமல் சித்திராங்கி கூறியபடியே அவனுடைய கால், கைகளை வெட்டிக் காட்டில் விட்டு விடுமாறு ஆணையிட்டு விடுகிறான்.

ஆகாசவாணியின் கூற்றால் உண்மை நிகழ்ச்சிகளை அறிந்த மன்னன் தன்னுடைய தவறுகளுக்காக மிகவும் வருந்துகிறான். தான் மிகவும் நம்பிய சித்திராங்கியைக் கொல்லவும் செய்கிறான்.

"பாதகி நெஞ்சில் பக்கையறி யாதே.....
நீதிமந்திரி சொல்லை நீக்கினேன் மகனே

உன்னுட தாய்வந்து உரைக்கவே நானும்
வன்நெஞ்சாய் இருந்திப்போ வாடுறேன் மகனே" (பா. 159)

என்றெல்லாம் கூறித் தன்னுடைய தவறுகளை எண்ணி வருந்துகிறான். உயர்ந்த பண்பாடுகளை உடையவனாக எடுத்துக் காட்டப்பட்ட அதே நரேந்திரன் பெண்ணின் பேச்சைக் கேட்டு நீதி தவறுவதும், அவையோர் கருத்தை அலட்சியப் படுத்துவதுமாகிய இழிந்தபண்புகளுக்கு ஆளாகிவிடுகிறான் என்ற உண்மை, இராச நரேந்திரனின் பாத்திரப்படைப்பால் உறுதிப்படுத்தப்படுகிறது.

கதைமாந்தருள் இரத்தினாங்கி

"இவர் சித்திராங்கியை மணஞ்செய்து கொள்வதை அவன்
வேண்டாமென்றானா என்ன? சக்களத்தியாவாள் என்றும்
பாராமல்நானே சரிதான் உமதிஷ்டம் என்று சொன்னேனே!"

(பக். 8)

என்னும் இரத்தினாங்கியின் கூற்று நாடகத்தில் இடம்பெறுகிறது. இதனால் தன் மகனுக்குப் பார்த்த பெண்ணைத் தன் கணவனே மணக்க விரும்பியபோது அவர் விருப்பப்படியே செய்து கொள்ளட்டும் என்ற அளவிற்குத் தன்வாழ்க்கையை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை யுடையவளாக விளங்குகிறாள் இரத்தினாங்கி என்பது புலனாகிறது. இந்தப் பண்பாடு யட்சகானத்தில் சுட்டப்பெறவில்லை யென்றாலும் அரசனுடைய மூத்த மனைவியாகிப் பட்டத்தரசியாக இருந்தும், இளையவளாகிய சித்திராங்கியை ஏற்றுக்கொண்டு வாழ்ந்து வருகிறாள் இரத்தினாங்கி.

"நின்மனை வியரிலோர் நின்னய மான
பொன்மனை யாள்மூத்த பூவைதன் வயிற்றில்.....
மைந்தனுண் டாகவே வரமது தந்தோம்" (பா. 13)

என்னும் இறைவனின் கூற்றானது இரத்தினாங்கி மிகவும் நேர்மை வாய்ந்தவள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. சாரங்கதரனை ஈன்று சீராட்டி வந்த நிகழ்ச்சியோடு, அவனுடைய கை, கால்களை வெட்டப்போகிறார்கள் என்ற செய்தியை அறியும் பொழுதே இரத்தினாங்கியின் பாத்திரம் வெளியாகிறது. செய்தி அறிந்த அவள், அரசனிடம் விண்ணப்பித்துப் பார்க்கிறேன்; அதுவரை பொறுங்கள் என்று தூதுவர்களிடம் வேண்டிக்கொள்ளுகிறாள். பிறகு அரசனைக் கண்டு,

"கொலைக்காரி யிடுநிந்தை கூறுவா ளிடுமருந்து
தலைக்கேறிச் சோசற்றுந் தயவில்லை யோதான்.....

மைந்தனுக்குப் பதிலாக மாபாவிசொல் தவிராமல்
எந்தனையாக் கினைசெய்து யினிதுடனே வாழ்வீர்" (பா. 124)

என்று வேண்டிக்கொள்ளுகிறாள். அவளுடைய இக்கூற்று மைந்தனுக்காகத் தன் உயிரையும் கொடுக்கும் தாயுள்ளத்தை எடுத்துக் காட்டுகிறது. மேலும் அரசன் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காததைக் கண்டு 'ஈசனுக்கும் தயவில்லையோ' என்று இறைவனையும் நொந்துக் கொள்ளுகிறாள். இறுதியில் அரசனோடு கானகம் சென்று தேடியபோது வெட்டுண்ட சாரங்கதரனின் கை, கால்களைக் கண்டு பெரிதும் புலம்புகிறாள். இந்த நிகழ்ச்சிகளோடு இரத்தினாங்கி ஒரு சிறந்த தாயுள்ளம் கொண்ட பாத்திரமாக இடம் பெறுகிறாள்.

கதைமாந்தருள் சாரங்கதரன்

"பொன்மனை யாள்மூத்த பூவைதன் வயிற்றில்
சந்திரசூ ரியரொளி தருமது போலோர்
மைந்தனுண் டாகவே வரமது தந்தோம்" (பா. 13)

என்னும் இறைவனின் அருளால்,

"பாலகன் பிறந்தான் — இளம் பானு போலவே
சாலவுஞ்சேய்க் கலிதீர — தாய்தகப்பன் களிகூரப்" (பா. 18)

பிறந்தவன் சாரங்கதரன். முறையான கல்வி முதலிய பயிற்சிகளைப் பெற்றுப் பதினாறு வயதை அடைகிறான்.

"மைந்தனாஞ் சாரங்க தரமகா ராசன்
அந்தமாய்ப் புவியினில் அழகுள்ள நிபுணன்
சத்தியவாக் கியதர்மந் தவறாத சீலன்
பத்தியாய்த் தேவதார்ச் சனைகளைப் போதுந்
திட்டமாய்ச் செய்திடுந் தீரன் குபேரன்" (பா. 47)

என்னும் சிறந்த பண்புகளுக்கு உரியவனாகிறான். நாட்டு அமைச்சர்மகன் சுமந்தனைத் தோழனாகக் கொண்டு பலவகை விளையாட்டுகளிலும் ஈடுபட்டிருக்கிறான். இருவரும் விளையாடிய புறாவிளையாட்டில் தன் சிற்றன்னையாகிய சித்திராங்கியின் பழிச்சொல்லுக்கு ஆளாகிறான். அதனால் கை, கால்கள் வெட்டப்பட்டுக் கானகத்தில் தனிமையாக விடப்படுகிறான். கானகத்திற்கு அழைத்துச் செல்லும் முன்பு அவன் நிலைமைக்கு வருந்தித் துடிக்கிறாள் அன்னை. அந்த,

"அன்னையை அழைத்திந்த அமைச்சனை யம்மா
என்னையன் புடன்வளர்த் தெடுத்தது போலும்
தன்னிடத் தயவினால் தான்காக்க வென்று
கைபிடித் தன்னைதன் கைதனிற் கொடுத்து" (பா. 132)

அம்மா! இனி வருத்தப்பட வேண்டாம் என்று பல வகையான வேண்டுகோள்களை விடுத்துச் செல்லுகிறான்.

கை, கால்கள் துணிக்கப்பட்டுக் கானகத்தில் தனிமையாக இருந்து செய்யக்கூடாத பாவங்களையெல்லாம் கூறி, இத்தகு பாவங்கள் எதுவும் தான் செய்தவன் அல்லன் என்பதை நினைத்து வருந்துகிறான். பிறகு சித்தர் அருளால் சிரஞ்சீவியாகி விடுகிறான். பெற்றோர் வந்து கண்டபோதும் தான் பழிபாவங்கள் எதையுமே செய்தவன் அல்லன்; முன்வினைப்பயனால் உங்களுக்கு மகனாகப் பிறந்தேன் என்று மட்டுமே கூறி மறைந்து விடுகிறான். இவை மட்டுமே சாரங்கதரனின் பாத்திர அமைப்புகளாகக் காணப்படுகின்றன.

தான் தாயைவிட்டுப் பிரியும்போது நண்பன் சுமந்தனை உங்கள் மகனாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று ஒப்படைத்து விடுகிறான். ஆனால் கானகத்திலிருந்து நாடு செல்லும்போது அவனுடைய பெற்றோர், நீதிமைந்தனாகிய அமைச்சனையே தங்கள் மகனாக ஏற்று அவனுக்கே முடிசூட்டுகிறார்கள் என்றவொரு வேறுபாடு நூலிலே கலந்து விடுகிறது.

நூலினுள் சில அறவுரைகள்

சாரங்கதரனின் வரலாற்றை யட்சகான முறையில் நிகழ்த்த விரும்பும் நூலாசிரியர் வெறும் வலராற்றை மட்டும் எடுத்துச் சொல்லாமல் ஆங்காங்கு மக்களுக்குச் சிறந்த கருத்துரைகளையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறார். தாம் விரும்பும் அந்த நல்ல கருத்துகளைக் கதைமாந்தர் வாயிலாக அமைத்துக் காட்டுவது யட்சமான இலக்கியத்திற்கு மேலும் பெருமையைத் தருகிறது. அந்த அறவுரைகள் ஆசிரியருடைய உயர்ந்த எண்ணங்களைத் தாங்கி நிற்கின்றன. சான்றாகச் சில:

மக்கட்பேறில்லாத வாழ்க்கை சிறந்த வாழ்க்கையாகாது என்பது ஆசிரியரின் உள்ளக்கிடக்கை.

"மைந்தரில்லா எந்தனிட வாழ்வுமொரு வாழ்வோ.....
உளங்களிக்க விழிகளிக்க விளந்தளிர்க்கை யால்தவழ்ந்து
விளங்குமைந்த ரில்லாத வீடுமொரு வீடோ?

கூடிவிளை யாடிமனை தேடியுற வாடிமைந்தர்
ஓடிவந்து தீண்டாத உடம்புமொரு உடம்போ?" (பா. 9)

எனக் குழந்தையில்லா வாழ்க்கையின் அவலத்தை மன்னவன் மூலமாக வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

சாரங்கதரன் தவறு செய்தான்; அவனுக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறான் மன்னன். சித்திராங்கியின் பேச்சைக் கேட்டு இந்த முடிவுக்கு வருவது சிறந்ததன்று என்று கூறும் அமைச்சனின் கூற்று பொதுவான ஒரு அறவுரையாக அமைகிறது. அது:

"அடவியிற் செடிகளை அத்தனை எண்ணலாம்
கடலிற்றண் ணீரையும் கணக்கிட லாகும்
வான்உய ரத்தையும் மதிக்கலு மாகும்
வான்மீனை யித்தனையென்று விளம்பலு மாகும்
தலைமயி ரெண்ணிக்கை தான்சொல்ல லாகும்மரத
திலையையிம் மாத்திரம் என்னலு மாகும்
பாட்டின் பயனது பகரலு மாந்தலை
யோட்டி லெழுத்தையும் உரைக்கவு மாகும்
.....
வரமரு ளரிபிர மாதிய ராலும்
அரிவையர் நெஞ்சுள தறியப்போ காதே" (பா. 86)

இப்பொதுவான கருத்துகளைத் தொடர்ந்து,

"பெண்சாதி சொற்கேட்டுப் பிள்ளைதனைக் கடிவரோ
பெண்சாதி யால்கெட்ட பேரைச் சொல்லக் கேளும்" (பா. 87)

என்று தொடங்கி, கைகேசியால் தசரதன் உயிர்விட நேர்ந்தது; சீதையால் ராகவன் அலையநேர்ந்தது; திரௌபதையால் பாண்டவர் துன்பமுற்றது என்பன போன்ற பல எடுத்துக்காட்டுகளைச் சொல்லி,

"நாரியர் வசனத்தை நம்பப்போ காது" (பா. 88)

என்னும் முடிவோடு கூடிய பல அறவுரைகளை அமைச்சன் வாயிலாக எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர்.

"ஏறிவருங் காலனையும் வெல்ல லாகும்
எதிர்த்தமர்செய் சத்துருவை வெல்ல லாகுஞ்
சீறிவரும் வேங்கைதனை வெல்ல லாகும்
தேறுமயன் விதியதனை வெல்ல லாகும்
மாறுசெய்ய வரும்பேயை வெல்ல லாகும்
மன்னுவிடப் பாம்பதனை வெல்ல லாகும்
மூறும்விடக் கன்னியரை வெல்லொ ணாதே
யுண்மையிது வுண்மையிது வுரைத்தேன் மன்னா"

(வாசகப்பா ஏடு - 68)

எனவும்,

மன்னிவரும் கல்லடி, மதத்துவரும் யானை, துன்னிவரும் வெள்ளம், சுழன்று அடிக்கும் காற்று, கள்ளர், காரிருள், அக்கினி, ஆகியவற்றையெல்லாம் நம்பலாகும் ஆனால் "அன்னநடை மின்னாரை நம்பொண்ணாதே". (வாசகப்பா ஏடு - 68)

எனவும் பலவகையான அறவுரைகளை வாசகப்பா எடுத்துக்காட்டுகிறது.

அறவுரைக்கதை

ஒரு கீரிப்பிள்ளையைத் தன் மகனைப்போல வளர்த்து வருகிறாள் அந்தணமாது ஒருத்தி. ஒருநாள் குழந்தையைக் கடிக்கவந்த பாம்பைக் கடித்துக் கொன்று, வாயில் அந்த இரத்தக் கறையோடு நின்றது கீரி. அதைக்கண்ட மாது தன் குழந்தையைத்தான் கடித்துவிட்டது என்றெண்ணி உடனே அதைக் கொன்று விடுகிறாள். பிறகு குழந்தை தொட்டிலில் இருப்பதைக் கண்டு தன் தவறுகளுக்காக வருந்துகிறாள். இதையறிந்த அந்தணர் காசியாத்திரை புறப்படுகிறார். போகும்போது,

"ஆய்ந்தறிந்து பாராதே அறியாமல் செய்தகவை
தான்சாகத் துயரமிகத் தரும்....." என்று

ஒரு ஓலைச் சீட்டில் எழுதி மனைவியிடம் கொடுத்து, இதை யாரேனும் அறிஞர் ஒருவரிடம் கொடுத்தால் இதற்கு நூறுபொன் தருவார்கள் என்று கூறிச் செல்லுகிறான். அதை 100 பொன் கொடுத்து வாங்கிய வணிகன் மகன் ஒருவன் பெற்றோரால் மிகவும் ஏளனப்படுத்தப்பட்டு நாட்டைவிட்டே சென்று விடுகிறான். சில நாள் கழித்து அவன் வீட்டிற்கு வருகிறான். அப்போது அவன் தந்தை வாணிகத்தின் பொருட்டு வெளிநாடு சென்றிருக்கிறான். ஒரு நாள் இரவு தாயும் மகனுமாகப் படுத்துறங்கிக் கொண்டிருக்கும்போது, தந்தை வெளி நாட்டிலிருந்து வருகிறான். தன் மனைவியோடு யாரோ ஆடவன் ஒருவன்

படுத்திருப்பதாக எண்ணி, அவளைக் கொல்ல அருகில் இருந்த வாளை உருவுகிறான். அந்தவாள் உறையிலிருந்து அந்தணனுடைய ஓலைச் சீட்டு கீழே விழுகிறது. அதைப் படித்துவிட்டு மனைவியையும் மகனையும் எழுப்பி மகனே!

"..... உன்னைக்
கொன்றுமென் னுயிர்போக்கிக் கொள்ளவே யிருந்தேன்
அன்றுநீ நூறுபொன் நீட்டுவாங் கியதோர்
சீட்டினால் காரியஞ் சேகர மாச்சென்
றாட்டியின் சீட்டினுக் காயிரம் பொன்னும்
விலையல்ல வென்றுதான் மெத்தவுந் துதித்தான்" (பா.94)

என்ற ஒரு கதையையும் அறவுரையாக இடையே சேர்த்திருக்கிறார் யட்சகான ஆசிரியர்.

பாரதப்போரில் அபிமன்னன் இறக்க, மகன் இறந்ததைத் தாங்காது அருச்சுனனும் இறக்கத் துணிகிறான். கண்ணன் பலவகைகளில் அவனைத் தடுத்து மேலுலகு எய்திய அபிமன்னனிடம் அழைத்துச் செல்லுகிறான். அங்கே அபிமன்னனைக் கண்ட அருச்சுனன் வாமகனே! என்று அழைக்கிறான். அபிமன்னன் ஏளனமாகச் சிரித்து,

"எப்பிறப்பி லுனக்கு நான்மகன்
ஏதுகாண் பரியாச மோவெனச்
செப்பினான்". (பா. 171)

என்ற கதையைச் சொல்லி இராசநரேந்திரனுக்கு அமைச்சன் ஆறுதல் கூறுவதாக ஒரு பகுதியை அமைத்து, இவ்வுலக வாழ்வின் நிலையின்மையை எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

"வழக்கில்லாத வழக்கை யுண்டென
வகைசொன் னேனோ - பிறஅறம்
அழித்துவரும் பரதேசிகளைநான் அடித்திட்டேனோ

தெய்வசந் நிதிக்கேகி யொருகையில்
சேவித் தேனோ - கொடுப்பது
பொய்வசனஞ் சொல்லிவந்த பேர்க்கில்லை
போவென்றேனோ" (பா. 140)

என்பன சாரங்கதரன் தன்னைத் தானே நொந்துக் கொள்ளும் வகையில் அமைந்த சில அடிகள். மேலும்,

"நல்லோர் மனம்வருந்தப் பேசினேனோ! தாயை எதிர்த்துப்
பேசினேனோ! வாணிபத்தில் முறைதவறி விற்றல் வாங்கல்
செய்தேனோ! செபம் தபம், குலம் கோத்திரம்
போன்றவற்றைப் பழித்துப் பேசினேனோ! ஆசிரியரை
எதிர்த்து நின்று ஏதேனும் பேசினேனோ! "

என்றெல்லாம் தன்னைத் தானே நொந்துக் கொள்ளுவதாக அமையும் கூற்றுகள் அனைத்தும் ஆசிரியரின் அறவுரைகளாக நூலில் அமைந்தவை ஆகும்.

கை, கால்களை இழந்தோம்; இனி இருந்து என்ன பயன் என்று வருந்தவேண்டாம்,

"மன்னர் மன்னவர்கள் மனுக்கள் மந்திரிகள்
பின்னையு மனேகம் பேரெல்லா முலகில்
மாண்டன ரென்னும் வசனமே யல்லால்
ஈண்டிருந் தாரென் றியம்பிய துண்டோ" (பா. 146)

என்று கூறும் சித்தரின் கூற்றும் வாழ்க்கையின் நிலையில்லாமையை எடுத்துக் காட்டும் ஓர் அறவுரையாகிறது.

வாழ்க்கை நியதி

சித்திராங்கியின் கொடுஞ்செயல் அனைத்தும் வெளியான பின் மன்னன் சென்று சித்திராங்கியை வினவ, அவள் ஆத்திரம் அடைந்தவளாய்,

"கன்னிரத்தி னாங்கிதருங்
கயலஞ்சு வாங்கிக்கொண்டு
என்னவென்று தூதருக்கு
இயம்பினாள் மெய்போலே"
"பொன்னென்னும் பாவிவெகு
பொல்லாதல் லோயெவர்க்குஞ்
சொல்லமனந் துணிவுதருமென்று
சொல்வது மெய்யாச்சு" (பா. 150)

எனவும், பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும்; பொய்யை மெய் என்பது பண ஆசையால் அல்லவோ? தூதுவர் உமக்குச் சொன்னவையெல்லாம் இரத்தினாங்கியிடம் பணம் வாங்கிக் கொண்டு அவள் சொல்லிக் கொடுத்தபடியே

சொன்னவையாகும் என்று பேசும் பேச்சுகள் அனைத்தும் சித்திராங்கியின் கூற்றுக்கு உண்மையல்லாதனவா யிருந்தாலும் இவை உலக நியதிகளே என்பதைச் சித்திராங்கியின் கூற்று மூலம் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

சாரங்கதரன் காட்டிற்கு அழைத்துச் செல்லப்படுகிறான். நகர மக்கள் பலரும் காணுகிறார்கள். அவர்களில் சிலர் வேடிக்கைப் பார்ப்பதோடு சரி; மனமுருகி காணச் சகிக்காமல் ஒளிந்தவர்களுமுண்டு; சீலையால் முகத்தை மூடியவாறு அழுதவர் பலர்; மகனைக் கொல்லும் அளவிற்கு அரசனுக்கு மதிகெட்டதோ என்று துணிந்து கூறியவர்களும் இருந்தார்கள்; சிறுவன் மீது பழிசுமத்திவிட்டாளே நீலி என்று கதறியவர் பலர்; இந்நகரைவிட்டுச் சென்று விடுவோம் என்று கூறியவர் சிலர். இப்படிக் கும்பல் கும்பலாகக் கூடிப் பேசியவர்களில் சிலர் `தகாத நடத்தை நடப்பது அடுக்குமோ? இப்பாவி இந்த எல்லையில் இருப்பதும் ஆகாது' என்று பேசவும் செய்தார்கள். இதுவே உலக இயல்பு என்பதை ஆசிரியர் இம்மக்கள் பேச்சுகளின் வழி உணர்த்துகிறார். (பா.133, 134)

வேடுவர் அழைப்பிற்கிணங்கித் தன் பரிவாரங்களோடு வேட்டைக்குச் செல்லுகிறான் நரேந்திரன். வீரர்கள் காட்டு விலங்குகளை வேட்டை யாடுகிறார்கள். அப்போது சிலர் பெரிய புலிகளும் கறுத்த யானைகளும் துரத்த அவற்றைக் கண்டு நடுங்கிப் பயந்து ஓடி மறைகிறார்கள். சிலர் காட்டுப் பன்றிகள் பூமியைக் குத்திக் கிளறியதைக் கண்டு மிரண்டு ஓடுகிறார்கள். கண்ட பேரண்டப் பறவையை வெட்டி வீழ்த்திய வீரர்களும் உண்டு. பயந்து ஓடமாட்டோம்; புலிகளிடம் சிக்கி இறப்பதே சரி என்று வீரம் பேசியவர்கள் சிலர். ஆனால்,

> "அறியாமல் ஏன்வந்தோம் ஆண்பெண்டு பிள்ளைவிட்டுத்
> தெரியாமல் வந்தோமென்று தியங்குவார் சிலபேர்
> ஐயையோ இக்காட்டில் அநியாய மாய்க்கொல்ல
> மெய்யாகக் கொண்டுவந்து வினைசெய்தா னென்பார்". (பா.46)

இவ்வாறெல்லாம் தங்கள் செயலுக்காகத் தங்களையே நொந்துக் கொள்ளுவோரும், தங்கள் கடமையை மறந்து மன்னன் மீது பழி சுமத்திப் பேசுவோருமாகிய வீரர்கள் அக்கூட்டத்தில் இல்லாமல் இல்லை என்பதை உணர்த்தியிருக்கிறார் ஆசிரியர். மக்களிடையே இக்கதைப்பாடலை நிகழ்த்திக் காட்டும்பொழுது ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய பண்புகளைப் பின்னோக்கிப் பார்த்துத் தங்கள் உள்ளத்தைத் திருத்திக் கொள்ளப் பலர் முயற்சிசெய்வார்கள் என்பது உறுதி. அந்த முயற்சியே ஆசிரியருக்குக் கிடைக்கும் வெற்றியாகும்.

நூலாசிரியர்

"உள்ளத்தி னிற்சிறு பாலருக் கேகல்வி
யுறுதிகொள வுரைப்போன் தென்மாதையில்
வெள்ளிக் கந்தையன் வீரசைவன் விளம்புகிறான்" (பா.6)

என்னும் அடிகள் ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ளன. விருத்தப்பா நடையில் இருந்த சாரங்கதரன் கதையை யட்சகானப் பிரபந்தமாகச் சொல்லுகிறேன் என்று தொடங்கும் ஆசிரியர், சோழ நாட்டிலுள்ள தென்மாதை என்னும் மாதையம்பதியைச் சார்ந்தவர்; தொடக்கநிலை ஆசிரியராக இருந்து குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து வந்தவர்; வீரசைவ மரபைச் சார்ந்தவர்; வெள்ளிக் கந்தையன் என்னும் பெயருடையவர் என்னும் செய்திகள் தெரியவருகின்றன.

மாதை திருவேங்கடநாதன் பணவிடுதூது என்னும் ஒரு நூலும் இந்த மாதையம்பதியில் எழுந்தருளியுள்ள இறைவன் மீது பாடப்பட்டுள்ளது. இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் பசுபதி நாயகன்; அவன் மாதை உமையவள் மணவாளன்; வெண்சந்திர சேகரன்; அடியவர் மனத்தில் குடியிருப்போன்; தம் திருவடிகளை அடியவர்க்கு அளிப்பவன்; இத்தகு இறைவன் அழகிய தமிழில் இந்நூலைப் பாட எனக்கு அருள்புரிபவனாவான் என்பன ஆசிரியர் இறைவனது சிறப்புகளைக் கூறும் கருத்துகளாகும். இதே நிலையில் அத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள வேண்டி விநாயகன், உண்ணாமுலையம்மை, வள்ளி நாயகிக் கணவன், பொன்னித்தாய், முத்தாலெக்கலாதேவி போன்ற கடவுளர்களையும் வணங்கி நூலைத் தொடங்குகிறார்.

இலக்கிய நயம்

சிறந்த இலக்கியச் சொற்களையும் வட்டார வழக்குச் சொற்களையும் கலந்து எளிய தமிழில் நூலை உருவாக்கி இருக்கும் ஆசிரியர், உவமை, உருவகம் போன்ற அணிநலம் மிக்க தொடர்களை இடத்திற்கேற்றவாறு பொருத்தமுற அமைத்துக் காட்டியிருப்பதும், எதுகை, மோனை, இயைபு போன்ற தொடைநயங்களில் பாடல்கள் முழுவதையும் உருவாக்கி இருப்பதும் இவர்தம் தமிழ்ப் புலமைக்குச் சான்றுகளாகின்றன. கதைப்பாடலுக் கேற்றாற்போலத் தாம் மக்களுக்குக் கூற விரும்பும் நல்ல பல கருத்துகளை ஆங்காங்கு புகுத்திச் செல்லும் அவர்தம் தமிழ்நடை விறுவிறுப்பை ஊட்டுகிறது. உவமைநயம் சிறந்த புலமை வாய்ந்த ஆசிரியர்,

"பார நாவலர் முன்பு நானொரு
தீர தாக வுரைத்தி டுந்தமிழ்
மேரு மாமலை முன்பு சிறுமலை நேர தாமே" (பா.5)

என்னும் அவையடக்கப் பாடலை அமைக்கிறார். இது ஆசிரியர்தம் பண்புள்ளத்தையும் உவமை நயத்தையும் எடுத்துக்காட்டுகிறது. இது போலவே,

"மக்கட்செல்வம் இல்லாத வாழ்க்கை மணமில்லா
மலர்போன்றது; இசையில்லா குரல் போன்றது;
மதியில்லா வான் போன்றது; மலரில்லா குளம் போன்றது"

(பா.9)

என்னும் உவமைகள் குழந்தையில்லாத இராசநரேந்திரனின் வாழ்க்கைத் தன்மையை எடுத்துக்காட்டப் பயன்படுத்தப்படுகின்றன.

குழந்தைப்பேறு இல்லாதிருந்த இரத்தினாங்கி, இறைவன் அருளால் கர்ப்பவதியாகிறாள். அது,

"கல்லின் மேல் வழுதளை காய்த்தது போலமுதல்
மெல்லியும் மைந்தனை விளங்கஉண் டானாள்" (பா.15)

என்னும் உவமைத் தொடரால் எடுத்துக்காட்டப்படுகிறது. அதாவது கற்பாறையின் மீது கத்தரிச்செடி முளைத்துக் காய்த்தது போல மூத்த தேவியாகிய இரத்தினாங்கி கர்ப்பமடைந்தாள் என்பதாகக் காட்டப்படுகிறது. இரத்தினாங்கிக்கு மகன் பிறக்கிறான். அச் செய்தி இளம் பானுபோலப் பிறந்தான் என்ற உவமையால் சுட்டப்படுகிறது.

வேடுவர் வந்து மன்னனை அழைக்க 'நாளையே புறப்படுகிறோம்' என்று கூறி அவர்களை அனுப்பிய மன்னவன் சித்திராங்கியின் அரண்மனைக்கு வருகிறான். சூரியன் மறைந்து இரவு நேரம் தோன்றுகிறது. இக்காட்சியை,

"ஆரி யன்மனை மேவிய பின்னினி
யாரைப் பார்ப்போமென் றேயெனுந்துரை
சூரியன்கடி தேகி மேல்திசை
வாரி படர்ந்தான்"

(பா.40)

என்னும் அழகிய கற்பனைத் தொடரால் பாடிக்காட்டுகிறார் ஆசிரியர். இதே போல இரவு தோன்றிய காட்சி,

"முத்தமிழை யறியாத மூடர்மனம் போலவே
எத்திசையும் பரவிநிறைந் தியங்கவிருண் டனவால
வாகாக யிளமகிமை மண்டலமெல் லாமிருண்ட
தாகாச வாணிகுழல் விரித்திடுவார் நுதலில்" (பா.41)

என எடுத்துக்காட்டப்படுகிறது. அதாவது சூரியன் மறைவிற்குப் பிறகு இந்த நிலவுலகின் எல்லாத்திசைகளிலும் இருள் நிறைந்துவிட்டதாம்; அந்தக் காட்சி இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் திறத்தையும், அதன் சுவையையும் அறியாத மூடர்களின் மனம், அறியாமையால் இருண்டு கிடப்பதைப் போலக் காணப்பட்டதாம். மேலும் ஆகாசவாணி என்னும் அழகிய இளம்பெண் தன் கூந்தலால் முகத்தை மறைத்துக் கொண்டதைப் போல, இளமையும் அழகும் நிறைந்த இந்த நிலவுலகமும் ஆகாயமும் இருண்டு போயிற்று என்பார்.

சாரங்கதரனுக்குத் தண்டனை அளிக்கப்படுகிறது. தண்டனையை நிறைவேற்றும் பணியை ஏற்றுவந்த தூதுவர்கள் வருந்துகிறார்கள். நடைபெற்ற நிகழ்ச்சியை,

"காக்கை யேறினதும் பெரும்பனங்
காய்விழுந்ததும் போல - நீ
ரந்தத் தோகையகம் புகவந்ததுயர்
என்னதுரைக்கப் போறோம்" (பா.116)

என்னும் உவமையோடு எடுத்துக் கூறுகிறார்கள்.

தருமபுத்திரனைத் தோற்கடித்துச் சிறைபிடிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு துரியன் தருமனைப் போர்க்களத்திற்கு அழைக்கிறான். அதைக்கேட்ட வீமன் வெகுண்டு, தானே வந்து போர்செய்யத் தொடங்குகிறான் என்னும் பாரதக் கதை நிகழ்ச்சியை இடையிலே எடுத்துக்காட்டும் ஆசிரியர், வீமன் போருக்கு வந்த காட்சியை,

"வேல்பீமன் கேட்டு வெகுண்டுட னெழுந்து
காலாக்கினி ருத்திரன்போல் கனக்கவே சீறி
காலாக்கினி போல்வருங் கனசேனை மீதில்" (பா.166)

போர்ச் செய்யத் தொடங்குகிறான். இது ஊழித்தீக் காலத்துத் தோன்றிய சம்மாரமூர்த்தியாக வீமனையும், உலக முடிவுக்காலத்தில் ஏற்படும் பெருந்தீயாகத் துரியனின் பெரும்படையையும் உருவகித்து உவமையாக்கிக் காட்டுகிறது. இப்படி நூல் முழுமையும் இடத்திற்கேற்றவாறு பல உருவக, உவமைகளைச் சிறப்புற

அமைத்து நூற்பொருள் சிறக்குமாறு செய்திருப்பது ஆசிரியரின் உவமைத்திறனை வெளிப்படுத்துகிறது.

உருவகநயம்

மன்னர் மன்னனாக விளங்கிய நரேந்திரன்,
"உலுத்தர் குடோரி; உதவிய பாரி;
செலுத்திய கடாரிகை; செந்திபொன்மாரி;
மன்னவர் பங்கமான பிள்ளைச் சிங்கம்;
போக போக்கிய நிர்வாகி; புத்தியில்ஊகி;
வாக்கியத்துஅரிச்சந்திரன்;
வழங்கிடும் கர்ணன்" (பா.7)

என்றெல்லாம் உருவகிக்கப்படுகிறான். நூலின் தொடக்கத்தில் நரேந்திரனின் பண்பு நலன்களைக் கூறத் தொடங்கிய ஆசிரியர் இத்தகு உருவகங்களால் அவனை அறிமுகப்படுத்துகிறார்.

"மகளிருள் மாணிக்கம்; கெம்பு; வயிரம்;
பச்சைநிற மரகதம்; மாதுளம் துளிர்;
நோய்த் தீர்க்கும் சஞ்சீவி"

என்பன நரேந்திரன் சித்திராங்கியைச் சிறப்பிக்கும் உருவகத்தொடர்கள். மேலும்,

உன்முகம் பூரணச் சந்திரன், மலர்ந்ததாமரை;
இருபுருவங்கள் இந்திரவில்; விழிகள் கெண்டை மீன்கள்;
மூக்கு செண்பகமலர்; இதழ் பவளம்; கோவைப்பழம்;
பல் ஒளிமுத்து; தோள் சுவைதரும் கரும்பு;
வயிறு ஆலிலை; இடை வளுசிக்கொடி;
தொடை வாழைத்தண்டு என்றெல்லாம் அவளை
உருவகிக்கும் மன்னன், கிளியே!
குயிலே! அமுதமே! மரகதமே! என்னும் உருவகத்
தொடர்களால் அவளை விளிக்கிறான். (பா.31)

சூரியன் மறைகிறான்; இருள் தோன்றுகிறது; மதியம் என்னும் நல்லவன் இருளாகிய கொடியவனை வீறிடத் துரத்துகிறான். அந்த நல்லவனைக் கண்டு முல்லையாகிய பெண் நகைக்கிறாள்; தாமரை என்பவள் வாயை

மூடிக்கொள்கிறாள். அல்லி என்பவளும் மல்லிகை என்பவளும் வாய்விட்டுச் சிரித்து மணத்தைப் பரப்புகிறார்கள் என்பன போன்ற பல உருவகங்கள் இரவுக்காட்சியைப் படம்பிடித்துக் காட்டுவன. (பா.42)

தொடைநயம்

"தெள்ளு தமிழ்தரு வெள்ள மதையொரு
பிள்ளை யெனவரு வள்ளல் தொழுமுதல்
வள்ள ரருள்மிக உள்ளராச மகேந்திரபுரமே" (பா. 6)

என்பது திரிபுடையிலமைந்த மும்மூன்று அடிகளில் ஒரு கருத்து முடிவுபெறும் சந்தப் பாடற் பத்தியாகும். இது போல நான்கு, ஐந்து, ஆறு பத்திகளைக் கொண்டு ஒரு பாடல் நிறைவுபெறுகிறது. இம்மூன்று அடிகளிலும் அடி எதுகைத் தொடையோடு, அடிதோறும் பொழிப்பு எதுகைத் தொடையும் அமைந்து பாடலுக்கு இசைநயமும் பொருள் நயமும் ஊட்டுகின்றன. இதே பாடலில் மற்றொரு பத்தி,

"சொன்ன மலர்சனை பின்ன லுளகுழல்
மின்னை நிகரிடை கன்னி யவரொடு
மன்னர் தினமும் மகிழ்ந்தராச மகேந்திரபுரமே"

என அமைந்து அதே தொடைநயத்தை உடையதாகிறது. பொதுவாக இவ்வாறான மூன்றடித் தொடர்களும், கண்ணிகள் போன்ற இரண்டடித் தொடர்களும் முழுமையாக எதுகை நயம் பொருந்தவே நூல் முழுமையும் இடம்பெறுகின்றன.

"பணமிருந் தென்ன - வெகு - பாக்கிய மிருந்தென்ன
கணமிருந் தென்ன - பயன் - காணியிருந் தென்ன
உறவிருந் தென்ன - நமக் - குற்றார்க ளிருந்தென்ன
அறிவிருந் தென்ன - பயன் - ஆண்மையிருந் தென்ன
மனையிருந் தென்ன - மாட - மாளிகைக ளிருந்தென்ன"

(பா.9)

இவ்வாறான பல அடிகள் இரண்டிரண்டடிகளில் அடியெதுகை நயம் அமைவதோடு அடிதோறும் பொழிப்பு இயைபுத் தொடைநயம் அமைந்து மேடையில் பாடுவதற்குரிய இனிய நடையைப் பெறுகின்றன.

"மைந்தரில்லா எந்தனிட வாழ்வுமொரு வாழ்வோ?
சுதனில்லா துண்ணுமிந்தச் சோறுமொரு சோறோ?

விளங்குமைந்த னில்லாத வீடுமொரு வீடோ?
ஓடிவந்து தீண்டாத உடம்புமொரு உடம்போ?" (பா.9)

என்பன ஒவ்வொரு கண்ணியிலும் அமைந்த ஈற்றடிகள். இவ்வடிகள் முழுமையும் அடிஎதுகைத் தொடையும் இயைபுத்தொடை நயமும் பொருந்தி மேடையில் பாடும்பொழுது மக்கள் உள்ளத்தைக் கவர்வனவாகின்றன.

பாங்குடனே தான்பார்க்க நீங்கள்வர வேணும்
..... பார்க்கவர வேணும்
..... கடுகவர வேணும் (பா.39)

என்பனபோன்ற மகுட அடிகளைக் கொண்ட சம்பை தாளத்தில் அமைந்த பாடல்கள் பல.

"பேதமை என்பது மாதர்க் கணிகலன் (59)
கரும்பு தின்னக் கூலி (62)
கும்பிடப்போன தெய்வம் (63)

என்பன போன்ற பிற நூல் தொடர்களும் பழமொழிகளும் பலவிடங்களில் பொருத்தமுறக் கையாளப்படுகின்றன.

சுருங்கிய தொடர்கள் உணர்த்துவன

"**அஷ்ட ஐசுவரிய** சாமார்த்தியா பராக்கு" (பா22)
"**அட்டஅயிஸ்** வரியமுடன் அனைவரும் வாழ்ந்திருந்தார்"

(பா.172)

என்னும் அடிகளில் அட்ட ஐசுவரியம் என்னும் சொல்லைச் சுட்டுகிறார். இதையே இரண்டடிகளிலும் முறையே அஷ்ட ஐசுவரியம் எனவும் அட்ட அயிஸ்வரியம் எனவும் வேறுபடக் கையாளுகிறார். இந்தச் சுருங்கிய தொடர், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை, அரசு ஆகிய எண்வகைச் செல்வங்களை உணர்த்துகிறது. இதேபோல,

"**கற்பகம்** விழக்கனாக் கண்டன மென்று" (பா. 134)

என்னும் அடியிலுள்ள கற்பகம் என்னும் சொல் ஐவகைத் தருக்களில் ஒன்றைச் சுட்டி, அரிச்சந்தனம், கற்பகதரு, சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்னும் ஐவகைத் தேவதருக்களைப் பெறவைக்கிறது.

"மன்னவன் **சாஷ்டாங்க வணக்கமுஞ்** செய்து" (பா. 13)

என்னும் அடியிலுள்ள சாஷ்டாங்க வணக்கம் என்னும் தொடர் உடலின் எட்டு உறுப்புகளும் நிலத்திற்படுமாறு வணங்குவதை உணர்த்தி, மோவாய், காதுகள் 2, தலை, புயங்கள் 2, கைகள் 2 ஆகிய எட்டு உறுப்புகளைப் பெறவைக்கிறது.

"காண்கிலேனினிச் செய்யும் வாறென்ன கண்ணனே
நித்தில வண்ண னேயென" (பா. 169)

இவ்வடிகளிலுள்ள நித்தில வண்ணன் என்னும் தொடர் முத்தைப் போன்ற ஒளியுடையவன் என்னும் பொருளில் கண்ணபிரானைச் சுட்டுகிறது. ஆனால் நவரத்தினங்களுள் ஒன்றாகிய முத்து என்பது வெண்ணிறம் உடையது. இந்த நிறத்தைக் கண்ணபிரானுக்கு அடையாகச் சுட்டுவது பொருத்தமில்லாததாகிறது. பாம்பின் வாயிலிருந்து பிறக்கும் முத்து நீலநிறமுடையது; ஆதிசேடனாகிய பாம்பின் வாயிலிருந்து பிறக்கும் நீலநிற முத்தை நிகர்த்தவன் எனப்பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் முத்து எங்கெங்கே பிறக்கிறது என்பதை அறிய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

முத்தானது இப்பி, உடும்பு, கடல்மீன், கதலி, கமலம், கமுகு, கரும்பு, கொக்கு, சங்கு, செந்நெல், திங்கள், நத்து, நாகம், பசுவின்பால், பன்றிமருப்பு, மடந்தையர்கந்தரம், முதலை, மூங்கில், மேகம், யானைமருப்பு ஆகிய 21 இடங்களில் பிறக்கும் என்பதை அறிய வைக்கிறது.

முத்துகள் தலசம், சலசம் என இரு வகைப்படும். அவற்றுள் தலசம் என்பது பூமியிலுள்ள பொருள்களில் பிறப்பது; சலசம் என்பது நீரில் உண்டாகும் பொருள்களில் பிறப்பது எனப்பகுப்பர்.

யானைத் தந்தத்தில் பிறப்பது திரண்டவடிவில் வெண்ணிறமாய் இருக்கும். மேகத்தில் பிறப்பது இளஞ்சூரியன் நிறமாகவும், மூங்கில் முத்து மழைத்துளி நிறமாகவும் இருக்கும். பாம்பின் முத்து நீலநிறமுடையது. பன்றிக் கொம்பில் பிறப்பது இரத்தநிறம்; நெல்லில் தோன்றுவது பச்சைநிறம்; மீனிடம் பிறப்பது பாதிரிப்பூநிறம்; கரும்பில் தோன்றுகிறது பொன்னிறம் எனச் சில முத்துகளின் நிறத்தை அறிய முடிகிறது.

அருச்சுனன், தனஞ்செயன், விசையன் என்னும் பல பெயர்களால் ஆசிரியர் அருச்சுனனைச் சுட்டுகிறார். இதனால் அருச்சுனனுக்கு எத்தனைப் பெயர்கள் உள்ளன? என்ன காரணத்தால் அப்பெயர்கள் தோன்றின என்னும் செய்திகளை அறிய வேண்டிய நிலை ஏற்படுகிறது. பாண்டு மன்னனின் தேவியாகிய குந்தியிடம் இந்திர மந்திரத்தால் பங்குனி உத்தரத்தில் பிறந்தவன் அருச்சுனன். இவன் வெண்ணிறம் உடையவன் ஆதலின் **அருச்சுனன்** என்னும் பெயர் பெறுகிறான்; பிரதை என்னும் குந்தியின் மகனாதலின் **பார்த்தன்** எனப்படுகிறான்; பங்குனி உத்தரத்தில் பிறந்ததால் **பற்குணன்** எனப்படுகிறான்; இந்திரனால் அளிக்கப்பட்ட கிரீடத்தை உடையவனாதலின் **கிரீடி** எனப்படுகிறான்; வெள்ளைக் குதிரைகள்

பூட்டிய தேரையுடையவனாதலின் **சுவேதவாகன்** என்ற பெயரும் இவனுக்கு உண்டு. பகைவர்கள் வெறுக்குமாறு போர் செய்யவல்லவன் ஆதலின் **வீபற்சு** என்று அழைக்கப்படுகிறான். போரில் வெற்றியேபெறுபவன் ஆதலின் **விசையன்** என்று பெயர்பெறுகிறான்; அஞ்ஞானத்தைப் போக்க வல்லவன் என்னும் பொருளில் **கிருட்டிணன்** எனவும், இரண்டு கைகளாலும் அம்பு எய்யும் திறத்தால் **சவ்வியசாசி** எனவும் இவனுக்குப் பெயர்களுண்டு. உத்தரகிரிவரையில் சென்று பகைவரிடம் பெருந்தனம் பெற்றவனாதலின் **தனஞ்செயன்** என்ற பெயரும் இவனுக்குண்டு. இத்தகு பத்துப் பெயர்களைப் பெற்றவன் அருச்சுனன் என்பதை அறியத்தூண்டுவன ஆசிரியரின் பாடலடிகள்.

வடசொற்களும் வட்டாரச் சொற்களும்

இறைவனுக்குத் திருமுழுக்காட்டிச் செய்யும் பூசைமுறையை **அபிஷேகம்** என்னும் சொல்லால் கூறுவார் ஆசிரியர். இதேபோலக் கையை **அஸ்தம்** எனவும், சூரிய மறைவை **அஸ்தமித்தது** எனவும், எண்வகைச் செல்வங்களை **அஷ்ட ஐசுவரியம்** எனவும், அசரீரியை **ஆகாசவாணி** எனவும், பூசை செய்வதை **ஆராதித்தல்** எனவும், அரசவையை **ஆஸ்தான சபை** எனவும், காலை நேர உறுதிப்பாடுகளை **நேமநிஷ்டைகள்** எனவும் வடசொற்களால் கூறுகிறார். மேலும் கிம்புருஷர், கேளிவிலாசம், சசிமுகன், சதுரங்கத்தலம், சந்ததி, சந்தோஷம், சரஸ்வதி, சாஷ்டாங்கம், சூட்சம், சேஷ்டை, சேஷாசலம், சௌபாக்கியம், தாட்சணியம், தாஷ்டீகம், துஷ்டநிக்கிரகம், தேசபாஷை, தோஷம், நிஷ்டூரம், பாக்கியம், பாஷாணம், புஷ்பம், புருஷர், பூஷணம், மனஸ்தாபம், யோசனை, ரோஷம், வஸ்து, விசேஷம், விஷம், வேஷம், ஸ்ரீதரன் போன்ற பல வடசொற்களை நூலுள் கையாளுகிறார். இந்தச் சொல்லாட்சி முறை ஆசிரியரின் வடசொல் பயிற்சி மிகுதியை எடுத்துக்காட்டுவதோடு மக்களுக்கு எளிமையாகப் புரியவேண்டும் என்னும் நோக்கத்தையும் உடையதாகிறது. இது ஆசியர்கால மக்களின் மொழிநடையில் வடசொற்கள் மிகுந்து கிடந்தது என்னும் ஒரு சமுதாயப் பண்பாட்டையும் எடுத்துக்காட்டுகிறது.

"ஆய்ந்தறிந்து பாராதே அறியாமல் செய்த கவை
தான்சாகத் துயரமிகத் தருமென்றே மறையோன்" (பா. 91)
"நகைத்துலகு பழிக்கநீ நல்ல**கவை** நினைத்தாய்" (பா. 91)

இத்தொடர்களில் அமையும் **கவை** என்னும் சொல் தவறான செயல்களைக் குறிக்கும் பொருளில் பல இடங்களில் ஆளப்படுகிறது. (கவை-குற்றம்)

"**கிடந்த** கிடையவள் உடம்பும் கண்டு கிலேச மாகியே" (பா. 74)
"**சாரி** யது போனநீ தாமசமேன்" (பா. 76)
"இந் தடவ தாகவே இருக்கின்ற நாளரசன்" (பா. 9)

இவற்றுள், கிடந்தகிடை என்னும் தொடர், விழுந்து கிடக்கும் தன்மை என்னும் பொருளில் சித்திராங்கி கிடந்த அலங்கோல நிலையைச் சுட்டுவது. சாரி என்பது, உலாப்போதலையும், தாமசம் என்பது (தாமதம்) நேரம் கடத்தலையும் குறிக்க ஆளப்பட்டவை. இந்தவிதமாக, இவ்வாறாக என்னும் பொருளில் இந்தடவதாகவே என்னும் தொடர் ஆளப்பட்டுள்ளது.

புறாவை **மன்னி**யம்மா (பா.61)
புறாவை மாத்திரம் **மன்னி**யம்மா (பா. 54)

தயவு செய்து கொடுத்துவிடுங்கள் என்னும் பொருளில் மன்னி என்ற சொல் இவ்வடிகளில் ஆளப்படுகிறது.

"என்னசொன் னாலுமுனக் **கென்னமா னாலும்**" (பா. 64)
"**என்னமென்று** சொல்வேன் என்நாவில்
என்னையிப்படி சனியன்செய்தால் **எவர்க்குமென்னா**" (பா.77)

இச்சுவடிகளில் என்னமானாலும், என்னமென்றுசொன்னாலும் என்பன போன்ற தொடர்களில் வகரத்திற்குப்பதில் மகரம் ஆளப்படுவதை அறியலாம். இதுபோன்ற தொடர்கள் பல நூலுள் ஆளப்படுகின்றன.

"**போறதே** போக்கு - **வாறதே** வழி (பா. 67)
"பிள்ளை யென்றுநீ பேசிக்கொண்டு **வாறதென்ன** (பா. 62)
போறீரல்லோ அகத்துப் புருஷரே எனக்கென்ன
சோறீரென் றேயந்தத் தோகைசொல்லு மளவில்" (பா. 91)

என்னும் அடிகளில் போவது, வருவது, சொல்லுவது என்னும் சொற்கள் முறையே போறது, வாறது, சோறீர் என்னும் சொற்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைப் போலவே அனவரதம், ஆகடியம், ஆக்கினை, ஆசரித்தல், உச்சிதம், கண்ணாலம், சக்களத்தி, சங்கோசம், சமித்தல், பெம்பு, பொள்ளுவசனம் போன்ற வட்டாரச் சொற்களும், கொச்சைச் சொற்களுமாகப் பல சொற்கள் நூல் முழுமையும் இடம்பெறுகின்றன. இந்தச் சொல்லாட்சி முறை கதைப்பாடலை நிகழ்த்தும்போது மக்களுக்கு எளிமையாகப் புரிய வேண்டும் என்னும் நோக்கம் உடையதாகவே கொள்ளுதல் வேண்டும். ஏனெனில்,

"மைந்தனுக்குப் பதிலாக மாபாவிசொல் **தவிராமல்** (123) என்னும் அடியில், தவிர்தல், **தவிராமை** என்னும் சொல்லை ஆளும் ஆசிரியர் தவறுதல் சரியன்று என்பதை உணர்ந்து, தவிர்தல், தவிராமையைத் தேர்ந்துள்ள திறன் அவர்தம் இலக்கிய அறிவை எடுத்துக்காட்டுவதாகிறது. இதுபோலவே "

"இரவலர்க்.....கருள்சேர்ப்பீர் (பா. 12)
"தானுமுற் றடவியில் தரங்கம் வெண்டரளம்
கொழுத்தநன் னதியில் குனிந்து நீராடி" (பா. 13)
"கலையது சோர்ந்திடக் கண்ணில்நீர் ததும்ப.....
நாவது துணிக்க நமனிலுங் கொடிய" (பா. 13)
"நுண்ணறி வோர்கள்தம் நூலொடு பழகினும்" (பா. 68)

என்பன போன்ற பல தொடர்களிலும் இரவலர், அடவி, தரங்கம், தரளம், கொழித்தல், கலை, ததும்புதல், நா, துணித்தல், நமன், நுண்ணறிவு, நூல் போன்ற பல இலக்கியச் சொற்களை ஆண்டுள்ள ஆசிரியர் சிறந்த இலக்கியப் பயிற்சி உடையவர் என்பது வெளிப்படையாக விளங்குவதனால் அவர் கையாண்டுள்ள எளிய, வட்டார, கொச்சைச் சொற்கள் கதையைக் கேட்கும் மக்களுக்காகவே ஆளப்பட்டன என்று கொள்ள முடிகிறது.

படியெடுத்தோர் பிழை

"எத்தனைப் பராக்கிரமமாய் ஏகியே **மன்னவனும்**
மெத்தவே கானகத்தில் வேட்டை **யாடினாரே**" (பா. 46)
"எந்த நாளிலும் **யெனைவிட்டுப்** பிரியாத
மந்திரி மகனான சுமந்தனு மப்போ
இருவருங் கூடியே யிருக்கும்வே ளையினில்" (பா. 47)

ஆகிய அடிகள், மன்னவனும் ஆடினாரே; எனைவிட்டுப் பிரியாத சுமந்தனும் இருவரும் கூடியே என்னும் தொடர்கள் ஒருமை, பன்மை வேறுபாட்டு முடிவையும், தன்மை, படர்க்கை வேறுபாட்டுத் தொடரையும் கொண்டுள்ளன.

"**அறிவையு** மவள் மயக்கத்தினாற் போச்சோ" (பா. 123)
"சமித்து ரட்சித்திடத் தான்கட னல்லோ" (பா. 123)

அறிவும், ரட்சித்திடுவது என்று இருக்க வேண்டிய தொடர்கள் அறிவையும், ரட்சித்திட எனப் பிழைபட எழுதப்பட்டுள்ளன. இதுபோலவே நான்சொல்லி என்ன - என் தந்திரத்திற்கு மோசமாச்சுது என்பன போன்ற தொடர்களின் முடிவில் நின்கோபத்தால் மெத்த மோசம் போனேன் என்று அமைவது யார், யாரிடம் கூறுவது என்பது புரியாத குழப்பத் தொடராக அமைகிறது. (பா. 130) இவ்வாறு நூல் முழுமையும் பலவகையான இலக்கணப் பிழைகள், தொடர்களில் அமைந்துள்ளன. இவை ஆங்காங்கு அடிக்குறிப்பில் காட்டப்படுகின்றன. இவை பெரும்பாலும் சுவடி எழுதியோர் பிழையாகவே இருத்தல் வேண்டும் என அமைதி காணலாம்.

Preface

Yakṣās

Yakṣās are high calibre professional musicians of the Kantarva clan and live mostly in Nepal. There songs go by the name Kantarva Kāṉam. Kantarvas, Kimpurucās, Kiṉṉarās, Cāraṇās, Yakṣās and Vityātarās of Nepal claim that they belong to the band of angels called Kantarvas and trace descent from them.

Yakṣās, also proud of their divine origin, have an apocryphal story to back their claim. When they were created by Lord Piraman, some of them merely sought his protection or rakṣā. The others craved for something to eat or *Pakṣaṇam* (food). Thanks to the blessings of Lord Piraman, the first group became Yakṣās and the second one Rākṣacās. Iyakkar and Yakkar are synonyms for Yakṣās.

Kupēra and many other divine personalities were the offspring of Kācipaṉ and Curai. It was their duty to play on the instrument called *Yāḻ* in the heavenly assembly. These Iyakkars (Yakṣās) had as their leader Kupēra. To safeguard the wealth of Kupēra, the Iyakkars took to singing the praise of Goddess Ilakkumi. In fact, they became the sentinels to Kupērās opulence and the forerunners of *Yaṭcakāṉam*.

There are many communities in India which trace their origin to the gods. The Cāraṇars of Saurashtra, the Tēvars of South India and the Kantarva of Nepal may be cited as examples. The Yakṣās who live in Andhra and Karnataka also claim a divine origin. Often these people are known by the names *Jakkiṉi* and *Jakkulu*. The places occupied by them go by names such as Jakkacālikuṇṭā, and Jakkala Ceruvu.

Carnatic music traces its origin to the ancient system of music called *Mattiyakramā*. Similarly Hindustani music originated from *Caṭjakiramā*. *Yaṭcakāṉam* owes its inspiration to *Kāntarvakāṉam*. However, it should be noted, that *Kāntarvakāṉam* belongs to the genre called *Mārk* and *Yaṭcakāṉam* to the genre *Tēci*.

Already it has been mentioned that *Yaṭcakāṉam* was sung to appease Goddess Lakshmi so that Kupēra's wealth will increase by leaps and

bounds. *Yakṣiṇi Vityā*, mentioned in the Mantra Castras, is also classified as *Yaṭcakāṇam*. These songs are sung to obtain progeny and increase prosperity. In fact, songs are sung throughout the night called *Yakṣarāttiri* (the night of the Yakṣās). Prayers are offered to Goddess Lakshmi called by one of her aliases *Yakṣa Tēvatā*. This practice still obtains among the Brahmins of Andhra Pradesh. Even in Karnataka, *Yaṭcakāṇam* has been popular under the name *Yakkalakāṇa* since the 12th century.

In the celebrated Telugu work Kāmēsvari Kāṭā, we find the following account of the origin of *Yaṭcakāṇam*. Lord Civa, in his infinite mercy, sent a few Yakṣās to serve the village deity Kāmavalli. Before despatching them, Civa instructed Sage Cukkiracāri to teach them divine music, which later on became *Yakṣakāṇam*.

Civarām Karanth, who has done valuable work on folklore, opines that the songs sung by the villagers to please the male deity called Yakṣā and the female one called Yakṣi, constitute the genesis of *Yaṭcakāṇam*.

Even today, villagers in remote parts of Karnataka are given to singing the story of Bhagavatam in the *Yaṭcakāṇam* style at the crack of dawn. We find references to *Yaṭcakāṇam* in the following Kannada works belonging to the 12th and 13th centuries: *Cantira Prapa Purāṇam*, *Mallinātapurāṇam* of Nāka Cantirā, *Caṅkita Rattinākara* of Cāraṅkatēva and the *Para Tēca Vaipavam* of Rattiṇākaravarṇi.

Credit goes to Pāla Pāppammā for her pioneering contribution in Telugu to the *Yatcakāṇam* genre of literature, entitled *Akka Ma Tēvi Carittıram*.

The Seventeenth and Eighteenth Centuries were the heyday of *Yaṭcakāṇam*. As many as 300 works in Telugu and 500 in Kannada appeared during this period. The hitherto exclusive use of *Yaṭcakāṇam* for glorifying Purānic episodes was extended the historical events and social themes.

After 1950, *Yaṭcakāṇam* is on the wane thanks to the growing popularity of Carnatic and Hindustani music.

Yaṭcakāṇa Plays

Yaṭcakāṇam, which originated as a prayer for worldly prosperity and riches, soon entered the portals of temples where it was sung both in the morning and evening during the hours of worship. It was also sung during

important festivals. During marriages, these songs were rendered on the *Nātasvaram*. Those giving religious discourses highlighting the moral values enshrined in the Ramayana and the Mahabharata, began using *Yaṭcakāṉam* songs for driving home their points. Exponents of the ancient art of *Kālakṣēpam* soon added one more dimension to their discourses by rendering tense emotions in the form of dance. This resulted in speeches, punctuated by *Yaṭcakāṉam* songs, assuming the form of crude drama containing the genesis of musical extravaganzas and the so-called 'street plays' enacted in the open air.

Musical dramas employing *Yaṭcakāṉam* had great thematic value as they looked up for inspiration to the classics like the Ramayana and the Mahabharata. The musical drama, which evolved over the years, laid great emphasis on song and dance. Along with routine music, styles as varied as *Viruttam*, *Tipatai*, *Kantapattiyam* and *Artta Cantirikai* made inroads and added to the total effect.

Yaṭcakāṉam soon assumed different forms in different parts of the country and was called by various names. The *Kirusṇaṇāṭṭam* and *Katakali* of Kerala, the *Terukkūttu* of Tamilnādu, the *Nīli Nāṭakam* and *Kuccipuṭi* of Andhra and the *Payalāṭṭam* of Karnataka were offshoots of the original *Yaṭcakāṉam*. The common denominators were music, dance, conventions, venue and ethical bias.

Yaṭcakāṉam as drama, drew themes from the immortal classics glorifying bravery. The emphasis on martial arts afforded ample scope to the performers to exhibit their histrionic talents. The villagers, who constituted the audience, enjoyed simple themes like bravery and the triumph of truth over falsehood.

In course of time, those who trained *Yaṭcakāṉam* artistes came to be called Bhagavatars. The troupe consisting of actors, dancers and instrumentalists went by the name *Maṇṭali*. Female roles were played invariably by men.

In Telugu, the first *Yaṭcakāṉam* play was authored by Naṉṉayya (11 A.D.). It was called *Karuṭācala Yaṭcakāṉam*. Poet Pettaṉṉā (16 A.D.) is credited with drawing the conventions for *Yaṭcakāṉam*. During the reign of the Vijayanagar King Cāḷuva Naracimmayyā (1485-1491 A.D), one Raṅkaṉṉā, better known as Pollu Kaṉṭa Caṉṉa Couri, authored a *Yaṭcakāṉam* play entitled *Caupari Carita Jakkula Katā*. In 1570 A.D. when Krishna Deva Raya was ruling Vijayanagar, Kantukariruttira Kavi wrote *Cukkirīva Vicaya Yaṭcakāṉam*. The action packed story of the Tanjore King Rakunāta Nāyakar, a patron of music and fine arts, was made into a *Yaṭcakāṉam* play by Rāma Pattirāmpā under the title *Irakunātāpyutaya*.

Yaṭcakāṉam in Tamil

The claim that the indigenous *Terukkūttu* of Tamil Nadu, containing music and dance, has over the years, metamorphosed into *Yaṭcakāṉam* on account of the influences of other neighbouring tongues is obviously fallacious and untrue.

There is evidence to show that many *Yaṭcakāṉam* plays were enacted in the suburbs of Tanjore, Karnataka and Andhra including the border areas where Tamil is spoken. To enable the Tamils to follow the plays, many Tamil words were deliberately included in the script. *Nouka Nāṭakam* and *Pirakalāta Pakta Vijayam* authored by the celebrated music composer Tiyākarāja Cuvāmikal were enacted in Tamil Nadu. Similarly the story of the Orissa King Vallāḷarācaṉ was also staged. As a consequence, many more *Yaṭcakāṉam* plays came into being such as *Ciṟuttoṇṭar Yaṭcakāṉam*. The following six plays are available in the form of palm leaf manuscripts: *Vallāḷarācaṉ Yaṭcakāṉam, Ciṟuttoṇṭar Yaṭcakāṉam, Nīli Yaṭcakāṉam, Naraciṅka Vijaya Yaṭcakāṉam, Tērūrnta Yaṭcakāṉam* and *Cāraṅkataraṉ Yaṭcakāṉam*. Out of these six plays, *Cāraṅkataraṉ Yaṭcakāṉam* has been chosen for the present study.

The invocatory song, in praise of Lord Vinayaka, constitutes the prologue. The author here unfolds his theme, namely the story of *Cāraṅkataraṉ* which is to be rendered in the *Yaṭcakāṉam* style. The author's firm declaration that he would tell the tale well should not be interpreted as egoistic. The implication is that he has abundant faith in the grace of the lord.

The play employs four talas namely *Aṭa tāḷam, Ēka tāḷam, Campai* and *Tiriputai*. Though Civaram karanth enumerates 150 styles employed by the exponents of *Yaṭcakāṉam*, very few have been exploited here. In fact, *Pūpati rākam, Mōkaṇa rākam* and *Courāṣṭira rākam* normally used for the prologue are conspicuous by their absence.

Another feature to be noted is the third person narration. Verses 11, 18 and 21 can be cited as examples. Instead of the plot revealing itself through dialogue, the help of the story teller is sought, which is not highly artistic.

1. *Aṭa tāḷam* (spelt as aṭṭatālam in the manuscript) consists of 14 units. The beat is on 1,4,6,8,9,11 and 13. The other units are null. The units are numbered from 1 to 14.
   1 beat, 2 numbers, 1 beat, one number, two beats, one beat, one number, one beat, one number, so on.

2. *Ēka tāḷam* consists of 4 units. The beat is only on the first unit.
3. *Campai* consists of 5 units. The beat is on 1,3 and 4. 2 and 5 are null.
4. *Tiriputai* consists of 7 units. The beat is on 1,4 and 6. 2, 3, 5 and 7 are null.

Out of the 174 songs in this work, one is in *Aṭa tāḷam*, 19 are in *Ēka tāḷam*, 64 in *Campai*, and 31 in *Tiriputai*. The total comes to 115. This lends such flexibility that the dramatist can use any other *tāḷam* if circumstances warrant it. Out of the remaining 59 songs, 6 are in *Artta Cantirikai*, 2 in *Kantapattiyam*, 1 in *Kuṟaḷaṭittaru*, 6 in *Cintu*, 4 in *Taru*, 38 in *Tipatai* and 1 in *Veṇpā*. The 174th verse winds up the play on an auspicious note.

Theme

This is the story of a king who is under the seductive spells of his second wife. Misled by her, he orders the amputation of his son's limbs, much against the advice of elders and betters. Though the conspiracy is exposed and the king wallows in self pity, he could not regain his lost son.

The synopsis of the play

Rājanarēntiraṉ, the king, exercised authority from his capital Rājamakēntirapuram. His Chief Queen was Rattiṉāṅki his first wife. His other wife was Cittirāṅki. Nītimaintaṉ was his minister.

As the King had no issue to call his own, he did penance as advised by the elders. The Lord appeared before him and told him that he would beget a son through his first wife who would be as effulgent as the sun and the moon. So was born Cāraṅkataraṉ, the protagonist of this play.

On knowing that the senior Queen had given birth to a baby boy, the junior Queen was consumed with jealousy. Even after the birth of a son to his first wife Rattiṉāṅki, the King extended great love to Cittirāṅki. One day forest dwellers called Veduvās sought audience with the King, presented him with gifts and invited him to witness their hunting. The king accepted their invitation and went to the forest. In the absence of his father, Cāraṅkataraṉ, the prince, played the game called 'Pigeon racing' with his friend Cumantaṉ, the son of the minister. One of the pigeons let loose entered the palace of Cittirāṅki who was extremely love-lorn and pining for here husband. Cāraṅkataraṉ followed the pigeon to the place of Cittirāṅki though he was forbidden by Cumantaṉ from entering the portals

of the palace exclusively earmarked for women. He defended his action on the ground that there was nothing wrong in visiting one's stepmother. He offered obeisance to his step mother and requested here to restore his pigeon. Cittirāṅki received him with great hospitality, but began uttering words of lust. Though Cāraṅkataraṉ reminded her that their relation-ship was that of a mother and son, Cittirāṅki persisted in making love. Not yielding to her seductive advances, Cāraṅkataraṉ left the palace, but his upper cloth was forcibly pulled by her. He ignored it and fled the place.

On his return from hunting, the king visited Cittirāṅki who had deliberately cast off all her ornaments and looked terribly dishevelled. She had inflicted scratches on her body to mislead her husband. The King was anxious to know why she was so upset.

Cittirāṅki ironically replied that their relationship had suddenly changed and that she had become his daughter-in-law; she told the king that she was outraged by Cāraṅkataraṉ. The King believed her totally, summoned his assembly, posted them with all the information and ordered that Cāraṅkataraṉ's legs and hands be amputated for perpetrating a monstrous act. The minister and others felt that Cāraṅkataraṉ would never be guilty of incest as he bore a sterling character. They advised the king to avoid hasty action. To substantiate their stand, they narrated stories like those of the woman and the mongoose. Cāraṅkataraṉ's friend Cumantaṉ also stood by him and vouched for his innocence. He also referred to a few old stories to drive home the point that patient action always paid rich dividends. Cāraṅkataraṉ's mother also made a fervent plea to the king to avoid hasty action. But the king was adamant as he had great faith in the words of Cittirāṅki. He therefore ordered the immediate carrying out of the punishment.

When the messengers of the king came to take him, Cāraṅkataraṉ expressed his regret for ignoring the timely advice of his friend Cumantaṉ. He entrusted Cumantaṉ to the care of his mother and accompanied the king's men. Cāraṅkataraṉ was taken to the thick of a forest and his hands and legs were chopped off. Cāraṅkataraṉ fainted, but soon regained consciousness, recollected his plight and the sorrow of his mother and prayed to the Almighty. Then was heard a mysterious heavenly voice which said that his present plight was due to his actions in the earlier births. Details of the sinful actions committed by him were also recounted. It was also made clear that he was not guilty of any lapse in the present birth. The heavenly voice also told him that his limbs would be restored. Soon a wise man, a Cittar, appeared on the scene. He listened to Cāraṅkataraṉ's tale of woe. After sprinkling holy water on Cāraṅkataraṉ, the Cittar uttered some incantantations in his ear which resulted in the

restoration of his limbs. He prostrated himself before the Cittar and expressed his joy and gratitude.

The king's men were watching Cāraṅkataraṉ on the sly. They overheard the words of the Cittar and went to report them to the king. The enraged king sought an explanation from Cittirāṅki who coolly placed the blame on the king's men. She said that they had been bribed to utter falsehood. She challenged the heavenly voice to speak in her presence. Lo! The celestial voice reverberated to the surprise of everybody. It exposed Cittirāṅki, but attributed all the happenings to the hand of fate.

The exasperated king ordered the execution of Cittirāṅki and retired to the forest in the company of Rattiṉāṅki. With the help of the Cittar, they were able to see their lost son face to face. Cāraṅkataraṉ told them that he had attained immortality. He paid obeisance to his parents and disappeared. The grief-stricken king tried to kill himself. But the minister reminded him of the episode of Arjuna losing his son Abhiman, figuring in the Mahabharata. Arjuna also attempted self immolation on coming to know that his son Abhiman was no more. How Krishna intervened and solved the problem was narrated in detail. Just as heaven was assured for Abhiman, Cāraṅkataraṉ was also sure to merge with the infinite and find bliss. Those words of consolation relieved the king of his sadness and he returned to the capital in the company of his queen and minister. He conferred on the minister the status of a surrogate son and asked him to take over the reins of administration.

Literary interpretation and research

The following questions pose themselves before any scholar attempting to probe deep into the work.

Who was Rājanarēntirāṉ, the father of the protagonist, Cāraṅkataraṉ? Was he a legendary king or a historical figure? Was the kingdom of Rājamakēntirapuram mythical or did it really exist? Similarly, is there any evidence either literary or historical to prove that a wicked queen called Cittirāṅki made incestuous advances towards her step son? Are there any other palm leaf manuscripts that allude to this tale? If so, are there any variations either with regard to the portrayal of character or incident? One has also to look for deviations from history, if any of the characters happens to be historical. The author might have taken liberties with facts in the interest of total effect. Who first tooks pains to compile all the incidents? Does the work throw any light on the character of the author? Have the ideas contained in the work any validity to the society

of today with its changed mores and conventions? We have also to examine the work from the aesthetic point of view apart from a linguistic analysis of the text. Are there any glaring inconsistencies or blunders? Questions like these are legion. In the present in-depth study of the text, the author has attempted to answer some of the questions in the light of literary and other evidence available.

Rājanarēntiraṉ

Rājamakēntirapuram ruled by Rājanarēntiraṉ was verily a poet's paradise with impressive gardens and lawns. There were many galleries of art besides buildings of an imposing nature. A lover of pleasure, Rājanarēntiraṉ was always in the company of beautiful damsels. Brave and handsome, he set much store by integrity. He has been compared with king Pāri for his generosity and liberal outlook. These traits belong to all the protagonists of *Yaṭcakāṉam*. In fact, it had been stipulated that the hero should necessarily possess a few admirable qualities.

That Rājanarēntiraṉ was not a figment of imagination is evident from the *Ammāṉai* type of literature which traces his genealogy to king Cantaṉu. This makes him a puranic character. Verse 12 (*Ammāṉai*) contains the following details: king Cantaṉu was born in the lunar dynasty. His son was Cittiraviriyaṉ and grandson Pāṇṭurājaṉ. Pāṇṭu's offspring was Arjuṉaṉ who fathered the valiant Abhimaṉ. Abhiman's son was Paricittu and his grandson Janamējayaṉ. King Rājanarētiraṉ was the son of Janamējayaṉ.

Rājamakēntirāpuram

Tōnūri Kōnēru Nātakavi, the Telugu poet (1547 A.D.) authored a work entitled *Tuvipata - Pāla Pākavatam*. In this work, there is a reference to the story of Cāraṅkataraṉ. If fact, this happens to be the first ever literary evidence.

The work avers that Cāraṅkataraṉ, son of king Rājanarēntiraṉ of Rājamakēntirapuram, was absolved of the calumny cast on him by his wicked stepmother and became a Cittar.

Apart from this reference, two other Telugu writers of eminence Pāṇāla Camputācaṭu and Kūcimañci Timmakavi allude to the story of Cāraṅkatraṉ and Maintan that the venue of the happenings was Rājamakēntirapuram.

But Cauraṇā and Cēmakūra Vēṅkaṭakavi opine that Rājanarēntiraṉ was the king of Māḷavam.

Rājamakēntirapuram was the capital of the Vēṅki kingdom. It was situated on the banks of the Godavari river. The place has been identified as modern Rājamantiri of East Godavari district. The two structures on the banks of the Godavari, Cittirāṅki's plank and Rattiṉāṅki's plank have associations with the tragic tale of Cāraṅkataraṉ. Some 3 k.m. away from these structures is a place called Cāraṅkataru ṅ Nimeṭṭa. Very near that is the temple of Cāraṅkatarēcuvaram where there is a statue of Cāraṅkataraṉ. On the last day of Pongal celebrations, the Telugus offering homage to the relics of a bygone age, remember without fail that the courts of justice of Rājamakēntirapuram were located at Cēṣāya Meṭṭa.

In the Guntur district, on the banks of the Krishna, lies the petty hamlet Cāraṅkuṉipallē. It is believed that the limbs of Cāraṅkataraṉ were chopped off on the adjacent hillock called Cāraṅkatarakuṭṭa. Kōvur, in the suburb of Nellore, has two imposing structures called the fortress of Cittirāṅki and the fortress of Rattiṉāṅki. Though they are not directly relevant to our study, they point to the popularity of the sad tale of *Cāraṅkataraṉ*. In Srisailam of Kurnool district, there is a mutt named after *Cāraṅkataraṉ*. Though it is called Caurāṅkināṭar Maṭam, the reference is obviously to *Cāraṅkataraṉ*. *Cāraṅkataraṉ* is perhaps Caurāṅki Nātar, one of the Navanāta Cittars in whose name worship is offered.

Both *Cāraṅkataraṉ Yaṭcakānam* and *Cāraṅkaṭaraṉ Vācakappā* refer to the capital of King Rājanarēntiraṉ as Rājamakēntirapuram and Makēntirapuram respectively. But in some other works such as *Nātakam* and *Ammāṉai*, the place goes by the name Astiṉāpuram. (Vide - Page 4 of *Cāraṅkataraṉ Ammāṉai* and Page 17 of *Cāraṅkatara Nātakam*). The Astiṉāpuram mentioned here lies very near Meerut, some 35 k.m. away from the city, on the banks of the Ganges. This was the ancient capital of the Gurukula Kings.

Cittirāṅki's history

Verse 7 of *Yaṭcakāṉam* refers to "Cittirāṅki endowed with eyebrows resembling the bow whom the king married along with Rattiṉāṅki and lived happily".

In *Ammāṉai* literature, there is a casual reference tc Cittirāṅki's parentage. The story narrated here is different from the one figuring in *Yaṭcakāṉam*. It is said that Brahmins carrying the portrait of Cāraṅkataraṉ visited many countries including the Pandya Kingdom. Cittirāṅka Pāṇṭiyaṉ the ruler, after ascertaining the wishes of his daughter Cittirāṅki, agreed to give here in marriage to Cāraṅkataraṉ.

Sources

While publishing this edition, cognizance was taken of the following books, besides the palm leaf manuscript.

1. *Cāraṅkataraṉ Vācakappā* of Sri Singaravel Mudaliyar in palm leaf manuscript form.

2. *Cāraṅkatara Ammāṉai* or *Cittirāṅki Mālai* of Sri Ekāmpara Mutaliyār, published by S. Tulaciṅka Mutaliyār of Pūntamalli (In printed form, 1906).

3. *Cāraṅkataraṉ* (Play) of Pammal Cambanta Mutaliyār (1912), Second edition.

Incidentally, it must be mentioned that a parallel obtains for the story of Cāraṅkataraṉ in Greek literature.

Minas was the king of Crete. His daughter Freeta becomes the second wife of king Theseus of Athens. Theseus had a son by his first wife. His name was Mippolytus. Stepmother Freeta takes a fancy for him. But he ignores her amorous advances with stubbornness. This irritates Freeta who poisons the king's mind against his son. The king was wild and ordered the execution of his son. After many setbacks and complications, the truth comes out and Freeta commits suicide.

Like the story of Cāraṅkataraṉ, here also the stepmother attempts an incestuous relationship with here son and pays for it dearly.

The names of the characters

The following are the chief characters of *Yaṭcakāṉam*

Rājanarēntiraṉ	-	The King
Rattiṉāṅki	-	Senior Queen
Cittirāṅki	-	Junior Queen
Cāraṅkataraṉ	-	Rattiṉāṅki's son.

These names have been retained in all the available versions of *Yaṭcakāṉam*.

The other characters who figure in *Yaṭcakāṉam* are Nītimaintaṉ, the minister, his son Cumantaṉ, Makēntira Cittar who chants holy words in the ear of Cāraṅkataraṉ, the heavenly voice recounting the earlier birth, emissaries, elders, citizens and the executioners.

In the play of P.Campanta Mutaliyār entitled Cāraṅkataraṉ, the name of the minister is Vacūti. Cāraṅkataraṉ's friend is called Cumantiraṉ. There are a few new characters who do not figure in *Yaṭcakāṉam*. They are Matura Kavi, the poet, Cuntarakaṉ, the clown and Mataṉikai, the friend of Cittirāṅki. The Vēṭuvas, Rattinaṅki's confident maid and the executioners figure as minor characters.

In *Cāraṅkataraṉ Ammāṉai*, the friend of Cāraṅkataraṉ is called Cumantiraṉ. Cittirāṅki's maid is called Ciṅkāramālai. Her father is Cittirāṅkataṉ, the king of the Pandya kingdom. The sentinel goes by the name Keṭi Vīra Ciṅkaṉ. The heavenly voice here assumes the form of a Brahmin girl. The Cittar's name is Miṉanātar. There are a number of other minor characters including the priests and the Brahmins.

In *Cāraṅkataraṉ Vācakappā* there are four ministers to the king who have no names, but are referred to as the first, the second etc. Here the friend of Cāraṅkataraṉ is called Cumantaṉ. The minor characters who constitute the menial staff of the king are unnumbered.

Cittirāṅki - In *Yaṭcakāṉam*

Verse 7 mentions the king's marriage with both Rattiṉāṅki and Cittirāṅki. That Cittirāṅki was endowed 'with eyebrows resembling the bow' is particularly mentioned.

Though blessed with wealth and fame, the queens had no issue to call their own. As instructed by the elders, the king did penance and the Almighty, in his infinite mercy, appeared before him in the company of his spouse.

Verse 13 alludes to the boon given by the Almighty to the king that he would soon beget a son by his first wife Rattiṉāṅki.

Both *Yaṭcakāṉam* and *Vācakappā* concur that the king had two wives. But in the *Ammāṉai* genre of literature, there is a major variation. Here the king marries the girl who had been proposed to his son namely Rattiṉāṅki.

Cittirāṅki - In *Ammāṉai* literature

By the time he was twelve years old, Cāraṅkataraṉ had mastered many arts. On page 4, it is said that the king decided to get him married to a suitable partner. He discusses this with his ministers and commissions an artist to do a portrait of his son. The Brahmins carry the portrait to many countries. During their search for a bride, they reach Madurai which

was ruled by the Pandya King Cittiraṅkataṉ. He ascertains the views of his daughter Cittirāṅki, agrees to the proposal and sends in exchange the picture of his daughter. On seeing the portrait brought by the Brahmins, Rājanarēntiraṉ falls for her and expressed his wish to wed her. (page 21). He instructs the Brahmins to arrange for the marriage and sends his sword to the Pandya kingdom. On page 29, it is said that the Pandya King bowing to tradition, lit a holy fire and asked his daughter to garland the sword. After the marriage, the girl Cittirāṅki is sent to Astiṉāpuram in the company of the Brahmins. On her arrival in the palace, Rājanarēntiraṉ reveals to her the truth. Though she is initially bewildered, she decides to honour the hoary custom of accepting the person whose sword she has garlanded, as her husband. She resigns herself to her fate and consents to a formal marriage. The bride and bridegroom exchange garlands and are quite happy. This is how Cittirāṅki is portrayed in *Ammāṉai* literature.

Cittirāṅki as portrayed in drama

In the first act of the drama by Pammal Campanta Mutaliyār, the following words are put into the mouth of Rattināṅki (Page 8). "Will anybody fall for the girl proposed to his son? Has it ever happened on earth? Let us ignore it. How dare he send his son to the forest for hunting simply because he does not want him here when the marriage takes place? Did the son stand in his way? No. Even I, his first wife, winked at this abominable aberration and allowed him to act as he liked". This is in keeping with the thread of the story as developed in *Ammāṉai*. In other words, a search is made for a suitable girl to wed the prince. The king falls for the beauty of the girl chosen, and brushing aside his son, decides to take her as his second wife.

The following speech of Cittirāṅki in the play has great significance. "Perhaps I am born without the blessings of the Gods. Otherwise, why should such a fate befall me? This man, who ought to be my father-in-law, who chose me as a bride for his son, now wants to marry me'. It is good that I have followed the advice of my maid Mataṉikai and pretended that I was observing a vow. This will help me to gain time. If at all I marry, I shall marry only Cāraṅkataraṉ, the man after my heart".

From this it is evident that Cittirāṅki had decided to marry Cāraṅkataraṉ ever since she set eyes on his portrait. The vow that she was supposed to observe was only an eyewash to gain time. She had a faint ray of hope that the king might ultimately relent to her wishes. But the king was more diplomatic. He sent Cāraṅkataraṉ to the forest so that she would not see him at the completion of her vow.

Knowing that Cittirāṅki was deliberately prolonging the vow to gain time, the king addresses her: Look, I came to know that you are in love with Cārańkataraṉ. He is a dullard; a nitwit. very ugly to look at. Perhaps you thought that the portrait sent to you was his. No. It was my own picture drawn in the past (verse 17).

With the help of Mataṉikai her maid, Cittirāṅki meets Cārańkataraṉ in the palace garden. When she revealed her love to him, he refused to accept it saying that she was his stepmother. This meeting does not figure in any other version of the story of Cārańkataraṉ.

The pigeon and Cittirāṅki

The incident of Cārańkataraṉ and Cumantaṉ playing the game of 'pigeon race' has not been changed. In fact, identical descriptions of the event obtain in all the different versions of the Cārańkataraṉ story.

In *Yaṭcakāṉam* when queen Cittirāṅki is in the throes of love sickness and addresses her favourite parrot on her miserable plight. Cārańkataraṉ makes his entry in search of his lost bird (verse 48). But in *Ammāṉai* literature, there is a slight slant given to this incident. Cittirāṅki, pining for Cārańkataraṉ, interprets his accidental entry as the fulfillment or realization of her vows. (verse 61). In the drama version of P.Campanta Mutaliyār, Cittiṛāṅki is shown as longing for Cārańkataraṉ though she had been married to his father. The arrival of the pigeon makes here extremely happy. She is reluctant to part with the bird. She refuses to send it through any messenger and insists on Cārańkataraṉ's personal appearance. The other versions of the story also exploit this situation with minor modifications.

The meeting between Cittirāṅki and Cārańkataraṉ: (As depicted in the play)

In *Yaṭcakāṉam* Cārańkataraṉ goes to Cittirāṅki's palace to collect his bird though forbidden by Cumantaṉ. The incident happens when the king is away in the forest with the Vēṭuvars. Cārańkataraṉ's contention was that there was nothing wrong in meeting one's stepmother. Cittirāṅki at the time, was extremely love - lorn and was longing for the king.

In all the versions of the Cārańkataraṉ story Cārańkataraṉ sends a messenger to collect the bird. But Cittirāṅki insists on his personal appearance. It is obvious from her reaction that it was she who was guilty of a serious moral lapse and that Cārańkataraṉ was innocent.

About Cittirāṅki pulling the upper cloth of Cāraṅkataraṉ, who is hastily making an exit after refusing to comply with here request there are two versions. One of them refers to the ornamental embellishments getting shattered in the impact of her powerful pull. In the other version, Cāraṅkataraṉ is in such a hurry that he does not bother about the upper cloth that had fallen and leaves it behind him.

All the versions describe the meeting of dishevelled Cittirāṅki by the king in an identical manner except that in some the shattered pearls are substituted by the upper cloth left behind. This is not a major variation as some object or the other has to be mentioned to strengthen the kings suspicion of an outrage on Cittirāṅki's modesty by Cāraṅkataraṉ.

The version of Pammal Campanta Mutaliyār contains another variation which is quite significant. In *Yaṭcakāṉam* and a few other versions, it is simply said that Cittirāṅki poisons the king's mind because Cāraṅkataraṉ shunned her amorous advances. The motive for her wicked action is not very convincing.

But the dramatic version emphasises the logic behind her action which is quite artistic and credible. Cittirāṅki agreed to the marriage proposal after seeing the portrait of Cāraṅkataraṉ. When she knows that a dirty and mean trick has been played on her by the king, she refuses to consummate the marriage under the guise of a vow. In fact, she has firmly decided in favour of Cāraṅkataraṉ. Meanwhile news reaches her that the king is trying to settle the marriage of Cāraṅkataraṉ with the princess of the Caḷuva Kingdom. This provokes here beyond words and makes her accuse Cāraṅkataraṉ of gross violation. She hopefully imagines that she can easily cow down the king by placing a false charge at the door of his son. The king, she thought, would forthwith insist on his son marrying the girl he had outraged (page 65).

What further motivates her to accuse Cāraṅkataraṉ is the evil counsel of her maid Mataṉikai. Just as the hunch back Mantarai poisoned the mind of Kaikēyi in the Ramayana, Matanikai added fuel to the fire of Cittirāṅki's fury. Says she, If only such a thing had happened to me, I would have simply wrested his life. How ridiculous and humiliating is it to spurn a damsel who has voluntarily come forward to express her love in unambiguous terms?

Again, the version of Campanta Mutaliyār gains an edge over the other versions in the following situation. When the king comes to know of the molestation of Cittirāṅki at the hands of Cāraṅkataraṉ, he forthwith decides to amputate his son's limbs. On hearing this, Cittirāṅki makes a plea to the king to soften his sternness. In fact, she suggests that she be

married off to Cāraṅkataraṉ who had outraged her. 'Let bygones be bygones' says Cittirāṅki. But the king was not in a mood to listen to her. He mercilessly orders the immediate execution of the punishment.

The Resolution of the Plot : In drama

"I am not basically evil-minded, but was misled by others into doing bad actions. If only I had wedded Cāraṅkataraṉ, I would have lived in peace. Why should king Narēntirāṉ toll my death-knell? It was rather unlucky that I had a friend in Mataṇikai ... what is the use of all this after thought? Before the true story of mine that I have penned, with a fervent plea to the king to forgive the lapses of Cāraṅkataraṉ, reaches him, I should put an end to my life. Before Cāraṅkataraṉ is executed, I wish the truth comes out" (Pages 89-90).

So saying Cittirāṅki jumped into the fire and killed herself. Meanwhile, as per the orders of the king, Cāraṅkataraṉ was executed. This is how the dramatist Campanta Mutaliyār ends his play.

In *Vācakappā*

In *Vācakappā*, the king orders the chopping off of the limbs of Cāraṅkataraṉ for misbehaving with his step mother. After the punishment is carried out, the heavenly voice clarifies that Cāraṅkataraṉ is now paying for his past deeds. He regains his lost limbs thanks to a Cittar. When the king comes to know the truth through his men, he orders the confinement of Cittirāṅki to the burning lime kiln (verse 177). The messengers later report that Cittirāṅki died suffering extreme pain.

King Rājanarēntiraṉ and queen Rattiṉāṅki then go in search of their son. Hearing them bewailing, the Cittar comes to their rescue. He brings Cāraṅkataraṉ to their presence. The *Vācakappā* ends on a philosophic note struck by Cāraṅkataraṉ and with his abrupt disappearance.

In *Ammāṉai* literature

The *Ammāṉai* Literature recounts the same story up to the meeting of the parents with the dead Cāraṅkataraṉ. Cāraṅkataraṉ tells his parents about the workings of destiny, how all the events are preordained according to the deeds done in the past. He makes it clear that hereafter there cannot be any relationship with his parents as he is dead and has paid for his earlier actions. Thus Cāraṅkataraṉ totally severs his connection with his parents. At the intervention of the Cittar, he agrees to hand over the sword, the insignia of power, to Cumantiraṉ. This is symbolic of the transfer of regal power. In the company of the Cittar, he goes to Astiṉāpuram and crowns Cumantiraṉ king. This is how *Ammāṉai* has resolved the conflict.

In *Yaṭcakāṉam*

All the other details are identical except the speech of Cāraṅkataraṉ who is revived by the Cittar.

"Sir, I am not to blame,
Nor guilty of any lapse,
I was born as your son,
Thanks to the deeds done in the past".

says Cāraṅkataraṉ, pays obeisance to his parents and disappears. Narēntiraṉ, unable to bear the parting from his son, attempts to commit suicide. Then Nītimaintaṉ narrates the story of Arjuna, who had to face a similar predicament when his son Abhiman died. The king is asked to live down his sorrow, keeping in mind Arjuna. King Rājanarēntiraṉ and queen Rattiṉāṅki bestow on Nītimaintaṉ the status of a surrogate son. This is how the story is wound up in *Yaṭcakāṉam*.

The tone of the story is basically tragic. In all the versions, tragedy is averted by resorting to a few clever devices. In *Yaṭcakāṉam* the heavenly voice, the reference to the deeds done in the previous birth and the Cittar with supernatural powers contribute abundantly to lessen to tragic tone and convert the narrative into one with a happy ending. The following incidents deserves special mention.

(1) Cittirāṅki, the evil one is punished. No one will regret this as she is paying for a wicked deed.

(2) Cāraṅkataraṉ is not killed; only his limbs are chopped off leaving a hint that in the end he will prosper as he is not guilty.

(3) Cāraṅkataraṉ's parents go in search of him. This act lessens the gathering gloom and indirectly points to a dawn after the darkest hour.

(4) The prayer of Cāraṅkataraṉ to the gods after his limbs are amputated is significant. The Heavenly voice places all blame on past deeds. It absolves Cāraṅkataraṉ of lapses in the present birth. The arrival of the Cittar heralds the cheerful ending.

(5) The exhibition of the supernatural powers of the Cittar, who restores the lost limbs of Cāraṅkataraṉ adds to the growing gaiety and hope.

(6) The meeting of Cāraṅkataraṉ as a realized Cittar by his parents climaxes the optimistic trend.

(7) Enlightenment dawns on the sorrowful parents when they are told about the workings of destiny. Cāraṅkataraṉ is no longer their son, but a realized soul who has found fulfillment.

(8) The acceptance of Nītimaintaṉ as a surrogate son makes the narrative with prounouncedly tragic undertones, a comedy with a happy ending.

The characterisation of Cittirāṅki: Some doubts

In the version of Campanta Mutaliyār, the wicked act of Cittirāṅki is shown as strongly motivated. The portrayal of the dramatist is quite convincing and is backed by logic. The complications can be traced to the unseemly act of the king, who falls for the damsel chosen for his son. He does not want the son to be in the know of things and compulsorily sends him for hunting. But Cittirāṅki had once and for all decided to marry Cāraṅkataraṉ ever since she set her eyes on his picture. She postpones the consummation of the marriage under the guise of a vow. She tries her best to win Cāraṅkataraṉ's hand and ultimately falls for a ruse. But she hopefully feels that the king would agree to the marriage when once he comes to know the Cittirāṅki had been molested by his son. Her final resolve to kill herself redeems her from all sin.

The dramatist has built up incidents very cleverly which saves the play from degenerating into melodrama.

In *Ammāṉai* literature

In *Ammāṉai* literature, the situation becomes complex when the king, bent upon marrying the girl chosen for his son, sends his sword and makes the girl garland it. Thus mistaken identity sets the ball rolling. When Cittirāṅki, the bride comes to know that a mean trick has been played on her, she coolly resigns herself to her fate and agrees to the formal marriage with the king by exchanging garlands. Her meeting with Cāraṅkataraṉ takes place when she is pining for the king intensely. It is, in fact, a lust - lorn Cittirāṅki who receives Cāraṅkataraṉ and naturally falls for his youth. It may be an act of impulse, but none the less natural and convincing. Her making amorous advances is the source of all conflict.

In both *Vācakappā* and *Yaṭcakāṉam* it is said that king Rājanarēntiraṉ had two wives and that both of them were issueless. Later on, thanks to the blessings of the Almighty, the senior queen begets a child. This results in the junior queen becoming terribly jealous. So far so good. But the incident of the junior queen falling for her son sounds like wild fancy taking into account the ages of the characters concerned. Even if a liberal allowance is made for imaginative fabrication, the incident is too contrived to be logical or convincing.

Rājanarēntiraṉ

King Rājanarēntiraṉ is depicted as a paragon of virtues. Though he is endowed with wealth, fame and a life of comfort and luxury, he remains 'a flower without fragrance' and 'a cuckoo without voice' since he does not have any issue to call his own.

Following the advice of elders and Brahmins, he resorts to rigorous penance and thanks to the blessings of the Almighty begets a bonny boy by his senior queen Rattiṉāṅki. Overjoyed, he distributes large amounts as charity, organises festivals for the Gods and builds temple towers etc. That he is always generous with his gifts is quite often emphasised in the text. As a responsible father, he initiates his son into various arts including horse riding which is a 'must' for any prince.

His love for his wives is equally divided. He seldom considers his first wife to be superior to the second one even after the senior queen is delivered of a child. Particular mention is made of the love that he lavishes on the junior queen Cittirāṅki even after the conception of Rattiṉāṅki.

A few unexpected events upset the event tenor of his life. In his absence, his son Cāraṅkataraṉ plays the game called 'pigeon race' with his close friend Cumantaṉ. The entry of his son's pigeon into the private apartments of Cittirāṅki is the beginning of his sorrows. This has serious repercussions and lands him in embarrassing situations testing his judgement and discretion.

When Cittirāṅki falsely accuses Cāraṅkataraṉ of molesting her, the king believes her implicitly. In fact this weakness for Cittirāṅki is the serious flaw in his character and which accounts for all the complications that arise in his life. In the assembly of elders before whom he places the accusation of Cittirāṅki, Rājanarēntiraṉ refuses to be an active listener to the words of wisdom of the elders. In fact, the elders stoutly maintain that Cāraṅkataraṉ would never be guilty of such a mean and despicable act unworthy of a prince. They even recount instances where people have come to suffer because of their listening to the tales of women. Even Cumantaṉ's words vouching the innocence of Cāraṅkataraṉ fall on deaf ears. He is bent upon punishing his son. His subsequent order that his son's hands and legs should be amputated reveals his mad infatuation for the junior queen.

No doubt he makes up for this when he comes to know the truth through he heavenly voice. The judge in him is stirred and he orders the dumping of the queen in a lime kiln and blinding her. This does not totally redeem him from sin and guilt.

There is nothing very remarkable in the characterisation of king Rājanarēntiraṉ. He is portrayed as a conventional king given to a life of ease and luxury. As a lover of the good things of life, he is blind to the wisdom of the elders, who are noted for their level headedness and sanity. His infatuation for queen Cittirāṅki is his bane.

In a didactic tale like the present one, characters are prone to point to a moral. The king's life perhaps underlines the danger behind mad passion which clouds one's judgement and discretion.

Rattiṉāṅki

What strikes one most about Rattiṉāṅki is her infinite tolerance. In the dramatic version of P.Campanta Mutaliyār, the following speech is attributed to her. "Did the son ever oppose his marriage to Cittirāṅki? Even I did not stand in the way even though she was attaining to the status of a co-wife". Knowing the king's weakness for women, she refuses to get provoked even when she comes to know that the king has cast his eyes on the bride chosen for his son. Though her tolerance may appear incongruous to modern minds, there is something commendable about it. It was her excessive love for the king that makes her overlook even his serious lapses.

Peaceful co-existence with a co-wife is a tribute to Rattiṉāṅki's basic goodness. That she is straight forward and honest is evident from the words of the Almighty while conferring a boon to the king, namely the gift of a child. A loving mother, she is terribly upset to know that the king has ordered the amputation of her son's limbs. Her passionate plea to the king to spare the life of her son is couched in a language marked by restraint and earnestness. She is even willing to give up her life for the sake of her son. When the king remains cold and adamant, she becomes so desperate that she wonders whether even the Gods have become devoid of pity. In the concluding part of the story there are many instances which point to her unselfish love for her son and devotion to her husband. Altogether, Rattiṉāṅki emerges as a very lovable character.

Cāraṅkataraṉ

While blessing king Rājanarēntiraṉ with a son, the Almighty says that he, will be 'as effulgent as the Sun and the Moon'.

The boyhood and youth of Cāraṅkataraṉ the bright boy, are uneventful. He has a good education and also attains proficiency in arts

like horse-riding which are a 'must' for any prince worth the name. He finds in Cumantaṉ an ideal companion.

It is only after the entry of his pigeon into the private apartments of his stepmother Cittirāṅki that his life becomes verily a bed of thorns. Falsely accused of misdemeanour by his stepmother, he suffers untold misery. But he never loses the essential faith in himself. Even when the king orders the amputation of his limbs, he does not lose his mental equilibrium. His entrusting Cumantaṉ to the care of his mother speaks volumes for his basic goodness.

He indulges in self analysis and introspection while lying abandoned in the forest after the execution of the cruel punishment. He wonders why he should be subjected to such suffering when he was not guilty of any lapse. He finds consolation only after the heavenly voice attributes his suffering to deeds done in the earlier birth.

His final meeting with his parents as a 'realized soul', who has nothing to do with worldly relationships, and his abrupt disappearance are quite in keeping with his character which is marked by a certain sense of objectivity and detachment.

The Didactive element

Yaṭcakāṉam artists are not mere entertainers. They have as their aim the improvement of morals and manners. Ethical ideas are sugar coated with exciting tales. Characters some times cease to be of flesh and blood and degenerate into puppets echoing the voice of the *Yaṭcakāṉam* artist. In other words they virtually become mouth pieces.

Some of the moral ideas that we find in this work are enumerated below. A life without children will never attain to fullness. (verse 9). This is exemplified in the life of king Rājanarēntiraṉ.

That a woman is highly secretive and that her inner most thoughts cannot be gauged is another idea that we find in this tale. Cittirāṅki, the junior queen accuses Cāraṅkataraṉ of a serious moral lapse. Believing her, the king decides to punish his son severely. In this context, the ministers and elders point out to the king that he should not rely completely on the words of a woman. They cite instances of women who had maneuvered to ruin men. "Woman is always an enigma within a riddle whose real motives can rarely be understood or gauged. You may be able to count the trees in a bush, measure the waters of the ocean, scale the heights of the sky, count the number of stars in the galaxy, even count the folicles on one's head ..... but never plumb into the depths of a woman's heart".

Our classics abound in women who were responsible for the ruin of men. Kaikēyi brought about the fall of Dasaratha, Rāma owed his sufferings to Sītai and the Pandavas had to experience woes because of Draupadi. Examples can be multiplied.

Vācakappā echoes the same idea in verse 68: One may hope to triumph over the Lord of Death, one may defeat even the worst enemy, one can fight even a springing, ferocious tiger, one may even subdue a goblin or establish supremacy over a snake ..... but one can never hope to win over a woman. This is true, verily true.....

Again the same verse projects the following idea: One can trust an elephant in rut, flood waters, wild wind, thieves, darkness, fire..... but never women who strut like the swan.

The story of Mongoose

A Brahmin lady had a mongoose which was loved by her as her own offspring. One day the mongoose killed a snake which attempted to bite the woman's child. Seeing blood dripping from the mouth of the mongoose, the woman wrongly assumed that it had bitten her child and killed it forthwith. Later on, she repented for her thoughtless action. Her husband set out to Benaras as an act of expiation. Before leaving, he handed over a palm leaf with the following message: Action done hastily will result in sorrow. He also made the cryptic remark that anybody would willingly buy the palm leaf for hundred sovereigns. The son of a merchant bought it and soon went abroad unable to bear the humiliation that he suffered at the hands of his parents. He returned quite prosperous after a few years. By that time, his father had left the shores of the country on business. One day at midnight the father returned and found a young man sharing his wife's bed. He was not aware that it was own son who left home a few years ago. The first impulse of the merchant was to kill both as he mistook the young man for his wife's paramour. When he tried to take the sword from the sheath, the palm leaf containing the message fell and he read it. Wisdom dawned on him.

The above story, which figures in the text, is obviously meant for the reader. It is not uncommon for *Yaṭcakāṉam* artists to punctuate their narratives with stories containing a moral. Didacticism is not considered by them as a literary blemish. On the other hand, they feel that any literature, worth the name, must teach a lesson.

When Rājanarēntiraṉ attempts suicide after the death of his son, the minister recounts to him the story of Arjuna and his son Abhiman. Krishna

finds it difficult to console Arjuna and takes him to the heavenly abode of Abhiman where the son, when beckoned by the father, contemptuously replies that he has no connection whatever with him. Arjuna is totally disillusioned. This is the fate of all mortals, who set much store by earthly relationships. These are transitory and would cease to be in course of time. True knowledge consists in developing a sense of detachment.

Cāraṅkataraṉ soliloquises after the amputation of his limbs by the king's men. The soliloquy is replete with ideas on what is right and what is wrong. "Why am I suffering? Did I hurt the feelings of good men? Did I offend my mother? Did I in my youth indulge in unfair business transactions? Did I speak against my lineage or tradition? Did I contradict my teachers? So on and So forth.

Again, the following words which constitute the speech of the Cittar point to moral ideas: Don't regret for having lost the limbs. Nothing is permanent. Kings, ministers, nay, everybody will surely bite the dust.

Generalities

When the king, takes to task Cittirāṅki, after the heavenly voice discloses the truth, she remains unperturbed and accuses the king's men of receiving money and concocting wild tales. That money exerts great sway in twisting truth is evident from this. This has great relevance to the world of today where talk of corruption in all spheres is very much in the air.

Verses 133 and 134 describe the reaction of the public when Cāraṅkataraṉ is led to the forest to take his punishment. Some people watch the fun. Some cannot withstand the sight and flee from the scene. A few cover their faces and weep. There are others who blame the king for his thoughtless act. A few rebuke Cittirāṅki using strong epithets like Nīli. Some sensitive souls even contemplate quitting the unholy place. A small minority feels that Cāraṅkataraṉ is guilty of a major lapse and deserves severe punishment. The description of a cross section of the population shows great insight into human nature which has not undergone much change over the years.

Verse 46 describes the retinue which accompanies the king for hunting. This medley also consists of various types of people. There are some really interested in hunting. A few are timid and flee at the sight of elephants. A few are aghast at the sight of wild pigs digging the earth. There are others who are inspired by a sense of bravery. Few feel homesick and secretly curse the king. Thus we have glimpse of various kinds of people here.

When the *Yaṭcakāṉam* exponent describes the various types of men, the audience is sure to indulge in self analysis and introspection. This is sure to have a cathartic effect and will purge them of their base thoughts and emotions. The efforts of the speaker or actor will be more than justified if at least a few of the people in the audience give up their evil ways and emerge as better and saner men.

The author and his work

Verse 6 of *Yaṭcakāṉam* contains details concerning the author. His name is Velli Kantaiyaṉ. He was born in the *Vīra Saivam* community. He expresses his wish to tell the story of Cāraṅkataraṉ in the *Yaṭcakāṉam* style employing the metre *viruttappā*. It is also evident from verse 6 that he hails from Matayampati (also called Ten Mātai) of the Chola country. He was by profession a kindergarten teacher.

Mātaiyampati from where the poet hails can boast of an ancient temple with Pacupati Nāyakaṉ as the presiding deity. His spouse is called Umai. He is also known as Veṉ Cantiracēkaraṉ. He is believed to dwell eternally in the hearts of his devotees.

Already another book eulogising His greatness has appeared: *Mātai Tiruvēṅkaṭanātaṉ Paṇa Viṭu Tūtu*. The present writer invokes the deity to help him render the story of Cāraṅkataraṉ in chaste Tamil. He also pays obeisance to the other deities worshipped in the temple which include Vēṇṭi Vināyakaṉ, Uṇṇamulai Ammai, Poṉṉittāi and Muttā Lekkalā Tēvi.

Literary niceties

The author has employed both literary words and slang words depending on the context and the situation. The verses are full of verbal embellishments. All the conceits like alliteration find ample display. Among the figures of speech, simile has been employed abundantly. In fact, the simile and the metaphor are the author's forte. The style, one whole, is quite pleasing and elegant.

In verse 5, the author compares himself to a tiny hillock amidst huge mountains. This reveals not only his modesty, but his ability to use a striking simile.

Elsewhere which referring to Rājanarēntiraṉ who had no child to call his own the author exclaims: "A life without a child is like a flower without smell, a cuckoo without song, the sky without the moon and a pond without flowers".

When Rattiṉāṅki conceives, the author compares it to the growth of the egg plant on the rock. The child born to her is compared to the moon.

In verse 41, there is a very vivid description of sunset and the gathering gloom. The brooding darkness is compared to the mind of a man ignorant of the three Tamil modes of expression called *Iyal, Icai* and *Nāṭakam*.

The king's men entrusted with the work of executing the punishment on Cāraṅkataraṉ pity him and exclaim as follows: "It is just like the crow sitting on a palm tree and the fruit dropping". What the king's men try to drive home is the fact that Cāraṅkataraṉ's entry into Cittirāṅki's palace and the subsequent events were accidental and not deliberate.

While describing an event from the Mahabharata, the author employs another striking simile. Dharmaputra is challenged by Duryodhana to enter the battle field. The challenge is taken up by Vīma. The angry Vīma is compared to the destructive aspect of the Almighty manifesting itself on the eve of the Armageddon. The army of Duryodhana is compared to the big blaze which is supposed to shoot up and destroy the world at the end of each Yukam.

Again, while cataloguing the good qualities of king Narēntiraṉ, the author resorts to apt comparisons. In generosity, he is like the proverbial Pāri and in rectitude like king Harischandra. He is a gem among men, in fact a diamond, a green emerald and so on and so forth. Similarly very apt epithets and comparisons are used to describe Cittirāṅki. In the eyes of the king, she is the full moon; the blossomed lotus. Her eyebrows resemble the bow of Civa and her eyes the fish. All her features have a replica in nature.

Rhyme, Rhythm and verbal embellishments

Verse 6 is a good example of an eminently musical verse where the best words are placed in the best order. The authors supreme skill in prosody is evident here as the lines adhere to a rhythmic beat that is highly pleasing. This three-line stanza, where a single idea is developed, is euphonic because of the judicious use of alliteration and other verbal embellishments. Similarly there are verses of four, five and six lines containing a single idea. What lends distinction to these verses is the music behind them. "Music without sacrificing meaning" has always been the aim of good poetry. Verse 9 lends itself to singing because of its harmonious sound pattern. Indeed, this is a beautiful piece of music producing a very pleasing effect. The rhetorical questions that constitute the second half of

verse 9 lend the poem a distinct suppleness. The vigour of the images and the terseness of thought are highly commendable.

Most of the verses can be sung on the stage with great effect. Particular mention must be made of verse 39 set in the *Campai Tālam*.

The author's style is epigrammatic. Apart from original pithy sayings, the author also employs well known saying and proverbs with great effect. As the *Yaṭcakāṉam* audience is a mixed one, 'wise sayings and modern instances' will have great appeal. Some of the epigrams found in the text run as follows: Innocence is the woman's best jewel (59), None demands payment to taste sugarcane (62), Like the god sought-after crossing one's path(63).

Condensed epithets

The author is good at packing many ideas in a single epithet. The word Aṣta Aisvariyam looks innocent, but connotes men, kinsmen, gold, pearls, grain, vehicle, slaves and power (verse 172).

In verse 134 occurs the epithet *Karpakam* which has a built in connotation and includes four other varieties of trees such as *Ariccantaṉam*, *Cantāṉam*, *Pārijātam* and *Mantāram*.

The word *Cāṣṭāṅkam* includes within its ambit eight parts of the body such as cheeks, ears, head, hands, arms and so on. Another example that can be cited occurs in verse 169 where we get the term Nittilavaṉṉaṉ. This is applied to Lord Krishna who is as effulgent as the pearl. The pearl is normally white and so the comparison of Krishna, the dark one, to a pearl is apparently incongruous and absurd. But the word Nittilavaṉṉaṉ has deeper implications and can be extended to the pearl emerging from the mouth of the divine snake Ati Sesha which is blue in colour. The connotation can be extended further to other pearls with other origins. In fact, mythical pearl is supposed to originate in 21 different ways. To mention a few. Pearls can be obtained both from the earth and the water. Pearls associated with irony will obviously be white in colour. Those which originate in sugarcane will be golden.

The author's use of aliases to the characters widens our knowledge of the ancient books as it becomes obligatory to trace the origins of these names. For example, Arjuna goes by different names such as Taṉañceyaṉ, Vijayaṉ etc. The white garments worn by Ārjuna account for that name. Being the son of Piratai (Kunti), he is called Pārttaṉ. As he took his birth on Paṅkuni Uttiram day, he is called Paṟkuṇaṉ. As the

wearer of the crown presented by Indira, he goes by the name Kiriṭi. Since he rides a chariot drawn by white horses, he is called Swedavahan. Being always the victor in battle, the name Vicaiyaṉ is appropriate. As a dispeller of ignorance, he is called Kiruttiṉaṉ and as the obtainer of wealth from his enemies whom he accompanied up to Uttarakiri, he goes by the name Taṉañceyaṉ. If fact, the author has employed these several aliases to obtain variety and avoid monotony.

Sanskrit words and slang words

The author employs Sanskrit words quite freely. This leads us to infer that the Tamil spoken and written during his time contained many such words. After all, intelligibility is the criterion and the author would not forsake it at the cost of exhibiting his scholarship in another language.

To cite examples: the word *Apiṣēkam* occurs often. This is the term used even today to describe the ritualistic bath given to the idols in temples. The hand is called *Hastam*, again a Sanskrit word. Instances can be multiplied. It will suffice if a small list of Sanskrit words figuring in the text is appended here: *Ākācavāṇi*, *Kimpuruṭar*, *Ārātaṉai*, *Cāṣṭāṅkam*, *Pāṣāṇam*, *Puṣpam*, *Covpākkiyam*, etc.

The text abounds in slang words. These are deliberately used by the author so that his message will have greater appeal to the men in the mass. Not that he was devoid of a scholarly vocabulary. Elsewhere he has used words like *Aṭavi*, *Taraṅkam*, *Nuṇṇaṟivu*, *Kalai*, *Kōḷittal* which contain literary echoes.

To examine some of the slang words and turns of phrases. The word *Tāmacam* is used for delay. The phrase *Kiṭantu Kiṭai* describes the fallen state. The word *Maṇṇi* connotes the idea of 'please give'. Expressions like *Poṟattu*, *Vaṟattu*, *Cōṟir* are corrupt form of *Pōvatu*, *Varuvatu* and *Colluvatu*. Colloquial words are legion: *Aṇavaratam*, *Ākkiṇai*, *Kaṇṇālam*, *Cakkaḷatti Caṅkōcam*, *Poḷḷu Vacaṇam*. Often the letter *ma* is used in place of *pa*.

Verses 46, 47 and 123 contain serious errors in grammar. These mistakes were perhaps committed by the copyists.

சாரங்கதரன் [1]யட்சகானம்

1. *(சாரங்கதரன் கதையை யட்சகான வடிவில் சொல்ல இறையருள் வேண்டுதல்)* திபதை

மாதுமை யவள்மண வாளனங் கடவுள்
தாதவி ழகழிவெண் சந்திர சேரநல்
அடியவர் மனங்குடி யாயிருந் தலர்ந்த
வடியினை யிரண்டையு மவர்க்களித் திடுவோன்
மாபாலர் வாழ்பசு மாதையம் பதியில்
ஸ்திரமா யென்றுந் [2]திருவுளங் கொண்டோன்
வசீகரத் தமிழ்சொல்ல வாக்கெனக் கருளும்
பசுபதி [3]நாயகர் பாலகன் வேண்டி
விநாயகன் [4]கடாட்சம் மிகவுண் டதனால்
மநாயக வுயர்சிந்தா மணியென உதவுந்
தான சாரங்க தரன்கதை [5]யட்ச
கானப்பிர பந்தக் கவிதைசொல் வேனே.

சான்றோர் பலரும் நிரைந்து விளங்கும் திருத்தலம் மாதையம்பதி. இது சோழ நாட்டின் திருத்தலங்களுள் ஒன்று. அத்திருத்தலத்துள் நிலையாகக் கோயில் கொண்டுள்ளவனே யாம் வணங்கும் இறைவனாவான். அவன் உமையம்மையாரின் மணாளனாக விளங்குபவன். பிறைச் சந்திரனை அணிந்த சடாமுடியையுடையவன். உயர்ந்த அடியவர்கள் உள்ளமாகிய அகழியையே தன் இருப்பிடமாகக் கொண்டு அங்கே குடியிருந்து மலர்ந்த தனது திருவடிகளைத் தன் அன்பர்களுக்கே உரிமையாக்கி மகிழ்பவன். பொருள் நிறைந்த தமிழ்ப் பாக்களைப் பாடும் சொற்றிரனை எனக்கு அளிப்பவன். பசுபதியாக விளங்கும் என் தலைவனாகிய சிவபெருமானின் திருமகனாக விளங்கும் விநாயகப் பெருமானின் திருவருள் என்றும் எனக்குக் கிடைக்கும். அவன் திருவருளால், மக்களின் தலைவனாகவும், உயர்ந்த மாணிக்கமாகவும் விளங்கிச் சிறந்த அறச் செயல்களை மேற்கொண்டு

வரும் 'சாரங்கதரன் வரலாற்றை யட்சகானப் பாடல் வடிவில் உருவாக்கத் துணிகின்றேன். அவன் அருள் என்பணியைச் சிறப்புறச் செய்யுமாக.

மாது - பெண். உமையவள் - உமாதேவி. தாது - மகரந்தம். அகழி - அடியவர் மனமாகிய அகழி; நீர்நிலையாகிய அரண். அடியிணை - இரண்டாகிய திருவடிகள். மாதை - சோழ நாட்டில் விளங்கும் ஓர் ஊர்; சிவத்தலம். ஸ்திரம் - நிலைபேறு. திருவுளம் - திருவருள். வசீகரம் - அழகு, கவர்ச்சி. வாக்கு - சொல்திறன். பசுபதி - உயிர்களின் தலைவன்; சிவபெருமான். நாயகர் - தலைவர். பாலகன் - குழந்தை, மகன். கடாட்சம் - திருவருள். சிந்தாமணி - தேவமணிகளுள் ஒன்று, மாணிக்கம். தானம் - அறச்செயல். பிரபந்தம் - சிற்றிலக்கியம்.

சுவடிச்சொல் - 1. அஷ்ஷ கானம். 2. திருவிளங். 3. னாயகர் 4. கடாவஷ்ஷ 5. யஷ்ஷகான.

A TALE OF BETRAYAL

1. **(Seeking the aid of the Almighty to tell the story of Cāraṅkataraṉ in Yaṭcakāṉam style)**

Hail Mātayampati,
A revered spot in the Cōla country
Where dwells the Lord I worship
The darling husband of Umai
Who wears on his matted locks
The Crescent moon,
Who lives in the moat of the devotee's heart
Who gladly allows
The right of obeisance at his feet
To the dear devout.

2. *(விநாயகன், சிவன், உண்ணாமுலையம்மை - வணக்கம்)*

வேண்டிய பேர்வந்து வேண்டியரு ளுதவும் ஏகதாளம்
வேண்டிவிநா யகனை வேண்டியே பணிவேன்

சதிபதி இமையவர் இசைபதி யவர்துதி
பசுபதி [2]நாயகர் பதம்பணி வேனே
எம்மையருள் புரிந்து செம்மைசெயுங் கனக
பொம்மையுண் [3]ணாமுலை யம்மையைப் பணிவேன்.

தங்கள் விருப்பத்தை நிறைவேற்றியருளுமாறு வந்து வேண்டுபவர்களுக்கு அவர்கள் விரும்பியவாறே திருவருள் புரியும், மாதையம்பதியில் எழுந்தளியுள்ள வேண்டிவிநாயகனைப் பணிகின்றேன்.

உமாதேவியின் கணவனும், தேவர்கள் புகழ்ந்து வணங்கும் தலைவனும், உயிர்க்கெல்லாம் முதல்வனுமாகிய மாதையம்பதி இறைவனை வணங்குகின்றேன்.

வேண்டியவாறெல்லாம் எமக்கு அருள்புரிந்து உயர்ந்த வாழ்வையளிப்பவரும், பொற்பாவை போன்றவளுமாகிய உண்ணாமுலையம்மையைத் துதிக்கிறேன்.

சதி - பார்வதி, பதி - இறைவன், இசை - புகழ், கனகம் - பொன். உண்ணாமுலை - பார்வதி.

சுவடிச்சொல் - 1. ஏகதாளி 2. னாயகர். 3. ணாமலை.

2. Salutations to Vināyaka, Civa and Uṇṇāmulai Ammai

Let me salute Vēṇṭi Vināyaka
Of Mātayampati
Who promptly responds to prayer
Of his devotees.
I bow to the presiding deity
Of Mātayampati
Whom Gods eulogise and revere
Who is foremost among things animate
The darling spouse of Uma.

3. *(முருகன், காவேரி, எக்காலம்மை - வணக்கம்)* *சம்பை*

வள்ளி [1]நாயகி கணவன்
வெள்ளை [2]வாரணன் மருகப்
பிள்ளை யாகிய முருக
வள்ளல் தனைப் பணிவேன்

வாயி லுரைத்திடுந் தமிழ்உபாய
வகைக்கு உயர்மாதை
நேய முடன்தரித்த பொன்னித்
[3]தாயருள் உண்டாமே
திக்கெ லாம்புகழ் மாதையிற்
குலாவிய முக்தா
லெக்கலா தேவி [4]யருள்
வைக்குமே எனக்கு.

வள்ளியம்மையைத் திருமணம் செய்து கொண்டவனும், ஐராவதம் என்னும் வெள்ளை யானையையுடைய தேவந்திரனின் மகளான தெய்வானையை மணந்ததனால் இந்திரனின் மருமகன் ஆனவனுமாகிய முருகப் பெருமானை வணங்குகிறேன். அடியேன் கூறவிருக்கும் இந்தத் தமிழ்ப் பாடலுக்கு இந்த மாதையம்பதியாகிய திருத்தலத்திற்கு ஆடையணிகளாக விளங்கி அழகைத் தருகின்ற காவிரியாகிய பொன்னித்தாயின் அருள் என்றும் உண்டாவதாக வேண்டுகிறேன். எண்டிசையிலும் புகழ்பெற்ற இம்மாதையில் எழுந்தளியுள்ள முத்தாலம்மையாகிய எக்கலாதேவியின் அருள் எனக்குக் கிடைக்க வேண்டுகிறேன்.

வாரணம் - யானை; வாரணன் - இந்திரன். பொன்னி - காவிரியாறு. எக்கலாதேவி மாதையில் கோயில் கொண்டுள்ள கிராமதேவதை.

சுவடிச்சொல் - 1. னாயகி. 2. வாறணன் 3. தாயறுளுண் 4. யறுள்

3. Salutations of Murukā, Kāvēri and Ekkālammai

I salute Murukā
Who entered into holy wedlock with Valli
Who also married Teivayāṉai,
The daughter of Intira,
Establishing close kinship
With the proud possessor of the white elephant.

4. (கலைமகள் வணக்கம்)

கந்த பத்தியம்

[1]உரைசெயுந் தமிழிதே உலகில் பரவவுங்
கேழ்ப்போ [2]ராலமுத மெனவுங்

கரமலர் கொண்டு உள்ளங் களிக்க
[3]சரஸ்வதி பங்கயத் தாள்வணங்கு வேனே.

அடியேன் கூறும் தமிழாகிய இந்த யட்சகானப் பாடல் உலகமெல்லாம் பரவவும், இப்பாடலைக் கேட்போர் இது தேவாமிழ்தம் எனக்கொண்டு உள்ளம் மகிழவும் அருள்புரிவாளாக வேண்டிக் கலைமகளின் திருவடித் தாமரைகளை வணங்கித் துதிக்கின்றேன்.

உரைசெயும் - நான் இயற்றிக் கூறும். அமுதம் - தேவாமிழ்தம். கரமலர் - மலர்போலும் கை; கையாகிய மலர் என உருவகம். பங்கயம் - தாமரை. தாள் - திருவடி.

சுவடிச்சொல் - 1. உரைசெயும்ந் தமிழிதே 2. யாலமுற்தமென 3. சறஸ்துபதி

வசனம்: இப்படி வேண்டிவிநாயகன் முதலாகிய தெய்வங்களைப் பணிந்து புலவோர்களை ஏதென்று கொண்டாடுவேன் [1]என்னில் (1)

சுவடிச்சொல் - 1. என்றில்.

4. Salutations to Kalaimakaḷ

I offer obeisance
At the lotus feet of the Goddess of learning
In the fond hope that my Tamil muse
Sung in Yaṭca Kāṉam style
Shall reverberate across the world
Elevating listeners to divine rapture.

5. அவையடக்கம்

திரிபுடை

பார நாவலர் முன்பு நானொரு
தீர தாக வுரைத்தி டுந்தமிழ்
மேரு மாமலை முன்பு சிறுமலை
[1]நேர தாமே
சரச மாகிய விரத மதிரு
புருஷ னாமில னென்று செந்தமி
ழரசர் தயவுள தாகை யால்தமிழ்
உரைசெய் வேனே.
[2]சோனை மழைநிக ரான கவிசொரி

கான நாவலர் சலிகை கொண்டபி
மான முடன்கையி லான படிசொல்வன்
நானும் மகிழ்ந்து

பரந்த இந்த நாட்டுப் புலவர்களின் முன்பு, மிகவும் துணிவாக நான் இந்த நூலைச் சொல்லத் தொடங்குகிறேன். இச்செயல் மிகப்பெரியதாகிய மேருமலையின் முன்பு ஒரு சிறு குன்று நிற்பதற்குச் சமமாகும்.

இனிய குணத்தையுடைய இவன் உயர்ந்த நோக்கமுடையவன் என்று தமிழரசர்களாகிய பெரும்புலவர்கள் என்னைப் புகழும் பெரும்பேறு பெற்றவன் ஆனதால் இந்தநூலைத் துணிவோடு கூறுகிறேன்.

இடைவிடாது பொழியும் அடைமழையைப் போலத் தங்குதடையின்றிக் கவிபாடும் இசைப்புலவவர்களின் செல்வாக்கானது துணைநிற்க, அதையே உரிமையாகக் கொண்டு என்னால் இயன்றவாறு பாடத் தொடங்குகிறேன்.

பாரம் - சுடமை, பொறுப்பு. தீரதாக - துணிவாக. மேருமாமலை - பூமிக்கு நாரசம் போலத் தோன்றியுளள பொன்மலை; நிடதநாட்டிற்கு வடக்கேயுள்ள பூமிக்கு இரிசு எனப்படும் மலை; புராணச் செய்திகள் பலவற்றிற்கு மூலகாரணமான மலை. நேர் - சமம் சரசம் - இனியகுணம். விரதம் - உறுதி. தயவு - இரக்கம். சோனைமழை - பெருமழை; விடாதுபொழியும் அடைமழை. சொரி - சொரிதல் - பொழிதல். கானநாவலர் - இசைப்புலவர். சலிகை - செல்வாக்கு அபிமானம் - விருப்பம்.

சுவடிச்சொல் - 1. னேறதாமே 2. சோணை

வசனம் - தெய்வ வணக்கமும் புலவோர்களுக்கு அவையடக்கமும் சொல்லி சாரங்கதரன் கதையான விருத்தப்பாவை [1]யட்சகானப் பிரபந்தமாகச் சொல்லத்[2] தொடங்கினவாராரோ வெண்ணில். (2)

சுவடிச் சொல் - 1. யக்ஷகானப் பிறபந்த 2. துடங்கினவனாறோ.

5. The poet's humility

I make bold to lisp in numbers
Before the celebrated poets of the land
Mighty like mount Meru, me a midget!
But did they not describe me as sweet-tempered
And commend my lofty aims?
This explains my daring act
Of singing before them.

I seek anchorage in my fellow bards
Whose poetic overflow
Is verily the torrential rain

Prose: Who is it that is going to narrate as Yatca Kāṉam the Tale of Cāraṅkaṉ, after worshipping the Gods and acknowledging his limitations?

6. *(இராசமகேந்திரபுரச் சிறப்பு)* *திரிபுடை*

உள்ளத்தி னிற்சிறு பாலருக் கேகல்வி
யுறுதிகொள வுரைப்போன் தென்மாதையில்
வெள்ளிக் கந்தையன் வீரசைவன் விளிம்புகின்றான்.
தெள்ளு தமிழ்தரு வெள்ள மதையொரு
பிள்ளை யெனவரு வள்ளல் தொழுழுதல்
வள்ளா ருள்மிக உள்ளராச மகேந்திரபுரமே
[1]ஆர ணங்களை யோதி வேதியர்
[2]கார ணங்களை விளைக்க வீதியில்
[3]வார ணங்கள் உலாவும்ராச மகேந்திரபுரமே
வணக்க மாய்க்கிளை இணக்க மாகவே
கணக்கில் லாமலே பிணைந்த தருமலர்
கனத்த சோலைகள் சூழும்ராச மகேந்திர புரமே
ஆடரங்குகள் நீடு மண்டபமோ டிணங்கிய
கூட கோபுரம் மாட மாளிகை
சூழும்ராச மகேந்திர புரமே
சொன்ன மலர்சனன பின்ன லுளகுழல்
மின்னை நிகரிடை கன்னி யவரொடு
மன்னர் தினமும் மகிந்தராச மகேந்திர புரமே.

குழந்தைகளின் உள்ளத்தில் உயர்ந்த கருத்துகள் நிலைக்குமாறு திறம்படக் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியப்பணி புரிந்துவருபவரும், தென்மாதை என்னும் ஊரிலே பிறந்து வாழ்ந்து வருபவரும், வீரசைவ மரபில் தோன்றியவருமாகிய கந்தையன் என்பவர் இந்த யட்சகானப் பாடல்களைப் பாடுகிறார்.

தூய தமிழ்மொழியில் தோன்றுகின்ற பாக்களாகிய பெருவெள்ளத்தை ஒரு குழந்தையாகவே ஏற்றுக் கொள்ளும் வள்ளல்கள் நிறைந்தது இராச மகேந்திரபுரம்

என்னும் நகரம். மேலும் அந்த வள்ளல்களே வணங்கும் படியான உயர்ந்த உள்ளமுடைய சான்றோர்கள் நிறைந்தது அந்நகரம்.

உயிர்களிடம் அன்புகொண்ட அந்தணர்கள் வேதத்தின் ஞானபாகையில் சொல்லப்பட்ட உயர்ந்த கருத்துக்களை எடுத்துச் சொல்லி மக்களின் சான்றோர்களாக உருவாக்கி வருவர். சான்றோர் நிறைந்த அந்த நகரத் தெருக்களின் யானைகள் மகிழ்ச்சியாக உலவிவரும்.

மிகப்பரந்த சோலைகள் நிறைந்தது அந்நகரம். அச்சோலைகளில் உள்ள வானளாவிய மரங்களெல்லாம் அளவற்ற மலர்க்கொத்துகள் நிறைந்து விளங்கின. அந்த மலர்களின் சுமையால் மரக்கிளைகளெல்லாம் வளைந்து தாழ்ந்து தலை சாய்த்து வணங்குவதைப் போலக் காட்சியளித்தன.

மாடமாளிகைகைகளும், கூடகோபுரங்களும் நிறைந்து நீண்ட மண்டபங்களோடு கூடிய நடன அரங்குகள் பல நிறைந்தது அந்தராசமகேந்திரபுரம்.

பொன்னிறமும் மலர்போன்ற மென்மையும் படைத்த பிறப்பு; பின்னலாகப் பின்னப்பட்ட கூந்தல்; மின்னலைப் போன்று சிறுத்து ஒளிமிக்கு விளங்கும் இடை ஆகியவற்றோடு கூடிய மங்கையர் சூழ மன்னர் மகிழ்ந்து வீற்றிருக்கும் நகரம் இராசமகேந்திரபுரம்.

பாலர் - குழந்தைகள். கல்வி உரைப்போன் - ஆசிரியர். வீரசைவர் - சைவமரபில் ஒரு பிரிவினர்; இலிங்கம் தரிப்போர். விளம்புதல் - சொல்லுதல். தெள்ளுதமிழ் - தெளிந்த, தூயதமிழ். ஆரணம் - வேதம்; வேதத்தில் ஒரு பகுதியாகிய ஞானபாகை. ஓதி - சொல்லி. வேதியர் - அந்தணர். காரணம் - வேதம் ஓதிய பயன். விளைக்க - விளைவிக்க - உண்டாக்க. வாரணம் - யானை. வணக்கமாய் - தாழ்ந்து. இணக்கம் - விருப்பம். பிணைந்த - சேர்ந்து தோன்றிய. கனத்த - மிகப்பெரிய, பரந்த. ஆடரங்கு - நடனசாலை. நீடு - நீண்ட, பெரிய. சொன்னம் - பொன். மலர்சனனம் - மலர்போன்ற பிறப்பு; மென்மையான உடல். குழல் - கூந்தல். மின் - மின்னல். இடை - இடுப்பு.

சுவடிச்சொல் - 1. ஆறணங் 2. காறணங் 3. வாறணங்

6. Rājamakēntirapuram teemed with generous souls
Hailing the flood of poetic effusions
In chaste unalloyed Tamil
With the warmth shown to infants.
The place abounded in noble men
Commanding respect from the munificent rich.
Brahmins with love for living things

Spread the tenets of hoary lore
Elevating men to dizzy heights
Of virtue and goodness.
Elephants roamed about the streets
With gay abandon.
Orchards with tall trees
Carried flowers in bloom
Whose weight made them stoop
In ceremonial salute.
Palatial buildings, mighty towers
Dancing floors wide and spacious
Were other significant land marks.
Jubilant ruler of Rājamakēntirapuram
Sat in the midst of golden lasses
With soft and tender feelings
Wearing their hair in plaits
Whose waists were bright and slender
Like the streaks of lightning.

7. *(மன்னர் இராச நரேந்திரனின் பண்புநலன்)* **திபதை**

அந்நகர் தனையாளும் [1]அரச னெண்டிசையில்
மன்னர் மன்னவனதி மதுர வாய்மையினா லுலுத்தர்
குடோரி
மூன்னுதவிய பாரி செலுத்திய கடாரிகை செந்தி
பொன்மாரி மதித்த பொன்மிகு
தங்க மலரணை துங்கம் அதிர்த்த மன்னவர்
பங்க மான பிள்ளை சிங்கம் வனிதையரதி
மோக மயலெலாந் தீர்க்கத்
தனிமனித னுருவாகச் சமைந்தசம்
போக போக்கிய [2]நிர்வாகி நற்
புத்தி யிலுகி
வாக்கி யத்தரிச் சந்திரன்

வழங்கிடுங் [3]கர்ணன்
குறத்தி கொண்டருள் [4]ரத்தினக்
கிரீடப்பிர காசன்
பூர்த்தி யாகிய துரை புருஷ ராச
நரேந்திர னெனுந் திருநாம முள்ளவன் - விண்
[5]சுரேந்திர னெனவே தோற்றம துள்ளோன்

(மன்னனின் மணவாழ்க்கை)

பொற்பிரமை மேனியாள் பூவை ரத்தினாங்கி
விற்புரு வத்தினாள் மெல்லி சித்திராங்கி
இவர்களை மணஞ்செய்து இருவர்கள் [6]தமக்கும்
அவரவர் [6]தமக்குஓர் மனைதனை முடித்தே
இரதியுங் காமனும் இனியபால் தேனும்
முருகிய காந்தமும் ஊசியும் போலக்
கூடியே கலந்துயர் கொண்டைமேல் புஷ்பம்
வாடுதல் இன்றி மகிழ்ந்திருந் தானே.

இராச மகேந்திர புரத்தையாண்டு வந்த மன்னன் இராச நரேந்திரன். அவன் எட்டுத்திக்கு மன்னர்களும் வணங்கும் மன்னர் மன்னனாக (சக்கரவர்த்தி - பேரரசன்) விளங்கியவன். மிகுந்த இனிமையும் வாய்மையும் உடையவன். ஈயாத உலோபிகளுக்கு மருத்துவனானவன். (உலோபிகளை அழிப்பன்). வள்ளல் பாரியை நிகர்த்தவன். ஓடவிட்ட கன்றை ஒத்தவன். பொன்மழை பொழியும் கையையுடைவன். தனது ஆட்சிப் பீடமாகிய பொன்னலான சிம்மாசனத்திற்குக் கேடு விளைவிக்கும் மன்னவருக்குக் கேடு விளைவிக்கும் ஆண்சிங்கமாக விளங்குபவன் மனைவியராகிய மகளிரின் மோகத்தைத் தீர்ப்பதற்கென்றே தனி மனித ஊருவெடுத்தவன். இன்பம் அனுபவித்தலாகிய செல்வத்தைப் பெற்றவன். சிந்தித்து அறியும் ஆற்றல் படைத்தவன். உண்மையே பேசுவதில் அரிச்சந்திரனாகவே விளங்குபவன். வாரி வழங்குவதில் கர்ணனாகவே வாழ்பவன்.

வாழ்வின் எல்லாச் செல்வங்களிலும் நிறைவுபெற்று விளங்கும் தலைவன். விண்ணுலகவாசிகளாகிய தேவர்களின் தலைவனாகிய இந்திரன் போன்ற தோற்றதைப் பெற்ற அவன் இராச நரேந்திரன் என்னும் பெயரைப் பெற்றவன்.

பிறரை மயக்கக் கூடிய பேரறிவினைப் பெற்றவளும், பொற்சிலை போன்ற அழகிய உடலையுடையவளும், பேரழகு வாய்ந்தவளுமாகிய இரத்தினாங்கி என்பவளையும், வில்லைப் போன்று வளைந்த அழகிய புருவத்தையுடைய

மெல்லியலாள் சித்திராங்கி என்பவளையும் திருமணம் செய்து கொண்டான் இராச நரேந்திரன். இருவருக்கும் தனித்தனி அரண்மனைகளை அமைத்து அவர்களை இருக்கச் செய்தான்.

இரதியும் மன்மதனும் போலவும், பாலும் தேனும் போலவும், காந்தமும் ஊசியும் போலவும் இருவருடனும் மகிழ்ச்சியாக இன்ப வாழ்க்கை நடத்தி, தேவியர் இருவரும் தலையில் அணிந்த மலர் வாடாதபடி சிறிது வருத்தமும் இல்லாதவாறு வாழ்க்கையை நடத்தி வந்தான்.

அந்நகர் - இராச மகேந்திரபுரம். எண்டிசை - எட்டுத்திக்குகள்; அவை - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்னும் நான்கு திசைகளும் தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு என்னும் நான்கு மூலைத் திசைகளும் என்னும் எட்டுத்திக்குகள். மன்னர் மன்னவன் - பேரரசன். மதுரம் - இனிமை. வாய்மை - உண்மை. உலுத்தர் - ஈயாத உலோபி. குடோரி - அழிப்பவன். பாரி - பாரிவள்ளல்; கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; அவர்கள் - எழினி, ஓரி, காரி, நள்ளி, பாரி, பேகன், மலையன் என்போர். கடாரிகை - கடாரி - கன்று; மாரி - மழை. மலரணை - மலர்போன்ற ஆசனம், துங்கம் - தூய்மை, பெருமை. அதிர்த்தல் - கேடுறச் செய்தல், பங்கம் - கேடு, பிள்ளை சிங்கம் - ஆண்சிங்கம். வனிதையர் - மகளிர். மயல் - மையல், மயக்கம், சமைந்த - உண்டான, சம்போகம் - இன்பநுகர்ச்சி போக்கியம் - செல்வம். நிர்வாகி - பொறுப்பு வாய்ந்தவன். ஊகி - சிந்தனை உள்ளவன். வாக்கியம் - வாக்கு, சொல். துரை -தலைவன். விண் - மேலுலகு. சுரேந்திரன் - தேவேந்திரன். சுரர் - வானோர், தேவர், பிரமை - மெய்யறிவு. மேனி - உடல், பூவை - பெண். மெல்லி - மெல்லியலாள், பெண். மனை - வீடு, அரண்மனை. இரதி - மன்மதன் தேவி. கொண்டை - கூந்தல் முடிச்சு.

சுவடிச்சொல் - 1. றாச 2. நிறவவாகி 3. கற்னன் 4. றத்தின 5. சுறேந்திரநெனவே 6. தனக்கு.

வசனம் - இப்படிப்பட்ட பேரும் பெருமையும் பிரகாசங்களும் உதார தத்துவங்களும் சவுரிய பாரக்கிரமங்களும் போக போக்கியங்களும் படைத்த புருஷ சிகாமணியாகிய ராச நரேந்திரன் சமஸ்தானத்துக்கு அதிபதியாகிய மந்திரி [1]எப்படிக் கொத்தவன் என்னில். (3)

சுவடிச்சொல் - 1. எப்படிக்கொற்றவன்.

7. The ruler of Rājamakēntirapuram
Rāja Narēntira was verily an emperor
Holding absolute sway on kings
Of eight directions.
Sweet tempered and scrupulously honest,
Generous like Pāri and Karṇā,

He was the destroyer of parsimony
Showering gold with liberal hand
And a lion to enemy kings
Who ever threatened his golden throne.
Perhaps he had assumed man's guise
To cool the passions of his wives
As he was a giver of pleasure as well!
Discreet in his actions,
Honest like Hariccantira,
Handsome as Intira, the king of Gods
He had married Rattiṉāṅki,
Carved out of pristine gold
Whose intellectual attainments
Were the envy of others.
His other wife was Citrāṅki
With eyebrows like a bow
For both his life-partners
King had built separate mansions.
Coupled thus ideally, they lived
Like Rati and Manmata
Like milk and honey
Magnet and the needle
Absence of sorrow was their lot
The flowers on the locks of wives seldom withered.

Prose: Let us now attempt a description of the minister of King Narēntira, brave, noble, magnanimous and a paragon of virtues whose life is a by word for satisfaction and fulfillment.

8. *(அமைச்சனின் பண்புகள்)* *சம்பை*

செல்காலம் வ்ருகாலம் நல்காலம் அறியுமொர்ரு
சல்லாப[1] விதரணிகன் உல்லாச மதனன்
முகக்குறிப்பி னாலொருவர் வசைக்குறிப்பி னாலொருவர்
சுகிக்கவுரைத் திடுந்திறமை மிகக்குறிப்பின் வல்லான்.

[2]ராசரா சாக்கள்சபை சபாசெனவு மிகஅதித
[3]தேசபாஷை களினிது பேசியிடும் புருஷன்
[4]உயர்தோள்க ளிருவேந்த வயமாகிய சுமந்த
தியல்தாதை பலவந்தன் பெயர்நீதி மைந்தன்.

இராச நரேந்திரனின் அமைச்சன் இறந்தகால, எதிர்கால நிகழ்ச்சிகளை ஆய்ந்து அறிந்து சிறந்த காலத்தை நிர்ணயிப்பதில் வல்லவன். பலரோடும் கலந்து பேசி முடிவெடுப்பதிலும், மகிழ்ச்சி ஊட்டுவதிலும் திறமையுடையவன். கூர்மையான அறிவு உள்ளவன். சிலரை முகக் குறிப்பாலும், சிலரை வசை மொழியாலும் உணரச்செய்து அவர்கள் மகிழ்ச்சியாக வாழும் வழிகளை உரைத்திடும் திறமைமிக்கவன். பல மன்னர்களின் அவையிலுள்ளோர் அனைவரும் 'சபாஷ்' என்று கூறிப் பாராட்டத்தக்க அளவில் பிற நாட்டு மொழிகளை இனிமையாகப் பேசிடும் பெருமை வாய்ந்தவன். மன்னர் இருவருக்கு நிகரான வலிய தோள்களையுடையவன். உண்மையான தந்தைக்குச் சமமானவன். மிகுந்த பலம் வாய்ந்தவன். அவன் பெயர் 'நீதிமைந்தன்' என்பதாகும்.

செல்காலம் - இறந்தகாலம். வருகாலம் - எதிர்காலம். நல்காலம் - நல்லகாலம். சல்லாபன் - கூடிப்பேசுபவன். விதரணிகன் - கூரியபுத்தியுள்ளவன்; விவேகி. மதனன் - மன்மதன். வசைக்குறிப்பு - குறிப்பாய் இகழ்ந்து கூறுதல். சுகிக்க - சுகமாய் வாழ. சபாசென - 'சபாஷ்' என்னும் குறிப்புச் சொல்; பாராட்டுதல். அதிதம் - மேலானது; அதித தேசபாஷை என்றது மேலுகமாகிய வானுலகமொழி எனினும் அமையும்; தேவமொழி. வயமாயது - வசப்பட்டது; வலிமையானது. தாதை - தந்தை.

சுவடிச்சொல் - 1. விதறணிகன் 2. றாசறாசா 3. தேசபாஷைகளினது 4. உயர்தோள்காகளிரு.

வசனம் - இப்படிப்பட்ட நீதி மைந்தனை மந்திரியாக [1]வைத்துக்கொண்டு ராசமகேந்திரன் ராச்சியமாளுகிற நாளையிலே யேது காரியங்கள் நடந்துதென்னில்

(4)

சுவடிச்சொல் - 1. வைற்றுக்

8. His minister had an uncanny knack
To study past and future
And determine the most propitious hour.
Gifted with sharp intellect
He was good at taking decisions
After meaningful dialogue with cross-sections.

For some, he dropped a hint or gesture
For others, he employed severe reprimand,
So that they may wake up and lead
Happy, purposeful lives.
A polyglot winning the applause
Of nobles in different courts
With his sweet and skilful manipulation of tongues.
Broad-shouldered was he and tower of strength,
Playing occasionally the parental role,
His name was Nītimaintaṉ.

Prose: Let us see what happened when the King was ruling with the assistance of Nitimaintaṉ.

9. *(மன்னன் மக்கட்செல்வம் இல்லையென வருந்துதல்)* சம்பை

இந்தடவ தாகவே இருக்கின்ற [1]நாளரசன்
மைந்தர்க ளில்லாமல் மனம்நொந்து தடுமாறி
பணமிருந் தென்னவெகு பாக்கிய மிருந்தென்னநற்
கணமிருந் தென்னபயன் காணியிருந் தென்ன
[2]உறவிருந் தென்னநமக் [3]குற்றார்க ளிருந்தென்ன
அறிவிருந் தென்னபயன் ஆண்மையிருந் [4]தென்ன
மனையிருந் தென்னமாட மாளிகைக ளிருந்தென்ன
பிணையெங்கு மிவனெனவே [5]போர்பெற்று மென்ன
கந்தமில்லா மலர்போலுஞ் சுந்தமிலாக் குரல்போதும்
மைந்தரில்லா எந்தனிட வாழ்வுமொரு வாழ்வோ?
மதியில்லா வான்போலும் மலரில்லாக் குளம்போலும்
சுதனில்லா துண்ணுமிந்தச் சோறுமொரு சோறோ?
உளங்களிக்க விழிகளிக்க விளந்தளிர்க்கை [7]யால்தவழ்ந்து
விளங்குமைந்த ரில்லாத வீடுமொரு வீடோ?
கூடிவிளை யாடிமனை தேடியுற வாடிமைந்தர்
ஓடிவந்து தீண்டாத [8]உடம்புமொரு உடம்போ?

எல்லாச் செல்வங்களையும் பெருமையையும் பெற்று விளங்கிய இராசநரேந்திரன் மக்கட்செல்வமில்லாதவனாகி மனம் வருந்தினான். பணமும் பலவகைச் செல்வங்களும், சுற்றத்தினராகிய கூட்டமும் நிலபுலன்களும், உற்றார் உறவினர்களும், அறிவும் ஆண்மையும், மாடமாளிகை கூடகோபுரங்களும், நற்குணமுடையவன் என்ற பெயரும் புகழும் ஆகிய எல்லாப் பெருமைகளும் குறைவறப் பெற்றிந்தும் என்ன பயன்?

மணமில்லா மலர்போலவும், இசையில்லாக் குரல்போலவும் மக்கட்பேறில்லா என்னுடையவாழ்க்கை ஒரு வாழ்க்கையாகுமா?

நிலவு இல்லாத வானத்தைப்போலவும், தாமரை இல்லாத குளத்தைப் போலவும் மகன் ஒருவன் உடன் இல்லாமல் உண்ணும் உணவு ஒரு உணவாகுமா?

கண்ணும் மனமும் மகிழ்ச்சியடையுமாறு தன்னுடைய இளந்தளிர் போன்ற கைகளால் தவழ்ந்து வருகின்ற குழந்தை இல்லாத வீடு ஒரு வீடாகுமா?

குழந்தையானது வீட்டில் பலரோடும் கூடிவிளையாடி ஓடி வந்து நம்மைக் கட்டிப் பிடிக்கக் கொடுத்து வைக்காத உடம்பு ஒரு உடம்பாகுமா?

இந்தடவதாக - இந்த அடவது ஆக - இந்த விதமாக. மைந்தர் - குழந்தைகள், மக்கள். பாக்கியம் - செல்வம். கணம் - கூட்டம். காணி - நிலம், நிலஅளவு; 1⅓ ஏக்கர். உற்றார் - நம்மைச் சார்ந்தவர், உறவினர், நண்பர் முதலானோர். ஆண்மை - வீரம் முதலான உயர்பண்புகள். மனை - வீடு. பிணை - பிறரோடு உறவாடும் பண்பு. கந்தம் - மணம், வாசனை. சந்தம் - இசை. மதி - நிலவு. வான் - வானம். மலர் - தாமரை. சுதன் - மகன். விழி - கண். இளம் தளிர் - மரம், செடி, கொடிகளில் துளிர்த்துவரும் துளிர் இலை. தளிர்க்கை - தளிர் போன்ற மென்மை வாய்ந்தகை.

சுவடிச்சொல் - 1. னாளரசன் 2. ஒறவிருந் 3. குத்தாரக் 4. தென்னா 5. பேர்பெத்து 6. ஒளங் 7. யால்வீழ்ந்து 8. ஒடம்புமொருஒடம்போ.

9. What though blessed with pelf,
Property, palatial buildings, lofty towers,
The unstinted adoration of men
As the abode of noble traits,
Rājanarēntirā had no issue to call his own
Which drove despair into his heart.
He was a flower sans fragrance
A voice without melody.
How can I claim my life is full
When I am bereft of darling child?
How can I relish food

A barren sky without moon,
A tank without lotuses.
Can any home be called a home
Which lacks an infant
Crawling on its tender fours
Feasting the eye and the mind?

10. *(நரேந்திரன் வருத்தம்)* **ஏகதாளம்**

இப்படிச் சஞ்சல [1]மெய்தி நரேந்திரன்
உப்பிடு மொருகுட மப்படி யானான்
சிந்தை [2]தளர்ந்தொரு செல்வமு மின்றியே
[3]வந்தது வந்தது மனத்தினில் விசாரம்
தயவு மதிகநய பயமு முடையவர்க்குத்
துயர மனக்கவலை சொல்லி முடியாதே.

இவ்வாறெல்லாம் நினைந்து நினைந்து உள்ளம் வருந்திய இராச நரேந்திரன் உப்பு வைத்திருந்த மண்குடம் உடைந்து போவது போன்று உள்ளம் நைந்து வருந்தினான். மிகுந்த கருணை உள்ளமும், மென்மையான பேச்சும், பயந்த சுபாவமும் உடையவர்களுக்கு மனக்கவலை ஏற்பட்டுவிட்டால் அவர்கள் அடையும் வருத்தத்தை எடுத்துச் சொல்லவே முடியாது. அதே நிலையில் இராச நரேந்திரனும் உள்ளம் தளர்ந்து தாங்கமுடியாத துன்பத்திற்கு உள்ளாகி விட்டான்.

சஞ்சலம் - துன்பம். குடம் - மண்குடம். சிந்தை - மனம். விசாரம் - கவலை; ஆழ்ந்த சிந்தனை. தயவு - தயை, கருணை. நயம் - பணிவு.

சுவடிச்சொல் - 1. மெயிதி 2. தளந்தொரு 3. வந்துதுவந்துது

10. So deeply pined away the king
That his heart was torn asunder
Like earthern pot
Keeping common salt.
The soft, sensitive and timid
Are always prone to great grief.
Such was the sad predicament
Of King Rājanarēntira

11. ***(மன்னன் சிந்தனை)*** **கந்தபத்தியம்**

சதிரு பாயன்குண தயவுள்ள மன்னர்
[1]ரதிமன் மதர்க்காறா மன்னிய புருஷன்
சுதனில்லா திருந்த தொருபெருந் துயரால்
நிதிநரேந் திரனொரு நினைவுகொண் டனனே.

நான்கு வகையான தந்திரங்களைக் கையாண்டு ஆட்சி நடத்துவதில் வல்லவனும், இரக்ககுணம் படைத்தவனும், இரதிமன்மதன் ஆகியோரின் வழித் தோன்றலாக வந்துதோன்றியவனு மாகிய இராசநரேந்திரன், குழந்தையில்லாத பெருங்குறையைப் போக்கிக் கொள்ள ஒரு வழியைச் சிந்தித்தான்.

சதிருபாயன் - சதுருபாயன் - நான்கு தந்திரங்களை மேற்கொள்ளுபவன்; அவை - சாம, தான, பேத, தண்டம் என்பன. சமாதானத்தால் அல்லது பொருள் கொடுத்து, அல்லது பிறரைப் பிரித்து அல்லது தண்டனை கொடுத்து ஒரு காரியத்தைச் சாதித்தல். ஆறு - வழி. மன்னிய - நிலைபெற்ற.

சுவடிச்சொல் - ரதிமன்மதர்காறா.

வசனம் - அப்போது ராசநரேந்திரன் சகல சாஸ்திர சம்பன்ன [1]ராகிய வேத [2]பிராமணரை யழைப்பிச்சு எனக்கு முன் செய்த தவத்தினாலே புத்திர சந்தானமுண்டோ யில்லையோ வென்று கேழ்க்க, அப்போது வேத[2]பிராமணர் ராசாவினிட [3]சாதக வலிமையை ஆராய்ந்து பார்த்து ஓகோ ராசாவே! நீர் முன்செய்த தவத்தினாலே புத்திர சந்தான முண்டு; தவமுந் தவமுடையார்க்காகும். ஆகையினாலே இச் சென்மத்திலே சிவனை [4]நோக்கி நீர் தவசு பண்ணினால் சிவன் பிரத்தியட்சமாகிப் புத்திரரைக் கட்டளை பண்ணுவாரென்று சொல்லக்கேட்டனன். (5)

சுவடிச்சொல் - 1. றாகிய 2. பிறாமணர் 3. சாதகப்பலிமையை ஆறாய்ந்து பாத்து 4. னோக்கி

11. King Rāja Narēntirā, soft in temperament
Tracing descent from Rati and Maṉmatā
Ruling with the aid of the four strategies
Thought of ways and means
To overcome his only shortcoming,
Lacking an issue to call his own.

Prose: Then King Rāja Narēntirā summoned the brahmins, wèll-versed in the Vētas and asked them whether his actions of merit in the earlier birth would beget him a child. The brahmins examined the position of the stars in the King's horoscope and exclaimed: Revered king, you are destined to father a child thanks to the meritorious deeds in the previous birth. Penance never goes unrewarded. Pray to Almighty Civa who is sure to appear before you and bless you with progeny.

12. *(மன்னன் அறச்செயல்கள்)* *திரிபுடை*

பொருளும் [1]நவரத்தின பூஷ ணங்களும்
[2]இரவ லர்க்கருள் சேர்ப்பீ ரென்னவோ
[3]அருளும் ராசந ரேந்திரன்
மைந்தரில் லாமையாலே
[4]புண்ணி யங்குறை வன்றி யேபல
நன்னி தானமன துன்னி யேசெயு
மன்னன் ராசந ரேந்திரன்
மைந்தரில் லாமையாலே
[5]நாளி லேயுமுரு மாக்கை யிற்சமு
தாளி யுடன்பல வாளி யெழிலறி
வாளி ராசந ரேந்திரன்
மைந்தரில் லாமையாலே

குழந்தையில்லாக் குறைநீங்க, ஏழை எளியவர்களை அழைத்து அவர்களுக்கு வேண்டிய பொருள்களையும், நவரத்தினங்களையும், ஆடையாபரணங்களையும் கொடுத்து உபசரிக்க வேண்டும் என்று சோதிடர்கள் கூறினார்கள். சிறந்த பலசாலியாகவும், அழகும் அறிவும் மிக்கவனாகவும் பிறவியெடுத்த இராச நரேந்திரன் சோதிடர்களின் சொற்களை முழுமையாகப் பின்பற்றியவனாகி குறைவில்லாத புண்ணியங் கிடைக்குமாறு நல்ல வகையான தான தருமங்களில் ஈடுபட்டு மனம் மகிழ்ந்து, ஆரவாரமில்லாமல் பொறுமையாகச் செய்யத் தொடங்கினான்.

நவரத்தினம - கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வைடூரியம என்னும் ஒன்பது மணிகள். இரவலர் - யாசிப்போர். புண்ணியம் - நற்பலன். நன்னிதானமனது - நல்ல நிதானமனம் - தூய, பொறுமையான மனம். ஆக்கை - யாக்கை, உடல், சமுதாளி - சமாதானமானவன். பலவாளி - பலமுடையவன் எழில் - அழகு.

சுவடிச்சொல் - 1. நவறத்தின 2. இரவலர்க்கறுள் 3. அறுளும் ராசாநரேந் 4. புன்றியங் 5. னாளிலேயுமுறு.

12. The astrologers bade the king
Distribute to humble folk
Their daily needs, besides gems and jewels.
Rājanarēntirā, strong and handsome
Scrupulously followed the sage counsel
Indulged in charitable acts
With infinite patience
Sans any show or ostentation.

13. *(மன்னனின் தவம்)* திபதை

கானகத் தினில்மனக் கவலைகள் தீர
தானுமுத் தடவியில் தரங்கம்வெண் டரளம்
கொழித்தநன் னதியில்மெய் குனிந்துநீ ராடி
மழுப்படை யானெங்கள் வள்ளலைப் பணிந்து
நினைத்தவை யளிக்கும்வெண் ணீறது சாத்திக்
கனக்கவே தவத்திரனாக் கண்டவர் போலங்
கிறுத மாகவே யயின்று மூர்த்தி
கையி னாலிங்க முண்டாக்கி
[1]பச்சிலை பலநீரால் பூசனை புரிந்து
மெய்ப்பொரு ளிதுவென்றே தேசிகன் சொன்ன
மந்திரத்தை யுச்சரித்தே
அரகரா சிவசிவா அடியனை யாளும்
புரசர நித்தியசம் பூரணா சரார
சங்கரா வடியர்நெஞ் சகத்துயர் களையுங்
கங்கர வொளிகாள கண்ட சதாசிவ
கேசவம் பிகைசத்தி கேளி விலாச
மகர கங்கண கயிலாச வாச
என்னவே தோத்திர மிதக்கமாய்ச் செய்து
மன்னவன் [2]சாஷ்டாங்க வணக்கமுஞ் செய்து

வந்த காரியஞ்சீக் கிரமத்தில் எனக்கு
தந்தனுப் புதல்செய்ய தயவுபா ரென்று
பவந்திணை யொழித்திளம் பாலனை யளிக்குந்
தவந்தனில் நின்றாசை சஞ்சலம் அடக்கித்
தன்மனத் தைச்சிவன் சரன்கொழு கொம்பாய்ப்
பின்னிவி டாமலுளப் பிரியமு மாகி

(இறைவன்வர்மளித்தல்)

இவனுமிப் படித்தவம் [3]இயற்றுதல் கண்டு
சிவன்மனம் மகிழ்ந்துதன் தேவியம் பிகையும்
அரிபிர மாதியர் அண்டமா தவருங்
[4]கருடகந் தருவர் கிம்புருஷகின் னரருஞ்
சூழவே தேவ துந்துமி முழங்க
வாழியென் றமரர்கள் மலர்மழை பொழியத்
தோன்றியே நரேந்திரன் சுதனிலாத் துயரம்
[5]நாணவே கிருபையது நல்கிமன் னவனே
நின்மனை வியரிலோர் [6]நின்னய மான
பொன்மனை யாள்[7]மூத்த பூவைதன் [6] வயிற்றில்
சந்திரசூ ரியரொளி தருமது போலோர்
மைந்தனுண் டாகவே வரமது தந்தோ
மெனவுரைத் தெந்தையு மேகமன் னவனும்
நினையுமகக் கவலைகள் நீங்கியே வாழும்
பதிதனில் வந்துநற் பலர்களுஞ் சூழ
வதிபதி நரேந்திரன் வந்திருந் தனனே.

இராச நரேந்திரன் குழந்தைப் பேறு இல்லாத பெருங்குறையானது நீங்க வேண்டி கானகத்தை யடைந்தான். அக்காட்டில் வெண்மையான முத்துக்கள் நிறைந்த, பெரும் அலைகளோடு ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றில் உடலை வளைத்துக் குனிந்து மூழ்கி நீராடினான். தாம் எண்ணியதையளிக்கும் சக்தியுடையதாகிய திருநீற்றினை அணிந்தான். உயர்ந்த திறன்மிக்க தவசிகளில் ஒருவனாகவே மாறியவனாய்க் காணப்பட்ட இராச நரேந்திரன் மழு என்னும் ஆயுதம் ஏந்தி விளங்கும் வள்ளலாகிய சிவபெருமானைத் துதித்துத் தவப்பணிகளை மேற்கொண்டான். முதலில் சிவ வடிவங்களுள் ஒன்றாகிய இலிங்க உருவத்தினைத்

தன்கையினாலேயே உண்டாக்கினான். ஆற்றுநீர், ஊற்றுநீர் கிணற்றுநீர் முதலான பலவகையான நீரினால் திருமுழுக்காட்டிப் பச்சிலை கொண்டு அருச்சித்துப் பூசிக்கத் தொடங்கினான். இறைவனைப் பூசிக்க வேண்டிய மந்திரங்களாகக் குருமார்கள் கற்பித்த மந்திரங்களை உச்சரிக்கத் தொடங்கினான்.

அரகரா! சிவசிவா! புரசர! நித்தியசம்பூரணா!
சரார! சங்கரா! கங்கர! காளகண்ட! சதாசிவ!
கேசவ! அம்பிகை கேளிவிலாச! சத்திகேளிவிலாச!
மகரகங்கண! கயிலாசவாச!

என்னும் மந்திரங்களை உச்சரித்து மிகுந்த ஆர்வத்துடன் தோத்திரம் செய்து எட்டு உறுப்புகளும் நிலத்தில் பதியுமாறு விழுந்து வணங்கினான். 'என்னுடைய பாவச் செயல்களை ஒழித்துக் குழந்தைச் செல்வம் வேண்டி வந்த என்னுடைய எண்ணத்தை நிறைவேற்றியருளுங்கள்' என்று வேண்டித் தவமியற்றத் தொடங்கினான். பிற ஆசைகளையும் துன்பங்களையும் சிறிதும் நினையாதவனாகிச் சிவபெருமானின் திருவடிகளையே கொழுகொம்பாகப் பற்றிக் கொண்டவனாய்த் தவத்தில் மனத்தை நிலைநிறுத்தினான். உள்ளன்போடு இராசநரேந்திரன் செய்யும் தவத்தினைக் கண்ட சிவபெருமான் மனம் மகிழ்ந்தான்.

திருமாலும் பிரமனும், தேவர்களும் தவசிகளும், கருடர், கந்தருவர், கிம்புருடர், கின்னரர் முதலான தேவ வகுப்பினரும் புடைசூழ உமாதேவியாரோடு அரசன் முன் காட்சியளித்தான். அப்போது தேவ துந்துமி முழங்கியது; தேவர்கள் வாழ்த்தி மலர்மாரி பொழிந்தார்கள்.

தோன்றிய இறைவன் மன்னவ! உமக்குக் குழந்தையில்லாக் குறையை நீக்கியருளினோம். உம்முடைய மனைவியர் இருவருள் சிறந்தவளாகிய மூத்த மனைவிக்கு ஆண்மகவு பிறக்க வரமளித்தோம். அக்குழந்தை சந்திர, சூரியர் போல ஒளியுள்ளதாக விளங்கும் என்று கூறி மறைந்தான்.

மன்னவன் மனக்கவலைகள் யாவும் நீங்கியவனாகித் தனது நகரமாகிய இராசமகேந்திரபுரத்திற்கு வந்து நல்லோர் பலரும் எதிர்கொள்ள மகிழ்ந்திருந்தான்.

கானகம் - காடு, தானுமுத்தட்வில் - தானும் உற்று அடவியில் - உற்று - அடைந்து; அடவி - காடு, தரங்கம் - அலை. வெண்-தரளம் - தரளம் - முத்து கொழித்த - நிறைந்த, நல்-நதி - நன்னதி. மெய்-உடல் மழுப்படை - மழுவாயுதம் (சிவபெருமானிடம் உள்ளது) வெண்ணீறு - திருநீறு. கிருதம் - செய்கை. அயின்று – மாறி. மூர்த்தி - உருவம். தேசிகன் - குரு புரசரன் - அக்கினி தாங்கியவன். நித்தியம் - நாள்தோறும், என்றும், சம்பூரணன் - நிறைவு உடையவன். சராரன் - (மேருவாகிய) வில்லை ஏந்தியவன். சங்கரன் - சிவபெருமான்; பதினொரு உருத்திரரில் ஒருவன். களைதல்

- நீக்குதல். கங்கரன் - நீராக்குவோன், அழிப்போன். காளகண்டன் - நஞ்சுண்டகண்டன்; காளம் - நஞ்சு, கருமை. கண்டம் - கழுத்து. சதாசிவன் - பஞ்சகர்த்தாக்களில் ஒருவரான சிவன். (பஞ்சகர்த்தாக்கள் - அயன், அரி, உருத்திரன், சதாசிவன், மகேசன்). அம்பிகை, பார்வதி சத்தி - பார்வதி. கேளிவிலாசன் - விளையாடி வினோதம் புரிபவன். மகரம் - மீன். வாசன் - வசிப்பவன். சாஷ்டாங்க வணக்கம் - எட்டு உறுப்புகளும் நிலத்திற்படுமாறு வணங்குதல் எட்டு உறுப்புகள் - மோவாய், காதுகள் 2, தலை, புயங்கள் 2, கைகள் 2 ஆகியவை. பவம் - பாவம். சஞ்சலம் - துன்பம். சரன் - திருவடி. கொழுகொம்பு - கொடிசுற்றிப் படரும் கொம்பு. அரி - திருமால். பிரமாதியர் - பிரமன் முதலானோர். அண்டம் - மேலுலகு. கருடர், கந்தருவர், கின்னரர், கிம்புருடர் ஆகியோர் தேவ இனத்தைச் சார்ந்த பதினெண்கணத்தினர். தேவ துந்துமி - தேவரது பேரிகை, சுதன் - மகன். நாண - கெட நின்னயம் - மேன்மை. பூவை - பெண். எந்தை - எம்-தந்தை; சிவபெருமான். ஏக - செல்ல. அகக்கவலை - மனத்துயரம். பதி- நகரம் அதிபதி - தலைவன், அரசன்.

சுவடிச்சொல் - 1. பச்செலைபல நிறால்ப் 2. சாகூஷிட்டாங்க 3. இயத்துதல் 4. கெருட கெந்தறுவர் 5. ஞானவே கிறுபை 6. நின்றையமான 7. மூற்ற 8. வயத்தில்

13. To beget an issue
Rājanarēntirā sought the dense forest.
In a river full of pearls
Rustling with angry waves
He took a ceremonial bath
Bending his corporeal frame;
Smeared his forehead with sacred ash
Supposed to grant one's innermost wishes.
Turning into an austere soul
Rājanarēntiraṉ performed penance
Did other religious rites
Bound to please Lord Civā,
The wearer of the divine axe.
He lost no time
In making an icon of the lord
With his own hands;
Washed the holy *tulsi* leaves
In the waters of river, spring and well
Offered worship to the *linga*

With utmost devoutness and pity.
Incantations like *Ara hara*
Civa Civa, Kāla Kantā and *Catāciva*
So on and so forth
Were uttered with great fervour
While his body prostrated on earth.
Let my sins be pardoned, oh lord,
And a worthy child given,
May this humble wish be granted
Was his heart-rending appeal.
Brushing aside every other thought
He stuck firmly to holy feet of Civā
With single-minded devotion.
The Lord was highly pleased
With Rājanarēntirā's fervour
So appeared before him
In the company of Tirumal, Piraman
Holy men, holy bird
Angels of various denominations,
Above all, Umā Tēvi,
His very loving spouse!
Divine instrument *tuntupi* was instantly heard
And flowers in profusion were showered
By the celestial beings!
The Lord now spoke:
Oh King, let thy deep sorrow
At not having child cease!
Between your wives, the eldest and noblest
Shall give birth to a boy
Who shall be as resplendent
As the sun and the moon.
So saying, He vanished.

14. *(இராசநரேந்திரனும் இரத்தினாங்கியும்)* **சம்பை**

இவன் மனத்தில் மயலோங்கி
யிடவணையு மொருபாங்கி
[1]சுவையமுத மதுதாங்கித்
தோகைரத் தினாங்கி
சுகமுதவு மிதழ்கண்டு தொடைவாழை யின்தண்டு
முகிலனைய குழலிரண்டு முலையும்பூச் செண்டு
[2]நனிராச குலாதிபன் நயந்தநரேந் திரபூபன்
கனமோக வபரஞ்சி [3]கற்புடைய வஞ்சி

மகிழ்ச்சியில் திளைத்த மன்னவன் இன்பமடையுமாறு தோழியானவள் சுவை மிக்க அமுதம் முதலான உணவுப் பொருள்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தாள். அவற்றைத் தன்கையிலே ஏந்திவந்த தேவி இரத்தினாங்கியோடு மன்னன் உல்லாசமாக இன்பத்தில் மூழ்கினான். புடமிட்டபொன் போன்றவளும், கற்புடைய தேவியுமாகிய வஞ்சிக்கொடி போன்ற இரத்தினாங்கியின் இதழ்கள் இன்பமளிப்பனவாயின. வாழைத்தண்டினை நிகர்த்த அவள் தொடைகளும், மேகத்தைப் போன்று அடர்ந்த கூந்தலும், மலர்ச் செண்டுகளைப் போன்ற நகில்களும் மன்னனுக்கு மேலும் இன்பத்தையளித்தன.

மயல் - மையல் - மோகம். அணைதல் - அவ்விடம் வந்து சேர்தல். பாங்கி - தோழி. அமுதம் - உணவு. தோகை - பெண். சுகமுதவும் - இன்பமளிக்கும். முகில் - மேகம். அனைய - போன்ற; உவமை உருபு. குழல் - கூந்தல். இராசகுல அதிபன் - மன்னர்குலத்துக்குத் தலைவன். நயந்த - அன்புள்ள, மகிழ்ச்சியுள்ள.

சுவடிச்சொல் - 1. சுவையமுற்ற மதுறாங்கி 2. நனிறாச 3. கர்ப்புடைய.

14. On seeing the king exultant
The maid-in-attendance selected choicest dishes
Which Queen Rattiṉāṅki herself took to husband
Followed by a wild orgy of carnal pleasure
Rattiṉāṅki, the chaste
Unsullied as melted gold
Liberally feasted her loving lord
With her very sweet lips.
The sight of her thighs,
Supple as plantain trunk

Abundant locks resembling clouds
And beautiful boquet-like breasts
Verily intoxicated the king
Throwing him out of gear.

15. *(இரத்தினாங்கி கர்ப்பமடைதல்)* ஏகதாளம்

தற்பர னாததுளி விப்பரிதா யந்தக்
[1]கற்புடை யாளங்கே [2]கெர்ப்பனை யானாள்
கல்லின்மேல் [3]வழுதளை காய்த்தது போல்முதல்
மெல்லியும் மைந்தனை விளங்கஉண் டானாள்
ஆகையி னால்நல்ல பாகுமொழி மெய்யும்
யோகசந் தோஷமும் வாகையு மானாள்.

தற்பரனாகிய சிவபெருமானின் அருளினாலே அவர்களிடையே இந்திரியப் பரிமாற்றம் நிகழ்ந்தது. கற்பாறையின் மீது கத்திரிச்செடி முளைத்துக் காய்த்தது போல மன்னனின் முதல் மனைவியாகிய இரத்தினாங்கி கர்ப்பவதியானாள். அதனால் இனிய மொழியைப் பேசும் அவள் உடலும் உள்ளமும் வெற்றியால் உண்டாகும் மகிழ்ச்சி பொங்க விளங்கினாள்.

தற்பரன் - சிவன். நாதம் - இந்திரியம். 'கெர்ப்பனை - கருவுறுதல்; கர்ப்பம் அடைதல். வழுதளை - வழுதுணை - கத்திரி. முதல்மெல்லி - முதல் மனைவி. பாகு - சர்க்கரைக் குழம்பு. மெய் - உடல். வாகை - வெற்றி.

சுவடிச்சொல் - 1. கர்ப்புடை 2. கெற்ப்பனை 3. வழுதலை.

15. Thanks to the blessings of Lord Civā
There was a fruitful transfer of seed.
Like the egg-fruit plant bringing forth shoots
On a solid rock,
The king's senior wife Rattiṉaṅki
Showed signs of pregnancy,
The soft-spoken one that she was
Her body and mind
Registered joy and glee.

16. *(மன்னன் மகிழ்ந்து அறம்பல செய்தல்)* **திபதை**

இது கேட்டு ராசநரேந்திரன்
எந்தன் மனத்தில் [1]எண்ணிய வண்ணம்
- வாச்சுதோ வென்று
சிந்தை வியாகூலந் [2]தீர்ந்தது கொண்டு
அந்திவன் தனைநினைந் தானந்த மாகி
ஊருயிர் [3]நாமமும் ஓங்கிடு மெனத்தன்
திரேகமுங் [4]குளிர்ந்துதோ ளிரண்டும் பூரித்து
நலமுடன் செய்தவம் [5]நம்மதே யல்லால்
உலகினில் [6]மன்னர்மற் றொருவர்க்கு முண்டோ
இனியொரு வரும்நமக் கெதிரில்லை யாலோ
சனைவிசாரமு மில்லைதா னினியென்று இன்றைக்கு
உண்பதே சோறு உடுப்பதே கலையாம்
பண்புமெத் தையின்மேல் படுப்பதே படுக்கை
பரிவிலின் றணிந்த [7]வாபரணமா பரணம்
திருவிலின் றின்புடன் செலுத்தலே செங்கோல்
பெரியவர் பண்டையில் பெருந்தவப் பயனால்
தெரியவே [8]என்றுநாம் செய்வதே தன்மம்
என்றுளத் தினில்மகிழ் வெய்தியே உயர்ந்த
[9]குன்றடி யினிற்பலர் குளிக்கவே குளமும்
அங்கங்கே வழிகளில் அன்னச்த் திரமும்
அங்கங்கே மண்டபம் அமைந்தசத் திரமும்
சாலையு மங்கங்கே தண்ணீர்பந் தல்களும்
சோலையுஞ் சிங்காரத் தோப்புஞ் சாவடியும்
[10]பட்டணத் திற்சிறு பாலகர்க் கெல்லாம்
கட்டளை [11]யாய்த்தின்னக் கச்சாயக் கடையும்
வந்தவர்க் கன்னமும் வராதவர்க் குலையும்
இந்திந்த வகைத்தின்ன [12]யென்னென்ன வுண்டோ
அவையெலாம் வகைவகை யாயொரு மனதாய்
புவனியோர் துதிக்கயிப் படிபுரிந் தனனே.

தேவி கருப்பமுற்ற செய்தியறிந்த மன்னன், என் எண்ணம் நிறைவேறியது; வருத்தமெல்லாம் நீங்கியது என்று கருதியவனாய், செந்நிறத்தோனாகிய சிவபெருமானின் திருவருளை நினைந்து ஆனந்தமடைந்தான். நான் தோன்றிய ஊரும் என் பிறவியும் என் பெயரும் இந்த நிலவுலகத்தில் நிலை பெற்றுவிட்டது என்று எண்ணித் தன் உடல் எல்லாம் குளிர்ச்சியடைய, தோள்கள் இரண்டும் விம்மிதத்தால் பூரிக்க மகிழ்ச்சியடைந்தான்.

தவம் செய்து நாம் பெற்ற பெரும்பேறு உலகில் மன்னன் ஒருவனுக்கும் கிடைத்திராது; இனி நமக்கு நிகரானவர் யாரும் இல்லை; வேறு சிந்தனையோ வருத்தமோ இனி நமக்கு இல்லை; நான் இன்றைக்கு உண்பதே சுவையான உணவு. இன்று உடுப்பதே மானங்காக்கும் உடை; சுகமான மெத்தையாகிய படுக்கையில் இன்று படுப்பதே சுகமான படுக்கை; இன்று அணியும் அணிகலன்களே அழகுதரும் அணிகலன்கள்; இன்பத்தோடு இன்று நடத்துவதே சிறந்த செங்கோல்; நமது முன்னோர் செய்த தவப்பயனால் இன்று நாம் பேறுபெற்றோம்; இன்று நாம் செய்வதே சிறந்த தருமமாகும் என்றெல்லாம் நினைத்து மகிழ்ச்சியடைந்த மன்னன் பலவகைத் தருமச் செயல்களிலே ஈடுபட்டான். மலையடிவாரத்தில் மக்கள் குளிப்பதற்கான குளத்தை வெட்டினான். ஊர்ப்பயணம் செய்யும் மக்களுக்காகச் செல்லும் வழிகளில் பல அன்னசத்திரங்களையும், மண்டபத்தோடு கூடிய தங்குமிடங்களையும், பல ஒழுங்கான சாலைகளையும், தண்ணீர்ப் பந்தல்களையும், நிழல் தரும் அழகான தோப்புகளையும் பூஞ்சோலைகளையும் அமைத்தான். கிராமங்களில் சாவடிகளைக் கட்டினான். நகரத்தில் சிறுவர்க்கான தின்பண்டங்கள் விற்கும் கடைகளை வைக்க ஏற்பாடு செய்தான். வந்தவர்கள் உடனே சாப்பிடுமாறு உணவு தயாராக இருக்கும். மேலும் பலர் வருவார்கள் என்று எதிர்பார்த்து வரப்போகிற அவர்களுக்கான உலை கொதித்துக் கொண்டிருக்கும். இந்த வகையில் மக்கள் புகழ்ந்து வாழ்த்துமளவில் வகைவகையான தருமச் செயல்களை முறையாகச் செய்யத் தொடங்கினான்.

வாச்சுது - வாய்த்தது - நிறைவேறியது. வியாகூலம் - வருத்தம் (வியாகுலம்). அந்திவன் - அந்திப் பொழுதின் நிறமாகிய செந்நிறமுடையவன்; சிவபெருமான். பூரித்தல் - மகிழ்ச்சியால் பருத்தல். எதிர் - நிகர், ஒப்பானவர். ஆலோசனை - சிந்தனை. விசாரம் - கவலை. இன்றைக்கு - குழந்தை செல்வம் உண்டாகும் பேறு பெற்ற இன்று. கலை - ஆடை. மெத்தை - படுக்கை. (மெத்தென இருப்பது). பரிவு - இன்பம். திரு - மேன்மை. பண்டை - பண்டு - பழமை. தெரிதல் - அறிதல். குன்று - சிறுமலை. சத்திரம் - தங்குமிடம். சிங்காரம் - அழகு. கச்சாயம் - அதிரசம். உலை - சமைப்பதற்கு அடுப்பில் வைக்கப்படும் நீர். புவனி - பூமி.

சுவடிச்சொல் - 1. என்றிய வன்றம் 2. தீந்திது 3. னாம்மும் 4. குளுந்து 5. நம்முதே 6. மன்னர்மத்தொருவர்க்கு 7. வாபறணமேபறணம் 8. என்றுனாம் 9. குன்றடியினிர்ப்பிலர் 10. பட்டணத்திர்ச்சிறு 11. யாய்த்திண்ண 12. மென்னென்ன.

வசனம் - ஆரியன் இப்படிப் பூரித்திருக்கச் சக்களத்தியாகிய தையல் ரத்தினாங்கி கெற்பனையாகிய குழவியானது சித்திராங்கி கேட்டு ஏதென்றழுவாள். (6)

16. That the Queen had at last conceived
Made the excited King exclaim:
My cherished dream has been realised
All sorrows and pain have melted.
Hail Lord Civā, the red shouldered
Hallowed has become the place of my birth
And my reputation as well.
A cold shudder ran through his frame
His shoulders throbbed in uncontrollable ecstasy.
No other monarch was ever blessed like me
No more tears or thoughts of despair;
The food that I now eat is the tastiest
The clothes that I wear are ideal ones
I enjoy sleeping on my bed
The ornaments worn are now worthwhile,
The way I rule now cannot be bettered.
Thanks to the noble deeds of my ancestors
I have been divinely blessed.
The charity that I now practice
Is perhaps the highest and holiest
So musing, he continued to perform
More deeds of righteousness.
Below hillocks he dug wells
For the people to bathe and purify.
Keeping in mind the needs of travellers
He built feeding choultries
And *mantapās* many for the weary to rest.
Good highways were struck

With water fountains
Adorned by shady groves
And lovely orchards
Rest houses were built in villages
Sweet shops for kids in town,
Always food was kept ready
For the unexpected guests,
The rice pot knowing no rest.
So ran his many acts of charity
Winning encomiums from all and sundry.

Prose: When the noble-born was thus lost in bouts of ecstesy, let us study the reaction of Queen Cittirāṅki who shed tears of sorrow indulging in soliloquy.

17. *(சித்திராங்கியின் பொறாமை)* **சம்பை**

நமக்கென்ன குடிவாட்கை
நமக்கென்ன போகபோக்கியம்
நமக்கென்ன இருக்கையினி
நமக்கென்ன பிழைப்பு
உடமையும் பற்றினாள் [1]புடவையுங் காசுபணங்
கிடையுஞ் சக்களத்தி குடிகேடி வசமாச்சு
[2]சலிகையுடன் ஓங்கார [3]வலிமையுட னேதெய்வம்
குலவுபிள்ளை [4]வயிற்றுடனே கொண்டுபோ காதோ
மாறாத பாக்கியமும் மனைகாணி யாருதென்றால்
பேறாக அவளும்பிள்ளை [5]பெற்றவளுக் கல்லவோ
அப்படியே பிள்ளையது செப்பமுடன் [6]பெற்றாலுஞ்
சற்பனைசெய் தேபிள்ளையைத் தானுங்கொல் லேனோ
வாகாக வருள்தெய்வ. [7]வலிமைக்கே தானஞ்சிப்
போகாதென் [8]கைக்கவைகள் ஆகாது முண்டோ

இரத்தினாங்கி கருப்பமுற்ற செய்தியறிகிறாள் சித்திராங்கி. 'இனி நமக்கு வாழ்வு எதற்கு? இன்பம் அனுபவிக்கும் வாழ்க்கை எதற்கு? இந்த நிலவுலகத்திலே உயிரோடு இருப்பது எதற்கு என்றெல்லாம் பலவாறாய்த் தனக்குத் தானே அங்கலாய்த்துக் கொண்டாள். மேலும்,

சகளத்தியாகிய இரத்தினாங்கி நமக்கு உரிமையான பொருள்களுக்கெல்லாம் தானே சொந்தக்காரியாகி விட்டாள். துணிமணி, காசுபணம், வாழுமிடம் எல்லாமே என் குடியைக் கெடுத்தவளாகிய அவளுக்குச் சொந்தம் ஆகிவிட்டது. தெய்வமே! உன்னுடைய பிரணவ சக்தியின் வலிமையால், வயிற்றிலே உலவிவருகின்ற கருவாகிய பிள்ளையோடு இவளை நீ கொண்டு போக மாட்டாயா?

என்றும் அழியாத அரண்மனை, நிலம் முதலான எல்லாச் செல்வங்களும் பிள்ளை பெற்றவளாகிய அவளுக்கல்லவோ சொந்தமாகிவிடும்! ஆகட்டும்! அப்படியே ஒழுங்காக இவள் பிள்ளையைப் பெற்றெடுத்தாலும் எந்தவகையிலாவது சதி செய்து அந்தப் பிள்ளையை நான் கொன்றே தீருவேன். தெய்வ சக்திக்குப் பயந்து சும்மா இருக்க மாட்டேன். என் கைகளால் செய்யமுடியாத வேலைகளும் உலகத்தில் உண்டோ என்றெல்லாம் எண்ணி எண்ணிப் பொறாமையடைந்தாள் சித்திராங்கி.

குடிவாட்கை - குடிவாழ்க்கை; இல்வாழ்க்கை. போக போக்கியம் - போகம் - இன்பம். போக்கியம் - அனுபவம் - இன்பம் அனுபவிக்கும் பேறு. இருக்கை - இருத்தல்; உயிர்வாழ்தல். பிழைப்பு - உயர்வு, உயிர்வாழ்க்கை. உடமை - உடைமை - பொருள், உரிமை. பற்றினாள் - பிடுங்கிக் கொண்டாள். புடவை - சீலை. இடை - வாழுமிடம். குடிகேடி - தீயவள்; குடியை அழித்தவள் (துஷ்டை). வசமாதல் - உரிமையாதல். சலிகை - செல்வாக்கு, அதிகாரம் ஓங்கார வலிமை - பிரணவசக்தி. மனை - வீடு, வீட்டு நிலம். காணி - நிலம். பேறு - செல்வம்; மக்கட்செல்வம். செப்பம் - ஒழுங்கு. சற்பனை - சதி. வாகாக - ஒழுங்காக. அஞ்சி - பயந்து. கவை - வேலை.

சுவடிச்சொல் -1. பிடவை 2. சலுகை 3. வலுமை 4. வயத்துடனே 5. பெத்தவளுக் 6. பெத்தாலும் 7. வலுமைக்கே 8. கயில்க்.

வசனம் - சிந்தை தயங்கிச் சித்திராங்கி புலம்பி எந்தவிடலேயுஞ் செயம் [1]பண்ணுகிறோமென் றெண்ணிக் கொண்டிருக்க [2]ரத்தினாங்கி பத்தாமாசந் தையில் [3]ரத்தினம் போலே புத்திரனை ஈன்றனள். (7)

சுவடிச்சொல் - 1 பன்றுகிரோமென்றென்றிக் 2. றத்தினாங்கி 3. றத்தினம்.

17. When Cittirāṅki came to know
Of the Co-wife's conception,
She felt terribly crest-fallen
Why should I continue to live,
What meaning has life for me?
The Co-wife shall soon become
The proud owner of my possessions;

Dress, money and even habitation.
She is my bane, my ruin
Since she may soon own everything.
Almighty God, thanks to your *pranava* energy
An embryo is growing within her,
Fondly I hope you snatch it with the mother.
Pity my predicament,
This palace so solidly built
And all my landed property
Would be soon transferred to her
In her capacity as a mother;
Come what may,
I shall not fail to annihilate
Her darling child, the boon of the Gods
Employing some ruse or the other
I shall not remain inert
For fear of any superior force.
What action is beyond me
In this wide world?
Thus spoke Cittirāṅki to herself
Consumed by the fire of jealousy.

Prose: While Cittirāṅki of who was mentally upset, was lamenting desperately, Rattiṉāṅki gave birth to the gem of a boy at the end of the tenth month.

18. *(இரத்தினாங்கியின் மகப்பேறு)* சிந்து

பாலகன் [1]பிறந்தான் - இளம்
பானு போலவே
சாலவுஞ்சேய்க் கலிதீர
தாய்தகப்பன் களிகூர (பாலகன்)
செம்பவளக் கனிவாயுஞ்
[2]சிறுநெற்றியுங்
கும்பமுலை யுண்ணவேதான்
கூவா கூவாவென்றே (பாலகன்)

[3]மெல்லியகை கால்விர லும்
விம்மியே யழுங்குர லும்
[4]எல்லையென்னை யாளவந்தான்
மகன்என்று தான்சொல்ல (பாலகன்)
உத்தமி [5]ரத்தி னாங்கினி
[6]பெற்றிடுங் கட்டி மாங்கனி
புத்திர பாக்கிய மென்று
பூமியோர் சொல்ல
பாலகன் பிறந்தான் - இளம்
பானு போலவே.

இரத்தினாங்கியும் இராசநரேந்திரனும் தாயும் தகப்பனுமாகி மிகவும் மகிழ்ச்சியடையுமாறு, இளஞ் சூரியனைப் போன்று அழகு வாய்ந்த ஆண்மகன் ஒருவன் பிறந்தான்.

சிவந்த நிறத்தோடு கூடிய பவளம் போன்ற அழகிய வாயையும், அழகிய சிறிய நெற்றியையும் உடைய அக்குழந்தை தாயின் பருத்த நகில்களில் பால் குடிக்க விரும்பிக் கூவா கூவா என்று அழத் தொடங்கியது.

அக்குழந்தையின் மென்மைவாய்ந்த கை, கால்களின் விரல்களும், விம்மி விம்மி அழுங்குரலும் எங்களையாளப் பிறந்தான் மகன் என்று கூறுமாறு இருந்தன.

இனிப்புக் கட்டியையும், மாங்கனியையும் போன்ற இந்தக் குழந்தை குணவதியாகிய இரத்தினாங்கி பெற்றெடுத்த செல்வமாகும் என்று மக்களெல்லாம் போற்றிப் புகழ்ந்தார்கள்.

பாலகன் - மகன் - பானு - சூரியன். சால - மிகவும். சேய்க்கலிதீர - குழந்தை இல்லையென்ற வருத்தம் நீங்க. செம்பவளம் - அழகிய, சிவந்த நிறமுடைய பவளம். கனிவாய் - இனிய அழகியவாய். கும்பம் - குடம். கூவா கூவா - குழந்தை அழும் ஒலிக்குறிப்பு. விம்மி - தேம்பிஅழுதல். உத்தமி - நற்குணமுடையவள். கட்டி - இனிப்புக்கட்டி. கனி - பழம். பூமியோர் - மக்கள்.

சுவடிச்சொல் - 1. பிறந்தாநிளம் 2. சிறுநெத்தியுங் 3. மெல்லியகய் 4. என்னஎல்லை 5. றத்தினாங்கினி 6. பெத்திடுங்.

வசனம் - [1]ராசநரேந்திரன் புத்திரருண்டாச்சுதென்று மனமகிழ்ந்து உடம்பு பூரித்துச் சபாமண்டபத்திலே மந்திரி[2] பிரதானிகள், ராசராசாக்கள், புடைசூழப் [3]பிராமணர் ஆசீர்வதிக்கச் சிங்காதனத்திலே எழுந்தருளியிருந்து [4]ராசா ஏது செய்தனன்.

(8)

சுவடிச்சொல் -1. றாச 2. பிறதானிகள் றாச றாசாக்கள் 3. பிறாமணர் 4. றாசா.

18. The parents of Rattiṉāṅki and Rājanarēntirā
Were happy beyond words
When a bonny boy was born
Handsome and luminous like morning sun.
Fair-complexioned with coral lips
Tiny with a pretty forehead
The child let out a wail
As it was thirsting to suck
Milk out of mother's rich breasts.
Tender limbs, tiny hands
Elegant fingers and toes
Coupled with its infant cry
Made the parents wildly rapturous.
The Common people
Were also proud of the child
Sweet and soft like mango fruit
Born to Rattiṉāṅki, the abode of virtues.

Prose: Rājanarēntirā was happy at the birth of a son. In the open assembly, amidst ministers, fellow kings and brahmins who blessed the child with mantras, how did he behave? What did he do next?

19. *(மன்னன் இறைவனுக்கு விழாவெடுத்தல்)* *திரிபுடை*

விரையு மொளிபெறு தரள மணிகளும்
மரக தம்பொன்னும் வரிசை யாகவே
அரிய மறையவர்க் குதவி வழங்கினன் - பிரியமாக
துரைகள் மணிமுடி அரசர் மதிவல்ல
புருஷர் பழமைகள் தெரிய வுரைத்திடும்
பெரிய வர்களனை வர்க்கு மருசித்த சர்க்கரை - [1]யந்நேரம்
வழங்கி னான்இறை [2]சொர்ண தானமும்
வழங்கி னான்அபி ஷேக துந்துமி
முழங்குங் கோயிலி லிறைய வர்க்குப்பால் - பழங்களாலே
[3]ஈச ராலயம் மதில்கள் கோபுரம்

மாசில் லாதபொன் பூச்சி [4]னாலும்-பிர
காச மாய்ப்பூசை [5]பண்ணி னான்வெகு - நேசமாக
முத்தி னாலுஞ் சிறந்த [6]செம்பவ
ளத்தி னாலுஞ் சமைந்த [7]தோரணம்
பத்தி வீதியில் நிறைய செய்தனன் - அத்தியாக
கோட்டை கொத்தளம் பேட்டை யவரவர்
வீட்டு வீதியில் [8]எண்ணெய் வசந்தமும்
[9]ஆட்டு வித்தனன் நாட்டில் மன்னர்க்கு - மீட்டிவேந்தே.

மகிழ்ச்சியடைந்த மன்னவன் ஒளிமிகுந்த முத்தும் மணியும் மரகதமும் பொன்னும் ஆகிய செல்வங்களைச் சிறந்த அந்தணர்களுக்கு அவரவர் திறமறிந்து மகிழ்ச்சியோடு வழங்கினான்.

மேன்மக்கள், முதிசூடியமன்னர்கள், மதுநுட்பம்வாய்ந்த புலவர் முதலானோர், பழைய பண்புகளை எடுத்துக் கூறும் சான்றோர் ஆகிய பலருக்கும் இறைவனுக்கு அருச்சனை செய்த சர்க்கரை வழங்கினான்.

இறைவனுடைய ஆலயத்தில் துந்துமி என்னும் பேரிகை முழங்க, பால் பழங்களைக் கொண்டு இறைவனுக்குத் திருமஞ்சன நீராட்டுவித்துப் பூசை செய்து, சொர்ணதானமும் செய்தான். இறைவனுடைய திருக்கோயிலின் மதில்கள், கோபுரம் ஆகியவற்றிற்குப் பொன்னிறமான பூசு வேலைகளைச் செய்து ஆலயத்தை ஒளிபெறச் செய்து அன்போடு பூசை செய்தான்.

தெருக்களில் முத்து, பவளம் முதலியவற்றாலான தோரணங்களைக் கட்டி அழகுபடுத்தினான். நாட்டைப் பாதுகாப்பவனாகிய மன்னவன் நகரத்தின் கோட்டை மதில், நகரத்தருகில் அமைந்த பேட்டைப்பகுதி, வீடுகள் நிறைந்த தெருக்கள் ஆகிய எல்லா இடங்களிலும் நறுமணப் பொருள்களைத் தூவி நறுணமூட்டினான்.

விரை - மணம். தரளம் - முத்து. மணி - இரத்தினம். மரகதம் - பச்சைமணி, நவரத்தினங்களில் ஒன்று. மறையவர் - அந்தணர். துரைகள் - மேன்மக்கள். மதிவல்லபுருஷர் - அறிவு நுட்பமுடையோர். பழமை - பழமைப் பண்பாடுகள். அருசித்த - இறைவனுக்கு அருச்சனைசெய்த. இறை - மன்னன். சொர்ணம் - பொன். துந்துமி - பேரிகை. மாசு - குற்றம். பொன்பூச்சு - பொன்முலாம் பூசுதல். பிரகாசம் - ஒளி. சமைந்த - செய்ப்பட்ட. தோரணம் - அலங்கரிக்கும் மாலை. கொத்தளம் - மதில். பேட்டை - நகருக்கருகிலுள்ள சந்தை கூடுமிடம். வசந்தம் - நறுமணம். மீட்டி - இரட்சிப்போன்;பாதுகாப்போன்.

சுவடிச்சொல் - 1. யன்னேரம் 2. சொற்னதானமும். 3. யீசராலையம் மதிகள் 4. னாலும் பிறகாசமாய். 5. பன்றினான் 6. செப்பவளத் 7. தோறனம். 8. எண்ணை 9. ஆட்டிவித்தனன்னாட்டில்.

19. The jubilant king gave away precious gems
To learned pundits
Each according to his merit.
Sugar sanctified in formal worship
Was distributed to righteous men,
Uncrowned kings, wise poets
And sagacious elders
Good at interpreting and explaining lore.
Gold too was given
After ceremonial worship with fruits and milk
Against the booming of *tuntupi.*
The streets were adorned
With decorative festoons
Of coral and pearl.
Substances emitting sweet smell
Were sprinkled on fortress walls,
Suburbs of the city
And streets teeming with tenements
Under the order of the King, the protector of the land.

20. *(பஞ்சகம்மாளரை அழைத்தல்)* *ஏகதாளம்*

ஈதுசெய் தரசர்கு [1]லாதிபன் அங்குள
தூதரை யழையெனவப் போதுரை செய்குவான்
கேளரை [2]நாழியிவ் வேளையில் வீரபஞ்
சாளரை யழையெனத் தூதருக் குரைத்தான்
[3]அரசர் மொழியஅவர் பிரியமுட னேமாதர்
புரியவுரை தூதுவரை விரைவினிற் [4]கொணர்ந்தார்.

இறைபூசை, தானதருமங்கள், நகரலங்காரம் ஆகியவற்றையெல்லாம் முடித்த மன்னவன், தூதுவரை அழைத்துத் திறமைமிக்க பஞ்சகம்மாளர்களாகிய கன்னார்,

கொல்லர், சிற்பர், தச்சர், தட்டார் ஆகியவர்களை அரைநாழிகைக்குள் அழைத்துவாருங்கள் என ஆணையிட்டான். அரசருடைய விருப்பத்தை மன்னனின் தேவியும் பிற மகளிரும் ஏற்றுக்கொண்டார்கள். தூதுவர்கள் சென்று பஞ்சகம்மாளரை அழைத்துவந்தனர்.

குல அதிபன் - குலாதிபன்; அதிபன் - தலைவன், கேள் - கேளுங்கள். வீரபஞ்சாளர் - திறமைமிக்க பஞ்சகம்மாளர்.

சுவடிச்சொல் - 1. லாதிபநங்குள 2. னாழி 3. அரசன் 4. கொணந்தார்.

20. After offering prayers to Gods
Philanthropic deeds and beautifying the city,
King ordered his men to fetch
The five proverbial craftsmen.
With the assent of the Queen and the public,
The messengers lost no time
In executing the master's orders.

21. *(நவரத்தினத் தொட்டில் செய்தல்)* **சம்பை**

ஆய்ந்தபுகழ் பூண்டிடு நரேந்திர னுரைக்க வயல்
மாய்ந்தர்புரி யோர்கள் தங்கள் மனந்தனிலே மகிழ்ந்து
தங்களுடை கைத்தொழிலுஞ் சாதுரிய மேதுண்டோ
அங்கவைகள் பத்து[1]மாற்றுத் தங்கம்பொன் னாலே
முட்டநவ ரத்தினமணி யிட்டழுத்திய புதுமைத்
தொட்டிலொன்று கொண்டுவந்து துரைமுன்னே வைத்தார்

(குழந்தையைத் தொட்டிலிலிடுதல்)

பட்டுபட் டாவளியும் பலபூஷ ணங்களுஞ்
சட்டைமுத லானவர்க்குத் தந்தனுப்பி னானே
அனுப்பினபின் மறையோர்கள் அன்புடன்தா னழைத்துத்
தனிச்சுப நாள்தானும் எனக்குரையும் என்றார்
மறையவனும் நாள்மொழிய மகிழ்ந்துசிறு பாலகனை
இறையவனுந் தொட்டில்மிசை [2]ஏற்றுவித் தனனே.

மன்னர்களால் பெரிதும் பாராட்டப்பெற்ற பெருமைக்குரியவனாகிய இராசநரேந்திரன் கட்டளையை அறிந்த வீரபஞ்சாளராகிய தொழில் வல்லுநர்கள் மனமகிழ்ச்சியடைந்தார்கள். தங்கள் தங்கள் தொழிலில் என்னென்னவகைத் திறமைகளெல்லாம் தங்களுக்குத் தெரியுமோ அவற்றையெல்லாம் பயன்படுத்தினார்கள். மாற்றுக்குறையாத பத்து மாற்றுத் தங்கத்தைத் தேர்ந்தெடுத்து அதில் முழுக்க முழுக்க நவரத்தினங்களாகிய மணிகளைப் பதித்துப் புதுமையான தொட்டில் ஒன்றை உருவாக்கிக் கொண்டு வந்து மன்னன் முன்னே வைத்தார்கள்.

மன்னவனும் பட்டாடையும், பட்டு உருமாலையாகிய மேலாடையும், பலவகை ஆபரணங்களும், சட்டை முதலான துணிமணிகளும் அவர்களுக்குக் கொடுத்து அனுப்பி வைத்தான். பிறகு வேதம் உணர்ந்த அந்தணர்களை அழைத்து மங்களநாள் ஒன்றைத் தேர்ந்து கூறுமாறு பணித்தான்.

அப்படியே அந்தணன் கூறிய நன்னாளிலே அரசன் தன் குழந்தையைத் தொட்டிலில் கிடத்தி மகிழ்ந்தான்.

புகழ்பூண்ட - புகழ்பெற்ற. சாதுர்யம் - திறமை. மாற்று - பொன்னின் தரம். முட்ட - முழுமையாக. நவரத்தினம் - கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வைடூரியம் என்னும் ஒன்பது மணிகள். இட்டு அழுத்திய - பதித்த. துரை - சான்றோன், மன்னன். பட்டாவளி - பட்டுமேலாடை. பூஷணம் - நகை. சுபநாள் - மங்களநாள்; நல்லநாள். ஏற்றுவித்தல் - ஏறச்செய்தல்; கிடத்துதல்.

சுவடிச்சொல் - 1. மாத்து 2. ஏத்துவித்தனனே.

21. The craftsmen were overjoyed
To obey the summons of King Rājanarēntirā
Whose stock with the common folk was high.
They displayed all their ingenuity
In carrying out the order of the king
Carved a cradle in pure gold
Studded with nine gems of unquestioned merit
And formally presented it to him.
The king gifted artisans with silken robes
Along with laced upper cloth
Besides jewels and costly apparel.
He commissioned the learned brahmins
To pick an auspicious day

When he put the child in the cradle
Amidst joy and festivity.

22. *(சாரங்கதரனெனப் பெயர் சூட்டுதல்)* **திபதை**

ஊரெங்கும் [1]மைந்தனை உளங்களித் துரைக்க
சாரங்க தரனெனத் தான்பெய ரிட்டுப்
புரவல நரேந்திரன் புசமது விம்மிப்
பரிமள சுகந்தகெம் பரிமள வாடை
வழங்கிய கொலுசபா மண்டபந் தனிலே
தொழும்படை யுக்கிரம துரைமகள் சூழ
[2]அஷ்டஐசு வரியசா மார்த்தியா பராக்கு
துஷ்டநிக் கிரசிஷ்ட சுமங்களா பராக்கு
என்னவே கட்டியம் எதிர் நின்று படிக்க
மன்னனா தனமிசை மகிழ்ந்திருந் தானே.

சான்றவர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் புரவலனாகிய இராசநரேந்திரன் தன் மகனுக்குச் சாரங்கதரன் என்னும் பெயரைச் சூட்டினான். நாட்டு மக்களெல்லாம் மகிழ்ந்து சாரங்கதரன் என்ற பெயரைக் கூறிப் பாராட்டினார்கள்.

மன்னன் மகிழ்ச்சியால் தம் தோள்கள் பூரிக்க, மிக உயர்ந்த மணப்பொருள்களின் நறுமணம் அரசவை முழுவதும் வீசுமாறு அரசவை மண்டபத்தை அடைந்தான். அரசவையை அணிசெய்யும் அமைச்சர், புலவர், படைத்தலைவர் முதலான பரிவாரங்கள் தொழுது நிற்க, வீரமிக்க சான்றோரின் மகளாகிய அரசமாதேவியுடன் மண்டபத்தினுள்ளே சென்றபோது, எண்வகைச் செல்வங்களுக்கும் தலைவா! பராக்கு! அனைத்துத் திறமை பெற்றவா! பராக்கு! தீயோரை அழிப்பவா! பராக்கு! தெய்வத்தொண்டர்களைக் காப்பவா! பராக்கு! என்றெல்லாம் புகழ் கூறுவோர் எதிர் நின்று கூறி வாழ்த்தச் சென்று அரசனது இருக்கையாகிய ஆசனத்தில் அமர்ந்தான்.

ஊர் - ஊர்மக்கள், புரவலன் - கற்றோரைப் பாராட்டிக் காப்போன். புசம் - புயம், தோள், விம்முதல் - பூரித்துப் பருத்தல். பரிமளம் - நறுமணம். சுகந்தம் - நறுமணப் பொருள். வாடை - மணம். கொலு சபா மண்டபம் - அவையினருடன் உல்லாசமாக அரசன் வீற்றிருக்கும் மண்டபம். தொழும் படை - வணங்கிவாழ்த்து கூறும் அவையோர். யுக்கிரமதுரை - வீரமிக்க சான்றோர். அஷ்ட ஐஸ்வரியம் - அரசு, மக்கள், சுற்றம், பொன், மணி, நெல் வாகனம், அடிமை என்னும் எண்வகைச் செல்வம். பராக்கு -

நோக்கு, உஷார். துஷ்டர் - தீயோர் - நிக்கிரகம் - அழிவு. சிஷ்டர் - தொண்டர். கட்டியம் - புகழ்ந்துபேசுதல். ஆதனம் - ஆசனம், இருக்கை. மிசை - மேலே.

சுவடிச்சொல் - 1. மய்ந்தனை 2. அஷ்ட்டஅயிசுவரிய.

வசனம் - ராசநரேந்திரன் பூசரர் வாழ்த்த நெஞ்சினில் [1]மகிழ்ச்சியை நினைந்து கொண்டிருக்க வஞ்சி [2]ரத்தினாங்கி மைந்தனைக் கொஞ்சுவாள். (9)

சுவடிச்சொல் - 1. மகுஷியை 2. றத்தினாங்கிமந்தனைக்

22. King Rājanarēntirā, the patron of the righteous
Named his son Cāraṅkataraṉ.
The common people in great glee
Greeted the name and repeated it.
With shoulders swelling in pride,
Wafting the sweet smell of perfumes
Rājanarēntirā stepped into the court
With his Queen of noble descent.
Officials in attendance, minister,
Court poet and Chief of Army
Stood paying obeisance
While professional courtiers hailed him
Lord of eight types of prosperity
Enlightened leader, destroyer of evil
Protector of devout and so on
King majestically sat on the throne.

23. *(குழந்தைக்குக் காப்பிடுதல்)* சம்பை

சிவன்மகிமை கண்டுமனை யவனினிது செய்யுமொரு
தவமகிமை யால்வந்து [1]தரிக்குங்குலக் கொழுந்தே
என்றுதான் கொஞ்சியிரு வண்ணமுலைப் பாலூட்டிக்
கண்ணோடு கண்ணணைத்துக் காப்பிடுவள் [2]நுதலில்

எங்கள் தலைவனாகிய மன்னவன் சிவபெருமானின் பெருமைகளை உணர்ந்து அவனைக் குறித்துச் செய்த தவத்தின் பயனாய் எங்களுக்கு மகனாக வந்து பிறந்த எங்கள் குலத்தின் முதல்வனாய்த் தோன்றிய செல்வமே என்று கூறிக் கொஞ்சிய இரத்தினாங்கி, குழந்தைக்குப் பாலூட்டிச் சீராட்டி, முகத்தோடு முகம் வைத்து அணைத்து நெற்றியில் பொட்டிட்டு அலங்கரித்தாள்.

மனையவன் - தலைவன், கணவன், தரிக்கும் - தங்கும். குல்க்கொழுந்து - குலத்துக்குமுதலாய்ப் பிறந்த பிள்ளை. காப்பிடுதல் - திருநீறு அணிதல். பொட்டு இடுதல். நுதல் - நெற்றி.

சுவடிச்சொல் - 1. தறிக்கும் 2. னுதலில்.

வசனம் - மைந்தனைத் தொட்டிலிலே [1]வளர்த்தி எந்தடவு தாலாட்டுவாள். (10)

சுவடிச்சொல் - 1. வளத்தி

23. 'Pleased with our austerities and penance
Lord Civā blessed us with you,
The first male issue in the family
Verily, a darling to be proud of!'
So saying queen Rattiṉāṅki caressed the child,
Fed it with milk, hugged it to her face
And brightened its forehead with holy dot.

24. *(தாலாட்டிச் சீராட்டுதல்)*

குறளடித்தரு

[1]அமுதே குலவரசே ஆரணங்கே எந்தன் பிள்ளாய்
தமியே தவப்பயனே சாரங்க தரனே கண்வளரீர்!
தேனே விழிவளரீர் - எங்கள்
செல்வமே விழிவளரீர்
கோனே விழிவளரீர் - சிறு
[2]குன்றே விழிவளரீர்
தூங்கா ஒளிவிளக்கே நறுஞ்சுவையே
பிள்ளையில்லா [3]சலிப்பாற் றிடவந்த
சாரங்க தரனே விழிவளரீர்!
கண்ணே விழிவளரீர் கருங்குலமே விழிவளரீர்!

குன்றே [2]விழிவளரீர் - இளங்
கோவே விழிவளரீர்.

தேவாமிர்தம் போன்றவனே! எங்கள் குலத்தலைவனே! மிகுந்த அழகு வாய்ந்தவனே! என்மகனே! ஒப்பில்லாதவனே! தவத்தின் பயனாய்த் தோன்றியவனே! சாரங்கதரனே! கண்வளராய்! தேன்போன்றவனே! எங்கள் செல்வமே! தலைவனே! மலை போனறவனே! என்றும் ஒளி குன்றாத விளக்கு போன்றவனே! இனிமை வாய்ந்தவனே! பிள்ளையில்லாத துன்பத்தைப் போக்க வந்த சாரங்கதரனே! கண்வளராய்! கண்போன்றவனே! பெருமை மிக்க குலத்தோன்றலே! சிறு குன்றமாக விளங்குபவனே! இளவரசே! நீ கண்வளராய்!

அமுதம் - தேவாமிழ்தம். ஆரணங்கு - அழகு வாய்ந்தவன். தமியன் - ஒப்பில்லாதவன். தேனே! செல்வமே! குன்றே! போல்வன உருவகங்கள். தூங்கா விளக்கு - எப்போதும் ஒளிவிடும் விளக்கு. நறுஞ்சுவை - மணமும் சுவையும் உடையது. சலிப்பு - வருத்தம். ஆற்றிட - ஆற்ற - தணிக்க, தீர்க்க. விழி வளர்தல் - கண் உறங்குதல்; தூங்குதல். கருங்குலம் - பெருமைமிக்ககுலம். குன்று - சிறுமலை. கோ - அரசன்.

சுவடிச்சொல் - 1. அமுற்தே 2. குண்ணே 3. சலிப்பாத்திட

24. You are like ambrosia pure
The leader of my clan!
Most handsome one
My darling son!
Born after severe austerities
Cāraṅkatara, my honey
Dear, dear one!
As strong as the mountain,
You are the light that seldom fades
The embodiment of sweetness.
Cāraṅkatara, a saviour of me
From the abyss of barrenness,
You are verily the apple of my eye
My pride, my pride!
Little hillock, hard as stone
May you prosper, young prince!

25. *(சித்திராங்கியின் உள்ளக்குமுறல்)*

எனவே ரத்தினாங்கிதன் மனத்தில் மகிழ்ந்து ***ஏகதாளம்***
தனகித் தனகிக்கொண்டு தானிருந் தனளே
பாங்குள்ள [1]பாவைசித்தி ராங்கியித னையறிந்து
ஏங்கி யழுதங்கனே தூங்கலு மானாள்
தெய்வமும் அவள்பங்கில் எய்தி யிருக்கயினி
செய்வ [2]தென்னவென்று வைதனள் மிகவே
பிள்ளை யுண்டாகினாள் பிரியாளென்ன வேமுன்பு
துள்ளி விழுந்தழுது துயரமு மானாள்
பாவிநிர் மூடியவள் பாலனைப் பார்த்து
[3]வையுந் துற்வசனந் தனைச்சொல்ல வொண்ணாதே.

குழந்தையைப் பாராட்டித் தாலாட்டிய இரத்தினாங்கி உள்ளம் பூரிக்க, மகிழ்ந்திருந்தாள். அருகில் இருந்த சித்திராங்கி இரத்தினாங்கியின் மகிழ்ச்சியைக் கண்டு மனம் வருந்தி அழுது சோர்வடைந்து தூங்கிப்போனாள். தெய்வம் அவளுக்கே துணையாக இருக்கிறது. நாம் என்ன செய்யமுடியும் என்று இரத்தினாங்கியைப் பழித்துப் பேசினாள். பிள்ளை பிறந்துவிட்டது; இனி மன்னனைவிட்டுப் பிரியமாட்டாள் என்றெல்லாம் கூறிக் கூறி அழுது துன்பமடைந்தாள். அறிவற்றவளும், பாவச்செயல்களை உடையவளுமாகிய சித்திராங்கி, குழந்தையைப் பார்த்துக் கூறும் வசைமொழிகள் கொஞ்மல்ல, அவை வெளியில் சொல்லவும் முடியாதவை.

தனகித்தனகி - மகிழ்ந்து, பூரித்து. பாங்கு - அருகில். ஏங்குதல் - மனம் வருந்துதல். அங்கன் - அங்கே. பங்கு - சார்பு. வைதல் - திட்டுதல். நிர்மூடி - அறிவற்றவள். துற்வசனம் - தீயசொல்.

சுவடிச்சொல் - 1. பாவைசித்திறாங்கி 2. தென்னா 3. வைய்யுந்.

வசனம் - மாபாவி சித்திராங்கி மனத்தில் உருக வஞ்சி ரத்தினாங்கி மனத்தில் மகிழ்ந்து மழலையைக் கொஞ்சிக் கொஞ்சியே பேசி விஞ்சு புதல்வனை அஞ்சுவயதாக்கினாள்.

25. Rattiṉāṅki who sang the lullaby
Was in a state of supreme bliss
Not so co-wife Cittirāṅki
Who was green with jealousy,
Who fumed and fretted

Till entering slumber's sweet repose.
'The Gods are partisan,
What can I do?'
Lamented Cittirāṅki,
In venom-soaked words
Of despair and hopelessness.
What a pity,
The child is born safe
She has also escaped the ordeal of child birth
And will not shed her mortal coil
Any time in the near future
Chuckled Cittirāṅki in the grip of jealously,
Great grief crushing her.
Also, cruel and callous was Cittirāṅki
And given to vile sinning.
The foul words that she used
To denigrate the little one
Were too crude to be detailed.

26. *(சாரங்கதரனுக்குக் கல்வி புகட்டுதல்)* **திபதை**

எழுத்துடன் [1]சொற்பொருள் யாயினி யெவையும்
வழிபடத் தெரிந்த வாத்திமை யோனை
அழைத்துவந் தவர்மன மநேகமாய் மகிழச்
செழித்தவர் கைகண்ட செம்பொன்னா லமைத்து
மாடையுங் கெட்டி வராகனுஞ் சேர்த்து
செம்பட் டாடையுஞ் சௌபாக்கியமுங் கொடுத்து
அவரிடத் தினிற்கல்வி யானது கற்கத்
தவமத னால்வந்த சாரங்க தரனை
ஓதவைத் தானிந்த வுலகெலாந் துதிக்க
நீதிமான் நரேந்திர நிருபமன் னவனும்
சந்தேக மில்லாமல் [2]சம்பிரமத் துடனே
இக்கதிர் போகமா [3]யினிதிருந் தானே.

எழுத்து, சொல், பொருள் ஆகிய இலக்கணங்களிலும், பிறவகையான இலக்கிய நூல்களிலும் சிறந்த ஞானமும் அனுபவமும் ஆர்வமும் உடையவரான ஆசிரியரை வரவழைத்தான் மன்னன். அவர் மனம் மகிழுமாறு கைநிறைந்த பொன்னையும் பொருளையும் கொடுத்தான். பலவராகன் பொன்னோடு சிறந்த பட்டாடையும் பலவகைச் செல்வங்களுமாக அநேக வசதிகளையும் செய்து கொடுத்துத் தவமிருந்து பெற்ற சாரங்கதரனுக்குக் கல்வி கற்பிக்கச் செய்தான். நீதியில் தவறாத நரேந்திரன் நிலவுலகமெல்லாம் போற்றுமாறு தன் மகனைக் கல்வி கற்கச் செய்ததன் படியே சாரங்கதரனும் மிகவிரைவாகவும் ஆர்வமாகவும் ஐயமறக் கற்றுத் தெளிந்து வந்தான்.

எழுத்து, சொல், பொருள் எனபன தமிழ் இலக்கண முறைகள், வாத்திமை - ஆசிரியர். மாடை - அரைவராகன் அளவுள்ள பொன். வராகன் - பொற்காசு. 3½ ரூபாய் மதிப்பு கொண்ட ஒரு பழைய தங்க நாணயம். சௌபாக்கியம் - பலவகைச் செல்வம். ஓதவைத்தல் - கல்வி கற்கச் செய்தல். நிருபன் - மன்னன். சம்பிரம் - ஆர்வம், மகிழ்ச்சி, கதிர்போகம் - பயிர்விளைவு.

சுவடிச்சொல் - 1. சொற்ப்பொருள் 2. சம்பிறமத்துட 3. யிநிதிருந்தானே.

வசனம் - [1]இப்படி சாரங்கதரன் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளருகின்ற விச்சித்திர மெப்படி யென்றால். (12)

சுவடிச்சொல் - 1. யிப்படி சாரங்க தரன்னாளொரு வன்றமும்.

26. The King summoned a preceptor
With command over thought, word and speech
And proficient in literature;
Liberally gave him gold and gifts
Silken robes and creature comforts
Made him responsible
For making Cāraṅkataraṉ knowledgeable,
Child born out of penance and austerities.
The magnanimous monarch, noted for fairplay
Offered his progeny such wide scope to study
That it became the talk of the world.
The son too mastered the subjects
With unusual zeal and dexterity.

Prose: Let us see how Cāraṅkataraṉ grew from strength to strength.

27. (சாரங்கதரனின் குதிரை ஏற்றம்) சம்பை

ஒருவயது தனில்திரு வெனஒளி சாரங்க
தரன்மெள்ளத் தவழ்ந்து
தத்தடி யிட்டுத் தவழ்வது மானான்
தத்தடி யிட்டே மெத்ததாய் முன்னே
மழலைமொழி கொத்தறை
மத்தறையாகக் கூறுவது மானான்
வயது பதினாறு தனில்மத னெனும்
[1]ரதியாசை செய்யு மந்திரி
புத்திர னோடு தேசிமே லேறி
வீதிதனில் வையாளி விட்டுவிளை யாடல்கண்டு
ஓதிமென் னடமாதர் ஒருவருக் கொருவர்.

செல்வமகனாகிய சாரங்கதரன் ஒருவயதில் மெள்ளத் தவழ்ந்து செல்லுவதும், தத்தித் தத்தி அடியெடுத்து வைப்பதும், தத்தித் தாய் முன்னே செல்லுவதும், தாயிடம் அரைகுறையான மழலைச் சொற்களைக் கூறுவதுமாக வளர்ந்து வந்தான்.

இவ்வாறு வளர்ந்து முறையாகக் கல்வி கற்றுப் (கல்விமுறை முன் பாடலில் கூறப்பட்டுள்ளது; கருத்துக்கள் முறைமாறி அமைந்துள்ளன. முறையான வைப்பு முறை அமையவில்லை. ஏடு எழுதியோர் பிழையாகலாம்.) பதினாறு வயதை அடைந்தான். இந்தப் பருவத்தில் இரதிதேவி விரும்பிய கணவனாகிய மன்மதனோ என்னும் படியாக விளங்கினான். இந்தவயதில் அமைச்சன் மகன் சுகந்தன் என்பவனோடு குதிரைமேலேறிக் கொண்டு தெருக்களில் குதிரையை மிகவேகமாய்ச் செலுத்தி விளையாடிவந்தான். நீண்ட கூந்தலையும் மென்மையான நடையையும் உடைய மகளிர் சாரங்கதரனின் குதிரை யோட்டத்தைக் கண்டார்கள்.

தத்தடியிடுதல் - தத்தித்தத்தி அடியெடுத்து வைத்து நடத்தல். தவழ்தல் - நகருதல். மழலைமொழி - அரைகுறைச் சொல், மென்மையாகக் கூறுதல். கொத்தறைமத்தறை - அரைகுறையாகக் குளறிப்பேசுதல். மதன் - மன்மதன். ரதி - இரதி; மன்மதன் தேவி. தேசி - குதிரை. வையாளி - வேகமாக ஓடும் ஓட்டம்; குதிரைப் பந்தயம். ஓதி - மகளிர் கூந்தல். மென்னடமாதர் - மென்மையான நடையையுடைய மகளிர்; ஓதிமநடை மாதர் எனக் கொண்டு அன்னநடை மகளிர் என்பது சிறப்பு.

சுவடிச்சொல் - 1. றதியாசை.

வசனம் - இப்படி, சாரங்கதரனுஞ் [1] சுமந்தனென்னப்பட்ட மந்திரி குமாரனும் [2]இரண்டுபேருங் கூடிக் கேளி விலாசமாய்க் குதிரையின் மேலே ஏறிக் கொண்டு

தெருவிலே [3]வருகிறபோது சுன்னிமார்கள் ஏதென்று [4]சொல்லு கிறார்களோ வென்றால். (13)

சுவடிச்சொல் - 1. சுகந்தனென்றப்பட்ட 2. ரெண்டு 3. வாறபோது 4. சொல்லுறார்களோ.

27. Sweet child Cāraṅkataraṉ
Crawled with grace at the age of one,
Toddled gently towards the mother,
Indulged in lissome baby-talk
Thus grew he from strength to strength
And attained the age of sixteen.
So ravishingly handsome was he,
Like Cupid whom Rati adored.
He rode on horseback at breakneck speed
Along the streets of the city
With his boon companion Cumantaṉ,
The son of the minister.
Tender-footed women
With long and lovely locks
Watched him with wonder
Manipulating the horse.

Prose: How did young girls react on seeing Cāraṅkataraṉ and Cumantaṉ riding merrily?

28. *(சாரங்கதரனைக் கண்ட மகளிர்)* **ஏகதாளம்**

[1]தேனொழு கியவரை யானழகி யன்மதன்
தேவழ கியன்வெகு சாகச மென்பார்
காமன் விசிக்கவரக் கண்டு மனமகிழ்ந்து
பூமன் துணையுண்டினி பொருதுவோ மென்பார்
முத்திக் கொடுத்துவளர் குத்து முறையிற்றன்கை
பத்து [2]விரல்நகமும் பதியானோ வென்பார்

தூய நிபுணன்முக மாய மந்திரத்திலொரு
நாய கன்மேல்மனம் நாடுமோ வென்பார்.

தேனடைகள் நிறைந்து தேன்வடியும் அழகிய மலைநாட்டுத் தலைவன்; சிறந்த அழகுடையவன்; மன்மதனைப் போன்றவன்; தெய்வத்தைப் போன்றவன்; மிகுந்த சமர்த்தன். இத்தகு காமன் தெருவில் வரக்கண்ட மகளிர் மகிழ்ச்சியடைந்தார்கள். மன்மதன் துணைக்கொண்டு போரிடுவோம் என்று பேசத் தொடங்கினார்கள். அவன் என்னை அணைக்கமாட்டானோ என்று அங்கலாய்த்தனர். தூய்மையும் அழகும் வல்லமையும் மிக்க இவன்து முகத்தில் ஏதோ ஒரு மந்திர சக்தி இருக்கிறது. இல்லையென்றால் எங்கள் மனம் இவனை விரும்புமோ என்று எண்ணினர்.

வரை - மலை. தே - தெய்வம். சர்கசம் - வல்லமை, தந்திரம். விசி - தெரு. பூமன் - பிரமன். பொருதுதல் - போரிடுதல். முத்தி - முத்தம். நிபுணன் - வல்லவன். முகமாய மந்திரம் - முகமாகிய மந்திர சக்தி. நாயகன் - தலைவன். நாடுதல் - விரும்புதல்.

சுவடிச்சொல் - 1. தேனொழிகிய 2. விறல்நிகழும்.

வசனம் - பின்னையும் ஏதென்று மோகிப் பார்களென்றால்

28. A born leader of the hilly country
He is like rich honey comb
Dripping delicious honey.
Ravishingly handsome
Like lord of love,
This strong resourceful youth
Has the look of the Gods.
The sight of him in the street
A replica of Lord Cupid
Sends thrill through onlooker's frame
Who could not resist
The magic in his eye
Which casts a spell on all.
Will not this stalwart
Come forward to hug me tight
Pined away many a heart.

Prose: Let us examine more deeply this infatuation.

29. *(மகளிர் ஆசை)* [1]**அர்த்தசந்திரிகை**

வலியப்போ யருகினில்
வார்த்தைசொல் வோமோ
சொலில்முத்து மோகனத்
துரைபின்செல் வோமோ
ஆசை யானமவர்க் காசையல் லோமோ
ஆசை தீரஅவர் [2]அருகில்நில் லோமோ
காதல் தீரவேகண் கணையிலெய் வோமோ
போதும் பொருந்தொரு புதுமைசொல் வோமோ.

நாமே வலியசென்று அருகில் நின்று பேச்சு கொடுக்கலாமா? முத்து முத்தான பேச்சையும் மதிமயங்கும் சிறந்த அழகையும் உடைய அந்தத் தலைவர் பின்னாலேயே போகலாமா? அவரிடம் நாம் ஆசை கொண்டது போல அவருக்கு நாம் ஆசையுடையவளாகமாட்டோமா? நம் ஆசை தீர அவர் அருகில் சென்று நிற்கலாமா? நம் காதல் தீர கண் பார்வையால் அவருக்குக் காதலை உண்டாக்கலாமா? அவர் மனத்திற்குப் பொருந்துமாறு ஏதாவது ஒரு புதிய செய்தியைச் சொல்லலாமா?

வலிய - தானாக. மோகனம் - மயக்கம். துரை - தலைவன். கண்கணை பார்வையாகிய அமபு எய்தல் - செலுத்துதல். புதுமை - புதியசெய்தி.

சுவடிச்சொல் - 1. அற்த்தசெந்திரிகை 2. அரிகில்.

29. Shall we voluntarily seek his company
Enter into scintillating talk?
Shall we follow this mighty leader
Whose words are sweet pearls
And looks divine?
Will he reciprocate the deep passion
That we bear him?
Shall we enjoy his proximity
Or with coquettish looks
Stimulate lust in him?
Is it worth while
Sharing with him

Some piece of news
That will suit his temperament?

30. *(நரேந்திரனின் மோகம்)* **சம்பை**

என்றுமட வார்க்குமையல் ஏராள மாயுருக
அன்றுசா ரங்கதரன் அரண்மனையுள் புகுந்தான்.
அரண்மனையில் புகுந்துசா [1]ரங்கதரன் இனிதிருக்க
துரைநரேந் திரராசன் சுமுகன் அரிச்சந்திரன்
சரசுவதி யிவள்பாங்கி உரைசெய்வதி லுயர்தாங்கி
[2]விரகமையல் சித்திராங்கி மீதுமைய லோங்கி.

சாரங்கதரன் மீது காதல் கொண்ட பெண்கள் பலரும் இவ்வாறு அவரவர்களே தங்களுக்குள் பேசிக் கொண்டு மயக்கத்தால் உள்ளம் உருகி நிற்க, சாரங்கதரன் குதிரையை விட்டிறங்கி அரண்மனைக்குள் சென்று மகிழ்ந்திருந்தான்.

உண்மையேபேசும் அரிச்சந்திரனாகவும், தாராளமான மனப்பான்மையுடைய சான்றோனாகவும் விளங்கிய இராசநரேந்திரன், பேச்சுவன்மையில் கலைமகளாக விளங்கிக் காமதாபத்தை உண்டாக்கும் சித்திராங்கியின் மீது மிகவும் மயக்கம் கொண்டான்.

மடவார் - மகளிர், சுமுகன் - நன்முகன், தாராளமனப்பான்மையுடையவன். உரை செய்வதில் - பேச்சுவன்மையில். தாங்கி - தாங்கியவள்; கொண்டவள். விரிகம் - மோகம். மையல் - மயக்கம்.

சுவடிச்சொல் - 1. சாரங்கதரநிநிதிருக்க 2. விரகமயல்

வசனம் - ஆசை [1]வளர்ந்து கொற்றவர் நடக்கை [2]முற்றவும் மறந்து அல்லும் பகலும் [3]அரிவை சித்திராங்கியைப் புல்கிக் கொண்டிருந்த புதுமையென் சொல்வேன். (15)

சுவடிச்சொல் - 1. வளந்து கொத்தவர் 2 முத்தவும் 3. அருவை.

30. So soliloquised the lusty lasses
Bosoms filled with emotion,
While their hero Caraṅkataran
Dismounted from the horse
Made way to his palace
At heart, a merry man ever!

Meanwhile, Rājanarēntira,
In rectitude Hariccantira
With large and liberal views
The abode of righteousness
Fell a sad victim
To the seductive spells of Cittirāṅki
Whose powers of speech
Equalled the Goddess of learning!

Prose: At the height of his mad passion for Cittirāṅki, forgetting his kingly duties, how Rājanarēntirā conducted himself shall be my next exposition.

31. *(நரேந்திரனின் காதல் மொழி)* **திபதை**

என்மனத் தினிலாசைக் கேற்றயென் கிளியே
மன்மத மோகன வாங்காரக் குயிலே
ஆணிப்பொன் னேயித [1]ழமுதமே பெண்கள்
மாணிக்க மேகெம்பு வச்சிர மேபச்சை
மரகத மேயிள [2]மாதுளந் துளிரே
விரகசஞ் சீவியே விளங்குமுன் முகந்தான்
சந்திர னோவலரித் தாமரை தானோ
இந்திர சாபமோ யிருபுரு வங்கள்
கெண்டையோ விழியெனக் [3]கிஞ்சித்தும் விடாத
தண்டமோ [4]நாசிதான் செண்பகப் பூவோ
பவளமோ யிதழ்கோவைப் பழமோசர்க் கரையோ
தவளமா கியவொளி தரளமோ கழுத்து
துங்கமோ தோளிரண்டுஞ் சுவையோயிளங் குரும்போ
தங்கமோ நவரத்தின சர்வா பரணமோ
தாமரை முகுளமோ சக்கிர வாளமோ
காமன்தன் மகுட மோகனநற் குடமோ
ஆனையின் கோடோசெவ் வலரியோபூச் செண்டோ
மானிணை யுந்தன் மார்பினில் தனங்கள்
ஆலிலை யோ[5]வயிறுஇள வஞ்சிக் கொடியோ

மாலையோ வல்குல் வாழையின் தண்டோ
தொடையுடை யழகொரு தோகைக்கு மில்லை
நடைகண்டே யன்னமும் [6]நாணியே ஒளிக்கும்
உன்னைவிட் டிருக்கநெஞ் சொன்றுமோ எனக்கு
என்னைவிட் டிருக்கநெஞ் சிசையுமோ வுனக்கு
மனத்தினில் நினைப்பதுன் வடிவமே யல்லால்
எனச்சொல்லிப் பின்னு மிசைப்பதா கினனே.

என் உள்ளத்து ஆசையைப் பூர்த்தி செய்யும் கிளியே! மன்மதன் உண்டாக்கும் மயக்கத்தைப் போக்கவல்ல பெருமிதமிக்கக் குயில் போன்றவளே! மாசற்ற பொன்னே! இதழில் ஊறும் அமிழ்தமே! மகளிருள் மாணிக்கமே! நவரத்தின மணிகளுள் ஒன்றாகிய கெம்பே! வயிரமே! பச்சைநிற மரகதமே! மாதுளஞ்செடியின் இளந்துளிரே! மோக நோயைப் போக்கும் மருந்தாகிய சஞ்சீவியே! உன்னுடைய அழகிய முகம் பூரணச் சந்திரனோ? தாமரை மலரோ? உன் இருபுருவங்களும் இந்திரவில்லோ? உன் விழிகள் கெண்டை மீன்களோ? அல்லது என்னைச் சிறிது நேரமும் விட்டுப் பிரியாத பற்றுக் கோடோ? உன் மூக்கு செண்பக மலரோ? இதழ் பவளமோ? கோவைப் பழமோ? சர்க்கரையோ? வெண்மையாக வீசும் ஒளிமுத்தின் ஒளியோ? (பல்லின் ஒளி) அல்லது சுழுத்தின் தூய ஒளியோ? தோள்கள் சுவைதரும் கரும்போ? உன்மார்பில், விளங்கும் இரண்டாகிய நகில்கள் தெங்கின் இளங்காயோ? தங்கக் கட்டியோ? நவரத்தினம் பதித்த ஆபரணக் கூட்டமோ? தாமரை மொட்டோ? சக்கிரவாள மலையோ? மன்மதனின் மகுடமோ? அழகிய தங்கக் குடமோ? யானைத் தந்தமோ? சிவந்த அலரிப்பூச் செண்டோ? வயிறு ஆலிலையோ? இடை இளமைவாய்ந்த வஞ்சிக்கொடியோ? அல்குல் மாலையோ? தொடை வாழைத்தண்டோ? உன் அழகு வேறு ஒரு பெண்ணுக்கும் இல்லை. மயிலின் அழகையும் விஞ்சியது உன் அழகு. உன் நடையைக் கண்டு அன்னப்பறவை நாணமடையும்; உன் எதிரில் வராது ஒளியும். உன்னை விட்டுத்தனித்திருக்க என் உள்ளத்திற்குத் துணிவு இல்லை. உன் நிலைமையும் அப்படிப்பட்டதே. உன் வடிவம் ஒன்று மட்டுமே என் மனத்தில் தங்கியுள்ளது என்று பலவாறு பேசத் தொடங்கினான் மன்னன்.

கிளியே! குயிலே! அமுதமே! மரகதமே! ....போல்வன உருவகமாகிய அண்மை விளிகள் மோகனம் - மயக்கம். ஆங்காரம் - கருவம். ஆணிப்பொன் - உயர்ந்த பொன்; ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என்னும நான்கு வகைகலில் மிக் உயர்ந்தது ஆடகம். இதுவே ஆணிப்பொன் எனப்பட்டது. இதழமுதம் என்றது உருவகம்; அமுதம் என்றது தேவியைக் குறித்தது; எனவே இது உருவகமாயிற்று. மாணிக்கம், கெம்பு, வச்சிரம் (வயிரம்), மரகதம் என்பன நவரத்தினங்களைச் சார்ந்தவை. விரகம் - காமநோய். சஞ்சீவி - உயிர்தரும் மூலிகை மருந்து. இந்திசாபம் - இந்திரவில், வானவில். கெண்டை -

கெண்டைமீன். கிஞ்சித்தும் - சிறிதும் - நாசி - மூக்கு. தவளம் - வெண்மை. தரளம் - முத்து. துங்கம் - தூய்மை. முகுளம் - மொட்டு, அரும்பு. சுவை - கருப்பஞ்சாறு, கரும்பு. குரும்பு - இளந்தேங்காய். சக்கிரவாளம் - சக்கிரவாளம் என்னும் ஒருமலை. மகுடம் - முடி. கோடு - கொம்பு, தந்தம். இணை - இரண்டாகிய. தனம் - ஸ்தனம், நகில். தோகை - பெண். தோகையுடைய மயில். அன்னம் - அன்னப்பறவை. நாணுதல் - வெட்கமடைதல். ஒன்றுதல் - பொருந்துதல், விரும்புதல். இசைதல் - விரும்புதல். பின்னும் இசைப்பது - மேலும் கூறுவது.

சுவடிச்சொல் - முழுமற்தமே 2. மாதளந் 3. கெஞ்சித்தும் 4. னாசிதான் 5. வயரிள 6. னாணியே.

31. Parrot, helping realize my wishes
Cuckoo relieving me of Cupid's magic spell
Pure, unalloyed gold, nectar flowing in flowers.
You are verily a precious stone
A glittering diamond, a green emerald
The tender leaf of the pomegranate plant
A palliative for passion's pains
Are you the glorious full moon
Or a lotus in bloom?
Are your curved eye brows
The bows of Intra, the God of Gods?
Are your eyes
Fish in disguise?
Shall I compare thee to the Champak flower
Lips to coral and sweet candy,
Bright denture to pearls?
Perhaps it is the brightness of your neck
That reflects in the teeth.
Your shoulders are verily sugarcanes
Breasts tender coconuts,
Perhaps they are bars of gold
Or jewels studded with nine gems,
Methinks they are the buds of lotus
Or the peaks of the Cakravāla mount.
They are the crowns of Cupid

The tusks of elephants,
Rounded vessels carved in gold.
Your belly is as narrow
As leaf of banyan tree
And waist bears resemblance
To tender creepers.
Your private parts
Are smooth like garlands,
Each thigh is a plantain trunk.
No other damsel is so sweet
You are more ravishing than peacock.
Your gait will put to shame
The proverbial swan.
I cannot stand separation from thee
The same should be your plight as well
There is no room for any one else
In my royal heart
So prattled the love-sick King.

32. *(மன்னனின் இன்ப நுகர்வு)* ஏகதாளம்

புத்தியில்லை யோஅடி பூவடி [1]நோமடி
மெத்தை யுறுத்துமடி மேல்விழு மென்பான்
ஆசையி னால்மத ராசனைப் போலசங்
கோசமில் லாமல்பன் னீர்வீசுவன் மகிழ்வான்
இங்கேநீ வாவென்று செங்கை பிடித்துமுத்தின்
கொங்கையின் மேல்நகக் [2]குறியது செய்வான்
கட்டி யணைத்துக் கொண்டு
நட்டனை யாய்[3]முதுகைத்
[4]தட்டி நகைத்தங்கே
சரசங்கள் புரிவான்.

தரையில் நிற்கிறாயே! உனக்குச் சிறிதும் அறிவில்லையா? மலர் போன்ற உன்னுடைய பாதங்கள் நோகாதோ? மெத்தையில் அமர்ந்தால் மெத்தை

உறுத்துமே! என்மேல் உட்கார் என்றெல்லாம் ஆசையோடு பேசிய மன்னன் சிறிதும் கூச்சப்படாமல் அவள் மீது பன்னீர் தெளித்து மன்மதனைப் போல மகிழ்ச்சியடைவான். இங்கே வா என்று கூறியபடியே சித்திராங்கியின் கையைப் பிடித்து இழுத்து, அணைத்தும், நகக்குறி செய்தும், சிறிதும் தயங்காமல் முதுகில் தட்டியும் மகிழ்ச்சி பொங்க இன்பமாய் விளையாடினான்.

பூவடி - மலர் போன்ற பாதம். நோம் - வலிக்கும். மதராசன் - மன்மதன். சங்கோசம் - கூச்சம், வெட்கம். நட்டணை - கடுமையாய். சரசம் - இன்பலீலை.

சுவடிச்சொல் - 1. னோமடி 2. குரியது 3. முதுவை 4. தட்டிதட்டி

வசனம் - பின்னையும் [1]மையல் வளர்ந்து படர்ந்து எழுந்து கொழுந்தோடி ஏது செய்தனன்.

(16)

சுவடிச்சொல் -1. மய்யல்.

32. Why do you stand on earth,
Are you downright indiscreet?
Will not your flower-like feet
Suffer extreme pain and misery?
If you choose to sit on the bed
Your tender skin would blister
Better sit on my lap
Prattled the love-sick King;
And sans any embarrassment
Sprinkled rose water on her limbs
Enjoying immensely the sport of love
Come here darling, he beckoned her,
Pulled her closely, hugged her tight
Left pleasurable imprints on her body,
Patted her back
His amorous acts were exciting indeed!.

Prose: Let us see what the king did when his passion became more intense.

33. *(நரேந்திரனின் பாராட்டு)* [1]*அர்த்தசந்திரிகை*

மயிரை வகுந்து மல்லிகை முடிப்பான்
உயிர்கள் பயங்களில் [2]உடம்பது பிடிப்பான்
[3]பூச்செண்டி னால்வீசிப் போடுவன் நகைப்பான்
அச்சின ளிவளல்லா வென்று திகைப்பான்
சித்தி ராங்கியைச் [4]சேர்ந்திட்டுப் பின்போய்
ரத்தினாங்கி மீதில்மனம் [5]நாடுமோ வென்பான்

சித்திராங்கியின் கூந்தலைக் கோதி முடித்து மல்லிகைமலரைச் சூட்டுவான். உள்ளம் மகிழுமாறு கை, கால்களைப் பிடித்து விடுவான். சிரித்தவாறே பூச்செண்டினை வீசி விளையாடுவான். அவள் சிறிதும் பயப்படவில்லையே யென்று ஆச்சரியப்படுவான். சித்திராங்கியை விட்டுச் சென்று இரத்தினாங்கியைப் பார்க்கவும் மனம் வருமோ என்று பாராட்டுவான்.

வகுந்து - வகிர்தல் - கோதுதல். அச்சினள் - அஞ்சினள்; பயந்தாள் (இல்லை). திகைத்தல் - ஆச்சரியமடைதல்

சுவடிச்சொல் - 1. அற்த்த செந்திரிகை 2. ஒடம்பது 3. பூச்செண்டுனால் 4. சேர்ந்திடுபின் 5. னாடுமோ.

வசனம் - [1]அண்டவொண்ணா மையல் எழுந்து கொண்டாடும் புருஷத்துக்கு வண்டாடும் குழலி வாய்திறந்தங் கேது சொல்வாள். (17)

சுவடிச்சொல் - 1. அண்டவொன்றாமய்யல்.

33. The King combed Cittirāṅki's locks
Tied them into a beautiful knot
Bedecked it with fragrant flowers
Massaged elegantly her hand and feet,
Threw bouquets on her with impish glee,
Wondered why she did not skirm,
Asked quite vociferously whether
His mind would choose to dwell on Rattiṉāṅki
In the presence of fairy Cittirāṅki.'

Prose: How did Cittirāṅki, the lovely-locked, react to the passionate prattle of the King?

34. *(சித்திராங்கி நமக்குள் மரியாதை வேண்டாம் எனல்)* **சம்பை**

குலமாதர்க் குபசாரம் கொள்வரோ அரசரே
[1]அயலல்லா புருஷருக்கு ஆகடிய மோதான்
வேசியர்க்குந் தொழும்பான தாசியர்க்கு முபசாரம்
பேசுவதும் பூசுவதும் பிரியம் சொல்வதுவும்
[2]இரவுபக லாயென்மேல் கனமோக மானாலும்
மனத்தினி லிராதோயிது வாயிரங்க மாமோ.

அரசே! நற்குடியில் பிறந்த கற்புடைய பெண்களுக்கு கணவன்மார் மரியாதை செய்வது தகுதியாகுமா? தாங்கள் அன்னியர் இல்லை. மணங்கொண்ட கணவராவீர். தாங்கள் இப்படி உபசார வார்த்தை பேசிப் புகழ்வது பரிகாசம் செய்வதாகும்.

உபசார வார்த்தைகள் பேசி, அழகாகப் புகழ்ந்து தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்துவது என்பது விலைமாதர்களிடத்திலும் அடிமைபோல் வாழும் கணிகையரிடத்திலும் செய்ய வேண்டிய ஒன்று. என்னிடம் ஏற்பட்ட மிகுந்த மோகத்தினால் இரவு பகலாக என்னை விட்டுப் பிரியாமல் இருந்தாலும், இந்த அன்பு மனத்தில் என்றுமே நிலைத்திருக்குமே! வாயுபசாரம் தேவையில்லையே!

குலமாதர் - நற்குடிபிறந்தோர், கற்புடையோர். உபசாரம் - மரியாதை. அயல் - அன்னியர், பிறர். ஆகடியம் - பரிகாசம். வேசி - விலைமாது. தொழும்பு - அடிமை. தாசி - கணிகை குலப்பெண். பூசுவது - அலங்கரிப்பது. கனமோகம் - மிகுந்த மயக்கம். வாயிரங்கம் - வாயுபசாரம்.

சுவடிச்சொல் - 1. யியலல்லா 2. யிரவி

வசனம் - எனச்சொல்லும் வார்த்தை மனத்தினி லமைத்து [1] மன்னவன் நரேந்திரன் மறுமொழிஏதுசொல்வான் (18)

சுவடிச்சொல் - 1. மன்னவனரேந்திரன்

34. Your Highness, does it become a husband
To shower excessive praise on chaste woman
Of noble lineage?
After all, you are not an alien,
But my loving husband.
Flattering beyond limits
Smacks of tomfoolery and scorn

Such sweet words of praise
Would suit only slaves and strumpets.
Out of great love and adoration
You keep inseparable company with me.
When your attachment is so deep
Are'nt honeyed words superfluous?

Prose: To these words, how did Narentira react?

35. *(மன்னனின் மகிழ்ச்சிமொழி)* **திரிபுடை**

வேசியருக் குபசாரம் வாசியுண்டோ
குலத்தில் கொண்ட - [1]பிராண
நேசிதனக் குபசாரஞ் சொல்லப் போன்
[2]ராசியல்லவோ
ஆல நேர்விழி வள்ளி [3]நாயகிகாலில்
வீழ்ந்தனன் [4]வேலனெனக் கதை
[5]நா லுபேர் சொல்லவறி
கிலாயோ [6]விளமானே.

உபசார வார்த்தைகளைப் பேசி மகிழ்ச்சிப்படுத்துவது என்பது விலை மகளிடத்தில் செய்ய வேண்டிய செயல். நற்குடியில் பிறந்து, மனைவியாக வாழக்கைப் பட்டவளை இவ்வாறு புகழ்வது நியாயமாகாது. அவள் உயிருக்குயிரானவள் ஆதலால் அன்பாக இருப்பதே இயல்பு என்றெல்லாம் பேசி நாணிநின்ற சித்திராங்கியை நோக்கி மன்னன் கூறுவது.

இளமைவாய்ந்த மான் போன்றவளே! நஞ்சை ஒத்த கண்களையுடையவள் வள்ளி நாயகி; நற்குடியில் பிறந்தவள். ஆனால் முருகப்பெருமான் அவள் காலில் விழுந்து அவளைப் புகழ்ந்த கதையை நீ கேட்டதில்லையோ என்றான்.

வேசி - விலைமகள். உபசாரம் - மரியாதை. வாசி - நியாயம். பிராணநேசி - உயிர்போன்றவள்; அன்புடையவள். இராசி - ஒழுங்கு. ஆலம் - விஷம். வேலன் - முருகபெருமான். இளமான் - இளமைவாய்ந்த மான்; உருவகம்.

சுவடிச்சொல் - 1. பிறண 2. றாசி 3. னாயகி 4. வேலரெனக் 5. னாலுபேர் 6. விலைமானே

வசனம் - இவ்விதமாக [1]உபசரணை சொல்லச் சித்திராங்கியுந் தானுமாக [2]இராப்பக லறியா [3]வண்ணம் மதன கேளி விலாசமாய்ப் போகமே போசனமாக

[4]இருக்கின்ற நாளையிலே ராசநரேந்திரனுக்கு ஒரு [5]நினைவு தோன்றிச் சபா மண்டபத்திலே எந்தவிதமாக இருந்தனன். (19)

சுவடிச்சொல் - 1. ஒபசரணை 2. ராப்பக 3. வன்றம் 4. யிருக்குன்ற னாளையிலே 5. நினைவு.

35. Formal words and flattery
Should be reserved for whores
Unfair it would be to extol
A chaste woman united in wedlock
Since she is a dear, dear one
Intense feelings of love are enough.
When Cittirāṅki, the pretty one
Spoke these words coyly,
The King addressed her
With great tenderness.
Young deer in vernal bloom!
Are you not aware that
Valli of ancient lore
Born of noble stock
Gifted with dark blue eyes
Was courted by Lord Muruka
Stooping at her feet?

Prose: Thus showering formal words of flattery on Cittirāṅki, the king had an unending carnival of pleasure, unaware of day and night. Then a thought struck King Rājanarēntira. Let us see how he conducted himself in court.

36. *(கொலுமண்டபத்திருத்தல்* *சம்பை*

மந்திரிகள் [1]பிரதானிகள் வந்துபுடை கண்டபின்பு
தந்தமிடத் திருந்தனர்கள் சந்தடிய தாக
மண்டபத்தி லேமன்று கொண்டிருக்கு மன்னவனை
எண்டிசையி லுள்ளமன்னர் வந்துபுடை கண்டார்.
[2]அரிவையர்கள் இருபுறம்வெண் சாமரமிரட்டி யிடவெதிரே
மருவலருச் சங்கொண்டு வந்துதான் வணங்க

கோணாத குறதிசுரு தானாஎச் சரிக்கைபஞ்ச
பாணாஎச் சரிக்கையென்று பட்டர்புகழ்ந் தேத்த.

இராசநரேந்திரன் கொலுமண்டபமாகிய உல்லாச மண்டபத்திற்கு வந்து வீற்றிருந்தான். மன்னனின் ஆசனத்திற்கு இரண்டு பக்கத்திலும் மகளிர் நின்று கவரி வீசினார்கள். அமைச்சர்களும் அதிகாரிகளும் வந்து மன்னனை வணங்கி அவரவர் இருக்கையில் அமர்ந்தார்கள். எட்டுத் திக்குகளிலும் உள்ள மன்னர்களும், பகைமன்னர்களும் வந்து மன்னனைப் புகழ்ந்து வணங்கி நின்றார்கள்.

நீதி தவறாத ஆட்சியுடைய தருமராசனே! எச்சரிக்கை; ஐந்து மலர்களாலான மலர்பாணத்தை ஏந்திய காமதேவனே! எச்சரிக்கை என்று புகழ்பாடும் அந்தணர்கள் கட்டியம் கூறிப் புகழ்ந்தார்கள்.

பிரதானி - அதிகாரி. புடை - அருகில். சந்தடி - சத்தம். அரிவையர் - 25 வயது மகளிர். வெண்சாமரம் - கவரி (கவரிமான் முடியாலான விசிறி). இது இராசசின்னங்களுள் ஒன்று. அவை முடி, குடை, கவரி, கொடி, முரசு, மதில், யானை, தோரணம், சக்கரம், மாலை போல்வன. இரட்டுதல் - வீசுதல். மருவலர் - பகைவர். உச்சம் - புகழ். எச்சரிக்கை - அமைதியாயிருக்கச் சொல்லுதல். பஞ்சபாணன் - மன்மதன்; ஐந்துமலர்களாலான பாணத்தையுடையவன். ஐந்து மலர்கள் - அசோகு, தாமரை, நீலோற்பலம், மா, முல்லை என்பன. பட்டர் - அந்தணருள் ஒரு குழுவினர்.

சுவடிச்சொல் - 1. பிறதானி 2. அருவை.

வசனம் - அனேக [1]சம்பிரமாக அரசன் [2]இருக்க அந்த வேளையிலே நாடக சாலைப் பெண்கள் [3] எவ்விதமாகப் பாடியாடி னாரெனில்.

சுவடிச்சொல் - 1. சம்பிறமாக 2. யிருக்க 3. யெல்வித.

36. While Rājanarēntirā sat in the pleasure hall,
Fanned by damsels standing on either side
The ministers and officials made entry
Bowed to the king and took their seats,
The ruler of the Eight directions;
Also offered eulogies and obeisance.
Just and righteous King! A call for silence,
Cupid holding the bow of five flowers, silence,
In this strain, the brahmins given to adulation
Sang elaborately King's praise.

Prose: While the King was thus preoccupied, how did the female musicians render the madrigals?

37. *(மண்டபத்தில் ஆடலும் பாடலும்)* **சிந்து**

உன்மீதில் [1]மையலாகினோம் மகேந்திர புரியா!
மன்மத ரூபா! நரேந்திர மகிபா! விசய (ஹண்!மீதில்)
பேசா திருப்ப தேதுகாண் - எங்கட்கு
[1]மையல் தீராது வெகுபொல் லாதுகாண்
தென்றலோ வந்து கூசாது வீசும் போதுதான்
தேவரீர் மேலே ஆசாபாசம் விடாதுகாண்
உலகெங் கணும்[2]பிர காசா
புலவோர்க் குதவும் போசா
கேளி விலாசா (உன்மீதில்)
காம விகார [3]வேதனை
அம்மா சொல்லப் போமோ
குயிலோ [4]வாதனை செய்யு
எங்களால் உம்மையா ராதனை
பண்ணினால் நீங்கள் தாமாயிருக்குஞ் சோதனை
வில்வித்தை யில்சர [5]ராமா!
சவுரியம தவீமா! குணசர்வ பூமா! (உன்மீதில்)
சாந்தா கியது பூசினோம் - உங்கள்
[6]சமுகம் சேர்ந்துதான் வார்த்தை
பேசினோம் - எங்களை
மணம்புணர்ந்து மேற்றே மீதிலே
அணையவேணும்
வேந்தர் சுகதிதிப் போரிலே - மட
மாதர்கள் சுரேந்திரா - அதிபதி
ராசம கேந்திரா ராசந ரேந்திரா (உன்மீதில்)

மகேந்திரபுரித்தலைவ! மன்மதனைப் போன்றவனே! நரேந்திரன் என்னும் அரசே! வெற்றிக்குரிய தலைவனே! தங்கள்மேல் மையலானோம். ஏன் பேசாமலிருக்கிறீர்கள்! எங்கள் ஆசை மிகவும் பொல்லாதது; என்றும் தீராதது. தென்றல் வந்து இனிமையாக வீசுகிறது. எனவே இப்போது தங்கள் மீது ஆசை மிகுதியாகிறது.

உலகம் எங்கும் பரவிய புகழ் உடையவனே! புலவரை ஆதரிக்கும் போசராசனே! மகளிரோடு விளையாடிப் பொழுதுபோக்குந் தலைவனே! காமநோயின் கொடுமையைச் சொல்லி முடியாது. ஒருபுறம் குயில்கள் இனிமையாகக் கூவித் துன்பம் செய்கின்றன. தங்களைப் பூசித்து வேண்டினாலும் நீங்கள் மெத்தனமாயிருந்து எங்களைச் சோதனைக்குள்ளாக்குகிறீர்கள். வில்வித்தையில் சிறந்த ராமனே! பலத்தில் மிகுந்த வீமராசனே! குணத்தில் சிறந்த பிரமனே!

சுகவாழ்வு உடையவனே! மகளிருக்கு இந்திரனாய் விளங்குபவனே! இராச மகேந்திரா! இராசநரேந்திரா!. எங்கள் தலைவனே! தங்கள் மீது மணம் நிறைந்த சந்தனக் கலவையைப் பூசுகிறோம். தங்களிடம் நெருங்கிப் பேசுகிறோம். எங்களை மணந்து அணைய வேண்டுகிறோம்.

மையல் - மோகம். புரியா, ரூபா, மகிபா பவா என்பன அண்மைவிளிகள். புரியா - புரிக்குத் தலைவனே! ரூபம் - வடிவம். மகிபன் - மன்னன், தலைவன். பவன் - இறைவன், தலைவன். கூசாது - கூசாமல்; - வெட்கமின்றி. ஆசாபாசம் - ஆசைமயக்கம். விடாது - நீங்காது. பிரகாசம் - ஒளி, புகழ். போசன் - போசர் குல மன்னன். கேளி விலாசம் - விளையாடிப் பொழுது போக்குதல். கேளி - மகளிர் விளையாட்டு. காம விகாரம் - காமநோய். வேதனை - துன்பம். ஆராதனை - பூசை, வணக்கம். தாமா - சும்மா. சரம் - அம்பு. சவுரியம் - பலம். பூமன் - பிரமன். ராமா! வீமா! பூமா என்பன அண்மை விளிகள். சாந்து - கலவைச் சாந்து, மணப்பொருள்கலவை. சமூகம் - முன்னிலை. புணர்ந்து மேற்றே - புணர்ந்தும், ஏற்றே - ஏற்றும்; ஏற்றுக்கொண்டும். சுகதிதி - சுகவாழ்வு. சுரேந்திரன் - தேவேந்திரன்.

சுவடிச்சொல் - 1. மயலாகி. 2. பிறகாசா 3. வேதினை 4. வாதினை 5. றாமா 6., சமுக்கம்.

வசனம் - இப்படிச் சபாமண்டபத்திலே பாடலு மாடலும் பட்டுவார் [1]புகழ்ச்சியும் வித்துவர் [2]மகிழும் வண்ணம் சிந்து முதலான [3]பிரபந்தங்களும் அநேக வைபோகத்துடனே ராசநரேந்திரன் கொலுவீற்றிருக்கும் வேளையிலே கானகத்திலேயிருந்து வேடர்கள் ராசாவண்டைக்கு வருகிற அவதான மெப்படியென்றால் (21)

சுவடிச்சொல் - 1. புகட்சியும் 2. மயிஷாவன்றஞ் 3. பிறபந்தங்

37. Head of Makēntirapuri resembling Lord Cupid
Narēntirā, the ever triumphant, we have fallen for you.
Why are you mute? our passions are violent,
insatiable
When the wind blows, intensity deepens

World-renowned one, patron of poets
Hero revelling in the company of damsels,
Disease called lust is indeed cruel,
On one side the cuckoos are piping sweetness sad
Though we have placed our hearts at thine altar
You are tormenting us by your coldness
Oh Rama, adept in the art of archery
Thou are as strong as Bhima of legendary fame
Your righteousness equals only that of Piraman
Happy liver, Intra to the populace,
Rājamakēntirā, Rājanarēntirā! our beloved leader.
We smear they body with sandal paste
We love to talk with you at close quarters
Enter into wedlock with us and hug us tight!

Prose: Thus while Rājanarēntirā sat ceremoniously in the hall amidst song, dance and eulogy, let us see how the hunters from the forest sought his presence.

38. *(வேடுவர் அன்பளிப்பு)* **ஏகதாளம்**

வேடர் வனத்திற் கும்புகூடி [1]மிருகங்க ளொரு கோடி
உண்டவை வேட்டை யாடியே - கொணர்ந்தார்
மானும் [2]மரையும் புலிதானும் மணப்புழுகும்
பூனையுங் கிளிகளும் ஏனமுங் - கொணர்ந்தார்
பின்னையும் [3]உச்சி தங்கள்
என்னஉண் டோஅ தெல்லாம்
மன்னன் மகிழவே முன் - வைத்து நின்றார்.

இராச நரேந்திரன் ஆடல்படால்களைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்திருக்கும்போது கொலுமண்டபத்திற்கு வேடுவர் பலர் கூடிவந்தார்கள். அவர்கள் கூட்டமாய்ச் சென்று காட்டிலே வேட்டையாடி மான், மரை என்னும் மற்றொருவகை மான், புலி, பூனை, கிளி, பன்றி போன்ற அரிய விலங்குகள் என்னென்ன உண்டோ அவற்றையும், புனுகு முதலான மணப்பொருள்களையும் திரட்டிக் கொண்டு வந்தார்கள். அவற்றை மன்னன் முன்னால் வைத்து வணங்கி நின்றார்கள்.

வனம் - காடு. கும்பு - கூட்டம். மரை - மான்களில் ஒருவகை. புழுகு - புனுகு, மான்மதம் (மணப்பொருள்). ஏனம் - பன்றி. உச்சிதம் - அரியபொருள்.

சுவடிச்சொல் - 1. மிறுகங்க 2. மறை 3. உசிதததங்கள்.

வசனம் - கானகத்திலே இருக்கப்பட்ட வேடர்கள் இப்படிப்பட்ட உச்சிதங்களெல்லாம் கொண்டுவந்து [1]ராசா முன்னே வைத்து [1]ராசாவைக் கைதொழுது ஏது சொன்னார்களென்றால். (22)

சுவடிச்சொல் - 1. றாசா.

38. While the king was lost in revelry
Of dance, song and merry-making
Some hunters sought his presence
In the hall where the assembly met.
They had brought the spoils of hunting,
Dear, sambar, tiger, cat, parrot and pig
Along with fragrant substances like civet
Placed them before the king with great delight.

Prose: What did the hunters from the forest say after placing the gifts before the King?

39. *(வேடுவர் அழைப்பு)* சம்பை

நாங்கள் வனத்தில் வேட்டை வேங்கைமுத லாடுவதும்
பாங்குடனே தான்பார்க்க நீங்கள்வர வேணும்
[1]நிதியாலே மகுடபடி நிருபனே எங்களிட
பதியிலே வேட்டைதேவரீர் பார்க்கவர வேணும்.
நீலமயில் ஆடுவதும் கோலம்பார்க்க வே[2]நாளைக்
காலமே தேவரீர் கடுகவர வேணும்.

பொன்னாலும் நவரத்தினங்களாலும் செய்யப்பட்ட முடியைத் தரித்த மன்னவனே! நாங்கள் வாழும் காட்டைச் சேர்ந்த பகுதிக்குத் தாங்கள் எழுந்தருள வேண்டுகிறோம். நாங்கள் காட்டில் புலி முதலான மிருங்களை வேட்டையாடுவதைப் பார்க்க வேண்டும். நீலமயில் ஆடும் அழ்கைப் பார்த்து மகிழ வேண்டும். இவற்றைக் காண நாளைக்கே புறப்பட்டு வருமாறு வேண்டுகிறோம்.

வேங்கை - புலி. பாங்கு - அழகு, முறை. நிதி - பொன், நவமணி. நிருபன் - மன்னன். பதி - வாழ்முமிடம். கோலம் - அழகு. கடுக - விரைவாக.

சுவடிச்சொல் - 1. நிதியால 2. னாளை.

வசனம் - இந்தடவாகச் சொன்ன வேடர்களுக்கு உடுகறை உச்சிதங்கள் கொடுத்து அப்படியே காலமே வேட்டை சன்றாகம் வருகிறோம் என்று சொல்லி வேடரை அனுப்பி விட்டு ராசா ஏது செய்தானென்றால்.

39. Oh King, wearing a crown
Made of gold and nine gems!
We beseech you to visit the forest
Which is our habitation
Also to witness our skill in hunting
Wild animals like the tiger.
We wish you to see the peacock
In sprightly dance.
May we appeal to you
To start on the errand morrow itself?

40. *(வேடுவர் விருப்பத்திற்கு மன்னன் விடையளித்தல்)* **திரிபுடை**

என்று மொழிந்திட்ட வனசரர்க் கிவனும்
ஏற்ற வரிசை தந்தனுப்பி - அனைவர்க்கும்
நன்று கானகசாரி போகுதல் நாளையெனவே
சொல்லி ராசந ரேந்தின் விடை
நல்கி யனைவர்க்குத் தானு மெழுந்தியல்
மெல்லி மோகச் சித்திராங்கி வாழ்ந்திடும்
[1]இல்லி லணைந்தான்.
ஆரி யன்மனை மேவிய பின்னினி
யாரைப் [2]பார்ப்போமென்றேயெனுந்துரை
சூரி யன்கடி தேகி மேல்திசை
வாரி [3]படர்ந்தான்.

தாங்கள் வாழுமிடமாகிய காட்டிற்கு வரவேண்டுமென்று அழைத்த காட்டுவாசியர்களாகிய வேடுவர்களுக்கு ஏற்றவாறு பலபரிசுப் பொருள்களைக் கொடுத்தான் மன்னன். நாளைக்கே காட்டிற்குப் பயணமாகி வருகிறோம் என்று கூறி அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பினான். பிறகு மன்னன் புறப்பட்டுச் சித்திராங்கியின் அரண்மனையையடைந்தான். அறிவுடையவனாகிய மன்னன் சென்றபின் இனிமேல் சென்று யாரைப் பார்க்கப் போகிறோம் என்று முடிவு செய்த சூரியன் மேற்குத் திசை நோக்கி விரைவாகச் சென்று மேலைக் கடலிலே மூழ்கி மறைந்தான்.

வனசர் - காட்டுவாசிகள், வேடுவர். வரிசை - பரிசிப் பொருள்கள். கானகம் - காடு. சாரி - உலாப்போதல். நல்குதல் - அளித்தல். மெல்லி - பெண். இல் - வீடு. ஆரியன் - அறிவுடையவன். மனை - வீடு. மேவுதல் - அடைதல். துரை - சான்றோன் கடிது - விரைவாக. ஏகுதல் - செல்லுதல். வாரி - கடல். படர்தல் - நிலைத்தல்.

சுவடிச்சொல் - 1. யில்லில் மனைந்தான் 2. பாற்போமென் 3. படந்தான்.

வசனம் - சூரியன் [1]அத்தமனமாக [2]ராத்திரி காலத்திலே ராசநரேந்திரன் சித்திராங்கியுடனே [3] சுகத்திலே யிருக்க அன்றைய ராத்திரி காலம் எப்படி [4]யிருந்ததோ வென்னில்.

(24)

சுவடிச்சொல் - 1. அஸ்த்தமாக 2. றாத்திரி 3. சொகத்திலே 4. யிருந்ததோ வென்றில்.

40. The King generously gifted the hunters
Who invited him to the forest habitation
He took leave of them
With a promise to visit them next morn
When the wise king retired to Cittirāṅki's house,
The sun had decided to set
As he did not choose to meet any one else
He moved towards the West
And sank in the ocean blue.

Prose: After sunset, Rājanarēntiran spent the night in the company of Cittirāṅki. Let us see how..

41. *(இராக்காலம்)*

முத்தமிழை யறியாத [1]மூடர்மனம் போலவே சம்பை
எத்திசையும் பரவிநிறைந் தியங்கவிருண் டனவால் :
[2]வாகாக யிளமகிமை மண்டலமெல் லா[3]மிருண்ட்
தாகாச வாணிகுழல் விரித்திடுவாள் நுதலில்
சந்தினிடத் தேயிருந்த பந்துவளை [4]யழைக்கவெதிர்
வந்தனர் போலவிருள் எங்குமறையிருந் தளவோ
போதவே யிருளிப்பா தாதினா றன்னும்பூ
மாதுதோ ளளைந்துகொண்டு
மகிழ்ந்திருத்தல் போ லும்.

இயல், இசை நாடகம். என்னும் முத்தமிழின் திறமும் சுவையும் அறியாத மூடர்களின் மனம் அறியாமையால், இருண்டு கிடப்பது போல, இருளானது நிலவுலகின் எல்லாத்திசைகளிலும் பரவி நிறைந்து விட்டது. ஆகாசவாணி என்னும் பெண் தன் கூந்தலால் முகத்தை மறைத்துக் கொண்ட செயல் போல இளமையும் அழகும் நிறைந்த இந்த நிலவுலகமும் ஆகாயமும் இருண்டு போயிற்று.

தெருவின் மூலை முடுக்குகளில் இருந்த குழியான வளைகள் அழைக்க அதை நோக்கி வந்தவர்களைப் போல இருளானது சந்து பொந்துகளிலெல்லாம் பரவியிருந்தது. இச்செயல் இருளானது பூமாதேவியின் தோள்களைத் தடவிக் கலக்கி மகிழ்ச்சியடைவது போலக் காணப்பட்டது.

முத்தமிழ் - மூன்று வகையான தமிழ்நடை; அவை இயல், இசை, நாடகம் என்பன. மூடர் - அறிவற்றவர். இயங்குதல் - உலாவுதல். வாகு - ஒழுங்கு. மகிமை - பெருமை. மண்டலம் - பூமி. ஆகாசவாணி - அசரீரி; ஆகாயமாகிய பெண். குழல் - கூந்தல் - நுதல் - நெற்றி. சந்து - தெரு மூலை முடுக்குகள். பாதாதி - பாதம் - ஆதி; கால்முதலிய உறுப்புகளால். பூமாது - பூமாதேவி. அளைதல் - கலக்குதல்

சுவடிச்சொல் - 1. மோடர் 2. வக்காக யிழமகிமை 3. மிருண்டு 4. யளைக்க.

41. Like the mind of nit-wits
Ignorant of the three Tamil modes of expression
The Earth was enveloped in darkness.
Like the maiden called the sky
Covering her visage with thick locks
The beautiful young earth and sky

Became totally devoid of light.
Like men moving towards
The uneven recesses of street nooks
Darkness spread its wings
In remote and obscure corners.
Perhaps darkness was shaking rudely
The massive shoulders of mother earth

42. *(நிலவொளி)* ஏகதாளம்

சூரிய னேகவே தோணு மிருளைமிக
வீரிடத் துரத்தினன் மேவுநன் மதியம்
முல்லை நகைக்கமரை மூடினள்வா யல்லி
மல்லிகைப் பரிமளம் வாய் மலர்ந்தனவே
கோகுல மானது கூவவே சிந்தை
வியாகூல மாகினர் மோகித மாந்தர்.

சூரியன் மறைந்தவுடன் கொடிய இருளானது தோன்றிப் பரவியிருந்தது. ஆனால் நிலவானது தோன்றி அந்த இருள் அலறி ஓடுமாறு செய்து துரத்திவிட்டது. உலகமெல்லாம் முல்லை மலர்ந்து தனது சிரிப்பை வெளிப்படுத்தியது. தாமரையாகிய பெண் வாய்மூடினாள் (தாமரை குவிந்தது). அல்லியும் மல்லிகையும் வாய்மலர்ந்து எங்கும் நல்ல மணத்தைப் பரப்பின. குயிற் கூட்டங்கள் இனிமையாகப் பாடத் தொடங்கின. இவற்றால் காதல் கொண்ட ஆடவரும் மகளிரும் வருந்தித் தவித்தனர்.

ஏக - மறைய. தோணும் - தோன்றிய. வீரிடுதல் - அலறுதல் ஒலிக்குறிப்பு. மதியம் - நிலவு. நகைத்தல் - சிரித்தல், மலர்தல். மரை - தாமரை. முதற்குறை. வாய்மூடுதல் - குவிதல். தாமரை பெண்ணாக உருவகிக்கப்பட்டது. அல்லி - ஆம்பல். பரிமளம் - மணம், வாசனை. கோகுலம் - குயில். வியாகூலம் - வியாகுலம் - வருத்தம், மனக்கலக்கம். மோகிதம் - மயக்கம். மாந்தர் - மக்கள்.

வசனம் - மோகத்தினாலே பட்டணத்திலே அங்கங்கே வினோதம் எந்தெந்த விதமாக [1]விளைந்ததோ வென்றால்.

(25)

சுவடிச்சொல் - 1. விளைந்துதோ.

42. With the disappearance of Sun
Pitch darkness held sway.
But the moon chased with fury
The enveloping gloom.
Jasmine unfolded its petals
Brightening the universe.
Dame lotus coyly
Closed her sweet mouth.
Water lily and Jasmine
Spread intoxicating fragrance,
Cuckoos expressed their joy
In melodious songs.
These aggravated the agony
Of passionate lovers,
Both men and women

Prose: Let us see the impact of lust on a cross-section of the city.

43. *(இரவு நேரத்தில் ஆடவரும் மகளிரும்)* சம்பை

மூடியிடு கொங்கைவட மாடவிரு தாடச் சிலம்
பாடியிட [1]மனைவியரைக் கூடிமகிழ் வாரும்
வேசியர்பா லணுகியந்த வேசியர்கொங் கையிற்களபம்
பூசியே தோள்மேல்கை போட்டுமகிழ் வாரும்
விலைமாதர் தங்களிட வீதிதனில் வீணிலே
பலகாலுஞ் சிந்துகவி பாடிமகிழ் வாரும்
ஆண்கூத்தி போலேநல்ல ஆபரணந் தரித்திருந்து
[2]வீண்கூத்தி யர்கள்திரிந்து [3]மினுக்கித்திரி வாரும்
ஒருகாசு விசமுங்கை ஒன்றுமில்லார் வேசியர்தம்
தெருவாசல் தனிலாசை [4]தீரநிற் பாரும்
மருள்கொண்டு பொதுமாதர் மனைபுகுந்து [5]இருகையிலும்
பொருளெனத்தம் பலம்வாங்கிப் போட்டுமகிழ் வாரும்.

மனைவியர் அணிந்திருக்கும் மார்பு மணிவடம், கொடி, கால்களில் அணிந்திருக்கும் சிலம்பு ஆகியவை அசைந்து ஒலிசெய்யக் கணவன்மார் அவர்களோடு கூடி மகிழ்வார்கள்.

விலைமாதரை நாடிச்சென்ற ஆடவர்கள் அவர்களுக்குக் கலவைச் சாந்து முதலியவற்றைப் பூசி தோள்களை அணைத்து மகிழ்வார்கள். சிலர் அந்த விலைமாதர் தெருக்களில் சிந்து முதலான பாடல்களைப்பாடிக் கொண்டே இப்படியும் அப்படியுமாகத் திரிந்து மகிழ்வார்கள்.

நாடகக் கணிகையர்களாகிய விலைமாதர்கள் மிகவும் ஆடம்பரமாக ஆடையணிகளால் தங்களை அலங்கரித்துக் கொண்டு ஆடவர்களைப் போலத் திரிந்து வருவார்கள்.

கையில் ஒரு காசுக்கும் வழியில்லாத ஆடவர் சிலர் கணிகையர் வீட்டு வாசலில் ஆசைதீர நின்று காலங்கழிப்பார்கள்.

விலைமாதர்களாகிய பொதுமகளிர் வீடுகளுக்குச் சென்று அவர்கள் மீது கொண்ட மயக்கத்தால் அவர்கள் போட்டு மென்ற வெற்றிலைப் பாக்குக் கலவையைக் கைநிறைந்த பொருள் போல இரண்டு கையிலுமாக வாங்கித் தங்கள் வாயில் போட்டுக் கொண்டு மகிழ்ச்சியடைவார்கள்.

கொங்கைவடம் - மார்க்கச்சு. விருது - கொடி, சீலை. சிலம்பு - காலணி. களபம் - வாசனைச்சாந்து. வீதி - தெரு. பாலகால் - பலமுறை, மீண்டும் மீண்டும். சிந்து - பாட்டு வகைகளில் ஒன்று. கூத்தியர் - நாடகக் கணிகையர். மினுக்குதல் - ஆடம்பரமாக நடத்தல். விசம் - நஞ்சு. மருள் - மயக்கம், மோகம். மனை - வீடு. தம்பலம் - மென்று தின்னும் வெற்றிலைப் பாக்கின் குழம்பு.

சுவடிச்சொல் - 1. மனவியரை 2. வீண்கூற்றி 3. மினிக்கி 4. தீரநிர்ப்பாரும் 5. இருக்கையிலும்

43. When loving husbands
United with their spouses
The jewels worn by the wives
On their chests
And anklets on their feet
Let out a jingling sound.
Pleasure seekers smeared the shoulders of whores
With sweet-smelling sandal paste
A few wandered about the shady streets

Singing songs in *Cintu* style.
Strumpets good at histrionics
Roamed about the streets
Dressed fabulously like men.
Indigent Romeos sought outlet
For their surging passion
By slouching on the threshold
Of dens of vice.
A few passionate men
Knocked at the doors of whores
Collected the betel leaves chewed by them
Ate them with exhilarating glee.

44. *(இரவில் கேளிக்கைகள்)* **திபதை**

கொண்டபெண் டிருக்கவோர்
கோதைமே லாசையது
கொண்டுகால் களில்விழுந்து கும்பிடு வாரும்
கண்டனன் உன்முகம் கண்டனன் என்று
வேண்டியடி யேனென்று வேண்டிக்கொள் வாரும்
கள்ளமாய்த் தலையில் முக்கா டதுபோட்டு
மெள்ளெனத் தெருவீதியில் [1]வீற்றிடு வாரும்
புருஷன்நித் திரைசெய்யும் போதிலே எழுந்து [2]மற்றொரு
புருஷன்பா லணுகித்தோள் புல்கிடு வாரும்
மேவியே பலகடை வீதிசந் தடியிலே
பாவையர் தங்கள்தோள் பரிசஞ்செய் வாரும்
ஊர்வசி [3]யனையவர் உலாவவே கண்டு
மருவவே ஒருதூது வரவிடு வாரும்
தும்புரு [4]நாரதர் தொனிமேல் [5]கேழ்க்கத்
தம்புரு [6]வீணைகள் தான்பாடு வாரும்
[7]கோட்டுவாத் தியமலர் கூறியே பதங்கள்
[8]நாட்டியே இசையதில் நடந்திடு வாரும்
ஒல்கிய இசையெலாம் ருத்திர வீணை

சொல்லியே விசைக்கெதிர் [9]சொல்லுவிப் பாரும்
பாரத [10]ராமப்பிர பந்தங்கள் சொல்லிச்
சீரதாய் [11]அர்த்தங்கள் செப்பிடு வாரும்
இன்னமும் வேடிக்கை [12]எத்தனை கோடி
சொன்னநா வுக்கது [13]தொலைந்திடு மோதரன்
இப்படிப் புதுமையாய் ராசம கேந்திர
பட்டண முளதெலாம் பரிவுடன் [14]சனங்கள்
சகலசந் தோஷமும் [15]தர்மஞா யமுமாய்
[16]அனைவருஞ் சுகித்து இருக்கும் வேளையில்

(மன்னன் வேட்டைக்குப் புறப்படுதல்)

கதிரவன் உதயமாய்க் காந்தியாய்த் தோன்றி
அதிபல பராக்கிரம னானநரேந் திரனும்
நித்திரை தெளிந்துநேம நிஷ்டைகள் [17]பண்ணி
சித்திராங்கி யார்தனைச் சீருடன் அழைத்துக்
கானகத் தினில்வேட்டை யாடவே கதலி
போனபின் அங்குள்ள புலியுடன் [18]கரடி
கண்டபே ரண்டமுங் கனத்ததோர் [19] மிருகங்களை
அண்டியே பிடித்து[20]நாம் அடித்துப்பின் வாறோம்
என்றுசித்தி ராங்கியார்க் கின்பமாய்ச் சொல்லிக்
குன்றெனுங் கொங்கைக் கோதையே நீயும்
[21]அரண்மனைவிட் டப்புறம் அகலாம லேதான்பத்
திரமாக இருமென்று செப்பியே பின்பு
புரவலன் ராச நரேந்திர பூபன்
[22]அரண்மனைவிட் டாஸ்தான சபையில்வந் தானே.

மணந்துகொண்ட மனைவியிருக்கவும் வேறொரு பெண்மீது ஆசைகொண்டு அவளிடம் சென்று, உன் அழகிய முகத்தைக் கண்டது முதல் உன்னை மறக்கமுடியவில்லை என்று புகழ்ந்து கூறித் தன் விருப்பத்தை ஏற்குமாறு வேண்டி அவள் கால்களில் விழுந்து வணங்குவார் சிலர். மற்றும் சிலர் யாரும் அறியாதபடி முக்காடு போட்டுத் தன்னுருவை மறைத்துக் கொண்டு தான் விரும்பிய பெண்ணைத் தேடிச் சென்று அவள் வீட்டுக்கு வெளியே தெருவில் அமர்ந்திருப்பார்கள்.

சில பெண்கள் தங்கள் கணவன் தூங்கும் போது அவனைவிட்டு எழுந்து சென்று மற்றொரு ஆடவனோடு கூடி மகிழ்வார்கள். ஒரு சிலர் கடைத் தெருவிற்குச் சென்று அங்கு உள்ள நெருக்கமான மக்கள் கூட்டத்துக்கிடையில் சில பெண்களைத் தொட்டு மகிழ்வார்கள். சிலர் தேவகணிகையரைப் போன்ற, அழகிய பெண்கள் உலவிவரும் இடங்களுக்குச் சென்று, அவர்களை அழைத்து வருமாறு தூது அனுப்புவார்கள். மற்றுஞ் சிலர் பலவகை வீணைகளும் யாழுமாகிய இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டு பாடியும், இசைக்கேற்ப ஆடியும் மகிழ்வார்கள். சிலர் அவ் இசையைப் பிறருக்குக் கற்பிப்பார்கள். சிலர் இராமாயணம், மகாபாரதம் முதலான இதிகாசக் கதைகளைச் சொல்லிச் சொற்பொழிவு (கதாகாலட்சேபம்) நிகழ்த்துவார்கள். இப்படிப் பலவகை வேடிக்கை நிகழ்ச்சிகளோடு கூடிய இராசமகேந்திரபுரத்து மக்கள் மகிழ்ச்சியும் நீதிநெறிகளும் விளங்க வாழ்ந்து வந்தார்கள்.

சிறந்த வீரனான இராசநரேந்திரன் சூரியன் உதித்து ஒளி வீசும் காலை நேரத்தில், படுக்கைவிட்டெழுந்து இறைவனைத் தொழும் பணிகளை முடித்தபின் மனைவி சித்திராங்கியை அழைத்தான். நாங்கள் காட்டிற்குச் சென்று புலி, கரடி முதலான கொடிய மிருகங்களை வேட்டையாடி வருகிறோம்; நீ அரண்மனையைவிட்டு வேறு எங்கும் செல்லாமல் இரு என்று கூறிவிட்டு அரசவைக்கு வந்தான்.

சுவடிச்சொல் - 1. வீத்திடு 2. மத்தொரு 3. யனவரும் 4. னாரதர் 5. கேழ்க 6 வீணையள் 7. கேட்டு 8. னாட்டியே 9. சொல்லிவிப் 10. றாமப்பிறபந்தங்கள் 11. அற்த்தங் 12. யெற்றினை 13. துலைத் 14. சனங்கள் 15. தற்ம 16. அனவருஞ் 17. பன்றி 18. கறடி 19. மிறுகங் 20 னாம் 21. அரமனை.

வசனம் - இப்படி ராசநரேந்திரன் பெண்சாதி சித்திராங்கி [1] கையில் சிலவு வாங்கிக் கொண்டு ஆஸ்தான மண்டபத்திலே வந்து இருந்து வேட்டை போற விச்சித்திரம் எப்படி யென்றால்,

(26)

சுவடிச்சொல் - 1. கய்யில்.

44. Some wedded men
Would seek other women
Praising their beauty and grace.
'Ever since I set my eyes
On your lovely face,
I am deeply disturbed'.
With such flattering epithets
They would surrender at their feet

Imploring meekly acceptance.
Some would cleverly cover their face
When seeking the woman of their heart,
They would shamelessly wait
At the threshold of her house.
Some women would seek
Their paramours when their husband's
Are in slumber's sweet embrace.
A few perverse men
Would wade through crowds
To stealthily touch
The flesh of stray women
And enjoy the thrill thereof.
Some would visit the haunts
Of matchless beauties
Send resourceful messengers
To fetch them.
Others would play on the Vīṇa
And other musical instruments
Occasionally dance to the tune of songs
And thereby enjoy mirth and pleasure
Some men would derive sensuous pleasure.
By teaching music to others.
A few would deliver discourses
On the immortal classics
Ramayana and Mahabharata.
Such varied and multiple activities
Helped the citizens of Rājamakēntirapuram
To lead sane and healthy lives.
Behold Rājanarēntira,
The bold warrior
Getting up at the stroke of dawn
Offering worship to the Almighty
And summoning Cittirāṅki

His wedded wife to his presence
We are on our way to the forest
To hunt wild animals like tiger and bear
Beware, you remain in the palace
Kindly avoid stirring out.

Prose: Thus Rājanarēntira took leave of his wife, entered the court and then started for hunting. Details follow.

45. *(பரிவாரங்களுடன் கானகம் அடைதல்)* **திரிபுடை**

மைந்தன் சாரங்கதரன் சுமந்தனை [1]வைத்து
அரண்மனைக்காவ லாகவே
அந்த மாகவே யிருக்கச் சொல்லி
அனைவரையு மழைத்தான்
கலிங்கர் ஆரியர் காமர் துலக்கரும்
கடகர் குடகர் குறும்பர் கூடவே
தெலிங்கர் சீனர் [2]மராடர் மற்றுள
தேசர் கூடகன் னடியர் குச்சிலியர்
வேடரும்கத் திரியர்முத் திரியருங்
கூடவே முன்னை பின்னை[3]எண்
ணாதமு சலரு முரகர்
கூடதோம்பி யாகவே - கும்பு
கூடியே துரையைச் சூழ்ந்து
சந்தடிய தாகவே
பாம்பு மணியணி அரசன் சிவிகை
மேல்வரப் பயணமானார்
பன்றிவலை மான்வலை முசல்வலை
பருத்தபெரும் புலிவலையுந் தான்கொண்டு
[4]எண்ணிக்கையாய் வேட்டை யாடவே
க்ானம் எய்தினாரே

மகன் சாரங்கதரனையும் அமைச்சரின் மகன் சுமந்தனையும் அழைத்து அரண்மனையைப் பார்த்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டான். பிறகு வேட்டைக்கு வருவோர் வரலாம் என்று கூறி மற்றவர்களுக்கும் அழைப்பு விடுத்தான். அரசன் அழைப்பை ஏற்றுக் கலிங்கர், ஆரியர், காமர், துலுக்கர்,

கடகர், குடகர், குறும்பர், தெலிங்கர், சீனர், மராடர், கன்னடியர், குச்சிலியர், வேடர், கத்திரையர், முத்திரையர், முசலர், உரகர், முதலான பல நாட்டவரும் கூட்டம் கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். மாணிக்க மாலையணிந்த இராசநரேந்திரன் சிவிகையிலேறி வர மற்ற நாட்டவர்கள் சிவிகையைச் சூழ்ந்து வந்தார்கள். காட்டுப்பன்றி, மான், முயல், புலி போன்ற மிருகங்களைப் பிடிப்பதற்கான பலவகை வலைகளையும் எடுத்துக் கொண்டு சென்ற அவர்கள் காட்டை அடைந்தார்கள்.

அந்தமாக - பாதுகாப்பாக. துலக்கர் - துலுக்கர் - முகமதியர். கலிங்கர் முதலானோர் அந்தந்த நாட்டைச் சார்ந்தவர். குறும்பர் - குறுநில மன்னர், வேடர். தோம்பி - கூட்டமாகக் கூடி. கும்பு - கும்பல், கூட்டம். துரை - மன்னன். சந்தடி - கூட்டம். பாம்புமணி - மாணிக்கம். கானம் - காடு.

சுவடிச்சொல் - 1. வைற்று 2. மறாடர்மத்துள 3. என்றாத முசலரும் முறகர் 4. என்றிக்கை.

வசனம் - இப்படி ராச நரேந்திரன் [1]சதுரங்கத் தளத்துடனேயும் பட்டணம் விட்டு வனத்திலேபோய் வேட்டையாடுகிற விதமெப்படியென்றால். (27)

சுவடிச்சொல் - 1. சதிரங்க

45. The King sent summons
To his son Cāraṅkataraṉ
And minister's offspring Cumantaṉ,
Ordered them formally
Look after the stately affairs
Invitation was then extended
To those interested in hunting.
The Kaliṅkās, Āriyar, Kāmar,
Tulukkar, Kaṭakar, Kuṭakar
Kuṟumbar, Teliṅkar, Chinese,
Marathās, Kaṉṉadikās, Kucciliyar
Vēṭar, Kaṭṭirayar, Muṭṭiriyar,
Mucalar, Urakar and host of others
From various countries crowded round the king.
While Rājanarēntira wearing garland of pearls
Rode on a palanquin,
Others walked on the side

Armed with nets and traps
To catch wild pig, deer, rabbit and tiger
Hunters entered the forest

Prose: Thus Rājanarēntira, followed by the four fighting units, left town and entered the forest for hunting. Let us see how.

46. *(வேட்டையில் பரிவாரங்கள்)* **சம்பை**

எத்தனைப் பராக்கிரமமாய் ஏகியே மன்னவனும்
[1]மெத்தவே கானகத்தில் வேட்டை யாடினரே
பருத்த புலிகள்கண்டு பரியானை களைத்துரத்தில்
முறிக்கவே கண்டோடி முனைகுலைவார் சிலபேர்
பன்றிவந்து துரத்தியே பாரிடைக் குத்தியே
இன்றுமன்று மொன்றாக்கில் மிரளுவார் சிலபேர்
யாளிகண்ட பேரண்ட மந்தப்பட்சி யைக்கண்டு
வாளினால் வெட்டியே மடித்திடுவார் சிலபேர்
போவதே யில்லைநாம் புலிகள்கையில் அகப்பட்டுச்
சாவதே யென்றுசொல்லிச் சாற்றுவார் சிலபேர்
அறியாமல் ஏன்வந்தோம் ஆண்பெண்டு பிள்ளைவிட்டு
தெரியாமல் வந்தோமென்று தியங்குவார் சிலபேர்
ஐயய்யோ இக்காட்டில் அநியாய மாய்க்கொல்ல
மெய்யாகக் கொண்டுவந்து வினைசெய்தா னென்பார்
காட்டிலுள்ள [2]மிருகங்கள் கனக்கவே நொந்துவிடாய்த்
தாக்கியே அங்கங்கே தவித்திடும் வேளையினில்
பெம்பாக வேஅரசன் பிரசைகளும் தானுமாய்க்
கும்பாக வேஒரு [3]குன்றடியில் சேர்ந்தார்.

மிகுந்த வீரத்தோடும் படைவலிமையோடும் சென்ற இராசநரேந்திரன் காட்டை அடைந்து வேட்டையாடத் தொடங்கினான். சிலர் பெரிய புலிகள், கறுத்த யானைகள் போன்ற மிருகங்கள் துரத்த, அவற்றைக் கண்டு பயந்து நடுங்கி ஓடி மறைந்தார்கள். காட்டுப் பன்றிகள் வந்து பூமியைக் குத்திக் கிளறியதைக் கண்டு மிரண்டு ஓடினர் சிலர். இருதலைப் பறவையாகிய கண்டபேரண்டப் பறவையைக் கண்டு வாளால் வெட்டி வீழ்த்திய வீரர்களும் உண்டு. பயந்து காட்டை விட்டு ஓடமாட்டோம்; புலிகளிடம் சிக்கி இறப்பதே சரி என்று சிலர் வீரமாய்ப் பேசினார்கள். சிலர் பெண்டு பிள்ளைகளை விட்டு விட்டுத் தெரியாமல்

இக்காட்டிற்கு வந்து விட்டோமே என்று வருந்தினார்கள். அரசன் நம்மை அநியாயமாய்க் கொல்லவே இங்குக் கூட்டிவந்தான் என்பார் சிலர். வீரர்கள் துரத்தப் பயந்து ஓடிய மிருகங்கள் பல மிகவும் சோர்ந்து களைத்து ஆங்காங்குப் பதுங்கிக் கிடந்தன. மிருக நடமாட்டமற்றதைக் கண்ட மன்னன் மகிழ்ச்சியடைந்து உடன் வந்த வீரர்களுடன் கூடி ஒரு மல்லையடிவாரத்தில் சென்று தங்கினான்.

பராக்கிரமம் - வீரம், ஏகி - சென்று. பரியானை - கரியானை. பரியும் யானையும் எனவும் கொள்ளலாம். பரி - குதிரை. முறிக்க - குலைக்க. முனை - துணிவு. பார் - பூமி. யாளி - சிங்கம். கண்ட பேரண்டம் - இருதலைப் பறவை. இது யானையைத் தூக்கிச் செல்லும் ஆற்றல் உடையது. சாற்றுவார் - கூறுவார். தியங்குதல் - புத்தி மயங்குதல், சோர்வடைதல். வினைசெய்தான் - வஞ்சனை செய்தான்; தந்திரம் செய்தான். கனக்க - மிகவும். விடாய் - களைப்பு, கும்பு - கும்பல், கூட்டம்.

சுவடிச்சொல் - 1. மெற்றவே 2. மிறுகங்கள் 3. குண்ணடியில்

வசனம் - இப்படி ராசநரேந்திரன் வனத்திலே வேட்டையாடிச் [1]சதுரங்கத் தளத்துடனே ஒரு மலையருகே போய் நின்றான். அந்த வேளையிலே பட்டணத்திலே நடந்த புதுமை யென்னவெனில். (28)

சுவடிச்சொல் - 1. சதிரங்க.

46. Brave King and his retinue
Began hunting operations in forest.
Some men fled in mortal fear
Chased furiously by tigers and elephants;
Some got unnerved
At the sight of the wild boar,
Unearthing the bowels of the earth
There were brave souls
Who slit into two the two-headed giant bird.
Prattlers were there who boasted
That come what may, they would not
Flee in fear of the ferocious big cat
A few repented their thoughtless act
Of coming to the dangerous forest,
Leaving behind their kith and kin
Some whispered that it was a clever ruse

Of the king to murder them.
Tired of the chase, many animals
Retired to secret places of rest.
The King felt elated when
Animals ceased to move;
Took rest with his retinue in a ravine.

Prose: While Rājanarēntira stood near a hillock with his retinue, what happened in the city?

47. *(சாரங்கதரனும் தோழன் சுமந்தனும்)* **நிலை**

[1]ராசாதி ராச ராசபர [2]மேஸ்வரன்
[3]ராசமார் தாண்ட ராசகெம் பீரன்
ஆனதோர் ராச நரேந்திர ஒய்யாரன்
வனத்திலே வேட்டைபோய் வருவ னானிதிலே
மைந்தனாஞ் சாரங்க தரமகா ராசன்
அந்தமாய்ப் புவியினி லழகுள்ள நிபுணன்
சத்தியவாக் கியதர்மந் தவறாத சீலன்
பத்தியாய்த் தேவதார்ச் சனைகளைப் போதுந்
திட்டமாய்ச் செய்திடுந் தீரன் குபேரன்
மட்டில்லாச் சாகச மானசே கரனும்
எந்த [4]நாளிலும் யெனைவிட்டுப் பிரியாத
மந்திரி மகனான சுமந்தனு மப்போ
இருவருங் கூடியே யிருக்கும்வே ளையினில்
மருவியே [5]புறாரெண்டு வரிசையாய் [6]வளர்த்து
[7]உரிமையா ய்ப் பால்பழம் [8]உகந்துதா னூட்டி
[9]இருவர்தம் கையிலும் இன்பமாய் வளர்த்தார்.

(இரண்டு புறாக்களைப் பந்தயம் விடுதல்)

அன்றுதா னிருவரும் அந்தப் புறாவை
[10]விண்ணினி லெறிந்துதாம் வேடிக்கை யாக
சிந்தைதான் மகிழவே சீக்கிரமாய் நாமும்

[11] பந்தயம் ஆடுவோம் என்றுதான் பகர்ந்து
இருவரும் ஒருமன தாகவே [12]எண்ணிப்
பருவமாம் புறாவை [13]இருவரும் பிடித்து
விட்டனர் விண்ணினில் [14]மிரண்டுதான் புறாவும்
மட்டில்லா தூரம் மாய்கைபோல் பறக்க
[15]கொப்பென எழும்பியே [16]குவலய மாளும்
ஒப்பிலா அழகுள்ள ஊகையில் வல்லோன்

(புறாக்கள் பிரிந்து போதல்)

மன்னன் சாரங்க தரனுட புறாவும்
மின்னலைக் கண்டு [17]மிரண்டிடு மதுபோல்
[18]கண்ணது சிதறியே காவலன் புறாவும்
[19]பெண்ணெனும் பெட்டையை விட்டுஅப் [20]புறத்தில்
விசையாகப் பறந்திடு மேலிமை யுளது
திசையது தப்பியே தியங்கிமெய் மறந்து

(ஆண்புறா சித்திராங்கியை யடைதல்)

வரும்வினை யாலந்த மாயநல் புறாவும்
[21]அரிவைசித்தி ராங்கி [22]அரண்மனை வழியே
போயந்தப் புறாவும் பூங்கொடி யருகில்
[23]மாயமஞ் சத்தில் வந்ததோர் புறாவைக்
கண்டுசித்தி ராங்கியுங் கனக்கவே யெடுத்துக்
கொண்டனள் பால்பழம் [24]கொடுத்துப்பசியாற்றிக்
கண்டன மென்றுதான் கனக்கவா சையினால்
மண்டலிகன் சாரங்க தரன்வருவ னென்றும்
மெத்தசந் தோஷமாய் மேவியே யணையப்
புத்திதான் மெத்தப் புகலுவோ மென்றுங்
காமவி காரங் கனக்கவே கொண்டு
சாமமு மாதமாய்ச் சலித்திருந் தப்போ
காவலன் மேல்மயல் கனக்கவே கொண்டு
போவது வருவதாய்ப் புரண்டுதான் [25]வளர்த்த

கிளிப்பிள்ளை யுடனேயிவள் கேவல மாக·
[26]உளத்தினி லுளதெலாம் [27]உவந்துசொல் வாளே.

அரசர்களுக்கெல்லாம் அரசனாகவும், இறைவனாகவும் விளங்குபவனும், அரசர்களுக்குச் சூரியன் போன்றவனாய்ச் சிறந்த வீரமுடையவனாய் விளங்குபவனாகிய இராச நரேந்திரன் வேட்டையாடச் சென்றிருந்தபோது நாட்டில் சாரங்கதரன் இருந்தான். சாரங்கதரன் என்னும் இளவரசன் அழகும் ஆற்றலும் உடையவன். வாக்கு தவறாதவன்; தர்மகுணங்களும் சிறந்த ஒழுக்கமு முடையவன்; இறை பக்தியோடு பூசைகளைச் செய்து வருபவன்; குபேரன் போன்றவன்; அவன் நல்ல செயல்களில் ஈடுபட்டு மானமுடையவனாகவும் வாழ்ந்து வந்தான். அமைச்சர் மகனான சுமந்தன் என்பவனும் சாரங்கதரனோடு இணைபிரியாமல்இருந்துவந்தான்

இருவரும் ஆணும் பெண்ணுமாகிய இரண்டு புறாக்களை வளர்த்து வந்தார்கள். ஒருநாள் வேடிக்கையாக அப்புறாக்களை விண்ணில் பறக்கவிட்டார்கள். மிகவும் உயரத்தில் பறந்து சென்ற அந்தப் புறாக்களில் ஒன்றாகிய ஆண்புறா மின்னலால் மயங்கி மிரண்டு பெண்புறாவை விட்டுப்பிரிந்து திசை தப்பிச் சென்று விட்டது. திசை தெரியாமற் சென்ற அப்புறா சித்திராங்கியின் அரண்மனையில் இறங்கிவிட்டது. சித்திராங்கி வீற்றிருந்த கட்டிலி அருகே சென்றது. சித்திராங்கி அப்புறாவை மகிழ்ச்சியோடு எடுத்துப் பால் பழம் கொடுத்துப் பசியாற்றினாள். இளவரசனாகிய் சாரங்கதரன் புறாவைத்தேடி வருவான் என்ற ஆசையால் பெரிதும் மகிழ்ச்சியடைந்தாள். அப்போது தன் கணவன் மீது மிகவும் மையல் கொண்ட சித்திராங்கி, அங்குமிங்குமாக நடப்பதும் படுக்கையில் படுத்துப் புரள்வதுமாக இருந்தாள். தொடர்ந்து தன் உள்ளத்திலுள்ள ஆசையையெல்லாம் தான் வளர்த்த கிளியிடத்திலே கூறத் தொடங்கினாள்.

மார்த்தாண்டன் - சூரியன். கெம்பீரன் - வீரன். புவி - பூமி. நிபுணன் - ஆற்றலுடையவன். சீலன் - ஒழுக்கமுடையவன். தேவதார்ச்சனை - தேவதைகளுக்குச் செய்யும் பூசைகள். சாகசம் - திறமை. மானசேகரன் - மானமுடையவன். உகந்து - மகிழ்ந்து. விண் - ஆகாயம். சிந்தை - உள்ளம். பகர்தல் - கூறுதல். மாய்கை - மாயம்; காணாதபடி. குவலயம் - நிலவுலகம். ஊகை - ஊகம்; யூகித்து அறியும் தன்மை. வரும்வினை - நடக்கவிருக்கும் ஊழ்வினை. மஞ்சம் - கட்டில். கனக்க - மிகுதியாக. மண்டலிகன் - அரசன். புகலுவோம் - சொல்லுவோம்.

சுவடிச்சொல் - 1. றாசாதிறாச 2. பரமேஸ்பரன் 3. றாச (எல்லா இடங்களிலும்) 4. னாளிலும் 5. பிறா (எல்லா இடங்களிலும்) 6. வளத்து 7. உருமையாய் 8. ஒகந்து 9. யிருவர்தன் 10 வின்றினி 11. பந்தியம் 12. என்றி 13. யிருவர்கய்யாலும் 14. மெருண்டு 15. கொப்பன்ன 16. குவலைய 17. மெரண்டிடு 18. கன்றது 19.

பென்றெனும் 20. பிறத்தில் 21. அருவை 22. அரமனை 23. மாமாய 24. குடுத்துப் பசியாத்தி 25. வளத்த 26. ஒளத்தினி 27 உகந்து.

வசனம் - இப்படிச் சித்திராங்கி சாரங்கதரன் விட்ட புறாவையும் வைத்துக் கொண்டு தன் புருஷன் ராசநரேந்திரன் பேரில் [1]நினைவாய்த் தான் [2]வளர்த்த கிளிப்பிள்ளையுடனே [3] என்னவென்று சொல்லி விசாரப்படுகிறாளெனில். (29)

சுவடிச்சொல் -

1. நினவாயி 2. வளத்த 3. என்னமென்று

47. When the King of kings
Deified by the common men
A sun to fellow rulers
Was away hunting,
His son Cāraṅkataraṉ
Was very much in the city
Donning the role of the ruler.
Able and handsome,
Cāraṅkataraṉ was a model man
Charitable, true to his word
Performing worship of Gods
With exceptional punctiliousness.
Fabulously rich like Kupēra
He always set much store by honour.
Minister's son Cumantaṉ
Was his inseparable friend.
Both had two domestic pets
Pair of doves, male and female.
It so happened one day
They let the birds fly freely in the air
Male bird got confused
Thanks to streak of lightning
Missed its direction
Leaving the female alone.
Male bird after struggle

Landed in Cittirāṅki's palace
Flew very near her cot.
Cittirāṅki lost no time
In feeding it with milk and fruit
She felt highly elated
That prince Cāraṅkataraṉ
Would come in search of pet.
Cittirāṅki theṉ pacing up and down
With uncontrollable passion for husband
Occasionally rolling on her bed
She now began to reveal
Her innermost secrets to bird.

Prose: What did Cittirāṅki prattle to the bird that had taken refuge in her?

48. *(சித்திராங்கி விரக வேதனையால் கிளியிடம் பேசுதல்)* **சிந்து**

வேடரிட வேட்டையிரு
விழிகளாற் [1]பார்க்கவே மேவினார்
எப்போ வருவார் - கிளியே.
[2]புந்தியது வாடிமிகத்
தோயல்கண்டு மன்மத [3]ராயனும்
அதோ வருகிறார் என்செய்வேன் - கிளியே
என்னைத்தேடி தேர்வென்று
தென்றலோடி [4]வந்ததுக்கென்
செய்யுதமவாறு சொல்லாய் - கிளியே
அவரெண்ணியல்சாடையறிவா
ரறிந்தும்பாடுபடினென்று
சலஞ் சாதிக்கப்போனாரோ - கிளியே
[5]வேதனை பொருதிந்த [5]வேதனை அறிந்திந்த
வேளையில் வாராரோதான் - கிளியே
மணத்தசவ் வாதோடு பன்னீர் களபமிது
தடவுகிலுங் குளிர்வாராது வாராது - கிளியே

[6]அரைக்கணப் போதவர் வாராதிருந் தாலுடலில்
உயிரிருக்கப் பொருந்துமோ
பொருந்தாது - கிளியே
இனியேது செய்வேன் விரகமடங் காதுநான்
உரைப்பதுனக் [7]கெங்கேயோ
சிந்தைதான் - கிளியே
கொங்கைப்பிடித்தே முத்திகொடுத் [8]தெந்தன்
இதழ்க்கனியைக்
கோதி யணைவது மெப்போ - கிளியே
அவரிங்கு வருவா ரித்தனை [9]யங்கமே னிவள்தனக்கென்
றிருக்குதோ [10]உனக்கு - கிளியே.
பொங்கமுடன் பால்பழமும் [11] இங்கிதம தாயுனக்கு
போதவே தருவேனான் - கிளியே
அவசியம் [12]உங்களையன் நரேந்திர [13]மகிபதிக்கென்
[14] வார்த்தை சொல்லி அழைத்தோடிவா - கிளியே.

வேட்டையாடிவரச் சென்றவர்; வேடர் வேட்டையாடுவதைக் கண்டு மகிழச் சென்ற மன்னர் எப்போது வருவார்? என்னுடைய அறிவு மயங்குவதைக் கண்ட மன்மதன் என்னை நோக்கி வருகிறான். தென்றல் வந்து துன்புறுத்துகிறது. நான் இப்படி இங்கே தனிமையில் வருந்துகிறேன். அவர் குறிப்பறியும் சக்தியற்றவர்களாகிய எண்ணற்ற பகையை அழிக்கச் சென்றாரோ? வேதனைப்படும் என்துயரைப் போக்க இப்போதே வரமாட்டாரா? உடல் சூடேறிக் கொதிக்கிறது. சவ்வாது, பன்னீர், கலவைச் சாந்து முதலான வாசனைப் பொருள்கள்கூட என் உடலைக் குளிரச் செய்ய மாட்டா. இன்னும் சிறிது நேரம் அவர் வராமலிருந்தால் என் உடலில் உயிர் தங்குவது சந்தேகமே, கிளியே! காமவிகாரத்தால் நான் கூறுவது உனக்கு எங்கே ஏற்கப்போகிறது? என்னை அவர் அணைவது எப்போ? இவளுக்கு இத்தனை அவசரம் ஏன் என்று நீ எண்ணுகிறாயா? கிளியே! உனக்கு வேண்டிய பால், பழம் தருகிறேன். உங்கள் மன்னன் நரேந்திரபூபதிக்கு என் செய்திகளைச் சொல்லி அவரை இங்கு அழைத்து வா என்றெல்லாம் கிளியோடு பேசிக் கொண்டிருந்தாள்.

விழி - கண். மேவினார் - சென்றார். புந்தி - அறிவு. தோயல் - மயங்கல்; வாடல். தென்றல் - தென்றற்காற்று. எண்ணியல் - நோக்கம். சாடை - குறிப்பு. சலஞ்சாதித்தல் - பகையை அழித்தல். சலம் - பகை. பொருது - போர் செய்து. மணத்தல் வாசனை வீசுதல். களபம் - கலவைச் சாந்து கணப்போது - கணநேரம்; நான்கு

நிமிடநேரம். விரகம் - காமநோய்; பிரிவுத்துன்பம். சிந்தை - மனம். அங்கம் - அங்கலாய்ப்பு, புலம்பல். இங்கிதம் - இன்பம். மகிபதி - அரசன். ம்கி - பூமி. பதி - தலைவன்.

சுவடிச்சொல் - 1. பாற்கவே 2. புந்திமிகவாடிமிக. 3. றாயனும் 4. வந்து ததுக்கென் 5. வேதினை 6. அரக்கணிப்போதவர் 7. கெங்கையே 8. தெந்தநிகழ்கனியை 9. யங்கேமேநிவள் 10 வொனக்கு 11. இங்குத 12. உங்களய்யன் 13. மகுபதிக் 14. வாற்தை.

வசனம் - [1]சித்திராங்கி மோக[2]வேதனை எல்லாம் தான் [3]வளர்த்த கிளியுடனே சொல்லிக் கொண்டி[4]ருக்கிற சமயத்திலே சாரங்கதரன் விட்ட[5]புறாவும் அவ்விடத்திலே போய்ச்சேரப் [6]புறாவுக்காகச் சாரங்கதரன் [7]போகலுற்றான். (30)

சுவடிச்சொல் - 1. சித்திறாங்கி 2. வேதினை 3. வளைத்த 4. டிருக்கிற 5. பிறாவும் அவடத்திலெ 6. பிறா 7. போகலுத்தான்.

48. When will the King come
Who has gone to hunt
And watch his men kill?
Knowing that my mind is restless
Cupid is taking advantage
Exerting sway on me.
The gentle wind that blows
Adds to my agony.
Won't he come now
To destroy my loneliness?
My body is so blazing
That sandal paste and rose water
Perfumes in plenty
Cannot contain the heat.
If his coming is delayed
Life will not even linger
Dear bird, you cannot comprehend
The implications of my words
When will my darling lord
Crush me tight?
You may wonder

At my hurry and excitement
I promise you milk and fruits
Won't you reveal to the king my plight
Fetch him forthwith?

Prose: When Cittrāṅki was revealing the intensity of her passion to the bird, Cāraṅkataraṉ's other dove also sought refuge in her palace and he went thither.

49. *(சிற்றன்னையிடம் போகும் சாரங்கதரனைச் சுமந்தன் தடுத்தல்)*

போனதோர் மாயப் புறாவினுக் காய்[1]சொர்ண சம்பை
[2]தானமருள் சாரங்க தரனுமப் போது
[3]சித்தமகிழ்ந் தேததங்கள் சிறியதா யாரான
சித்திராங்கி [4]அரண்மனைக்குச் செல்வதுகண் டேதான்
மந்திரி [5]சுமந்தனும் மதியில்லை யோவுனக்குத்
தந்தையில்லா வீட்டில்நீ சாரல்வெகு மோசம்
[6]ராசரில்லா வீட்டில்நீ கூசாமல் போறதுனக்
கிரசார [7]மல்லபழி பேசாமல் வருங்காண்
மோககளிப்பட் டேயேகல் மோசமவ ளுக்குநீ
சக்களத்தி பிள்ளைகொல்லும் சத்துருவல் லோதான்.
போகாதே [8]ரத்தினாங்கி புத்திரனே போகாதே
போகாதே சாரங்க பூபதியே போகாதே
போனாலுன் மீதுமையல் தானாவாள் நிந்தைவரும்
[9]மன்னர்க்குச் சொல்லிப் [10]புறாவை [11]வாங்கிநான் தருவேன்.

தான் பறக்கவிட்ட ஆண்புறா தன் சிறிய தாயாராகிய சித்திராங்கியின் அரண்மனையிலிருக்கிறது என்பதை அறிந்த சாரங்கதரன் சிற்றன்னையின் அரண்மனைக்குச் செல்லப் புறப்பட்டான். அதையறிந்தான் மந்திரி சுமந்தன். உன் தந்தையில்லாதபோது அரசியின் அரண்மனைக்குச் செல்லுவது தவறு. இப்படிப் போவது கோள்கள் செய்யும் செயல்களாகும். இதனால் வீண்பழிவந்து சேரும். நீயோ அவள் மகன் இல்லை; சகளத்தியின் மகன் ஆவாய். இந்த உறவு முறையே பெரும்பகையாகும். இரத்தினாங்கியின் மகனே! சாரங்கதர மன்னனே! நீ போகாதே. போனால் உன்மீது காதல் கொள்ளுவாள். பெரும்பழிக்கு உள்ளாவாய். அரசர் வரட்டும்; நான் சொல்லிப் புறாவை வாங்கித் தருகிறேன் என்றெல்லாம் கூறித் தடுத்தான் சுமந்தன்.

சொர்ணம் - பொன். தானம் - தருமம். மதி - அறிவு. சாரல் - சேர்தல், செல்லுதல். கூசாமல் - அச்சமில்லாமல். கிரசாரம் - கிரகசாரம் - கோள்களினால் ஏற்படும் பலன். ஏகல் - செல்லுதல். சகளத்தி - ஒரே இடத்தில் வாழ்க்கைப் பட்டவள்; தன் கணவனையே மணந்த மற்றொரு மனைவி. சத்துரு - பகை. நிந்தை - பழி.

சுவடிச்சொல் - 1. சொற்ன 2. தானமறுள் 3. சித்தமகுழ்ந் 4. அரமனைக்கி 5. சுமுந்தனும் 6. றாசரில்லா 7. மல்லப்பழி 8. றத்தினாங்கி 9. மன்னற்குச் 10. பிறாவை 11. வாங்கினான் தருவேன்.

வசனம் - இந்தடவநேகம் மந்திரி சொல்ல மன்னவன் குமாரன் என்னவென்றுரைப்பான்.

(31)

49. When Cāraṅkataraṉ knew
That his dove had sought refuge
In his step mother's palace
He decided to proceed thither
Cumantaṉ reading his thoughts
Forbade him from visiting stepmother
When the father was away.
He strongly felt that such an act
May give room for scandal and calumny
You are not her son
But the progeny of the co-wife
Obviously the relationship
Is rooted in hostility;
Oh, noble son of Rattiṉāṅki!.
Pray avoid going there;
Who knows,
The woman may fall
Violently for you
Your unsullied name
Would suffer setback
Let the king return from hunting
I shall myself recover the bird.
Cumantaṉ's speech
Was surcharged with emotion

Fervently he made a plea
To give up the plan.

Prose: What was the reaction of the prince to the sage counsel of the minister's son?

50. *(தாயிடம் மகன் செல்லுவது தவறா என மறுத்தல்) திரிபுடை*

[1]பெற்ற தாயகம் பிள்ளை போவது
பிழையென் றேசொல்லி னாயிப் போதுநீ
கற்ற கல்வியுன் புத்தி யிதிலே
காணலாச்சே!
[2]நொந்து பெற்றவள் இரத்தி னாங்கிபின்
[3]நோவில் லாமல்பெற் றாள்சித்தி ராங்கினி
மந்திரிநீ சொன்ன வார்த்தை உலகத்தில்
வழங்கு மோதான்
திட்டி நீசொன்ன [4]வார்த்தை வேறொரு
துஷ்டர் வந்து சொன்னா லவர்களை
வெட்டி இரண்டுதுண் டஞ்செய் வேனது
கெட்டி கண்டாய்
மந்திரி மகன்நீ மன்னன் [5]மகன்நான்
பிராண சிநேகித மாதலால்
இந்த ஒருபிழை பொறுத்தேன் பிழைபோ நீ
எதிர்நில் லாதே.

பெற்ற தாயின் வீட்டிற்கு மகன் செல்லுவது தவறு என்று சொல்லும் உன்னுடைய புத்தியை என்னவென்று சொல்வேன்? பத்துமாதம் சுமந்து பெற்றவள் இரத்தினாங்கியே யாயினும் சித்திராங்கியும் தாயல்லவா? நீ சொன்னதுபோல வேறு யாரேனும் சொல்லியிருந்தால் அவர்களைக் கொன்றிருப்பேன். நாட்டு அமைச்சரின் மகனாகிய நீ என்னுடைய உயிர்த்தோழன் ஆனதால் உன்னை மன்னிக்கிறேன் என்று கூறிச் சுமந்தனை வெளியே போகச் சொன்னான் சாரங்கதரன்.

தாயகம் - தாய்வீடு (அரண்மனை). நொந்து - பிரசவ வேதனையடைந்து (10 மாதம் சுமந்து). கிட்டி - அருகில் வந்து. பிராண சிநேகிதன் - உயிர்த்தோழன்.

சுவடிச்சொல் - 1. பெத்த 2. னொந்துபெத்தவள் றத்தினாங்கி 3. னோவில்லாமல் பெத்தாள் 4. வாற்தை 5. மகன்னான் பிறாணஸ்தினேகித.

வசனம் - மெத்த சாரங்கதரன் கோபிச்சுக் கொண்டு கடூரமான [1]வார்த்தை சொல்ல [2]அதற்கு மந்திரி சுமந்தன் [3]ஏது சொல்வான். (32)

சுவடிச்சொல் - 1. வாற்தை 2. அதுக்கு 3. யேது.

50. Are you in your senses
To forbid son from visiting mother?
Though Rattiṉāṅki bore me in womb
Is not Cittirāṅki also my mother?
If only any one else had uttered this
I would have killed him on the spot
Since you happen to be minister's son
And my boon companion
I am inclined to forgive the lapse,
At any rate, off you go from my presence!

Prose: When Cāraṅkataraṉ burst out, what did Cumantaṉ say?

51. *(அமைச்சன் கருத்தை அரசன் ஏற்கவேண்டும் எனல்)*

அய்யய்யோ உனக்குநான் — சம்பை
ஆம்வார்த்தை சொல்லினால்
[1]வெய்யசொல்லா லென்மனம்
வெறுக்கவுரைப் பார்களோ
வெறும்பேச்சல் லாமலதில்
வினையமுட னேஒருவர்
வெறும்பேச்சுப் பேசினால்
அறிந்துகொள்ள வேணும்.
[2]மன்னவன்நீ யல்லவோ
மந்திரிநா னல்லவோ
[3]எந்தனிட வார்த்தையை
மெய்யாக்கேழ்க்க வேணும்.

நிகழவிருப்பது என்ன என்பதைச் சொன்னேன். இதற்கு இப்படி மனம் நோகப் பேசலாமா? பயனற்ற பேச்சாக இல்லாமல், அமைச்சனாகிய நான் நடக்க விருப்பதை நயமாக எடுத்துச் சொன்னேன். மன்னவனாகிய நீ உண்மையை அறிந்து கேட்டு அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினான் சுமந்தன்.

ஆம்வார்த்தை - நடைபெறவிருக்கின்ற செயல்களைப் பற்றிய சொல். வெய்யசொல் - கொடியசொல். வினையம் - பக்குவம்; மரியாதை.

சுவடிச்சொல் - 1. வெய்யச்சொல்லா 2. மன்னவநீ 3. என்தநிட

51. Why do you hurt my feelings
Afterall, I told you what would happen;
It was not idle talk
But the dropping of a hint with subtlety
I did it in my capacity as minister
And you have to give weight to my counsel
Said sad Cumantan.

52. *(சாரங்கதரன் சிற்றன்னை அரண்மனைபுகுதல்)* **நிபதை**

இப்படி மந்திரி ஏதுசொன் னாலும்
ஒப்பியி ரான்சொன்ன உரையெலா மறுத்து
துரிதமாய் நடந்திட சுமந்தன்பின் னையுந்தான்
வருவது சொன்னேன் படுவது படென்றும்
நெடுமதி யாலிவன் நிகழ்த்தவு மய்யோ
கெடுமதி யாலிவன் கேளாம லேகி
[1]அரண்மனை யுள்புகுந்து அதிசீக்கிர மாக
[2]இரவியு மிந்துவு மிலங்குதல் போல
சத்திய வானுயர் சாரங்க தரவேள்
[3]வஸ்துநா யகமங்கே வருவது கண்டு
கச்சிள மூலைமுகக் கன்னிசித்தி ராங்கி
இச்சைகொண் டவர்க்கெதிர் எழுந்துவந் தாளே.

சுமந்தன் தடுத்துச் சொன்னதையெல்லாம் ஏற்காத சாரங்கதரன் அரண்மனை நோக்கி விரைந்தான். வரப்போவதை என் அறிவுக்கு எட்டியவாறு எடுத்துச் சொன்னேன். அழிவைத் தரும் தன் அறிவால் நான் சொன்னதைக் கேளாமல்

செல்லுகிறான். வருவதை அனுபவிக்கட்டும் என்று எண்ணி சும்மாயிருந்துவிட்டான் சுமந்தன்.

விரைந்து சென்ற சாரங்கதரன் சித்திராங்கியின் அரண்மனையுள் புகுந்தான். உயர்ந்த பண்பையுடையவனும், சத்தியம் தவறாதவனும், உலகப் பொருள்களின் தலைவனாக விளங்குபவனுமாகிய சாரங்கதரன் அங்கு வந்தது சூரியனும் சந்திரனும் இணைந்து வந்தது போல இருந்தது. அவன் வருவதைக் கண்ட சித்திராங்கி மிகவும் மகிழ்ச்சியடைந்தவளாய் எதிர்நோக்கி வந்தாள்.

ஒப்பியிரான் - உடன்படாதவனாக. மறுத்து - எதிர்த்து; உடன்படாமல். துரிதம் - விரைவு, வேகம். படுவது - அனுபவிக்க வேண்டுவது. படு - அனுபவி. நெடுமதி - நீண்ட அனுபவ அறிவு. கெடுமதி - அழிவைத் தரும் அறிவு. இரவி - சூரியன். இந்து - சந்திரன். இலங்குதல் - விளங்குவது. வஸ்து - பொருள். நாயகம் - தலைவன். கச்சு - மகளிர் மார்புக்கச்சு. இச்சை - விருப்பம்; ஆசை.

சுவடிச்சொல் - 1. அரமனையுள்ப்புகுந் 2. யிரவி 3. வஸ்துனாயக.

வசனம் - எதிர்கொண்டெழுந்திருந்த சித்திராங்கியைப் [1]பார்த்து சாரங்கதரன் ஏது சொல்வான். (33)

சுவடிச்சொல் - 1. பாத்து.

52. Paying little heed to Cumantaṉ's advice
Cāraṅkataraṉ moved towards the palace
'I prophesied the doom that awaits him
In the light of my judgement and discretion,
If he flouts my counsel
Let him reap the consequences'
Muttered Cumantaṉ and kept mum.
Cāraṅkataraṉ stepped into Cittirāṅki's palace,
The embodiment of sweetness and light
Noted for rectitude and sterling merits,
The lord of all worldly possessions.
It looked as though the sun and moon
Had walked in unison.
On seeing him enter the palace
Happy Cittirāṅki came to greet him.

Prose: What did Cāraṅkataraṉ tell Cittirāṅki who warmly greeted him?

53. *(சிற்றன்னையை வணங்கிப் புறாவைக் கேட்டல்)* **சம்பை**

சரணமம்மா சரணம் சரணமம்மா யின்னம்
சரணமம்மா உனக்கு சரணங்கா ணம்மா
எந்தன் புறாவிங்கே வந்ததல்ல வோஅதனைத்
தந்தனுப்ப [1]வேணுங்காண் தாயேயென் தாயே.
பிள்ளைதனக் கெதிர்கொண்டு [2]பெற்றதாய் வாறதென்ன
[3]பிள்ளையல்லோ எதிர்கொள்வது [2]பெற்றதாய் தனக்கு.

வணக்கம் அன்னையே! பெற்ற தாயைப் பிள்ளை தான் எதிர்கொண்டு அழைக்க வேண்டும். பெற்றதாய் மகனை எதிர்கொண்டழைக்கலாமா? தாயே! என்னுடைய புறா இங்கே வந்ததல்லவா? அதைக் கொடுத்து என்னை அனுப்பிவையுங்களம்மா என்றான் சாரங்கன்.

சரணம் - வணக்கம். வாறது - வருவது என்பதன் வழக்காற்றுச் சொல்; கொச்சை மொழி.

சுவடிச்சொல் - 1. வேனுங்கான் 2. பெத்ததாய் 3. பிள்ளையல்லோவோ.

வசனம் - [1]இவன்மொழி இருசெவிக் கேறுதலின்றி, அவன் பேரில் மையலால் அங்கேது சொல்வாள். (34)

சுவடிச்சொல் - 1. யிவன்மொழி.

53. I bow to thee most revered mother!
Is it proper for mother to formally receive her son?
Methinks it would be more graceful
The other way round.
Mother, would you kindly restore my bird
And permit me to take leave?

Prose: Without paying heed to his words, how did Cittirāṅki speak lustily?

54. *(சித்திராங்கியின் வரவேற்பு)* **திரிபுடை**

கடுக்கன் [1]சரப்பளி பொன்னி [2]னரைஞாண்
கைக்கு வேண்டிய அஸ்த கடகமும்
உடுக்கும் [3]புடவைபொற் தட்டில் பாகையும்

மடிப்பி னுடனே சந்தனம் [4]பன்னீர் மணத்திடும்
கெந்த வடிமலர் விந்தையாய்க் கொண்டு
வந்துசாரங்க தரன்முன் [5]வைத்தனள் அந்தநீலி
வெள்ளை [6]வெற்றிலைப் பிளவு [7]கற்பூரப்
பிடவை யங்களும் வைத்துக் கீழ்க் கண்ணின்
கள்ளப் பார்வைகள் [8]பார்த்து நின்றதை
மெள்ள அறிந்தே உடமையே
னிந்தப் பிடவை யென்தலைக்
குறுதி யாகதலைப் பாகையேன்
கந்தப் பொடிகளேன் [9]தின்னும் விடையமேன்
மணப்புட்ப மேன்தான்
தந்தை தாயவர் தேடும் [10]பொருள்பிள்ளை
தன்னுதலோ வென்றுமனை புகுந்தஉன்
மைந்த னுக்குப் புறாவை மாத்திரம்
மன்னியம்மா.

கடுக்கன், சரப்பளி, பொன்னாலான அரைஞாண்கயிறு, கைக்கடகம், உடை, தலைப்பாகை ஆகிய ஆடையாபரணங்களை ஒரு பொன்தட்டிலே வைத்து, மணம் வீசும் சந்தனம், பன்னீர், மணமிக்க மலர்கள் ஆகியவற்றையும் உடன்வைத்து அதிசயிக்கக் கூடிய முறையிலே கொண்டு வந்து சாரங்கதரன் எதிரிலே வைத்தாள் சித்திராங்கி. வெற்றிலைப் பாக்கும் மணப்பொருள்களும் நிறைந்த தட்டையும் அவன் முன்னே வைத்துத் தன் ஓரக்கண்களால் பார்த்தபடி நின்றாள்.

தன் சிற்றன்னையின் கள்ளப்பார்வையை அறிந்த சாரங்கதரன் இந்த நகைகள், உடை, தலைப்பாகை ஆகிய இந்தப் பொருள்கள் எல்லாம் எதற்காக? தந்தைதாயர் விரும்பித் தேடுவது குழந்தைச் செல்வமே; உங்கள் மகனாகிய நான் தங்கள் வீட்டுக்குள் வந்தது என் புறாவுக்காக மட்டுமே; அதைமட்டும் எனக்குக் கொடுத்து உதவுங்கள் என்றான்.

கடுக்கன் - ஆடவர் காதணி, சரப்பளி - வயிரக்கழுத்தணி, அரைஞாண் - இடுப்புக்கயிறு. அஸ்தம் - கை. பாகை - தலைப்பாகை. கந்தமலர் - மணம் மிக்க பூக்கள். விந்தை - ஆச்சரியம். நீலி - திருட்டு உள்ளமுடைய சித்திராங்கியைக் குறித்தது. பிளவு - வெட்டுப்பாக்கு. விடையம் - விடயம் - பொருள்கள். மணப்புட்பம் - வாசனை உள்ள பூக்கள்.

சுவடிச்சொல் - 1. சறப்பளி 2. னரைனாள் 3. பிட்வை 4. பனிநீர் 5. வய்த்தனள் 6. வெத்திலை 7. கற்ப்பூர 8. பாத்து 9. தின்றும் 10. பொறுள்

54. Cittirāṅki offered Cāraṅkataraṉ
Ear rings and diamond chain in gold plate
Ornaments for the arm, dress, laced turban
Along with rose water, sandal paste and flowers
Which instantly took him aback
Casting a coquettish side glance
She gave in another plate betel to chew
And many other sweet smelling items.
While trying to read step mother's motives
Cāraṅkaṉ wondered why she should gift him
Jewels, dress and turban,
Afterall parents seek only children's proximity.
Mother, let me make my intentions clear,
I have come to your place
To recover my lost dove;
Would you be good enough to return it?

55. *(சித்திராங்கியின் காதல் மொழி)* சம்பை

உன்னைநான் கண்டுமன முருகிமய லாகினேன்
என்னைநீ அணைந்துசுகித் திருக்கநினை கண்டாய்
பாவிமன் மதன்கணை ஏவவே பொறாதுநீ
மேவிமரு வாவிடிலென் சீவனும்நில் லாது
காமனுக்கு விழியெங்கே கண்டவிட்த் தேயந்தக்
காமநீர் தீயென்றுங் கன்னிநான் அலவோ.

சித்திராங்கி சாரங்கதரனை நோக்கி, உன்னைக் கண்டதும் உன்மீது மயக்கம் கொண்டேன். காமன் விடும் மலரம்பை என்னால் பொறுக்க முடியவில்லை. இல்லையேல் என் உயிர் நீங்கும். காமனுக்குக் கண்ணில்லை. காமநோய் கன்னியாகிய என்னை எரிக்கிறது. ஆகவே என்னை அணைத்துச் சுகம் தாருங்கள் என்றாள்.

மதன்கணை - அசோகு, குவளை, தாமரை, மா, முல்லை ஆகிய மலர்களாலானது. சீவன் - உயிர். மருவுதல் - கூடுதல்.

வசனம் - மன்மத விகாரத்தினாலே சித்திராங்கி தன்னுடம்பு தனக்குத் தெரியாமல் சொல்ல சாரங்கதரன் ஏதென நொந்து கொண்டு சொல்வான். (35)

55. Spoke the coquettish Cittirāṅki,
The moment I cast my eyes on you
I desperately fell for you
Unbearable are the shafts
Which Cupid is releasing incessantly,
Unless my passion is cooled,
Who knows, I may die miserably.
Love is blind,
The flame of lust
Is threatening to consume me,
Please hug me tight
And give me pleasure.

Prose: When love-lorn Cittirāṅki prattled thus, what did Cāraṅkataraṉ say in pain and disgust?

56. *(சாரங்கதரன், காதை மூடிக் கொள்ளுதல்)* **அர்த்த சந்திரிகை**

அரகரா வென்றுசெவி அங்கய்யில் மூடி
நரகம் [1]விளைந்ததென்று நல்முகம் வாடி
மந்திரி சொல்லிய வசனம்மெய் யாச்சு
நிந்தனை [2]வந்தது நேர்த்தியுன் பேச்சு
தாயே இப்படிநீ தான்சொல்லத் தகுமோ
சேயெந் தனக்கிது [3]செவிதனிற் புகுமோ
[4]வாய்தனி லேயிந்த வசனமே னுனக்கு
[4]வாய்தனி லேசொல்ல வரும்பாவ மெனக்கு

சித்திராங்கியின் சொற்களைக் கேட்ட சாரங்கதரன் அரகரா என்று கூறியவாறே தன் காதுகளை மூடிக்கொண்டான். ஐயோ, பெரும்பாவம் தோன்றிவிட்டதே! சுமந்தன் கூறியபடியே நடந்துவிட்டதே! பழிநேர்ந்து விட்டதே என்றெல்லாம்

எண்ணி வருந்தினான். முகம் வாடியது. சிற்றன்னையைப் பார்த்துத் தாயே! நீங்கள் இப்படிச் சொல்லலாமா? இந்தச் சொல் என் காதுகளில் விழலாமா? இதைச் சொன்னாலே எனக்குப் பாவம் வந்து சேருமே! என்று மனம்நொந்து கூறினான்.

அங்கய் - அங்கை - அகங்கை - உள்ளங்கை. நிபந்தனை - பழி. நேர்த்தி - நன்றாக; எதிர்மறைப் பொருளில் வந்தது. சேய் - மகன்.

சுவடிச்சொல் - 1. விளைந்துதென்று 2. வந்துதுநேத்தி 3. செவிதனில்ப் புகுமோ 4. வாயிதனி.

வசனம் - மனம்நொந்து சாரங்கதரன் அன்னையைப் [1]பார்த்துப் பின்னுமென் சொல்லுவான். (36)

சுவடிச்சொல் - 1. பாத்து

56. On hearing the words of Cittirāṅki
Cāraṅkataraṉ said *Arahara* in expiation,
Shut his eyes and exclaimed,
An act of sin has taken place
Cumantaṉ's words have come true,
This will cast slur on reputation
He then chose to address step mother,
Revered mother, does it become of you?
Should you utter such salacious words
And me, your dear son listen to it?
Even if this act of yours is orally told,
Great sin will be at my door,
Obviously his speech smacked of pain.

Prose: What more did Cāraṅkataraṉ, the grief-stricken, tell his step mother?

57. *(உயிருக்கே உலை)* சம்பை

அடுக்குமோ உனக்கிந்த அபகீர்த்தி வார்த்தைசொல்ல
பிடித்ததோ [1]பேய்ப்பித்த மெடுத்ததோ உனக்குப்
பாவமல்ல வோகொடிய [2]பழிகாரி எந்தனிட
சீவனுக்கு [3]உலைவைத்த செய்கைநன் றாச்சு

பத்துமாதம் சுமந்தபாவை ரத்தினாங்கி பொய்யும்
சித்திராங்கி உனைமெய்யுமாய்ச் சிந்தித்திருப் பேன்காண்.

மேலும் பேசத் தொடங்கிய சாரங்கதரன், பெற்ற தாயைவிட, தங்களையே உண்மையான தாயாக எண்ணியிருக்கும் மகனாகிய என்னிடமே மிக இழிவான இந்தச் சொல்லைச் சொல்லும் அளவிற்குத் தங்களுக்கு என்ன பயித்தியமா பிடித்திருக்கிறது? அல்லது பேய் பிடித்திருக்கிறதா? என்னுடைய உயிருக்கே ஆபத்தை உண்டாக்கக் கூடிய தங்கள் பேச்சு மிகவும் நன்றாக இருக்கிறது! பெரும்பாவத்தையல்லவா உண்டாக்கும்? என்று வெறுத்துப் பேசினான்.

அடுக்குமோ - தகுமோ? ஏற்றதாகுமா? அபகீர்த்தி - இகழ்ச்சி. பித்தம் பைத்தியம். சீவன் - உயிர். உலை - அழிவு. சிந்தித்து - எண்ணி.

சுவடிச்சொல் - 1. பேய்பித்த 2. பழிகாறி 3. உலைவய்த்த

வசனம் - சிந்தை வியாகுலமாய் [1]நொந்து கொண்டுரைக்கும் வேந்தன் குமரனுக்கு [2]ஏந்திழை அங்கே அறிவு நீங்கிய முறை சிலவுரைப்பாள். (37)

சுவடிச்சொல் - 1. னொந்து 2. யேந்திழை

57. Spoke he in sheer despair,
Mother, are you in your right senses?
How utter those sin-laden words
When it is so well-known that
The love I bear you is more than
What I bear my real mother,
Are you possessed?
Your speech which may cost my life
Is bizarre indeed!
Will not this outrageous act
Generate great sin?

Prose: What perverse advice did the woman dole out to the prince in the grip of despair?

58. (நான் பெற்றதாய் இல்லை எனல்) திரிபுடை

தனக்குப் பிறந்தவர் கூடப் பிறந்தவர்
[1]தனைப்பெற்றா ரல்லாமல்

எனக்கு முனக்குமுறை திருமுறை [2]யென்னமுறை
[3]தண்ணி முறையோ!
பத்துமா தம்சுமந்து [4]பெற்றிடும் பாவை
நானே யாகில்அப் பாவங்கள்
சுத்தும் நரகத்தில் வீழ்வருனக் கென்ன
புத்தி யிலையோ?
காமநோய்ப் பரிகாரம் செயல்பிச காமென்றே
சொல்வதேன் மன்னாவொரு
நேமமாய் அருள்பார் கண்டாய் எந்தன்
நேம முலைமேல்.
புருஷர் வனிதையர் தனைக்கண்டா லங்கே
புல்கவே மனம்பொருந்திப் பேசுவர்
[5]அரிவையர்கள் வலியப் பேசுவ
[6]தார்க்கு லாபம்மதுர
வாய்மொழி பேசியே கனி
வாயினாலொரு முத்தி தந்துநீ
அதர பானஞ்செய் தால்என்
விரகத்துக்கு அதுவே போதும்
என்னை நீமரு வாவிடில் எனக்கு
ஏது பிழைப்பினி யேது சுகந்தான்
உன்னைப் போகஓட் டேன்இவ்
வேளை பின்னை வருமோ?

நான் பெற்ற பிள்ளைகள், என் உடன் பிறந்த சகோதரர்கள், என்னைப் பெற்ற பெற்றோர்கள் ஆகியவர்களே என்னோடு உறவுமுறை யுடைவர்களாவார்கள். ஆனால் எனக்கு முனக்கு எந்தமுறை உறவு இருக்கிறது? தண்ணீரில் மேல் எழுதப்பட்டது போன்று நிலையற்ற முறையே! நான் பத்துமாதம் சுமந்து உன்னைப் பெற்றிருந்தால் நீ கூறியபடி எனக்குப் பாவம் வந்துசேரும்; நரகத்தில் வீழ்வேன். இது கூட உனக்கு தெரியவில்லை; நீ எனக்குப் புத்தி சொல்லுகிறாய். காமநோயைப் போக்குவது தவறு என்று சொல்ல முடியாது. மன்னவனே அன்போடு எனக்கு அருள்புரிவாயாக.

ஆடவர் ஒரு பெண்ணைக் கண்டால் அவளை அடையவே எண்ணுவர். ஆனால் பெண்ணே வந்து வலிய பேசுவது யாருக்கு லாபம்? இனிமையாகப் பேசி,

முத்தமளித்து என் இதழைச் சுவைத்தால் என்னுடைய காமநோய்க்கு மருந்தாக இருக்கும். என்னை அணைத்துச் சுகம் தரவில்லையானால் எனக்குச் சுகமும் இல்லை; உயிரும் இருக்காது. இந்த வாய்ப்பான நேரம் இனி கிடைக்காது. எனவே நீ இங்கிருந்து போகவிடமாட்டேன் என்றாள் சித்திராங்கி.

தண்ணிமுறை - ஒட்டாத உறவு முறை. சுத்தும் - சுற்றும் - வந்துசேரும். பரிகாரம் - நீக்குதல், குணமாக்குதல். பிசகு - தவறு. நேமம் - நியமம், முறை. வனிதை - பெண். புல்க - அணைய. அரிவை - பெண். மதுரம் - இனிமை. அதர்பானம் - இதழ்சுவைத்தல். விரகம் - காமநோய். மருவுதல் - அணைதல். ஒட்டேன் - உடன்படேன். இவ்வேளை - இதுபோன்ற சமயம். பின்னை - பிறகு; மற்றொரு சமயம்.

சுவடிச்சொல் - 1. தனைப்பெத்தார் 2. யென்னாமுறை 3. தன்றி 4. பெத்திடும் 5. அருவையர் 6. தாற்குலாபம்

வசனம் - அடாத வார்த்தை யங்கவள் சொல்லக் கெடாத கீர்த்திமான் கிளவி யென் சொல்வான்.

(38)

58. My sons, whom I have borne,
And no doubt my brothers,
So are my parents
United by the same blood
But how are you related to me?
The Kinship that you claim
Is like the writing on water
If only I had carried you in womb
For ten full months
Sin would definitely visit me,
I may even be thrown into hell
Don't you know even this much
Who dare to sermonize?
Come to my rescue, young prince
Cooling another's lust is no sin
Men are always prone to love
Women whom they run into;
When a woman herself invites
It is unwise to shun it.
Come my boy, speak sweet words

Imprint hot kisses on my lips
So that the raging passion shall subside
If you don't crush me tight
And give me pleasure
Alas, I shall cease to be merry
And even life may become extinct
Who knows, time may not again be opportune,
I shall not therefore allow you to go.

Prose: When she uttered these sinful words, how did the young man of character react?

59. *(தாய்க்கு மகன்மீது காதலா?)* **சிந்து**

நீதான் சின்னப் [1]பேச்சுக்கள்
பேசுவும் நீதியோ வம்மா
மாதாவே சித்தி ராங்கியம்மாநீ
மகனென்று பாராமல் *(நீதான்)*
பூமியி லேமழை கால்கொண் டிறங்கிப்
போதப்பொழிந்திடுமோ
தாய்மகன் மீதில் ஆசைகொண்டா லென்று
[2]தானதைக் கேட்டதுண்டோ *(நீதான்)*
நாவினிலே உலகோர் கதையாக
நவிலவே யிப்போது
கேவல முன்பின் [3]எண்ணாமல் கலிகாலக்
கேடோ தெரியாது *(நீதான்)*
சீதரன் வேதன் முனிவர்கள் [4]யாவர்க்கும்
தெரியாத வன்கூத்து
பேதமை யென்பது மாதர்க் [5]கணிகலம்
பிள்ளை முகம்பார்த்து
நீதான் சின்னப் பேச்சுக்கள் பேசவும்
நீதியோ வம்மா.

அன்னையே! என்னை மகனென்றும் எண்ணாமல் மிகவும் அற்பமாகப் பேசும் இந்த வார்த்தைகள் தங்களுக்குத் தகுமா? இனி இவ்வுலகில் மழைதான் பொழியுமா? தாய் மகன்மீது காதல் கொண்டாள் என்பதை எங்காவது கேட்டிருக்கிறீர்களா? இந்தச் செய்தியைக் கேட்டால் உலக மக்களின் வாய் சும்மா இருக்குமா? மிகக் கேவலமாகக் கதைக் கதையாகப் பேசுவார்களே! இது என்ன கலிகாலத்தின் கொடுமையா? பிரம்மனும் திருமாலும் முனிவர்களும் அறியமாட்டார்கள் என்று எண்ணி இப்படி நடந்து கொள்ளுவது கொடுமை; அறியாமை என்பது மகளிருக்கு ஆபரணம் போன்றது என்னும் கருத்தும் நிலையாகிவிடுமே. மகனைப் பார்த்து இப்படிப் பேச வேண்டாம் என்று மன்றாடினான் சாரங்கதரன்.

சின்னப்பேச்சு - இழிந்த பேச்சு. மாதா - அன்னை, தாய். கால்கொள்ளுதல் - தோன்றுதல். போத - நிறைய. நவிலுதல் - பேசுதல். கலிகாலம் - கலியுகக்காலம். கீதரன் - திருமால். வேதன் - பிரமன், கடவுள். பேதமை - அறியாமை. அணிகலன் - ஆபரணம்.

சுவடிச்சொல் - 1. பேசுக்கள் 2. தானத்தை 3. எண்ணாமல்க் 4. யாவற்க்கும் 5. கணிக்கலம்

வசனம் - வகைவகையாக மகன் சொல்லும் நன்மொழிக்கு மெல்லியும் விரக வேதனையால் பின்னும் ஏதெனவுரைப்பாள். (39)

59. Revered mother,
Does it become of you
To address your son
Mean and sinful words?
The very heavens would shudder
And there won't be any rain.
A mother falling for son
Is blasphemous and unheard of;
Will it not give room for slander
Among the common folk?
Am I to blame *Kali Yuka*
For your infamous act?
Cruel indeed to behave like this
Forgetting Piraman, Tirumāl and the saints;
By this ignoble act you justify for all time
That ignorance is the jewel of women.

Revered mother, I beseech you
Not to repeat words of sin.

Prose: Listening to the wise words of the son, how did the lust-ridden woman react?

60. *(உன் அழகில் மயங்கினேன்)* *சிந்து*

ஆசை யானேனே [1]உன் மார்க்கம்நான்
அறியாமற் [2]போனேனே
தேசம் புகழ்ம கேந்திரா வதிகாரா சிறிய
சாரங்க தாரா [3]அவதாரா (ஆசை)
உன்னைக்கண் டேனெனக்கு ருதுகாயம்
சொன்ன வசனத்துக்குச் சொல்லோ ருபாயம்
என்னைக்கண் டேயுனக் கில்லைஉச் சாயம்
ஏதுசெய் வேனினி யுன்முக மாயம் (ஆசை)
சரசம் [4]பண்ணாதது வேவெகு தொல்லை
சங்கை யென்னாலோ சனைக்கிட மில்லை
விரக மன்மதன் கையம்பு விலலை
விலக்கி விடாவிடில் மெத்தவுங் கல்லை (ஆசை)
தொந்தரை இல்லைநான் சொல்வது ரெண்டேசொல்
உன்னைப் பிள்ளையென் பதுவுமோ ஈண்டே
அந்தமதன் [5]னென் னவாக்களி யுண்டே
ஆகையி னாலுன் னழகது கண்டே
[6]ஆசையானேனே [1]உன்மார்க்கம்நான்
அறியாமற் [2]போனேனே.

நாடுபுகழும் இந்திரன் நீ! எல்லா திறமைகளையும் பெற்றவன் நீ! மானிட அவதார மெடுத்துச் சாரங்கதரன் என்ற பெயர்பெற்ற இளைஞன் நீ! உன்னுடைய சிறந்த குணங்களை இதுவரை அறியாமலிருந்துவிட்டேனே? உன்னைக் கண்டவுடன் எனக்கு ஏற்பட்ட காதலுணர்ச்சியால் பேசினேன். அந்தப் பேச்சுக்கு ஒரு வழியை நீதான் சொல்ல வேண்டும். என்னைக் கண்டும் உனக்கு ஆசை ஏற்படவில்லையா? உன் முகத்தின் சக்தி என்னை வாட்டுகிறது. என்னோடு அன்பு வார்த்தைகள் பேசி இன்பம் தராமலிருப்பது எனக்கு வேதனையைத் தருகிறது. வெட்கத்தால் சும்மா இருக்கவும் என்னால் முடியவில்லை. சாடை செய்யவும் இங்கு வாய்ப்பு இல்லை (இருவரும் அருகில் இருக்கிறோம்). மன்மதனின் மலரம்புகளை நீ விலக்கி

விடாவிட்டால் எனக்குப் பெரிதும் இழிவு ஏற்படும். எனவே காதல் மயக்கத்தால் மிகவும் தொல்லைப்படுகிறேன். உன் அழகால் வருந்தும் நான் சொல்வது இரண்டே கருத்து. ஒன்று உன்னை என்மகன் என்று இங்கு ஏற்க முடியாதது. மற்றொன்று அந்த மன்மதனைப் போல நீ எனக்கு இன்பமளிக்கவேண்டும் என்பது என்று வேண்டுகிறாள் சித்திராங்கி.

மார்க்கம் - உயர்குணம். மகேந்திரன் - இந்திரன். அதிகாரம் - ஆட்சித்தலைமை. அவதாரம் - உயர்ந்த பிறப்பு. ருதுகாயம் - பருவ உடல். உபாயம் - நல்ல வழி. உச்சாயம் - ஆசை. மாயம் - அழகு. சரசம் - இன்பவிளையாட்டு. சங்கை - அச்சம், கூச்சம். சனை - சன்னை - சாடை காட்டுதல். விரகம் - காமம். கல்லை - இழிவு. தொந்தரை - வருத்தம். மதனன்என்ன - மன்மதனைப்போல. வாக்குஅளி - பேசிஇன்பமூட்டு.

சுவடிச்சொல் - 1. உன்மாற்க்கம் 2. போனனே 3. அவுதாரா 4. பண்றாதது 5. நென்ன 6. ஆசையானனே

வசனம் - மேன்மேலுமவள் புன்மொழியுரைக்க நன்மதி [1]மைந்தன் நடுங்கி என் சொல்வான். (40)

சுவடிச்சொல் - 1. மந்தன்

60. You are verily Lord Intra
Renowned all over the land
Highly talented are you
Bearing the name Cāraṅkataraṉ
All these days I was unaware
Of your praise-worthy traits
My words were uttered
In the heat of extreme passion
It is up to you now
To suggest remedy for my ailment
Did not my face and figure
Kindle in you any lust?
Your handsome face
Is verily killing me
It is a pity that you are refusing
To talk sweetly, provide pleasure;
Blaming womanly shyness

I cannot any more remain inert
Woe unto me
If you do not help destroy
The flower-shafts of Cupid.
Surging passion
Is torturing me
Let me tell you two things:
Infatuated am I by your exterior
No longer can I treat you as son.
Pray, do make love like Manmata
Prattled Cittirāṅki
In the red heat of passion

Prose: Listening to the sinful talk of Cittirāṅki, what did the trembling son, the abode of virtues, say?

61. *(சாரங்கதரன் புறாவை மட்டும் கொடுத்தனுப்புமாறு வேண்டுதல்)*

தரு

அம்மா யீதென்ன பாபம்
    என்மேல் விரக தாபம்
சும்மா யிரேன்இது தோஷம் தோஷம்
நெஞ்சில் நினைத்து [1]இழைத்த
    வெஞ்சொல் சொல்லவே பாவம்
கொஞ்ச மல்லவே சொல்லிக் கொள்ளப் போமோ!
பிள்ளை யுடனே இந்த
    பொள்ளு வசனஞ் சொல்லிக்
கொள்ள வுனக்குமனங் கொண்டு தோதான்
மைந்தன்மேல் தயை [2]பண்ணி
    மன்னிப் [3]புறாவை யம்மா
சிந்தனை பண்ணவேண்டாம் சிறிய தாயே.

தாயே! என்மீது காதல் கொள்வது மிகவும் பாவம். இதைத் தங்கள் உள்ளத்தில் நினைத்ததே பாவம். அந்த எண்ணத்தை வெளியில் எடுத்துச் சொன்னது மகாபாவம். மகனுடன் இந்தத் தவறான வார்த்தையைப் பேச எப்படி மனம்

வந்தது? மகன் மீது இரக்கங்காட்டுங்கள்; மேலும் சிந்திக்க வேண்டாம்; என்னை மன்னியுங்கள்; என்புறாவைக் கொடுத்தனுப்புங்கள் என்றான் சாரங்கதரன்.

இழைத்த - செய்த (சொன்ன). பொள்ளுதல் - துளைத்தல். சிந்தனை - நினைத்தல்.

சுவடிச்சொல் - 1. இழித்த 2. பன்றி 3. பிறாவை

வசனம் - இப்படி சாரங்கதரன் சொல்ல சித்திராங்கி பின்னும் ஏது சொல்வாள்.

41)

61. Revered mother, making love to me is sin,
The very thought is repugnant
Expressing it in words is venial
I wonder how you indulged in improper speech
With your beloved son
Show mercy on your boy,
Allow not your mind to run riot,
Pardon me, please restore to me
My pet bird, pleaded Cāraṅkataraṉ.

Prose: When Cāraṅkataraṉ spoke so, what did Cittirāṅki say?

62. *(சித்திராங்கி மீண்டும் காமப்பேச்சு பேசுதல்)* **சம்பை**

பிள்ளை யென்றுநீ பேசிக்கொண்டு வாற[1]தென்ன?
பிள்ளை [2]யாயுனை நொந்து [3]பெற்ற தாயாரா?
[3]பெற்றவள் தனக்குநீ பிள்ளைமரி யாதைகாண்
[4]மற்றவள் தனக்குநீ மகனென வேமொழிதல்
பொழுதுபோ காதுனக்குப் புத்திகொஞ்ச மென்னைநீ
[5]தழுவியே அணைந்துசுகித் [6]திருக்கவொண் ணாதோ?
குரும்பைமுலை விம்மநான் விரும்பிமொழி வதுகண்டு
கரும்புதின்ன வேகூலி [7]கையில் கொடுக்கச் சொன்னாய்
எனைக்காணி லெவர்களுக்கு மிருக்கமன மொன்றுமோ [8]நீ
மினக்கெடுத்தி யாலோ சனைப்படுத்த லாமோ?

பிள்ளை என்று உரிமை கொண்டாடுகிறாய். நான் உன்னைச் சுமந்து பெற்ற தாயா? பெற்றவளுக்கு நீ பிள்ளைதான். அவளிடம் மரியாதைகாட்டு.

மற்றவளுக்கும் மகன் என்று கூறுவது பொருந்தாது. சிறிது சிந்தித்து என்னை அணைத்து இன்பத்தைக் கொடு. நானாக விரும்பிக்கேட்கிறேனே! கரும்பு தின்னவுங் கூலிகேட்பது போலிருக்கிறது. என்னைப் பார்த்தாலே யாரும் பேசாமலிருக்கமாட்டார்கள். அப்படியிருக்கவும் நீ மட்டும் வேண்டுமென்றே யோசிக்கிறாய்; இது நல்லதல்ல என்று கூறினாள்.

வாறது - வருவது. ஒண்ணாதோ - பொருந்தாதோ; கூடாதோ. குரும்பை - தென்னையின் இளங்காய். விம்முதல் - பருத்து வீங்குதல். இருக்க - பேசாதிருக்க ஒன்றுதல். - பொருத்துதல்; முடிதல். மினக்கெடுத்தி - மெனக்கிடுதல்; வேண்டுமென்றே; பயனின்றி கழிதல்.

சுவடிச்சொல் - 1. தென்னா 2. யாருனை 3. பெத்த 4. மத்தவள் 5. தழிவியே 6. திறுக்கவொன்றாதோ 7. கயில்குடுக்கச்சொல்கிறாய் 8. னி.

வசனம் - பின்னுமென் சொல்வாள். (42)

62. You claim that you are my son,
Did I bear you in my womb?
For the one who bore you,
You are son indeed and respect is due
But it is absurd and fantastic
To call me your mother.
Ponder for a while
And give my pleasure;
Don't you see, I am volunteering?
Would any one demand wages
For tasting sugarcane?
None can remain inactive
At the sight of my figure,
Why should you alone hesitate
This is highly improper.

Prose: What more did shy say?

63. *(மஞ்சத்திற்கு அழைத்தல்)* *ஏகதாளம்*

கும்பிடு தெய்வமெதிர் கொண்டுவந்
[1]தருள்பொருளை

வம்பிலே விட்டுவிட மதியுனக் கில்லையோ?
மணர்மாரன்தனி லுணர்வாகி யென்னை யிப்போ
புணரா விடிலும்நீ போவது மெய்யோ
ஆதி சிவன்நமக் களித்த[2]தெண் ணாமலே
நீதியு முணரவைத்து பேதமுஞ் [3]சொன்னாய்
இதுவேளை யிதுசமயம் எழுந்துமஞ்சத் தில்வாரும்
இதமுடனே தழுவியே யிருப்போமென் றாளே.

நீ வணங்கும் தெய்வம் ·உனக்கு விருப்பமான பொருளை உன் எதிரிலே கொண்டுவந்து கொடுத்து அருள் புரிந்திருக்கிறதே! அதை விட்டுவிடுவது உன்னுடைய அறிவுக்கு ஏற்றதல்லவே! மகிழ்ச்சியை உண்டாக்கும் காமனுடைய உணர்வுகளுக்கு அடிமையாகி, என்னைச் சேர்ந்து இன்பம் தராவிட்டால் உன்னை இங்கிருந்து போகவிடுவேனா? இறைவன் நமக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்ற இந்த நல்ல வாய்ப்பை எண்ணிப்பார்! இதைப் பயன்படுத்திக் கொள்வதை விட்டுவிட்டு நீதியும் நியாயமும் எடுத்து உரைத்து எதிர்த்துப் பேசிக் கொண்டிருக்கிறாய். உடனடியாக எழுந்து படுக்கைக்கு வாரும். இருவரும் தழுவிச் சுகித்திருப்போம் என்றாள்.

வம்பு - வீண் (வீணாக). மதி - புத்தி. மாரன் - மன்மதன். உணர்வு - உணர்ச்சி. பேதம் - மாறான கருத்து. மஞ்சம் - கட்டில். இதம் - இன்பம்.

சுவடிச்சொல் - 1. தருள்பொருள 2. தென்றாமலே 3. சொல்றாய்

வசனம் - இப்படி வாய்க்கு வந்ததெல்லாம் விரக வேதனையால் சித்திராங்கி சொல்லும் விசேஷத்தைக் கேட்டுச் சாரங்கதரன் சிந்தாக்காந்தனாகி என் சொல்லுவான்.

(43)

63. The Gods you worship
Have brought you close to your desired object
And blessed you benignly
Is it prudent to spurn it?
If you do not yield
To the thoughts induced by cupid
And bestow me pleasure,
I shall not leave you
Imagine, how divinity has
Given us a golden chance!

Instead of sensibly utilising it
You indulge in moral sermons
Which run at cross purposes
With my fervent plea;
Without wasting words, share my bed
Let us embrace and enjoy.

Prose: What did the pensive Cāraṅkataraṉ say after listening to the love prattle of Cittirāṅki?

64. *(சாரங்கதரன் பெற்றவள் வேறு, சிற்றன்னை வேறு அல்ல எனல்)*

தரு

தாங்கிமுலை தந்த [1]இரத்தினாங்கி வேறும்
நீ வேறும் போலச்
சாதுரிய மேதுக் கன்னையே!
பாங்கழியப்பேசுகிறாய்
ஆதிசேஷ னுக்குதலைப்
பாரம் பொறா தன்னையே!
என்னசொன் னாலுமுனக்
கென்னமா னாலும்
[2]புத்தியது உனக்கில்லை அன்னையே!
சொன்ன விசேஷத் துக்குக்
காசி போனாலும் பாவம்
[3]தொடரும் தொடரும் அன்னையே
[4]பெற்றவள் வேறென்றும் நீ
பெறாதவ ளென்றும்
இப்படிப் பேதிக்கிறாய் அன்னையே!
சொல்தவறித்தாறுமாறு
சொல்லினா லுன்னைப் பாவம்
[5]சுற்றாமல் போமோ அன்னையே!
[6]நாவுடை யாள்நீ சொன்னது [7]கேட்டென்
அங்கம் நடுங்குது நடுங்குது அன்னையே!

ஆவுடை யாள்வாயில் அவலம் [8]பிறக்குமோ
ஆகாது ஆகாது அன்னையே!
மிருகம் பட்சிக்குச் சாதியிலும் இல்லை
குலநலம் பறந்து போச்சுதோ அன்னையே!
எறும்பளவும் நெஞ்சம் இயையாது தலைதனில்
இடிவிழப் போகுது அன்னையே!

அன்னையே! என்னைப் பெற்றெடுத்துத் தூக்கியணைத்துப் பாலூட்டி வளர்த்த இரத்தினாங்கி வேறாகவும், நீங்கள் வேறாகவும் நினைத்து மிகத் திறமையாகப் பேசுகிறீர்களே! இது எதற்கு? தங்கள் பேச்சு முறைகேடானது. இந்த அக்கிரமச் செயல்களைச் சுமக்க ஆதிசேஷனாலும் முடியாது. பூமியைத் தாங்கும் அவனுக்கே நம் செயல் பெருஞ்சுமையாகிவிடும். என்ன சொன்னாலும் கேட்காத உங்கள் செயலால் பெரும்பாவம் வந்து சேரும். காசிக்குப் போனாலும் இந்தப் பாவம் தொலையாது.

பெற்றவள் வேறு! நீ வேறு என்றும் தவறான கருத்துகளை எடுத்துச் சொல்லும் உங்களைப் பெரும்பாவம் வந்து சுற்றிக்கொள்ளுமே. தங்கள் நாவால் கூறியதைக் கேட்க என் உடல் நடுங்குகிறது. சக்தி வடிவமாகிய உன் வாயிலிருந்து இந்தக் கொடிய வார்த்தை வரலாமா? மிருகம், பறவை ஆகியவற்றிலும் கேடான இச்செயல் குலப் பண்பையே அழித்துவிடுமே? சிறிதளவும் என் உள்ளம் இச்செயலுக்கு இடந்தராது. இதனால் தலையில் பெரும் இடிவிழப் போகிறதையும் அறிவேன் என்றான்.

தாங்கி - அணைத்து. சாதுரியம் - திறமை, சாமர்த்தியம். பாங்கு - முறை, தகுதி. ஆதிசேடன் - திருமால் பள்ளிகொள்ளும் பாம்பு உருவம். பாரம் - சுமை. பொறாது - தாங்காது. காசி - வாரணாசி எனப்படும் சிவத்தலம். பேதித்தல் - மாறுபடுதல். தாறுமாறு - ஒழுங்கில்லாமை, பண்பு குறைவு. சுற்றுதல் - வந்துசேர்தல். நா - நாக்கு. அங்கம் - உடல். ஆவுடையாள் - சக்திலிங்கம். அவலம் - கேடு, அபசகுணம். குலநலம் - பிறந்தகுலப்பண்பு. எறும்பளவு - சிறிதளவு. இயைதல் - இசைதல் - இணங்குதல்.

சுவடிச்சொல் - 1. றத்தினாங்கி 2. புத்தியில்லை 3. துடரும் துடரும் 4. பெத்தவள் 5. சுத்தாமல் 6. னாவுடையாள் 7. கேட்டனங்கம் 8. பெறக்குமோ.

வசனம் - இப்படி சாரங்கதரன் கிலேசமான வார்த்தை சொல்ல, சித்திராங்கி பின்னுமென் சொல்வாள்.

(44)

64. Revered mother, why do you discriminate
Between you and the mother who bore me?

Your talk is highly improper;
Even Āticēca would find such immoral acts
Too heavy to bear on his shoulders;
Indeed even for him
Who lightly bears the load of the earth.
The dogmatic stand of yours
Shall land us in irredeemable sin;
Even a holy trip to Benares
Would not absolve us of it.
Discriminating between mothers
Is a mighty offence against God,
And sin shall lie on you like dead-weight.
Mother, you are the personification of Cakti
And sinful words do not become of you
The act that you envisage
Shall put to shame birds and beasts
Besides casting a slur on the lineage;
I shall never be a party to this
Evil thoughts that you harbour
Spell such great disaster
That thunder itself may strike you!

Prose: When Cāraṅkatraṉ spoke so, how did Cittirāṅki react? What did she say?

65. *(சித்திராங்கி, உனக்குத்துணிவு இல்லை எனல்)* *சம்பை*

பின்னையொன்று மில்லைநீ
யன்னை யன்னை என்பதல்லால்
சொன்னபடி முடிக்கமனத்
துணிச்சலுனக் கில்லை
பிறந்தவிடத் தேயிந்த [1]*பேதமை யாவருக்குங்*
கறந்தவிடத் தேகண்கள் கழலல்அறி யாயோ!
பழிப்புமில்லை கெட்டவர்க்குப்
பாவங்களுமில்லை - என்னை

இழுக்கடிக்கும் [2]வகைசற்றே
எனக்குத்[3]தெரிந் திருக்கும்
வாயினால் நீதிசொல்லி மனத்தையடக் குதல்பாவம்
நீ என்னைக் கூடில்பாவம் [4]நீங்குமந் நேரம்
ஆண்பிள்ளை நீயல்வோ ஆசையுனக் கில்லையோ
ஊணறிஞ்சு உண்டுதுயில் ஆடையுடுக் கிலையோ?

தாய், தாய் என்று சொல்லுவதைத் தவிர வேறு ஒன்றும் உனக்குத் தெரியாது. சொன்னபடி செய்யும் மனத்துணிவு உனக்குச் சிறிதுமில்லை. இது பிறந்து வளர்ந்த சூழ்நிலையால் ஏற்பட்ட அறியாமையாகும். ஆனால் பிறந்த சூழ்நிலையை விட்டு வேறிடத்துக்குச் சென்றால் கண்களின்பார்வை பலவிடத்துக்கும் செல்லும். பார்த்த பொருள்களின் மீது விருப்பம் ஏற்படும். அப்போது வளர்ந்த சூழ்நிலையிலிருந்த அறியாமை நீங்கிவிடும். இந்த உண்மையை நீ அறியவில்லை. இதனால் பழியோ பாவமோ யாருக்கும் ஏற்படாது. என்னை இவ்வாறு அலைக்கழிப்பது தெரிகிறது. இது நீதியில்லை; நியாயமில்லை என்றெல்லாம் வெளியிலே பேசி உண்மையான உணர்ச்சிகளை அடக்கி வைப்பதே பெரும் பாவம். எனக்கு இன்பமளித்தாலே போதும்; பாவம் தானே நீங்கிவிடும். நீ உணவின் வகையும் சுவையும் பார்ப்பதில்லையா? உணவு உண்டு பசியைப் போக்கிக்கொள்ளுவதில்லையா? உடை உடுத்தி மானத்தைக் காத்துக் கொள்ளுவது இல்லையா? தூங்கிச் சோர்வைப் போக்கிக் கொள்வதில்லையா? நீ ஆண்பிள்ளை தானே? உனக்கு ஆசை என்பதே இல்லையா என்றெல்லாம் கேட்டாள்.

பேதமை - அறியாமை. கறந்தவிடம் - கரந்தவிடம் - மறைவான இடம். கழுவுல் - நெகிழ்தல், விரும்புதல். இழுகுகடித்தல் - அலைக்கழித்தல்; தாமதமாக்குதல். ஊண் - உணவு. துயில் - தூக்கம்.

சுவடிச்சொல் - 1. பேதம்மை 2. வகைசத்தே 3. தெரிஞ்சிருக்கும் 4. நீங்கும்மன்னேரம்.

65. You are so obsessed. with mother
That you lack the will to act;
This is ignorance
Born out of bad upbringing
If only you visit a new place,
Your outlook will widen
Destroying the blinkers you wear.

You shall then emancipate yourself
From bad formative influences
See things from a new angle
And learn to love them
This will not spell sin
Or total disaster;
Sermonizing on fairplay and justice
Suppressing one's real feelings
Is the height of hypocrisy and sin
If only you venture to satisfy me
All sin will melt in the air.
Don't you satisfy your hunger
With choice and varied food?
Or hide your shame with clothes?
Do you not seek repose in sleep
When the instinct is on you?
Are you not a man
With manly desires?
So spoke the stepmother with emotion

66. *(காம நோயைத் தீர்க்க வேண்டுதல்)* ஏகதாளம்

[1]எண்ணிக்கையாய் மன்மதனென் கொங்கைகளி லெய்த
[2]புண்ணுக்குள் கைமருந்து போடென் றுரைப்பாள்
நதிரெனவே யென்பேரில் [3]நாகம்வந்து சீறும்
மதன்மந்தி ரத்தினில் வசப்படுத்து மென்பாள்.

மன்மதன் போட்ட பல அம்புகள் என் மார்பில் புண்ணைச் செய்து விட்டன. அந்தப் புண்களுக்கு உன்கையால் மருந்து போடவேண்டும். நாகமாகிய என் உறுப்பு சீறி நிற்கிறது. மன்மத மந்திரத்தால் நீதான் அதை அடக்க வேண்டும் என்று வேண்டினாள்.

எண்ணிக்கை - பல. நதிர் - திடீரென. நாகம் - பாம்பு. வசப்படுத்துதல் - அடக்குதல்.

சுவடிச்சொல் - 1. என்றிக்கை 2. புன்றுக்குள் 3. னாகம் வந்து சீரும்.

வசனம் - என்னும் மொழிகள் எரியும் [1]நாராசங்களேத்திடும் அன்னைபோல [2]நொந்து தன்னிலேதான் கிலேசமாய் என்சொல்வான். (45)

சுவடிச்சொல் - 1. னாராசங்கலெத்திடும் 2. னொந்து

66. She again made a desperate plea,
Look, the shafts of Cupid
Have left deep wounds in my breast,
You alone possess the panacea
To cure those sores;
The Serpent of the senses
Is hissing in all fury,
Please pacify it
With incantations of love.

Prose: On hearing these words of his mother, who now evoked disgust, what did Cāraṅkataraṉ say?

67. *(இவள் பெண்ணல்ல என்று மனம் வருந்துதல்)* **திபதை**

இவளுக்குப் புத்திநா மென்னசொன் னாலும்
இவளுக்கு நெஞ்ச மிகழுவதில்லை கேட்பதுமில்லை
இவள்கேட் டந்தமய்யல் தாட்பது மில்லை
வேறு - சங்கையு மில்லை [1]வெட்கமு மில்லை
விசாரமு மில்லையோர் துக்கமு மில்லை
இவள் துயரமே துயரம்
தான் சொன்ன சொல்லையே தான்விடாள் பாபி
[2]நான் சொன்ன சொல்லையே [3]நறுக்கினாள் நாவால்
[4]பெண்பிறப் பினினுமிந் நீலியிவள் பிசாசெனும் பிறப்பு
[4]பெண்பிறப் பாகில்பேய்ப் பேச்சுகள் வருமோ
[5]வண்ணமுங் குலநல மகிமையும் மனத்தில்
[6]எண்ணமு மய்யமும் [7]இராட்சதிக் கேது
போறதே போக்கிவள் போறதே செவ்வை
வாறதே வழியிவள் [8]வார்த்தையே

கெடுத்தனள் [9]முறையெல்லாங் கெடுத்தனள் பேச்சில்
தடுத்தனள் என்மனந் தன்னிலே நினைந்து
சாரங்க தரனுமென் தாயையு முனையும்
ஓரங்க மாய்நெஞ்சில் [10]ஒன்றுவைத் தல்லால்
வேற்றுமை செய்வனோ வீணிலென் தாய்க்கு
[11]மாற்றவ ளென்றுநீ வழிபடச் [12]சொன்னாய்
கூத்தனென் பார்கள் கூத்திநீ என்றுஞ்
சாத்தியே பின்னையுந் தான்புகல் வானே.

எந்தவகைப் புத்திமதி சொன்னாலும் இவள் கேட்க மாட்டாள். தன் எண்ணம் இகழ்ச்சியானது என்று எண்ணி அதைக் கைவிடவும் மாட்டாள். தன் காம எண்ணத்திலிருந்து மாறவும் மாட்டாள். இவளுக்கு அச்சமோ, நாணமோ சிந்தனையோ, வருத்தமோ எதுவும் இல்லை. தன் ஆசையைத் தீர்த்துக் கொள்ள முடியவில்லையே என்ற ஏக்கமே இவளிடம் இருக்கிறது. எனவேதான், தான் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லுகிறாள். பாவியாகிய என்னுடைய சொல்லை வெட்டிப் பேசுகிறாள். நீலியைப் போன்ற இவள் பிறவி பெண்பிறவி என்பதைக் காட்டிலும் பிசாசுப் பிறப்பு என்பதே பொருந்தும். பெண்ணாக இருந்தால் பேய் போலப் பேசுவாளா? இராட்சசப் பிறப்பாகிய இவளுக்கு நல்ல குணமோ உயர் குலப்பண்போ நல்ல எண்ணமோ அச்சமோ சிறிதும் கிடையாது. இவள் போவதே சிறந்த போக்கு என்று நினைக்கிறாள். அதுவே நேர்மையானது என்று எண்ணுகிறாள். இவள் வருகிற வழியே உயர்ந்தது; இவள் பேசும் பேச்சே சரியானது என்று முடிவு செய்கிறாள். என் பேச்சைத் தடுத்து, சிறந்த முறைகளுக்குக் கேடு செய்கிறாள். என்றெல்லாம் மனத்திலே எண்ணிய சாரங்கதரன், சிற்றன்னையை நோக்கி என் தாயையும் உன்னையும் ஒன்றாகவே எண்ணும் எண்ணத்திலிருந்து நான் சிறிதும் மாறமாட்டேன். இருவருக்குள்ளே நான் வேற்றுமை நினைத்ததே இல்லை. ஆனால் நீயோ வீணாக என்தாய் வேறு எனவும், நீ மாற்றாந்தாய்தான் எனவும் கூறி உன் விருப்பத்திற்குப் பல நியாயங்களைக் கற்பிக்கிறாய். நான் வெளிவேஷக்காரன்; உண்மைப் பண்பு இல்லாதவன் என்றும் பலரும் இகழ்வார்கள். ஆனால் நீயே நாடகக் கணிகையாக மாறிவிட்டாய் என்று வெறுத்துக் கூறிய சாரங்கதரன் மேலும் பேசுகிறான்.

தாட்பது - தாழ்ப்பது - குறைப்பது, கைவிடுவது. சங்கை - அச்சம். விசாரம் - சிந்தனை. நறுக்குதல் - வெட்டிப்பேசுதல். வண்ணம் - நல்லகுணம். மகிமை - பெருமை. அய்யம் - அச்சம். போறது - போவது. வாறது - வருவது. செவ்வை - நேர்மை. முறை - ஒழுங்கு. ஓரங்கம் - ஒரே உருவம். மாற்றவள் - மாற்றாள்; சககளத்தி. கூத்தன் - நடிப்பவன். கூத்தி - நாடகக்கணிகை. சாத்தி - சாற்றி - சொல்லி.

சுவடிச்சொல் - 1. வெக்கமு 2. னான் 3. நறுக்கினாள்னாவால் 4. பெண் பெறப்பாகில் 5. வற்ணமுங்கொலநல 6. என்றமு 7. ராக்ஷதிக் 8. வாற்தையேவாற்தை 9. முரை 10. ஒன்றுவத்தல்லால்11. மாத்தவள் 12. சொறாய்.

67. All sermons are bound to fall flat
On this woman
Realizing that her thoughts are ill
She shall not venture to give up;
So consumed by passion is she
That one cannot hope for change.
Fearless, shameless
Without remorse is she,
Only one thought remains on the brim
That her passionate desire has been thwarted;
Hence she tirelessly
Repeats the same rigmarole.
This woman as notorious as Nīli of old
Is the incarnation of the devil;
Would any normal woman
Dare to address me in this tone?
Diabolic by temperament,
She totally lacks refinement,
Is devoid of virtue and fear
She obstinately clings to her ways and words
And justifies their rightness with impudence;
Cutting me short,
She destroys virtues and verities.
Cāraṅkataraṉ again addressed her,
Revered stepmother, I equate you
In every respect with my own mother
Nothing can force me to budge an inch
From this hard truth
Never have I discriminated
Between you and the mother

Who really bore me
Your arguments are grossly perverse
When you drive a wedge
Generating differences.
Many may accuse me
As a downright hypocrite
And one lacking in culture
But you have nastily degenerated into
An actress and a bad one at that!
So overcome with repugnance was he
That he continued with his speech.

68. *(பெண்ணறிவு பேதமைத்து)* ஏகதாளம்

[1]நுண்ணறி வோர்கள்தம் [2]நூலொடு பழகினும்
[3]பெண்ணறி வென்பது பேதமை யல்லவோ
நீதி நியாயமு மோதும்அம் மொழியும் - நின்
காதி லேபுகுங் கணக்கது காணேன்
நல்ல வழியுனக்குச் சொல்லுத லரியது
கல்லி லடித்திடு [4]காரண மாச்சே

நுட்பமாக உணரும் அறிவைப் பெற்றவர்களாய்ப் பல உயர்ந்த நூல்களைக் கற்று உணர்ந்தவர்களாக இருந்தாலும் மகளிர் ஒரு செயலை மேற்கொள்ளும் போது அவர்களுக்கே இயல்பான அறியாமையே முன் நிற்கும் என்பார்கள். இவளுடைய மோகத்திற்குமுன் நீதியும் நியாயமும் எடுத்துச் சொன்னால் அதை இவள் காதில் வாங்கிக் கொள்ளுவதாகவே தெரியவில்லை. வாங்கவும் மாட்டாள். இவளுக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்லுவது முடியாத ஒன்று. சொன்னாலும் அது கல்லின் மீது ஒரு கருத்தை எடுத்துக் காட்டுவதற்குச் சமமாகி விடக்கூடும்.

நுண்ணறிவு - கூரிய அறிவு. நூல்-நூல்தரும் கருத்து. பேதமை - அறிவின்மை. மோதுதல் - தாக்குதல்; உண்மைக் கருத்தோடு மாறுபடுதல். கணக்கு - செயல். காரணம் - போன்றது (உவமை உருபாக).

சுவடிச்சொல் - 1. னுன்னிடுவோர் 2. னூலொடு 3. பென்றறி 4. காறண

வசனம் - அறிவுளோன் பிறைநுதலுக்குப் பின்னும் என்சொல்லுவான். (46)

68. It is popularly held
That when a woman
Endowed with ideas subtle
Widely read in books
Decides upon action
Her ignorance would hold sway.
My attempts to drive home
The perverseness of her passion
Has fallen on deaf ears.
No one can hope or succeed
In mending her evil ways;
All attempts in that direction
Like pointing to sermon on stone.

Prose: What more did the wise young man say?

69. *(சாரங்கதரன் அரண்மனையை விட்டு நீங்குதல்)* **சம்பை**

நகைத்துலகு பழிக்கநீ நல்லகவை நினைந்தாயுன்
முகத்தில்முழித் தாலும்பாவம் அகத்தைவிட்டுப் போமோ
நல்லதுக்கோ நீபிடிச்சு நவிலுவதெல் லாம்என்னைக்
கொல்வதற்கு வகைதொடுத்த குறியல்ல வோதான்
மீளாமல் [1]என்வார்த்தை கேளாமற் சொல்வதென்ன
வாளால் துணிப்பிக்க வழிகொண்ட தல்லவோ
பாழும்புறா விங்கே பறந்துவர வேநகரம்
ஏழும்அதன் கீழும்நமக் கெய்த வழியாச்சு
என்றுமனம் மயங்கியவன் எழுந்துவர வேயந்த
வன்னமுலைச் சித்திராங்கி மன்னவன்பின் னோடி
போர்த்தகலை பிடிக்கவே புரவலனுங் கலைநழுவப்
[2]பார்த்தடியில் கச்சுடன்அப் பால்நடந்து போக

நீ விரும்பிய செயலால் மக்கள் என்னையல்லவா எள்ளி நகையாடுவார்கள்; பழித்துப் பேசுவார்கள். இனி உன் முகத்தில் விழித்தாலே பெரும்பாவம் வந்து சேரும். அந்தப் பாவம் என்னை விட்டு என்றுமே நீங்காது. நீ கொண்ட இந்தப் பிடிவாதச் செயல் நல்லதுக்கன்று; என்னைக் கொல்வதற்காக நீ வைத்த

குறியேயாகும். என் பேச்சைச் சிறிதும் பொருட்படுத்தாமல், மீண்டும் மீண்டும் உன் விருப்பத்தையே சொல்லிக்கொண்டிருப்பது எதற்காக? என்னை வாளால் வெட்டுமாறு செய்வது நீ மேற்கொண்ட செயலேயாகும். பாழாய்ப் போன அந்தப் புறா இங்கு வந்து சேர்ந்தது, ஏழு நகரத்திற்கும் கீழே ஒரு நரகம் உண்டென்றால் அங்கே என்னைக் கொண்டுபோய்த் தள்ளுவதற்கு வழிசெய்துவிட்டது என்றெல்லாம் பலவாறு பேசி, மனம் நொந்து எழுந்து செல்லத் தொடங்கினான். அதை அறிந்த சித்திராங்கி அவன் பின்னால் ஓடி அவன் மேலே போர்த்தியிருந்த ஆடையைப் பிடித்து இழுத்தாள். ஆடை நழுவி விழுந்ததையும் பொருட்படுத்தாமல் சாரங்கதரன் வெளியேறினான்.

நகைத்தல் - ஏளனமாய்ச் சிரித்தல். பழித்தல் - நிந்தித்தல். கவை - காரியம். அகம் - உள்ளம். நவிலுவது - சொல்லுவது. நரகம் - பாவ உலகம், பாதாளம், கீழுலகம் ஏழு - அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம். கலை - ஆடை, போர்வை. புரவலன் - அரசன். கச்சு - இடைக்கட்டு ஆடை.

சுவடிச்சொல் - 1. என்வாற்த்தை 2. பாத்தடியில்.

வசனம் - சாரங்கதரன் துப்பட்டியை விட்டு விட்டு [1]அப்புறமே போகச் [2]சித்திராங்கி என்ன செய்தா ளென்னில் (47)

சுவடிச்சொல் - 1. அப்புரமே 2. சித்திறாங்கி

69. Your evil thoughts would make me
Laughing stock in the public eye;
To look at you
Is to sin and dwell in sin eternally;
Your dogmatic stand
Is perhaps ruse to exterminate me
What other motive can I attribute
To your repetitive perverse talk
Than a clever attempt
To get me beheaded?
The landing of my bird
In your palace precincts
Has sunk me in wild abyss
The worst inferno below seven hills.
So saying Caraṅkataraṉ
Soaked in deep sorrow

Started to leave the palace.
Reading his thoughts in a jiffy
Cittirāṅki ran after him,
Pulled the mantle on his shoulder,
But he brushed aside her intrusions
And rushed out of the palace

Prose: When Cāraṅkataraṉ left the palace leaving behind the mantle, what did Cittirāṅki do?

70. *(சித்திராங்கியின் சீற்றம்)* *திரிபுடை*

கண்டுசீறி யேவிழியில் கனல்பொறி கதுவப்
புறங்கையைக் கடித்துக் கோபித்துக்
கொண்டு பொறுபொறு போறி யாஎனக்
கூறிப் பின்னையும்
எந்தனுட வார்த்தைகளைக் கேட்டே
இடங் [3]கொடாமல் போறீ ரல்லாயினி
உந்தனுக்கொரு நிந்தை வருவது
சிந்தைதனில் வைத்து
மோக மானது கண்டுமதன
தியாகம்நீ யருளாமற் போனாய்
சோகம்வரச் செய்குவே னதுக்குச்
சந்தேகமில்லை.

சாரங்கதரன் செல்லுவதைக்கண்ட சித்திராங்கி கோபமடைந்து சீறினாள். கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. புறங்கையைக் கடித்துக் கொண்டாள். கோபம் கொண்ட அவள், பொறு, பொறு, போகிறாயா? என்னுடைய வார்த்தைக்கு இணங்காமல் போகிறாயல்லவா? இனி உனக்கு ஒரு பெரும்பழி ஏற்படுமாறு செய்கிறேன். என்னுடைய காம உணர்வுகளை அறிந்திருந்தும் மன்மதலீலைகள் செய்து என்னுடைய ஆசையை நிறைவேற்றாமல் போகிற உனக்குப் பெருந்துன்பம் வருமாறு செய்கிறேன் என்று தனக்குள் சிந்தித்தாள்.

சீறல் - கோபமடைதல், விழி- கண். கனல்பொறி - தீப்பொறி. கதுவ - பறக்க. புறங்கை - அகங்கையின் மறுபுறம்; கையின் மேற்பகுதி. அகங்கை - உள்ளங்கை. போறியா - போகிறாயா என்பதன் கொச்சைச்சொல். இடங் கொடாமல் - என்னுடைய

எண்ணத்திற்கு இணங்காமல். அல்லா - அல்லவா. நிந்தை - பழி. சிந்தை - உள்ளம். மதனதியாகம் - காமலீலைகள். அருளல் - அருள்புரிதல்; உதவுதல். சோகம் - வருத்தம், துன்பம்.

சுவடிச்சொல் - 1. பிறங்கை 2. எந்தனிட 3. குடாமல்

வசனம் - பின்னமேது சொல்வாள். (48)

70. On seeing Caraṅkataran making his exit
Cittirāṅki, the furious fretted and fumed
Her blood-red eyes bespoke anger
And she bit her forearm in sheer disgust;
So you are proposing to leave
Ignoring my plea,
Wait, Wait, I shall cleverly contrive
Great blame to fall on you.
Knowing my burning passion
You refused to subdue it
Beware, such nefarious schemes shall I draw
That deep sorrow shall visit you
Mused the desperate Cittirāṅki.

Prose: What more did she say?

71. *(காலுங்கையும் வெட்டச் செய்வேன் எனல்)* தரு

மைபார்வை களிக்கவே - எந்தன்
மனது களிக்க அணைந்திட நீ
ஒப்பாமல் போறா யல்லவோ -நான்
உரைப்பது பொய்யல்ல உண்மை கண்டாம்
தப்பாது சாரங்கதரர் - வேட்டை
தானாடப் போனவர் வந்தபின்பு என்னைக்
கைப்பிடித் தானென்று சொல்லி - உன்
காலுங்கையும் வாங்கு விப்பேன்
என்னவே சாரங்கதரன் - மெத்த
ஏங்கி மிருக வேட்டைக் கேகியதோர்

மன்னவன் வந்த போதினிலே - இந்த
வஞ்சகி சித்திராங்கி மாபாவி
சொன்ன சொல்லை மாறா - எல்லவா
என்ன தோஷம் [2]தொடர்ந்த தென்று
[3]தன்னரண்மனை யுள்புகுந்து மனஸ்தாபமா யிருந்தானே.

மைதீட்டிய என் கண்களும் என் உள்ளமும் பூரித்து மகிழ்ச்சியடையுமாறு என்னை அணைத்து இன்பம் அளிக்க விரும்பாமல் போகிறாய். சாரங்கதாரா! நான் உண்மையாகச் சொல்லுகிறேன்; வேட்டைக்குப் போயிருக்கும் மன்னர் வந்தவுடன், உங்கள் மகன் என்னைக் கைப்பிடித்திழுத்தான் என்று கூறி, உன் காலையும் கையையும் வெட்டச் செய்கிறேன் என்றாள்.

வனவிலங்குகளை வேட்டையாடச் சென்றிருக்கிறார் மன்னர். அவர் வந்தவுடனே இந்தக் கொடுமைக்காரியாகிய பாவி தான் சொன்னபடியே செய்து விடுவாள். சிறிதும் தயங்கமாட்டாள். பெரும்பாவம் வந்து சேர்ந்ததே என்று எண்ணிப் பெரிதும் வருத்தமடைந்து தன் அரண்மனைக்குச் சென்றான் சாரங்கதரன்.

மை - கண்மை, அஞ்சனம். பார்வை - கண். ஒப்பாமல் - விரும்பாமல். வாங்குவித்தல் - வாங்கச் செய்தல்; வெட்டச் செய்தல். வஞ்சகி - கொடுமைக்காரி. மாறாள் - மாறமாட்டாள்; செய்தே தீருவாள். தோஷம் - பாவம், குற்றம். மனஸ்தாபம் - மனவேதனை, மனத்துயரம்.

சுவடிச்சொல் - 1. வாங்கி 2. துடர்ந்த 3. தன்னரமனை

வசனம் - [1]அரண்மனையிலே அந்த அரசன் குமாரன் விதியுள்ள விசாரம் பொருந்தியிருக்கப் பாதகி [2]சித்திராங்கி யேதுவகை செய்தாள். (49)

சுவடிச்சொல் - 1. அரமனை 2. சித்திறாங்கி

71. So you are leaving without pleasing me
Whose eyes are tinted with collyrium
Listen Cāraṅkatāra, I swear in earnest
I shall report to the King, your father
When he returns from hunting
That you forcibly molested me
Tried to outrage me
And see that your limbs are mutilated
Cāraṅkataraṉ was visibly upset,

This woman is sure to kick row
And poison the mind of King,
Alas, I have become the victim of calumny and sin,
Brooding thus, he retired to his palace.

Prose: While Cāraṅkataraṉ was cursing his fate, what did the wicked Cittirāṅki do?

72. *(நகை, வளையல்களை உடைத்தெறிதல்)* சம்பை

இந்தநிர் மூடிதனக் கிசையாமல் மன்னவன்
மைந்தனை யப்போதவளும் வதைக்கமன [2]மெண்ணி
ஆபரண வகையெல்லாம் அறுத்தறுத்து மேதினியில்
புரளவீசி அதிகோப முடனேதான்
[3]கையில் வளையல்கள் சிதறக்
கல்லோடே மோதித்தன்
மெய்யிலுமெய் யாயிருக்க வினையமென்ன செய்தாள்.

சிறிதும் அறிவில்லாதவளாகிய சித்திராங்கி தன் காம இச்சைக்கு இணங்காத சாரங்கதரனைச் சித்திரவதை செய்யவேண்டுமென்று முடிவு செய்தாள். உடனே தான் அணிந்திருந்த நகைகளையெல்லாம் அறுத்துத் தரையில் எறிந்தாள். மிகுந்த கோபத்தோடு கல்லில் மோதித் தன் கை வளையல்களை உடைத்தெறிந்தாள். இவ்வாறு கபடமாக உடம்பை வெற்றுடம்பாக்கிக் கொண்டாள்.

நிர்மூடி - சிறிதும் அறிவில்லாதவள். இசையாமல் - இணங்காமல். வதைக்க - கொடுமைப்படுத்த. மேதினி - பூமி, தரை. மெய் - உடல். மெய்யாய் - வெற்று உடலாய். வினையம் - வஞ்சகம், கபடம்.

சுவடிச்சொல்- 1. அரமனை 2. மென்றி 3. கயில்

72. Unscrupulous Cittirāṅki
Resolved to avenge Cāraṅkataraṉ
Who failed to cool her lust.
Unloosening her many jewels
She broke them into pieces
Throwing the debris on the floor
Hitting her hand on hard stone
Wilfully broke her bangles,

Bared her body of all ornaments
Her intentions were diabolic.

73. *(அலங்கோலமாகத் தரையில் விழுந்து கிடத்தல்)* **திபதை**

முலைகளில் தோள்களில் மூஞ்சியில் பக்க
நிலைகளில் பிடரியில் நிச்சய மாகக்
காம வேதனையிற் கைகலந் தவரிந்த
சீமையில் செய்திடுஞ் சேஷ்டைபோ லிருக்க
[1]தன்நகத் தாலவள் தான்கீறிக் கொண்டு
பின்னையும் ரவிக்கையைப் பின்னமே செய்து
கலையது சோர்ந்திடக் கண்ணில்நீர் ததும்பத்
தலைதனை விரித்தவள் தரைதனில் படுத்து
மேனியெ ல்லாமொரு வேஷமே யாகத்
தானவள் அடுத்திடுந் தரைதனில் படுத்தே
அழுகையும் விழுகையும் [2]ஆற்றாமை யுடனே
எழுகையும் அங்ஙனே இருக்கையு மாகி
சண்டாளி யருமந்த சாரங்க தரனைத்
துண்டமாய்க் கால்கரம் துணிக்கவே [2]எண்ணிக்
கானகம் வேட்டை போம் காவலன் வரவும்
மேனினை வாய்ப்போய் விசேஷமே சொல்லி
[4]நாவது துணிக்க நமனிலுங் கொடிய
பாவிசித்தி ராங்கிஇப் படிஇருந் தனளே.

மோகவெறியால் ஒருவரோடொருவர் தாறுமாறாய்க் கலந்தவர்கள் செய்தது போலத் தன் மார்பு, தோள், முகம், பிடரி, முன்பின் உடற்பகுதிகள் ஆகியவற்றின் மீது தானே நகத்தால் கீறிக் கொண்டாள். ரவிக்கை கிழியவும், சேலை குலையவும் செய்து கொண்டாள். கூந்தலை விரித்துவிட்டு கண்ணில் நீர்வழிய உடம்பெல்லாம் அலங்கோலப் படுத்திக் கொண்ட சித்திராங்கி அழுதபடியே தரையில் விழுவதும் மீண்டும் எழுந்திருப்பதும், அப்படியே சிறிது அமர்வதுமாக மன அமைதியற்றவளாகி இருந்தாள். எமனைக் காட்டிலும் கொடியவளாகிய சித்திராங்கி மிகவும் சிறந்த பண்புள்ளவனாகிய சாரங்கதரனின் கை, கால்களை வெட்டச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தை மறக்காதவளாய்க்

காட்டிற்கு வேட்டையாடச் சென்ற மன்னனையே நினைத்தவளாய்த் தான் எண்ணியதைச் சொல்லக் காத்திருந்தாள்.

முஞ்சி - முகம் என்பதன் கொச்சைச் சொல். பக்கநிலை - முதுகின் இருபுறம். பிடரி - கழுத்தின் பின்புறம். சீமை - உலகு. சேஷ்டை - குறும்புச் செயல். பின்னம் - சிதைவு. கலை - ஆடை. மேனி - உடல். ஆற்றாமை - திருப்தி இன்மை. சண்டாளி - துரோகி. அருமந்த - அரியமருந்து போன்ற. மேனினைவாய் - மேல் நினைவாய் - அவனை எண்ணி. நமன் - யமன்.

சுவடிச்சொல்- 1. தன் நிகத்தால் 2. ஆத்தாமை 3. என்றிக் 4. னாவது.

வசனம் - மல்லலங் குழலாள் இவ்விதமாக இருக்க அரசன் நரேந்திரன் வருவதாகின். (50)

73. As if wrought in an orgy of love,
Cittirāṅki scratched her shoulders, breast
Face, neck and the front and rear of body
With her own nails quite wildly;
She tore her blouse,
Made the cāri shrivelled
Spreading her locks most uncouthly
She wept false tears
Restlessly sauntered here and there,
Now falling, now rising
Now rolling and occasionally sitting
More dreadful then the Lord of Death.
Cittirāṅki was bent upon
Inducing her husband, the King
On his return from hunting
To chop off the limbs of Cāraṅkataraṉ,
The quintessence of noble traits.

Prose: When the woman was behaving like this, King Narēntira arrived

74. *(மன்னன் வேட்டை முடித்துத் திரும்புதல்)* திரிபுடை

வேட்டை போன நரேந்திரன் மிருக
வேட்டை யாடி பதாதி சூழத்தன்

வீட்டை [1]நோக்கிச் சித்திராங்கி யெனும் மனை
யாட்டி மீது நினைவு கொண்டு
மகேந்திரத்தினில் நிருபன்வந்து தன்கூட வந்தவர்
அனைவர்களையும் அனுப்பிக் கால்விசை யாகவேதான்
நடந்துபோய்ச் சித்திராங்கி வீட்டில்
நரேந்திர னுள்புகுந்தவள்
கிடந்த கிடையவள் உடம்பும் கண்டு
கிலேச மாகியே.

வேட்டைக்குப் போன இராச நரேந்திரன், வன விலங்குகளை வேட்டையாடி முடித்துத் தன் படைவீரர்கள் சூழ்ந்து வர இராசமகேந்திரபுரத்தையடைந்தான். சித்திராங்கி என்னும் தன் இளைய மனைவியைக் காண வேண்டுமென்ற ஆவலோடு வந்த மன்னன் நகரத்தையடைந்ததும் உடன் வந்தவர்களை யெல்லாம் அவரவர் இருப்பிடத்திற்கு அனுப்பிவிட்டு விரைவாகச் சென்று சித்திராங்கியின் அரண்மனையுள் புகுந்தான். அங்கே அவள் கிடந்த அலங்கோலத்தைக் கண்டு திடுக்கிட்டு வருத்தமடைந்தான்.

பதாதி - காலாட்படை. மனையாட்டி - மனைவி. மகேந்திரம் - இராசமகேந்திரபுரம். நிருபன் - அரசன். விசை - வேகம். கிடை - கிடக்குந்தன்மை. கிலேசம் - அச்சம், வருத்தம்.

சுவடிச்சொல் 1. னோக்கி.

வசனம் - ராசா ஏது சொல்வா னென்றால். (51)

74. King Rājanarēntira returned with retinue
To Rājamakēntirapuram
At the portals of the city, he felt a compelling urge
To meet his junior queen Cittirāṅki.
Ordering his men to disperse
He made way to her palace
Where surprise and sorrow shook him
At Cittirāṅki's pitiable plight.

Prose: Let us examine the King's words:

75. *(மன்னவன் வினா)* **ஏகதாளம்**

என்னடி சொல்லுனக் கென்னடி துயரம்
பொன்னுடல் தரையினில் புரளவும் விதியோ!
ஆருனைச் செய்தவர்? ஆருனை [1]வைதவர்?
ஊரையும் பேரையும் உரையடி பெண்ணே!
சொல்லடி அவர்மனை சூறைகொண் டேயவர்
பல்லை எறடிவிப்பேன் பார்கணப் பொழுதில்
[2]வாரணி முலைமேல் மலர்விழி நீரது
சோர உனக்குவந்த காரியம் [3]என்ன?
[4]இத்தனை துயரமும் [4]இத்தனை அவதியும்
எத்தனை காரியம் இன்னதென் றுரையாய்!

சித்திராங்கியின் அலங்கோலத்தைக் கண்ட மன்னன் உனக்கு என்ன நடந்தது? பொன் போன்ற உன் உடல் தரையில் கிடக்கத் தலையெழுத்தா? யார் என்ன செய்தார்கள்? யார் உன்னைத் திட்டினார்கள்? அவர்களுடைய பெயர் என்ன? அவர்கள் எந்த ஊர்? சொல். ஒரு நொடியில் அவர்கள் வீட்டைக் கொள்ளையிடுகிறேன்; அவர்கள் பல்லைத் தட்டி விழச்செய்கிறேன். மலர்போன்ற உன் கண்ணிலிருந்து வடியும் கண்ணீர் உன் மார்பை நனைக்கிறதே! இப்படி அழும்படியாக நேர்ந்தது என்ன? இவ்வளவு துன்பம் ஏற்படும்படி நடந்த காரியம் என்ன? சொல் என்றான்.

பொன்னுடல் - பொன்போன்ற உடம்பு. ஆர் - யார். வைதவர் - திட்டியவர். சூறை - கொள்ளை. எறடி - இடறி என்பதன் மரூஉ இடறி - தட்டி. கணப் பொழுது - நான்கு நிமிட நேரம். வார் - மார்புக் கச்சு. மலர்விழி - மலர் போன்ற கண். சோர்தல் - விழுதல். அவதி - வருத்தம்.

சுவடிச்சொல் 1. வைய்தவர் 2. வாறணி 3. என்னா 4. யித்தனை.

வசனம் - இன்னது சொன்னவன் பின்னுமென் சொல்வான் (52)

75. On seeing the unkempt Cittirāṅki
The King queried, what happened?
Is it so destined that your golden frame
Should lie shrunk on the floor?
Who is to blame for your misery?
Who reprimanded you?

Name him and his nativity
I shall forthwith destroy his house
Smash his teeth to smithereens.
Your lovely breast is getting wet
Because of tears dropping from flower-like eyes
What makes you cry your eye out,
Tell me the cause of your inexplicable grief.

Prose: What more did the King say?

76. *(வாய் திறந்து பேசு எனல்)* *சம்பை*

சாரியது [1]போனநீ தாமசமேன்
கொங்கைகளி கூர்வா யில்லை
என்னுங் கோபமோ வுனக்கு
[2]எந்நேர மாச்சுப் போய்
இப்பவோ வாறதென்று
வன்மமோ என்மீதில்
வாய்திறந்து பேசேன்!
உனக்கென்ன மனக்கவலை
உனக்கென்ன சிந்தைதான்
உனக்கென்ன [3]நானிருக்க
உனக்கென்ன [4]குறைவு
உன்னாணை [5]மீறுகிற தொருநாளு மில்லை - உனக்கு
என்னாணை சொல்லு உன்கவை [6]ஈடேற்று வேனே.

வேட்டைக்குப் போனநான் உன் இன்பத்தை மறந்து காலங்கடத்தி விட்டேன் என்று கோபமா? வெகு நேரமாயிற்று என்று என்மீது கோபமா? என்னோடு பேசக் கூடாது என்ற வைராக்கியமா? மன்னவனாகிய நான் இருக்கும்போது உனக்கு இங்கு என்ன குறைவு? உனக்கு என்ன கவலை? ஆழ்ந்த வருத்தம் எதற்கு? நான் எப்போதுமே நீ இடும் கட்டளைக்கு அடங்கி நடப்பேன். இது சத்தியம். உனக்குத் தேவையானது என்ன? சொல். இப்போதே முடித்துவைக்கிறேன் என்றான்.

சாரி - உலா. தாமசம் - தாமதம்; நேரம் கடத்தல். வன்மம் - வைராக்கியம். சிந்தை - ஆழ்ந்த வருத்தம். ஆணை - கட்டளை. கவை - தேவை. ஈடேற்றுதல் - முடித்தல்.

சுவடிச்சொல்- 1. போனனீ 2. என்னேர 3. னானிருக்க 4. குறவு 5. மீருகுற 6. யீடேத்துவேனே.

வசனம் - தன்னிட புருஷன் சொன்ன சொல்லை மின்னிடை கேட்டு, என்னிட கவை ஈடேறிற்றென்று யிதுவேளை! யிதுவே சமயம் என்றங்கேது சொல்வாள். (53)

76. Are you angry with me
Because I went hunting
Denying you of all pleasure
And returned inordinately late?
Have you taken any solemn vow
Not to talk with me?
Why should you give room for grief
When I am by your side?
I promise I shall abide
By your dictates;
Tell me what you want
And it shall be given.

Prose: On hearing the words of her husband, the woman thought that this was the most opportune time to realize her wish.

77. *(சித்திராங்கி எப்படிச் சொல்வேன் எனத் தயங்குதல்)* **திரிபுடை**

என்ன [1]சொல்லநான் ஏது [1]சொல்லநான்
என்மென்று சொல்வேன் என்நாவில்
என்னை யிப்படி சனியன் செய்தால் எவர்க்கு மென்னா
அல்லவென்று சொன்னா லுமக்கு
மெய்யா யிருந்திடுமோ பொய்யோ யிவள்
கொல்லவகை தொடுத்தா ளென்றே மனங்
கொள்ளுமல்லால் சொன்ன பிறகது
கொடுமை போலவே தோன்று மும்முடன்

சொல்லக் கணக்கல்ல என்னி லென்னுயிர்
தன்னை விடுவேன் மன்னா வெனவே.

என்னைச் சனியன் பிடித்து ஆட்டுகிறது. நடந்த என் வருத்தத்தை என் நாவால் எப்படிச் சொல்லுவேன்! இல்லை, சொல்லி விடுவோம் என்று துணிந்து சொன்னால் நீங்கள் தான் நம்பப் போகிறீர்களா? இவள் சொல்லுவது பொய்; கொல்லுவதற்கே வழி செய்கிறாள் என்று எண்ணுவீர்களே! சொன்னால் அது உங்களுக்குக் கொடுமை சொல்வது போலத் தோன்றுமே! மன்னா! நடந்ததைச் சொல்லுவது முறையல்ல; நான் உயிர்விட்டு விடுகிறேன் என்று கூறினாள்.

என்னமென்று - என்னவென்று. அல்லவென்று - மறுத்து (சொல்லிவிடலாமென்று) தொடுத்தாள் - உருவாக்கினாள்; வழிசெய்தாள். மனங்கொள்ளுதல் - எண்ணுதல். கணக்கல்ல - முறையல்ல.

சுவடிச்சொல்- 1. சொல்லனான்.

வசனம் - இம்மொழி சித்திராங்கி சொல்ல மறுமொழி யரசன் மாதினுக் குரைப்பான்.

(54)

77. I am in the grip of planet Saturn
Who has landed me in this predicament
How can I disclose my sorrow's cause
Indeed, how can I, with my own tongue?
Even if I choose to reveal the truth
Who is going to believe me?
'This is a black lie
Inspired by the instinct to kill'
Would be your interpretation.
Hard truths
Are difficult to digest
And may smack of wanton mischief.
Your highness, it is not discreet
To tell you what happened,
Rather, I prefer to kill myself.

Prose: When Cittirāṅki said so the king replied as follows:

78. *(நடந்தது என்னவென்பதை மீண்டும் கேட்டல்)* : சம்பை

உன்பேச்சைத் [1]தள்ளுகிற தொருநாளு மில்லையினி
என்பேச்சை யிப்படிநீ யீட்டழிக்க லாமோ
உனக்குனக்கே சொல்லி உனக்குனக்கே நொந்தால்
எனக்குத்தெரிந் திருக்கும்வகை எந்தடவு சொல்லாய்
ஆச்சுதெந்தன் குணமறிந்து மாக்கினை யறிந்துமென்
பேச்சைசட்டை [2]பண்ணியுந்தன் பெண்மதியே போறாய்.

நான் என்றுமே உன் பேச்சை மீறி நடந்ததில்லை. நீயோ இன்று நான் கேட்டுக் கொண்டேயிருக்கப் பதில் சொல்லாமல் என் பேச்சை அலட்சியம் செய்கிறாய். உனக்குள் நீயே பேசிக்கொண்டும் நீயே வருத்தப்பட்டுக் கொண்டுமிருந்தால் எனக்கு எப்படித் தெரியும்? என்குணத்தையும் நான் எடுக்கும் முடிவையும் நன்றாக அறிவாய். இருந்தும் என்பேச்சைச் சிறிதும் பொருட்படுத்தாமல் உன் பெண்புத்தியையே காட்டுகிறாயே என்றான் மன்னன்.

தள்ளுவது - மீறி நடப்பது. யீடழித்தல் - பொருட்படுத்தாமை. உனக்குனக்கு - நீயே, தனக்குத்தானே. எந்தடவு - எந்த அளவு, எப்படி. ஆக்கினை - தண்டனை; முடிவு. சட்டைபண்ணுதல் - பெரிதாக்குதல், மதித்தல். (இங்கு - சட்டைப்பண்ணாமல் யுந்தன் பெண்மதிப்படியே நடக்கிறாய் என்றிருத்தல் வேண்டும்).

சுவடிச்சொல்- 1. தள்ளுகிறதொருனாளு 2. பன்றியுந்தன்.

78. I have never been guilty
Of acting against your wishes;
Still you are indifferent
To my constant and repeated queries
If you conceal your sorrow
Within your mind's shell
And shed tears of loneliness,
How can I probe its nature
Or come to your rescue?
You know me well
And my reactions,
Yet like a typical woman,
You are ignoring me.

79. *(சித்திராங்கி சொல்லத் தொடங்குதல்)* **வெண்பா**

என்றுரைக்க வேவேந்தன் ஏந்திழையா ளவ்வுரைக்கு
நன்றுநன் றென்றே நகைசெய்து - மன்னா
சிங்கமே யென்றுமொழி செப்பி மனமிசைப்பப்
பொங்கமாய்ச் சொல்வாளப் போது.

மீண்டும் மீண்டும் கேட்ட மன்னவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லத் தொடங்கிய சித்திராங்கி முதலில் நல்லது என்று ஏளனமாய்ச் சிரித்து, மன்னவா! சிங்கமே! என்று விளித்துத் தான் நினைத்ததை நடந்ததாகத் தெளிவுபடச் சொல்லத் தொடங்கினாள்.

ஏந்திழை - பெண். நகைசெய்தல் - சிரித்தல். ஏளனமாகச் சிரித்தல். சிங்கமே என்றது மன்னனை விளித்தது. உவமையாகுபெயர்; உருவகம் எனவும் அமையும். இசைப்ப - விரும்ப, சம்மதிக்க. பொங்கம் - தெளிவு.

79. When to the repeated questions of the King,
Cittirāṅki chose to reply
She said 'well' and let out a laugh
Full of contempt and scorn,
My King, my proud lion,
She began with flattering epithets
And under the guise of telling the truth
Narrated what she had fabricated.

80. *(நான் உங்கள் மருமகளானேன் எனல்)* **சம்பை**

அரியநின் மகன்வந்து [1]சருவுமுறை யாலேநான்
மருமகள் எனக்குநீ மாமனா ரலவோ
மாமனாரே உந்தன் மகனில்லா வீட்டில்நீ
[2]தாமசமெண் ணாமல்வந்த தாஷ்டிக [3]மென்ன
வந்ததேமோச முன்மகன் வாறவேளை யிங்கே
[4]சந்தடிபண் ணாமல்நீர் தாம்போம்போ மென்றாள்
சக்களத்தி மகனான சாரங்க தரன்வந்து
மிக்கநீர் வேட்டைக்கு மேவினதை யறிந்து

மெள்ளப் [5]புறாவையென் வீட்டிலே விட்டந்த
[6]கள்ளனவ னோடிவந்த [7]கபடம்நா னறியேன்
வந்தான் [5]புறாவிங்கே [8]வந்ததென வேகேட்டு
பின்தான் நகைத்துநயம் பேசியென்ன சொன்னான்.

உங்கள் அருமை மகன் இங்கு வந்து என்னிடம் செய்த சரசலீலைகளின் முறைப்படி நான் உங்களுக்கு மருமகள் ஆவேன். எனக்கு நீங்கள் மாமனாராவீர். மாமனாரே! உங்கள் மகன் இல்லாத வீட்டில் மருமகள் தனியாயிருக்குமிடத்தில் சிறிதும் யோசிக்காமல் வந்தது தவறு. உங்கள் மகன் வரும் நேரமாயிற்று! சத்தமில்லாமல் உடனே போய்விடுங்கள்.

நீங்கள் வேட்டைக்குச் சென்றதை அறிந்து, என் சகளத்தி மகனான சாரங்கதரன் முதலில் தன்னுடைய புறாவை என்னுடைய வீட்டிலே விட்டான். தொடர்ந்து அந்தப் புறாவைக் கேட்டு இங்கே வந்தான். தவறான எண்ணத்தோடு அவன் வந்தது எனக்குத் தெரியாமற் போயிற்று. புறா வந்ததாவெனக் கேட்டுச் சிரித்தபடியே இன்ப வார்த்தைகளைப் பேசத் தொடங்கினான்.

சருவுதல் - இன்பவார்த்தைகள் பேசிப் பாராட்டல். தாமசம் - தயக்கம். தாஷ்டிகம் - தாட்டிகம் - செருக்கு, ஆங்காரம். வாற - வருகிற. சந்தடி - சத்தம். சக்களத்தி - சகளத்தி; கணவனை மணந்த மற்றொரு மனைவி. மேவுதல் - செல்லுதல். கள்ளன் - தவறான எண்ண முடையவன், திருடன். கபடம் - தந்திரம், வஞ்சகம். நயம் - இன்ப வார்த்தை.

சுவடிச்சொல்- 1. சருவுமொறை 2. தாமசமென்றாமல் 3. மென்னா 4. சந்தடிபன்றாமல் 5. பிறா 6. கள்ளநவனோடி 7. கபடம்னானறி 8. வந்துதென.

80. If you go by your son's despicable acts of lust
Our relationship warrants modification
And I assume the role of your daughter-in-law!
Yes, you obviously turn into my father-in-law!
Oh revered father-in-law!
Is it discreet to visit your daughter-in-law
In the absence of your son?
Anytime he may turn up,
So quit without much a-do
Knowing that you were away hunting
My Co-wife's son Caraṅkataraṉ

Deliberately flew his bird into my house.
Under the pretext of searching the bird
He came here and I swear
I least suspected his motives.
Asking me the whereabouts of his pet
Began to smile and prattle sweet no nothings.

81. *(சாரங்கதரன் கூறியதாகக் கூறும் சித்திராங்கி பேச்சு)* ஏகதாளம்

வாடி யிருப்பதென்ன வனத்தினில் வேட்டை
யாடவே போனதோ ரரசன்மேல் நினைவோ
வருவன் இதிலேஎன்ன மயக்க முனக்கு
பிரியமுடனே என்னுடன் பேசப்போ காதோ
கிழவனுட னேயென்ன கேவல மோகம்என்
அழகும் இளமையும் ஆண்மையும் [1]பாராய்
வாலிபம் போனால் வருமோ [2]நாளையென்
போல வடிவுடைய புருஷனு முனக்கு

ஏன் சோர்ந்திருக்கிறாய்? வேட்டைக்குப் போன அரசன் மீது நினைவு வந்துவிட்டதோ? அரசன் வருவான். இதனால் வருத்தம் எதற்கு? என்னோடு ஆசையாய்ச் சிலவார்த்தை பேசக்கூடாதா? அந்தக் கிழவன் மேல் மோகம் எதற்கு? இது மிகவும் கேவலம். அழகும் ஆண்மையும் இளமையும் உடைய புருஷன் நானிருக்கிறேன். வாலிபம் என்பது போனால் வராது.

வாடி - சோர்ந்து. வருவன் - வருவான்; எதிர்காலமுற்று. மயக்கம் - வருத்தம். கேவலம் - இழிவு. வாலிபம் - இளமை.

சுவடிச்சொல் 1. பாறாய் 2. னாளை

வசனம் - என்ன சொன்னானென்று மனக்கிலேசத்துடன் நிந்தை வார்த்தை யந்த நரேந்திரனுக்குப் பிடிபடப் பின்னும் துடியிடை சொல்வாள். (55)

81. Why are you looking so sad and glum?
Perhaps thoughts about the King
Gone hunting disturb you
Why lament his absence so much,
You can talk endearing words to me.

In the presence of virile handsome youth
Why harbour love for an old crony?
Youth lost can seldom be recovered.

Prose: To make the matter more explicit and clear to the stupefied king, she spoke more words.

82. *(நானும் மெய்மறந்தேன் என்கிறாள்)* *திரிபுடை*

நீயும் நானு மொன்றாக யிருந்தால்
நிருபன் காரிய மென்ன யிருக்குது
உபாயம் நல்ல உபாய மிதுபோலப்
பாரி லுண்டோ
[1]கண்ணி லேயுனைக் கண்ட மட்டினில்
காம யிருள்வந்து மூடு தினியுன்
[2]வண்ண முலையி லணைந்து முத்தி
வழங்கொ ணாதோ
என்த வப்பயன் அரசன் வேட்டைக்கு
ஏகின தும்[3]நான் இங்கு வந்ததும்
உன்தவப் பயன்காண்[4]பெண்ணே யென்று
உரைத்துப் படுவான் சேர வந்துநிற்
[5]பாக்கி யன்எந்தன் செங்கை பிடிக்கவந்தான்
பயந்தகம் பூர
அவனும் பின்வந்து தோளில் கைபோட
நானும் பிள்ளைநீ நான் தாயலோ
உன்னைப் பேய்பிடித்துதடா
வென்றப்புறம் தள்ளி விடவும்
விடாம லெந்தனைத் தழுவிப் பிடித்தே
[6]பண்ணொணாத பங்கம தெல்லாம் என்னைப்
பண்ணினான் நானும்
மெய்ம்மறந்து சோர்ந்து இந்த
[7]மண்ணில் விழுந்தனன் என்று
நிருபன் சம்மதிக்க உரைத்தாள்.

நீயும் நானும் ஒருவரையொருவர் விரும்பியிருந்தால் அரசன் என்ன செய்யமுடியும்? இதைவிடச் சிறந்தவழி உலகிலேயே இல்லை. உன்னைக் கண்ணால் கண்டபோதே இன்பம் வந்து மயக்குகிறது. உன்னை மார்போடு அணைத்து இதழைச் சுவைத்து இன்பமடையலாம். அரசன் வேட்டைக்குச் சென்றதும், நான் இங்கு வந்து சேர்ந்ததும் நாம் செய்த தவப்பயனாகும் என்றெல்லாம் பேசினான். ஒன்றுக்கும் உதவாதவன், அழிவைத் தேடுபவன் ஆகிய அவன் என் அருகிலே வந்து கையைப் பிடிக்கத் துணிந்து விட்டான். நான் மிகவும் பயந்து உள்ளே ஓடினேன். பின்னால் வந்து என் தோள்மேல் கையைப் போட்டான். நீ என் மகன்; நான் உன் தாயல்லவா? உன்னைப் பேய் பிடித்துக் கொண்டதா என்று தள்ளிவிட்டேன். மறுபடியும் என்னைத் தழுவிப் பிடித்துச் செய்யக்கூடாத செயலையெல்லாம் செய்தான். நானும் சோர்ந்து போய் என்னையே மறந்தேன். தரையில் விழுந்துவிட்டேன் என்று அரசன் நம்புமளவில் சொல்லி முடித்தாள்.

நிருபன் - அரசன். காரியம் - செயல். பார் - பூமி. உபாயம் - உதவி, தந்திரம். மட்டில் - அளவில், உடன். காமயிருள் - மோகமாகிய இருட்டு. மூடுதல் - கண்ணை மறைத்தல். வண்ணம் - அழகு. ஏகினது - சென்றது. படுவான் - அழிவுக்கு உரியவன். நிற்பாக்கியன் - ஒன்றுமில்லாதவன். செங்கை - அழகிய கை. அகம் - வீட்டினுள். பூர - புக; செல்ல. பங்கம் - அவமானச் செயல், வெட்கத்திற்குரிய செயல். சம்மதிக்க - நம்புமாறு.

சுவடிச்சொல்- 1. கன்றிலே 2. வன்ற 3. னான் 4. பெண்றே 5. பாக்கியநெந்தன் 6. பன்றொனாத 7. மன்றில்

வசனம் - பின்னையும் நிந்தை பொருந்திடச் சொல்வாள். (56)

82. What can the King do
If we like each other?
The very sight of you
Thrills and intoxicates me
How I long to hug you
And kiss you on the lips!
Meritorious actions done in the past
Have sent the king hunting
And landed me here
So prattled the ne'er - do - well
The seeker of his own doom,
Came close to me and dared
To clasp my hand

I fled in fear
Followed frantically by him
Who put his hand on my shoulders.
Look, you are my son,
I am your mother,
Are you possessed?
Shouted I, brushing him aside
But he hugged me tight
And did all forbidden things.
I was so done up
That I lost my sense of discretion
And fell thud on the floor.
She spoke in such a convincing strain
That the King could not disbelieve it.

Prose: She continued her venomous, vengeful speech

83. *(நடந்ததைச் சொல்லவே உயிரோடிருக்கிறேன் எனல்)* சம்பை

கள்ளமா யிருக்குமெந்தன் காவலா என்னுடம்பில்
கிள்ளினதுஞ் சாரங்கன் கிழித்ததுவும் பாராய்
மெய்மறந்து [1]நான்றரையில் விழுந்தபோ தேயறுந்து
நழுவிவிழுந்த உடமைதனை நன்றாகப் பாராய்
[2]அந்நேர மேயுயிரை யான்விடுவ [3]னிவளிறந்த
தென்னகா ரணமென்று இருக்குமே உமக்கு
என்னமோ பிழைகள்செய்து இறந்தாளென் றேஉமக்கு
மன்னனே [4]எந்நாளும் மனத்திலிருந் திடுமே
ஆகையி னாலுயிரை ஆசரித்த தல்லாமல்
ஏகும்நீர் மாலையிட்ட தெனக்கமையு மென்றாள்.

நிகழ்ந்தவை ஒன்றும் அறியாமல் இருக்கும் மன்னவனே! உங்கள் மகன் சாரங்கதரன் என் உடம்பில் கிள்ளியும் கிழித்தும் செய்துள்ள காயங்களைப் பார்! நான் என்னை மறந்து மயங்கித் தரையில் விழுந்தபோது அறுந்து விழுந்த என்னுடைய நகைகளைப் பார்! அப்பொழுதே நான் உயிரைப் போக்கிக் கொண்டிருப்பேன். ஆனால் மன்னவா! இவள் ஏன் இறந்தாள்? ஏதோ தவறு

செய்திருக்கிறாள்; அப்பிழை வெளியாகி அவமானம் ஏற்படுவதற்குமுன் உயிரை விட்டு விடுவோம் என்று தற்கொலை செய்து கொண்டிருக்கிறாள் என்ற எண்ணம் உங்களுக்கு எப்போதுமே நீங்காமல் இருக்குமே! அதனால்தான் உயிரைச் சுமந்துக் கொண்டிருக்கிறேன். நீர் எனக்கு மாலையிட்டது போதும். இங்கிருந்து செல்லுங்கள் என்றாள்.

கள்ளம் - சோர்வு, ஒன்றுமறியாமை. காவலன் - மன்னவன். உடமை - உடைமை ஆபரணம். ஆசரித்தல் - தாங்கியிருத்தல். ஏகுதல் - செல்லுதல். அமையும் - போதும்.

சுவடிச்சொல் 1. னான்றறையில் 2. அன்னேரமே 3. னிவலெ்றந்த 4. என்னாளும்.

83. Oh King, ignorant of such happenings!
See, the nail marks and scratches on my body
The vandal act of your son Cāraṅkataran!
Look at the ornaments lying cheek by jowl
Scattered when I fainted.
I would have killed myself
But for a thought uppermost in mind
You might interpret my death
As self immolation for guilty act
That I was ashamed of!
Such a wrong thought
Would become an obsession;
Hence I decided to hold on
Till you came and heard the truth;
Enough of this infernal marriage,
Would you kindly quit?

84. (அவசரக் கூட்டம்) திபதை

இக்குடி கேடிதா னிப்படிச் சொல்ல
வெக்குவே றாய்மனம் வெம்பியே சீறி
எரிபரந் திதழ்தனை யியத்தினா லதுக்கி
அருள்விழி கிவந்திட அங்கமுந் துடிக்க
ஆக்கிரமித் தெழுந்திருந் ததிகோபத் துடனே
சிக்கிரமாய் நரேந்திரன் செம்பொன்மண் டபத்தில்

ஏகியே தூதரை யிக்கணம் நீங்கள்
ஏகியே மந்திரியை யினியமன் னவரை
மறையவரைப் புவிவழக்கறிந் துரைக்கும் பெரியவரைப்
[1]பாவபுண் ணியமறிந்த பெரியவரைப் பின்னும்
பேச்சில்வல் லோரைச் சரிசமான மான
பிரதானிக ளோரைப் பிழையறிந் தோரை
அழையெனத் தூதுவர் அப்பொழு தோடி
மழையெனத் தருங்கொடை மன்னவன் சொன்ன
பேரையெல் லாமவர் பெம்புட னழைக்க
மாரிபோல் வந்தவர் மன்னன்முன் நிற்க
அவர்முகம் [2]நோக்கி யரசனு மப்போ
இவருடன் வருவாரை யிவ்வழி தன்னை
எப்படிப் பேசுவது எப்படி யுரைப்பேன்
எப்படி யெனமன [3]தெண்ணியே பின்னுஞ்
சொல்லினா லொழியத் துயரறா தென்று
எல்லவருங் கேழ்க்க யேதுசொல் வானே.

குடியைக் கெடுக்கும் கொடியவளாகிய சித்திராங்கி கூறிய வார்த்தைகளையெல்லாங் கேட்ட மன்னன் அதிர்ச்சியடைந்து பல்வாறு மனம் கலங்கினான்; கோபத்தினால் நெருப்புப் பொறி பறந்தது; உதடுகள் துடித்தன. அருட்பார்வையுடைய கண்கள் சிவந்தன; உடல் துடித்தது; மிகுந்த கோபத்துடனே விறுவிறுப்படைந்தான்; விரைந்து சென்றான்; மணிமண்டபத்தையடைந்தான்; தூதுவர்களை அழைத்தான்; நீங்கள் விரைந்து சென்று அமைச்சர்கள், பிற மன்னர்கள், அந்தணர்கள், நாட்டின் வழக்கை அறிந்து நியாயம் வழங்கும் சான்றோர்கள், பாவம் எது? புண்ணியமெது என்பதை அறிந்த பெரியோர்கள், பேச்சுத்திறன் படைத்த அறிஞர்கள், நமக்குச் சமமான உயர்குடி மக்கள், பிழையறிந்துரைக்கும் குடிமக்கள் ஆகிய அனைவரையும் உடனே அழைத்து வாருங்கள் என்று ஆணையிட்டான்.

நன்மை எதையும் எதிர்பாராது, மழையைப் போல வேண்டியவாறு வாரி வழங்கும் வள்ளல் தன்மை பொருந்திய இராசநரேந்திரன் ஆணையிட்டவுடனே விரைந்து சென்று அரசன் குறிப்பிட்ட ஒவ்வொருவரையும் அணுகிப் பணிவோடு அழைத்தார்கள். அவர்களும் நினைத்தவுடன் பொழியும் மழையைப் போல் உடனே புறப்பட்டு வந்து மன்னன் முன் நின்றார்கள். மன்னன் அவர்கள் முகத்தையெல்லாம் நோக்கினான். அரண்மனையில் நிகழ்ந்துள்ள இந்த நிகழ்ச்சியை இவர்களிடம் எப்படிக் கூறுவது என்று பலவாறாய்ச் சிந்தித்தான்;

தயங்கினான். எடுத்துச் சொன்னாலொழிய ஏற்பட்டுள்ள துன்பம் எப்படி நீங்கும் என்ற முடிவுக்கு வந்தவனாய்ச் சொல்லத் தொடங்கினான்.

குடிகேடி - துட்டத்தன்மையுடவள், கொடியவள். வெக்குவேறு - பலவாறு. வெம்புதல் - கலங்குதல். சீறி - கோபித்து. எரி - தீ. இதழ் - உதடு. அதுக்குதல் - துடித்தல். அருள்விழி - கருணையுடைய பார்வை, கண். அங்கம் - உடல். ஆக்கிரமித்தல் - ஆங்காரமடைதல்; துடித்தல். ஏகி - சென்று. இக்கணம் - இப்பொழுதே. மறையவர் - அந்தணர்; வேதமோதுவோர். புவி - பூமி. வழக்கு - நடைமுறை. சரிசமானம் - தனக்கு நிகரானவர். பிரதானி - குடிமகன். கொடை - கொடுத்தல். பெம்புடன் - பணிவோடு. மாரி - மழை. இவ்வழி - நடந்த நிகழ்ச்சி. துயர் - வருத்தம். அறாது - நீங்காது.

சுவடிச்சொல்- 1. பாவபுன்றிய 2. னோக்கி 3. தென்றியே

84. When the king heard
The wicked words of Cittirāṅki
He was visibly upset;
Wild fury made his lips throb
Benign eyes turn crimson,
The body shake convulsively;
In such an excited state,
He made his exit.
Reaching the ceremonial hall
He summoned emissaries,
Be quick and fetch me
Ministers, kings of other areas,
Brahmins and those well-versed in law.
Let the elderly folk
Adjudicating on good and bad
Be forthwith summoned;
Let those who can distinguish
Between sin and virtue be brought.
I want in my presence
Wise talkers, men of equal status
And commoners noted for discretion.
When Rājamakēntiraṉ, the magnanimous
Who gave without asking

Like the proverbial rain
Issued such a summoning order
The officials approached a cross-section
With due humility and plea.
The response was quick and amazing
Like an ever-ready rain.
While probing each face
The king wondered how to present his case;
Unless a risky plunge is taken
And true facts revealed
Sorrow cannot be wiped
Felt he and began to speak.

85. *(அவையில் மன்னனின் ஆத்திரப் பேச்சு)* ஏகதாளம்

வேட்டைக்குப் போனபின் விபரீதம் [1]விளைந்தது
கேட்டதில் லையோநீங்கள் கேளுமென் றேதான்
தையல்சித்தி ராங்கியைச் சாரங்க தரன்வந்து
[2]செய்யவொண் ணாதகவை செய்தனன் கண்டீர்
[3]எய்தவொண் ணாதவிட மெய்தி யடாதது
செய்தவ [4]னிருந்தென்ன சென்றென்ன நமக்கு
தன்னிட தாய்தனைத் [5]தழுவிய பிள்ளையை
என்னசெய் யினும்போமோ என்னிட கோபம்
[6]தந்தைக்கு வந்தவள் தாயென்றோ ராதவன்
மைந்தனோ நமக்கவன் [7]மாற்றா னல்லனோ
சிரமறுத் தவன்றனைச் சின்னசின்ன கண்டமாய்
அரியினு மெந்தனுக் காறுமோ கோபம்

நான் வேட்டைக்குச் சென்றிருந்தேன். அப்போது நடக்கக் கூடாத நிகழ்ச்சி ஒன்று நடந்துவிட்டது. அது இதுவரை உங்கள் காதுகளுக்கு எட்டவில்லையா? சொல்லுகிறேன் கேளுங்கள்! சராங்கதரன் அரசமாதேவி சித்திராங்கியின் அரண்மனைக்கு வந்து செய்யக் கூடாத செயல்களைச் செய்து சென்றிருக்கிறான். செல்லக் கூடாத இடத்திற்குச் சென்று தகாத காரியத்தைச் செய்த அவன் உயிரோடு இருந்தாலென்ன? அவன் அழிந்தாலென்ன? தன் தாயை அணைத்துத்

தழுவிய மகனுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் என் ஆத்திரம் அடங்காது. தன் தந்தையின் மனைவி தனக்குத் தாயாவாள் என்பதைக்கூட சிந்திக்காதவன் என்னுடைய மகன் ஆவானா? அவன் என்னுடைய எதிரியல்லவா? அவன் தலையை வெட்டி, உடலைத் துண்டந் துண்டமாக்கி எறிந்தாலும் என் கோபம் தீராது என்று ஆத்திரத்துடன் பேசினான் மன்னவன்.

விபரீதம் - நடக்கக் கூடாத செயல். தையல் - பெண். ஒண்ணாத - தகாத. அடாதது - தகாதது. ஓராதவன் - எண்ணாதவன், தெளியாதவன். மாற்றான் - விரோதி. சிரம் - தலை. கண்டம் - துண்டம். ஆறுதல் - தணிதல்.

சுவடிச்சொல் - 1. விளைந்தது 2. செய்யவொன்றாத 3. எய்தவொன்றாத 4. னிருந்தென்னா சென்றென்னா 5. தழிவிய 6. தந்தைக்கி 7. மாத்தா.

வசனம் - இத்தனைக் கோபமும் எரிச்சலுமாகப் புத்திரன் பேரில் புரவலன் சொல்லிய மொழிதனைக் கேட்டுப் பழுதிலா மறையோர், மன்னவன் நெறியாளர் இருகையினாலே காதினை மூடிக் கனக்க [1]நொந்துருக, மந்திரி நீதி மய்ந்தனுமப்போ. இந்த வார்த்தையிது மகாபாவம்; நிந்தை வார்த்தையிது நெஞ்சினில் வைத்து அந்த அரசனுக் கெந்தடவுரைப்பான். (54)

சுவடிச்சொல் - 1. னொந்துரிகி.

85. When I was away hunting
Something abominable has happened
Has it reached your ears?
If not, please listen.
Caraṅkataraṉ has called on Cittirāṅki
And done forbidden things,
Since he visited a place not allowed by custom
And did a hellish thing,
It is immaterial whether he lives
Or dies despicably.
A son hugging his mother lustily
Is an outrageous act
Calling for a deterrent punishment.
How can he be called my son
When he is callously incestuous
Making love to his own father's wife,

His most revered mother?
Is he not my worst enemy?
Even if his head is cut
And limbs mutilated,
My anger shall not subside.

Prose: Hearing the King's angry outburst, minister Nītimaintaṉ, who felt that it was sinful to accuse the prince, spoke.

86. *(அமைச்சர் அறவுரை - அரிவையர் உள்ளத்தை அறிய முடியாது எனல்)* *ஏகதாளம்*

அரசனேநீ ரவ்வார்த்தை அடுக்குமோ சொல்ல
வரிசையாய் நான்சொலும் வசனத்தைக் கேளும்
[1]அடவியிற் செடிகளை அத்தனை [2]எண்ணலாம்
கடலிற்றண் ணீரையுங் கணக்கிட லாகும்
[3]வான்உய ரத்தையும் மதிக்கலு மாகும்
வான்மீனை யித்தனையென்று விளம்பலு மாகும்
தலைமயி [4]ரெண்ணிக்கை தான்சொல்ல லாகும்மரத்
[5]திலையையிம் மாத்திரம் என்னலு மாகும்
பாட்டின் [6]பயனது பகரலு மாந்தலை
யோட்டி லெழுத்தையும் உரைக்கவு மாகும்
இன்னமு முள்ளவை யாவு மறியலாம்
கன்னியர் மனந்தனைக் காணப் படாதே
வரமரு ளரிபிர மாதிய ராலும்
[7]அரிவையர் நெஞ்சுள தறியப்போ காதே.

மன்னவா! நீங்கள் இவ்வாறு பழிச் சொல்லிவிடுவது நியாயமாகாது. நான்சில சொல்லுகிறேன் கேளுங்கள்!

காட்டிலுள்ள செடிகள் எததனை? கடலிலுள்ள தண்ணீர் எவ்வளவு? வானம் எவ்வளவு உயரத்திலுள்ளது? விண்மீன்களின் எண்ணிக்கை யாது? ஒருவர் தலையில் உள்ள முடியின் எண்ணிக்கை என்ன? ஒரு மரத்திலுள்ள இலைகள் எத்தனை? பாட்டின் பயன் என்ன? ஒருவரின் தலையெழுத்து எப்படிப்பட்டது? இப்படி உலகிலுள்ளவற்றை யெல்லாம் அளவிட்டு அறிந்து சொல்லிவிட முடியும்.

ஆனால் பெண்களின் மனம் எப்படிப்பட்டது? அவர்கள் உள்ளத்தில் என்ன நினைத்திருக்கிறார்கள் என்னும் செய்தியை மட்டும் நமக்கெல்லாம் அருள்புரிகின்ற, பிரமன், திருமால் முதலான தேவர்களாலும் நம்மாலும் கண்டுபிடிக்கவே முடியாது.

அடுக்கும் - தகும். அடவி - காடு. வான் - ஆகாயம். மதிக்கல் - மதிப்பிட்டு அறிதல். வான் மீன் - விண்மீன், நட்சத்திரம். விளம்பல் - சொல்லுதல். பகரல் - கூறுதல். காணப்படாது - அறிய முடியாது. அரி - திருமால். ஆதியர் - முதலானோர். அரிவை - பெண்.

சுவடிச்சொல் - 1. அடவியிர்ச் 2. என்றலாம் 3. வானொய 4. ரென்றிக்கை 5. தெலையை 6. பயனிது 7. அருவையர்.

வசனம் - அறியப் போகாதென்று அரசனுக்கு அமைச்சன் பின்னுமுரைப்பான்.

(55)

86. Revered King,
I wish you don't frame charges hastily,
Have patience to listen to me.
Do you know the number of plants in the forest
Or the height of the sky?
Can you keep count of stars
Or measure volume of water in the sea?
How many leaves are there in a tree,
How many folicles on one's head?
Can you tell me the use of music
Or comment adequately on one's fate?
Perhaps you may employ some method
And answer the queries with exactitude,
But a woman's mind is too deep
To be plumbed even by Piraman and Tirumāl,
The All-knowing Gods
Who shed on us their blessings!

Prose: The Minister offered the King more advice.

87. *(சாரங்கதரன் தவறு செய்திருக்கமாட்டான் என அமைச்சன் கூறுதல்)* **சம்பை**

பேயென்றால் பேயுமழை காயென்றால் காயுமவன்
வாயினால் புகல்சத்திய வாக்கியமன் னவனே!
உன்பிள்ளை போல்பிள்ளை உலகிலுண் டோபிள்ளை
உல்பிள்ளை அபகீர்த்திக் குள்ளாவ தில்லை
எவர்பிசகி னாலுமுரை எவர்தவறி னாலும்பிள்ளை
அவரிடத்தில் பிசகென்ப தனியாய மலவோ
கொல்வேனென் றும்மகனைக் குத்துவே னென்றும்நீர்
[1]சொல்லவொண் ணாதுவெகு தோஷங்கா ணையா
பெண்சாதி சொற்கேட்டுப் பிள்ளைதனைக் கடிவரோ
பெண்சாதி யால்கெட்ட பேரைச்சொல்லக் கேளும்.

சாரங்கதரன் விரும்பி மழையை வேண்டினால் போதும்; மழைபொழியும். அதே போல நன்றாக வெய்யில் காய வேண்டும் என்று வேண்டினால் அப்படியே காயும். அவன் உண்மையையே பேசும் இளவரசனாவான். உங்கள் மகனாகிய சாரங்கதரனைப் போன்ற ஒரு மகன் உலகில் பிறப்பதில்லை. அவன் என்றுமே இப்படிப்பட்ட பழிச் சொல்லுக்கு ஆளாகவில்லை; இனி ஆகவும் மாட்டான். யார் தவறு செய்தாலும் செய்யலாம்; யார் சொன்னசொல்லை மீறி நடந்தாலும் நடக்கலாம். உங்கள் மகன் தவறு செய்தான் என்பது நியாயமில்லாத சொல்லாகும். கொல்லுவேன் குத்துவேன் என்றெல்லாம் நீங்கள் சொல்லுவது சரியில்லை. மனைவியின் பேச்சைக் கேட்டுப் பிள்ளையைக் கோபிப்பது சரியில்லை பெண்ணால் கெட்டவரைச் சொல்லுகிறேன் கேளுங்கள்!

பேய் - பொழி; மழைபொழிதல். சத்தியவாக்கியன் - உண்மையே பேசுபவன். அபகீர்த்தி - பழி. பிசகுதல் - தவறு செய்தல். கடிதல் - கோபித்தல், தண்டித்தல்.

சுவடிச்சொல் - 1. சொல்லவொன்றாது.

87. Listen King,
If your son Cāraṅkataraṉ commands
The rain will pour;
If he wishes for bright sunshine
It shall instantly materialise,
His integrity is exceptional

Yes, none can equal your son
In goodness and nobility;
Very few can boast of such progeny.
No one in the past has cast a slur on him,
No one shall in the future either.
Others may blunder
Or break their promises,
But not Cāraṅkataraṉ
Your threat to kill him or stab him
Is unfair and unethical.
Taking your spouse's word for solemn truth,
You should not hastily accuse him.
Shall I enumerate
The list of men ruined by women?

88. *(பெண்ணால் நிகழ்ந்த கேடுகள் பலவற்றை அமைச்சன் எடுத்துக் கூறுதல்)* திபதை

சூரிய வெங்கிச [1]துரைதச ரதன்தான்
நாரிகை கேசியாள் நவிலவே கேட்டு
மைந்தனாம் ராமரை வனத்தினி லோட்டி
சிந்தையாய் மாண்டிடுஞ் சேதிகேட் டிலையோ
காட்டினில் சீதைசொல் கேட்டுரா கவனும்
ஓட்டமாய் மாயமான் ஓடவே [2]தொடர
அந்தவோர் வேளையி லசுரனார் தங்கை
பந்தமய [3]சூர்ப்பநகை பாதகி பேச்சை
இலங்கையை யாண்டிடும் [4]இராவணன் கேட்டு
அலங்கிருத சீதையை அவனுமே யெடுத்துக்
கொண்டுபோய் சிறைதனில் கோதையை வைக்க
அண்டொணாச் சேனையு மசுரரை வதைத்து
இராவணன் தானுமே இறந்தனனப்பொழுது
மராமர மெய்தவர் அவள்சிறை [1]தீர்த்தார்
அந்தவோர் கதையை அறியிரோ பின்னும்

சந்திர வமிசத்தில் [5]தருமர் அய் வருமாய்ப்
பந்தமாய்த் துரோபதை பாரிசொல் கேட்டு
சிந்தையாய்த் துரியோதனன் சேனையைக் கொன்று
பதினெட்டு அக்குரோணி பரிவார மாண்டு
மதியிலா வரசர்கள் அநேகரு மாண்டார்
மாதாசொல் லியவசனங் கேட்டுவை யகத்தோர்
பாதகத்துக் குள்ளாய்ப் பாரினி லிறந்தார்
காரிய மறியாத கபடிக ளான
[6]நாரியர் வசனத்தை நம்பப்போ காது
பட்டப்பா டுரைக்கப் படாதுமன் னவனே
திட்டமாய் மந்திரி செப்பிநின் றானே.

சூரிய வமிசத்திலே தோன்றியவன் தசரதச் சக்கரவர்த்தி. மனைவி கைகேயியின் சொல்லைக் கேட்டுத் தன் மகன் இராமனைக் காட்டுக்கு அனுப்பினான். ஆனால் அவன் கதி என்ன? மகனைப் பிரிந்த துன்பத்தாலேயே உயிர்விட்டான்.

இராமனோ தன் மனைவி சீதையின் சொல்லைக் கேட்டு மாயமானைப் பின்தொடர்ந்து ஓடினான். அதே நேரத்தில் இலங்கையரசன் இராவணன் தன் தங்கையாகிய சூர்ப்பநகையின் சொல்லைக் கேட்டுக் காட்டில் தனியே இருந்த சீதையைத் தூக்கிச் சென்று சிறைவைத்தான். மராமரம் என்னும் ஏழுமரங்களை ஒரே அம்பினால் எய்து வீழ்த்தியவராகிய இராமபிரான், நெருங்க முடியாத பலம் படைத்த அசுரர்களாகிய படைவீரர்களைக் கொன்று குவித்து, இராவணனையும் கொன்று சீதையைச் சிறைமீட்டான். இந்தக் கதை நீங்கள் அறியமாட்டீர்களா? சந்திர வமிசத்தில் தோன்றிய தருமர் முதலான பாண்டவர் ஐவரும் மனைவியாகிய திரௌபதையின் சபதத்திற்காகத் துரியோதனன் முதலான கௌரவர் நூற்று வரையும் பதினெட்டு அக்குரோணி படைவீரர் முதலான நால்வகைச் சேனைகளையும் கொன்று குவித்தார்களே! இவ்வாறு பெண்களின் சொல்லைக் கேட்டுப் பெரும் பாவத்திற்குள்ளானவர்களும், இறந்து போனவர்களும் இந்த உலகத்தில் பலராவார்களே! நல்ல செயல்களைப் பற்றியே சிறிதும் சிந்திக்காத சுயநலமுடைய வஞ்சகர்களான பெண்களின் சொல்லை முழுமையாக நம்பிவிட முடியாது என்று அமைச்சன் சொல்லி முடித்தான்.

வெங்கிசம் - வமிசம், குலம். நாரி - பெண். நவிலல் - சொல்லல். பாதகி - துரோகி. அலங்கிருதம் - அலங்காரம், அழகு. கோதை - பெண். அண்டொணா - அண்ட ஒண்ணாத - நெருங்கமுடியாத. மராமரம் - கிஷ்கிந்தையிலிருந்த ஏழு ஆச்சா மரங்கள். பாரி - மனைவி. அக்குரோணி - தேர், யானை, குதிரை, போர்வீரர் ஆகிய நால்வகைப் படை; அவை ஒரு லட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து எழுநூறு என்பர் (அவை

முறையே 21870, 21870, 45610, 109350). பரிவாரம் - படைகள். காரியம் - செயல். கபடிகள் - வஞ்சகர்கள். நாரிகள் - பெண்கள்.

சுவடிச்சொல் - 1. துறை திசறதன் 2. துடர 3. சூற்பனகை 4. றாவணன் 5. தற்மராய்வருமாய் 6. னாரியார்.

வசனம் - செப்பியே. மந்திரி ஒப்பவே பின்னும் பண்டயிலடந்த மொழி மண்டலிகனுக்குச் சொல்வான். (56)

88. King Tacarata of Solar dynasty
Sent his son Rāma to forest
On the compulsion of his wife Kaikēyi
And died of grief
Engendered by separation.
On his part Sri Rāma
Followed the false deer
As desired by his wife Cītai
When Rāvaṇa, the King of Lankai
Prompted by Cūrpaṇakai, his sister
Abducted Cītai alone in the forest
And virtually imprisoned her.
Rāma, credited with felling seven trees
With a single shaft
Massacred the invincible Acura soldiers,
Killed Rāvaṇa and saved Cītai;
Are you not familiar with this tale?
Pāntavās, five in number,
Descendants of Lunar dynasty
To uphold the vow of their spouse Traupati
Killed Turiyōtaṇa and his brothers
Hundred in number,
Destroyed eighteen platoons
And five primary units of the army.
Thus on the advice of women,
Many have turned big sinners,
Many have lost their lives as well.

Seldom thinking of good things
Selfish women, downright wicked
Should not be trusted fully,
So ended the minister's sermon.

Prose: The Minister who spoke gave more advice.

89. *(அந்தணமாது கீரியைக் கொன்ற கதையைக் கூறுதல்)ஏகதாளம்*

ஒதுவர் புரியென் றொருநக ரதிலொரு
வேதியன் [1]மனைவி குமாரனில் லாதே
மாதொரு கீரியை மகனென்று [2]வளர்த்திடும்
போதினில் [3]அவளுக்கொரு புத்திரன் உண்டாய்
தொட்டில் தனிலே அந்தச் சுதனை [4]வளர்த்தியவள்
பொட்டணக் கீரைகொய்யப் போயினள் அதிலே
சீறிய பாம்பது சேயுள்ள தொட்டிலில்
[5]ஏறவே கீரியும் ஏறியவ் வரவைக்
[6]கொன்றதன் வாயினில் குருதியுட னேயெதிர்
நின்றதை [7]நான்மறை நன்னுதல் தானும்
கண்டனள் பிள்ளையைக் [8]கடித்ததென் றேதலை
விண்டிட [9]நறுக்கித்தன் வீட்டினிற் போனாள்

ஒதுவர்புரி என்னும் ஒரு நகரம் உண்டு. அங்கு வாழ்ந்து வந்த அந்தணர் ஒருவருக்குக் குழந்தைச் செல்வம் உண்டாகவில்லை. எனவே அவர் மனைவி ஒரு கீரியை மகனாக வளர்த்து வந்தார். அப்போது அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ஒரு நாள் குழந்தையைத் தொட்டிலில் கிடத்தித் தூங்கச் செய்துவிட்டுக் கீரை கிள்ளி வரச் சென்றாள் தாய். அப்போது ஒரு பாம்பு சீறியபடியே குழந்தை படுத்திருக்கும் தொட்டிலில் ஏறியது. அதைக்கண்ட கீரி பாம்பைத் தொடர்ந்து ஏறி அந்தப் பாம்பைக் கடித்துப் போட்டுவிட்டு வாயில் இரத்தக் கரையுடன் வெளியிலிருந்து வந்த அந்தணர் மனைவியின் எதிரில் வந்து நின்றது. குழந்தையைத்தான் கடித்துப் போட்டுவிட்டு வந்து நிற்கிறது என்று நினைத்த அவள் கீரியின் தலையுடையுமாறு அடித்துக் கொன்று விட்டு வீட்டிற்குள் புகுந்தாள்.

வேதியன் - வேதம் ஓதும் அந்தணன். சுதன் - மகன். வளர்த்துதல் - கிடத்துதல், தூங்கச் செய்தல். சேய் - குழந்தை. அரவு - பாம்பு. குருதி - இரத்தம். நான்மறை -

நான்கு வேதங்கள். நன்னுதல் - அழகிய நெற்றி; நெற்றியையுடைய பெண்ணைக் குறித்தது.

சுவடிச்சொல் - 1. மனவிகுமார நில்லாதே 2. வளத்திடும் 3. அவள்க்கொரு 4. வளத்தியவள் 5. என்றவே 6. கொண்டதன் 7. னான்மறை 8. கடித்துதென்றே 9. நரிக்கி.

89. In the city of Ōtuvārpuri
Lived a childless brahmin
Whose wife had a mongoose
As dear as any loving son.
It so happened
That later they begot a male issue.
One day leaving the child in the cradle
The woman went to collect spinach
A hissing snake
Climbed the cradle
Where the infant was fast asleep.
Seeing this, the mongoose followed the snake
Bit it deeply and with blood stains
Stood before the brahmin's wife.
Mistaking the mongoose for a killer
The woman hit it hard on the head
Till it died and entered the house.

90. *(அந்தணன் காசியாத்திரை)*

சம்பை

தொட்டில்தனில் பாலகனும் சுகமாக இருக்கஅந்தத்
தொட்டிலின்கீழ் பாம்புரெண்டு துண்டாகக் கண்டாள்
அறியாமற் கீரிதனை யாம்கொன்றோ மென்றுமன
மறுகியே சேய்க்கவை மறையோனுக் குரைத்தாள்
சித்தமாய் மனைவிதனைத் திட்டியே யான்காசி
யாத்திரைபோ வேனென்று அந்தணனும் புகல.

உள்ளே வந்த தாய், தொட்டிலில் குழந்தை நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்ததையும், அந்தக் தொட்டிலின் கீழே பாம்பு ஒன்று இரண்டு

துண்டுகளாக்கப்பட்டுச் செத்துக் கிடந்ததையும் கண்டாள். நடந்த உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் கீரியைக் கொன்று விட்டோமே என்று மனம் வருந்தினாள். தன் தகாத செயலைத் தன் கணவனிடம் எடுத்துக் கூறினாள். மனைவியின் செயலுக்காக அவளைத் திட்டிவிட்டுத் தான் காசியாத்திரை போகப் போவதாகவும் கூறினான்.

பாலகன் - குழந்தை. மறுகுதல் - குழம்புதல், வருந்துதல், சேய் - குழந்தை. மறையோன் - அந்தணன், யாத்திரை - புண்ணியத்தலங்களுக்குச் செல்லும் பயணம்.

வசனம் - அந்த வார்த்தை கேட்டுப் பிராமணத்தி ஏது சொல்லுவாள். (57)

90. She found the child fast asleep
And a snake slit into two
Lying below the cradle.
Sorrow struck the woman
Who had thoughtlessly killed the mongoose.
When she reported this to her husband
He severely rebuked her
And revealed his plan to visit Benares
On a holy, perhaps expiating pilgrimage.

Prose: On hearing this, what did the brahmin woman say?

91. *(மனைவியிடம் கொடுத்த சீட்டு)* சம்பை

போறீரல் லோஅகத்துப் புருஷரே [1]எனக்கென்ன
[2]சோறீரென் றேயந்தத் தோகைசொல்லு மளவில்
ஆய்ந்தறிந்து பாராதே அறியாமல் செய்தகவை
தான்சாகத் துயரமிகத் தருமென்றே மறையோன்
சீட்டிலே எழுதிவிலை செம்பொன்னூ றென்றுமனை
யாட்டிகை யிற்கொடுத்து மறையவனுஞ் சொல்வான்
'மதிக்குள்ளானவர் கையில் வழங்கினா லிந்தச்சீட்டு
இதுக்குப்பொன் னூறீவ ரென்றுசொல்லிப் போனான்.

என்னுடைய வீட்டுக்கு உரியவரே! நீங்கள் போகிறீர்களல்லவா? அப்படியானால் எனக்கு என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டாள். 'சிறிதும் சிந்தித்துப் பார்க்காமல் தன்னுடைய மூடத்தனத்தால் ஒருவர் தவறு செய்தால், அத்தவறானது

செய்தவர் சா:குமளவிற்குப் பெருந்துன்பத்தை அவர்களுக்கு உண்டாக்கிவிடும் என்ற வாக்கியத்தை ஒரு சீட்டிலே எழுதி மனைவியிடம் கொடுத்தான். இதற்கு விலை நூறுபொன் ஆகும். சிறந்த அறிவுள்ள ஒருவரிடம் இதைக் கொடுத்தால் அவர்கள் நூறுபொன் தருவார்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

போறீர் - போகிறீர். அகம் - வீடு. சோறீர் - சொல்லுகிறீர் என்பதன் கொச்சைச்சொல் சொல்றீர் என்பது சோறீர் எனக்கூறப்பட்டது. தோகை - பெண் அறியாமல் - தெரியாமல். கவை - குற்றம். மதி - அறிவு. ஈவர் - கொடுப்பார்கள்.

சுவடிச்சொல் - 1. எனக்கென்னா 2. சோரிரென்றே.

91. My lord and bread winner,
Since you have decided to go
Pray, leave a message for me.
Thoughtless actions of the foolish
Shall result in life-long sorrow
So wrote the brahmin on a chit
And gave it to his wife.
Hand over this to any wise man
And hundred sovereigns shall be yours
Said the brahmin and bade adieu.

92. *(பார்ப்பனியின் ஏக்கம்)* **திபதை**

போனபின் அந்தணப் பூவையு மிரங்கி
[1]நானென்ன செய்குவேன் [2]நானுமெண் ணாமல்
கீரியைக் கொன்று கிட்டிய துயரம்
யாருமென் செய்யப் போறார்க ளென்று
தன்னிலே தவித்து தன்னிலே யுழன்று
தன்னிலே பரந்தவள் தன்னிலே யிந்த
ஓலைக்குப் பொன்னூறு உனக்கெனக் கொடுத்து
தேவிநான் புருஷன்யான் செய்யுமவ ரென்ன
வேலைசூ ழுலகில் விவேகியா னாலும்
ஓலைக்குப் பொன்னூறு உதவுவா ருண்டோ
என்றுதான் சொல்லியவள் ஏங்கியே மாங்காய்

தின்றங்க னேமனந் தேறியே ஓலை
இதுநமக் காஸ்தியென் றிருந்திடும் நாளில்
விதியுடன் மறையோன் விளம்பின படியே

(ஓலையை வாங்கிய வாணிகன் மகன் வெளிநாடு போதல்)

கன்றதுரை தன்னிலே கன்ன மாபுரம்
என்றொரு நகருளததி லுயர்குடி வணிகன்
தனக்கொரு பிள்ளை தானுமுண் டவனை
மனப்பிரி யத்துடன் வாவென அழைத்து
கையிலே நூறுபொன் களிக்கவே [3]கொடுத்து
செய்யென்று வர்த்தகம் செட்டியுஞ் சொல்வான்
ஏதெர்ரு பொருள்முத லென்னவந் தாலும்
போதவே கொள்ளெனப் புத்திரருக் குரைக்கத்
தந்தைசொற் படியந்தத் தனையனுங் கடையில்
வந்தவன் தன்மன [4]மகிழ்ச்சியா யிருக்கும்
வேளையி லந்தண மெல்லியா ளந்த
நாளையி லவ்விடம் [5]நண்ணியே புருஷன்
தந்திடும் சீட்டிவன் தன்கையில் கொடுக்க
மைந்தனும் முதன்முதல் வந்ததை விடப்போ
காதென அந்தணக் கன்னியை விலைநீ
ஓதென விலைபொன்னூ றோதினன் என்றாள்
அப்படியே பொன்னூறு அவள்கையில் [3]கொடுத்து
செப்பிய நீதியின் சீட்டது கொண்டு
பிதாவுடன் சொல்லினான் பிள்ளையு மப்போ
நிதானமுன் வர்த்தகம் [6]நேர்த்திநன் றாச்சுதென
அழைத்துப்போய் வணிகனு மகத்தவள் முன்விட்
டிழைத்தபொன் னூறையு மொடுக்கியிவ் வோலை
கொண்டுவந் தானுன் [7]குமாரனின் லாபம்
கண்டுக்கோ கண்டுக்கோ வென்றுதான் கழறி
சண்டை [8]தொடங்கவே தான்பய மெய்தி
குண்டியா வளிக்கமெய் குன்றியே யெயிற

சொட்டையொன் றெடுத்துத் துரிசுலோகத்தைச் சொருகி
செட்டிதன் மகன்பர தேசம்போ னானே.

அந்தணன் யாத்திரை புறப்பட்டபின் அவன் மனைவி மிகவும் உள்ளம் உருகினாள். நான் சிறிதும் யோசிக்காமல் கீரியைக் கொன்றுவிட்டேன். அதனால் பெருந்துன்பம் வந்து சேர்ந்து விட்டது. இனி யார் யார் என்ன செய்யப் போகிறார்களோ என்று தனக்குத்தானே தனிமையில் இருந்து கூறித் தவிப்பாள்; தனக்குதானே நொந்து வருந்துவாள். இந்த ஓலைக்கு நூறு பொன் தருவார்கள்; அது உனக்கு உரியது என்று கூறி என்னிடம் கொடுத்துச் சென்றார் என் புருஷன். நான் அவருடைய மனைவி என்று கூறினால், கடல் சூழ்ந்த இந்த நிலவுலகத்தில் என்னதான் உயர்ந்த பகுத்தறிவு படைத்தவர்களாக இருந்தாலும் இந்த ஓலைக்கு நூறு பொன் யார் தருவார்கள்? இவ்வாறு தனக்குத்தானே கூறிக்கொண்டு மனம் வருந்தினாள். தனக்குத் தானே பேசிப்பேசிச் சலித்துப்போன அவள் ஒருவாறு மனந்தெளிந்தாள். இந்த ஓலையே நமக்குச் சொத்து என்று எண்ணியிருந்தாள்.

கன்னமாபுரம் என்னும் ஒரு நகரத்தில் மிக உயர்ந்த வாணிகன் ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் தன்னுடைய மகனை மிகவும் அன்போடு அழைத்து, நீ ஏதேனும் ஒரு வியாபாரம் செய் என்று கூறி அவனிடம் மகிழ்ச்சியோடு நூறு பொன்னைக் கொடுத்தான். நீ வியாபாரம் தொடங்கியபின் முதன்முதலில் எந்தப்பொருள் விலைக்கு வந்தாலும் மன நிறைவாக அதை வாங்கிவிடு என்றும் கூறினான். தந்தை கூறியபடி மகன் தங்கள் கடைக்கு வந்து மகிழ்ச்சியோடு அமர்ந்தான். அப்போது ஒதுவர்புரி அந்தணன் மனைவி தன் கணவன் சொன்னபடி அவன் கடையை நாடி வந்தாள். தன் கணவன் கொடுத்துச் சென்ற சீட்டை இந்த வாணிகன் மகன் கையில் கொடுத்தாள். முதன் முதல் வந்ததை விடக்கூடாது என்ற தந்தையின் சொற்படி அந்த வேதியர் மனைவியைப் பார்த்து இதன் விலை என்ன என்று கேட்டான். அவளும் இதன் விலை நூறு பொன் என்று என் கணவன் கூறியிருக்கிறார் என்றாள். அவள் சொன்னபடியே அவளிடம் நூறு பொன் கொடுத்து நீதி எழுதப்பட்ட அந்தச் சீட்டை வாங்கிச் சென்று தந்தையிடம் காட்டினான். உன்னுடைய வியாபாரம் மிகவும் மதிப்பு வாய்ந்தது; மிகவும் நுண்ணறிவோடு திருத்தமாகச் செய்யப்பட்டுள்ளது; நன்றாக இருக்கிறது என்றெல்லாம் ஏளனக் கருத்தோடு கூறிய தந்தை தன் மகனை உடன் அழைத்துச் சென்று தன் மனைவியின் முன் நிறுத்தினான். உன்மகன் நான் கொடுத்த நூறு பொன்னையுங் கொடுத்து இந்த ஓலையை வாங்கி வந்திருக்கிறான். இதனால் பெற்றிருக்கிற பெரிய லாபத்தை நீயே பார் என்று சினந்து கூறினான். தந்தையின் பேச்சு பெரும் போராட்டமாக இருந்ததைப் பார்த்துப் பயந்து போனான் மகன். இருதயம் நடுங்கியது; உடல் சோர்ந்தது; பற்கள் நறநறவென்று கடித்துக் கொண்டன. நடுங்கிய அவன் அருகிலிருந்த கட்டாரி போன்றதொரு கூரிய

ஆயுதத்தை எடுத்தான். எழுதப்பட்ட வரிகள் அடங்கிய அந்த ஓலையை அதில் செருகினான். உடனே வெளியே வந்து வேறுநாடுகளுக்குச் செல்லப் புறப்பட்டுவிட்டான்.

இரங்குதல் - உருகுதல். எண்ணாமல் - சிறிதும் யோசித்துப் பாராமல். கிட்டிய - வந்துசேர்ந்த. தன்னிலே - தானாக, தனிமையாக. உழலுதல் - வருந்துதல். பரத்தல் - மிகுதல். வேலை - கடல். விவேகி - பகுத்தறிவாளன். ஏங்கி - வருந்தி. மாங்காய் தின்னல் - புளித்துப் போதல்; பிறகு மனந்தெளிதல். ஆஸ்தி - சொத்து, செல்வம். களிக்க - மகிழ்ச்சியடைய. போத - திருப்தியாக. கொள் - வாங்கு. தனையன் - மகன். நண்ணி - அடைந்து. ஓது - சொல். நீதி - முறைமை. பிதா - தந்தை. நிதானம் - மதிப்பு. நேர்த்தி - திருத்தமானது. அகத்தவள் - வீட்டிற்குரியவள், மனைவி. இழைத்த - செய்த; ஒடுக்குதல் - அடக்குதல் (கொடுத்தல்). கழறுதல் - கூறுதல். குண்டி - இருதயம் ஆவளித்தல் - நடுங்குதல். மெய் - உடல். குன்றுதல் - சோர்வடைதல். எயிற - பல்கடித்துக் கொள்ள. சொட்டை - கட்டா போன்றதோர்க் கருவி. துரி - எழுதுகோல்; எழுதப்பட்டது. சுலோகம் - செய்யுள், வசனம். பரதேசம் - பிறநாடு.

சுவடிச்சொல் - 1. னானென்ன 2. னானுமென்றாமல் 3. குடுத்து 4. மகிகூடியா 5. நன்றியே 6. நேத்தினன்றாச்சு 7. குமாரநில் 8. துடங்கவே 9. துறி.

92. Great grief was the lot of the woman
Since the departure of her loving lord;
Thoughtless was I in killing the mongoose
And inviting unfathomable grief
So she soliloquised
And sincerely repented her act.
My husband has left this palm leaf
With a cryptic message,
Which wise man shall exchange this
For hundred sovereigns?
At any rate, this palm-leaf
Is verily an asset
Thought the lonely woman
Reconciled herself to her lot.
In the city of Kannammapuram lived a merchant
Who summoned his son lovingly
Gave him hundred gold coins

Advised him to start some trade.
'As soon as you commence business
Buy whatever is offered first
Without bargaining, but with contentment'.
The moment, the son sat in his shop
Came the brahmin woman of Ōtuvārpuri
And gave him the chit of her husband.
What price demanded the trader novice
Who did not want to miss the first bargain
In keeping with the advice of father..
As suggested by her husband dear,
The woman wanted hundred sovereigns.
Giving her the price ungrudgingly
The trader accepted the palm leaf
And proudly took it to his father.
The father spoke with bitter irony,
'Indeed you are an ace businessman,
You have acted with unusual dexterity!'
So saying, he took the son
To the presence of the mother
'See how diligent your boy is.
He has exchanged hundred sovereigns
For this paltry palm leaf!
You can very well calculate
The enormous profit he has made'
Said the father consumed with wrath.
On hearing his father's speech
The son was terribly upset
He suffered from palpitations
The body showed signs of exhaustion,
Gnashing his teeth he drew a dagger
Drove the palm leaf into it
For safe-keeping and left for foreign land.

93. *(வாணிகன் பணம்தேடப் படகேறிப் போதல்)* *சம்பை*

புத்திரனும் பரதேசம் போகவே [1]தபசுபண்ணிப்
[2]பெற்றவளும் பெற்றவனும் பெருந்துயர மெய்திப்
பணமென்ன பாஷாணம் பாலகனைப் போக்கினோம்
கணில்மகனை [3]எப்பிறப்பில் காண்போமோ நாமும்
பொன்கிடையை யாசரியாப் [4]புண்ணியஞ்செய்தோ மாகில்
தன்கிடையே பிள்ளையவன் தான்வருவ னென்றே
[5]என்றுயிருந் திடுநாளில் நின்றுண்டா லொருபெரிய
[6]குன்றுமாண் டிடுமெனவே கூறு மொழியறிந்து
பாங்காக வேவணிகன் பணந்தேடி வரக்கடலில்
சோங்கெறியப் போயுடனே சோங்கு திரும்பாமல்
[7]நாள்சென்ற போதிலந்த [8]நாள்சென்ற வணிகன்மகன்
[8]வாள்கொண்டு தன்பதியில் வந்து சேர்ந்தானே.

மகன் தன் நாட்டைவிட்டு வேற்று நாடுகளுக்குச் செல்லப் புறப்பட்டு விட்ட பின்பு, தவமிருந்து பெற்றவர்களாகிய பெற்றோர் இருவரும் பெரிதும் வருந்தினார்கள். பணம் என்ன பணம்! அது நஞ்சுக்குச் சமமாகும். ஆனால் அந்தப் பணத்தை எண்ணியே பெற்ற மகனை நாட்டை விட்டுப் போகச் செய்து விட்டோமே! இனி அவனை நாம் எந்தப் பிறவியில் காணப்போகிறோம்! பொற்குவியலாகிய பெருஞ்செல்வத்தையே பெரிதாக எண்ணி வழிபடுவதை விட்டு விட்டு அந்தச் செல்வத்தால் புண்ணியம் கிடைக்கக் கூடிய தருமச் செயல்களை இனியாவது கடைப்பிடிப்போம். அப்படிச் செய்துவந்தால் அந்தப் புண்ணியத்தால் நம்மகன் நம்மோடு வந்து சேருவான் என்று எண்ணி அதன்படி ஒழுகி வந்தார்கள். வருமானம் இல்லாமல் உட்கார்ந்து சாப்பிட்டால் ஒரு பெரிய மலைபோன்ற செல்வமும் சிறிதுநாளில் சாப்பிட்டே கரைந்து போகும் என்பார்கள். இந்தச் சான்றோர் கருத்தை உணர்ந்த வாணிகன் பணம் சம்பாதிக்கத் துணிவு கொண்டான். படகு ஒன்றில் ஏறி அதைச் செலுத்திச் சென்று பொருளீட்டத் தொடங்கினான். அவன் சென்ற படகு வருவதற்குமுன், நாட்டை விட்டுச் சென்ற வணிகன் மகன் தன் நாட்டிற்கு வந்து சேர்ந்தான்.

பாஷாணம் - நச்சுப் பொருள், நஞ்சு, விஷம். கணில் - கண்ணில் என்பதன் இடைக்குறை. கிடை - குவியல், கிடத்தல். ஆசரித்தல் - வழிபடுதல், போற்றுதல். நின்றுண்டால் - வருமானம் இல்லாமல் சும்மாயிருந்து சாப்பிட்டு வந்தால். குன்றும்மாண்டிடும் - மலைபோன்ற செல்வம் அழிந்திடும். கூறுமொழி - சான்றோர்

வழக்கு. பாங்கு - முறை. சோங்கு - ஒருவகை மரக்கலம், படகு. எறிய - ஓட்ட; செலுத்த. பதி - நகரம்.

சுவடிச்சொல் - 1. தபசுபன்றி 2. பெத்தவளும் பெத்தவனும்ப் பெருந்துயர 3. எப்பெறப்பில் காண்பபோனாமும் 4. புன்றியஞ் 5. என்றியிருந்திடு 6. குன்றுமான்றிடு 7. நாள்ச்சென்ற 8. னாள்சென்ற 9. வாள்க்கொண்டு.

93. When the son left for unknown shores
The parents were terribly grief-stricken
They cursed themselves
And mad attachment to money
Which after all, is noxious as venom.
'What else except greed for wealth
Made us drive our son to despair
Would we again see him at all?'
Lamented the repentant parents.
Let us give up the worship of Mammon
And distribute wealth to lessen suffering,
Who knows, our acts of charity
May unite us with son.
When they decided to distribute wealth
To the lowly and lost
A single thought disturbed them,
Even mountain heaps of money
Unless replenished from time to time
Would soon get exhausted.
Recollecting this wise saying of elders
The Merchant decided to start earning
He got into a boat, rowed it himself
And went in search of wealth.
Ere he returned from his trip
His son in exile came back.

94. *(வாணிகன் மகன் தன் நாடு அடைதல்)* **திபதை**

பிள்ளையக் கண்டனள் [1]பெற்றவ ளப்போ
பிள்ளையை யணைந்திப்போ [2]பெற்றனன் உன்னைக்
[3]கண்ணிலே நானுன்னைக் கண்டது முன்செய்த
[4]புண்ணியந் தானுமிப் போபலிப் பாச்சு
[1]பெற்றவன் தானுன்னைப் பிழைக்கவே நல்ல
புத்திசொன் னாலது பொறுத்திருக் காமல்
போவரோ தம்பிநீ போனபின் நாங்கள்
ஆவதென் னாவென் றிருந்துய ரடைந்தோம்
வந்துநீ ரென்துயர் [5]மாற்றியே யுயிருந்
தந்தனை யுன்னிட தகப்பனார் சோங்கு
ஏறியே போனவ [6]ரின்ன மவர்வரும்
வாறுகா ணேனென்று மகனுடன் சொல்லி

(வாணிகனும் நாடு திரும்பி வீடு அடைதல்)

இருந்திடுங் காலையி லேகிய வணிகன்
அரும்பொருள் தேடி [7]அற்றைநா ளிரவில்
ஊரினி லேகிய ஒளியள வாகப்
பார்தன்னி லமையைப் பார்க்கவே யவனும்
மனைபுகுந் தான்கட்டில் மஞ்சத்தின் மேலே
தனையனும் [8]பெற்றிடும் தாயுமொன் றாகத்
துயில்வது கண்டிவன் சோரனா மென்று
கையிலவ னருகுள்ள கடாரியை யெடுத்தே
உருவினான் கொல்லவென் றோலைகீழ் விழவே
தெரிவமென் றந்தவோர் சீட்டினை விளக்கிற்
பார்த்தனன் பார்த்தவன் பாரியை யெழுப்பப்
பார்த்தனள் விழித்தந்த பைங்கொடி யெழுந்து
மைந்தனை எழுப்பியே வாரியுள் போமுன்
தந்தைவந் தாரிதோ தான்வணங் கென்னப்
பணியவே பிள்ளையைப் [9]பார்த்துநெஞ் சுருகி
வணிகனு மய்யய்யோ மைந்தனே உன்னைக்

கொன்றுமென் னுயிர்போக்கிக் கொள்ளவே யிருந்தேன்
என்றுநீ நூறுபொன் நீட்டுவாங் கியதோர்
[10]சீட்டினால் காரியஞ் சேகர மாச்சென்
றாட்டியின் சீட்டினுக் காயிரம் பொன்னும்
விலையல்ல வென்றுதான் மெத்தவுந் துதித்து
.....தனையனுந் தானுமப் போது
மாயிரு ஞாலத்தில் மறுப்படா [11]துயர்ந்த
ஆயிரம் பிறைதொழு தவரிருந் தனரே.

மகனைக் கண்டாள் தாய். கட்டியணைத்துக் கொண்டாள். இப்போதுதான் உன்னைப் பெற்றேன் எனக் கூறி மகிழ்ந்தாள். மீண்டும் உன்னை நான் கண்ணால் காண நேர்ந்தது முன் செய்த புண்ணியத்தின் பலனேயாகும். உன்னைப் பெற்ற தந்தை உனக்குப் புத்திமதி சொன்னார். அது நீ நன்றாக வாழ்வதற்காகத்தானே! அதைப் பொறுத்துக் கொள்ளக் கூடாதா? உடனே போய்விட்டாயே! தம்பி! நீயே போன பிறகு எங்களுக்கு இங்கு என்ன வாழ்க்கை வேண்டிருக்கிறது என்று மிகவும் துன்பம் அடைந்து இருந்தோம். நீ வந்து எனக்கு உயர்; கொடுத்துவிட்டாய்; என் துன்பத்தையும் மாற்றி விட்டாய்; உன்னுடைய தந்தையார் படகு ஏறி வெளிநாடு சென்றிருக்கிறார்; இன்னும் வரவில்லை என்றெல்லாங் கூறி மகனோடு மகிழ்ச்சியாகப் பேசியவாறே படுக்கைக்குச் சென்றாள்.

வியாபாரத்திற்காகச் சென்ற வாணிகன் பெரும்பொருள் சம்பாதித்துக் கொண்டு, மகன் ஊருக்கு வந்த அன்றைய இரவில் நகருக்குள் வந்து இறங்கினான். மனைவியைக் காணும் விருப்பமுடையவனாய் வீட்டிற்குள் புகுந்தான். அவர்கள் படுக்கும் மஞ்சமாகிய கட்டிலில் தாயும் மகனும் ஒன்றாகப் படுத்திருந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் இவன் தன் மனைவியின் கள்ளப்புருஷன் என்றே முடிவுசெய்தான். அவர்களைக் கொல்ல வேண்டுமென்று எண்ணியவனாய் அருகிலிருந்த கட்டாரியை எடுத்து உருவினான். அப்போது கட்டாரியில் சொருவப்பட்டிருந்த ஓலை கீழே விழுந்தது. இது என்ன ஓலை? பார்ப்போமே என்று எண்ணிய வாணிகன் விளக்கு வெளிச்சத்திற் கொண்டுபோய் வைத்துக் கொண்டு அந்தச் சீட்டைப் படித்துப் பார்த்தான். உடனே தன் மனைவியை எழுப்பினான். அவள் கண் விழித்துத் தன் கணவன் வந்திருப்பதைப் பார்த்துவிட்டு அருகில் படுத்திருந்த மகனையும் எழுப்பினாள். கடலின் மேல் சென்றிருந்த உன்னுடைய தந்தை வந்திருக்கிறார் பார்! வணங்கிக்கொள் என்று கூறினாள். மகனும் அவ்வாறே எழுந்து தந்தையை வணங்கினான். வாணிகன் தன் மகனைப் பார்த்து உள்ளம் உருகி வருந்தினான். ஐயையோ! மகனே! உன்னைக்

கொலை செய்துவிட்டு நானும், என்னுயிரைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தேன். ஆனால் நீ அன்று நூறுபொன் கொடுத்து வாங்கிய சீட்டினால் நான் அவசரப்பட்டுத் தவறு செய்வதிலிருந்து தப்பித்தேன். அந்தப் பெண்ணிடமிருந்து வாங்கிய சீட்டுக்கு ஆயிரம் பொன் கொடுத்திருந்தாலும் ஈடாகாது என்றெல்லாம் பலவாறு புகழ்ந்து கூறினான். அவர்கள் சிறிதும் குற்றமற்றவர்களாகி ஆயிரம் பிறை தொழுது வாழ்ந்து வந்தார்கள்.

பலிப்பாச்சு - பலித்தது, நிறைவேறியது. பிழைக்க - சுகமாக வாழ. இருந்துயர் - மிகுத்த வருத்தம். ஏகிய - சென்ற. அற்றைநாள் - அன்றைய நாள்; அன்று. அமை - அம்மை; மனைவி. மஞ்சம் - கட்டில், படுக்கை தனையன் - மகன். துயில் - தூக்கம். சோரன் - கள்வன். தெரிவம் - பார்ப்போம். பாரி - மனைவி. பைங்கொடி - பசுமையான கொடி போன்றவள். வாரி - கடல். நீட்டு - நீட்டி, கொடுத்து. சேகரம் - நல்லது. பயன். ஆட்டி - பெண். விலையல்ல - விலை மதிப்பு ஆகாது. ஞாலம் - பூமி. மா - பெரிய. இரு - பரந்த. மறு - குற்றம். ஆயிரம் பிறை தொழுதல் - 80 வயதுக்குமேல் வாழ்தல்

சுவடிச்சொல் - 1. பெத்தவ 2. பெத்தனன் 3. கன்றிலே 4. புன்றியந் 5. மாத்தியே 6. றின்னம் 7. அத்தை னாளிரவில் 8. பெத்திடும் 9. பாத்து 10. சீட்டுனால் 11. துயந்த.

வசனம் - என்று நீதி மைந்தன் ராசநரேந்திரனுக்குச் சொல்லித் தன் குமாரன் சுமந்தனை அழைப்பிச்சு சாரங்கதரன் [1]விவகாரத்தை ராசாவுக்குத் தெரியப்படச் சொல்லென்று சொல்ல, அப்பொழுது சுமந்தன் ஏது சொல்வான். (58)

சுவடிச்சொல் - 1. விபகாரத்தை.

94. At the sight of her long lost son
The overjoyed mother hugged him tight
'Thanks to the good deeds done in the past
We are happily reunited.
True, your father doled out advice
With the best of intentions
That you should make it in life.
Intolerant of his counsel, you left home
Leaving us deeply grief-stricken
Dear one, what joy can we have in life
When you are away from us?
Your unexpected return has given me
A new lease of life;

And all sorrow is gone!
Your father has taken a boat
To some far-away country
Intent on making money
Is yet to return from trip abroad.'
So conversing quite merrily
Mother and son retired to bed.
Same night, the father returned
Amassing money in abundance.
Eager to see his loving spouse
He hurriedly entered the house
Where he beheld the scene
Of wife sharing bed with another.
Mistaking his son for wife's paramour
Trader drew dagger from socket,
When lo, the palm leaf bored into it
Fell with a distinct thud.
Grasping the palm leaf
Off he went to the lamp
Read the message there
With unusual interest and care.
He lost no time in waking wife
Who, on seeing her husband
Nudged her son to get up.
'See your father gone to sea
Has come back after mission.
Pay him obeisance'
The son fell at his feet.
Alas dear, I was about to kill you
And stab myself with dagger,
The chit bought for hundred sovereigns
Has averted great calamity
And is so worth even a thousand gold mohurs.
The members of the family

Escaping the taint of guilt
Lived for a thousand years.

Prose: So saying, the minister Nītimaintaṉ summoned his son to the king's presence and asked him to disclose what he knew of the Cāraṅkataraṉ episode. Let us examine what Cumantaṉ said.

95. *(சுமந்தன் உண்மை நிகழ்ச்சியைக் கூறுதல்)* **திரிபுடை**

சந்திர சூரியர் பிசகிவந் தாலும்
சமுத்திரந் தானுஞ் சுவறினும்
எந்தன் மொழிபிச கில்லை
என்று சுமந்தன் நிசமாய்ப் புகலுவான்
ஆகாச வாணியும் பூமி தேவியும் அறியவே
உன்மகனும் நானும் புறாவைவிட வந்தவன் புறாவும்
சித்தராங்கி யம்மாள் மனைக்கது செல்ல
அவனும் பின்செல்லவே - [1]நான்
எத்தனை சொல்லினுங் [2]கேழ்க்கிற
தில்லையென்றே போயினான்
மைய லாகினே னென்னைப்
புணரென்றே அவன் கைப் பிடிக்கவுந்
தூய சம்மதியாமற் வந்திடு
துணிவு கண்டே
வஞ்சி யானவள் நெஞ்சி லேபகை
வைத்து மூட்டிய வழியென்றே - தன்
நெஞ்சி லுள்ளபடி சொல்லியபின்
ஒருகதை நீதி யுரைப்பான்.

என்றும் மாறாத இயல்புடைய சூரியனும் சந்திரனும் தோன்ற வேண்டிய் திசையிலிருந்து மாறி எதிர்த்திசையில் தோன்றினாலும், அதே போலத் தோன்ற வேண்டிய, மறைய வேண்டிய காலம், திசை ஆகியவை மாறி வந்தாலும், என்றும் வற்றாத கடல் ஒரு நாள் வற்றிப் போனாலும் நான் என்றுமே தவறாகப் பேசமாட்டேன்; உண்மையை மட்டுமே சொல்லுவேன் என்று கூறி நடந்ததைச் சொல்லத் தொடங்கினான் சுமந்தன். ஆகாசவாணி, பூமிதேவி ஆகியோர் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். சாரங்கதரனும் நானும் புறாவைப் பறக்கவிட்டு

விளையாடினோம். அவனுடைய புறா மட்டும் சித்திராங்கி தேவியாரின் அரண்மனைக்குள் சென்றுவிட்டது. அவனும் புறாவைத் தொடர்ந்து சென்றான். நானும் போக வேண்டாமென்று தடுத்துப் பார்த்தேன். என் பேச்சைக் கேழ்க்காமல் அரண்மனைக்குள் சென்றான். அங்கே தேவியார் சாரங்கதரன் மீது மோகங் கொண்டு தம்மை அணைக்குமாறு கூறி அவன் கையைப் பிடித்திருக்கிறார்கள். அவன் சிறிதும் சம்மதிக்காமல் அங்கிருந்து வெளியேறிவிட்டான். அவனுடைய துணிவான முடிவைக் கண்ட தேவி உள்ளத்திலேயே பகை கொண்டு விட்டார்கள். தன் விருப்பம் நிறைவேறவில்லை என்ற காரணத்தால் அவர்கள் தங்களிடம் கலக மூட்டி அவன் மீது பழியைச் சுமத்தி விட்டார்கள். இதுவே நடந்த உண்மை என்று கூறிய சுமந்தன் இந்தச் செயலுக்குச் சான்றாக ஒரு கதையைச் சொல்லத் தொடங்கினான்.

பிசகுதல் - தவறுதல். சுவறுதல் - வற்றிப் போதல், காய்ந்துபோதல். நிசம் - உண்மை. புகலுதல் - சொல்லுதல். மனை - வீடு. மூட்டியது - கோள் மூட்டியது; ஏவிவிட்டது.

சுவடிச்சொல் - 1. நான்யெத்தனை 2. கேழ்க்குறதில்லை.

வசனம் - பின்னையும் மந்திரி குமாரன் ஏது சொல்லுகிறானென்றால். (59)

95. Even if Sun and Moon
Rise and set in opposite directions
At wrong and eccentric hours,
Even if the sea goes dry
I shall not twist facts
But tell truth and nothing but truth.
I swear in the name of the sky
And revered mother earth
That Cāraṅkataraṉ and I
Played the game of flying doves.
When his bird entered queen Cittirāṅki's house,
And he went frantically in search of it,
Against my word, not to go there
The queen desperately fell for him
And forced him to embrace her
Pulling his hands lustily.
Not yielding to passion

Caraṅkataran quit the place in disgust.
His bold and unexpected action
Provoked the passionate queen
Who distorted the incident
Laying blame on him.
This was what really happened
Said Cumantan and told a tale.

Prose: What more did the minister's son say?

96. *(சுமந்தன் சொல்லிய நீதிக்கதை)* சம்பை

இருநிலம்புகழ் மகேந்திர மென்றொரு
பதியுண் டதில்
துரைமந்திரி தனக்குத் [1]தன்துரைத் தனத்தை
ஈந்து [2]பெம்பு பண்ணியே
அரசன் நம்பி யிருந்திடுநாளில்
நம்பும் அரசன் பொருள்கள்
தம்பொருள தாக[3]எண்ணி
அபிமானித் திருக்கின்ற காலத்தில்
[4]அந்நாள் மந்திரியும் [5]அர்த்தராத்திரியில்

இந்த நிலவுலகத்தில் மிகவும் புகழ்பெற்றது மகேந்திபுரம். அந்த நகரத்து மன்னவன் தன் அமைச்சரிடம் நம்பிக்கையோடு ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்தான். அமைச்சனோ அரசனுடைய பொருள்களும் செயல்களும் தனக்குரியவையாகவே நினைத்துப் பெரிதும் பாதுகாப்பாக ஆட்சியை நடத்தி வந்தான். ஒரு நாள் நள்ளிரவு நேரமாயிற்று.

இருநிலம் - பரந்த நிலவுலகம். பதி - நகரம். துரைத்தனம் - ஆட்சிப் பொறுப்பு. பெம்பு - பொழுது போக்கு. அபிமானம் - தன்னுடையதாக நினைத்தல். அர்த்த ராத்திரி - நள்ளிரவு. அர்த்தம் - பாதி.

சுவடிச்சொல் - 1. துரத்தனத்தை 2. பெம்பு பன்றியே 3. என்றி 4. அன்னாள் 5. அற்த்த.

96. Makēntirapuram is a famous city
On earth

Whose king entrusted the government
In the hands of his minister
With great faith.
The minister also ruled conscientiously
Protecting the King's assets and reputation
As if they were his own.
Then one day
At dead of night.....

97. *(அமைச்சனின் நகர சோதனை)* **திரிபுடை**

[1]நகர சோதனை யாக வேஅவன்
நடந்து வீதியி லுலவும் வேளையில்
அகில நாயகி காளி யம்பிகை
அழுவ தானாள்
[2]இந்த வேளையி லந்தக் காரண
மென்ன மோதெரி வோமென
மந்திரி அந்த அழுகிற வோசை
வழிபோ யவளைப் பணிந்து
ஆயி அம்பிகை மாயி சங்கரி
யண்டாண்ட வகண்ட பூரணி நீ
அழும்படி சொல்லம்மா வென
ஆயு முரைப்பாள்.

நள்ளிரவில் அமைச்சன் நகர சோதனைக்குப் புறப்பட்டான். தெருவில் நடந்து செல்லும்போது உலக மாதாவாகிய காளியம்மை அழுவதைக் கேட்டான். அழுகைக்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்பினான். அழும் ஓசை வரும் திசை நோக்கிச் சென்று காளியைக் கண்டான். தாயே! அம்பிகை! மாயி! சங்கரி! அண்ட அண்டங்களிலெல்லாம் நிறைந்திருப்பவளே! நீ அழுகிறாய்! நீ அழுவதற்குரிய காரணம் என்ன சொல்லம்மா என்று கேட்டான். அம்மையும் கூறத் தொடங்கினாள்.

அகிலம் - அனைத்துலகம்; உலகம் முழுமையும். நாயகி - தலைவி. ஆயி - அம்மை; தாய். அம்பிகை - மாதா; தேவி. மாயி - தெய்வப்பெண். சங்கரி - அழிப்பவள்.

அண்டாண்டம் - அண்ட அண்டம் - இவ்வுலகும் மேலுலகுமாகிய உலகம். அகண்டம் - எல்லாவிடம். பூரணி - நிறைந்திருப்பவள்.

சுவடிச்சொல் - 1. நகரிசோதினை 2. யிந்த.

97. The Minister went for a personal inspection of the city
While wandering through the streets
He espied Mother Kāli weeping copiously.
Eager to know the cause of grief
He walked towards her and addressed her,
Mother, Ambika, Māyi, Caṅkari
The One who is omnipresent
Why are you crying?
Why are you shedding tears, dear?
The mother opened her lips and spoke.

98. *(மன்னவனுக்கு வரவிருக்கும் தீங்கு)* சம்பை

[1]இந்நகரி லெந்நாளு மெனக்குமகா பூசைதரு
மன்னவனுக் [2]கிடையூறு வருகுதென அழுதேன்
ஆனாலு [3]மிடையூற்றை அடியேன்கையால் நீக்க
மானாரும் பாணியொரு வழிசொல்லு மென்றான்
நித்திரையி லரசனையோர் புத்தரவந் தீண்டவரும்
அத்தைநீ கொல்லவிசை யகலுமென வுரைத்தாள்.

இந்த நகரத்தில் எழுந்தருளியிருக்கின்ற எனக்குக் குறையில்லாமல் நாள்தோறும் பூசைகளை நடத்தி வருபவன் இந்நாட்டு மன்னன். அவனுக்குப் பெருந்தீங்கு வரப்போகிறதே என்று நினைத்து அழுதேன் என்றாள் காளி. அப்படியானால் மானை ஏந்தியவளே! அடியேன் கையாலேயே அந்தத் துன்பத்தைப் போக்குவதற்கு ஒரு வழியைச் சொல்லியருளுங்கள் என்று வேண்டினான் அமைச்சன்.

அரசன் தூங்கும்போது கொடிய நஞ்சையுடைய பெரிய பாம்பு ஒன்று கடிக்க வரும். அதை நீ கொன்றுவிடுவாயானால் அரசனுக்கு வரவிருக்கும் தீமை விலகும் என்றாள் தேவி.

இடையூறு - துன்பம், தீங்கு. மான் - மானாகிய மிருகம். பாணி - கை. புத்தரவம் - பெரியபாம்பு; கொடிய பாம்பு புற்றரவம் எனினும் பொருந்ததும். விசை - துன்பம்; வேகம்.

சுவடிச்சொல் - 1. யின்னகரிலென்னாளு 2. கெடையூறு 3. மிடையூரை அடியேன் கய்யால்.

98. The King of this country
Performs daily *Puja* and keeps me happy.
I am anguished at the thought
That great sorrow is in store for him.
Oh holy mother holding the deer in hand,
Tell me, how I can help the king
Overcome the impending calamity.
When the King is in slumber's repose
A venomous snake shall try to bite him
If only you can destroy the reptile
The King will be free of danger.

99. *(அமைச்சன் பாம்பை வெட்டுதல்(* **திபதை**

[1]சொன்னவ ளடியிணை தொழுதுமந் திரியும்
மன்னவன் துயிலும் மாளிகை தனிற்போய்ப்
[2]பார்க்கவே சொன்ன படியொரு பாம்பு
நாக்கது நீட்டி [3]நகர்ந்துபூ வணைமேல்
வருவது க்ண்டுகை வாளினால் பாம்பை
இருதுண்ட [4]மாய்விழ யிறையவன் பிழைக்க
வெட்டினன் வெட்டவே விஷரத்தம் முலைமேல்
பட்டது மன்னவன் பத்தினிக் கங்கே
சிறுவிரல் [5]நகத்தினால் சீக்கிர மாய்வாங்கி
எறிந்தர சன்தேவி யென்னிட தாயைத்
தீண்டிய விரலுக்குப் பிராச்சித [6]மெனவே
மீண்டுமவ் வாளினால் விரலையுந் துணித்து
ஆடையுள் விரலையு மரவையுஞ் சூழ்ந்து

நீடிய பூவணை நிழலினில் வைத்துப்
போகையில் விழித்தந்தப் பூங்கொடி கண்டு
மோகமென் துயில்நீங்கி மொழிந்தனள் பாரி
மந்திரிவந் தெந்தன் மார்பினிற் குறிசெய்
திந்தமா ளிகையைவிட் டேகினா னென்னைக்
கோபமாய் மன்னவன் கொந்தளித் தவனை
யேபய மேதவனங் கென்னசெய் தானே.

அரசனுக்கு வரவிருக்கும் தீங்கை எடுத்துச் சொன்ன காளிதேவியின் திருவடிகளை வணங்கிப் புறப்பட்டான் அமைச்சன். அரசன் தூங்கிக் கொண்டிருக்கும் அரண்மனையில் சென்று பார்த்தான். காளிகாதேவி சொன்னபடியே ஒரு பாம்பானது நாக்கை நீட்டியபடியே அரசனின் மலர்ப் படுக்கையின் மேல் சென்றுகொண்டிருந்தது. அதைக் கண்டவுடனே தன் கையிலிருந்த வாளால் பாம்பை வெட்டினான். அது இரண்டு துண்டாகி விழுந்தது. அரசன் பிழைத்தான் ஆனால் விஷரத்தம் அரசனருகில் படுத்திருந்த அரசமாதேவியின் மார்மேல் பட்டது. சிறுவிரல் நகத்தால் அந்த ரத்தத்தை எடுத்து எறிந்தான். அரசமாதேவியாகிய என்தாயைத் தீண்டிய விரலுக்குத் தண்டனையாகவும், பாவ நிவர்த்தியாகவும் அவ்விரலை வெட்டினான். அந்த விரலையும் வெட்டப்பட்ட பாம்பையும் ஒரு துணியில் வைத்துக் கட்டிலின் கீழே கட்டில் நிழலில் வைத்துவிட்டுப் புறப்பட்டான். அப்போது அரசமாதேவி விழித்துக் கொண்டாள். தூக்கக் கலக்கம் நீங்கியவுடன், அமைச்சன் வந்து என்மார்பைத் தொட்டுச் சீண்டிக் குறி செய்துவிட்டுப் போகிறான் என்று அரசனிடம் கூறினாள். அரசன் மிகுந்த ஆத்திரமடைந்தான். மிகவும் அஞ்சத்தக்க செயலைச் செய்யத் தொடங்கினான்.

அடியிணை - இரண்டாகிய திருவடிகள். துயிலுதல் - தூங்குதல். பூவணை - மலர்ப்படுக்கை. இறையவன் - அரசன். பிராச்சிதம் - பிராயச்சித்தம் - தண்டனை; பாவப்பரிகாரம். துணித்தல் - துண்டித்தல்; வெட்டுதல். அரவு - பாம்பு. துயில் - தூக்கம். பாரி - மனைவி. கொந்தளித்தல் - மிகுந்த சினங்கொண்டு கிளம்புதல்.

சுவடிச்சொல் - 1. சொன்னவள்ளடி 2. பாக்கவே 3. நகந்து 4. மாயிவிழ 5. நிகத்தினால் 6. மெனவேண.

99. After doing obeisance at the feet of Holy mother,
The minister hurried to the room where king slept.
As prophesied by Mother Kāli
A snake with sharp fangs

Was crawling on the King's bed.
In an instant the minister slit it
Into two with his sword.
The King was no doubt saved,
But drops of snake's blood
Spilled on the queen's breast
Who was sleeping by husband's side.
The minister lost no time
In scooping blood drops with his nails.
He also cut one of his fingers
As expiation for touching Queen mother.
Packing the dead snake
And sliced finger
He left it below the cot
Quickly quit the place.
When the Queen woke up
And lingering traces of sleep gone,
She complained to her husband
That the minister fondled her breast
As a suggestive gesture.
The King became wild with rage
Made preparations for a terrible act.

100. *(அமைச்சனைக் கொல்ல ஆணை)* **திரிபுடை**

கையில் மோதிரந்தந்து தூதரை
கடுகிப்போய் மந்திரியை
யாக்கினை செய்யுமென் றவரனுப்ப
வந்தவர் செப்பினாரே
கேட்டுமந் திரியிந்தக் கலியுகக்
கேடுநன் றாச்சென்று
[1]ராப்பட்ட பாட்டை யவருடன் சொல்லி
அரசருக்குப் புகலுமெனவே

போன தூதுவர் அரசன் தனக்கிது
புதுமை புகலவே கலையிற் [2]சூழ்ந்தது
தானளித் தனன் சிவசி வாவெனத்
தன்னி லேதான்.

தூதரை அழைத்தான். அவர்களிடம் அரச முத்திரை மோதிரத்தைக் கொடுத்தான். விரைவாகச் சென்று மந்திரியைச் சிரத்சேதம் செய்து வாருங்கள் என்று ஆணையிட்டான். தூதுவர் சென்று அமைச்சரிடம் கூறினார்கள். அரசனின் ஆணையைக் கேட்ட அமைச்சன், இந்தக் கலியுகக் காலத்தின் கொடுமை நன்றாகவே இருக்கிறது என்று வருந்தித்தான் நகர சோதனை சென்றது முதல் பாம்பையும் தன் விரலையும் கட்டிலின் கீழ் வைத்து வந்தது வரையிலான தன் செயல்களையெல்லாம் தூதுவரிடம் எடுத்துக் கூறி இதை அரசரிடம் சொல்லுங்கள் என்று சொல்லி அனுப்பினான்.

அவ்வாறே சென்ற தூதுவர் அமைச்சர் செய்த அரிய செயலை மன்னனிடம் கூறினார்கள். துணியில் வைத்திருந்த பாம்பின் துண்டங்களையும் அமைச்சனின் விரலையும் பார்த்த மன்னன் சிவசிவாவெனக் கூறித் தனக்குத்தானே புலம்பினான்.

கடுகி - விரைவாக. ஆக்கினை - தண்டனை; உயிர்ச்சேதம். கேடு - கொடுமை. பட்டபாடு - செய்த கடினமான செயல்கள். புகலுதல் - எடுத்துக் கூறுதல். கலை - துணி. தன்னிலேதான் - தனக்குத்தானே.

சுவடிச்சொல் - 1. றாப்பட்ட 2. சுழந்தது.

100. Summoning the emissaries
He gave them the royal ring
And ordered them to execute forthwith
The guilty minister.
Cursing the Kāli age
For all his ills
The minister recounted to messenger
Events beginning with inspection of city,
Packing of the snake and finger.
Kindly post the king with this information
Was his fervent last plea.
On hearing the course of events

King salvaged snake and finger
Lamented in the Lord's name.

101. *(அமைச்சன் செய்ததை அறிதல்)* **சம்பை**

அய்யய்யோ மந்திரியை [1]அநியாயத்தினிற்கொன்று
[2]வய்யகத்தி லபகீர்த்தி வளர்க்கயிருந் தோமே
உயிர்வேறு செய்யு மிடைகூறு தீர்த்தவனை
உடலுயிர் வேறுசெய்துநாம் உறங்கயிருந் தோமே
[3]நன்றிசெய்த தறியாமல் கொன்று [4]விருதாவிலே
[5]எண்ணி யெண்ணி யேதுயரம் யெய்தவிருந் தோமே.

ஐயையோ! அநியாயமாய் அமைச்சரைக் கொன்று அதனால் இந்த உலகத்தில் நம் புகழ் அழியப் பெரும் பாவத்தை ஏற்படுத்திக் கொள்ளவிருந்தேனே! உயிரையே கொல்லும்படியான பெரிய துன்பத்தைப் போக்கிய அமைச்சரைக் கொன்று அறிவை இழக்க இருந்தேனே! நன்றி செய்ததற்குப் பதில் அறியாமையால் வீணாக ஒரு கொலையைச் செய்யவிருந்தேன். அறியாமல் நான் செய்த குற்றத்தை எண்ணியெண்ணி வருந்தவிருந்தேனே! என்றெல்லாம் தனக்குத்தானே கூறி வருந்தினான்.

வைய்யகம் - நிலவுலகம். அபகீர்த்தி - பெரும்பழி. (கீர்த்தி × அபகீர்த்தி) - கீர்த்தி - புகழ். இடைகூறு - இடையூறு என்பதன் கொச்சைச் சொல்; - துன்பம். விருதாவில் - வீணாக. எய்துதல் - அடைதல்.

சுவடிச்சொல் - 1. அனியாயத் 2. வைய்யகத்திலப கீற்த்திவளக்க 3. நன்றிசெயித 4. விறுதாவிலே 5. என்றியென்றி.

வசனம் - இப்படி [1]ராசா மெத்தக் கிலேசித்து மந்திரியை அழை யென்ன, தூதுவர் மந்திரியை யழைத்துவர [1]ராசா மந்திரியைத் தழுவிக்கொண்டங் கென் சொல்வான்.

(60)

சுவடிச்சொல் - 1. றாசா.

101. Alas, I was about to kill the minister good
And fall into the abyss of great sin,
What thoughtless action to execute one
Who has saved me from the jaws of death?
Instead of showing gratitude

I was about to snatch his life.
What monstrous folly! The Act would have
Tarnished my image and left me sorrowful
Throughout the rest of my life.

Prose: So lamented the King and sent for the minister. Embracing him, what did he say?

102. *(அரசன் தன் தவறு உணர்தல்)* *சம்பை*

உபகாரஞ் செய்யநீ உபகார மறியாமல்
அபகாரஞ் செய்யவிருந்தேன்
அமைச்சனே உனக்கு
நீசெய்த உபகாரம் நீசெய்த நன்றிபோல்
ஆர்செய்ய வல்லவர்கள்
அமைச்சனே எனக்கு
குறித்தென்மனை யாளுன்மேல்
கூறும்ப ழிவார்த்தையது
பொறுத்தருளும் என்றரசன்
பொங்கமுட னுரைத்தான்.

அமைச்சரே! நீர்பெரிய உதவி செய்திருக்கிறீர்! உண்மையறியாத நான் உனக்கே பெருந்தீங்கு செய்ய எண்ணிவிட்டேன். நீர் தக்க சமயத்தில் செய்த இந்த உதவியைப் போல, இந்த நன்றியைப் போல இந்த உலகத்தில் யாரால் செய்ய முடியும்? என் மனைவி உங்கள் மீது சொல்லிவிட்ட பழிச்சொல்லைப் பொருட்படுத்தாமல் மன்னித்து விடுங்கள் என்று மிகவும் நன்றியுணர்வோடு கூறினான்.

உபகாரம் - உதவி. அபகாரம் - தீங்கு. பொறுத்தல் - மன்னித்தல். பொங்கம் - பொலிவு, உணர்வு.

வசனம் - பின்னையு மநேகமாக ராசா மந்திரிக்கு [1]உபசரணை சொல்லி சகல சமஸ்தமானதும் மந்திரிவசம் [2]பண்ணி சுகத்திலே [3]இருந்தனர் ஐயா. ஆகையினாலே ஸ்ரீவசனம் நம்பப் போகாதென்று [4]சுமந்தன் சொல்ல, அதுக்கு ராசநரேந்திரன் நல்லது எல்லாம் தெரியப்படுதென்று நாலு பெரியோர்களைச் சாரங்கதரனண்டைக்கு [5]அனுப்பிவித்தான். (65)

சுவடிச்சொல் - 1. உபசாரணை 2. பன்றி 3. யிருந்தனரய்யா 4. சுமுந்தன் 5. அநுப்பிவித்தான்.

102. Minister dear,
You have done me a great act of kindness
Which I was about to retaliate with cruelty.
I cannot imagine any one else
Doing such a great favour
Which was timely and sublime.
Forget the cursed blame
That my wife unjustly placed at your door
Said the deeply moved king with gratitude.

Prose: The King spoke admiringly of the minister and entrusted him with the administration of the state. Since Cumantan had said that one should not trust the words of women, King Rajanarentiran sent four elderly people to Cāraṅkataraṉ.

103. *(பெரியோர் சாரங்கனை வினவுதல்)* **சம்பை**

போனார் பெரியோர்கள் போகச்ச வேதுயர
மானார்கள் சாரங்க தரனை யடைந்தார்கள்
[1]ஒருநாளும் வந்ததில்லை வருங்காரி யங்களென்ன?
பெரியோர்கள் சொல்லுமெனத் துரைசே யுங்கூற
அய்யனே உன்மீதி லாகாத விபரீதம்
துய்யனே யின்றுன்னைத் தொடர்ந்த விபரீதம்
சொன்னா லும் வெகுதோஷம் [3]தொலையாது வெகுபாவம்
மன்னாவுன் மீதிலே வந்த [4]விபரீதம்
பழிவார்த்தை யென்னமென்று பகர்வோமுன்[5]முகம்பார்த்து
பிழைவார்த்தை யென்னமென்று பேசு வோமையா
பாவிசித்தி ராங்கிமனை பாய்ந்தவளைக் கைபிடித்து
மேவினீர் அறமது விசாரிக்க வந்தோமே.

அரசனால் அனுப்பப்பட்ட சான்றோர்கள் மிகுந்த வருத்தமடைந்தவர்களாய்ச் சென்று சாரங்கரதரனைக் கண்டார்கள். அரச குமாரனாகிய சாரங்கதரன் தன்னை வந்தடைந்த பெரியோர்களைப் பார்த்துப் பெரியோர்களே! என்னைத் தேடி ஒருநாளும் வராத நீங்கள் இன்று வந்த காரியம் என்ன சொல்லுங்கள் என்றான். அதற்குப் பெரியோர்கள் ஐயனே! மிகவும் தூயவனான உன்மீதில் சாட்டப்பட்டுள்ள தவறான குற்றச்சாட்டு, அதனால் இன்று உன்னைத்

தொடர்ந்திருக்கிற பெருந்துன்பம் ஆகியவற்றை எடுத்துச் சொல்லமுடியாது. அப்படிச் சொல்லுவதே பெரும்பாவமாகும். நாங்கள் செய்த பாவம் என்றுமே எங்களைவிட்டுத் தொலையாது. அரசே! உம்மீது சுமத்தப்பட்டுள்ள வீணான பழிச்சொல்லைப் பற்றி எப்படிப் பேசுவது? உங்கள் முகத்தைப் பார்த்து எப்படிச் சொல்லுவோம்? அப்பழிச்சொல் தவறானது என்று சொல்லவும் அஞ்சுகிறோம்.

சித்திராங்கி அம்மையாரின் அரண்மனைக்குள் புகுந்து அவளைக் கைபிடித்துச் சேர்ந்தீர் என்ற செய்தியின் உண்மையை விசாரிக்கவே நாங்கள் உம்மிடம் வந்தோஷம் என்றார்கள்.

போகச்சவே - போகும் போதே. துரைசேய் - அரசகுமாரன். துய்யன் - தூய்மையானவன். தோஷம் - பாவம். பகர்வோம் - சொல்லுவோம். பாய்தல் - புகுதல். மேவுதல் - அடைதல், சேர்தல்.

சுவடிச்சொல் - 1. ஒருனாளும் 2. துடந்த 3. துலையாது 4. வெபரிதம் முகம்பாத்து.

103. The Elders sent by the King
Met Cāraṅkataraṉ with great sorrow.
On seeing the aged folk
Cāraṅkataraṉ asked why they had come
Who seldom called on him.
Sir, we can visualise your plight
At being the victim of false charge.
As you lead an unsullied life
It would be sin even to repeat the accusation.
We do not know how to open the topic
Of the false and malicious charge;
Nor have we the moral courage to declare
Categorically your innocence.
Sir, we have been commissioned to probe
The blame laid at your door,
That you entered Cittirāṅki's palace
And pulled her hand with passion.

104. *(சாரங்கதரன் நிகழ்ந்ததைக் கூறுதல்)* **திபதை**

வந்தவ ரிப்படி [1]வசனிக்கும் போது
சிந்தை [2]தளர்ந்திடத் திடுக்கிடக் கைகால்
நடுக்கமெய் தித்துளிர் [3]நாவுலர்ந் தய்யோ
[4]பிடித்தது யெம்மைப் பெரும்பீடை பாவி
சொன்னசொல் லாம்படியே [5]துர்ப்புத்திநினைத்தாள்
என்னசெய் வோமினி யென்னவந் தாலும்
படுவதல்லா லிந்தப் பழியினா லுயிரை
விடுவதல் லாலினி வேறுண்டோ வுறுதி
பெரியவ ரேயினிப் [6]பேச்சென்ன புறாவுந்
துரிதமாய்ப் பறந்தந்தத் தோகைதன் வீட்டில்
போகவே [7]நானும்பின் போயம்மா [8]புறாவுக்
காகவந் தேனென்ன அங்கவ ளுன்மே
லாசைகொண் டேனென்னை அணையேன் என்றாள்
பேசிட நீயுந்தாய் பிள்ளையல் [9]லோநான்
எனச்சொல்லி மீண்டனன் [10]இப்படி யடாத
சினச்சொல்லுக் குடம்பெடுத் திடுவனோ நடந்த
பசுமையீ தென்று பாக்கியவா னமுதச்
சசிமுகன் சாரங்க தரனுரைத் தனனே.

வந்த பெரியோர்கள் கூறிய பழிச்சொல்லைக் கேட்டான் சாரங்கதரன். உள்ளம் தளர்ந்து திடுக்கிட்டான்; கை, கால்கள் நடுங்கின; மென்மைவாய்ந்த நாக்கு வறண்டு போயிற்று. ஐயோ! எனக்குப் பெருங்கேடு தொடங்கிவிட்டது; பாவி! அந்தச் சித்திராங்கி சொன்னபடி கேடுகெட்ட எண்ணத்தையே நிலை நாட்டி விட்டாள். இனி என்ன செய்வது? என்ன துன்பம் நேர்ந்தாலும் அனுபவித்துத்தான் தீர வேண்டும். இந்தப் பழிச்சொல்லைத் தாங்கிக் கொள்ளுவதைவிட உயிரைவிடுவதே நல்லது. வேறுவழி ஏதுமில்லை என்று எண்ணிய சாரங்கதரன் பெரியோர்களே! இனி வேறு பேச்சுக்கு இடமில்லை. நான் விட்ட அந்தப்புறா வெகு வேகமாய்ப் புறந்தது; கடைசியில் அரசமா தேவியின் இருப்பிடத்தை அடைந்துவிட்டது. நானும் பின்தொடர்ந்தேன்; அம்மா! புறாவைத் தாருங்கள் என்றேன். உடனே அவள் உன் மேல் ஆசைகொண்டேன். என்னைச் சேர்ந்து சுகம் கொடு என்றாள். நீங்கள் என்தாய்; நான் உங்கள் பிள்ளையல்லவா என்று கூறி அவர்கள் விருப்பத்தை மறுத்துவிட்டுத்

திரும்பிவிட்டேன். இந்தத் தகாத காரியத்தில் ஈடுபட்டு அரசனுடைய கோபத்திற்கு ஆளாகும் அளவிற்கு நடந்துகொள்ளவா நான் இந்தப் பிறவி எடுத்திருகிறேன் என்றெல்லாம் நடந்த செய்திகளை நடந்தவாறே எடுத்துக் கூறினான் எல்லாச் செல்வமும் நிறையப் பெற்றவனும், இனிமையான சந்திரனையொத்த முகத்தை யுடையவனுமாகிய சாரங்கதரன்.

வனித்தல் - கூறுதல். சிந்தை - உள்ளம். தளர்தல் - சோர்வடைதல். துளிர்நா - இளநாக்கு மென்மையான நாக்கு. பீடை - கேடு, துன்பம். துர்புத்தி - அற்பகுணம். படுதல் - அனுவபித்தல். துரிதம் - வேகம். தோகை - பெண். மீண்டனன் - திரும்பிவிட்டேன். அடாத - தகாத. சினம் - கோபம்; சினச்சொல் - பழிச்சொல் எனினும் பொருந்தும். பசுமை - நேரடி நிகழ்ச்சி. யீது - இது. பாக்கியவான் - செல்வன். அமுதம் - இனிமை. சசி - சந்திரன்.

சுவடிச்சொல் - 1. வசநிக்கும் 2. தளந்திட 3. நாவிலந்தய்யோ 4. பிடித்துமெமை 5. துற்ப்புத்தி 6. பேச்சென்னா பிறாவுந் 7. னானும் 8. பிறாவுக் 9. லோனான் 10. யிப்படி.

வசனம் - பெரியோ ரறியப் பின்னுமென் சொல்வான். (62)

104. The words of the elderly men
Sent a shudder through Cāraṅkataraṉ's frame,
His legs and hands visibly quivered,
Tongue became dry.
Alas, he bemoaned
My sad days have commenced.
Unscrupulous Cittirāṅki
Has let loose the devil
And I am really in a fix.
Except bowing to the dictates of fate
I have no other choice;
Instead of taking blame
I should prefer to die.
So ran the thoughts
Of sad Cāraṅkataraṉ.
Revered elders!
It is pointless tó talk of other things
In the present unfortunate context.
The dove that I released

Flew to mother Cittirāṅki's abode.
Following my pet frantically
I appealed to mother to return the bird.
Alas, she made amorous advances
And wanted me to unite with her
In sinful conjugal bliss.
I reminded her of our relationship
That she was my revered mother
Refused to yield to her passionate pleas
Returned to my place woeful and sad.
Sir, Have I taken this birth
To offend the King with an obnoxious act?
So outlined Cāraṅkataraṉ,
The virtuous youth with visage of the moon,
Events that led to the accusation.

105. *(தெய்வமே சாட்சி)* **சம்பை**

தீராத நிந்தைக்குத் தெய்வமே சாட்சி - பல
பேராலு மந்திரிக ளாராலு மாமோ
சந்தேகந் தீரச்சிவன் தன்கோயில் தனில்முன்னே
வந்துபிர மாணிக்கம் வாங்கிக்கொள்ளச் சொல்லும்
[1]நான்சொன்ன சொல்லெல்லாம் நல்லவர்களே நீங்கள்
தான்சொல்வீ ரென்னுடைய தகப்பனுக் கென்றான்.

என்றும் நீங்காத இந்தப் பழிக்குரிய உண்மையை நேரில் பார்த்தவர்கள் யாருமே இல்லை; கடவுள்தான் அறிவான். நான் சொல்லுவதில் சந்தேகம் ஏற்பட்டால் சிவபெருமான் கோயிலுக்கு வருகிறேன். அங்கு வந்து சத்தியம் செய்கிறேன். அங்கு வந்து சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளச் சொல்லுங்கள். பெரியோர்களே! நல்லவர்களாகிய நீங்கள் தான் நான் கூறிய எல்லாவற்றையும் என் தந்தைக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்றான்.

தீராத - நீங்காத. நிந்தை - பழி. சாட்சி - நடந்ததைப் பார்த்தவர்கள். பிரமாணிக்கம் - பிரமாணம் உண்மை உரை; சத்தியவாக்கு.

சுவடிச்சொல் - 1. னான்.

105. Except Almighty God,
There is no other witness Sir,
To vouch for the truth.
If you still doubt my words
I shall come to the temple of Lord Civa
And swear in God's presence;
Those who question my integrity
Can get clearance there.
Revered elders! I fervently appeal to you
To repeat **verbatim** my account
To my gracious and loving father.

106. *(பெரியோரும் சித்திராங்கியும்)* *திரிபுடை*

என்னவே பெரியோர்கள் [1]ராசநரேந் திரனுக்கு
[2]வன்னங்க ளாப்புடன் சொன்னசொல் லையெல்லாம்
மொழிந்திட மன்னவனுமே
பிள்ளை சொன்ன தறிந்தனங் கிளர
வள்ளநேர் குழலாள் மயக்கிய
கிள்ளைமொழி வாய்மொ ழியு
மறிந்துகொள்ள வேணும்
வந்தபிற பெரியோர்களே!
மதிவல்ல மந்திரிகளே! எனத்
துரைபின் தொடர்ந்து சித்திராங்கி
கோயில் புகுந்து மொழிவார்.

சாரங்கதரன் பெருந்துக்கத்தோடு கூறிய செய்திகளையெல்லாம் சான்றோர்கள் இராசநரேந்திரனிடம் எடுத்துக் கூறினார்கள். வந்திருக்கும் பெரியோர்களே! அறிவுமிக்க அமைச்சர்களே! மகன் சொன்னதைக் கேட்டறிந்தோம். அதேபோல மேகத்தையொத்த கரிய கூந்தலையும், மயக்கந்தரக்கூடிய கிளிபோன்று பேசும் பேச்சையும் உடைய சித்திராங்கி சொல்லுவதையும் கேட்டறிய வேண்டும் என்று கூறிய வாறே சித்திராங்கியின் அரண்மனையை நோக்கிச் சென்றான் மன்னன். பெரியோர்களும் அமைச்சர்களும் அரசனைத் தொடர்ந்து செல்ல அனைவரும் சித்திராங்கியின் அரண்மனைக்குள் நுழைந்தார்கள். (அரசன் அனுப்ப அமைச்சரும்

சான்றோரும் சென்று சித்திராங்கியைக் கேட்பதாகப் பின்வரும் வசனமும் பாடலும் அமைகின்றன).

அங்கலாப்பு - அங்கலாய்ப்பு - பெருந்துயரம். கிளர - வளர, மிகுதியாக. வள்ளம் - மிகுதி, வெள்ளம். குழல் - கூந்தல். கிள்ளை - கிளி. மதி - அறிவு. துரை - மன்னன்.

சுவடிச்சொல் - 1. றாசா 2. வணங்கலாப்பு.

106. The Elders, true to their word
Reproduced to their master, the King
The version of Cāraṅkataraṉ with exactitude.
Learned gentry, wise counsellors!
Since we have listened to Cāraṅkataraṉ's version
It would be proper
To lend our ears to Cittirāṅki's account,
She who is endowed with locks like cloud
And lisps so sweetly like parrot
That she casts a spell on listeners.
So saying the King walked towards her chamber
Followed by the wise old elders.

Prose: The following dialogue and verses suggest that the elders, despatched by the King, questioned Cittirāṅki.

107. *(பெரியோர் வினா)*

சம்பை

அன்னமே யெங்கள்துரை
[1]ஆரமுதமே துலங்கு
சொர்னமே [2]தொலையாத
சுவையிரதக் கடலே
பாதகம தானமொழி யேதெனச் சொன்னீர்
பாவமெப் போதுமக லாதுவெகு தீதுகாணம்மா
இந்தவழி யிதுதீமை என்றறியா [3]மற்சும்மா
நிந்தையுரை கூறில்பழி வந்துவிழு மம்மா
சேய்க்குரெண்டு நினைந்தபேர் சீமையிலு மில்லை -
[4]பெற்ற

தாய்க்குரெண்டு நினைந்தபேர் [5]தாரணியி லுண்டோ?
மகன்மீதி லேபிசகு [5]வந்ததென்றா லிந்த
இகமீதி [7]லெவர்க்குஞ்சொல்ல வகையேது முண்டோ?
வாய்கூப்பிச் சொல்லப்பின்னை [8]மற்றொருவ ரல்லளே
தாய்கூப்பிச் சொல்வதுவுந் [9]தர்மமோ தாயே!

அன்னம் போன்ற அம்மையே! எங்கள் அரசருக்குத் தேவாமிர்தம் போன்று இன்பந் தரக்கூடியவளே! தங்கம் போன்று ஒளி பொருந்தியவளே! என்றும் நீங்காத சுவை மிகுந்த இனிய கடல் போன்றவளே! நீங்கள்,

பெருங் கொடுமையும் பாவமும் நிறைந்த குற்றச்சாட்டினை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள் பாவச்செயல் எப்போதும் நம்மைவிட்டுப் போகாது; பெருந்துன்பத்தைக் கொடுக்கும். அம்மையே! இது நல்லது, இது தீமைதருவது என்று யோசித்துஅறியாமல் ஒருவர்மீது பழிச்சொல்லைச் சொன்னால் நமக்கே அந்தப்பழி வந்து சேர்ந்துவிடும்! பெற்ற மகனுக்குத் துரோகம் செய்ய நினைத்தவர்கள் உலகத்தில் யாருமே இல்லை. அதே போல, பெற்ற தாய்க்கு நம்பிக்கைத் துரோகம் செய்ய நினைப்பவர்கள் கூட இந்த நிலவுலகத்தில் யாரும் இருக்கமாட்டார்கள். பெற்ற மகன் ஏதேனும் தவறு செய்ய அதனால் அவன் மீதில் ஒரு பழிச்சொல் வருமேயானால் அதை யாருக்குமே எடுத்துச்சொல்லுவது என்பது சரியில்லை. வேறு யாரேனும் வேண்டுமானால் மகன் தவறுகளைச் சுட்டிச் சொல்லுவார்களேயல்லாது, தாயே எடுத்துச் சொல்லுவது நல்லதாகாது தாயே!

அன்னமே! அமுதமே! சொர்ணமே! கடலே என்பன உவமையாகு பெயர்களாய்த் தேவியைச் சுட்டிய அண்மை விளிகள். அன்னம் - அன்னப்பறவை சொர்ணம் - பொன். இரதக்கடல் - இன்பக்கடல். இரதம் - உமிழ்நீர். பாதகம் - கொடுமை. நிந்தை - பழி. சேய் - குழந்தை. ரெண்டு - இரண்டு - இரண்டகம் - நம்பிக்கைத் துரோகம். சீமை - நாடு. தாரணி - பூமி. பிசகு - தவறு. இகம் - இந்த நிலவுலகம்.

சுவடிச்சொல் - 1. ஆறமுற்றமே 2. துலையாத 3. மற்சும்மாய் 4. பெத்த 5. தாறணி 6. வந்துதென்றா 7. லெவற்க்குஞ் 8. மத்தொருவ 9. தற்ம்மமோ.

வசனம் - அரசனனுப்ப வந்த பெரியோர் நீதியுபசரணைப் போதரவாய்ச் சொல்ல மாது சித்திராங்கி யேது சொல்வாள். (63)

107. Revered lady resembling the swan
Who gifts the King with the ambrosia of pleasure,
Bright as unalloyed gold
And pleasing as the mighty deep.

You have laid great blame,
Know that sinful acts always boomerang
And leave us unhappy and miserable.
Revered lady, if we accuse others
Without weighing right or wrong
The act may cause sudden and unexpected harm
To the complainant.
No loving mother ever
Practises wicked wiles or treachery on son;
Rarely do we come to know of sons
Remaining ungrateful to mother.
Thoughtless and indiscreet acts of children
Are seldom embarrassingly disclosed by mothers.
Others may point an accusing finger,
But never the mother!

Prose: On hearing the sermon of the elders, what did Cittirāṅki say?

108. *(சித்திராங்கியின் பதில்)* **திரிபுடை**

மனக்கி லேசம தாக அவனுக்கு
மன்னிக்கும் வார்த்தைகள் சொல்லினீர் - சிலர்
எனக்கு மிருந்திடில் நீங்கள் [1]சொன்னதுக்
கெதிர் சொல்வார்கள்
நீதி யும்பல பேதமுஞ் சொல்லி
நீங்கள் தாய்தனைக் கைபிடிப்பது
நீதியோ அது நீதி யோஅறிந்
தோதும் ஒதும்
சாத்தி ரங்களும் வேதமு மந்தத்
தாயைக் கைபிடித் தவனுக் காயொரு
சூத்தி ரஞ்சொல்லி நிறுத்தலா மென்று
சொல்லு தோதான்.

சான்றோர்களே! சாரங்கதரன் மீது இரக்கம் கொண்டீர்கள்! அவனை மன்னிக்க வேண்டும் என்று மிகவும் வருத்தத்தோடு பேசுகிறீர்கள். உங்களைப் போல

எனக்கு வேண்டியவர்கள் ஒரு சிலராவது இங்கு இருந்திருந்தால் உங்கள் பேச்சுக்கு மறுப்பாக எதிர்த்துப் பேசியிருப்பார்கள்.

நியாயமானவை என்றும், நியாயத்திற்கு மாறானவை என்றும் சொல்லிக் கொண்டே பெற்றதாயைக் கைபிடித்திழுப்பது எந்தவகையில், நீதியாகும்? நன்றாகச் சிந்தித்துச் சொல்லுங்கள். தாயைக் கைபிடித்திழுத்தவனுக்குத் தண்டனை கொடுக்காமல் விட்டு விடலாம் என்று உங்கள் சாத்திர் நூல்களும் வேத நூல்களும் தனிச் சூத்திரத்தைச் சொல்லுகின்றனவா?

கிலேசம் - கவலை. பேதம் - மறுப்பு, வேறுபாடு. ஓதுதல் - சொல்லுதல். சூத்திரம் - நூலில் ஒரு கருத்து அடங்கிய பா. உபாயம், வழி.

சுவடிச்சொல் - 1. சொன்னத்துக்கெதிர்.

வசனம் - வெறுத்துத் தடுத்து மறுத்து மென்சொல்வாள். (64)

108. Revered elders,
You are all compassion for Caraṅkataran
And make a plea that he should be pardoned.
If only there are some people here
Concerned with my well-being
They would have opposed you
Tooth and Nail.
You talk so much about just and unjust acts,
Is making amorous advances to mother right?
Ponder deeply and answer
Do your sacred books on ancient lore
Suggest condoning incestuous acts?
Of a son making love to his own mother?
Is there any special clause
Justifying such nefarious act?

Prose: She spits more spleen in sheer disgust

109. *(முறை தவறினால் மழை பொழியுமா?)* **சம்பை**

முறைபிசகு மந்தநிர் மூடனுக் காய்நீதி
உறவுக்குர மாசன [1]மூரைக்கவந் தீரோ

நீங்கள் சொல்வதே நீதி
நீங்கள் சொல்வதே [2]தர்மம்
நீங்கள் சொல்லும் வசனமே
நிசமான வசனம்
இங்கிருந்த நகர் நீங்கள் இருக்கின்ற
மென் மேலும்
திங்கள் மும்மாரி பெய்யும்
தேசமீ டேறும்

பெரியோர்களே! ஒழுக்கம் தவறியவனாகிய அந்த அறிவற்ற மூடனுக்காகப் பரிந்து பேசி எங்கள் உறவுக்கு நியாயம் கற்பிக்க வந்தீர்களா? நீங்கள் சொல்லுவதே நியாயம்! நீங்கள் சொல்லுவதே தர்மம்! நீங்கள் சொல்லுவதே உண்மையான பேச்சு! நீங்கள் இங்கேயே இருப்பீர்களானால் நீங்கள் இருக்கின்ற இந்த நகரத்தில் மாதம் மும்மாரி பொழியும்! நாடு மேலும் மேலும் வளர்ந்து செழிப்படையும்!

முறை - ஒழுக்கம், ஒழுங்கு, பிசகுதல் - தவறுதல். நிர்மூடன் - அறிவற்றவன். மாசனம் - பெரியோர். உரம் - வலிமை. நிசம் - உண்மை. திங்கள் - மாதம். மும்மாரி - மூன்று மழை. ஈடேறுதல் - கடைத்தேறுதல், வாழ்வுபெறுதல்.

சுவடிச்சொல் - 1. முறைக்க 2. தற்மம்.

வசனம் - பூட்டிய சிலைநுதல் தாஷ்டிகமாய்ச் சாடிடு வையுரைகள் கூட்டியங் குரைப்பாள்.

(65)

109. Revered elders!
Have you come to justify
The wicked act of the immoral dunce?
Well, you are all justice personified!
You always uphold righteousness!
Every syllable you utter is true!
If only you condescend to stay in this town
The rains are sure to pour thrice!
Country will grow from strength to strength!

Prose: The perverse woman indulged in generalisations.

110. *(சித்திராங்கியின் சலிப்பு)* **திரிபுடை**

பசித்தவர்க ளன்னங் காணவே யந்தப்பசி
[1]தொலைந்திடவே அன்னந்தனைப்
பொசித்திடுவார்க ளல்லாம லதைவிட்டுப்
போவதுண்டோ
தாகமாக விடாய்த்த பேர்கள்
தண்ணீரைக் கண்டால்
குடியாமல் அப்புறம்
ஏகவேமனம். ஒன்றுமோ
[2]சற்று மிசையுமோதான்
இரதக் கனிதன்னைக் காணவப் பொழு
[3]திச்சி யார்களுண்டோ
சொன்னீர்கள் பெண்ணுருவ மெடுத்தது
அமையும் அமையுமொழிக்க வேணும்.

நல்ல பசியோடு இருப்பவர்கள் தங்கள் எதிரில் சுவையான உணவு இருப்பதைக் கண்டால், உடனே அந்த உணவை உண்டு தங்கள் பசியைப் போக்கிக் கொள்ள எண்ணுவதே உலக இயல்பு. யாரும் அந்த உணவை உண்ணாமல் விட்டுப் போகமாட்டார்கள். அதேபோல தண்ணீர்த்தாகம் கொண்டவர்களும் தண்ணீரைக் கண்டால் உடனே அதைக் குடிக்கவே விரும்புவார்கள். குடிக்காமல் விட்டுச் செல்ல மனம் சம்மதிப்பது கிடையாது. இவற்றைப் போலவே இன்பக்கனியாக விளங்கும் பெண்ணைக் கண்டால் அவள் மீது மோகம் கொள்ளாதவர்கள் உலகத்தில் யாருமில்லை. பெண்ணாய்ப் பிறந்ததன் பயன் போதும் போதும். இனியாவது இந்தப் பிறவி எடுக்காமலிருக்க வேண்டும்.

அன்னம் - சோறு, உணவு. பொசித்தல் - புசித்தல் - உண்ணுதல். தாகம் - தண்ணீர்த் தாகம். விடாய் - ஆசை. விடாய்த்தல் - தாகம் எடுத்தல் . ஏக - போக. ஒன்றுதல் - விரும்புதல். இரதம் - இனிமை. இச்சித்தல் - ஆசைப்படுதல். அமையும் - போதும்.

சுவடிச்சொல் - 1. துலைந்திடவே 2. சத்து 3. திச்சையார்.

வசனம் - மனத்திலொன்றும் வாக்கிலொன்றுமாகச் சித்திராங்கி இப்படிச் சொல்லப் பெரியோர்களங்கேதெரியவுரைப்பார்கள்.

110. Hungry men are wont
To fall on tasty dishes
Kept in their vicinity
And appease their craving.
Thirsty men seldom fail
To sip water easily available.
A woman in full bloom,
Verily a delicious fruit
Is sure to entice any man
Cursed indeed is the lot of woman
I wish I don't take another birth!

Prose: After listening to the hypocritical speech of Cittirāṅki, what did the elders say?

111. *(பெரியோர் வேண்டுதல்)* **சம்பை**

பிள்ளை யானது செய்யாப் பிழைகள் பல செய்தாலும்
தள்ள வழக்கோ [1]பெற்ற
தாய்க்குப் பரமல்லவோ
[2]கண்ணிலே பட்டதொரு கைவிரலைத் தான்தறிக்க
[3]எண்ணுமோ தறித்தக்கால் எவர்க்கீன மம்மா
சொல்வதே யல்லாமல் தோஷமொன்றும் பிள்ளைமேல்
இல்லையே யுன்நெஞ்ச [4]மிரங்குவது மிலையே.

பெற்றமகன் செய்யக் கூடாத தவறுகள் பலவற்றைச் செய்தபோதிலும் அப்பிள்ளையை வெளியிலே துரத்திவிட முடியாது. உடன் வைத்துக் காப்பதே தாயின் கடமையாகும். தன் கைவிரல் தன் கண்ணையே குத்திவிட்டால் அந்த விரலை உடனே வெட்டிவிடுவதில்லை. அப்படி வெட்டிவிட்டால் தன் உடலுக்குத்தான் ஊனம் ஏற்பட்டுவிடும். வாயால் சொன்னான்; அதைத்தவிர தவறு ஒன்றும் நடந்துவிடவில்லையே! மகன் மீது குற்றம் ஏதும் இல்லை. ஆனால் உன் மனம்தான் இரக்கம் காட்டவில்லை.

தள்ளுதல் - நீக்குதல். *பரம்* - கடமை. *தறித்தல்* - வெட்டுதல். *ஈனம்* - குறை, இழிவு. *தோஷம்* - குற்றம். *இரங்குவது* - உருகுவது; பரிதாபப்படுவது.

சுவடிச்சொல் - 1. பெத்த 2. கன்றிலே 3. என்றுமோ 4. மிறங்குவது.

வசனம் - இவ்விதமாகப் பெரியோர்கள் சொல்லச் சித்திராங்கி என்ன சொல்வாள்.

111. If one's son is guilty of any lapse
He should not be exiled forthwith.
Offering shelter and security to erring offspring
Is the bounden duty of any mother.
If one's finger hurts the eyes,
It is not cut or chopped off
Such an act is blindly suicidal
And will disable one's body.
Your son, after all indulged in idle prattle
He never ventured to do any sinful act
Which can be called misdemeanor
Your son, madam, is not guilty
You failed to show him pity.

Prose: On hearing the words of the elders, how did the Cittirāṅki react? What did she say?

112. *(சித்திராங்கியின் ஆத்திரம்)* **அர்த்த சந்திரிகை**

என்னவே துயரம் [1]எய்தினர் போல
சொன்னவர் மனம்பயம் தோன்றவே விழுவாள்
எங்கள் துரைக்கறிவு யில்லையிப்போ வென்பாள்
உங்களை [2]நோக வொண்ணா தெனவுரைப்பாள்
வெட்கமது யில்லையே வேந்தனுக் கென்பாள்
[3]வெட்கம்வந் தெய்த விசேஷமுஞ் சொல்வாள்
ரோஷமுனை யவருக் கில்லையே என்பாள்
ராச மகேந்திரத்து வாசியோ வென்பாள்.

மிகவும் இரக்கம் கொண்டவர்களாகிய பெரியோர்கள் இவ்வாறு கூறியவுடன் அவர்களே பயப்படுமளவில் சித்திராங்கி கீழே விழுந்தாள். எங்கள் அரசனுக்குச் சிறிதும் அறிவே இல்லை; உங்கள் மீது வருத்தப்பட்டு என்ன பயன்? அரசனுக்கே சிறிதும் அவமானம் இல்லை! இராச மகேந்திரபுரமாகிய இந்த நகரத்தில் வசிப்பவராய் இருந்தால் தானே! அவருக்கு எங்கே வெட்கம், ரோஷம் இருக்கப்போகிறது?

ஒண்ணாது - கூடாது, ரோஷமுனை - அவமானம். வெட்கம் - நாணம், மானபங்கம்.

சுவடிச்சொல் - 1. யெய்தினர் 2. னோகஒன்றாதென ஒரைப்பான் 3. வெட்க்கம் வந்தெயித.

வசனம் - கபடமனத்துயரங் கண்ணில் நீர் ததும்பச் சபையோரறியத் தய்யல் என் சொல்வாள். (68)

112. On hearing the words of wise elders
Cittirāṅki sank with a thud
Much to every one's dismay.
Alas, the King lacks discretion
What use blaming you, his stooges?
The King lacks a sense of shame,
Fie on Rājamakēntirapuram
Does he claim to belong here?

113. *(சமாதானம் போதும்)* **சம்பை**

அரசனிட தேவியென்னும் அபிமான முடனேநான்
உரைசெய்தால் நீங்களது தெரிந்துகொள்ள வேணும்
அபிமான பங்கமிக வானதுமல் லாமல்நீங்கள்
சபையறிய வேசொன்ன சமாதானம் போதும்
நடக்கையல் லாநடக்கை நடந்ததை யடக்கியுடம்
படிக்கையெனக் காகச்சொன்ன பரிச்சலே போதும்

நான் அரசமாதேவி என்ற உரிமையோடு சொல்லுகிறேன். அரசவைப் பெரியோர்களாகிய நீங்கள் நான் சொன்னபடி. நடந்துகொள்ளவேண்டும். என்னுடைய பெருமைக்கும் மதிப்புக்கும் இழிவு ஏற்பட்டுவிட்டது என்பது உணராமல், சபையோர் அறியும்படியான சமாதான வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இது நியாயமில்லை. செய்யக்கூடாத செயலில் ஈடுபட்டு ஒழுக்கங்கெட்ட செயலைச் செய்தவனுக்காகப் பரிந்து பேசிச் சமாதானம் செய்யும் செய்கை மிகவும் நன்றாயிருக்கிறது.

அபிமானம் - பெருமை, மதிப்பு. பங்கம் - கேடு, இழிவு. உடம்படிக்கை சமாதானப் பேச்சு. பரிச்சல் - செயல்.

113. Listen, I speak in my capacity as queen
You elders shall act by my bidding.
Without realising that my honour is at stake
You are uttering words of appeasement.
This is grossly unfair and unjust.
Supporting one guilty of great misdeed
And trying to buy peace is great folly.

114. *(பாதகனைத் தண்டிப்பதே நியாயம்)* **திபதை**

[1]இனியிரேன் பூமியி லெனக்கென்ன வாடகை
[2]இனியிருந் தாலென்னை எவர்களும் நகைப்பார்
துரைக்கபி மான சுதந்திர மில்லை
துரைக்குநான் சொல்வது தோன்றவு மில்லை
சொல்பவ ரைக்கொண்டு [3]சொல்லுவிப் பதுவுஞ்
சொல்பவ ரைக்கொண்டு [4]சூட்சம்பார்ப் பதுவும்
[5]வேதனைப் பேச்செலாம் விழவிழ லாக்கிப்
பாதகன் தனையிப்போ பிரபலமாக் குவதும்
[6]இப்படி என்னை [7]இளப்பமே செய்தார்
எப்படிச் சொல்லினும் [8]எண்ணிக்கை யில்லை
பார்த்திடு ரதுப்பட்டிப் பாதகன் தனதோ
பார்த்திட்டு ரதுப்படி பட்டணத் தியர்க்கோ
இன்னமுஞ் சேஷ்டைக ளெத்தனை அறிய
அன்னதெல் லாம்வெளி [9]யாக்கவொண் ணாதென்
றுயிர்தனை விடுவள்போ லோடி நரேந்திரன்
கையிலுள்ள வாள்தனைக் கடூரமாய்ப் பறிக்கக்
கண்டனர் பெரியவர் கள்ளிபா தகத்தால்
மண்டலி கன்தன் மகனையே கொல்ல
மனந்தனி லேமிக மச்சர மாக
[10]நினைவுகொண் டாளென [10]நினைவுகொண் டிருக்க
பன்னியே மொழிந்திடும் பாவைசித்தி ராங்கி
சொன்னபடி யேசத் துரோகமே செய்ய

சம்மதி யாயர சன்பெரி யோரை
யம்மதி வல்ல அமைச்சரை யழைத்து
வேதியர் [11]வேத விதிசொலும் படியே
யேதுசொல் வாரோ இயம்பிய படியே
தாய்க்குரெண் [12]டெண்ணிய தறுதலை தன்னை
ஆக்கினை செய்ய வனுகூலஞ் செய்வீர்.
என்றுரைத் தாள்நெஞ் செதக்கமில் லாமல்
[12]கண்ணிலே கனற்பொறிக் கான்றிடத் தானே.

இனி நான் உயிரோடிருப்பது கூடாது. இந்தப் பூமியில் எனக்கு வேலை இல்லை. இனியும் உயிரோடிருந்தால் எல்லோரும் ஏளனமாகப் பேசிச் சிரிப்பார்கள். அரசனுக்கோ தன் பெருமையைக் காப்பாற்றிக் கொள்ளும் சுதந்திரம் இல்லை; நான் சொல்லுவதைப் புரிந்து கொள்ளும் சக்தியும் இல்லை. சொல்லுவோர் பேச்சைத் தான் கேட்கிறார். அவர்களையே அனுப்பி என்னிடம் சமாதானம் சொல்லச் சொல்லுகிறார். அவர்களை அனுப்பி இங்கே நடப்பது என்ன என்பதைத் தந்திரமாகப் பார்க்குமாறு தூண்டுகிறார். மனத்திற்குப் பெருந்துன்பத்தைத் தருகிற துன்பச் செய்திகளையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல் அந்தத் தீய செயலைச் செய்கின்ற கொடியவனைப் பலரும் அறியும் புகழுக்குரியவனாக உயர்த்திவிடுகிறார். இவ்வாறெல்லாம் என்னை மிகவும் தாழ்வானவளாகவே கருதுகிறார். எதைச் சொன்னாலும், எப்படிச் சொன்னாலும், எத்தனை முறை சொன்னாலும் அதை ஒரு பொருளாக எடுத்துக் கொள்ளுவதேயில்லை.

பெரியோர்களே! பாருங்கள்! பெருமையெல்லாம் அந்தக் கொடியவனுக்கே உரியதாகும். பாருங்கள்! அந்தப் புகழ் எல்லாம் இந்த நகரத்திலுள்ளவர்களுக்கே உரியதாகும். இன்னமும் எத்தனையோ கொடுமைகள்! எத்தனையோ அநீதிகள்! அவற்றையெல்லாம் இங்கு எடுத்துச் சொல்லுவது என்னுடைய பெருமைக்குத் தகாதவையாகும் என்றெல்லாம் பேசிய சித்திராங்கி உயிரை மாய்த்துக் கொள்ளுவதே மேலானது என்று துணிந்து விட்டவள் போல நடித்தவளாய் விரைந்து சென்றாள்; இராச நரேந்திரன் கையிலிருந்த வாளை, வெடுக்கெனப் பிடித்து இழுத்தாள். சித்திராங்கியின் இந்தக் கொடிய செயலைப் பார்த்தார்கள் பெரியோர்கள். வஞ்சக எண்ணமுடைய கொடியவள் மன்னனின் மகனான சாரங்கதரனைக் கொல்லவே துணிந்தாள். பொறாமை காரணத்தால் இந்த முடிவுக்கு வந்துவிட்டாள் என்றே எண்ணினார்கள். ஆனால்,

பல வகையாக அரசனையும் மகனையும் இழித்துப் பேசிவந்த சித்திராங்கி, தன்னுடைய விருப்பத்திற்கு இணங்காத சாரங்கதரனிடம் கூறியபடியே,

பகைவனுக்குச் செய்யும் கொடுமையைச் செய்யத் துணிந்தாள். அரசவையிலிருந்த பெரியோர்களை அழைத்தாள். அறிவும் வல்லமையும் நிறைந்த அமைச்சர்களை அழைத்தாள்.

பெற்றதாய்க்கு நம்பிக்கைத் துரோகம் செய்த கொடியவனுக்கு வேதங்கள் கூறும் தண்டனை என்ன என்பதை வேதம் வல்ல அந்தணர்களைக் கேளுங்கள்; அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ அதன்படியே அந்தக் கொடியவனுக்குரிய தண்டனையை நிறைவேற்ற உதவி செய்யுங்கள்! நெஞ்சில் சிறிதும் இரக்கமில்லாத சித்திராங்கி கண்களில் நெருப்புப் பொறி பறக்க இவ்வாறு அமைச்சர் முதலானோருக்கு ஆணையிட்டாள்.

வாடகை - இருப்பு; வேலை. நகைப்பர் - சிரிப்பர். அபிமானம் - பெருமை, அறிவு. சூட்சம் - தந்திரம், நுட்பம். விழல் - வீண். பாதகன் - கொடியவன். பிரபலம் - புகழ், இளப்பம் - கீழ்மை, இழிவு. சேஷ்டை - கொடுமைகள். மண்டலிகன் - மன்னன். மச்சரம் - பொறாமை. பன்னி - மீண்டும் மீண்டும். சத்துரோகம் - பகைவனுக்குச் செய்யும் கொடுமை. தறுதலை - துட்டத்தனம். ஆக்கினை - தண்டனை. அனுகூலம் - உதவி. எதக்கம் - இரக்கம். கனல்பொறி - நெருப்புப்பொறி. கான்றிடுதல் - கக்குதல், உமிழ்தல்.

சுவடிச்சொல் - 1. யினி 2. யிநி 3. சொல்லிவிப் 4. சூஷ்ம்ப்பார்ப் 5. வேதினை 6. யிப்படி 7. யெளப்பமே 8. என்றிக்கை 9. யாக்க வொன்றாதென்றுயிற்தனை 10. நினவு 11. வேதிவிதி 12. டென்றிய 13. கன்றிலே.

வசனம் - அப்போது ராச நரேந்திரன் சொன்னபடியே பெரியோர்கள், மந்திரிகள், பிராமணர் ஆகியோரைக் கேழ்க்க அவர்கள் [1]மாதாவுக்கு ரெண்டு நினைத்தவரை அர்த்தராத்திரியிலே கொண்டுபோய் மலையடிவாரத்திலே காலுங் கையும் [2]வாங்குகிறதே பிராயச்சித்தம் என்று சொல்ல அரசன் ஏது செய்தனன். (69)

சுவடிச்சொல் - 1. மாதாவிக்கு 2. வாங்குறதே பிறாச்சித்தம்.

114. It is not worth living any more,
I have no further work on earth
If I continue to live
I shall become a laughing stock,
The King is not free to act
And lacks a will of his own,
A sorry puppet in every body's hands,
He sends courtiers on a mission of rapprochement,
Shamelessly spies on me.

Does he realise my deep agony
Or the humiliation I have suffered?
How come he boosts to the very skies
A culprit guilty of a sordid act?
His indifference to my pleadings
Is abominable, atrocious.
Look gentry, a guilty man
Gets singular honour and praise,
Will it not reflect on the country?
Still there are umpteen unspoken deeds
Of cruelty and wickedness.
Cataloguing them in detail
Hardly becomes a person of my standing.
So saying Cittirāṅki acted
As though she were trying to kill herself
When she forcibly drew the sword from Narēntiraṉ's hands
The Elders could surmise that she had dared
To kill Cāraṅkataraṉ
Out of a sense of malice and jealousy.
The Angry woman Cittirāṅki
Whose amorous advances were spurned
Made up her mind to take extreme step
Earmarked for one's bitter enemies.
She gave a call to the gentry of court
And the ministers strong and wise,
With fire in her eyes, she harangued them,
Consult forthwith the brahmins knowing lores
Mete out punishment to the erring son
Who has meanly betrayed a mother's trust.

Prose: As ordered by Rājanarēṅtiraṉ, the elders, ministers and brahmins were consulted about the punishment to be meted out to a son guilty of incestuous thoughts. It was suggested that the hands and legs should be mutilated at dead of night below a hillock. When the King heard of this act of expiation, how did he react?

115. *(சாரங்கனின் கை, கால்களை வெட்ட ஆணையிடுதல்)* சம்பை

ஓதுமட வேஅரசன் தூதுவரை அழைத்துக் [1]கையில்
மோதிரந்தந் தரைக்கணத்தில் முடித்திடுமென் றானே
சந்ததியில் லாமல்மிகு தபசுபண்ணி யே[2]பெற்ற
மைந்தனிட காலுங்கையும் வாங்குமென் றானே
[3]அனவரத முஞ்சிவனை யாசரித்தே [2]பெற்ற
தனயனிட காலுங்கையுந் தறியுமென் றானே.

அமைச்சர் முதலானோர் கூறியபடியே செய்ய முடிவுசெய்த அரசன் தூதுவரை அழைத்தான். அவர்களிடம் அரசமுத்திரைப் பதித்த மோதிரத்தைக் கொடுத்தான். அரசு ஆணையை விரைவாக முடித்திடுங்கள் என்று கட்டளையிட்டான்.

அரசன் தனக்குக் குழந்தைச் செல்வமில்லாதிருந்து சதாகாலமும் சிவபெருமானை வழிபட்டும் நீண்டநாள் தவம் செய்தும் பெற்றெடுத்தான் சாரங்கதரனை. அந்த மகனுடைய தோலையுங் கையையும் வெட்டிவிடுமாறு ஆணையிட்டான்.

ஓதுமடவு - கூறியபடி. கணம் - 4 நிமிட நேரம்; மிகவிரைவு. சந்ததி - பிள்ளைப்பேறு. வாங்குதல் - நீக்குதல், வெட்டுதல். அனவரதம் - எப்போதும். ஆசரித்தல் - வழிபடுதல். தனயன் - மகன். தறித்தல் - வெட்டுதல்.

சுவடிச்சொல் - 1. கைய்யில் 2. பெத்த 3. அனவரமுஞ்.

115. On the counsel of ministers and others
King summoned the messengers
Gave them the royal ring
Insignia of official decree
Ordered them to execute the punishment
On Cāraṅkataraṉ, his progeny
Whom he begot after rigorous penance;
Chop off his legs and hands.

116. *(தூதுவர் சாரங்கதரனிடம் வருந்துதல்)* திரிபுடை

சொன்னசொல் வழுவாமல் தூதுவர் துயரமொடு
சாரங்க தரனுட

பொன்னின் மாளிகை எய்தி யவர்கள்
அப்போதென் புகல்வார்.
ராச சேகரனே - விளங்கிய
ராச பூஷணனே
[1]யலங்கிருத ராசகோ ளரியேஎன்
றடிபணிந் தேது சொல்வார்
இந்தத் தேசமும் இந்த நகரமும்
சிந்தைமகிழ்ந் தாளு வீரென
புந்திமகிழ்ந் திருந்தோமையா.
என்ன புகலப் போறோம் - வேஷ
[2]நாடகம் போலவே
[3]யதிவிகடஞ் செய்யுஞ் [4]சித்திராங்கியாலொரு
தோஷம் வந்ததை [5]யேதின்னு
உம்முடன் சொல்லப்போறோம்
ஏங்கியேங்கியாறாத்துயரம்
[6]எங்கள் தனையக லாதெக்காலமும்
[7]நாங்க ளெப்படித் தேவரீ ருடன்
நவிலப் போறோம்
காக்கை யேறினதும் பெரும்பனங்
காய்விழுந்ததும் போல - [8]நீ
ரந்தத் தோகையகம் புகவந்ததுயர்
என்னதுரைக்கப் போறோம்.

மன்னவனுடைய கட்டளையை நிறைவேற்றுவதில் தவறு நேராதபடி நடந்து கொள்ளவேண்டிய தூதுவர்கள் மிகுந்த வருத்தமடைந்தவர்களாய் சாரங்கதரனுடையஅரண்மனையடைந்தார்கள்.

மிக உயர்ந்த குணமுடைய இளவரசே! அரசர்களின் ஒளியாகிய இளவரசே! அழகுமிக்க அரச சிங்கமே! என்று விளித்து வணங்கினார்கள். மனமகிழ்ச்சியோடு இந்த நாட்டையும் நகரத்தையும் ஆட்சி புரிவீர்கள் என்று எதிர்பார்த்துக் கிடந்தோம். ஐயா! இனி நடக்கப்போவதை எப்படி ஐயா சொல்லுவோம்! வேடம் போட்டு நடிக்கும் நாடகத்தைப் போல புதியதொரு வேடிக்கையான நிகழ்ச்சியை உருவாக்கியிருக்கிறார்கள் சித்திராங்கி தேவியார். அவர்களால் நிகழவிருக்கும் கொடுஞ்செயலை எப்படித் தங்களிடம் கூறப்போகிறோம்!

என்றும் நீங்காத துன்பமடைந்து அதையே நினைந்து நினைந்து வருத்தமடைந்து வரும் நாங்கள் தங்களிடம் எப்படிச் சொல்லப்போகிறோம்! காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது என்னும் கதையைப் போலத் தாங்கள் அந்தத் தேவியார் அரண்மனைக்குச் சென்றதாலேயே ஏற்பட்டுள்ள கொடுமையை என்ன வென்று சொல்லப் போகிறோம்!

வழுவுதல் - தவறுதல். சேகரன் - தலைமை வாய்ந்தவன். பூஷணன் - ஆபரணமானவன். அலங்கிருதம் - அலங்காரம், அழகு. கோளரி - ஆண்சிங்கம். புந்தி - மனம், அறிவு. புகலல் - சொல்லுதல். விகடம் - வேடிக்கை. தோஷம் - குற்றம், பாவம். ஆறாத்துயரம் - நீங்காத கவலை. நவிலுதல் - சொல்லுதல். தோகை - பெண். அகம் - வீடு.

சுவடிச்சொல் - 1. யலங்கிறுதறாசகோளரி. 2. னாடகம். 3. யிதிவிகடஞ் 4. சித்திறாங்கி. 5. யேதிண்ணு. 6. யெங்கள். 7. னாங்க 8. நிறந்தத்தொகை.

116. The royal messengers
Bent on carrying out their master's orders
Went to Caraṅkataran's palace
Steeped in great sorrow.
Noble prince, the light among kings,
Valour personified
We offer our obeisance;
Our fond dreams that you would
Rule us have been rudely shattered.
We do not know
How to break the unpleasant news.
Thanks to Queen Cittirāṅki
An incident smacking of melodrama
Is going to be enacted
How can we disclose to you
The Queen's nefarious plan?
So shaken and worried are we
That we shudder to reveal to you
The barbarous act envisaged;
Too care-worn and grief-stricken
To disclose its unholy nature.

Like the crow sitting
And a pine fruit dropping
Your visit to the queen's palace
Has resulted in undeserved calumny.

117. *(தூதுவர் சித்திராங்கியின் கொடுமை கூறுதல்)* சம்பை

பாராமல் மந்திரிமொழி
[1]தேராமற் போமவர்க்கு
வாராத ஆக்கினையும் [2]வந்ததே உமக்கு
[3]மாற்றாள்பொல் லாளென்று
வழங்குமொழி மெய்யாச்சு
[4]கூற்றோசித் திராங்கியெனும் கொடும்பாவி உமக்கு
சொல்லியாவ [5]தென்னயிதனைத்
தொல்லைவினை யோவந்த
புலியோசித்தி ராங்கியெனும் பூங்கொடி உமக்கு
வீம்போபொல் லாதநஞ்சு
விஷமோ விஷந்ததும்பும்
பாம்போசித்தி ராங்கியெனும் பாதகி உமக்கு
படியொருமுலை களபமுடி
யோரும் நெருங்கிவிழும்
இடியோசித்தி ராங்கியெனும் ஏந்திழை உமக்கு
பிழையாம [6]லுடலுயிர்கள்
[7] பிசகவே பேய்நெருப்பு
மழையோசித்தி ராங்கியெனும் வன்நெஞ்சு உமக்கு

முன்பின் சிந்தித்துப் பார்க்காமலும், அமைச்சர்களின் சொற்களை ஆராய்ந்து பார்க்காமலும் முடிவு செய்த மன்னனிடமிருந்து தங்களுக்கு ஒரு தண்டனை வந்திருக்கிறது. மாற்றாந்தாய் கொடுமை வாய்ந்தவள் என்னும் உலக வழக்கு இங்கு உண்மையாகி விட்டது. சித்திராங்கி என்னும் கொடியவளே உமக்கு எமனாய் வந்தாள்.

இனிமேல் பேசி ஆகப்போவது ஒன்றுமில்லை. இது உம்முடைய முன்வினைப்பயனேயாகும். சித்திராங்கியே உம்மைக்கொல்லும் புலியானாள்.

வீம்புக்காரியாகிய அந்தக் கொடுமைக்காரியே தங்கள் உயிரைப் போக்கும் நஞ்சாக உருவெடுத்திருக்கிறாள். விஷம் நிறைந்த பாம்பாக மாறிவிட்டாள். வாசனைப் பொருள்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய கூந்தலையும் கவர்ச்சிமிக்க அழகையுமுடைய மகளிர் பலரும் ஒன்று சேர்ந்து ஒலிக்கும் ஒலியாகிய பேரிடியாக ஆகிவிட்டாள். அவளுடைய கல் நெஞ்சமானது தங்களுக்குப் பயங்கரமான நெருப்பு மழையாக ஆகிவிட்டது. அதுவே உடலையும் உயிரையும் ஒன்று சேர அழிப்பதாகி விட்டது.

தேர்தல் - ஆய்ந்து அறிதல். மாற்றாள் - மாற்றாந்தாய். கூற்று - எமன். தொல்லைவினை - முன் வினை; ஊழ்வினை. வீம்பு - பெருமை. விஷம் ததும்பும் - நஞ்சு நிறைந்த. களபம் - வாசனைப்பொருள்.

சுவடிச்சொல் - 1. தேராமற்ப்போமவற்க்கு 2. வந்துதே 3. மாத்தாள் 4. கூத்தோ 5. தென்னயிதநி 6. லடலுயர்கள் 7. பிசகவ.

வசனம் - தூதுவரிப்படி மகாகிலேசத்துடனே சாரங்கதரனுடன் சொல்ல அதற்குச் சாரங்கதரன் ஏது சொல்லுவான். (70)

117. The thoughtless and hasty act of the King
Who never probes deep the words of ministers
Has resulted in punishment for you.
The proverbial cruelty of the stepmother
Is proving true.
Cittirāṅki, the embodiment of wickedness
Has verily tolled your death knell.
Nothing can be done now
Except blaming earlier deeds.
Cittirāṅki is playing the role
Of a ferocious man-eater.
The siren is the venom
Destined to destroy you,
Alas, she is the poisonous viper
Whose sting is going to be fatal.
She has turned into a Chorus
Echoing the voices of women
With bedecked locks
Smelling of pungent scents;

Verily a rumbling, devastating thunder!
Her heart made of stone
Threatens to rain fire on you
Know that it is your bane
Which shall destroy body and soul.

Prose: When the emissaries uttered such words of sorrow, what did Cāraṅkataraṉ do?

118. *(கேடுவர புத்தி கெட்டுவரும்)* **அர்த்தசந்திரிகை**

விதியை நம்மாலே விலக்கவு மாமோ
மதிதனி [1]லெண்ணிய வாறென வருமோ
தன்னால் வருவினை உன்தனக் கல்லவோ
[2]என்னால் வருவினை எனக்கல்ல வோதான்
கெடுதிவர வேபுத்தி கெடும்அது நிசமே
[3]படுவதெல் லாம்நாம் படவல்லோ வேணும்
ஆதர வாய்மனம் போதர வாயோ
தூதுவ [4]ரேயினி சொலிப்பல [5]னென்ன

தூதுவர்களே! நம்முடைய ஊழ்வினைப்படி நடக்கவேண்டியவற்றை நம்மால் தடுக்கவே முடியாது. நாம் நினைக்கின்றபடி நடப்பது எதுவும் இல்லை. நீ செய்த பாவ புண்ணியங்களுக்கேற்ற பயன்கள் உன்னைத்தான் வந்து அடையும். அதேபோல நான் செய்த செயல்களுக்குரிய பயன்கள் என்னை வந்தடைவது உறுதி 'கேடுவரும் பின்னே, மதிகெட்டு வரும் முன்னே' என்பார்கள். அதன்படி துன்பம் அனுபவிக்க வேண்டியிருந்தால் அதற்குரிய தீய செயலில் ஈடுபடுமாறு நம் அறிவே நம்மைத் தூண்டிவிடுகிறது. நாம் அனுபவிக்க வேண்டிய இன்ப துன்பங்களை அனுபவித்துத் தானே யாகவேண்டும்? நீங்கள் என்மீது கொண்டுள்ள அன்பினால் எனக்கு ஆறுதலாகப் பேசுகிறீர்கள்! பலன் என்ன? நடப்பது நடந்தே தீரும்.

விதி - உண்மை, ஊழ். விலக்க - நீக்க. மதி - அறிவு. படுவது - அனுபவிப்பது. ஆதரவு - உதவி, அன்பு. போதரவு - ஆறுதல்.

சுவடிச்சொல் - 1. லென்றிய 2. எவர்க்கும் என்னால் 3. படுவதல்லாம்னாம் 4. ரேயிநி 5. நென்ன.

வசனம் - பிரலாபத்துடனே சாரங்கதரன் சொல்லக் கேட்டுத் தூதுவர் ரத்தினாங்கி அம்மனைக் கண்டு [1]தெண்டனிட்டு நடந்த சமாசாரமெல்லாஞ் சொல்லத்

திடுக்கிட்டெழுந்திருந்து தன் குமாரனான சாரங்கதரனிடத்துக்கு வந்து[2] மைந்தனைப் பார்த்து எந்தடவுரைப்பாள். (71)

சுவடிச்சொல் - 1. தெண்டநிட்டு 2. மந்தனைபாத்து.

118. Dear messengers, what is fated
Is sure to take place;
There is nothing called free will
Good and bad deeds done in the past
Have their repercussions in later life;
This is true of me as well.
Wrong thoughts always precede
Destruction and disaster.
If destined to experience pain and sorrow
Our mind itself will act as prime-mover.
True, you are uttering words of solace
Out of the love you have for me,
But none can help or save me
From bearing my cross;
What has been predetermined
Shall happen without fail

Prose: The messengers listened to the sorrowful words of Cāraṅkataraṉ. When they paid obeisance to Rattiṉāṅki and conveyed the news, she was shaken, went to her son and spoke.

119. *(இரத்தினாங்கியின் வருத்தம்)* சம்பை

மக்களைப் பெறாமலடி மாபாவி சித்திராங்கி
[1]சக்களத்தி சாதிச்ச [2]சாதனைக்கென் செய்வேன்
[3]பற்றியெரி யுந்தலையு (மந்தப்)
பாவியால் மகனேநீ
[4]பெற்றவயிற் றினிலெரியும் பெருநெருப் பிட்டாயே
பகையாளி யவள்கொல்லப் [5]பார்ப்பாளென் றறியாமல்
மகனேநீ அம்மனைக்குப் போயவா அறுத்தாயே

இப்போது மினிமேலு [6]மெந்நாளு மறுகியென்னை
அப்பாநீ துயரத்தி லடையவைத் தாயே
[7]மண்ணோடு மண்ணாக மாளாமற் போனேனென்
கண்ணேஉனை நினைந்தழுது கமற வைத்தாயே
பாக்கியமு மாறாத பவுஷுமனு பவியாமல்
ஆக்கினைக்கோ மகனே உன்னை ஆளாக [8]வளர்த்தேன்.

மகனே! பிள்ளையில்லாத மலடியாகிய சித்திராங்கி மகாபாவியாகிய என் சக்களத்தி தகாத செயலைக் செய்யத் துணிந்து அதில் வெற்றியும் பெற்று விட்டாள். அந்தப் பாவி செய்த காரியத்தால் பெற்ற வயிறு பற்றியெரிகிறது. நீ எரியும் வயிற்றில் மேலும் நெருப்பை வாரிக் கொட்டிவிட்டாயே! அவளோ தீய எண்ணம் கொண்டவள்; எப்படியாவது உன்னைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணமுடையவள், மகனே! நீ இந்த உண்மையை அறியாமல் அவள் அரண்மனைக்குச்சென்றுவிட்டாய்! அதனால் என் ஆசையெல்லாம் வீணாயிற்றே! மகனே! இன்றைக்கு மட்டுமென்ன இனிமேல் எந்த நாளுமே நான் மனங்குமுறி அழும்படியான பெருந்துன்பத்தை உண்டாக்கி விட்டாய்!

கண்ணே! நான் முன்பே இறந்து மண்ணோடு மண்ணாக அழியாமற் போனேன்! உன்னை நினைந்து நினைந்து உள்ளங்குமுறி அழும்படியாக வைத்து விட்டாய்! என்றும் குறையாத செல்வங்களுக்கெல்லாம் உரியவனாகி மகிழ்ச்சியான வாழ்க்கையை அனுபவிப்பாய் என்றிருந்தேன். ஆனால் பெரிய தண்டனைக்கு ஆளாகி விட்டாய்! இதற்காகவா உன்னைப் பெற்று இதுவரை சிறப்பாக வளர்த்து வந்தேன்!

மலடி - மகப்பேறு இல்லாதவள். சக்களத்தி - சகளத்தி - ஒருத்தி கணவனின் மற்றொரு மனைவி. சாதனை - வெற்றி; செயல். அவா - ஆசை. மறுகுதல் - அழுதல். மாளுதல் - இறத்தல். கமறுதல் - அழுதல், குமுறுதல். பவுஷு - வாழ்வு. ஆளாக - ஆண்மகனாக.

சுவடிச்சொல் - 1. சக்களத்தி 2. சாதினை 3. பத்தி 4. பெத்தவயத்தினி 5. பாப்பாளென் 6. மென்னாளு 7. மன்றோடுமன்றாக 8. வளத்தேன்.

119. Son, the barren co-wife
Has done a wicked act
With great triumph.
Her deed has kindled a fire
In the pit of my stomach.

She is the embodiment of evil
Has been consistently scheming to eradicate you.
Unaware of her sinister motives
You have stepped into her palace
And got entrapped in her wicked plan.
All the dreams I cherished are shattered,
Son, you have given me such great grief
That I shall never live down.
Dear one, I should have died early
And become one with dust.
Now great sorrow has reduced my life
To a vast vale of tears.
How fondly I longed to see you
Leading a happy and glorious life!
But mighty punishment
Has become your unfortunate lot.

120. *(இரத்தினாங்கியின் புலம்பல்)* ஏகதாளம்

என்றிவள் மார்பினி லிடிவிழும் போலுடல்
பொன்னை யறைந்துகொண்டு புரளுவா ளழுவாள்
[1]பெற்றதும் உன்னிட பிரபல முங்கல்வி
[2]கற்றதும் ஆக்கினை காணவோ வென்பாள்
ஆக்கினை செய்ய வந்தவரா [3]ருங்களுக்கு
யோக்கிய மோதர்ம மோவென உரைப்பாள்.

இரத்தினாங்கி இடியிடிப்பதுபோல தடதடவென்று தன் மார்பில் அடித்துக் கொள்வாள்; கீழேவிழுந்து புரண்டு அழுவாள்; நான் உன்னைப் பெற்றது எதற்காக? உன்னை வளர்த்தது எதற்காக? கல்விகற்கச் செய்தது எதற்காக? எல்லாம் இந்தக் கொடிய தண்டனை பெறுவதைக் காண்பதற்காகவா? என் மகனைத் தண்டிக்க இங்கே வந்திருப்பவர் யார்? உங்களுக்கே இது நல்லதாகப்படுகிறதா? இது நியாயமான தண்டனை என்று தோன்றுகிறதா என்று பலவாறு பேசிப் புலம்பினாள்.

பொன்னை - பொருந்துமாறு. அறைதல் - அடித்துக் கொள்ளுதல். பிரபலம் - புகழ். யோக்கியம் - தகுதி, முறை.

சுவடிச்சொல் - 1. பெத்ததும் 2. கத்ததுமாக்கினை 3. ருங்களுக்கோக்கியமோ.
வசனம் - இப்படி ரத்தினாங்கியம்மாள் துக்கத்துடனே சொல்லத் தூதுவர்க ளேது சொல்லுவார்க ளென்றால். (72)

120. Rattiṉāṅki, the grief-stricken mother
Beat desperately on her breasts
Which pealed out like thunder.
She rolled on the floor
And cried her eyes out
Why did I bear you?
Why did I bring you up?
Why did I educate you at all?
Is it to see you suffering punishment?
Who is it that has come to execute royal orders,
Do you think the punishment is deserved?
Prattled hysterically the grieving mother

Prose: When Rattiṉāṅki expressed her grief, what did the messengers say?

121. *(தூதுவர் கூற்று)* சம்பை

எங்களுக்குந் தேகிளென்
றிரப்பார்க்கும் நம்பினோர்
தங்களுக்கு [1]மல்லார்க்குந்
தாயே யென்தாயே!
எய்தா ரிருக்க அம்பை
[2]நொந்தும தெரிச்சலுடன்
வைதால் திரும்பவதில்
வரும்பலனு முண்டோ?
[3]உங்களரண் மனையணுகி
ஒருசாம மாச்சுதினி
எங்களை ஆக்கினை
அரசனிடுவ னிப்போது

பிட்சாந்தேகி என்று கூறி உயிரைக்காக்கும் உணவுக்காகப் பிச்சை எடுப்பவர் களுக்கும், எங்களுக்கும், தங்களையே நம்பி வந்தவர்களுக்கும், பிற மக்களாகிய எல்லோருக்கும் தாயாக விளங்கும் எங்கள் தேவியே! அம்பை எறிந்தவர்கள் இருக்க அவர்களை விட்டுவிட்டு அம்பின் மீது வருத்தம் கொண்டு என்ன பயன்? உங்கள் மனவருத்தத்தோடு அந்த அம்பைத் திட்டுவதால் ஏற்படக்கூடிய பலன் ஏதாவது உண்டா? தங்கள் அரண்மனைக்கு வந்து ஒருசாம நேரமாகி விட்டது. இனியும் நாங்கள் தாமதித்தால் மன்னர் எங்களுக்குத் தண்டனை வழங்கி விடுவார்.

தேகி - உயிர்; உயிருக்காக யாசித்தல் ஒலி. இரப்பார் - யாசிப்பார். அல்லார் - (நாடி வந்தவர்) அல்லாத பிறர். எய்தவர் - செலுத்தியவர்; எறிந்தவர். வைதல் - திட்டுதல். அணுகி - அடைந்து. சாமம் - ஏழரை நாழிகை நேரம் - மூன்று மணி நேரம்.

சுவடிச்சொல் - 1. மல்லாற்க்குந் 2. னொந்தும 3. உங்களரமனை.

121. A kind mother to those who beg for alms
And seek protection at your door,
Including us and every one else,
What use blaming the bow
Forgetting the archer?
Do you think accusing the bow
Would produce beneficial results?
Madam, we have outstayed our time,
Further delay will enrage the King
Who may mete out deleterious punishment.

122. *(இரத்தினாங்கியின் விண்ணப்பம்)* *திரிபுடை*

சரசமாகிய வார்த்தைக்குச் சந்தேக மில்லையென்று
[1]ரத்தினாங்கி சூதுவந்ததுக் கரசன்தனை
மனுக்கேட்டு வாறேன்
இவ்விடத்தி லிருந்திடிரென்று
[1]ரத்தினாங்கிதன் புருஷன் இருந்திடும்
அவ்விடத்தினிற் போய் முன்னாகநின்
றாசை யுடனே
காட்டி லேதவஞ் செய்ததுஞ் சிவன்

[2]கருணை புரிந்ததுஞ் சின்மனை
யாட்டிக் குதிரைக் கேட்டுப்
பாவத்திற்குள் [3]ளாகினீரோ!

இன்பமாகப் பேசிக்கொள்ளும் காதலர்களிடையே எப்போதும் சந்தேகம் ஏற்படுவதில்லை. எதைச்சொன்னாலும் ஒருவரையொருவர் நம்பிவிடுவார்கள். என் மகனைப் பொறுத்தவரை ஏற்பட்டிருக்கிற வஞ்சகச் செயல்களுக்காக அரசனிடம் முறையிட்டு வருகிறேன். அதுவரை பொறுத்திருங்கள் என்று கூறிய இரத்தினாங்கி தன் கணவனாகிய இராச நரேந்திரன் முன் சென்றாள். ஐயா! மகனுக்காகக் காட்டிலே தவம் செய்ததையும், சிவபெருமான் அருள்புரிந்ததையும் மறந்துவிட்டீர்களா? இளைய மனைவி கட்டிக்கூறிய செய்தியைக் கேட்டு இப்படிப்பட்ட பாவச்செயலைச் செய்யத்துணிந்து விட்டீர்களே!

சரசம் - இன்பம், சூது - வஞ்சகச் செயல். மனு - விண்ணப்பம். சின்மனையாட்டி - இளையமனைவி. குதிர் - கூடு; கட்டிக்கூறிய செய்தி.

சுவடிச்சொல் - 1. றத்தினாங்கி 2. கறுணை 3. ளாகிநீரோ.

122. The canker of suspicion
Never mars the happiness of lovers
As their hearts are sealed with trust.
Let me appeal to the King
Against the treacherous trap
Into which my son has been pushed.
Till then, messengers keep patience
Said Rattiṉāṅki and went to the king.
Revered Sir, have you forgotten
The rigorous penance done in forest
And Civa's blessing of a noble son?
Alas, you are guilty of an unseemly act
Inspired by the concocted tale of junior Queen.

123. *(இரத்தினாங்கியின் பேச்சு)* **நிலை**

அறியாத பிள்ளையை அவளுடைக் கலக்கம்
[1]உறவே தனைப்பேச்சை உண்மையாய்க் கேட்டு

[2]கடியவொண் ணாதென்ன காரணம் பிள்ளை
மடியவே துக்கம் வந்திடு முங்கள்
புத்தியும் நல்ல புரக்கமும் வசன
சத்தியமுந் [3]தயையுந் தாட்சண்யப் பேருக்குப்
பொறுமையுஞ் சகல [4]புண்ணிய நீதி
அறிவையு மவள்[5]மயக் கத்தினாற் போச்சோ
தேவரீர் என்னிட சீவனைப் போக்கிப்
பாவிசொற் படியந்தப் பாலனைச் செய்யுஞ்
சற்பனை செயுமந்தத் தடகைச் சொல்லும்
[6]கற்பனை அம்மம்மா கல்லையு முருக்கும்
[7]பெற்ற பிள்ளைக்குப் பிதாவல்லோ அருமை
[8]பெற்றிடும் பிள்ளைகள் பிழைகள்செய் தாலும்
[9]சமித்துரட் சித்திடத் தான்கட னல்லோ
எமக்கிந்த வோர்மனு உவந்திட வேணும்
என்றுதன் புருஷன் ராசந ரேந்திரன்
மன்னவன் தாளில் வணங்கிநின் றாளே.

ஐயா! சித்திராங்கியின் மீது ஏற்பட்டுள்ள மயக்கத்தால், ஒரு பாவமும் அறியாத நம் மகன்மீது அவள் சொன்ன தவறான பேச்சை உண்மையென்று நம்பி விட்டீர்கள். அதனால் இப்படிப்பட்ட கொடியதண்டனையைக் கொடுத்திருக்கக் கூடாது. நம்முடைய மகன் இறந்துவிட்டானானால்தான் உண்மை வெளியாகும். தங்களுக்கும் தாங்க முடியாத வருத்தம் ஏற்படும். சித்திராங்கியின் மீதுள்ள மயக்கத்தால் தங்களுக்கே உரிய நல்லறிவு, சான்றோரைப் போற்றும் குணம், வாக்குத் தவறாத பண்பு, பிறரிடம் காட்டும் அருட்குணம், இரக்க உள்ளம், நரர்களுக்கு இந்திரன் என்ற பெயருக்கு ஏற்ப ஆழ்ந்த பொறுமை, நல்ல அறச்செயல்களில் ஈடுபாடு, நீதி தவறாத் கொள்கை போன்ற எல்லாவற்றையும் இழந்து விட்டீர்களா? ஐயனே! தாங்கள் என்னுடைய உயிரை வேண்டுமானாலும் போக்கி விடுங்கள். நம்முடைய மகனுக்கு மட்டும் அடியாளுடைய வேண்டு கோளின்படி கருணைபுரியுங்கள். பெற்ற பிள்ளையைக் காப்பது தந்தையின் கடமை. பெற்ற பிள்ளை ஏதேனும் தவறு செய்தால் அதை மன்னித்துப் பாதுகாப்பதுதான் அந்தக் கடமைக்குச் சிறப்பு. அடியாளின் இந்த வேண்டுகோளை மட்டும் ஏற்று அருள் புரிய வேண்டும் என்று தன்னுடைய கணவனாகிய இராச நரேந்திரனின் திருவடிகளில் வணங்கி நின்றாள். சதி செய்யும் அழிவுத் திட்டங்களைத் தடுப்பதற்காகப் பேசிய இரத்தினாங்கியின் கற்பனைப் பேச்சு கல்லையும் உருகச் செய்யும் படியாக இருந்தது.

கலக்கம் - மயக்கம். வேதனைப் பேச்சு - வருத்தம் தரும் சொல். கடிதல் - தண்டித்தல், வெறுத்தல். மடிய - இறக்க. புரக்கம் - புரத்தல் - காத்தல். தயை - கிருபை. தாட்சணியம் - இரக்கம். சீவன் - உயிர். சற்பனை - சதி, அழிவு. தடகை - தடை. பிதா - தந்தை. சமித்தல் - மன்னித்தல். இரட்சித்தல் - பாதுகாத்தல். மனு - விண்ணப்பம், நீதி. தாள் - பாதம்.

சுவடிச்சொல் - 1. ஒறுவேதிணைப்பேச்சை 2. கடியவொண்ணாதென்ன, 3. தயயுந்தாகூடிண்ணிய 4. புன்றிய 5. மயக்கத்தினாற்ப் போச்சோ 6. கற்ப்பனை 7. பெத்த 8. பெத்திடும் 9. சமித்துரகூடிச்சித்திட.

வசனம் - எதக்கமாக ஏது சொன்னாலும் [1]பிரதி உத்தரமில்லாதது கண்டு ரத்தினாங்கி பின்னுமேது சொல்வாள். (73)

சுவடிச்சொல் - 1. பிறதி உத்திரமில்லாது கண்டு.

123. Sir, your infatuation for Cittirāṅki
Has verily blinded your eyes
And you have brought charges against son cruelly.
You shouldn't have meted out
Such deterrent punishment.
The mad love for Cittirāṅki
Has robbed you of your wisdom,
Respect for elders, rectitude
Kindness and sympathy
Patience worth Lord Intira
Rare among mortals,
Besides your high sense of fairplay and probity.
Sir, you are free to take my life
Instead of my son's,
Won't you extend kindness to him
Abiding by the wish of elders;
Is it not the bounden duty of father
To shield his son?
This parental responsibility gains edge
When father forgives son.
Go by the counsel of the learned
And spare the life of your son

Said Rattiṇāṅki with true feeling
And fell at the king's feet.
Her speech against evil and sinister acts
Was too moving to melt stones.

Prose: Observing that the King was unmoved by her impassioned appeal, she spoke again.

124. *(இரத்தினாங்கி தன் உயிரை எடுத்துக்கொள்ள வேண்டுதல்)*

சம்பை

கோலகோத்திரம் பேர்கள் சொல்லுமோ
குமாரன் பேரி லசலமோ
சித்திராங்கி யிடத்தன் மயக்கந்தானோ?
[1]கொலைக்காரி யிடுநிந்தை கூறுவானிடு மருந்து
தலைக்கேறிச் [2]சோசற்றுந் தயவில்லை யோதான்
வாய்திறந் தொருவார்த்தை
வசனித்தால் சுகலீலை
தோய்மொழியும் நம்மையென்ன
சொல்லுவா ளென்றோதான்.
மைந்தனுக்குப் பதிலாக மாபாவிசொல் தவிராமல்
எந்தனையாக் கினைசெய்து யினிதுடனே வாழ்வீர்
கோபமானது நீக்கி யாவிபோ காமலிந்த
பாவியென் சொல்தயவு பாரீர் பராக்கோ
[3]திரமாக நான்கேட்கும் வரமாகு மபிமானம்
பரனே யெனக்குமனு பண்ணீர் பராக்கோ!

வெறும் அழகுக்கு இருக்கும் கோத்திரம் என்பது நமக்குப் பின்னால் நம் பெயரைச் சொல்லுமா? பேர் சொல்ல யிருப்பவர்கள் பெற்றமக்கள் தாமே? அப்படிப் பேர் சொல்லும் மகன்மீது இன்னும் அசையா மௌன நிலை ஏன்? இந்த நிலை சித்திராங்கியின் மேலிருக்கும் மயக்கந்தானே? மகன் மீது பழிச்சொல்லைக் கூறிய கொலைக்காரியாகிய சித்திராங்கி இட்ட மயக்க மருந்தால் மயங்கிக் கிடக்கிறீர்களே! மகன்மீது சிறிதும் கருணை இல்லையா? வாய்திறந்து ஒரு நல்ல வார்த்தை சொல்லக் கூடாதா? அப்படிச் சொல்லிவிட்டால், இன்பந்தரும் சரசமொழிகளைப் பேசும் அவள் என்ன சொல்லுவாளோ என்று அஞ்சுகிறீர்களா?

பாவியாகிய அந்தத் கொடியவளின் பேச்சையே எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் நம்முடைய மகனுக்குப் பதிலாக எனக்கு அந்தத் தண்டனையைக் கொடுங்கள்! நீங்கள் இன்பமாக வாழுங்கள்! சிறிது கோபத்தை விடுங்கள்! மகனுடைய உயிர் போகாமல் இருக்க உதவி செய்யுங்கள்! இந்தப் பாவியாகிய அடியாளுடைய வேண்டுகோளுக்கு அருள் புரியுங்கள்! ஐயனே! என்னுடைய வேண்டுகோளின் மீது கருணை வைத்து நீதி வழங்குங்கள்!

கோலம் - வெறும் அலங்காரம். கோத்திரம் - குலம், மரபு. அசலம் - மௌனம். நிந்தை - பழி. சுகலீலை - இன்பந்தரும் சரசம். லீலைநோய் - சரசம் நிறைந்த. மொழி - மொழியைப் பேசுபவள்; ஆகுபெயர். தவிராமல் - மறுக்காமல். ஆவி - உயிர். பராக்கு - பார்த்தல். திரம் - நிலை, வன்மை. பரன் - தலைவன். அபிமானம் - விருப்பம்.

சுவடிச்சொல் - 1. குலைகாறி 2. சோசத்துந் 3. திறமாகனான்கேழ்க்கும்.

வசனம் - பேசாமலிருப்பதென்ன தேவரீரென்று ரத்தினாங்கினி கேட்க ராச நரேந்திரன் எப்படி யிருந்தனன். (74)

124. Will family pride and honour
Survive on lip sympathy?
Posterity shall speak highly of us
Only through our progeny
When the son is going to project our glory
Why are you mute and indifferent?
Your wild passion for Cittirāṅki
Has so blinded your vision
That you are wrongly accusing son
Of betrayal and treachery.
Have you no pity left in you?
Why don't you utter a pleasant word?
You are refraining from such an act
For dread of Cittirāṅki,
Who is always generous with salacious talk.
If you are bent upon believing her
You may do so,
But kill me instead of my son,
And live with her in bliss

For which you have my assent.
Sir, exercise control on ill temper
And take speedy steps to save your son.
Sinner though I be,
Pay heed to my words,
Accept my humble appeal
And mete out justice with sympathy.

125. *(மன்னன் மௌனம் சாதித்தல்)* ஏகதாளம்

என்ன சொல்லினுஞ் செவிக்கேறி யிதமுடனே
மன்னவன் வாய்மொழி வாய்திறந் துரையான்
கொல்ல வகைதொடுத்த மெல்லியர் நெல்லைக்
கல்லென்ன வசனமும் சொல்லவுஞ் சொல்லான்
கதறி [1]விழியிற்புனல் சிதறி விழுவறிந்து
பதறி யிதங்களும்இன்னதென் றுரையான்
நம்பின னென்னவேதன் [2]நாயகி சொல்நட்ட
கம்ப மதுபோல திகம்பர முரையான்
மோசம் மோச மெனவே சொல்லவுஞ்சன்
னாசியைப் போலொன்றும் பேசவும் பேசான்
உத்தமி [3]யெத்தனை யோதினு மெழுதிய
சித்திரம் போலத் திகைத்திருந் தானே
கானியா ளுஞ்சிறிய காளையாய் நீங்கியந்தக்
[4]காணி யாட்சியுடன் கடாட்சமொன் றாச்சே.

இரத்தினாங்கியின் வேண்டுகோள் எதுவும் அரசன் காதுகளில் விழுந்ததாகத் தெரியவில்லை. திருப்தியான சொல் எதையுமே அவன் கூறவில்லை. மகனைக் கொல்ல வேண்டும் என்று முடிவு செய்த சித்திராங்கி தூய்மையான நெல்லைக் கல் என்றே சாதித்தாள் என்பதறிந்தும் அரசன் பதில் ஏதும் சொல்லவில்லை. இரத்தினாங்கி கதறி அழுதாள். கண்களில் நீர் பெருகியது. அப்போதும் அவளுக்காகச் சிறிது இரங்கி இனிய சொல் எதுவும் சொல்லவில்லை. இளைய மனைவியாகிய சித்திராங்கியின் சொற்களையே நம்பிவிட்டான் ஆனதால் ஒன்றுமே பேசாமல் நட்ட தூண்போல இருந்தான். இப்படி இருப்பது மிகவும்

கொடுமை! கொடுமை என்று சொன்னபோதும் முற்றுந் துறந்த சன்னியாசியைப் போல மௌனம் சாதித்தான். நற்குணமுள்ளவளாகிய இரத்தினாங்கி பேசிய பேச்சுக்கெல்லாம் ஒன்றும் கூறாமல் சுவற்றில் எழுதிய சித்தரம் போல அசைவற்று இருந்தான். மன்னனுடைய இந்தச் செயல்கள், நாட்டையாளும் உரிமை பெற்ற இளவரசனாகிய சாரங்கதரன் ஆட்சிப் பொறுப்பை இழந்தவனானான் என்று உறுதிப்படுத்திவிட்டன. மேலுலகையாளும் அருளைப்பெற்றான் என்ற நிலை ஏற்பட்டது.

செவி - காது. இதம் - இனிமை. விழி - கண். புனல் - நீர். நட்ட கம்பம் - தூண். திகம்பரம் - இருள்; மௌனம். சன்னாசி - சன்னியாசி; முற்றுந்துறந்தவன். உத்தமி - நற்குணமுள்ளவள். காணி - நிலம், நாடு. காளை - இளைய ஆண்மகன். கடாட்சம் - கருணை.

சுவடிச்சொல் - 1. விழியிற்புனல் 2. னாயகி 3. யெத்தினை யோதினம் மெழுதிய சித்ரம் போல் 4. காணியாள்ச்சியுடன் கடாச மென்னாச்சோ.

வசனம் - ஆகையினாலே ரத்தினாங்கினி [1]அழுத கண்ணீ ராறாயோட அரசன் தன்னெஞ்சு வன்னெஞ்சா யிருக்குதென்று தெய்வத்தை [2]வெறுத்து ஏது சொல்வாள். (75)

சுவடிச்சொல் - 1. அழுத கன்றீராறாயோட 2. வொறுத்து

125. It looked as though the King
Paid no heed to Rattiṉāṅki's appeal
For, he remained strangely mute
And refused to speak.
Cittirāṅki who thirsted for the prince's blood
Had twisted facts to such an extent
That she had sullied pure paddy
Reducing it to life-less stone.
Rattiṉāṅki cried her eyes out
To no avail, the king kept mum;
Pinning faith in Cittirāṅki's words
King was inert like a planted pillar.
This is cruel, outrageous, bewailed Rattiṉāṅki,
Still there was no response from the King
Who remained silent like a recluse
All her pleadings had no effect

The King was motionless like a painting on the wall.
These acts made it clear
That the prince had forfeited
His legitimate claim to rule;
Perhaps it was decreed and blessed
That he should exercise his sway
In the world of the skies!

Prose: Rattiṉāṅki, overpowered by sorrow at the King's indifference expresses her disgust of the divine will.

126. *(இரத்தினாங்கி தெய்வத்தை வெறுத்தல்)* சம்பை

பாங்காக எந்தனிட பாலனுடன் கூடாமலத்
தீங்குமா பாவியுடன் [1]தெய்வமொன் றாச்சோ
யாவர்துணை யாவர்கதி யாவர்பொருள் காணந்தப்
பாவியுட னேபரா [2]பரமுமொன் றாச்சோ.

தெய்வமே! நீயும் என் மகனுக்குத் துணை செய்யாமல், கொடுமைக் காரியாகிய அந்தப் பாவியுடன் சேர்ந்துகொண்டாயா? ஐயோ! அந்தத் தெய்வமும் அந்தப் பாவிக்குத் துணையாகி விட்டதே! இனி எங்களுக்கு யார் துணை செய்வார்கள்? யார் எங்களுக்குப் புகலிடம் கொடுப்பார்கள்? யார் எங்களை மதிப்பார்கள்?

பாங்கு - உரிமை. கதி - புகலிடம். பொருள் - மதிப்பு. பராபரம் - கடவுள்.

சுவடிச்சொல் - 1. தெய்வமொன்னாச்சோ 2. பரமுமொன்னாச்சோ.

126. God Almighty, am I to presume
That you are in league with the wicked woman
As you have failed to come to my rescue?
Since God is also siding with the sinful
Who will hereafter protect me?
Would any one care at all?

127. *(இரத்தினாங்கி புலம்பல்)* **திபதை**

பாதகிதன் விருப்பத்தி னாலவள்தான்
தோதகமாய்ச் சொல்லுஞ் சொல்லும் - மாயத்தில்
நம்முட துயர்மொழி நஞ்சுநஞ் சாச்சு
நம்முட சொல்லின்மேல் நாட்டமு மில்லை [1]நாம்
சொல்லிய சொல்லுஞ் சுடச்சுட உருகுங்
கல்லுரு கிப்படுங் கட்டையுந் துளுக்கும்
[2]இனிக்கிலே சஞ்[3]சற்று மென்னசொன் னாலும்
மன்னித்தி டுந்தூய்மை வருவதே யில்லை
என்றும்மன் னவன்முகம் ஏறவே [4]பார்த்துக்
கொன்றிட மைந்தன்மேல் கொடுமைசொன் னவளும்
[5]நீருமொன் றாகவே நெடிய காலம்வாழ்
வீரெனச் சொல்லி மீண்டுதன் மனையில்
வந்தன ளினிச்சொல்லும் வாறுண்டோ வென்று
மைந்தனைப் [6]பார்த்துத் தன்வாய்தனி லடித்துக்
கொள்ளுவாள் மார்பினில் குத்திக்கொண் டழுவாள்
துள்ளுவா ளங்கமுந் துடியெனத் துடிப்பாள்
[7]தரைதனில் விழுந்தங்கே [8]தான்புரண் டழுவாள்
முறையிடச் சிவனுக்கு மூட்டுமோ வென்பாள்
சோர்ந்திடு வாளினித் துக்கமே னென்பாள்
சார்ந்திடு வாளுயிர் [10]தான்மூர்ச்சை யாவாள்
முட்டிக்கொள் வாளுச்சி முகந்துதன் மகனைக்
கட்டிக்கொள் வாளினிக் காண்பனோ வென்பாள்
[11]நினைக்கொடுத் தென்னுயிர் நிற்குமோ வென்பாள்
எனக்குரிமை கள்செய்வா ராரினி யென்பாள்
[12]உனைப்பெற்ற பின்பல்லோ உயிர்நின்ற தென்பாள்
மனத்தினில் சலிப்பெல்லாம் [13]மாற்றினை யென்பாள்
[14]மாற்றவ ளென்றும் வசவினா லீனம்
[15]சாற்றினு முனைப்பெற்ற சமத்தனோ வென்பாள்

[16]மறுகுவாள் வாழ்வெலாம் மாயமோ வென்பாள்
சிறுவனேயெனக் கென்னபுத்தி செப்புநீ யென்பாள்
மாணிக்க மேகிட்ட வாவென வழைப்பாள்
ஆணிப்பொன் னேயெனக் கார்துணை யென்பாள்
பண்டிபண் டாரங்கள் பாக்கியங்க ளெல்லாம்
அண்டலர் தங்கள்பங் காச்சுதே யென்பாள்
விடவிட மனந்தனை வேறுவே றாக்குந்
துடியிடை துக்கமுந் [17]தொலையுதே யென்பாள்
முந்தையில் தீவினை மூண்டுதோ வென்பாள்
சிந்தையில் வியாகூலந் தீர்ப்பரோ வென்பாள்
கைநெறிப் பாளென்ன காட்சியீ தென்பாள்
[18]மெய்பறப் பாளாசை [19]விட்டதே யென்பாள்
மகனெனும் பாக்கியம் மாளுதே வென்பாள்
மகனெனும் பாக்கியம் மறக்குமோ வென்பாள்
அய்யய்யோ [20]இதுஅநி யாயங்கா ணென்பாள்
அய்யய்யோ இத்துய ராறுமோ வென்பாள்
பிள்ளையை நோக்கிப் பெருமூச்சு விடுவாள்
பிள்ளையை நோக்கிப் பிராணன்போ மென்பாள்
எழுந்திருப் பாளினி யென்செய்வே னென்பாள்
எழுந்திருப் பாளினி யெப்படி யென்பாள்
[21]குலத்தவர் செய்த கொடுமைகள் வந்து
[22]பலித்ததோ வென்றும் பழிநிச மென்பாள்
[23]நான்செய்த பாபமோ [23]நானல்லாப் பிள்ளை
தான்செய்த பாபமோ தாக்கிச்சோ வென்பாள்
நாடெல்லாந் துதிக்கும் நரேந்திரன் பட்ட
பாடெல்லா மின்றுடன் பாழல்லோ வென்பாள்
கண்மணிக் கிப்போ கலக்கமாச் சென்பாள்
கண்மணி ரெண்டுங் கலங்குதே யென்பாள்
ஆக்கினை செய்யவேண் டாமென வரசன்

வாக்கியம் [24]பரிவுடன் மன்னிப்பனோ வென்பாள்
கன்மங்கள் நீங்கயிக் காலத்திற் செய்த
தன்மங்க ளப்புறத் தாண்டிச்சோ வென்பாள்
என்மகன் குறையெலாம் ஏகுமோ வென்பாள்
என்மக னைப்பிரிந் தினியிரே னென்பாள்
ஈசனுக் குந்தய வில்லையோ வென்பாள்
ஈசனுக் குப்பராக் கங்கையோ வென்பாள்
[25]இனையவை பின்னு மியம்பவே [26]பெற்ற
தனையன் சாரங்க தரனிட கைகள்
[27]கண்ணிலே ஒற்றிக் கவலைக்குள் ளாகி
புண்ணிய வதியும் புலம்பினள் மிகவே.

கொடும்பாவியாகிய சித்திராங்கியின் மேலுள்ள மோகத்தால் அவள் வஞ்சகமாய்ச் சொல்லுவதுகூட, உங்களுக்குச் சரியாகப் படுகிறது; என்னுடைய வருத்தத்திற்குரிய உண்மையான செய்தி விஷமாகிவிட்டது. நான் சொல்லுவதை நீங்கள் காதில் போட்டுக்கொள்ளுவதே இல்லை. என்னுடைய சொல்லைக் கேட்டால் கல்லும் உருகிப்போகும்; பட்ட மரமும் துளிர்விட்டுக் கேட்கும். இனி எந்த நியாயத்தை எடுத்துச் சொன்னாலும் தங்களுக்கு மன்னிக்கும் நல்ல எண்ணம் வராது என்பது உறுதியாகிவிட்டது என்றுகூறிய இரத்தினாங்கி நிமிர்ந்து மன்னவன் முகத்தைப் பார்த்து, மகன்மேல் பழிச்சொல்லைச் சொல்லிக் கொல்லச் செய்தவளும் தாங்களும் நீண்டநாள் இன்பமாக வாழுங்கள் என்று கூறிவிட்டுத் தன் அரண்மனைக்குத் திரும்பிவிட்டாள்.

அங்கே மகனைப் பார்த்தாள்; வாயிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு அழத்தொடங்கினாள்; உடம்பெல்லாந்துடிக்கத் துள்ளி விழுந்தாள்; தரையில் விழுந்து புரண்டு புரண்டு அழுதாள்; சிவபெருமானிடம் முறையிடத்தான் முடியுமோ என்றாள். சோர்ந்து விழுந்து இனி வருந்தி என்ன பயன் என்றாள். மூர்ச்சையாகி விழுந்தாள். தலையை முட்டிக்கொண்டாள். மகனைக் கட்டிப் பிடித்து உச்சி முகந்து, இனி எப்போது காண்பேன்! உன்னைப் பலிகொடுத்து விட்டு நான் உயிரோடு இருப்பேனோ! எனக்குச் செய்யவேண்டிய கடமைகளை யார்செய்யப் போகிறார்கள்! பிள்ளையில்லாது வருந்திய எனக்கு நீ பிறந்த பிறகுதான் உடலில் உயிர் வந்தது! என்மனக் கவலையையெல்லாம் போக்கியவன் நீ! என்னுடைய மாற்றாள் உன்னை இழிவாகப் பேசி அழிவை உண்டாக்கினாலும் உன்னைப் பெற்றதால் நான் பெருமை உடையவள் ஆவேன் என்றெல்லாம் பேசியவாறே மனம் குழம்பினாள். மகனே! இந்த வாழ்க்கை நிலையில்லாதது;

எனக்கு என்ன புத்திமதி சொல்லுகிறாய்; மாணிக்கமே! ஆணிப்பொன்னே! அருகில்வா! இனி எனக்கு யார் துணை! பலவகையான உயர்ந்த பொருள்களும் செல்வங்களும் பகையாளிக்குச் சொந்தமாகிவிட்டது. நம் உள்ளத்தைப் பிரிக்கும் துயரமும் இன்றோடு தொலைந்துவிடுகிறது! இவையெல்லாம் நம்முடைய முன்வினைப்பயனால் வந்து சேர்ந்தன! என் மனக்கவலையைப் போக்குபவர் இனியாருமே இல்லை என்றெல்லாம் கூறிப் புலம்பியவாறே இது என்ன கோலம் என்று கையை முறித்துக்கொண்டாள்; அங்குமிங்குமாக ஓடி அலைந்தாள்; வாழ்க்கையே வெறுத்துப்போயிற்று ! பிள்ளைச்செல்வமே அழிந்து போயிற்று! அச்செல்வத்தை மறக்க முடியுமோ! இது அநியாயமல்லவா! இந்தத் துன்பம் எப்போது நீங்கப்போகிறது என்று புலம்பி மகனைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள். உயிர்போய் விடுமே என்று கூறியவாறே எழுந்தாள். இனி என்ன செய்வேன்! எப்படி வாழ்வேன்! எங்கள் முன்னோர் செய்த கொடுமைகளோ, நான் செய்த பாபமோ, என் மகன் செய்த பாபமோ இப்போது பலித்து விட்டது! எங்களை இக் கொடுமைக்குள்ளாக்கி விட்டது! இந்த நாட்டு மக்களெல்லாம் போற்றித் துதிக்கும் பெருமை வாய்ந்தவர் மன்னர். அவர் செய்த நல்ல செயல்களெல்லாம் இன்றோடு மண்ணோடு மண்ணாய் அழிந்துபோயிற்று! கண்மணி போன்ற மகன் உயிருக்கே அழிவு ஏற்பட்டது! என் கண்களின் மணிகள் கலங்கிப் போயின ! ஒருவேளை அரசன் மனம் மாறுவாரோ! தண்டனையை நிறைவேற்றாதீர்கள் என்று கூறுவாரோ என்று எண்ணி ஏங்கினாள். பழைய தீவினைகளின் பயன்கள் நீங்க இக்காலத்தில் செய்த தருமங்கள் துணையாகக் கூடாதா! அந்த தருமப்பயன்களும் அழிந்துபோயினவா ! என் மகனுக்கு ஏற்பட்ட பழிகள் நீங்குமா! அவனைப் பிரிந்து வாழ முடியாதே! அந்த இறைவனுக்கும் இரக்கமில்லை! அவன் திருவிளையாடல் எல்லாம் அவர்கள் பக்கமே இருக்கிறது என்று இவ்வாறு புலம்பிய இரத்தினாங்கி, மகன் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு அழுது புலம்பினாள்.

பாதகி - கொடும்பாவி; துரோகி. தோதகம் - வஞ்சகம். நாட்டம் - நோக்கம். துளுக்கும் - துளிர்க்கும், துளிர்விட்டுத் தழைக்கும். கிலேசம் - அச்சம், கவலை. ஏற - உயர. மூட்டுதல் - இசைதல். கொடுத்து - இழந்து. கூரிமை - கடமை. மாற்றவள் - மாற்றாள், சகளத்தி. வசவு - இழிவாகப் பேசும் பேச்சு. ஈனம் - இழிவு, கேடு. மறுகுதல் - மனங்குழம்புதல். ஆணிப்பொன் - உயர்ந்தபொன். மாணிக்கம், ஆணிப்பொன் என்பன உவமை ஆகுபெயர்கள். பண்டி - வண்டி. பண்டாரம் - பலவகைப்பொருள்கள். பாக்கியம் - பெருஞ்செல்வம். அண்டலர் - பகைவர். பங்கு - உரிமை. துடியிடை - துடியிடையாள் - உடுக்கை போன்ற இடையை உடையவள். முந்தை - முற்பிறவி. வியாகூலம் - வியாகுலம் - கலக்கம். மாளுதல் - அழிதல். ஆறுதல் - தணிதல். பிராணன் - உயிர். குலத்தவர் - தம் முன்னோர். தாக்குதல் - அடித்தல். பட்டபாடு - உழைத்த உழைப்பு. பரிவு - அன்பு. கன்மம் - பாவம். பராக்கு - விளையாட்டு. அங்கையோ - அங்கேயோ - அவர்கள் பக்கமோ. இனையவை - இத்தன்மையவை; இப்படிப்பட்டவை.

சுவடிச்சொல் - 1. னாம் 2. யினி 3. சத்து 4. பாத்து 5. னீரு 6. பாத்து 7. தறை 8. தான் பிரண்டழு 9. சோந்திடு 10. தான்முற்ச்சை11. ளினைக் குடுத்தேன் 12. உனைப்பெத்த 13. மாத்தினை 14. மாத்தவளென்றும் 15. சாத்தினுமுனைப்பெத்த16. மருகு 17. துலையுதே 18. மெய்பரப்பா 19. விட்டுதே 20. இது அனியாயங். 21. கொலத்தவர் 22. பலித்துதோ 23. னான் 24. பரிவிடன் 25. யினையிவை 26. பெத்த 27. கன்றிலே ஒத்தி.

வசனம் - தாயாகிய ரத்தினாங்கியம்மன் மெத்த சோகித்தழுதல் கண்டு சாரங்கதரன் ஏது சொல்வான். (76)

127. In your infatuation for the bad woman
You are losing sight of truth
My honest words of sorrow
Have made no impact on you
You don't even care to listen to me.
If attentively absorbed, my speech
Shall melt stones
Revive trees
Long dead.
I am more than convinced
That I cannot expect any fairplay
Either from you or co-wife.
Rattiṉāṅki now made bold
To look at the King,
May the siren who has accused my son
And you, her supporter
Enjoy a protracted carnival!
So saying she withdrew hastily
To her apartment in the palace
There she met her son
Wept uncontrollably
Beating desperately on mouth and breasts
Agitation made her frame quiver
She fell on the floor weeping profusely.
Vain is it to appeal to Lord Civa

Muttered she in sheer disgust,
Her sorrow became so deep
She suffered fainting fits.
Hitting her head,
She hugged her son
When shall I see you again;
How can I live after losing you?
Who shall perform my obscquies?
To me who was barren
Your birth was a blessing
Which infused new vigour
And saved me from humiliation;
You destroyed all my sorrows.
Fie on your stepmother,
Who has invented stories
To tarnish your good image.
You have always been my pride,
The apple of my heart.
Son, you are teaching me a lesson
On the transitoriness of life.
My pearl, my darling, come close to me,
Who is going to shield me hereafter?
All our wealth and precious things
Have gone to our enemies.
Soon the pangs of separation
Will get lessened;
For, all our misfortunes
Are due to past deeds,
This truth alone shall comfort us.
Again sorrow striking,
The mother wrung her hands in disgust
Restlessly ran here and there
Prattling incòherent words of sorrow
I am really sick of life;

The unjust act of the King
Is too severe a blow to bear,
So saying she eyed her son
And heaved sighs of despair.
Who shall I blame for this
The sins of ancestors
Or violation of moral codes by son and me?
The King whose stock is high
With the common man
Shall soon touch a miserable low.
His many acts of virtue and kindness
Shall erode and get buried in dust.
My loving son's life
Is in danger of getting extinct;
Weeping has made my eyes sore.
Methinks sometimes the King may change
And revise his decision
Would he order the officials
To withhold the punishment?
Would the meritorious deeds of yesterday
Redeem the evils of today?
Have those acts of righteousness
Gone without reverberations?
Will my son's reputation
Emerge pure and unsullied?
Alas, I cannot imagine life
Without his company.
What a pity
The very gods are on their side
Refusing to aid me.
So prattled a mother in misery
Fondly fixing son's hands on eyes.

Prose: What did Cāraṅkataraṉ say?

128. *(சாரங்கதரன் தாய்க்குக் கூறும் ஆறுதல் மொழி)* சம்பை

சிலையி லெழுதியதும் பனையி லெழுதியது - மயன்
தலையி லெழுதியது மிவை தப்பாது தாயே
மதிமதி யென்றே சொல்வர் அது பிசகினா லிந்த
விதிவிதி யென்றே சொல்லும் விளம்பலறி யாயோ?
மதியை வெல்லலா மந்தப்
பகையை வெல்லலா மிந்த
விதியை வென்ற பேர்களிந்த
[1]மேதினியி லுண்டோ?
இந்த மரபினி லொருவன் அந்தவிதி நீக்கியுயர்
[2]சிந்தைதனி லவன்துயரந் தீருமோ அம்மா?
[3]பெற்றபொழு தேஅலறிப்
[4]பிசைந்தென்னை யுடன்வார்க்கில்
அத்தனா லேதுயர மாறுமோ வம்மா?
[5]அந்தநாள் தன்னிலே
யப்படிச்செய்ய வொட்டுமோ
இந்தநாளைக் கிதுவென்று எழுதியே யிருக்க?

தாயே! கல்லின்மேல் எழுதியதும், பனை ஓலையில் எழுதியதும் என்றும் அழிவதில்லை. அதேபோல பிரமன் நம் தலையில் எழுதிய எழுத்தும் அழியாது. அது நடந்தே தீரும். அறிவினால் எதையும் சாதிக்கலாம் என்பார்கள். அது முடியாதபோது எல்லாம் விதிப்பயன்படிதான் நடக்கும் என்ற முடிவுக்கு வந்து விடுவதே உலக வழக்கு. அறிவை வென்று பலவற்றையும் சாதிக்க முடியும். அதேபோல பகையை வென்று மகிழ்ச்சியடையவும் முடியும். ஆனால் இந்த உலகில் விதியை வென்றவர்கள் யாருமே இல்லை. மனித வாழ்க்கையில், விதியை எதிர்த்துப் போராடி மனத்துயரைப் போக்கிக் கொண்டவர்கள் யாருமே இல்லை. அம்மா! குழந்தையைப் பெற்றெடுத்ததுமுதல் தாயானவள் பயந்து பயந்து அக்குழந்தைக்கு எண்ணெய் முதலான மருந்துகளைக் கொடுத்துப் பாதுகாத்து வந்தாலும் இறைவனால் விதிக்கப்பட்ட துன்பத்திலிருந்து நீங்கி வாழ முடியுமோ? இந்த நாளில் இன்னதுதான் நடந்தாக வேண்டும் என்ற விதிப்பயனை எதிர்த்துப் பிறந்த நாளிலேயே அந்த விதியை மாற்றி அமைக்கலாம் என்று எண்ணுவது நடவாத எண்ணமாகும்.

சிலை - கல். பனை - பனைஓலை. அயன் - பிரமன். தப்பாது - நடந்தேதீரும். மதி - புத்தி. விளம்பல் - உலக வழக்கு. விதி - தலையெழுத்து. மேதினி - நிலவுலகம். மரபு - வமிசம், மனித வாழ்வு. அத்தன் -- இறைவன். ஒட்டுமோ - முடியுமோ.

சுவடிச்சொல் - 1. மேதிநியில்லுண்டோ 2. சிந்தைதனிலவந்துயரந் 3. பெத்த 4. பிசைந்தென்றையுடன் 5. அந்தனாள்.

வசனம் - அருந்துயரடைந்த அன்னையைப் பார்த்துப் பெருந்துயருடனே பிள்ளை சொல்லத் தூதுவரனேக நேரமாகுது, இந்தச் சேதி ராசா கேட்டால் எங்களை யாக்கினை யிடுவாரம்மாவென்ன அப்போ சாரங்கதரனை முழுகப்படுத்திப் பட்டுப்பட்டாவளி, சீனி சீனாம்பரம், கந்தகஸ்தூரியும் தரித்து மார்பினோ டணைத்துக் கொண்டேது சொல்வாள். (77)

128. Mother dear, sermons on stones
And writings on palm-leaves seldom fade;
So also what Lord Piraman
Has predetermined for each man.
What is bound to happen,
Shall certainly materialise.
Sometimes it is said
That intellect can achieve all.
But when men experience defeat
They resign themselves to fate.
One may triumph over intellect
And touch milestones
Even win over enemies
And achieve happiness
But impossible it is
To conquer one's destiny.
None has ever won over fate
To enjoy unalloyed bliss.
Mother dear, ever since the birth of baby
Mother pets and pampers it
Gives drugs like castor oil,
But never succeeds in wiping
Child's sorrow decreed by fate.

Events bound to happen on determined dates
Can never be altered.

Prose: When the son spoke to mother sorrowful words, the messengers intervened and said that it was getting late. The King might lose his temper. The orderlies gave Cārankataran a ceremonial bath, made him wear silken robes, applied musk and other perfumes and led him embracing.

129. *(இரத்தினாங்கி மகனிடம் புலம்புதல்)* தரு

உன்னைப் [1]பெற்ற எனக்கென்ன
சொல்கிறாயோ மகனே - பாவி
ஒட்டாரம் ஒட்டிசலஞ் சாதிச்சாளே மகனேநீ
என்னைக் காண்பது
எந்தப் பிறப்பிலே மகனே - இப்போ
நிந்தையிட் டவளுக்கு நின்துய ரிடியாதோ மகனே - நீ
செய்யுந் தருமங்களும்
காராமல் போச்சுதே மகனே - அந்தச்
சித்திராங்கி யைவிஷம்
தீண்டிக் கொல்லாதோ மகனே - வெறும்
பொய்யும் [2]புரட்டும்
வளர்ந்தேறிச் சல்லோ மகனே - மெத்தப்
பொல்லாத வள்பாவி
புழுத்துப் படாளோ மகனே
அன்னை படுந்துயர்
நீயல்லோ தீர்ப்பது மகனே - அவள்
ஆகா நரகத்துக் காளாக வேண்டும் மகனே
இப்படி வாறது
சற்று மறிகிலேன் மகனே - குண
கினிசொல் மெய்யாகக்
கேட்டா ருன்தந்தை மகனே - இந்த
ஒப்பனை யிட்டழு
வேன்துய ரிடியாதோ மகனே - உன்னை

[3]ஊனஞ் செய்வதற்கு
உயிரது [4]நிற்குமோ மகனே - எனக்
[5]கெண்ணாது மெண்ணி
யலையுதே யென்னெஞ்சம் மகனே - உன்னை
ஈடழித் தாளுக்குக் கேடு வருமோ மகனே - உனக்குக்
கண்ணாலஞ் செய்து
பார்க்கவே [6]பெற்றிலேன் மகனே - இப்போ
காலுங் கையும் வாங்கிப்
போடுதற் [7]கோபெற்றேன் மகனே.

மகனே! தாயாகிய எனக்கு என்ன சொல்லுகிறாய்? கொடியவளாகிய சித்திராங்கி முரட்டுத்தனமாகவே நடந்துகொண்டு பகையை முடித்துக் கொண்டுவிட்டாள். இனி எப்பிறவியில் நீ என்னைப் பார்க்கப்போகிறாய்! உன் மீது பழியைச் சுமத்திய அவளுக்கு உனக்கு ஏற்பட்ட துன்பம் வந்து சேராதோ! மகனே! நீ செய்த தருமங்கள் கூட உனக்குத் துணை செய்யவில்லையே! அவள் பாம்பு முதலியவற்றின் விஷத்தால் சாகமாட்டாளா ! நாட்டில் பொய்யும் புரளித்தனமும் பெருகிப் போயிற்று! பொல்லாதவளாகிய அந்தப் பாவி புழுத்து அழியமாட்டாளா! தாயின் துன்பத்தை மகன்தானே போக்க வேண்டும்! இந்த நிலைக்கு அழிவு தேடிவிட்ட அவள் பாழும் நரகத்தில் போய்ச் சேரவேண்டும்! அந்தப் பாழாய்ப் போனவள் சொன்னதையே உன் தந்தை உண்மை என்று நம்பி விட்டார்! வேதனைப்பட்டு அழும் என் நிலைமை அவளுக்கு வராதா! மகனே! உன் கை, கால்களைத் துண்டித்த பின் நீ உயிருடன் இருப்பாயா! என் நெஞ்சம் எதை எதையோ எண்ணி அலைகிறதே! உன்னை அழிவு செய்தவளுக்கு அழிவு வராதா! உனக்குக் கலியாணம் செய்து பார்க்கத்தான் எனக்குக் கொடுத்து வைக்கவில்லை என்றால் கை, கால்களை வெட்டுவதைப் பார்க்க நேர்ந்து விட்டதே!

ஒட்டாரம் - முரட்டுத்தனம். ஒட்டி - இடங்கொடுத்து, கை பிடித்து. சலம்சாதித்தல் - பகைமுடித்தல். நிந்தை - பழி. இடிதல் - வந்துசேர்தல். புரட்டு - புரளித்தனம். படுதல் - அழிதல். நரகம் - பாவ உலகம். கினி - பீடை ஈடழித்தல் - பெருமையைக் கெடுத்தல். ஈடு - பெருமை. கேடு - அழிவு.

சுவடிச்சொல் - 1. பெத்த 2. பிரட்டும் வளந்தேறிச் 3. யூனஞ் 4. நிக்குமே 5. கென்றாதுமென்றி 6. பெத்திலேன் 7. கோபெத்தேன்.

வசனம் - மகனேயென்று புலம்பின தாய்க்கு மறுமொழியேது சொல்வான். (78)

129. Son dear, what consoling words
Have you for me?
Cittirāṅki, the sinister one
Has taken bloody revenge on you.
Shall we be united in another birth
If so, when, when my dear child?
Will not sufferings similar to yours
Visit her and torment her?
Dear son, how is it your many acts of righteousness
Have failed to protect you?
Will not the wicked woman
Die of snake bite?
Falsehood and chicanery
Have become the order of the day.
Will not the wretched woman
Rot and die miserably?
Is not a loving son, the hope of mother
To wipe her tears?
That unkind dame
Responsible for our sorrows
Shall go to the worst inferno!
Your father, the extremely credulous
Has taken her on her word,
Will not my sad predicament
Be hers as well?
Son, after the limbs are cut
Will you live?
My mind is befogged
With dismal thoughts
And suffers agitation.
Will not this extremely wicked act
Boomerang on her?
I wanted to see you as groom in jubilation
But am forced to see your mutilation.

Prose: The son's reply to the sorrowing mother.

130.* (தாயும் மகனும் வருந்துதல்) திரிபுடை

அழுது பலனென்ன - மார்பினுடனே
அணைத்துப் பலனென்ன - அரனையே நீ
தொழுது பலனென்ன?
அன்னையே யினித்துயரஞ் செய்யாதே
என்றவேளை சுமந்தன் வந்து
[1]தன்னிரு கண்ணீர் சொரிந்திட
அய்யா [2]யினியென்ன வாழ்வு
இனியென்ன பிழைப்பு
இனியென்ன சுகந்தான்
உன்னை விட்டுயிர் நிற்கு மோயெனக்
குன்னை விட்டு உறங்குமோ - இனி
உன்னை விட்டன்னம் வேண்டுமோ - மன
மொன்று மோதான்
சொன்ன சொல்வெறுத் [3]தீரையா - நான்
சொன்ன சொல்மறுத் தீரையா - [4]நான்
சொன்ன சொல்லழித் தீரையா - நான்
சொல்லி யென்ன - மோச மாச்சுது
மந்திரி புத்திக்கு மோச மாச்சுது - என்
தந்திரத் துக்குமோச மாச்சுது - நின்
கோபத்தால் மெத்த மோசம் போனேன்.

தாயே! அழுவதனாலோ மார்போடு அணைத்துக் கொள்ளுவதனாலோ சிவபெருமானை வணங்கித் துதிப்பதனாலோ இனி எந்தவிதமான பலனும் ஏற்படப் போவதில்லை. துன்பப்படுவதை விடுங்கள் என்றான் சாரங்கதரன். அப்போது அங்கே சுமந்தன் வந்தான். அவன் கண்களில் நீர்வடிய சாரங்கதரனைப் பார்த்து ஐயா! நல்ல வாழ்க்கையோ பிழைப்போ சுகமோ இனி நமக்கு இங்கு இல்லை. உன்னைவிட்டுப் பிரிந்தபின் என் கண் உறங்காது; உணவு உண்ணவும் பிடிக்காது. உயிரோடு இருப்பது என்பதே முடியாத காரியந்தான். ஐயனே! என் சொல்லை ஏற்காமல் மறுத்து விட்டீர்! என் கருத்தை வெறுத்து ஒதுக்கி விட்டீர்! என்ன சொல்லி இனி என்ன பயன்! அமைச்சனாகிய என் அறிவும் சொல்லும் என் தந்திர புத்தியும் எந்த விதத்திலும் பயனில்லாமல் போய்விட்டது! தங்களுடைய கோபத்தால் இந்தப் பழிக்கு நானும் ஆளாகிவிட்டேன்.

அரன் - சிவபெருமான். சொரிதல் - உதிர்தல். உறங்குதல் - தூங்குதல். அன்னம் - உணவு. ஒன்றுதல் - விரும்புதல். தந்திரம் - உபாயம். மெத்த - மிகவும்.

சுவடிச்சொல் - 1. தன்நிரு கண்ணீர் 2. யிநி 3. திரியா 4. னான்.

வசனம் - உயிர்க்குயிர் போன்ற சுமந்தனென்னும் மந்திரி பரிவத்துடனே சொல்ல அதற்குச் சாரங்கதரன் ஏது சொல்வான். (79)

130. Mother dear, neither fond hugging
Nor praise of Lord Civa
Shall yield any result.
Give up grieving
Said Cāraṅkataraṉ to mother.
Meanwhile Cumantaṉ came
His eyes full of tears.
Spoke he with emotion,
Sir, our life on earth is doomed
No worthy act or happiness
Can hereafter claim us.
Sir, parting from you for ever
Shall rob me of my sleep
Relish for food
Nay, even the will to live.
Alas, what a pity
You did'nt pay heed to my warning words,
Nothing is going to help us,
No, nothing at all!
My diplomacy and tact
As a resourceful minister
Have proved utterly useless.
Your short temper and hasty act
Have landed me also
In a sad state
The victim of an undeserved blame.

Prose: What was Cāraṅkataraṉ's reply?

131. *(சுமந்தன் சொல்லைக் கேளாமைக்கு - வருந்துதல்)* **சம்பை**

உன்வார்த்தை கேளாமல் ஓடியந்த மனைபுகுந்து
[1]பின் வார்த்தை வருமிவைகள் பிழைவார்த்தை யலவோ!
தோழா! [2]சுமந்தாநீ சொன்னசொல் கேளாமல்
பாழான வீடுபுகும் பழிக்குள் ளானேன்காண்
பழியுமெந்தன் முந்தவினைப் பயனுங்கூ டிச்சுதென்று
தழுவினான் மந்திரியைத் தானணைத்துக் கொண்டான்.

நண்பனே! சுமந்தனே! நீ சொன்ன சொற்களை நான் காது கொடுத்துக் கேட்கவில்லை ! பின்னால் என்ன பிழை வரப்போகிறது என்பதையும் நினைத்துப் பார்க்காமற் போனேன். புறாவைக் கேட்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் ஓடினேன்; ஓடி அந்தப் பாழாய்ப் போன அரண்மனையில் புகுந்தேன்; இந்தப் பெரும் பழிக்கு ஆளாகி விட்டேன். நான் செய்த முன்வினைப்பயனும், நான் அங்குச் சென்றதும் ஒன்று சேர்ந்து இந்தப் பழியை உண்டாக்கிவிட்டது என்று கூறியவாறே சுமந்தனைத் தழுவி அணைத்துக் கொண்டான்.

மனை - வீடு. முந்தவினை - முன்வினை; ஊழ்வினை.

சுவடிச்சொல் - 1. வின்வாற்த்தை 2. சுமுந்தா.

வசனம் - பின்னு மென்சொல்வான். (80)

131. Friend of my heart, my dear Cumantan
It is true I ignored your wise counsel
As I could'nt visualise future events.
Believe me, I entered the palace
Only to recover my pet dove,
Where I had to shoulder blame
For no fault of mine.
Methinks my deeds in earlier births
Echoed in my fatal visit
Subjecting me to malicious slander.
So saying he embraced Cumantan
With all his heart.

Prose: What more did he say?

132. (சுமந்தனைத் தாயிடம் ஒப்படைத்துச் சாரங்கதரன் புறப்படல்)

திபதை

சுமந்தனைத் தழுவியே சொல்லுவான் நமக்குச்
சமைந்தகா ரியங்களைத் தள்ளப்போ காது
உன்னிட வார்த்தையும் உன்னிட நிசமும்
உன்னிட புத்தியும் உன்னிடக் கல்வியும்
என்னுடன் கூடவே இருக்கப் பொறாமல்
என்னிட நேசமும் [1]இன்றையிலே தான்விட்டது
நெஞ்சு விசாரஞ் செய்யாதே ஒட்டுமோ
உஞ்ச ஊழி ஒதுங்குமோ தம்பி
என்னவே செவிதனக் [2]கேற்றது சொல்லி
அன்னையை அழைத்திந்த [3]அமைச்சனை யம்மா
என்னையன் புடன் [4]வளர்த் தெடுத்தது போலும்
தன்னிடத் தயவினால் [5]தான்காக்க வென்று
கைபிடித் தன்னைதன் கைதனிற் கொடுத்து
மெய்பதைத் திடுமன்னை வேதனை தீரச்
சொல்லுவா னம்மாயினி துக்கமே வேண்டாம்
பொல்லாத [6]நகரென்று புகலவும் வேண்டாம்
என்னிடத் தந்தையார்க் கெத்தனை சொல்லினும்
கொன்றிடச் சொன்ன [7]கொற்றவன் தன்னைப்
பகையாளி யென்றுநீ [8]பார்த்திட வேண்டாம்
நகையுடன் சித்திராங்கி நறுக்கவே சொன்ன
மாதுடன் [9]ஒருநாளும் வாதமும் வேண்டாம்
ஏதென்று நெஞ்சினி [10]லெண்ணவும் வேண்டாம்
[11]பெற்றது மில்லைநாம் பெற்றபின் பிள்ளை
[12]இற்றது மில்லையென் றெண்ணிக்கோ தாயே
என்றடி பணிந்தங் கிருந்தவர் தமக்கும்
நன்றெனும் வாய்மைகள் நவின்றுபொற் சிவிகைக்
கொடும்பழி யாலந்தக் [13]கொற்றவ னேறிக்
கடுவனு மாயுதக் காரர்கள் சூழ
எத்தனைப் பேர்கள் இரங்கியே யலறப்
[14]பொற்றெரு வீதியில் [15]போகலுற் றானே.

சாரங்கதரன் சுமந்தனைத் தழுவி, தம்பி! நமக்கு வந்து சேர்ந்த செயல்களைத் தள்ளிவிட முடியாது. உன்னுடைய கருத்துமிக்க சொற்கள், உண்மைக்குணம், சிறந்த அறிவு, ஆழ்ந்த கல்வி ஆகியவை இனி எனக்குப் பயன்படாமல் போய்விட்டன. என்னுடைய நட்பும் இன்றோடு விட்டுப் போயிற்று. இவற்றிற்காகப் பெரிதும் மனம் வருந்த வேண்டாம். நம்மிடையே பிரிவை உண்டாக்கிவிட்ட நம்முடைய விதிப்பயன் நம்மை விட்டு நீங்காது எனப் பல அறிவுரைகளைச் சொன்னான். பிறகு தாயைப் பார்த்து அம்மா! என்னை அன்போடு வளர்த்து வந்தது போலவே அமைச்சன் சுமந்தனைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறியவாறு சுமந்தன் கையைப்பிடித்துத் தன் தாயின் கையிற் சேர்த்தான். உடல் பதைபதைக்க நிற்கும் தாயைப் பார்த்து அம்மா! இனி வருந்த வேண்டாம்; இந்த இராச மகேந்திரபுரம் மிகவும் கொடியது என்று இனி கூறாதீர்கள். எவ்வளவு உண்மைகளை எடுத்துச் சொல்லியும் என் தந்தையார் எனக்குத் தண்டனை அளித்தே தீர வேண்டும் என்று முடிவு செய்து விட்டார். அவரைப் பகைவர் என்று எண்ணிவிடாதீர்கள்! என்னுடைய கை, கால்களை வெட்ட வேண்டும் என்று மிக மகிழ்ச்சியோடு கூறிவிட்ட சித்திராங்கி தேவியாருடன் எந்தவிதப் பேச்சும் பேசாதீர்கள்! இவற்றையெல்லாம் மனத்தில் வைக்காதீர்கள்! நமக்குப் பிள்ளை பிறக்கவும் இல்லை; பிறந்து இறக்கவுமில்லை என்று எண்ணி மன அமைதி அடையுங்கள்! இவ்வாறு கூறியவாறு தாயின் திருவடிகளில் வணங்கினான். அருகிலிருந்த எல்லாருக்கும் 'நல்லது' என்று மட்டும் கூறிப் புறப்பட்டான்.

கொடும்பழிக்கு ஆளான இளவரசனாகிய சாரங்கதரன் பொன்னாலான சிவிகையின் மீது ஏறினான். தூதுவர்களும் ஆயுதமேந்திய காவலர் பலரும் சூழ்ந்து வந்தார்கள். மக்கள் பலரும் அலறித் துடிக்கத் தெருவழியே சென்றான்.

சமைந்த - நேர்ந்த. நேசம் - நட்பு. விசாரம் - வருத்தம். ஓட்டுதல் - பொருந்துதல். உஞ்சல் - ஏவிவிடுதல், உண்டாக்குதல். ஊழி - விதி. ஒதுங்குதல் - நீங்குதல். நகர் - நகரம். நகை - சிரிப்பு. நறுக்க - வெட்ட வாதம் - தருக்கம். இற்றது - அழிந்தது. அடி - திருவடி, பாதம். வாய்மை - உண்மைப்பேச்சு. நவிலுதல் - சொல்லுதல். சிவிகை - தண்டிகை, பல்லக்கு. கடுவன் - கூனன்; தூதுவன். ஆயுதக்காரர் - காவலர். இரங்குதல் - பரிதபித்தல், அழுதல்.

சுவடிச்சொல் - 1. யின்னையிலேதான் விட்டுது 2. கேத்தது 3. அமச்சனே 4. வளத்தெடுத்தது 5. தான்கற்கவெண்ணு 6. னகரென்று 7. கொத்தவன் 8. பாத்திட 9. ஒருனாளும் 10. லென்றவும் 11. பெத்ததுமில்லைனாம்பெத்தபின் 12. யித்ததுமில்லை - யென்றென்றிக்கோ 13. கொத்தவ 14. பொற்தெரு 15. போகலுத்தானே.

வசனம் - [1]போகிற சாரங்கதரனைப் [2]பார்த்துப் பட்டணத்திலுள்ள [3]சகல சனங்களும் என்ன சொல்லுவார்களென்றால்.

சுவடிச்சொல் - 1. போற 2. பாத்து 3. சகலினெங்களும்.

132. Embracing Cumantaṉ
Cāraṅkataraṉ spoke:
Brother, it is difficult indeed
To brush aside
The happenings of our life.
Your words of wisdom, rectitude,
Sagacity and experience
Won't hereafter be of use to me,
Our friendship ends today
But grieve not on that account
The destiny that shapes our ends
Is too potent to be overlooked.
Addressing his mother,
Dear mum, please extend the care
You bestowed on me
To my beloved Cumantaṉ,
Protect him always.
So saying he united his friend's hands
With those of his mother,
Eyeing his mother
Who was visibly shaken,
Mother dear, do not sorrow hereafter
Nor describe Rajamakentirapuram as city of sin
Don't bear any ill will whatsoever
Against our father
Who turned a deaf ear
To our many fervent appeals;
Treat him not with hostility
Avoid speaking badly of Cittirāṅki
The author of my mutilation
And the rejoicer.
Let not any malice be harboured

Or ill-will cherished.
Console yourself with the thought
That no son was ever born to you
And that you lost him.
He prostrated at the feet of mother,
Conveyed his good will to all
Started to face the inevitable.
Prince Cāraṅkataraṉ
Wrongly accused of dishonourable deed
Climbed a palanquin made of gold
Sorrounded by emissaries and armed guards
Moved through the heart of the city
Amidst hysterical cries.

133. *(நகர மக்களின் அங்கலாய்ப்பு)* **சம்பை**

வேடிக்கை பார்ப்பர் - சிலர்
வெந்து தணலா[1]யுருகி
ஓடிப் பயந்தகத்தி
லொளித்திடு வார்கள் சிலபேர்
முகத்திலே சீலையிட்டு
மூடியுடல் பதைப தைக்க
மிகத்துய ரதுகொண்
டழுதுவிழுந் திடுவார் சிலபேர்
இனியென்ன சமுசாரம்
என்று [2]குமுறிக் குமுறி
மனநொந்து போய்மீண்டு
வருவார்கள் சிலபேர்
சுதனையடல் செய்யமனந்
[3]துணிந்ததோ வரசனுக்கு
மதிகெட்ட தோவென்று
வசனிப்பார் சிலபேர்
நீலிதா னென்னமென்று

நிந்தையிட் டாளிந்தப்
பாலகன்தன் மீதிலென்று
பதைப்பார்கள் சிலபேர்
காமவடி வாமந்தக்
காளைதனை நீக்கியந்தப்
[4]பூமியஸ்த மிச்சுதென்று
புகலுவார் சிலபேர்

சாரங்கதரனை அழைத்துச் செல்லுவதை நகர மக்கள் நின்று பார்த்தார்கள். செல்லுங் கோலத்தைப் பார்த்துச் சிலர் உள்ளம் கொதிக்க மனம் உருகிப் பயந்து வீட்டினுள் புகுந்து கொண்டார்கள். சிலர் உடல் நடுங்க முகத்தைக் துணியால் மூடிக்கொண்டு அழுதபடியே மயங்கி விழுந்தார்கள். நமக்கு ஏன் இல்லறவாழ்க்கை என்று வெறுப்படைந்தவர்களாய் உள்ளங்குமுறி இங்குமங்குமாக அலைந்தார்கள். சிலர் மகனைக் கொல்லுமளவிற்கு மன்னன் மனந்துணிந்து விட்டாதா அல்லது புத்திகெட்டுப்போய் விட்டதா என்று பேசிக்கொண்டார்கள்.

நீலி போன்றவளாகிய சித்திராங்கி இச்சிறுவன்மீது இவ்வளவு பெரிய பழியைப் போட்டுவிட்டாளே என்று பதைத்தார்கள் சிலர். மேலுஞ்சிலர் மன்மதனைப் போன்ற இந்த இளைஞனை இழந்து இந்தப் பூவுலகமே இருண்டு போயிற்று என்று கூறினார்கள்.

தணல் - தீ. அகம் - வீடு. சீலை - துணி. சமுசாரம் - குடும்பம், இல்லறவாழ்க்கை. சுதன் - மகன். அடல் - கொல்லுதல். மதி - புத்தி. நிந்தை - பழி. காளை - இளைஞன். அஸ்தமித்தல் - இருளடைதல்.

சுவடிச்சொல் - 1. யுரிகி 2. குமறிக்குமறி 3. துணிந்துதோ 4. பூமியஸ்த்த.

133. Citizens watched Cāraṅkataraṉ
Being formally led
To face his doom.
Some shuddered at the sight
Closed their doors, emotion choking.
Some covered their faces
Fainted shedding copious tears.
There were restless people in the crowd
Who paced up and down
Wondering whether they should

Enjoy conjugal life at all!
Some pointed an accusing finger
At the King's unimaginative cruelty
Doubted whether he was in his senses.
A few blamed Cittirāṅki
Wicked as provebial Nīli
Who had charged an innocent boy
Handsome like Lord Cupid,
Felt that Cāraṅkataraṉ's untimely end
Would plunge the world in stygian gloom.

134. *(மக்கள் வருந்த சாரங்கதரன் கானகம் அடைதல்)* திபதை

பின்னையுஞ் சிலபேர் பெரும்பய மெய்தி
[1]இந்நக ரியைவிட்டு ஏகுவோ மென்பார்
கும்புகும் பாகவே கூடியே பேசி
வெம்பியே [2]கண்ணில்நீர் விடுவார்கள் சிலபேர்
நடக்கை யல்லாத நடக்கைதான் நடந்தால்
அடுக்குமோ யெவர்க்கு மாகையா லரசன்
செய்தனன் தீங்கெனச் செப்புவார் சிலபேர்
மெய்யது மெய்யென விளம்புவார் சிலபேர்
சிவசிவா வென்றிரு செவிகளை மூடியே
[3]எவர்செய்த பாவமோ என்பார்கள் சிலபேர்
தயவில்லாப் பாவி தன்னிட எல்லையில்
இருந்தா லு மாகாது என்பார்கள் சிலபேர்
புலிபிடித்துப் பெரும்பூதம் புகுந்தது போல
கிலிபிடித் துத்தரை கீறுவார் சிலபேர்
[4]வாழையாம் மரந்தனை வாளினால் வெட்டியுங்
கீழதாய் வீழவுங் [5]கிரியடி யுடனே
சாயவுங் கோபுரந் [6]தானிடிந் திடவுந்
தூயநட் சத்திரந் துரிதமாய் விழவும்
கிளைக்கிளை யாய்ச்சத்தங் கிடக்கவே [7]வளர்ந்த

இளமர மொன்றுதான் [8]இற்றிற்று விழவும்
மன்னவன் கோயில் [9]வலப்புற மெல்லாந்
தன்னிலே [10]நகர்ந்து தரையில்வீழ்ந் திடவும்
[11]அன்னதுங் கேட்டு வகோரமாய்ச் சென்று
[12]சொன்னதுக் குத்திரஞ் சொல்லுவார் சிலபேர்
கற்பகம் [13]விழக்கனாக் கண்டன மென்று
சொர்ப்பனத் தீமைகள் சொல்லுவார் சிலபேர்
பல்வரி சையுமிவன் பால்பொசி முகமுஞ்
சொல்வரி யும்இவன் சோபன நடையும்
பிறக்குதோ பிள்ளை பெருந்துய ரெமக்குத்
துறக்குமோ வெனச்சொல்லித் துக்கிப்பார் சிலபேர்
நயபய ராச நரேந்திர ஒய்யாரன்
செயுமுயர்த் தவங்களுஞ் செய்தபின் வந்த
புண்ணியம் பழிவரப் போகுதே யென்று
வண்ணநல் முகங்கள் வாடுவார் சிலபேர்
பட்டணத் தோர்களிப் படிப்புல விதமாய்
மட்டிலாத் துயரம் மண்டியே நகரம்
நீங்கினா னப்போது நிமிஷத்தில் தருக்கள்
ஓங்கிய கானகத் துறைந்தன ருயர்ந்த
மலையடி வாரத்தில் [14]மாற்றுயர் செம்பொன்
இலகிய சிவிகையை யிறக்கிவைத் தடைந்த
தூதரெல் லாந்தலை தொங்கிட்டே யினிநா
மேதுசெய் வோமென் [15]றெண்ணமிட் டனரே.

மேலுஞ்சிலர் மிகவும் பயமடைந்து இந்த நகரத்தை விட்டே ஓடிவிடுவோம் என்றார்கள். சிலர் கூட்டங்கூட்டமாகக் கூடி நின்று கண்ணீர் விட்டார்கள்.

செய்யக்கூடாத செய்கைகளைச் செய்து தவறாக நடந்து கொண்டால் யார்தான் பொறுத்துக்கொள்ளுவார்கள்? நீதி தவறாத அரசன் இத்தண்டனையைக் கொடுத்தான் என்று கூறியவர்களுமுண்டு. உண்மை உண்மையாய்த் தான் முடியும் என்பர் சிலர். சிலர் தங்கள் காதுகளை மூடியபடி சிவசிவா! இது யார் செய்த பாபம் என்றார்கள். இரக்கமில்லாத பாவி இந்த நாட்டு எல்லைக்குள் இருந்தாலே நாடு அழியும் என்ற பேச்சும் எழுந்தது. பெரிய

பூதமானது ஒரு புலியையும் பிடித்துக்கொண்டு நகருக்குள் புகுந்து விட்டது போல நடுங்கித் தரையை கீறியவர்கள் சிலர்.

வாழை மரத்தை வாளால் வெட்டிச் சாய்த்தனர்; மலையானது அடியோடு சாய்ந்தது, கோயில் கோபுரங்கள் இடிந்தன; நட்சத்திரங்கள் வானிலிருந்து விழுந்தன; நன்றாகக் கிளைத்து வளர்ந்திருந்த இளமரம் அடியோடு சாய்ந்தது கோயில் கோபுரங்கள் இடிந்தன! நட்சத்திரங்கள் வானிலிருந்து விழுந்தன. நன்றாக கிளைத்து வளர்ந்திருந்த இளமரம் அடியோடு சாய்ந்தது; மன்னனின் அரண்மனையானது ஒரு பக்கம் தளர்ந்து சாய்ந்தது என்பன போன்ற தீய சகுனங்கள் பலவற்றைப் பலரும் எடுத்துக் கூறினர். அவற்றைக் கேட்ட சிலர் தாங்கள் கண்டதையுஞ் சொல்லத் தொடங்கினார்கள். கற்பக தரு முறிந்து விழக் கனாக்கண்டேன் என்பது போலப் பலரும் தாம் கண்ட தீக்கனாக்களையும் அதனால் வரவிருக்கும் தீங்குகளையும் எடுத்துச் சொன்னார்கள். அழகான பற்களின் வரிசை, பால் வடியும் இளமை வாய்ந்த முகம், இனிமை வாய்ந்த பேச்சு, அழகு வாய்ந்த நடை ஆகியவற்றோடு விளங்கும் இந்தச் சாரங்கதரனைப் போல ஒரு பிள்ளை எங்களுக்குப் பிறந்தால் எங்கள் குறையெல்லாந் தீரும் என்று பேசிக்கொண்டவர்கள் சிலர். நற்குணமுடைய இராச நரேந்திரன் உயர்ந்த தவங்களைச் செய்தவன். அதனால் பெரும் புண்ணியம் பெற்றான். இப்போது அந்த புண்ணியவானுக்கே பழிவரும் படியான நிலை உருவாகிவிட்டது என்று சிலர் முகம் வாடினர். நகர மக்கள் பலரும் பலவாறு கூறி வருந்த நகரமே துக்கத்தில் ஆழ்ந்து கிடந்தது. அந்த நகரத்தை விட்டு வெகு விரைவாக வெளியேறிய சாரங்கதரன், உயர்ந்த மரங்கள் அடர்ந்த காட்டையடைந்தான். அங்கே ஒரு உயர்ந்த மலையின் அடிவாரத்தில் பொற்சிவிகையை இறக்கி வைத்த தூதுவர் யாவரும் தலை கவிழ்ந்தவாறே இனி என்ன செய்வோம் என்று சிந்திக்கத் தொடங்கினார்கள்.

நகரி - நகரம். ஏகுதல் - செல்லுதல். கும்பு - கும்பல், கூட்டம். வெம்புதல் - வாடுதல். நடக்கை - செய்கை, ஒழுக்கம். அடுக்குமோ - பொருந்துமோ, ஏற்குமோ. மெய் - உண்மை. கிலி - பயம். கிரி - மலை. இற்று - முறிந்து. அகோரம் - அஞ்சத்தக்க. கற்பகம் - தேவதரு. சொர்ப்பனம் - கனவு. சோபனம் - அழகு. துறத்தல் - நீங்குதல். ஒய்யாரம் - பெருமிதம். வண்ணம் - அழகு. மட்டிலா - அளவில்லாத. மண்டுதல் - நிறைதல். தரு - மரம். மாற்று - தரம்.

சுவடிச்சொல் - 1. இன்னகரியை 2. கன்றில் 3. யெவர் 4. வாழையும் 5. கிறி 6. தாநிடிந் 7. வளந்த 8. இத்தித்து 9. வலப்புர 10. நகந்து11. வன்னதுங் 12. சொன்னத்துக் 13. விழக்கினா 14. மாத்துயர் 15. றென்றமிட்.

வசனம் - [1]எண்ணமிட்ட தூதரிலே ரெண்டுபேர் சாரங்கதரனிட சேதி [2]நிவர்த்தியோ, அல்லவென்று அரசன் கோபமாறி மன்னிப்பானோ? எல்லாந் தெரிந்து கொண்டு வருவோ மென்று [3]ஓட்டமாயோடி, அரசனைக் கண்டு,

கும்பிட்டு உம்மிட குமாரனை நிசமாகக் காலுங் கையுந் தறிக்கிறதோ? நீங்கள் மன்னிக்கிறதாயிருக்குமோ? ஏது[4] திருவுளமென்ன, அதுக்கு ராசநரேந்திரன் கண்களிலே பொறியெழச் சீறிக் கண்களையுருட்டிப் பார்த்து, அவனைத் தறிக்கிறது மல்லாமல், உங்களையும் காலுங் கையுந் தறிப்பேனென்னத் தூதுவர் பயந்து நிற்கத் திரும்பியுங் கைமோதிரங் [5]கொடுத்து அனுப்பத் தூதுவர் சீக்கிரமாக வந்து, சாரங்கதரன் முன் வந்து, மோதிரத்தை வைத்து ஏது சொல்வா ரென்றால். (82)

சுவடிச்சொல் - 1. என்றமிட்ட 2. நிவத்தியோ 3. யோட்டமாயோடி 4. திருவிள 5. குடுத்து.

134. While some stood in groups
Shedding profuse tears
Others fled the city
In mortal fear.
There were some
Who justified action of king
Punishing own son
For gross misdemeanour.
Some closed their ears
Uttering lord's name, Civa Civa,
Wondered whose sin
Had landed the royal family in this predicament.
A few made bold to say
That harbouring a sinner
Would destroy the city.
Some scratched the earth
Shuddering with fear
As if a terrible gnome
Holding tiger in its grip
Had made way to city.
Some catalogued the bad omens
They had recently seen,
Plaintain tree being cut off,
Mountains crumbling rootless,
Cracking of temple towers,

Falling of stars from sky,
Tender trees getting uprooted
And part of the King's palace
Getting shattered and crumbling.
Others added to the list
From their experience;
The dream of a pagoda tree
Falling with a thud
And similar ominous dreams
Portending evil and catastrophe.
Some said amidst a sigh,
How I wish I beget a son
Like Cāraṅkataraṉ
To make my life meaningful,
Handsome face, rows of beautiful teeth,
Speech vibrating with vivacity
Elegant gait and what not!
Others lamented the sad plight
Of King Rajanarentira
Whose righteousness and penance
Won him great glory,
But all reduced to nothing,
Sin and blame tainting them.
So varied were views uttered
City enveloped in great gloom.
Cāraṅkataraṉ leaving the city in haste
Reached the heart of the forest
Where the orderlies lowered the gold palanquin
And wondered what they should do next

Prose: The two messengers felt that the King's anger would have subsided and so rushed to him, paid obeisance and asked whether the King still wanted his son's limbs to be chopped off. Have you pardoned him? The King became wild and threatened to mutilate the messengers as well. He then gave the royal insignia, the ring. Placing the ring before Cāraṅkataraṉ, what did the messengers say?

135. *(தூதுவர் சிந்தனை)* **திரிபுடை**

நினையளித் திடுந்தாதை வெஞ்சினம்
நீங்கினது மில்லை - நீங்கியேஉன்
தனைவிடத் தயவில்லை
[1]யாமுரை சாற்றி னாலும்
கோபமே குறியா யிருக்குது
கோபமே பொருளா யிருக்குது
கோபமே குடியா யிருக்குது
கூறியென்ன? புத்தி எங்களுக் கேது?
சோறீர் புகலும் புகலுமய்யா எனச்
சொல்லும் புத்தியென்ன?
உபாயமென்ன? புகல்வதென்ன?

தங்களைப் பெற்ற தந்தையின் கோபம் சிறிதும் குறையவில்லை. உங்களை மன்னித்து விடும் இரக்கமும் இல்லை. நாங்கள் எடுத்துச் சொன்னோம். அப்போதும் அவரிடம் கோபமே குறியாகவும், அதுவே பொருளாகக் குடியாயிருக்கிறது. பயன் எதுவுமில்லை. இனி எடுத்துச் சொல்லும் வழிதான் என்ன? தாங்களே கூறுங்கள்.

அளித்திடும் - பெற்றெடுத்த. தாதை - தந்தை. வெஞ்சினம் - கடுங்கோபம். சாற்றுதல் - கூறுதல். குறி - குணம், நோக்கம். சோறீர் - சொல்லுகிறீர் என்பதன் கொச்சைநடை. உபாயம் - வழி. புகலுதல் - சொல்லுதல்.

சுவடிச்சொல் - 1. யாமுறை சாத்தினாலும்.

135. Your father's wrath
Has not lessened in the least,
He is not magnanimous enough
To forgive you,
We appealed to him most fervently
But there was no response.
He is at the moment
Anger of the worst kind personified.
We are at our wits end
To decide the future course of action;

Kindly enlighten us
As to what we should do.

136. *(சாரங்கதரன், ஆணையை நிறைவேற்றுங்கள் எனல்)* சம்பை

உருகியென்ன நீங்கள்போய்
உரைத்துவந்த பலனென்ன?
அரசன் சொன்னபடி - நீங்கள்
அனுகூலஞ் செய்வீர்
சிந்தைசெய்ய லாகாது
தீருமோ தீராதென
தந்தைசொன்ன படிநீங்கள்
தான்செய்வீ ரென்றான்
வாராத பாவமேல்
[1]வந்ததினி யெந்தன்முகம்
பாராம லாக்கினையும்
[2]பண்ணுமென் றானே.

நீங்கள் இரக்கம் கொண்டு மனம் வருந்துவதால் என்ன பயன்? அரசனிடம் சென்று கூறியதால் தான் என்ன பயன்? அரசன் ஆணையை முதலில் நிறைவேற்றுங்கள். மேலும் மேலும் சிந்தனை செய்வதால் தண்டனை குறையப்போவதில்லை. வரக்கூடாத பழியும் பாவமும் என்மீது சுமத்தப்பட்டு விட்டது. எனவே என் முகத்துக்காக எந்தவிதமான இரக்கமும் காட்டாமல் அரசனின் ஆணைப்படியான தண்டனையை நிறைவேற்றுங்கள் என்றான்.

உருகுதல் - மனங்கரைதல். அனுகூலம் - காரியம் முடித்தல்; நிறைவேற்றுதல். சிந்தை - சிந்தனை. ஆக்கினை - அரசக் கட்டளை, தண்டனை.

சுவடிச்சொல் - 1. வந்துதினி 2. பன்றுமென்.

136. What use is your sorrow and sympathy
Or fervent appeal to the obstinate King?
Carry out forthwith the king's commands
Your musings are but idle thoughts
Incapable of mitigating evil,
Or lightening the punishment.

Undeserving blame and great sin
Have been thrust on me.
Off with your personal feelings soft
Quickly put into execution punishment
As willed and devised by the King.

137. *(கை, கால்களைத் துண்டித்தல்)* திபதை

தூதுவர் மனம்வரச் சொல்லினான் - சொல்லி
ஆதிசங் கரனையும் அம்பிகை தனையும்
நெஞ்சினில் நினைந்தவன் நெடுந்துய ரெய்தி
அஞ்சியே இருந்திட [1]அவர்நொடிப் பொழுதில்
[2]இணைக்கையுங் காலுஞ் [3]செயித்திட வாளால்
துணித்தனர் துணிக்கவே [4]சோர்ந்துமெய் மறந்து
அரகரா சம்புவே அய்யனே வென்று
தரைதனில் விழுந்தனன் சாரங்க தரனே.

மனந்துணிந்து தண்டனையை நிறைவேற்றுமாறு தூதுவரிடம் சொல்லிய சாரங்கதரன் தான் வணங்கும் முதல்வனாகிய சிவபெருமானையும், பார்வதி தேவியையும் உள்ளத்தில் நினைத்தபடியே மிகுந்த வருத்தத்தோடும் நடுக்கத்தோடும் நின்றான். தூதுவர் சகிப்புத்தன்மையோடு இரண்டு கைகளையும் கால்களையும் ஒரு நொடிப் பொழுதில் வெட்டிவிட்டார்கள். சாரங்கதரன் அரகரா! சம்புவே! அய்யனே! என்று கூறியவாறே உடல் சோர்ந்து மயங்கி கீழே விழுந்தான்.

மனம்வர - துணிவு ஏற்பட. ஆதிசங்கரன் - தலைமை வாய்ந்த சிவபெருமான். அம்பிகை - பார்வதி. நொடிப்பொழுது - கைநொடிக்கும் நேரம். இணை - இரண்டு. செயித்தல் - சகித்தல், பொறுத்தல். துணித்தல் - துண்டித்தல், வெட்டுதல். அராகரா - அர - பாம்பு; அடுக்குத்தொடர்; சிவசிவா என்னும் பொருளது. சம்பு - சிவன்; நாவல்.

சுவடிச்சொல் - 1. அவர்னொடிப் 2. யிணக்கயும் 3. செயிற்றிட 4. சோந்து.

வசனம் - விழுந்த சாரங்கதரன் ஏது சொல்வானோவென்று வந்த தூதுவரெல்லாஞ் செடி [1]மறைவாகப் போய்க் கேட்டுக் கொண்டிருக்க, சாரங்கதரன் [2]மூர்ச்சை தெளிந்து [3]விழித்துப் பார்த்து, வந்த தூதுவரெல்லாம் போனார்களோ வென்றும், நாம் காலுங் கையும் போக்கடித்துத் தனித்தோமே யென்றும் துக்கித்துக் கொண்டு ஏதென்று புலம்புவான். (83)

சுவடிச்சொல் - 1. மறவாக 2. மூற்சை 3. மிழித்துப்பாத்து.

137. After firmly instructing the King's men
To carry out the punishment
Cāraṅkataraṉ prayed to Lord Civa and Parvati
The deities after his heart,
Stood with sorrow and shiver
While the men with infinite patience
Chopped off his legs and hands,
All within a wink
Muttering *Arahara, Cambhuve*, my protector,
Cāraṅkataraṉ almost fainted.

Prose: The King's men stood behind the plants to over hear Cāraṅkataraṉ's words. When he regained consciousness, he ascertained whether the messengers had left and spoke with sorrow on the loss of his limbs. What did he say?

138. *(சாரங்கதரனின் ஏக்கம்)* **சிந்து**

என்னசெய்வேன் சிவனே - [1]நான்
ஏது செய்வேன்
உன்னருளில் லாமலிங்கே
[2]உற்றதுணை யாருமில்லை *(என்ன)*
உய்யுங் கணக்கில்லை - உயிர்
இழப்பது நல்லது
செய்யுஞ் செயலென்ன - யிரு
கையுங் காலும் போச்சுதினி *(என்ன)*
பாதகி யில்லாத நிந்தை
ஓதிடவே யதுகேட்டு
தாதையும் விரோதமுடன்
தீதுசெய்ய வேநினைந்தான் *(என்ன)*
எண்டிசை பரந்தராச
மண்டலேஸ் பரன்மகனைக்

கண்டவர்கை காலும்போன
நொண்டியென்று சொல்லலாச்சு. (என்ன)

சிவபெருமானே! நான் இனி என்ன செய்வேன்; உன்னுடைய அருள் இல்லாமல், இந்த நிலவுலகத்தில் நான் எதைச் செய்வேன்! சிறந்த ஆதரவுடையோர் எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்! இரண்டு கையும் காலும் போன பின் எந்தச் செயலைச் செய்ய முடியும்! இந்த நிலையில் வாழ்வதைவிட உயிர்விடுவதே நல்லது. கொடும்பாவியாகிய சிற்றன்னையோ செய்யாத பழியை என் மீது சுமத்தி விட்டாள், அதைக்கேட்டு நம்பிய என் தந்தையும் என்மீது பகைமை கொண்டார். இந்தத் தண்டனை கொடுக்கவும் துணிந்தார். எட்டுத் திசைகளிலும் புகழும்படியானவனும், நாட்டுத் தலைவனுமாகிய அரசனுடைய மகனை நொண்டி, நொண்டி என்று எல்லோரும் ஏளனமாகப் பேசும் நிலமை ஏற்பட்டுவிட்டது.

உற்றதுணை - சரியான ஆதரவு. உய்தல் - உயிர்வாழ்தல். பாதகி - துரோகி. தாதை - தந்தை. எண்டிசை - எட்டுத் திக்குகள். மண்டலம் - நாடு. மண்டலேஸ்வரன் - நாட்டுத் தலைவன்; அரசன்.

சுவடிச்சொல் - 1. னான்யேதுசெய்வேன் 2. உத்ததுணை.

138. Lord Civa, What shall I do hence?
Without your mercy, how can I function?
Who else shall be my refuge?
Having lost hands and legs
What worthwhile thing can I do?
Better to give up the ghost
Rather than live in this state.
Great sinner my step mother is,
Has laid on me undeserved blame,
Believing her concocted tale
My father turned hostile and punished me.
What a fall,
The son of the mighty King
Proclaimed leader of the people
Has become a laughing stock
To be contemptuously called cripple!

139. *(தாயின் நிலையை நினைத்தல்)* **தியதை**

[1]பொறுத்திட மாட்டேனென் பொந்தியி லுயிரை
அறுத்திடவே கைகள்தா னாவதொன் றில்லை
[2]அன்னைநான் படுந்துய ரறிவளோ அறிந்தே
என்னசெய் தனளோ இரங்கியே உயிரை
நீத்தனளோ வந்து நிஷ்டுர மெல்லாம்
போக்கினளோ [3]கண்ணீர் பொழிந்திடு மழுகை
[4]மாற்றினளோ பாச மாயையீ தென்று
தேற்றினளோ வினைச் சித்திராங்கி யுடனே
கூடினளோ என்தந்தை கோபத்தி னாலே
வாடினளோ இந்த வன்மையைக் கேட்டு
வந்தெனக் [5]குற்றிடும் வயிற்றெரி வெல்லாம்
[6]தன்கண்ணில் பார்த்துத் தயவுடன் [7]பெற்று
வளர்த்தகை யாலென்னை வாரியிங் குள்ள
பள்ளத்தில் போட்டுப்பின் பதியிலே காளோ!
காட்டிலே வாழும் கரடிகள் புலிகள்
[8]ஓட்டமா யோடிவந் துண்டுவி டாதோ
மலையிற்கற் குண்டுகள் மலங்கியே வந்துஎன்
தலைதனில் விழுந்துயிர் தானும்போ காதோ
சங்கரா தேவர்கள் [9]தாணுவே முறையோ
[10]மங்கையர் பங்காளா வள்ளலே முறையோ
தேவர்கள் தேவனே [11]சிற்பரா முறையோ
மூவர்கள் முதல்வனே! மூர்த்தியே முறையோ
என்முறை நின்செவிக் கேறிச்சோ யிலையோ
என்முறைக் குச்சத்தி தங்குவ திலையோ
பராமுகமோ தாயைப் பார்க்கப் போகாதோ
பாராமுகமோ என்போல் பாவிக ளுண்டோ
ஓங்கியே எழுந்ததோர் வாரியில் [12]நஞ்சை
வாங்கியே கொண்ட மயக்கமோ மயக்க

நித்திரை யோயல்லால் [13]நேரிழை கவுரி
முத்திரை [14]யோயிப முகன்கந்த னுடனே
கொஞ்சுத லோமுத்தி கொடுத்திடு ரென்று
[15]நெஞ்சினில் மகிழ்வதாய் [16]நின்றிடும் வாறோ
மனந்தனி லின்ன வாறுதான் கூறி
மனந்தனிற் கவலையாய் மதியது மயங்கி
கான்நில வரையின்கீழ்க் கால்கைக் குருதி
சோதனையாய்ச் சொரிந்திட சோகஞ்செய் தானே.

என் கைகால்களை வெட்டியதால் எனக்கு ஒரு கேடும் இல்லை. ஏனெனில் என் உயிரைப் போக்கிக் கொள்ளத்துணிந்து விட்டேன். ஆனால் கை, கால்களை இழந்து நான்படும் துன்பத்தை என் தாயார் அறிந்து எப்படி வருந்துகிறார்களோ என்பது தெரியவில்லை. என் நிலைமையை அறிந்து உயிரை விட்டு விட்டார் களோ! இந்தக் கொடுமைகளையெல்லாம் மறந்து சமாதானம் அடைந்திருக்கி றார்களோ! கண்ணீர்விட்டு அழும் அழுகையை மறந்திருக்கிறார்களோ! இது ஒரு மாயை, ஒருவருக்கொருவர் கொண்ட அன்பினாலே ஏற்பட்டது என்று மனத்தைத் தேற்றிக் கொண்டு விட்டார்களோ! இந்தக் தீவினைக்குக் காரணமான சித்திராங்கி மீதிருந்த கோபம் மாறி இருக்கிறார்களோ! என்னுடைய தந்தையின் கோபத்திற்கு ஆளாகி அவரால் ஏதேனும் துன்பம் அடைந்திருக்கிறார்களோ! எதுவுமே தெரியவில்லை. நான்படும் கொடுமைகளைக் கேட்டு என்னைப் பார்க்க வரமாட்டார்களா? வந்து எனக்கு ஏற்பட்டுள்ள இந்தக் கொடூரங்களையெல்லாம் நேரில் பார்க்கமாட்டார்களா! பார்த்து, என்னைப் பெற்றுச் சீராட்டி வளர்த்த தன் கையினாலேயே என்னை வாரி எடுத்து ஒரு பள்ளத்தில் போட்டு விட்டுப் போகமாட்டார்களா? அப்படிப் போடப்பட்ட என் உடலைக் காட்டு மிருகங்களான கரடிகளும் புலிகளும் பார்த்துவிட்டுத் தின்று தொலைக்கக் கூடாதா! மலையின் மீதுள்ள பெரிய பாறையானது உருண்டு வந்து என் தலைமேல் விழுந்து என் உயிரைப் போக்கி விடக்கூடாதா! சங்கரா! தேவர் துணைவா! மங்கை பங்காளா! வரையாது வழங்குபவனே! தேவர் தலைவனே! பரம்பொருளே! அரன், அரி, பிரம்மா ஆகிய மூவரில் முதல்வனே! தலைவனே! என்னுடைய முறையீடுகள் உன்காதுகளில் கேட்கவில்லையா! என்னுடைய வேண்டுகோள்களுக்கு வல்லமை இல்லையோ! என் மீது தங்கள் கருணை நோக்கு இல்லையே! என் தாயைப் பார்க்கும் வாய்ப்பு எனக்கு இல்லையோ! நான் பெரும்பாவம் செய்தவனாகி விட்டேனே! கடலைக் கடைந்தபோது தோன்றிய விஷத்தை வாங்கியுண்ட மயக்கத்தாலும் அந்த மயக்க உறக்கத்தாலும் என் மீது பராமுகம் ஏற்பட்டு விட்டதோ! உமையம்மையின் காவல் ஆதிக்கமோ!

யானைமுகனும் கந்தனுமாகிய மக்களுடன் கொஞ்சிடும் இன்பமோ ! எதுவாயினும் என்மீது கருணை காட்டி முத்தியளித்திடுவீர்! இவ்வாறெல்லாம் உள்ளத்தில் நினைத்து நினைத்து அதனால் மகிழ்ச்சியடைந்தான். நின்றவாறே, தன் நிலைக்கு வருந்திய சார்ங்கதரன் அறிவு மயங்கினான். காட்டில், மலையடிவாரத்தில் வெட்டுண்ட கால், கைகளிலிருந்து இரத்தம் வழிய இவ்வாறு வருந்திக் கிடந்தான்.

பொந்தி - உடல், நீத்தல் - விடுதல். நிஷ்டூரம் - கொடுமை. பாசம் - அன்பு. பதி - நகரம். ஏகல் - செல்லுதல். மலங்கி - உருண்டு. தாணு - துணைவன், தலைவன். சிற்பரன் - சிவபெருமான். மூர்த்தி - தலைவன். முறை - முறையீடு. சத்தி - வலிமை. பராமுகம் - அலட்சியம், கவனிப்பு இன்மை. வாரி - கடல். முத்திரை - காவல். இபம் - யானை. கான் - காடு. வ்ரை - மலை. குருதி - இரத்தம். சோனை - விடாமழை. சொரிதல் - கொட்டுதல். சோகம் - வருத்தம்.

சுவடிச்சொல் - 1. பொருந்திட 2. அன்னைனான் 3. கன்றீர் 4. மாத்தினளோ 5. குத்திடும் வயத்தெரிவெல்லாம் 6. தன் கண்ணீர் பாத்து 7. பெத்து வளத்தகய்யால் 8. ஒட்டமா ஒடிவந் 9. தானுவே 10. மங்கையோர்11. சிற்ப்பற 12. நனச 13. நேறிடை 14. யோயிவமுகன் 15. நெஞ்சிநில் 16. நின்டும்.

வசனம் - சோகஞ் செய்து பின்னையு மேதென்று துயரப்படுவான். (84)

139. Mutilation of hands and legs
Does not brother me in the least
As prepared I am
To kill myself.
My concern centres round mother
Who may be grieving the gruesome act.
Perhaps she is already dead,
Sensing my painful plight.
Has she reconciled herself to the inevitable
Or too shocked to shed even tears?
Who knows, she has perhaps consoled herself
That this is an illusion
Born out of mutual love.
Has she forgiven Cittirāṅki
The author of the cruel deed?
Has she become the victim
Of my father's displeasure and wrath?

Alas, I am totally in the dark.
Would she come to see my woeful state
And throw me in the wild abyss below
With the same hands that fondled me?
Will not the wild beasts of the forest, tiger and bear
Feast on my corporeal remains?
I wish some huge rock
Rolls on me and kills me.
Caṅkara, the refuge of the gods,
The divine leader, great giver
Are you listening to my appeal?
Are they not potent enough to move you?
Won't I see my dear mother again?
Whither is gone thy abundant grace,
Indeed, I have become great sinner.
Lord, are you indifferent and cold
Because of the drowsiness
Caused by the poison you consumed?
Or is it the protective tyranny of the spouse?
Perhaps it is due to the preoccupation
Of fondling children, the elephant-faced
And divine Kanta, the pleasure thereof!
Whatever be the cause of apathy
Show mercy and deliver me.
So ran the thoughts of Cāraṅkataraṉ
Speculation lending him joy and peace.
Standing verily a stump
Indulging in self pity
He lost consciousness
And lay bleeding from wounds
At the foot of the mountain.

Prose: What more did he say?

140. *(செய்யத்தகாத பாவங்களை எண்ணுதல்)* அட்டதாளம்

வாயிடும்ப நல்லாரை மனங்குன்ற
வசனித் தேனோ - [1]எனைப்பெற்ற
தாயுரைத் திடுமுரை தனக்கெதிர் [2]சாற்றினேனோ
வழக்கில்லாத வழக்கை யுண்டென
வகைசொன் னேனோ - பிற அறம்
அழித்து வரும்பர [3]தேசிகளைநான் அடித்திட்டேனோ
தெய்வ [3]எசந்நிதிக் கேகி யொருகையில்
சேவித் தேனோ - கொடுப்பது
பொய்வனசஞ் சொல்லிவந்த பேர்க்கில்லை
போவென்றேனோ
[4]சலுகை யால்சம மேற[5]விற்றதைத்
தாழ்த்தி னேனோ - உயர்பொருள்
[6]சுலப விலைசொல்லி வாங்கியவர்களைத் துரத்தினேனோ
வேதியர் கள்செப தபங்கள் பொய்யென
விளம்பி னேனோ - சங்கம
நீதி தன்னைஅந் நிதங்[7]காணென்று நிகழ்த்தினேனோ
கோத்தி ரங்குல பேதமேதெனக்
கூறி னேனோ - கல்விசொல்
வாத்தியார்க் கெதிரதாய் நின்று வசனித்தேனோ!

இனிய வார்த்தைகளைப் பேசும் சான்றோர் மனம் வருந்துமாறு பேசி விட்டேனோ! என்னுடைய தாயின் சொல்லை எதிர்த்துப் பேசிவிட்டேனோ! நடைபெறாத ஒன்றை நடந்ததாகச் சொல்லி அதற்கு நீதி கூறி விட்டேனோ! சிறந்த அறச்செயல்களாகிய ஒழுக்க நெறிகளுக்குக் கேடு விளைவித்த பிற நாட்டவர்களை அடித்துத் துன்புறுத்தி விட்டேனோ! கோயில்களில் சென்று இறைவனை ஒரு கையால் வணங்கினேனோ! தருமம் செய்யும்போது பொய்யான வார்த்தைகளைப் பேசி வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லித் துரத்தி னேனோ! பெருமைக்காக விலையை ஏற்றி விற்றபோது அதைத் தடுத்து விலையைக் குறைத்து விட்டேனோ! உயர்ந்த பொருள்களை வாங்கும்போது ஏமாற்றி குறைந்தவிலை கொடுத்து வாங்கியவர்களைத் துரத்தச் செய்தேனோ! அந்தணர்கள் செய்யும் மந்திரங்களையும் வேண்டுதல்களையும் உடைய செபதபங்கள் அனைத்தையும் வெறுத்துப்பேசினேனோ! உயிர்ப்பொருள்கள்,

திருக்கூட்டத்தார் ஆகியோர் பற்றிய உயர்ந்த கருத்துக்கள் நிலையற்றவை என்று நடந்து கொண்டேனோ! குலம், கோத்திரம் முதலான மரபுகள் எல்லாம் தேவையில்லாதவை என்று மறுத்துப் பேசி விட்டேனோ! கற்பித்த ஆசிரியரின் கருத்தை மறுத்துப் பேசினேனோ! என்ன குற்றம் செய்தேன்!

இடும்பம் - இடம்பம் - பெருமை. குன்றுதல் - கெடுதல். வசனித்தல் - பேசுதல். சாற்றுதல் - கூறுதல். வழக்கு - உலக வழக்கு. வகை - உபாயம். பரதேசி - பிறநாட்டவர். சந்நிதி - கோயில் மூலஸ்தானம். சேவித்தல் - வணங்குதல். சலுகை - சலிகை - பெருமை. சமம்ஏற - நியாயத்திற்கு அதிகமாக. செபம் - மந்திரம் உச்சரித்து வேண்டுதல். தபம் - தபசு. சங்கமம் - இயங்குதிணைப் பொருள், திருக்கூட்டத்தார். அந்நிதம் - நிலையற்றவை. பேதம் - வேறுபாடு.

சுவடிச்சொல் - 1. எனைப்பெத்த 2. சாத்தினேனோ 3. தேசிகளனான் (3எ). சன்னிதி 4. சலிகை 5. வித்ததை 6. சுலுப 7. கானென்று.

140. Did I at any time hurt good men
Given to sweet words?
Did I ever contradict my revered mother?
Am I guilty of meting out justice
On a built-up fabricated act?
Did I torture any alien
Who blew off our moral codes?
Perhaps I committed the breach
Of worshipping God in temple with single hand.
Did I ever refuse alms to liars
And chase them out of town?
Did I reduce the price of traders
Inflated to satisfy the ego's itch?
Was I ever guilty of blasphemous speech
Against brahmins and their holy rites?
Did I ever venture to say
That family pride and traditions hoary
Are empty, useless pomp?
Did I dare to contradict my mentors
Bent on improving my mind?
What heinous sin
Did I commit?

141. *(ஆகாயவாணியின் தோற்றம்)* **சம்பை**

என்றுவகை வகையாக இவன்சொல்லி யழும்போது
மண்ணிலுய ராகாச வாணியங்கே வந்து
அழுகையேன் விழுகையேன் அங்கலாய்ப் பேன்பலசொல்
மொழிகளேன் உனக்குப்பெரு மூச்சுவிட லேன்தான்
முற்பிறப்பில் செய்தவினை [1]முடிந்ததென மன்னவனும்
அப்பிறப்பிற் செய்தவினை அறியச்சொல்லு மென்றான்.

சாரங்கதரன் தன் குறைகளைச் சொல்லி அழுதான். இந்த நிலவுலகத்திற்கு மேலே ஆகாயத்தில் உருவமில்லாத ஒரு தேவதையின் குரல் மட்டும் கேட்டது. மன்னவா! ஏன் அழுகிறாய்! ஏன் சோர்ந்து விழுகிறாய்? ஏன் வருந்தி அங்கலாய்த்துக் கொள்ளுகிறாய்! வீணாக ஏன் பலவாறு நொந்து பேசுகிறாய்! ஏன் பெருமூச்சு விட்டு வருந்துகிறாய்! நீ முன் பிறவியில் செய்த தீவினைகளே இப்பிறவியில் வந்து சேர்ந்தன என்று கூறியது அக்குரல். முன் பிறவியில் நான் என்ன தீவினை செய்தேன்! அதைச்சொல் என்று சாரங்கதரன் வேண்டினான்.

ஆகாசவாணி - அசரீரி வாக்கு. அங்கலாய்ப்பு - துக்கித்துப் பேசுதல். முடிந்தது - இப்பிறவியில் நிகழ்ந்தது.

சுவடிச்சொல் - 1. முடிந்துதென.

141. When Cāraṅkataraṉ thus lamented his unending woes,
There was heard a voice from the sky,
A divine voice indeed!
King, why are you shedding tears,
Why look so dejected and crest-fallen
Why utter words of despair and disgust?
The deeds done by you in the past
Are reverberating now.
What sin did I commit in earlier birth
Enlighten me, pleaded the prince
To the mysterious voice from above

142. (ஆகாயவாணி முற்பிறவி கூறுதல்) திபதை

அறியச்சொல் லென்னவே ஆகாச வாணி
இறையவ னறிந்திட யியம்புவா ளுலகில்
கோசமா [1]புரமென்னக் கூறுமந் நகரில்
வாசமாந் தந்தனன் மன்னவன் தனது
பத்தினி புவனமா பதியவள் தாதி
கத்திரி கலகஞ்செய் காசினி யென்பாள்
மந்திரி சுமுகனாம் [2]மற்றொரு மந்திரி
தந்திரி நீதிமான் தானிரு வரிலே
சுமுகன்மேல் நேசந் துரைக்குவந் தவனைச்
[3]சமுகத்த னேகனே நானிலந்தா னறியாமல்
வந்ததை நீதிமான் மனத்திலே வைத்து
சந்தத மரசன்கொ லுச் சாவடியில் வந்தான்
[4]அந்நேரந் தூதுவரை அழைத்துநகர் காவலரை
[5]இந்நேர மேவர யிங்கழையு மென்றான்.

சாரங்கதரன் கேட்டறியும் படியாக அசரீரி சொல்லுகிறது. கோசமாபுரம் என்பது ஒரு நகரம். அரசன் ஒருவன் ஆட்சி புரிந்து வந்தான். அவன் தேவி புவனமாபதி என்பவள். அரசமாதேவியின் தோழி காசினி என்பவள். அவள் பாம்பைப் போன்ற கொடியவள். கலகம் செய்வதில் வல்லவள். அரசனிடம் சுமுகன், நீதிமான் என்னும் அமைச்சர்கள் இருவர் இருந்தனர். நீதிமான் சிறந்த அரச தந்திரம் தெரிந்தவன். அரசன் சுமுகனை மிகவும் நம்பி நேசித்தான். அதனால் அமைச்சர் முதலான அவையோர்களில் உயர்ந்த ஒருவனாக தன்னிடத்திலே வைத்துக்கொண்டான். உலகத்தார் ஒரு பொருட்டாக அறியாத இச்செய்தியை நீதிமான் மட்டும் மனத்திலே வைத்துக் கொண்டான். ஒருநாள் அரசன் வழக்கம்போலக் கொலு மண்டபத்துக்கு வந்தான். உடனே தூதுவனை அழைத்து நகர்க் காவலர்களைக் கூட்டி வருமாறு கட்டளையிட்டான்.

வாசம் - வசித்தல். கத்திரி - பாம்பு. நேசம் - அன்பு. துரை - அரசன். சமுகத்தன் முன்னிலை. ஏகன் - ஒப்பற்றவன், ஒருவன். சந்ததம் - எப்பொழுதும்; வழக்கம்போல.

சுவடிச்சொல் - 1. புரநகரமென்னக் கூறு மன்னகரில் 2. மத்தொரு 3. சமூகத்தெனனானிலத்தா 4. அன்னேரந் 5. இன்னேரமே

142. The eerie voice made reply
Which Cāraṅkataraṉ heard distinctly,
There was a town called Kōcamāpuram
Ruled by a monarch
Whose Queen was Puvanamāpati.
The Queen had a maid, Kācini,
As vile as any viper
Who was good at intrigues.
The King had two ministers
Cumukaṉ and Nītimāṉ.
While Nītimāṉ was good at diplomacy
The King's confidant was Cumukaṉ
Whose stock in the court was high
None knew much about the intimacy
Between King and Cumukaṉ
Except Nītimāṉ who watched it keenly
One day while the king held court,
He summoned the vigilance staff of the city

143. *(முன்வினைப்பயன் இப்பிறவியில் முடிந்தது)* **திபதை**

[1]கொற்றவன் சொற்படி கொடியதூர துவர்கள்
[2]உற்றனர் காப்பவர் ஓதின [3]ரோத
வந்தன ரவர்களை மன்னவன் [4]பார்த்து
இந்தநற் பாக்குற டேதெனக் கேழ்க்க
நின்னிட சமூகந்தான் நீங்கிடா சுமுகன்
தன்னிட பாவடி தானிது வென்ன
தவளன்கா லாக்கினி தானெனச் சீறி
இவன்தனக் காக்கினைக் கேதென மறையோர்
தங்களைக் கேழ்க்கவே [5]சாற்றுவார் பாதி
கங்குல்வே [6]ளையிலொரு காட்டினில் மலைக்கீழ்
கொண்டவன் கால்கரங் குறைத்திடு ரென்ன
மண்டலீகன் தூதுவர் களுக்குத் தன்கை

யாழித்ந் தனுப்பவே யவர்சுமு [7]கனையந்
நாழிகை வனத்தில் நவின்றசொற் படியே
கைகள்கால் [8]துணித்திடக் கதறியே சுமுகன்
பொய்களால் நிந்தைமேல் போட்டவ ரெல்லாம்
மறுபிறப் பினிலிந்த [9]வாதனை யெல்லாம்
உறுவது யீசுவரா உன்னரு ளாலே
என்றவன் சாபமிட் டேதர ணியிலே
ஒன்றியே செனித்தனர் நகைமுக சுமுகன்
நலம்புனை ராச நரேந்திர னானான்
மலைந்திடு நீதிமான் [10]மன்னாநீ யாகும்
பாசிலை புவனமா பதியும்ரத்தி னாங்கி
காசினி யேபழி காரிசித்தி ராங்கி
[11]பாவடியு மேபுறாப் பட்சியு மாகத்
தீவினை [12]முடிந்ததிச் சென்மத்தி லுன்மேல்
பாவமு மில்லைகொடும் பழிகளு மில்லை
நீவித னப்படல் நிறுத்துமிக் கணத்தில்
இஷ்டமா கியசித்தர் இங்குவந் துனக்கு
திஷ்டமாய் மந்திரஞ் செப்புவார் கைகால்
[13]வளர்ந்திடுங் கயிலையீஸ் வரனரு ளாலே
உளங்களி கூர்சுகத் [14]துடனிருப் பீரென்
றிந்தவா றிவ்வகை யீதெனக் கூறி
யந்தர வாணி யவள்மறைந் தனளே.

அரசனின் ஆணைப்படியே தூதுவர்கள் சென்று நகர்க்காவலரிடம் கூறினர். காவலரும் வந்தனர். காவலரை நோக்கி இந்தப் பாதக்குறடு இங்கு எப்படி வந்தது? இது யாருடையது என்றான். இது தங்களை விட்டுப் பிரியாமலிருக்கின்ற அமைச்சர் சுமுகனுடைய அங்கவடியாகும் என்றார்கள். வெண்கொற்றக் குடையையுடைய மன்னவன் ஊழிக்காலத்து ஏற்படும் தீயைப்போலப் பொங்கியெழுந்தான். அருகிலிருந்த அந்தணரை நோக்கினான். இவனுக்கு என்ன தண்டனையளிப்பது என்றான். உடனே அந்தணர், நடு இரவில் இவனை ஒரு காட்டிற்கு அழைத்துச் சென்று மலையடிவாரத்தில் இவனுடைய கையையும் காலையும் வெட்டிவிடுதல் வேண்டும் என்றனர். உடனே அரசன் தூதுவர்களிடம் அரசு முத்திரை பதித்த மோதிரத்தைக் கொடுத்து தண்டனையை நிறைவேற்றச்

சொன்னான். தூதுவர்களும் உடனே சுமுகனை அழைத்துச் சென்று அரசன் கட்டளைப்படி காட்டில் கை, கால்களை வெட்டினார்கள். சுமுகன் கதறினான். ஈசுவரா என்று வணங்கினான். பொய்யாக என்மீது பழியைச் சுமத்தியவர்கள் எல்லாரும் மறுபிறப்பில் நான் படும் இந்தத் துன்பத்தைப் பெறுவார்கள் என்று சாபமிட்டான். அவனிட்ட சாபத்தின்படியே இப்பிறவியில், சிரித்த முகத்தோடு கூடிய சுமுகனே எல்லா நலனும் பெற்ற இராச நரேந்திரனாகப் பிறந்தான். மயக்க புத்தியுடைய நீதிமான் என்னும் அமைச்சனே நீயாவாய்! பசுமையான தளிர்போன்றவளாகிய தேவி புவனமாபதியே உன் அன்னை இரத்தினாங்கியாகப் பிறந்தாள். தோழி காசினி என்பவளே உன் சிற்றன்னை சித்திராங்கியாகப் பிறந்தாள். அரசவையிலிருந்த பாதக்குறடே புறாவாகப் பிறந்தது. இத்தகு முன்வினைப் பயன்களே இந்தத் தீய செயல்களாகி முடிந்தன. இந்தப் பிறவியில் உன்மேல் ஒரு பாவமும் இல்லை; பழிகளும் இல்லை. நீ வருத்தப்பட வேண்டாம். உன் மீது மிகவும் அன்புடைய சித்தர் ஒருவர் இங்கே வருவார். நேரில் உனக்குச் சில மந்திரங்களை ஓதுவார். உன் கை, கால்கள் முன்போலவே வளர்ந்து விடும். கயிலையில் எழுந்தருளியுள்ள இறைவன் உனக்கு அருள்புரிவான். உனக்கு மகிழ்ச்சியும் சுகமும் ஏற்படும் என்றெல்லாம் கூறிவிட்டு ஆகாசவாணி மறைந்தாள்.

உறுதல் - அடைதல். காப்பவர் - காவலர். பாக்குறடு - பாதக்குறடு. சமூகம் - முன்னிலை. பாவடி - அங்கவடி. தவளன் - வெண்கொற்றக்குடையையுடையவன். காலாக்கினி - ஊழித்தீ. சிறுதல் - பொங்கி எழுதல். கங்குல் - இருள். மண்டலீகன் - பரந்த நிலத்தை ஆளும் மன்னன். ஆழி - மோதிரம். நவிலுதல் - சொல்லுதல். நிந்தை - பழி. வாதனை - துன்பம். தரணி - பூமி. ஒன்றுதல் - ஒரே இடத்தில் - ஒருசேர. செனித்தல் - பிறத்தல். நலம் - நன்மை. புனை - சேர்தல். மலைதல் - மயங்குதல். பாசிலை - பசுமை - இலை. விதனம் - விசனம், வேதனை, துயரம். திஷ்டம் - காணப்படுதல். களி - களிப்பு - மகிழ்ச்சி.

சுவடிச்சொல்- 1. கொத்தவன் 2. உத்தவர் 3. றோத 4. பாத்து 5. சாத்துவார் 6. ளையில்லொரு 7. கனையன்னாழிகை 8. துணிந்திடச் 9. வாதினை 10. மன்னானீ 11. பாவடியுமெபிறா 12. முடிந்துதிச் 13. வளந்திடுங் 14. துடநிறுப்பிரென.

வசனம் - மறைந்த பின்பு சாரங்கதரன் ஏது சொல்வானோவென்று செடி மறைவிலே கேட்டிருந்த தூதுவரெல்லாம் ராச மகேந்திர பட்டணம் போய்ச்சேர யிப்பால் சாரங்கதரன் அழுதிடும் சத்தம் மகேந்திர சித்தர் கேட்டுத் தயவாகி யவ்விடத்திலே எந்தப் பிரகாரமாக வந்தனரோ வென்னில். (85)

143. As instructed by the king
The men brought the vigilance staff

Whom the King questioned searchingly,
Whose sandals are these
And the stirrups?
Pat came the reply
They belong to your boon companion
Your alter-ego Cumukaṉ.
On hearing this, the king
Flew into a paroxysm of rage
Resembling the conflagration
At the time of Armageddon.
He consulted the learned brahmins
What punishment shall I mete out
To my erstwhile friend?
He should be taken at dead of night
To a dense forest
And there below the mountain range
His hand and legs should be cut off!
Forthwith the king gave the royal insignia,
The ring of authority
Bade the messengers
Carry out the extreme punishment.
As ordered by the king
The men chopped off Cumukaṉ's limbs
Who let out a cry of anguish
And prayed to Lord Civa.
He cursed that my tormentors
Shall suffer the same sorrow and pain
In their future birth.
Now the curse has taken effect
And Cumukaṉ is none other than
The happy-go-merry Rājanarēntiraṉ.
Perhaps it may be shocking to hear
That you were the obnoxious Nītimāṉ
Notorious for his whimsicality.

The Creeper-like woman Puvanamāpati
Is reborn as Rattiṉāṅki, your mother,
Kācini as Cittirāṅki
The intriguing slippers that lay in court
Has assumed the form of doves.
Know that misdeeds done in the past
Are boomeranging now.
In this birth, you are not guilty
Of despicable acts or sins
Therefore, worry not,
A learned Cittar
With great affection for you
Shall soon arrive on the scene
And chant such potent incantantations
That your mutilated limbs shall gain original form
And great happiness will be yours
So saying,
The Heavenly voice quit.

Prose: The messengers stood behind the dense vegetation to study Cāraṅkataraṉ's reaction and then went to Rājamakēntirapuram. When they left, Makēntira Cittar appeared on the scene, drawn by the lament of Cāraṅkataraṉ.

144. *(சித்தரின் தோற்றம்)* **திரிபுடை**

மேலணிந்த விபூதி குங்கும வேட்டி
கையிற் கமண்டலந் தெண்டு
கோலும் உதரபந் தனமும் தரித்து
இந்தக் கோல மாக
மார்பிலே ருத்திராட்ச மாலையும் வண்ணமும்
புலித்தோ லுரித்து உயர
சீர்பிறங்கும் பிரகாசி னாலிரு திசையும்
மின்ன வந்து தோன்றினார் சித்தர்
சாரங்கன் வாய்திறந் [1]தழஉற்றுப்

பார்த்தவர் இந்த அடவியி
லார்பிள்ளாய் உனக் கேதிது துயரம்?

மகேந்திரசித்தர் என்பவர் சாரங்கதரன் முன்தோன்றினார். அவர் இடுப்பில் வேட்டி கட்டி, உடல் முழுவதும் திருநீறணிந்து குங்குமப் பொட்டும் இட்டிருந்தார். கையில் தண்டும் கமண்டலமும் தாங்கி இடுப்பில் அரைப்பட்டிகை தரித்திருந்தார். மார்பிலே உருத்திராட்ச மாலை அழகுடன் விளங்கியது. புலித்தோலை உடையவராய், ஆகாயமெங்கும் ஒளிமயமாக மின்னும்படியாகத் தோன்றினார் சித்தர். சாரங்கதரன் வாய்விட்டுக்கதறி அழுவதைக் கவனித்துப் பார்த்து, பிள்ளாய்! நீ யார்? இந்தக் காட்டில் நீ வந்த காரணம் என்ன? என்ன துன்பம் ஏற்பட்டது என்று கேட்டார்.

விபூதி - திருநீறு. கமண்டலம் - தவசியர் நீர்கொண்டு செல்லுங் கரகம். தெண்டு - தண்டு. கோல். உதரபந்தனம் - அரைப்பட்டிகை, இடுப்பில் அணியும் பட்டி. வண்ணம் - சாந்து, அழகு. பிறங்குதல் - ஒளியுடன் விளங்குதல் பிரகாசம் - ஒளி. அடவி - காடு.

சுவடிச்சொல் - 1. தழ உத்துப் பாத்தவர்யிந்த

144. Lo! Makēntira Cittar stood
Before sorrowing Cāraṅkataraṉ
Wearing a *dhoti* round his waist
His body smeared with sacred ash;
The *kumkum* dot on his forehead conspicuous.
Clad in tiger's skin,
He held in his hand holy pot and rod
His eerie effulgence
Reflected to the very skies.
On seeing Cāraṅkataraṉ crying,
He queried kindly, child, who are you,
Why have you come to the forest,
What ails you?

145. *(சித்தர் சாரங்கதரனை வினவுதல்)* சம்பை

ஊரேது சேர்ந்தகிளை உறவேது நின்னுடைய
பேரேது கீர்த்திபுகழ் பெருமைவள மேது

துரைமகனைப் போல்வடிவம் தோன்றுதே [1]நினதுகால்
கரமுமரி படவந்த காரிய மென்ன?
வடிவுந் துரிதவசன வல்லமையும் பாராமல்
பிடிவாத மாய்ப்பிடித்துப் பின்னஞ்செய் தவரார்?
துன்பமெய்து [2]வோர்க்கவை துணிந்துநீ செய்தாலும்
[3]முன்பின்எண் ணாமலுன்னை முனையழித் தவரார்?
தன்னிலே தானழுது தரைமீது புரண்டிடவும்
[4]உன்னையிப் படிகானி லூனஞ்செய் தவரார்?
[5]அபயமநி யாயமென் றவர்க்காக் கினைசெய்ய
நிபஞ்சொன்ன பேர்களார் [6]நீதெரியச் சொல்வாய்.

உன்னுடைய ஊர் எது? உற்றார் உறவினர் யார்? உன் பெயர் என்ன? உன்னுடைய குடும்பத்தின் பேரும் புகழும் பெருமைகளும் யாவை? நீயோ அரச குமாரனைப் போலக் காணப்படுகிறாய்! உன்னுடைய கை, கால்கள் ஏன் வெட்டப்பட்டன? உன் அழகிய உருவத்தையும் விரைவான பேச்சையும் திறமையையும் சிறிதுஞ் சிந்திக்காமல் கட்டாயப்படுத்தி இப்படி வெட்டியவர் யார்? ஒருவேளை பிறருக்கு நீ பெருந்துன்பம் செய்திருந்தாலும் உன்னைப் பற்றி முன் பின் செய்திகளைச் சிறிதும் யோசிக்காமல் உன் துணிவை அழித்தவர் யார்? நீ இப்படித் தனிமையிலே கிடந்து அழுகிறாய்! தரையில் புரண்டு அழுகிறாய்! இந்தக் காட்டில் கொண்டுவந்து வெட்டியவர்கள் யார்? கொடிய செயல்களைச் செய்தாயென்று ஓலமிட்டுக் கோள்சொல்லி உனக்குத் தண்டனை கொடுக்கச் செய்தவர்கள் யார்? எனக்குச் சொல் என்றார்.

கிளை - சுற்றம். வளம் - செழுமை. துரை - அரசன். கரம் - கை. அரிபட - வெட்டுப்பட. வடிவு - உருவம். துரிதவசனம் - பேச்சுத்திறன். முனை - துணிவு, பகை. தன்னிலே - தனிமையாக. கான் - காடு. ஊனம் - உறுப்புக் குறை. அபயம் - முறையீடு. நிபம் - கோள்.

சுவடிச்சொல்- 1. னினதுகால் 2. வோர்கவை 3. முன்பின் னென்றாம லுன்னை 4. யுன்னை 5. அபயமணியாயமென. 6. நித்தெரியச்.

145. Tell me from where you hail
Who are your kinsmen?
Let me know your name
And details of lineage
You have the looks of a prince,

How come your limbs are cut?
Who mutilated you mercilessly
Overlooking your gift of sweet talk
And other sterling merits?
Even if you are guilty of misdemeanour,
Who perpetrated this thoughtless act?
Crying alone in agony,
You are rolling on earth in pain
Who brought you to the forest
And cut off your limbs?
Who spoke of your wicked deeds
Or carried concocted tales
That resulted in the tragic loss of limbs?
Speak, dear one
Let me hear your tale of woe.

146. *(சாரங்கதரன் தன் வரலாறு கூறுதல்)* திபதை

சித்தரா னவர்வந்து தெரியச்சொல் லெனவே
புத்திமான் சாரங்க பூபதி யவரைப்
[1]பார்த்துளங் குளிர்ந்துநற் [2]பரிவினாற் பணிந்து
தோத்திரஞ் செய்துதன் துயர்களைச் சொல்வான்
மறுவிலா ராச மகேந்திர புரத்துக்
கிறையவன் ராச நரேந்திரஞ்ய் யாரன்
தனக்குநெடுங் காலஞ் சந்ததி யின்றி
மனக்கிலே சத்துடன் வனந்தனி லேகித்
தவஞ்செய சங்கரன் தானருள் புரிய
அவன்திரு [3]மனைவி ரத்தினாங்கிதன் [4]வயிற்றில்
வந்தவ தரித்தபின் வரிசையா யுலகோர்
தந்தன வேசொல்லச் சாரங்க தரனா
ரெனப்பெய ரிட்டன ரெந்தனுக் கழகாய்
எனைப்பெறு மந்தரத்தி னாங்கியல் லாமல்
என்னிட் தந்தை ராச நரேந்திர

மன்னவனுக் கங்கே [5]மற்றொரு மனையாள்
அன்னவள் பேர்சித்தி ராங்கியென் பார்கள்
[6]கன்னியுந் தமதுசக் களத்தியார் [7]பெற்ற
பிள்ளையென் றெந்தன்மேல் [8]பெரும்பகை வைத்துக்
கொள்ளி படச்சுடுங் கொள்கைபோல் பொல்லா
நிந்தை விசேடங்கள் நிருபனுக் குரைக்கச்
செந்தழ லெனயெரி சிந்தையா யென்னைக்
கானகந் தன்னிலே கரங்கள்கால் துணிக்கவும்
ஊனமாய்க் கிடந்தழு துழல்கின்றே னையா

(சித்தர் ஆறுதல் மொழி)

கரங்களும் போச்சிரு கால்களும் போச்சு
இருந்தென்ன பாக்கிய மெய்துவ [9]தினிநான்
மன்னர் மன்னவர்கள் மனுக்கள் மந்திரிகள்
பின்னையு மனேகம் பேரெல்லா முலகில்
[10]மாண்டன ரென்னும் வசனமே யல்லால்
ஈண்டிருந் தாரென் றியம்பிய துண்டோ
எத்தனை நாள்சுகித் திங்கிருந் தாலுஞ்
சத்திய வார்த்தைகாண் சாகுதல் தப்பாது
சீரடி யான்துயர் தீரவே [11]தென்றால்
ஓரடி யாயுன் னுபயபா தத்தில்
சேர்த்திடு ரென்னுட சீவனை யென்ன
பார்த்தனர் மகேந்திர பருவருள் பார்வை
வைத்துமன் னவனே வருந்திட வேண்டாம்
உத்தம னேநின் உளத்துய ரெல்லாம்
நீக்குவோங் கரங்கள்கால் நிமித்தி லேயுண்
டாக்குவோம் பாரென் [12]றவன்தனைத் தழுவி

(கை, கால்களை வளரச் செய்தல்)

எடுத்தனர் [13]கைதனி லேந்திநற் குகையில்
அடுத்தனர் கரகநீ ராட்டின ரங்கே
இருக்கவைத் [14]தவனுட இருசெவி தன்னிலுந்

[15]திருத்தமாய் மந்திரஞ் செப்பினர் செப்பி
உச்சரி யெனக்கு உரைப்படி யென்ன
அச்சிவ னருளினா லவன்மன மகிழ
உடம்புபூ ரித்திட உபயமாம் புயத்தி
னிடங்கள்பூ ரித்திட யிருகண் களிக்க
களிப்பெனு [16]மிலக்குமிகக் கருணைசெய் தோங்க
வெளித்தவன் வெளிப்பட [17]வுற்றது போலக்
கரங்களுங் கால்களுங் [18]கண்ணிமைப் பொழுதில்
வரந்தரு மகேந்திர மகிமையால் வளர
வானவர் மலர்மழை வாழ்த்தியே பொழிய
ஆனமா தவத்தோ ரவர்களும் வாழ்த்த
எழுந்தனன் மகேந்திர ரிணையடி யதன்மேல்
விழுந்தனன் வித்தகர் விமலனே நின்னால்
உளத்துயர் போக்கினே னொழிந்திடுங் கைகால்
[19]வளர்ந்ததென் றானந்த வாரியெய் தினனே.

சித்தர் கேட்டதை அறிந்த சாரங்கதரன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அன்போடு அவரை வணங்கிப் பாராட்டினான். தன் வரலாறு கூறுகிறான். ஐயா! இராச மகேந்திரபுரம் என்பது எங்கள் நகரம். அதன் அரசன் இராசநரேந்திரன். அந்த அரசனுக்கு நீண்ட நாளாகக் குழந்தை பிறக்கவில்லை. எனவே வருத்தமடைந்து காட்டிற்குச் சென்று தவம் செய்தான். இறைவன் அருளால் இராசமாதேவி இரத்தினாங்கி என்பவருக்கு மகனாய்ப் பிறந்தேன். எனக்குச் சாரங்கதரன் என்று பெயரிட்டு வழங்கி வந்தார்கள். என் தந்தை இராச நரேந்திரனுக்குச் சித்திராங்கி என்னும் ஒரு மனைவியும் இருந்தார்கள். தன் சக்களத்தி பிள்ளையாகிய என் மீது ஏனோ பெரும் பகைமை கொண்டுவிட்டார்கள். கொள்ளிக்கட்டையானது மேலே பட்டாலே சுட்டுவிடும். அதுபோல அரசனிடம் என்னைப் பற்றிக் கொள்ளி வைத்தார்கள். பழியைச் சுமத்தினார்கள். அரசன் உள்ளத்திலே எரி மூண்டது. காட்டில் கொண்டு போய்க் கை, கால்களை வெட்டுமாறு ஆணையிட்டான். நானும் இப்படி கை, கால் இழந்து வருந்துகிறேன் என்று கூறி முடித்தான்.

மன்னவா! இரண்டு கைகளும் கால்களும் வெட்டப்பட்டுவிட்டன; இனி உயிர் வாழ்ந்து என்ன பயன் என்று வருந்தாதே! மக்களாயினும் மந்திரிகளாயினும் மன்னாதி மன்னர்களாயினும் வேறு யாராயினும் இந்த நிலவுலகில் பிறந்தவர்கள் இறந்து போனார்கள் என்று சொல்லுவதைத் தவிர, நிலையாக இங்கே

வாழ்கிறார்கள் என்று கூற முடியுமா? எவ்வளவு காலம் இந்தப் பூமியில் மகிழ்ச்சியாக வாழ்ந்தாலும் இறுதியில் ஒருநாள் சாவது என்பது உறுதி.

பெருமை பொருந்திய அடியவர்கள் தங்கள் பிறவித் துன்பம் நீங்க ஒரே வழி உண்டு. ஒப்பற்ற திருவடிகளை உடைய இறைவனே! என்னுடைய உயிரைத் தங்கள் திருவடிகளிலே சேர்த்துக்கொள் என்று வேண்டினால் போதும். மகேந்திரனாகிய இறைவன் தன்னுடைய பெருமை மிக்க, அருட்பார்வையை நம்மீது செலுத்துவான். அந்த அருட்பார்வையைத் துணையாகக் கொண்டு உத்தமனாகிய உன்னுடைய துன்பத்தை நீக்குகிறோம்! ஒரே நிமிஷத்தில் உன்னுடைய கை, கால்களை வளரச் செய்கிறோம் என்று கூறிச் சாரங்கதரனைத் தழுவிக்கொண்டார் சித்தர்.

சாரங்கதரனைத் தம் கைகளில் ஏந்தியவாறு ஒரு குகைக்குள் எடுத்துச் சென்றார். அங்கே தன்னுடைய கமண்டலத்திலிருந்த தண்ணீரால் நீராட்டினார். உட்கார வைத்து இரண்டு காதுகளிலும் மந்திரங்களைத் தெளிவாகக் கூறினார். நீயும் சொல் என்று கூறிய சித்தரின் கட்டளைப்படி அவனும் மந்திரத்தை உச்சரித்தான். சிவன் அருள் பிறந்தது. கண் இமைக்கும் நேரத்தில் அவனுடைய இரண்டு கைகளும் கால்களும் வளர்ந்தன. சாரங்கதரனின் மனம் மகிழ்ந்தது. உடம்பும், இரண்டு புயங்களும் பூரித்தன. கண்கள் களித்தன. மகிழ்ச்சியின் மிகுதியால் கருணை பொங்கியது; பொதுவாக மகேந்திர சித்தரது பெருமையால் சாரங்கதரன் மறுபிறவி எடுத்தவனைப் போலத் தெளிவடைந்தான். தேவர்கள் மலர்மாரி பொழிந்து வாழ்த்தினார்கள். முனிவர்கள் வாழ்த்தினார்கள். சாரங்கதரன் எழுந்து மகேந்திர சித்தரின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். தூய உள்ளம் படைத்த பேரறிஞரே! தங்களுடைய அருளால் என் மனத்துன்பம் நீங்கியது; கை, கால்கள் வளர்ந்தன என்று கூறி மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினான்.

பூபதி - மன்னன். பரிவு - அன்பு. மறு - குற்றம். இறையவன் - அரசன். கிலேசம் - துன்பம். வனம் - காடு. சக்களத்தி - சகளத்தி - ஒரே ஆடவனை மணந்த இருவர் உறவுமுறை. கொள்ளி - நெருப்புள்ள விறகு. நிந்தை - பழி. நிருபன் - மன்னவன். தழல் - தீ. எரிசிந்தை - பற்றி எரிவது போன்ற உள்ளம். பாக்கியம் - செல்வம், சுகம். மனுக்கள் - மக்கள். இயம்புதல் - கூறுதல், உபயபாதம் - இரண்டாகிய திருவடிகள். சீவன் - உயிர். பருவருள் - பெருமைக்குரிய கருணை. உத்தமன் - நற்குணமுடையவன். கரகம் - கமண்டலம்; தவசியர் நீர்கொண்டு செல்லும் பாத்திரம். செப்புதல் - சொல்லுதல் பூரித்தல் - பருத்தல். புயம் - தோள். களிப்பு - மகிழ்ச்சி. இலக்கு - நோக்கம. வெளித்தல் - தெளிதல். வித்தகர் - பேரறிஞர். விமலன் - தூயவன். வாரி - கடல்.

சுவடிச்சொல் 1. பாத்துளங்குளுந்து 2. பறிவினாற் 3. மனவி 4. வயத்தில் 5. மத்தொரு 6. கன்னியுமது 7. பெத்த 8. பரும்பகை 9. தினினான் 10. மாண்டனர்ரென்னும் 11. தெண்டால் 12. றவன்தனை தழுவி 13. கயிதனி 14.

தவனுடனிருசெவி 15. திருத்தமாயி 16. மெலக்கு 17. வுத்தது 18. கன்றிமை 19. வளந்துதென்.

வசனம்: சாரங்கதரன் ஆனந்த சமுத்திரத்திலே மூழ்கித் திரும்பியும் மகேந்திர சித்தர் பாதங்களிலே வணங்கி யேது சொல்வான். (86)

146. Cāraṅkataraṉ felt happy and relieved
To hear the soothing words of the wise man.
After paying him due homage
Began narrating his tale of sorrow
Sir, I hail from Rājamakēntirapuram
Whose king Rājanarēntira
Has no issue to call his own
Till late in life.
Off he went to the dense forest
To do rigorous penance
Thanks to the grace of the Almighty
I was born as son to queen Rattiṉāṅki
And christened Cāraṅkataraṉ.
My father, had another Queen
Called Cittirāṅki who bore
Great hatred and grudge for me,
Carried concocted tales to the King
Poisoning his pure mind
Which resulted in heinous blame
Falling on me undeservedly
And the King thoughtlessly
Ordering the mutilation of my limbs.
My dear king, don't despair
Because you hands and legs have been cut,
Don't get unnerved
And shun living
After all, who does not die,
Be they ordinary men, ministers or kings?
None can hope for permanence on earth.

However ecstatic may be living days
Death is sure and inevitable;
The devout know the way
Out of sorrow.
Pray to the Almighty
With blessed feet,
Surrendering totally your life and all
Pleading for divine grace and mercy,
Sure, the lord shall bless you!
Now with the aid of God's grace
I shall wipe your sorrow and tears;
In a minute or two,
You shall recover your lost limbs.
So saying, the realized one
Embraced Cāraṅkataraṉ.
Carrying the prince in his hands,
Cittar entered a cave deep and dark,
Sprinkled holy water
From his *Kamaṇṭalam* pot
Chanted eerie spells in his ears,
Made him repeat the incantations.
Thanks to Lord Civa's blessings
Cāraṅkataraṉ's lost limbs were restored.
The prince felt great joy
His arms and body swelled
Eyes twinkled with brightness
Kindness sprouted in the heart
Now his mind and thoughts were clear
Thanks to the wise man's timely help,
Yes, it was verily a rebirth!
The Gods showered flowers,
Sages offered their blessings
Cāraṅkataraṉ prostrated
At the wise man's feet

Hailing him heartily
For healing his wounds
Restoring the mutilated limbs

Prose: What did Cāraṅkataraṉ, at the height of his ecstasy, tell Makēntira Cittar?

147. *(மகேந்திர சித்தரை வணங்குதல்)* **திரிபுடை**

வந்த [1]பாவ மெல்லாந் துலைந்ததுன்
மகிமை யால்[2]கடைத் தேறி னேனொரு
சிந்தை[3]யெண்ணமும் மில்லை யெனக்கொரு
தேவ தேவா!
மெய்தளர்ந் தடியேன் புலம்பிய
வேளை தனிலணைத் தெடுத்து வந்தருள்
செய்த வேள்குலத் தெய்வ மேயருள்வ
தேவ தேவா!
பாடி னானெழுந் தாடி னான்சித்தர்
பாத பங்கய மிரண்டுந் தலைமேல்
சூடி னான்சந்திர சூரிய [4]ரென்னத்
துலங்கி யவனும்.

தன் குறைகளெல்லாம் நீங்கப்பெற்றுச் சூரிய, சந்திரர்களைப்போல் ஒளியோடு விளங்கிய சாரங்கதரன் சித்தரை நோக்கி, தேவதேவனே! உங்களுடைய பெருமையால் எனக்கு ஏற்பட்ட பழியும் பாவமும் தொலைந்து பெருவாழ்வு பெற்றேன். நான் சிறிதும் கவலை இல்லாதிருக்கிறேன். வள்ளல் குலத்தின் தெய்வமே! நான் உடல் வருந்திச் சோர்வடைந்து, அழுதுத் தவித்துக் கொண்டிருந்த சமயத்தில் வந்து என்னை வாரி எடுத்து, மகிழ்ச்சியோடு அருள்புரிந்த தெய்வமே! தேவதேவனே என்று பலவாறு கூறிப் பாடியாடி சித்தருடைய திருவடிகளாகிய தாமரை மலர்களைத் தன் தலைமீது தாங்கி மகிழ்ந்தான்.

மகிமை - பெருமை, சக்தி. கடைத்தேறுதல் - ஈடேறுதல், பெருவாழ்வு பெறுதல். தளர்தல் - சோர்வடைதல். உவந்து - மகிழ்ச்சியோடு. வேள் - வள்ளல். பங்கயம் - தாமரை. துலங்குதல் - ஒளிவிடுதல்.

சுவடிச்சொல்- 1. பாவமல்லாந் துலைந்துதுன் 2. கடத் 3. யென்றமு 4. ரென்னுந்.

147. Devoid of any physical disability
Lustrous like the Sun and moon,
Cāraṅkatraṉ chose to address Cittar:
My lord of lords, thanks to your greatness
I have been absolved of sin and blame;
Regained my lost glory,
At the moment, I am carefree
And happy beyond words.
Oh magnanimous one, verily a God,
You came to my rescue
When I was wallowing in pain and misery;
Again, permit me to call you my good angel,
So saying he prostrated
At the lotus-like feet of the wise man.

148. *(சாரங்கதரன் வச்சிர உடல் பெறுதல்)* **திபதை**

அஷ்டமா சித்தரில் அருள்செய்து காத்த
[1]சிஷ்டியாம் மகேந்திரரைப் [2]போற்றியகம் புகழ
சாரங்க தரனவ ருடனே கலந்துடல்
சித்த ராய்[3]நாட் கண்டசீ ராகி
நலம்பெற நவநாத சித்தர்க [4]ளெண்ணில்
இலங்கிய நிலம்விசும் பெங்கணு மியம்ப
நரைதிரை நோயுயிர் நலிந்தவா மிவைகள்
வருதலில் லாதுடல் வச்சிரதிரே கமதாய்
சாலவு முயர்தேவ தத்துவம் பொருந்தி
பாலனே [5]யவ்வணம் பலித்திருந் தானே.

எட்டுவகையான் சித்து வேலைகளில் ஞானம் பெற்றுள்ள சித்தர்களில் ஒருவரும் தன்மீது கருணை கொண்டு மறுபிறவியைக் கொடுத்தவருமாகிய மகேந்திர சித்தரைப் புகழ்ந்து பாராட்டிய சாரங்கதரன் அவருடன் கலந்து தானும் சித்தர் தன்மையைப் பெற்றுவிட்டான். பல நாட்களாய் வாழ்ந்து எல்லா அனுப வங்களையும் பெற்ற சித்தர்களில் ஒருவனாகி விட்டான். நவநாத சித்தர்களாகிய ஒன்பது சித்தர்களைப்போலவே விளங்கினான். இம்மண்ணுலகம் முதல் விண்ணுலகம் வரை புகழும்படியான பெருமையைப் பெற்றான். முடி நரைத்தலோ

உடல் தளர்ச்சியடைதலோ இல்லாதவனானான். நோயும் நலிவும் அவனை வந்தடையவில்லை. நல்ல வச்சிரம் போன்ற உடலைப்பெற்றான். எல்லாவகையான அமைப்பாலும் தேவர்களுக்குரிய தனிச்சிறப்புகள் அனைத்தையும் பெற்று என்றும் அழியாநிலையை அடைந்தான்.

அட்டமாசித்தர் :- எட்டு வகையான திறமைகளும் கைவரப்பெற்றவர். அட்டசித்துக்களாவன.

1. அணிமா - அணு போன்ற வடிவம் பெறுதல்
2. மகிமா - மிகவும் பருத்த வடிவம் பெறுதல்
3. கரிமா - இரும்பு மலையினும் கனத்தல்
4. இலகிமா - பஞ்சினும் இலேசாதல்
5. பிராத்தி - வேண்டுவனவற்றை அடைதல்
6. பிரகாமியம் - நிறைவுபெறுதல்
7. ஈசத்துவம் - யாவருக்கும் தேவனாதல்
8. வசித்துவம் - யாவரும் வணங்கநிற்றல்

சிடி - சிட்டி - படைப்பு. நவநாத சித்தர் - ஒன்பது சித்தர்; அவர்கள் - அனாதிநாதர், ஆதி நாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர், சதோகநாதர், சத்தியநாதர், மச்சேந்திரநாதர், மதங்கநாதர், வகுளிநாதர் என்போர். விசும்பு - ஆகாயம். திரை - உடல் தளர்ச்சி, சுருங்கல். நலிதல் - மெலிதல். வச்சிரதிரேகம் - வயிரம் போன்ற உடல். சால - மிக. தேவதத்துவம் - தெய்வவல்லமை.

சுவடிச்சொல் - 1. சிட்டியாம் 2. போத்தி 3. னாட் 4. ளென்றில் 5. யெவ்வற்னம்.

வசனம் - சித்தர்களுடனே கூட சிரஞ்சீவியா யிருந்தனன். இப்பால் ராச மகேந்திர பட்டணத்திலே வந்து சேர்ந்து அவர்கள் ராசநரேந்திரனுடனே ஏதெனச் சொல்லுவார்களென்றால். (87)

148. By his total identification with Makēntira Cittar,
Well-versed in the eight occult practices,
Caraṅkataraṉ also got elevated as a Cittar.
Living a long and purposeful life
He tasted of all experiences
His fame extended from earth
To the celestial regions.
Sans fatigue and grey hairs
He was free from physical ailments,

The bane of other mortals.
With his robust body
He attained to divinehood
And the coveted state of immortality

Prose: Thus while he became immortal and enjoyed divine bliss, what message did the king's men carry to Rājamakēntirapuram.

149. *(சாரங்கதரன் சித்தரால் சிரஞ்சீவியானதைத் தூதுவர் கூறுதல்)*

நிலை

தூதுவ ரனேகமாய்த் துக்கமே யெய்தி
ஓதுவார் மன்னனுக் குண்மையா யய்யா
மைந்தன் சாரங்கன் மகனையே கொல்ல
நிந்தையா யவளிட்ட நீதிகே ளாமல்
வனத்தினி லிட்டுப்போய் வதைக்கவே யெண்ணி
மனத்துய ரில்லாமல் [1]மகிழ்ச்சியாய்ச் சொன்னீர்
அந்தமாம் பிள்ளையை அர்த்தராத் திரியில்
[2]பந்தமாய்க் கால்கரம் பதறியே அறுத்து
ஒருவனாய்த் தனித்தபின் ஒளியள வாக
இருந்துமே பார்ப்பமென் [3]றெண்ணியே யிருக்கஉன்
மைந்தனு மனேகமாய் மனத்துய ராகிச்
சிந்தையா லிசைவான் [4]திருவுளந் தொழுது
வையகத் தினிலிந்த வாதைகள் படவே
தெய்வமே யிப்படிச் செய்வையோ வென்ன
மாயமா யாகாச வாணியும் வந்து
சேயெனுஞ் சிறுபிள்ளையாய்ச் செப்பவே கேளும்
மன்னனே உனக்கிந்த மனத்துயர் வேண்டாம்
முன்னமோர் ஜென்மத்தில் முடிந்ததிப் பழிகள்
இந்தநாட் [5]பழிகள்தீர்ந் திடவுமே வேண்டா
வந்துநீர் பிறந்திடு மங்கையர் பேச்சால்
கோபமா யரசன் குறைத்தனன் கரங்கால்
(சுவடியிலே ஒரு வரி விடுபடுகிறது)

ஆகையா லிப்போ அட்டமா சித்தர்
ஏகியே வந்துன்னை எடுப்போ வார்கள்
[6]என்றுமே சொன்னனள் [7]இதக்கமாய்ச் சித்தர்
மன்னனை எடுத்தவர் [8]வளர்ந்திடக் கைகால்
நவநாத சித்தராய் [7]நாட்டிலெந் நாளுஞ்
செபதப முள்ளதாய்ச் சிரஞ்சீவி யானார்
பெண்வார்த்தை கேட்டுநீர் பிள்ளையை [10]இழந்தீர்
[11]மண்ணினி லிப்படி வதைப்பவ ருண்டோ
என்றுமே நாங்கள் இந்தவோர் நகரில்
மன்னனே யிருந்திட மாட்டமே யென்று
போயினர் தூதுவர் போனபின் மன்னன்
[12]பாவிநா மென்று பரிதவித் தானே

தூதுவர்கள் மிகுந்த வருத்தத்துடன் வந்தார்கள். மன்னவனைக் கண்டார்கள். ஐயா! சாரங்கதரனாகிய தங்கள் மகன்மீது சித்திராங்கி சுமத்திய பழியைக் கேட்டீர்கள். உண்மையை யறியவில்லை. மகன் என்றும் பாராமல் காட்டில் கொண்டுபோய் கைகால்களை வெட்டுமாறு மகிழ்ச்சியோடு ஆணையிட்டு விட்டீர்கள். நாங்களும் தங்கள் ஆணைப்படி அழைத்துச் சென்றோம். நள்ளிரவில் கை, கால்களைத் துண்டித்தோம். அவன் ஒண்டியாய் இருளில் கிடந்து என்ன செய்கிறான் பார்ப்போம் என்று மறைந்திருந்தோம்.

சாரங்கதரன் மிகவும் வருந்தித் தன் உள்ளத்திற்கு மகிழ்ச்சி தரவல்லவனாகிய சிவபெருமானை வணங்கித் தெய்வமே! இந்த உலகில் இப்படி வேதனைப்படும்படி வைத்துவிட்டாயே என்று கூறித் துதித்தான். உடனே ஆகாயத்தில் ஒரு குரல் கேட்டது. இளைஞனாகிய மன்னவனே! கேள்! வருந்தவேண்டாம்! இன்று உனக்கு ஏற்பட்டுள்ள பழி இந்தப் பிறவியில் ஏற்பட்டதில்லை. முற்பிறவியில் ஏற்பட்ட தீவினையின் காரணமாக இப்பிறவியில் இந்தத் துன்பம் வந்து சேர்ந்தது. முன்வினைப் பயனால் இங்கு வந்து பிறந்திருக்கிற மகளிர் பேச்சைக் கேட்டு மன்னன் உனக்கு இந்தத் தண்டனை யளித்திருக்கிறான். அட்டமா சித்தர் ஒருவர் வந்து உன்னை எடுத்துக் கொண்டு போவார் என்று கூறியது அக்குரல். அந்தச் சொல்லுக்கு ஏற்ப அங்கு ஒரு சித்தர் வந்து எடுத்தார். சாரங்கதரனின் கை, கால்கள் முன்போல வளர்ந்தன. நவநாத சித்தர்களைப் போல என்றுஞ் சிரஞ்சீவியாக வாழும் நிலையைப் பெற்றுவிட்டான். ஒரு பெண் கூறிய பழிச்சொல்லை நம்பியதால் தங்கள் மகனையே இழந்துவிட்டீர்கள்! இந்த உலகில் யாருமே இப்படிப்பட்ட கொடுமைகளைச் செய்யமாட்டார்கள்! மன்னவா! இனி

நாங்களும் இந்த நகரத்தில் இருக்கமாட்டோம் என்று கூறித் தூதுவர்கள் அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டார்கள். மன்னன் நான் ஒரு பாவியாகி விட்டேன் என்று வருந்தியிருந்தான்.

வதைத்தல் - கொல்லுதல், துன்பப்படுத்தல். அந்தம் - அழகு, ஒழுங்கு. பந்தம் - உறவு, முறை. அளவு - வரையறை. ஒளி அனவாக - தெரியாத இடத்தில், மறைந்திருந்து. வாதை - துன்பம், வேதனை. செப்புதல் - சொல்லுதல். இதக்கம் - இனிமை, உரிமை. பரிதவித்தல் - துன்பப்படுதல்.

சுவடிச்சொல்- 1. மகிட்சியாய் 2. பந்தமாயி 3. றென்றியே 4. திருவளந் 5. பழிகள்தீந்திட 6. என்னுமே 7. இதக்கமா சித்தர் 8. வளந்திட 9. நாட்டிலென்னாளு 10. எழைந்தீர்11. மன்றினி 12. பாவினாமென்று 13. பரதவித்தானே.

வசனம் - ராசாவைப் [1]பார்த்துத் தூதுவர் சாரங்கதரனைக் கையுங்காலும் அறுத்ததும், [2]ஆகாசவாணி சொன்னதுஞ் சித்தர் வந்து கை, கால் [3]வளரவென்று வாழ்த்தி யிட்டுக்கொண்டு போனதும் தூதுவர் சொல்ல மனத்திலே மெத்த துக்கமெய்தி அரசன் [4]சித்திராங்கி வீட்டுக்குப்போய்த் தூதுவர் சொன்னதெல்லாஞ் சித்திராங்கியுடனே சொல்லச் சித்திராங்கியானவள் கேட்டு, யிதெல்லாம் ரத்தினாங்கியிட கட்டினாலே தூதுவர்க ளிப்படிச் சொன்னார்களென்று [5]மனத்தி லெண்ணிக்கொண்டு, மெத்தக் கோபமாய் ராசாவைப் [6]பார்த்துப் பிராமணர்கள் நெய் சொரிந்திடும் ஓமாக்கினி யுள்ளேஎழுந்து பொங்கியதுபோல ஏது சொல்வ.. (88)

சுவடிச்சொல்- 1. 6, பாத்து 2. ஆகாஷவாணி 3. வளரவென்றிவாளதி 4. சித்திறாங்கி 5. மனதிலென்றி கொண்டு.

149. Returned the King's men
Drowned in great grief,
Met their master, the King
And addressed him
Sir, you listened to the charges
Levelled by queen Cittirāṅki
Against Caraṅkataraṉ, your son
And ordered the mutilation of limbs.
But sir, the truth lay elsewhere
And you were ignorant of it.
We carried out your command
Which smacked of absolute impartiality,
Chopped off his hands and legs

Watched his reactions on the sly
Concealing ourselves in the thicket.
Sorrow-laden Cāraṅkataraṉ
Prayed to Lord Civa, the giver of bliss:
Lord, why have you inflicted pain on me?
Forthwith was heard from the heavens,
An eerie divine voice,
Young prince, please listen.
The blame laid at your doors
Is an echo of your misdeeds
In the earlier birth;
True, the king has punished you
On a woman's complaint,
Also paying for past actions.
A Cittar,
Well-versed in eight occult arts
Shall shortly pick you up;
So thundered the voice from above.
As prophesied, a Cittar did arrive
And lo, Cāraṅkataraṉ got back his limbs.
Know that he has been elevated
To the status of a Cittar,
Immortality, its chief attribute.
Listening to the concocted tale of a woman,
You lost a darling son
No one on the face of the earth
Will be guilty of such great sin.
Revered King, we are leaving the city
As it evokes great disgust.
So saying, the emissaries left
Leaving the King to lament his lapse.

Prose: When the messengers reported to the King the mutilation of Cāraṅkataraṉ's limbs and their restoration by a Cittar, the King, hurriedly hastened to Cittirāṅki's residence. After listening to the King, Cittirāṅki dismissed the happenings as

fabrications of Rattiṉāṅki. She fretted and fumed like the sacrificial fire kindled by brahmins pouring abundant ghee.

150. *(சித்திராங்கியின் ஆத்திரமொழி)* **சம்பை**

[1]மைந்தன்மே லாசையுள்ள [2]மன்னவரண் ணாச்சி
அந்தரத்தி னாங்கியிட [3]அரண்மனைக்குப் போம்போம்
[4]பழியுமதற் காகவந்த பாடுமொரு கதைபோன்ற
வழியுமே கொள்ளவந்த வஞ்சிசொன் னாளோ
பொறுத்ததுமல் லாலெவர்க்கும்
பொருந்தியபொய் யாமென்னக்
குறித்தகதை சொல்லிப்பய முறுத்தவந் தீரோ
மந்திரிகள் ரத்தினாங்கி வசனத்தி னாலிந்த
தந்திரங்கள் சொல்லியும்மைத் தானனுப்பி னாரோ
கன்னிரத்தி னாங்கிதருங்
கயலஞ்சு வாங்கிக்கொண்டு
[5]என்னவென்று தூதருக்கு
இயம்பினாள்மெய் போலே
[6]பொன்னென்னும் பாவிலெகு
பொல்லாதல் லோயெவர்க்குஞ்
சொல்லமனந் துணிவுதருமென்று
சொல்வதுமெய் யாச்சு.

மகன்மீது மட்டும் ஆசையுள்ள மன்னவரே! இரத்தினாங்கியின் அரண்மனைக்கே செல்லுங்கள். இழிவான செயலையும், அதற்காகக் கொடுக்கப்பட்ட தண்டனையையும் வெறுங்கதையாக எடுத்துக் கூறியிருக்கிறாள் அந்த சூதுக்காரி. அதையும் நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள். அதனால் எல்லாக் கொடுமைகளையும் பொறுத்துக்கொண்டிருக்கிற என்மீதே குற்றஞ் சொல்லிப் பயமுறுத்துகிறீர்கள். இரத்தினாங்கி சொல்ல அதைக்கேட்ட அமைச்சர்கள் வந்து தந்திரமாக உம்மிடத்தில் சொல்லி அனுப்பி யிருக்கிறார்கள் என்பது நன்றாகப் புரிகிறது. அவள் தூதுவரிடம் பொன்னைக் கொடுத்திருக்கிறாள். அதை வாங்கிக் கொண்ட அவர்கள் அவள் சொல்லிக் கொடுத்தபடியே சொல்லி நடித்திருக்கிறார்கள். பணம் பாதாளம் வரை பாயும் என்பார்களே அது உண்மையாச்சுது. பொன்னை வாங்கிவிட்டார்களானால் யாரும் எதையுஞ் சொல்லத் துணிந்துவிடுவார்களல்லவா!

பாடு - வேலை, படுதல். வஞ்சி - பெண், வஞ்சனைக்காரி. கயலஞ்சு - கழஞ்சு என்றிருத்தல் வேண்டும். கழஞ்சு -- 12 பணவெடை அளவு.

சுவடிச்சொல்- 1. மந்தன்மே 2. மன்னவரன்னாச்சு 3. அரமனைக்கி 4. பழியுமதுக்காக 5. என்னமென்று 6. பொன்னென்றும்.

150. Revered King,
Whose love is exclusively for his son,
Please return to Rattiṉāṅki's abode.
The scheming woman that she is,
She has pooh-poohed the punishment given
Building up a cock and bull tale,
Which you have swallowed
In your innocence and credulity.
This has turned your wrath on me
Who is putting up with all wickedness.
You are accusing me most unjustly
Holding forth dire and dangerous threats.
That Rattiṉāṅki has concocted tales
And passed them on to you through ministers
Is obvious and clear.
She would have gifted them liberally
Money and gold
To play a false and hypocritical role.
Afterall, what is there
That wealth cannot buy?
Man can be made to utter anything
If you fill their coffers with gold.

151. *(பணம்பெற்றுத் தூதுவர் பொய்சொல்லுகிறார்கள் என்கிறாள்)*

திரிபுடை

[1]பணமென்றா லந்தப் பிணமுமா வென்னும்
பணத்தை [2]யுட்கொள்ளு மாகையால் - பணம்

குணமும் தருமது குணமும் கெடுமது
குறையும் வருமே
பொய்யை மெய்யென்று சொல்லுவதும் - பணம்
வெறுமை யென்றுமில்லாத் தப்பறைப்
பொய்யை மெய்யென்று சொல்வது
பணப்புதுமை யல்லவோ - ஆகையால்
பணவாசை கெட்டதல்லோ
பணந்தனைக் கண்டு - தூதுவர்
யூகையாய்ச் சொன்னசொல்
எல்லா முமக்குண்மை யாச்சோ.

பணம் என்றால் பிணமும் வாயைத்திறக்குமென்பார்கள். பணத்தை உணவாகவும் சாப்பிட்டுவிடும். அந்தப் பணம் நல்ல குணத்தைத் தருவதும் உண்டு. குணத்தைக் கெடுக்கவும் செய்யும். அதனால் மக்களிடையே பெருங்குற்றம் ஏற்படவும் கூடும். என்றும் இல்லாதவற்றை இருப்பதாகவும், நிலையாக இருப்பனவற்றை இல்லாததாகவும் கூறச் செய்வது பணமே. உண்மையை மறைத்துப் பொய்சொல்லச் செய்வது பணம். இது ஒரு புதுமையான செயல். இப்படிக் கெட்ட பண்பை யுண்டாக்கக் கூடிய பணத்தைக்கண்டு, தூதுவர் பார்க்காததைப் பார்த்ததாகச் சொன்னதை நீங்கள் உண்மையென்று நம்பிவிட்டீர்கள்.

ஆவென்னும் - வாயைத்திறக்கும். தப்பறை - கபடகுணம், பொய். யூகை - யோசித்தல், தாமாக.

சுவடிச்சொல்- 1. பணமென்னா 2. யுள்கொள்ளு.

வசனம்: பின்னு மேது சொல்வாள். (89)

151. The word money
Would make even corpses gape,
Greedy men are wont
To swallow money
Money breeds virtue
It also acts as bane
Motivates heinous crimes.
Money makes people speak

Of the unreal as real
And solid permanent things
False and illusory.
Your messengers
Have been enticed by money
And are fabricating events
Unseen by them,
You are too simple
To give them credence.

Prose: She continued to speak.

152. *(அந்த ஆகாசவாணி இங்கு வந்து சொல்லட்டுமே!)* சம்பை

ஆகாச வாணிக்கண் இப்பாரகம் வந்ததென்ன
ஆகாத பாவிமுன்ன மவள்வந்து சொல்ல
தகப்பனுக்கு வந்தவளைத்
[1]தாயென்னா தவன்முன்
வகுத்துரைக்க ஆகாச
வாணிவந் தனளோ
அங்குவந்து சொன்னதொரு
ஆகாச வாணிதனக்
கிங்குவந்து சொல்லமதி
யில்லையோ வென்றாள்.

இந்த நிலவுலகத்தில் ஆகாசவாணி வந்து தோன்றினாள் என்ற பொய் வார்த்தையை இரத்தினாங்கி கற்பனையாகக் கூறியிருக்கிறாள். இது அரசன் பாவியாகிய என் முன் வந்து சொல்ல வேண்டும் என்பதற்காகக் கூறிய பொய் வார்த்தையாகும். தன் தந்தையின் மனைவியைத் தாயென்று எண்ணாதவன் முன்தோன்றி அவனுக்குச் சொன்ன செய்தியை இங்கு வந்து சொல்லியிருக்கக் கூடாதோ!

பாரகம் - பூமியில். மதி - அறிவு.

152. That Ākaṣvāṇi, the good angel
Appeared on earth
Is Rattiṇāṅki's tall tale.
She hoped that the King would repeat it
Confirming my sin.
Why did not the Good angel,
Who appeared before an incestuous son
Come here and deliver the message?

153. *(ஆகாசவாணி அவைமுன் தோன்றிக் கூறுதல்)* **திபதை**

மதியில்லை [1]யோவென்னும்
வஞ்சிசித்தி ராங்கி
விதிக்குணச் சூதெல்லாம்
வெளிவெளி யாக
[2]மற்றுமங் காகாச வாணிதான் வந்து
[3]கொற்றவ னமைச்சாகேள் [4]குறைவிலாப் பெரியோர்
அதிபர்கள் யாவரும் அதிசயப் படவே
இது விதி காரண மிவள்வெகு பாவி
வரும்விதி தன்னையே மன்னனே செய்தீர்
உருகிட [5]எண்ணமென் றொளித்துமே சொன்னாள்
சொல்லவே அப்போ தோதகப் பாவை
எல்லையில் லாதபய மெய்தினாள் எய்தி
ஒடுங்கினாள் கால்கை யுடலெலாந் [6]தளர்ந்து
நடுங்கினாள் பின்தலை நாணினாள் வாயும்
அடைத்தனள் கொழுப்புமாங் காரமும் போகத்
துடைத்தனள் காலனுந் [7]தொடரநின் றாளே.

ஆகாச வாணி இங்குவந்து கூறியிருக்கக்கூடாதா என்று அலட்சியமாகக்கூறிய வஞ்சகி சித்திராங்கியின் வஞ்சக் செயல்களைப் பலரும் அறியுமாறு வெளியாக்க வேண்டும் என்று முடிவெடுத்தாள் ஆகாசவாணி. அரசன், அமைச்சர், சான்றோர், அரசு அதிகாரிகள் ஆகிய பலரும் கூடியிருந்த இடத்தில் தோன்றினாள். மன்னவா! அமைச்சரே! கேளுங்கள்! பண்புள்ள பெரியவர்களும் பெருந்தலைவர்களும் ஆச்சரியப்படுதற்குரிய செய்தியைச் சொல்லுகிறேன். சாரங்கதரனுக்கு

அளிக்கப்பட்ட கொடுமைகள் விதிப்பயனால் நடந்தவையே. மன்னவா! நீர் விதிப்படி நடக்க வேண்டியதையே செய்திருக்கிறீர்! சித்திராங்கி பாவச்செயலுக்கு ஆளாகிவிட்டாள். இது என்னுடைய கருத்து என்று, அரசன் மனம் இரங்கி ஆணையிடுமாறு மறைத்துச் சொல்லிவிட்டாள். மரியாதை தெரியாத, வஞ்சக எண்ணமுடைய இவள் அன்று சொல்லிவிட்டதால் இன்று மிகுதியாகப் பயந்து நடுங்கி ஒடுங்கி நிற்கிறாள்; கை, கால் உடல் யாவும் சோர்ந்து நடுங்குகின்றன. வெட்கத்தால் தலை கவிழ்ந்து நிற்கிறாள். வாய்பேசமுடியாமல் அடைத்துப் போயிற்று. அவள் அடைந்திருந்த கொழுப்பு, கருவம், இறுமாப்பு ஆகியவை அழிந்தன. எமனை எதிர்நோக்கி நிற்கிறாள் என்று கூறினாள் ஆகாயவாணி.

சூது - வஞ்சகம், வெளியாதல் - பலரும் அறிதல். அதிபர் - அதிகாரிகள், தலைவர்கள். அதிசயம் - வியப்பு, ஆச்சரியம். தோகம் - வஞ்சகம், மரியாதையின்மை. நாணுதல் - வெட்கமடைதல். கொழுப்பு - செழுமை. ஆங்காரம் - கர்வம், இறுமாப்பு. காலன் - எமன்.

சுவடிச்சொல்- 1. யோவென்னும் 2. மத்துமங் 3. கொத்தவனமச்சா 4. குறவிலா 5. வென்றமென் 6. தளந்து 7. துடர

153. When Cittirāṅki pooh poohed
The Good Angel
That it failed to deliver the message
In everybody's presence
The Angel was stung to the quick,
Resolved to expose the wicked queen
Lo! it appeared before the King and his men,
Listen everybody,
I shall tell you a piece of information
Sufficiently traumatic to elders and betters.
All the acts of cruelty
To which Cāraṅkataraṉ was subjected
Were the workings of destiny.
Oh King, You were but an instrument
In the hands of Divine will,
But Cittirāṅki is a great sinner
Who deliberately twisted truth.
Her obnoxious lies made the King

Order exemplary punishment.
The wicked and guilty one
Is now shivering with fear,
Terror-stricken is she
Because of her unworthy act
See, how visibly her limbs shake
And head held low
To hide her shame and guilt.
Tongue-tied is she because of sin,
Gone are her pride and cruelty,
She has resigned herself to meeting death.

154. *(மன்னவன் சித்திராங்கியைப் பழித்தல்)* சம்பை

இறையவனும் சித்தி ராங்கியெனும்
பொறுவு தாரியைப் [1]பார்த்துக்
[2]கறுவியே தன்பல்லை
[3]நறநறறெனக் கடித்துக்
கன்மி [4]யென்ன வென்று
கடுங்கலக்கு மிட்டாய் நெஞ்சில்
வன்மி [4]யென்ன வென்று நிந்தை
வார்த்தைக ளுரைத்தாய்
நீலிதய வில்லாத நிர்மூடி யறியாத
பாலகன் தன்மீதில் என்ன
பழிவார்த்தை யுரைத்தாய்
நீதி யெங்கே நீசொன்ன
[5]நின்னய மெங்கே - முறமைப்
பேதக மெங்கே யுந்தன்
பிறட்டுபேச் செங்கே
சாதிச்சா லுஞ்சலஞ் [6]சாதிச்சாய்ப்
பேச்சினால்
வாதிச் சாயினி வாயில்மண்
போட்டுக் கொண்டாய்

மன்னனே மாதரிட வார்த்தைநம் பொணாதென்று
சொன்னவர்கள் பேச்செல்லாந் தூளாக்கி னேனே

பேச்சுத் திறமையில் தோற்றவளாகிய சித்திராங்கியைப் பார்த்தான். மன்னன் முகம் கடுகடுக்கப் பல்லை நறநறவெனக் கடித்துக் கொண்டான். பாவி! உண்மையல்லாத நடக்காத எதைஎதையோ சொல்லி உள்ளங் கலங்கச்செய்து விட்டாயே! பகையும் வைராக்கியமும் கொண்டு வீண்பழியைச் சுமத்தி அதையே திறமையாக எடுத்துக் சொல்லிவிட்டாயே! நீலி! சிறிதும் ஈவு இரக்கமில்லாத அறிவற்றவளே ஒரு தீங்கும் செய்தறியாத சிறுவன்மீதில் அநியாயமான பழிச் சொல்லைச் சுமத்தி விட்டாயே! நீதி எங்கே இருக்கிறது? நீ சொன்ன முடிவு எங்கேயிருக்கிறது? நியாயமான மன வேறுபாடுகள் எங்கே இருக்கின்றன? நீ சொன்ன பொய்யும் புரட்டுமான பேச்சு எங்கே இருக்கிறது? உன் பேச்சுத் திறனால் பகையை வெல்லுவதில் வெற்றி பெற்று விட்டாய் என்றாலும் உன்னுடைய அந்தப் பேச்சுத்திறனாலேயே உன்வாயில் மண்ணைப்போட்டுகொண்டு விட்டாய்!.

இறையவன் - அரசன். உதாரி - பேச்சுத்திறமுடையவன். கறுவுதல்- கோபித்தல். கன்மி - பாவி. கலக்கு - கலங்கச்செய்தல். வன்மி - பகைஞன்; வைராக்கியமுடையன். நீலி - நீலியாகிய பேய். நிர்மூடி - அறிவில்லாதவள்; மூடி - மூடன் என்பதன் பெண்பால். நின்னயம் - நிண்ணயம் - உறுதி, முடிவு. பேதகம் - வேறுபாடு. பிறட்டு - புரட்டு - பொய். சலஞ்சாதித்தல் - பகைவெல்லுதல். வாதித்தல் - தருக்கித்தல், எதிர்பேச்சு.

சுவடிச்சொல் - 1. பாத்து 2. கறிவியே 3. நிறநிறெனக் 4. யென்னமென்று 5. நிண்றய சாதிச்சாயிப்.

154. The King eyed Cittirāṅki
Notorious for her gift of gab,
Consumed with rage,
He gnashed his teeth.
Most sinful one! You built up such monstrous lies
That I became confused and restless.
How skilfully you presented facts
Inspired by the spirit of revenge!
Nīli, the cunning and deceitful
Lacking any semblance of mercy
How cleverly you victimised
An innocent youngster

Rendering my verdict
Incongruous with hard facts.
Though you succeeded in trapping him
The very chatter that helped you
Has sadly betrayed you.

155. *(சித்திராங்கியைப் கொல்லுதல்)* **திபதை**

என்றுசித்தி ராங்கினி [1]யென்னும்பா தகியை
அன்றுமன் னன்கடிந்து ஆழமாம் பெரியபாழ்
[2] கிணற்றி னிலுடல் பதைத்திடத் தள்ளிவீழ்
[2]கிணற்றினி லேமேன் மேலுஞ் சுண்ணாம்புக்
கல்லையுங் கொட்டிமேல் காய்ந்த [3]வெந்நீர்
சல்லியை [4]சாதனை சென்ம முந்திட
நசுங்கி யேயன லில்கரி யாக்கி
முங்கவே செய்துதன் கோபமுந் தீர
சிந்தை வியாகூலந் தீரவே அவளை
அந்தகன் புரத்துக்கு [5]அனுப்புவித் தானே.

கொடும்பாவியாகிய சித்திராங்கியை மிகவும் கோபித்துப் பேசிய மன்னவன் மிகவும் பெரியதும் ஆழமானதுமான பாழுங்கிணறு ஒன்றில் சித்திராங்கியைத் தள்ளச் செய்தான். அவள் உடல் நடுங்கித் துடிக்கத்துடிக்கக் கிணற்றில் விழுந்த உடனே அவள் மீது சுண்ணாம்புக் கல்லைக் கொட்டி, அந்தக் கற்களின் மீது நன்றாகக் கொதிக்கும் வெந்நீரையும் கொட்டச் செய்தான். கொதிக்கும் அனலில் உடல்கரியாகும்படிச் செய்து மேலே சல்லிக் கற்களைக் கொட்டி உடல் நசுங்கச் செய்து தன் கோபத்தைத் தீர்த்துக் கொண்டான். சித்திராங்கியை எமனுலகுக்கு அனுப்பியதன் மூலம் அரசன் தன் மனக்கவலைகளையெல்லாம் தீர்த்துக் கொண்டான்.

பாதகி - கொடும்பாவி. கடிதல் - கோபித்தல், பாழ்கிணறு - பாழடைந்த கிணறு. சல்லி - உடைத்த சிறுசிறுகற்கள். அனல் - தீ. முங்க - மூழ்க. வியாகூலம் - வருத்தம். அந்தகன் - எமன்.

சுவடிச்சொல் - 1. யென்றும் 2. கிணத்தினி 3. வென்னீர் 4. சாதினை 5. அனுப்பிவித்

வசனம் - சித்திராங்கியை [1]எமபுரத்துக்கு அனுப்பினபின்பு தன்னிட தேவி ரத்தினாங்கி வீட்டுக்கு ராச நரேந்திரன் போறபொழுது ரத்தினாங்கி துயர்தீரக் கண்களிலே நீர் வழியக் காலிலே விழுந்தழ இராசாவுங் கூட சோகித்து ரத்தினாங்கியை எடுத்து அணைத்துக்கொண்டு [2]தேற்றி அங்கேது சொல்வான்.

(90)

சுவடிச்சொல்- 1. *யிமபுரத்* 2. *தேத்தி.*

155. The King gave vent to his wrath
On unscrupulous Cittirāṅki
Ordered firmly that she be pushed
Into a dilapidated well
Deep and awe-inspiring.
While she sank into the wild abyss,
Body shaking uncontrollably,
He filled it with limestone
Pouring boiling water on it.
While the body charred,
More gravel and pebbles were dropped.
His anger subsided
Only when the corporeal remains got mangled.
A deep sigh of relief escaped him
After despatching her to death.

Prose: After despatching Cittirāṅki to the land of death, King Narēntira went to Rattiṉāṅki who fell at his feet, her eyes filled with tears. He embraced Rattiṉāṅki and both were lost in sorrow. What did the King tell Rattiṉāṅki?

156. *(அரசன் இரத்தினாங்கியிடம் தன் கொடுமையைக் கூறி வருந்துதல்)* *சம்பை*

இடுவந்திக் கொடுமை [1]யவளெண்ணி
[2]மைந்தன் மேற் போட்ட
படுநிந்தை யறியாமல்
பகைமுடித் தேனே
உன்பேச்சும் பெரியோர்க ளுரையும்

மந்திரிகளிட
தன்பேச்சும் விழலாக்கிச்
சலமுடித் தேனே
சொல்லுவார் விசேஷம் நம்பித்
[3]துணியப்ப டாதுபழி
சொல்லுவான் விசேஷத்தை
மெய்யெனச்செய் தேனே
தவம்பண்ணி வந்தபொருள்
தன்னைக்குடி கேடியால்
அவம்பண்ணி யேவிறுதா
வாக்கிவிட் டேனே
சிவனருளும் போதிந்த
சிறியவனுக் கெதுவரினும்
[4]அவந்தீர வரங்கள்
கேளாமல் போனேனே
மின்னலொளி யேயென்னை
விட்டுப் போகாது
துயரென்ன வகையென்ன
பழியேது புத்தி என்றான்.

மன்னன் இரத்தினாங்கியை நோக்கி, மின்னல் போன்றவளே! நியாயமில்லாததும் கொடுமையானதுமான முறையில் சித்திராங்கி சாரங்கதரன் மீது பழியைச் சுமத்தியிருக்கிறாள் என்பதை அறியாமல் மகன்மீது பகைமை கொண்டு தண்டனையும் கொடுத்து விட்டேன்! நீ சொன்னதையும் கேட்கவில்லை; பெரியோர்களும் அமைச்சர்களும் பேசியதையும் பொருட்படுத்தவில்லை. எல்லாவற்றையும் வீணாக்கி விட்டுப் பகையை முடித்துக் கொண்டேன். எடுத்துச் சொல்லுபவர்களுடைய பேச்சில் உள்ள உண்மைகளை நம்பித் தீர ஆலோசித்து முடிவு செய்யாமற் போனேன்! பழி சுமத்திப் பேசியவளுடைய வார்த்தைகளை மட்டுமே உண்மை என்று நம்பி விட்டேன். குடிகெடுத்தவளாகிய அவளுடைய பேச்சைக் கேட்டுத் தவஞ்செய்து பெற்றெடுத்த மகனையே வீணாக்கிப் பயனற்றவனாகச் செய்துவிட்டேன். சிறுவனாகிய இவனுக்கு என்ன தீங்கு ஏற்பட்டாலும் அத்தத் தீங்கு இவனைப் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்று சிவபெருமான் எனக்குக் குழந்தைச் செல்வத்தைக் கொடுத்தருளியபோதே வரங்கேட்காமற் போய்விட்டேன். இனி என்னையடைந்த துன்பம் என்றுமே நீங்காது. பெரும் பழியைச் சுமக்கும் நிலையை என்னுடைய அறிவு உருவாக்கிவிட்டது என்றெல்லாம் கூறி வருந்தினான்.

இடுவந்தி -நீதியில்லாத தன்மை. விழல் - வீண். ச்லம் - பகை. விசேடம் - சிறப்பு, கருத்து. குடிகேடி - குடும்பத்தை அழித்தவள். அவம் - வீண். விறுதா - பயனில்லாமை. அருளும்போது - வரங்கொடுத்தருளிய போது. ஒளி! - ஒளிபோன்றவள்; அண்மைவிளி.

சுவடிச்சொல் - 1. யவளென்றி 2. மந்தன் மேராப்போட்ட 3. துணியப்படரேது 4. அவதிர.

156. Lady, as luminous as lightning,
So the King addressed Rattiṉāṅki,
Unknowing that Cittirāṅki
Had brought false charges against Cāraṅkataraṉ,
I hastily meted out extreme punishment.
Poor me, I didn't listen to your words
Nor to the sage counsel of elders and ministers.
Ignoring the truth
That lay in the words of the defendants,
I gave a verdict
Lacking in fairplay and objectivity.
What a folly,
I believed every word
The wicked woman uttered
And lost my son, alas,
A boon of the Gods!
It is indeed a pity
That I did not beseech Civa
To grant him immunity
Against calumny.
My sorrow shall be eternal
I have to bear the cross of blame
Lamented the sad king.

157. *(இரத்தினாங்கி வருந்திப் பெருமூச்சு விடுதல்)* திபதை

சொல்லவென்ன வாய்தனிச் சொன்னததி னாலே
பலனென்ன வலுவிலே பாலகன் தனைநீ

போக்கடித்த பின்புத்தி வேண்டியது தானோ
தாக்குதலாய் மிகத்தான் சொல்லி [1]என்ன
எத்தனை வார்த்தை யியம்பினே னறிய
எத்தனை வார்த்தை யியம்பினே னுனக்கு
அத்தனை வார்த்தைக்கு மாமல்ல வென்றோ
உத்தரப் [2]பிரதி உத்தரமு மில்லாமல்
போச்சுதிப் போ[3]சற்றும் போக்கில்லாத் துயரம்
ஆச்சுது [4]நெஞ்சத்து அவைதீ ராது
சித்திரி போறவள் தீவினை முடித்தே
நித்தமுந் துயர்நிலை நிற்கவே செய்தாள்
புழுக்கைக்குப் பட்டம் பொறுக்குமோ பொறுத்தால்
புழுக்கைக்கு மில்லாப் பழிக்குள்ளா வாளோ
எவரெவர் செய்திடு மங்கியை யெல்லாம்
அவரவர் களேதாம் அனுபவிப் பார்கள்
மன்னா மறுகிமனதினில் மாளுவ தல்லால்
உறுதிவெளி யில்லையென் றுரைத்துயிர்த் தாளே.

அரசே! இனிப் பேசி என்ன பயன்? மீண்டும் மீண்டும் சொல்லி வருந்துவதால் பாலகன் வருவானோ? பிடிவாதமாயிருந்து மகனை இழந்துவிட்டீர்! வருந்திப் பேசுவதால் பலன் எதுவுமில்லை. அன்றே பலவாறு தங்களுக்கு எடுத்துச் சொன்னேன். அத்தனை முறை சொன்ன போதும் ஆமாம்! அல்லது இல்லை! என்று ஒரு சொல்லுக்காவது பதில் வரவே இல்லை. எல்லாம் முடிந்து போயிற்று. இனி நீங்க முடியாத பெருந்துன்பமும் வந்து சேர்ந்துவிட்டது, இனி மனக்கவலை தீர வழியே இல்லை. ஓவியம் போன்றவளாகிய சித்திராங்கி கொடுஞ்செயலைக் செய்து நம்முடைய துன்பத்தை உறுதிப்படுத்திவிட்டாள். நாள்தோறும் இத்துன்பம் நிலையான ஒன்றாகிவிட்டது. ஆட்டுச் சாணமாகிய புழுக்கையானது அரசபாரத்தைத்தாங்குமோ? தாங்காது. தாங்குமாறு செய்துவிட்டால் அதனால் பெருந்தீங்கு தானே எற்படும்? அதுபோல மிக இழிவான பழிக்குள்ளானாள் சித்திராங்கி. யார்யார் எந்தெந்த நல்ல செயல், தீய செயல்களைச் செய்தார்களோ அவற்றின் பலாபலன்கள் அவரவர்களையே வந்து அடையும். அரசே! மனங்குழம்பி நொந்து நொந்து அழிவதுதான் முடிவு. வேறு வழியேதுமில்லை என்று கூறிய இரத்தினாங்கி வருந்திப் பெருமூச்சு விட்டாள்.

வலுவில் - கட்டாயத்தில். போக்கடித்தல் - இழத்தல்; தொலைத்தல். தாக்குதல் - எதிர்த்தல், மறுத்தல். இயம்புதல் - சொல்லுதல். ஆம், அல்ல - சரி, சரி இல்லை.

உத்தரம் - மறுமொழி. பிரதி உத்தரம் - பதில்மொழி. போக்கில்லா - நீங்காத. சித்திரி - சித்திரிக்கப்பட்ட ஓவியம். நித்தம் - நாள்தோறும். புழுக்கை - சாணம், அடிமை. பட்டம் - அரசபதவி. பொறுத்தல் - தாங்குதல். அங்கிஷை - அமிசை, அதிர்ஷ்டம். மறுகுதல் - குழப்பமடைதல். மாளுதல் - அழிதல். உறுதிவெளி - வேறு நம்பிக்கை. உயிர்த்தல் - பெருமூச்சுவிடுதல்.

சுவடிச்சொல் - 1. என்னா 2. பிருதி 3. சத்தும் 4. நெஞ்சத்தஅவை.

வசனம் - வெகுசாய்த் துயரப்படும் இரத்தினாங்கியென்னும் தன்னிட ஸ்ரீக்கு ராசநரேந்திரன் பின்னுமென் சொல்வான். (91)

157. Revered King, what is the use of doleful talk
Will it help reviving our son?
Your obstinacy cost his life,
Belated sorrow is a futile exercise.
When I fervently pleaded with you
You remained stonily mute.
Now all is over,
Sorrow is our lot.
Cittirāṅki, the painter's envy
Has done a wicked deed
Which has made grief permanent.
Not a day will pass
Without our wallowing in misery.
Are the dung balls of a goat
Capable of shouldering kingship?
If responsibility is wilfully thrust on undeserving
Sorrow shall follow without fail.
Look at the fate of Cittirāṅki
Pointing to a significant lesson of life
Good deeds and evil ones
Inevitably boomerang on the doer.
Dear King, we have now no choice
But weep our days to destruction
So spoke Rattiṉāṅki
And sighed in despair.

Prose: What did Rājanarēntiran tell the grief-stricken Rattiṉāṅki?

158. *(மகனைத் தூக்கிவர, தேவியும் செல்லுதல்)* சம்பை

நின்துயர மொருநாளும்
நீங்காத துயரம் - பின்னை
என்துயர மென்னிலே யிடிந்துவிழுந் துயர்காண்
[1]பெற்றபிள்ளை முடங்குருடு
[2]பேடுசெவி டானா லும்
[1]பெற்றவர்கள் காப்பதெனும்
பேச்சுநிச மல்லவோ
காட்டிலே அறுப்புண்ட கண்மணியை யெடுத்துவந்து
வீட்டிலே [3]சேர்த்தந்த வீமரரு ளாலே
எந்தடவி லும்பிள்ளை யென்றிருந்தால் அமையுமென்று
நிந்தைநரேந் [4]திரன்நடக்கத் தேவியும்பின் [5]நடந்தாள்.

(வெட்டப்பட்ட கையை மட்டும் கண்டு தாய் புலம்புதல்)

இருவர்களும் வனமெய்தி
எங்கும்தேட வேதுணித்த
கரமும்இரு கா லும்தங்கள்
[6]கண்ணிற்கண் டார்கள்
துணித்தகரந் தனையந்தத்
தோகைரத்தி னாங்கியுந்தன்
மணிக்கடகக் கையிலெடுத்து
மலர்க்கண்ணீர் சோர.

இரத்தினாங்கி! உன் வருத்தம் என்றும் போக்க முடியாத வருத்தமாகிவிட்டது. என்னுடைய வருத்தமோ நானாகத் தேடிக்கொண்ட வருத்தமாகிவிட்டது. தாம் பெற்ற குழந்தை முடமானாலுங் குருடனாலும், அலியானாலும், செவிடானாலும் அக்குழந்தையைப் பாதுகாப்பதே பெற்றவர்கள் கடமை என்பார்கள். எனவே நாம் காட்டிற்குச் செல்லுவோம்; வெட்டுப்பட்டுக் கை, கால்களை இழந்து கிடக்கும் கண்ணின் மணி போன்ற நம்மகனைத் தூக்கிக் கொண்டு வருவோம். இறைவனருளால் பிள்ளையென்று வீட்டிலிருந்தால் போதும் என்று கூறிக் காடு நோக்கி நடந்தான் மன்னன். இரத்தினாங்கியும் கூடவே செல்லத் தொடங்கினாள்.

காடு அடைந்த இருவரும் மகனைத் தேடினார்கள். வெட்டப்பட்ட கைகளும், கால்களும் கிடைத்தன. இரத்தினாங்கி உடனே சாரங்கதரனின் கைகளை மாணிக்க வளையல் அணிந்த தன் கைகளில் எடுத்தாள். மலர் போன்ற அவளுடைய கண்கள் கண்ணீரை வடித்தன.

பேடு - ஆணுமல்லாத, பெண்ணுமல்லாத பிறவி. வீமர் - (இங்கு) இறைவன். தடவு - வகை, அளவு. அமையும் - போதும். கரம் - கை. மணி - மாணிக்கம், முத்து ஆகிய மணிகள். கடகம் - கைவளை. சோர்தல் - வடிதல்.

சுவடிச்சொல் - 1. பெத்த 2. பேடுசெவுடானாலும் 3. சேத்தந்த் 4. திரன்னடக்க 5. னடந்தாள் 6. கண்ணீர்க் கண்டார்கள்.

158. Rattiṉāṅki, your sorrow is such
That it can never be wiped
My grief is of my own making.
Protecting one's child
Whether crippled or blind
Deaf or sans sex
Is the bounden duty
Of any parent, worth the name,
So it is said.
Let us go to the forest
And recover our son
Who has lost his hands and legs
Let there be at least a child,
To call our own.
So saying, the King moved to the forest
Followed by Rattiṉāṅki.
Search for the son
Ended in finding his limbs,
Rattiṉāṅki picked the mutilated hand
In hers adorned by bejewelled bangle,
Her flower-like eyes
Shed a tear of grief!

159. *(வெட்டுண்ட கை, கால்கள்)* **திபதை**

அழுதுரத்தி னாங்கியும் அய்யனே யிந்தப்
புழுதியில் விழுந்து புரளுமோ நின்கை
[1]பேய்கள்கூத் தாடிப் [2]பிசாசுமிவ் வனத்தில்
[3]ஈக்களும் எறும்பும்மோந் [4]தெரிக்குமோ நின்கை
பொன்னெழுத் தாணியும் [5]புத்தக மேந்தி
அன்னை அன்னையென் றழைக்கவில் லாமல்
அவத்தி லறுப்ப:ண்ண லாச்சுதோ நின்கை
[6]சுவைக்கறி பாலுடன் சோறுண்ணுங் கைதான்
கட்டைபோல் கிடக்கவோ கண்களில் காண்பேன்
வெட்டியே கிடக்கவும் விழிகளிற் காண்பேன்
எங்ஙனே ஒளித்தீர் என்தவப் பயனே!
எங்ஙனே ஒளித்தீ ரென்குலக் கொழுந்தே!
தாழவு முனக்குத் தயவில்லை யோதான்
தாயழ நீயிங்கே தான்வரவொண் ணாதோ
நாய்நரிக்கு மறிதின்னத் [7]தாங்கண் டுகந்து
தானிரை கொண்டிங்கே [8]தனித்ததோ மகனே
வனத்தில் வாழும் மகாமெத்தப் புலிகள்
இனத்துடன் வந்தெடுத் [9]துண்டதோ மகனே

(மன்னவன் வருத்தம்)

என்றவள் [10]புலம்ப யிராச நரேந்திரன்
நின்றுகொண் டிருவிழி நீர்மழை பொழிய
கொடியமா பாவி [11]கூறிய வசனப்
படியுனை ஆக்கினை பண்ணினேன் மகனே
பாதகி நெஞ்சில் பகையறி யாதே
தூதரால் கரங்கள் துணிப்பித்தேன் மகனே
மீதிது வழிபாட்டென் றறியல்வேறு சொன்ன
நீதிமந்திரி சொல்லை நீக்கினேன் மகனே
உன்னுட தாய்வந்து உரைக்கவே [12]நானும்
வன்னெஞ்சா யிருந்திப்போ வாடுறேன் மகனே

நான்சொன்ன கரங்கள்கால் நறுக்கியே தூதர்
வான்சொல்லும் வசனங்கள் வகைவகை யாகத்
தான்சொல்லப் பின்புத் தயங்கிசித்தி ராங்கி
ஊன்செல்ல உயிர்செல்ல உரைத்தவா காச
வாணிசொல் லால்மன மறுகினேன் மகனே
[13]கற்பனை கேட்டுக்கால் கையுந் துணித்த
அற்பனென் றேஉனக் கச்சமோ மகனே
இவன்முகத் தினிலேயாம் விழித்தாலும் நமக்குப்
பாவம்வரும் என்றுசலிப் பானதோ மகனே
எனதுவிழி நீர்சிந்த ஏந்திழை யால்நமன்
மனமதில் புலம்பிட வகுத்தனன் மலரோன்
என்முன் னோடி வாராயோ
வெளிப்பட வந்தே
தன்விதனந் தீராயோ
என்முன்னே நீ
நெஞ்சிரக்கமாய் - மகனே
கண்ணின்முன் வந்துஎன்
கவலை நீக்காயோ
இவ்வகை யாய்ச்சொல்லி ஏந்தொணாத் துயரத்
தொவ்வியே யழுதழு துருகிடும் போது
மகேந்திர சித்தர்தன் மனத்தய[14]வாகி
[15]மகேந்திர மன்னர் மனத்துயர் தீர
சாரங்க தரனைப்போய்த் தானும்வா வென்ன
ஆரங்கே யென்றவர் முன்வந் தானே.

இரத்தினாங்கி அழுதபடியே, மகனே! உன்னுடைய கைகள் காட்டுப் புழுதியில் விழுந்து புரளுகின்றனவே! பேயும் பிசாசுங் கூத்தாடித் திரிகின்ற இந்தக் காட்டில் அந்தக் கைகளை ஈயும் எறும்பும் மொய்த்துத் தின்னுகின்றனவே! புத்தகமும் பொன்னலான எழுத்தாணியும் பிடிக்க வேண்டியவை யாயிற்றே உன்கைகள். அம்மா! அம்மா! என்று அழைத்துத் திரியும் நீ அவ்வாறு அழைக்க முடியாமல் போனாய். அறுசுவைக் கறிகளுடன் பாலுஞ் சோறுங் கலந்து உண்ணுங் கைகள் வீணே வெட்டப்பட்டுக் கட்டையைப் போலக் கிடக்கின்றனவே! இப்படி இவற்றை என் கண்களாற் காண வேண்டுமா? தவம் செய்து பெற்ற மகனே!

என் குலக்கொழுந்தே! எங்கே சென்று மறைந்தாய்? தாய் அழுகிறேன்! உன் மனம் இரங்கவில்லையா? நீ என்முன் வரக்கூடாதா? மகனே! ஒரு வேளை, நாய், நரி ஆகியவை தங்கள் குட்டிகளுக்கு உன்னை இரையாக்கிவிட்டுத் தாங்களும் தின்று திரிகின்றனவா? மகனே! காட்டில் வாழும் கொடிய புலிக் கூட்டத்திற்கு நீ இரையாகிவிட்டாயா என்று பலவாறு புலம்பினாள்.

இராசநரேந்திரன் கண்ணீர் வடிய அசையாது நின்றவனாய் மகனே! கொடும் பாவியாகிய சித்திராங்கியின் பேச்சைக் கேட்டு உனக்கு இந்தத் தண்டனை கொடுத்து விட்டேன். கொடும் பாவியாகிய அவள் உள்ளத்தில் இருந்த கொடிய எண்ணத்தை அறியாமல் தூதருக்கு ஆணையிட்டு உன் கை, கால்களை வெட்டச் செய்து விட்டேன். நீதி மந்திரி இது உண்மையல்ல வென்று எடுத்துச் சொன்னார். உன்னுடைய தாயும் வந்து கெஞ்சினாள். அவர்கள் பேச்சையெல்லாம் கேழ்க்காமல் கல்நெஞ்சனாய் நடந்துகொண்டேன். அதன் பயனை இப்போது அனுபவித்து வருத்தமடைகிறேன். கை, கால்களை வெட்டிய தூதுவர்கள் வந்து ஆகாசவாணி கூறிய செய்திகளையெல்லாம் கூறினார்கள். மீண்டும் சித்திராங்கியின் முன்னால் ஆகாசவாணி கூறியவற்றையுங் கேட்டேன். சித்திராங்கியின் உயிரும் உடலும் அழிய வேண்டிய அந்த வார்த்தைகளைக் கேட்டு நான் செய்த தவறுகளுக்காக வருந்தினேன். மகனே!

கற்பனையாக உன்மீது குற்றம் சாட்டிவிட்ட அவள் பேச்சைக் கேட்டுத் தண்டனை கொடுத்துவிட்ட பாவியாயிற்றே என்று என்மீது வருத்தமா? இவன் முகத்தில் விழிப்பதே பாவம் என்று எண்ணிவிட்டாயா? அந்தப் பழிகாரியால் என் கண்களில் நீர் வடிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. நாம் எல்லோருமே இவ்வாறு அழுது புலம்பவேண்டிய நிலையைப் பிரமன் உண்டாக்கிவிட்டான்.

மகனே! என் எதிரில் வா! வந்து என் மன வேதனையைப் போக்கு! என்மீது இரக்கம் கொண்டு எதிரில் வா! என் கவலையைப் போக்கு என்றெல்லாம் கூறி தாங்கமுடியாத துன்பத்தில் அழுது மனம் உருகினான் மன்னன். இராசமகேந்திர மன்னனது வருத்தத்தை உணர்ந்தார் மகேந்திரசித்தர். மன்னன் துயரைப்போக்க எண்ணினார். உடனே சாரங்கதரனை அழைத்தார். அவனும் சித்தர் எதிரில் வந்து நின்றான்.

எரித்தல் - சிறிது சிறிதாய்த் தின்றுவிடுதல். அவம் - வீண். அறுப்புண்ணல் - வெட்டப்படுதல். சுவைக்கறி - சுவைமிக்க காய்கறி உணவு. விழி - கண். எங்நனே - எங்கே. தவப்பயன் - தவத்தின் பயனாகப் பிறந்தவன். குலக்கொழுந்து - குலத்துக்கு முதலாய் இருக்கும் பிள்ளை. தாழ - உள்ளம் இரங்க. மறி - குட்டி. வன்னெஞ்சு - வலியமனம், இரக்கமில்லாத உள்ளம். வான் - ஆகாயம் (ஆகாசவாணி). ஊன் - உடல். மறுகுதல் - குழம்புதல். அற்பன் - இழிவானவன். சலிப்பு - சோர்வு, வருத்தம். ஏந்திழை - பெண். மலரோன் - பிரமன். விதனம் - வேதனை. ஏந்தொணா - தாங்கமுடியாத. ஓவ்வுதல் - பொருந்துதல்.

சுவடிச்சொல் - 1. பேகள் 2. பிச்சாசு 3. யிகளுமெரும்பு 4. தெறிக்குமோ 5. பொத்தக 6. சுவக்கரி 7. தாங்கண்டுகந்து 8. தனித்துதோ 9. துண்டுதோ 10. புலம்பி11. கூரிய 12. னானும் 13. கற்ப்பனை கேட்டி கால் 14. வாதி 15. மகேந்திராமன்னா.

வசனம் - வந்த பிள்ளையைக் கண்டு ராசநரேந்திரனும் ரத்தினாங்கியுமாவலுடனே தழுவிக் கொள்ள, [1]சாரங்கதரன் தாய், தகப்பனிருவருக்குஞ் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணித் தழுவிக் கொள்ள அப்போ பிள்ளையைப் [2]பார்த்து ராச நரேந்திரன் மகனே! உன்னைப் பாவி [3]சொற்கேட்டுப் பகை முடித்தேனென்ன, [4]அதற்குச் சாரங்கதரன் ஏது சொல்வான். (92)

சுவடிச்சொல் - 1. சாரங்கதர தாய், தகப்பனிறவர்க்குஞ் 2. பாத்து 3. சொர்க்கேட்டு 4. அதுக்கு.

159. Bewailing the death of her darling boy
Rattiṉāṅki exclaimed: My son,
Your hands are licking forest dust
Ants and flies of the jungle
Abounding in dancing spirits and gnomes
Are making a feast of them,
The hands that should hold a book
And the golden writing tool.
Your mouth which used to utter endearingly
Mother's name repeatedly
Has lost its voice and is mute.
Hands that should eat festive dishes
Of milk, rice and vegetables
Have been most cruelly cut off
And lie lifeless like logs,
Poor me! I am ordained to see this.
Son of divine grace,
The hope of my lineage,
Whither have you fled?
Can't you see your mother
Lamenting your loss?
Don't you feel any pity for her?

Won't you come back to me?
Perhaps the wild beasts
Have fed their young ones
On your body sweet
And wandering about carefree.
Son, were your corporeal remains
Eaten by the wild tiger?
Rājanarēntiraṉ stood motionless
And spoke out his feelings of grief.
Dear Son, taking Cittirāṅki on her word,
I meted out cruel punishment to you
Unknowing her obnoxious thoughts
I ordered the mutilation of your limbs.
Nītimantri spoke of the error of judgment,
Your mother also appealed to me,
Overlooking their wise words,
I acted in a hard-hearted way.
The subsequent events have been eye openers
And I sincerely regret my folly.
The messengers reported to me the divine voice,
I too heard it in Cittirāṅki's presence
Those were indeed ominous words
Which once and for all sealed Cittirāṅki's fate
And revealed to me the truth.
Son, once again I express regret
For my thoughtless act.
Are you angry with me
For giving credence to Cittirāṅki's words
And meting out severe punishment?
Do you think it is sin too look at me?
Tears well up because of the Siren
Who totally misled me.
Fate has so decreed
That life has become a vale of tears.

Son, come near me, pity me
Wipe off my deep sorrow
So prattled King Rājanarēntiran̲.
Seeing the sorrow of the King
The Cittar Makēntira
Beckoned Cāraṅkataran̲
Who now stood before them
In flesh and blood!

Prose: Rājanarēntiran̲ and Rattiṉāṅki embraced their son who prostrated before them. The King lamented his folly in listening to the words of Cittirāṅki. What did Cāraṅkataran̲ say by way of reply?

160. *(சாரங்கதரன் தோன்றி மறைதல்)* *சம்பை*

அய்யாஎன் மீதிலே யவதூறு மில்லைநான்
செய்யாத காரியங்கள் செய்ததுவு மில்லை
[1]பண்டுநான் செய்ததொரு பழிஉத் தரிக்கயிந்த
மண்டலத்தி லுந்தனிட மகனாக வந்தேன்
உலகமதில் வந்துபழி உத்தரித்தேன் கடவுள்
சிலவில்லை உங்களொடு சேர்ந்திருக்க யெனக்கு
அத்தர்மகேந் திரரருளால் கைகால் [2]வளர்ந்து
சித்தர்களின் திருவருளால் சிரஞ்சீவி யானேன்
[3]புவியோரெந் நாளுமுங்கள் புத்திரன் சாரங்கதர
னிவனெனவே யிருக்கின்றேன் என்றும்நா னெனவே
தந்தைதாய்க் குப்பின்னுஞ்
சாஷ்டாங்க தெண்டனிட்டு
[4]மைந்தன் சித்தர் மகிமையினால்
மறைந்துபோ னானே.

ஐயனே! நான் எந்தவிதப் பழியையும் பாவத்தையும் செய்யவில்லை. தவறான செயல்கள் எதையும் செய்யவும் இல்லை. முற்பிறவியில் நான் செய்த பழி வந்து சேர்ந்தது. அதனால் இந்த நாட்டில் தங்கள் மகனாகப் பிறந்தேன். இந்த உலகத்தில் இந்தப் பழியைச் சுமந்தேன். இனி நான் தங்களோடு சேர்ந்துவாழ இறைவன் அனுமதிக்கவில்லை. முனிவர் மகேந்திரருடைய உதவியால்

வெட்டப்பட்ட என் கை, கால்கள் வளர்ந்தன. சித்தர்களின் கருணையால் நான் என்றும் அழியாநிலையைப் பெற்றுவிட்டேன். தங்கள் மகன் சாரங்கதரன் என்று உலக மக்கள் எப்பொழுதும் கூறும்படியே நடந்து கொண்டிருக்கிறேன் என்று கூறிய சாரங்கதரன் மீண்டும் தாய் தந்தையரின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். சித்தர்களின் மகிமையால் உடனே அவ்விடத்திலிருந்து மறைந்து விட்டான்.

அவதூறு - பழி. பண்டு - முற்காலத்தில்; முற்பிறவியில். உத்தரித்தல் - வந்து சேர்தல். மண்டலம் - நாடு. சிலவு - செலவு - உத்தரவு. அத்தர் - முனிவர். சிரஞ்சீவி - நீண்ட நாள் வாழ்ந்திருத்தல். புவியோர் - மக்கள். சாஷ்டாங்கதெண்டன் - எட்டு அங்கங்களும் நிலத்தில் படுமாறு விழுந்து வணங்குதல். எட்டு அங்கங்கள் - மோவாய், காதுகள் இரண்டு, தலை, புயங்கள் இரண்டு, கைகள் இரண்டு ஆகிய எட்டு உறுப்புகள்

சுவடிச்சொல் - 1. பண்டுனான் 2. வளந்து 3. புவியோ ரென்னாளுமுந்தன் 4. மந்தன்.

160. Sir I was not guilty of misdemeanor
Or any act of sin;
Thanks to my past deeds
I was born as your son
And bore a blame undeservedly.
God does not will
That we should henceforth live together.
Sage Makēntirar has helped
In restoring my lost limbs.
Let me assure you
That all my actions
Have been worthy of you.
So saying he fell
At the feet of his parents.
The Cittar's supernatural powers
Made him vanish forthwith.

161. *(பெற்றோர் வருத்தம்)*

அர்த்தசந்திரிகை

மறைந்திட வேமதி மயங்கின ரிவர்கள்
துறந்தனையோ மகனே எனச்சொல்லு வார்கள்

முன்பின்னு மிகும்படி மும்மடித் துயரம்
மன்பணி மொழியவர் மனத்துள துயரம்
இருதலைக் கொள்ளி எறும்பது போலே
வருந்துய ராச்சுது [1]மகன்நினை வாலே
வந்துநீ துயரத்தை [2]மாற்றியி ராயோ
சிந்தைமகிழ் செங்கோல் செலுத்த வாராயோ
[3]இழந்த பொருளும் [4]வந்ததென யிருந்தோம்
மொழிந்துநீ மறைவது முறையோ மகனே!

மகன் மறைந்ததைக்கண்டு தாய்தந்தையர் ஒன்றும் புரியாதவர்களானார்கள். மகனே! எங்களைவிட்டுப் பிரிந்து போய்விட்டாயே என்று கூறிய அவர்கள் முன்பு இருந்தைவிட மிகுதியாக வருத்தம் அடைந்தார்கள். இருதலைக் கொள்ளியின் இடையில் சிக்கிய எறும்பைப் போலத் துடித்தார்கள். மகனே! எங்களுடன் வந்து எங்களுக்கு மகிழ்ச்சி உண்டாக்கியிருக்கக் கூடாதா! நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வரமாட்டாயா! கைவிட்டுப்போன பொருள் கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சியடைந்தோமே! இப்படி எங்களோடு பேசிவிட்டு மறைந்து போவது நீதியோ என்று கூறி வருந்தினார்கள்.

துறத்தல் - விட்டு நீங்குதல். மும்மடி - மூன்று மடங்கு, மன் - மன்னன். பணிமொழி - நல்ல வார்த்தை; பெண். இருதலைக்கொள்ளி - இரண்டு முனையிலும் தீ பற்றிய கட்டை. செங்கோல் - அரசாட்சி.

சுவடிச்சொல் - 1. மகனினவாலே 2. மாத்தி 3. எழந்த 4. வந்துதென.

வசனம் - என்று [1]துக்கித்துக் கொண்டு அப்போ ராசநரேந்திரன் ஒரு [2]கனவு கண்டங்கேது சொல்வான். (93)

சுவடிச்சொல் - 1. துக்கிச்சிக் 2. கினவுக்கொண்டங்.

161. The parents were bewildered
At the sudden disappearance of son.
Darling boy, why have you left us
Bewailed the aged ones,
In deeper sorrow, greater grief
Their plight resembled the ant
Caught between blazing flames.
Son, why don't you join us

And cheer up our lives?
How we felt happy
That the lost object had been recovered
And you would take over
The reins of government.
Is it fair to converse with us for a while
And vanish so abruptly?
Lamented the parents.

Prose: While grieving thus, Rājanarēntiraṉ saw a dream and spoke:

162. *(இராசநரேந்திரன் இறக்கத் துணிதல்)* **திபதை**

வந்திடும் பிள்ளையும் மாயமாய்ப் போச்சு
சந்ததி [1]யன்றிநான் தாரணி தனிலே
இருந்து மகேந்திரத் திறைய வனெனப்
பொருந்திலே னென்னுயிர்ப் போக்குவேன் இந்த
வனந்தனை [2]விட்டுநான் வாறதே யில்லை
மறிப்பதே யல்லாமல் மந்திரியே நீதி
[3]மைந்தனே நீயிந்த மகேந்திரத் தெய்தியே
அரசு செலுத்தென வமைச்சனுஞ் செப்புவான். அய்யா
புலிக்கிரகந் தன்னிலே பூனையோ யிருக்கும்
[4]ஏதுகொற் றவனே யிப்படி யுண்டோ
ஏதுகா வலனேநீ ரென்னதான் நினைந்தீர்
[5]பண்டைநா ளையிலந்தப் பாரத மாகுஞ்
[6]சண்டையி லபிமன்னன் சாகவே யப்போ
அருச்சுனன் தன்துயர் அறவே மாயன்
உரைசெய்தது கேளென்று [7]உரைக்கலுற் றானே.

நேரில் வந்து பேசிய மகனோ மாயமாய் மறைந்துவிட்டான். என்னுடைய வமிசம் விளங்க ஒரு பிள்ளையில்லாதவனாகி விட்டேன். இனி இந்த உலகத்தில் மகேந்திரபுரத்து மன்னன் என்ற பெயரோடு வாழ மாட்டேன். இனி இருப்பதைவிட உயிர்விடுவதே நல்லது. எனவே நான் இந்தக் காட்டைவிட்டு இனிவரமாட்டேன். நீதி மந்திரியே! நான் இங்கேயே இறப்பேன். நீயே நீதி

செலுத்தும் வல்லமை படைத்தவன். மகேந்திரபுரத்தின் ஆட்சியை நீயே ஏற்று அரசு புரிவாயாக என்று கூறினான் மன்னன். அது கேட்ட அமைச்சன்.

ஐயா! புலி வாழும் குகையில் பூனை தங்கியிருக்க முடியுமா? அரசே! இது நீதியாகுமா? தாங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? பாரதப் போர் நடைபெற்ற போது அபிமன்னன் போரில் இறந்து விட்டான். உடனே தந்தையாகிய அருச்சுனனும் இறக்கத் துணிந்து விட்டான். அப்போது அருச்சுனனின் துயரத்தைப் போக்கக் கிருஷ்ண பகவான் கூறியதைக் கூறுகிறேன் கேளுங்கள் என்று கூறத்தொடங்கினான்.

சந்ததி - வமிசம், பிள்ளைப்பேறு. தாரணி - நில உலகம். வனம் - காடு. வாறது - வருகிறது என்பதன் கொச்சைமொழி. மறித்தல் - இறத்தல். கிரகம் - வீடு. அபிமன்னன் - அருச்சுனன் மகன். அற - நீங்க. மாயன் - கண்ணன்.

சுவடிச்சொல் - 1. அன்றினான் 2. விட்டுனான் வாரதே. 3. மந்தனே 4. எதுக்கொத்தவனே 5. பண்டனாளை 6. சண்டையிலடி 7. உறைக்கலுத்தானே.

162. The son who spoke with me has vanished,
Bereft am I of a worthy successor.
No more shall I call myself the ruler of Makēntirapuram
Better it would be to lay down my life.
Minister dear, I shall not stir out this wood,
I shall die here
You go and take the reins of government
Since your sense of justice is exceptional.
Hearing this, the minister said,
Can a cat ever occupy
The cave of the tiger?
I wonder why you are talking
In a rather confused strain.
In the Maha Bharata war,
When Apiman lost his life
Arjuna tried to kill himself,
Let me recollect to you Lord Krisnan's words
Spoken in this context
To console the bereaved father.

163. (நீதி மந்திரி பாண்டவர் கதை சொல்லத் தொடங்குதல்)

சம்பை

பாண்டவர்கள் சூதாடிப் பாரிழந்து பன்னிரண்டு
ஆண்டுகா னகமெய்தி அக்ஞாத வாசம்
ஒருவருஷம் [1]தொலைந்துதங்கள் உரிமைதனை வேண்டியவர்
அரவக்கொடி யோனிடத்துக் [2]காயனைத் தூதனுப்ப
அத்தினா புரத்தி லணுகிமால் [3]விதுரனிட
மனைக்குணண்ணி யிடும்விருந்து மனமார வருந்தி.

பாண்டவர்கள் கௌரவர்களோடு சூதாடித் தங்கள் நாடு நகரங்களை இழந்தார்கள். துரியோதனன் ஆணைப்படி பன்னிரண்டாண்டு வனவாசம் செய்தார்கள். ஓராண்டு யாருமறியாதபடி மறைந்து வாழ்ந்து அஞ்ஞாத வாசத்தையும் முடித்தார்கள். தங்களுக்குரிய நாட்டைத் திரும்பத்தருமாறு வேண்டிக் கண்ணபிரானைத் துரியோதனனிடம் தூதாக அனுப்பினார்கள். அத்தினாபுரம் அடைந்த கண்ணன் நேரே திருதராட்டிரனின் மந்திரியாகிய விதுரன் வீட்டிற்குச் சென்றான். விதுரன் வீட்டிலேயே விருந்து உண்டான்.

பார் - பூமி. கானகம் - காடு. அக்ஞாதவாசம் - ஒருவரும் அறியாதபடி வாழும் வாழ்க்கை. உரிமை - உரிய நாடு நகரம். அரவம் - பாம்பு. பாம்புக்கொடியுடையவன் துரியோதனன். ஆயன் - இடையன், கண்ணன். அத்தினாபுரம் - கௌரவர்கள் நிலம்; வடமேற்கு மாகாணப்பகுதி; இப்போதைய மீரட்டு நகரப் பகுதி. விதுரன் - துரியோதனின் தந்தையாகிய திருதராட்டிரனின் அமைச்சன். மனை - வீடு. நண்ணுதல் - அடைதல்.

சுவடிச்சொல் - 1. துலைந்து 2. காயனத்தூத்தியனுப்ப 3. விதுரநிட 4. மனைக்குனன்றியிடும்.

163. The Pāṇṭavās who played at dice
With the Kauravās
Lost their Kingdom and all.
As ordered by Turiyotana,
They spent twelve years in forest
And one year *in cognito*.
When the stipulated period was over,
They sent Kaṇṇaṉ as their agent
To claim the kingdom.
Kaṇṇaṉ reaching Hastināpuram

Went to Vitura's house,
The minister of Turiyōtana,
Accepted the host's hospitality
Which included a grand feast.

164. *(கண்ணன் தூதுசென்று திரும்புதல்)* திபதை

[1]துரியோ தனன்பக்கல் சேர்ந்துஅந்த மாயவனும்
அரசா யவர்கள்சொல்லு மவையெல்லாம் கேழ்க்க
வெகுண்டு அரவக்கொடி வேந்தனு மப்போது
சிகண்டியோ ரய்வர் திடங்குலைந் தனரோ
ஆண்மைகள் போககால [2]மற்றதோ வென்னைத்
தாண்மைகள்செய் திடத்தூது தானும்வந் தனையோ
உன்னிட [3]தந்திராதி உபாயமீ தெல்லாம்
என்னினி லீதரித் திருக்குமவ் வளமவர்
இடமவர் தமக்கேநா னினிக்கொடே னெனவப்போ
அடல்செய்ய [5]நாட்சொலென் றாயனு[6]முரைக்க
ஒருபத் தெட்டென்று உரைத்திட துவார
புரியவர் மீண்டய்ந்து புணரியர் தமக்கும்
வண்மையோர்க் கிசைந்திடும் வசனம துரைக்கத்
தர்மபுத் திரர்தலை தாழ்த்தினா ரஞ்சி
இளையவர் [7]நால்வரும் இருபுயம் விம்மத்
துளபமால் பாதனைத் தொழுதிருந் தாரே.

தூதுசென்ற கண்ணன் துரியோதனனைக் கண்டான். சூதாட்டத்தில் இழந்த பாண்டவர்களின் நாட்டைத் திருப்பித்தருமாறு பாண்டவர்கள் சார்பாகக் கேட்டுக் கொண்டான். அரவக்கொடியையுடையவனாகிய துரியன் மிகவும் கோபம் கொண்டான். பேடிகளாகிய பாண்டவர்கள் வலிமையிழந்து விட்டார்கள் போலும்! அவர்களது வீரம் அழியும் காலம் தோன்றிவிட்டது போலும்! எனவே தான் என்னை இழிவுபடுத்த நினைத்துவிட்டார்கள்; நீயும் என்னிடம் தூது வந்திருக்கிறாய். உன்னுடைய சூழ்ச்சிகளும் தந்திர வழிமுறைகளும் என்னிடம் எடுபடாது. என்னிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்ட அவர்களுடைய நாடு நகரம் முதலான செல்வங்களையெல்லாம் இனி நான் அவர்களுக்குக் கொடுக்கமாட்டேன் என்று கண்ணனிடம் கூறிவிட்டான்.

அப்படியானால் உன்னோடுபோர் தொடுப்பதற்குரிய நாளைக் குறிப்பிட்டுச் சொல் என்றான் கண்ணன். உடனே துரியன் பதினெட்டு நாட்கள் போர் நடைபெறும் என்று கூறினான். துவாரகாபுரித்தலைவனாகிய கண்ணன் துரியனிடமிருந்து திரும்பி வந்து புகழ்பெற்ற சான்றோர் விரும்பும் போர் பற்றிய செய்தியைக் பாண்டவருக்குக் கூறினான். கண்ணன் கூறியதைக் கேட்ட தருமர் 'போர்' என்ற செய்திக்கு அஞ்சி மௌனமாய்த் தலைகவிழ்ந்து நின்றார். தருமபுத்திரரின் தம்பிமார்களாகிய நால்வரும் தங்கள் தோள்கள் பூரிக்கப் பெருமகிழ்ச்சி யடைந்தவர்களாய்த் துளசிமாலையை அணிந்தவராகிய கண்ணபெருமானைத் தொழுது நின்றார்கள்.

மாயவன் - கண்ணன். அவையெல்லாம் - இழந்தவையாகிய செல்வங்களை எல்லாம். அரவக்கொடி வேந்தன் - பாம்புக்கொடியையுடைய துரியோதனன். சிகண்டி - பேடி, அலி. அய்வர் - பஞ்சபாண்டவர். திடம் - வலிமை. ஆண்மை - வீரம். தாண்மை - இழிவு. தந்திராதி உபாயம் - தந்திரம் முதலான சூழ்ச்சிகள். ஈதரித்தல் - கொடுத்திருத்தல். வளம் - வளமை, செல்வம். இடம் - நாடு, நகரம் முதலியன. அடல் - போர். ஒருபத்தெட்டு - பதினெட்டு. துவாரபுரி - துவாரகை - கண்ணபிரான் அவதரித்த திருத்தலம். அய்ந்து புணரியர் - ஐவராகிய பாண்டவர்; ஐவராய் இணைந்தவர். வண்மையோர் - புகழ்பெற்ற தலைவர்கள். அஞ்சுதல் - பயமடைதல். புயம் - தோள். விம்முதல் - பூரித்தல். துளபம் - துளசி.

சுவடிச்சொல் - 1. திரியோதரன்பக்கல்ச்சேந்து 2. மத்துதோ 3. தந்திரா 4. னானினிக்குடேனெனப்போ 5. னாட்ச்சொல் 6. முறைக்க 7. னால்வரும்யிரு.

164. On behalf of the Pāṇṭavās,
Kaṇṇaṉ their emissary
Beseeched Turiyōtaṇa
To restore their rightful kingdom
Lost in the game of dice
To the Pāṇṭavās.
This drove Turiyōtaṇa
Bearing the snake on his flag
To a paroxysm of wild fury.
Spoke he in wrath,
Have the Pāṇṭavās lost their valour,
Is their doomsday nearing?
To make me eat humble pie,
You have agreed to act as messenger,

But beware, your scheming and intriguing
Shall not befool me.
Listen, I for one, will not restore
Either their Kingdom or other possessions
Entrusted to my custody.
Then Kannaṉ wanted Turiyōtaṉaṉ
To fix a date for war.
Eighteen days shall we fight
And fight in full swing
Thundered angry Turiyōtaṉaṉ.
When Kannaṉ broke the news of war
To the Pantava brothers,
Tarumaputtira held his head low
In dread of bloodshed,
His four brothers were quite excited
And stood with raised shoulders.
They fell at the feet of Kannaṉ
Paid obeisance to the wearer of the *tulasi* garland.

165. *(துரியன் படையெடுப்பு)* சம்பை

இவர்களய்ந்து பேருமகிழ்ந் திருந்தனர்கள் [1]சகுனி
நூற்றுவர்கள் கர்ணன் [2]பீஷ்மனொடு துரோணன்
கிருபாச்சாரி அசுவத்தாமன் பதினோ
ரக்குரோணி எனும்படை சூழ
அரவக்கொடி யோனப்போ அமர்புரிய வந்தான்
ஆனைபரி தேர்கள்படை யாகுமேழக் குரோணி
சேனையொடு பஞ்சவரும் [3]சேர்ந்தெதிர்த்துவந்தார்
இருவர்களுங் கடல்போல [4]எதிர்த்துப்போர்செயும்நாளில்
ஒருபத்துடன் [5]மூணாம்நா ளுத்தமது தன்னில்
புரைசூதில் லாததர்ம புத்திரனையே பிடிக்க
[6]துரியோ தனன்தனது சிந்தைதனி [7]லெண்ணி
வீமசே னன்பேரில் வீறுசமர்செய் பூரி

மாமனையு மனுப்பிவெற்றி வாள்விசயன் பேரில்
கோபாலர் தங்கள்படை கூடியேவச் சண்டை
ஆபாரி யாய்ச்செய்யு மந்தவே ளையிலே.

போர்ச்செய்தி கேட்ட பாண்டவர்கள் மகிழ்ச்சியோடு இருந்தார்கல். கௌரவர்கள், சகுனி, கர்ணன், பீமன், துரோணன், கிருபாச்சாரி, அசுவத்தாமன் ஆகியவர்கள் உட்பட்ட பதினொரு அக்குரோணி படைகள் சூழத் துரியோதனன் போருக்குப் புறப்பட்டான்.

யானை, குதிரை, தேர், ஆள் என்னும் நாற்படையாகிய ஏழு அக்குரோணி படைகள் சூழ்ந்து வர, பாண்டவர் ஐவரும் எதிர்த்துப் புறப்பட்டார்கள். கடலொடுகடல் மோதியது போல இருபடைகளும் மோதின. பன்னிரண்டு நாட்கள் பெரும்போர் நடந்து முடிந்தது. பதின்மூன்றாம் நாள் போர் தொடங்கியது. குற்றங்குறைகளோ சூதுவாதோ சிறிதுமில்லாத தருமபுத்திரனை முழுமையாகத் தோற்கடிக்க வேண்டுமென்று பெரிதும் சிந்தித்தான் துரியன். முதலில் வீமசேனனோடு சுடும்போர் நிகழ்த்த, சுடும்போர் செய்யக்கூடிய பெருஞ்சேனையோடு, மாமன்சகுனியை அனுப்பினான். தொடர்ந்து வெற்றிவாளும் வில்லுமேந்திய அருச்சுனனோடும், சுண்ணபிரானோடும் சேர்ந்து போரிடுமாறு தங்கள் படைகளை ஏவினான். இரண்டு படைகளும் மிகவும் ஆரவாரத்தோடு பெரும்போர் நிகழ்த்தின.

சகுனி - துரியனின் அம்மான் (தாய்மாமன்). நூற்றுவர் - துரியனும் அவன் தம்பிமார் தொண்ணூற்றொன்பதின்மருமாகிய நூறுபேர். கர்ணன் - குந்திதேவியின் மகன்; கவச குண்டலங்களோடு பிறந்தவன்; அதிரதன் என்னும் சாரதியால் வளர்க்கப்பட்டவன்; துரியனால அங்கதேசத்து மன்னனாக ஆக்கப்பட்டவன். பீஷ்மன் - சந்தனு மகன்; தாய் பாகீரதி. துரோணர் - பாரத்துவாசமுனியின் மகன்; பாண்டவருக்கு வில்வித்தை கற்பித்தவர். கிருபாச்சாரி - குருகுல மன்னர்களின் ஐந்து ஆசாரியர்களுள் ஒருவர்; வில்லாசிரியர். அசுவத்தாமன் -குதிரை முகத்தில் பிறந்தவன்; துரியனுக்காகப் பாண்டவரோடு போரிட்டவன்; சிரஞ்சீவி பட்டம் பெற்றவன். அக்குரோணி - சுமார் 2 இலட்சம் எண்ணிக்கை கொண்ட நாற்படை. பரி - குதிரை. புரை - குற்றம். வீறுசமர் பெரும்போர். பூரி - பெரும்படை. ஆபாரியாய் - ஆரவாரம்.

சுவடிச்சொல் - 1. சகுநிணூத்துவர்கள் 2. வீணைணொரு 3. சேந்தெதுத்து வந்தார். 4. எதுத்துப் போரா செயுனாவில் 5. முன்னானாளுயித்தமது 6. திரியோதரன் 7. லென்றி.

வசனம் - நகுலன், சகாதேவன், அபிமன்னனிவர்களிருக்கப் பீமசேனனேது செய்தானென்றால்.

165. The Pāṇṭavās were elated
To hear the tidings of war.
The infantry of Turiyōṭaṇa
Consisting of Cakuṇi, Karna Bīsma,
Turōṇa, Kripa and Asvattāma
Got ready to fight.
When their cavalry
Of fighters on elephant, horse
Chariot and men were sighted,
The five Pāṇṭavās began the onslaught,
Like sea dashing against sea.
They fiercely fought
For twelve long days.
When on the thirteenth day
The war was renewed,
Turiyōṭaṇa wanted to defeat Taruma
Without resort to chicanery or cheat.
Uncle Cakuṇi was despatched
With a powerful platoon
To fight Vīma, the Valiant.
Next orders were given
To fight Arjuna with bow and sword
Renowned for success and Krisṇa.
Both the armies
Became absorbed in the fury of battle

Prose: When Nakulaṇ, Cakātēvaṇ and Apimaṇ were present, what did Vīma do?

166. *(வீமன் அபிமனைத் தேடி வருதல்)* திபதை

தர்மபுத் திரனையே தான்பிடிக்க வென்று
வன்மமாய்த் [1]துரியோ தனன் அமர்க்களந் தன்னில்
வாவென்று கூறவே வம்மொழி தன்னை
வேல்பீமன் கேட்டு வெகுண்டுட னெழுந்து

[2]காலாக்கினி ருத்திரன்போல் கனக்கவே சீறி
[2]காலாக்கினி போலவருங் கனசேனை மீதில்
வாளுருவிக் கொண்டு வருஞ்சேனை தன்னைத்
தோளறக் காலறத் துணைக்கரங்கள் வீழ்க
ஆனைகள் தும்பிக்கை [3]அற்றங்கே விழவுஞ்
சேனைக ளங்கங்கே சிதறியே விழ்வுங்
குதிரைகள் கொழுத்த குடலெல்லாஞ் சரிய
அதிரவே பன்னிரண் டாயிரம் பேருங்
[4]கதறியே விழவிழக் கண்டதுண்டஞ் செய்து
எதிரில்லா மீளும்போ திந்தவோர் சேதி
கேட்டிரு விழிகளிற் கிளறவே வீமன்
[5]வாட்டமாய் மைந்தனைத் தேடியே வருக

(அபிமன் இறந்துபடுதல்)

வேகமாய் வாறதோர் வீமனைக் கண்டு
ஏகமாய் நம்முட [6]னெதிர்த்தமர் புரிந்து
வாயுவின் மகனுமபி மன்னனுங் கூடில்
தேயுவும் வாயுவுஞ் சேர்ந்தொன்றா யெரிக்கும்
வனமது போல்சேனை மாண்டிடும் பின்னை
முனிந்தமர் ஏதென்ன மோசங்கா ணென்று
[1]துரியோ தனனங்க தேசத் தரசனுக்கு
விரகுடன் கூறஅவ் வேந்தனு மப்போ
எரிபொறி யென்னவே [7]எதிர்த்தங்கே வீமன்
நடுவழி தனிற்கொன்றை மாலையைப் போடத்
தடையதா யிருந்திடுஞ் சமையத்தி லுள்ள
படையெலாந் திரண்டெழு பரவைபோ லளைந்தே.

(கண்ணன் இந்திரனுக்கு உரைத்தல்)

அபிமனை மீளவொட் டாமலே வதைக்கும்
விபரீதந் துவாரகை வேந்தனு மறிந்தே
இந்திரன் தனைநினைந் திடவந்தா னுந்தன்

மைந்தனர்ச் சுனனபி மன்னனுட சேதி
அறிந்திடி லுயிர்விடு மதுபரி கரியென்
றறைந்திட மகவானு மப்பொழு தவர்கள்.

(இந்திரன் சூழ்ச்சி)

ஏகிடும் வழிக்குமுன் ஏகியே தீயுண்டு
இறக்கவே செய்தனன் அதில்விழச் [8]சுற்றும்
மறையவன் [9]போல்சுற்ற மாயவன் பார்த்தன்
குறையல்லோ [10]பார்ப்பான் கொழுங்கனல் விழுவுஞ்
[11]சுற்று றானெனத் துரிதென வோடி
எத்த னான்குறை யேதெனக் கேழ்க்க
கைத்தல மிரண்டையுங் காண்டிபன் பிடிக்க
வித்தகன் மறையவன் விளம்புவான் [12]நானும்
தவஞ்செய்து [13]பெற்றதோர் தனையனு மரித்தான்
சிவந்தெழுந் திதநீர் சென்மத்தைப் போக்கப்
[14]பார்க்கிறேன் கைத்தலம் பற்றுதல் விடுயென
ஏற்குமோ [15]மகனிறந் ததிற்பெருந் தாதை
சாவது தர்மமோ தவிரெனப் [16]பார்த்தன்
நாவகந் தன்னிலே நவின்றிட மறையோன்
உந்தனுக் கெந்தன் உறுதியா வதுபோல்
வந்திடிற் தவிர்த்திடு வேனென வலக்கை
தாவென விசைந்தனன் தானுமந் நேரம்
மேவினன் தனஞ்சையன் வேந்தர்நால் வர்களும்
[17]மற்றுளோர் களும்முகம் வாடியே துயர்தந்
[18]துற்றிட விருந்ததோர் [19]சோதனை கண்டே
[20]எண்ணமேல் வந்திட என்னமோ வெனத்தன்
அண்ணனார் தாள்பணிந் தங்கிருந் தனனே.

தருமபுத்திரனைத் தோற்கடித்துச் சிறைபிடிக்க வேண்டுமென்ற பிடிவாதத்தோடு இருந்த துரியன் தருமனைப் போர்க்களத்திற்கு அழைத்தான். அதைக்கேட்ட வீமன் கொதித்தெழுந்தான். ஊழித்தீ காலத்திய சம்மாரமூர்த்தியைப் போலக் கொடூரமாகச் சீறினான். உலக முடிவுக் காலத்தில் ஏற்படும் பெருந்தீயைப் போல

எதிரில் வரும் பெரும் படையோடு மோதத் தொடங்கினான். வாளை உருவினான்; எதிரில் வந்த படைகளின் கைகளும் கால்களும் அற்று விழும்படியாக வெட்டி வீழ்த்தினான்; தோள்களை முறித்தான்; யானைகளின் துதிக்கைகளை வெட்டினான்; சேனை வீரர்களை ஆங்காங்கே சிதறடித்தான். வீமனது பெரு வீரத்தால் குதிரைகளின் குடல்கள் சரிந்தன; பல ஆயிரம் வீரர்கள் கதறிக்கதறி விழுந்து கண்டதுண்டமாக்கப்பட்டார்கள். இவ்வாறு பெரும் வெற்றியோடு திரும்பினான் வீமன். அப்போது அபிமன்னன் போர்க்களத்தில் இருக்கிறான் என்ற செய்தியை அறிந்தான். கண்களில் பொறிபறக்க மிகுந்த வருத்தத்தோடு மகனைத்தேடி வந்தான். விரைவாக வந்துகொண்டிருக்கும் வீமனைக் கண்டான் துரியன். இதுவரை கடும் போர்புரிந்த வாயுவின் மகனாகிய வீமன் மீண்டும் அபிமன்னனுடன் சேர்ந்து போர் செய்யத் தொடங்குவான் போலிருக்கிறது; அப்படி அவர்கள் இருவரும் சேர்ந்தால், நெருப்புங் காற்றும் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரு காட்டை எரிக்கத் தொடங்கினால் அந்தக்காடு அடையும் அழிவைப் போல, நம்முடைய படை முழுவதும் நாசமடையும்; அதன்பிறகு வருந்துவதனாலோ கோபித்து எழுவதனாலோ பயன் எதுவும உண்டாகாது என்றெல்லாம் எண்ணிய துரியன் இதை மிகுந்த உணர்ச்சியோடும் திறமையோடும் அங்க தேசத்து மன்னனிடம் கூறினான். (அப்போது அங்க தேசத்தை யாண்டவன் கர்ணன்.) அம்மன்னன் உடனே தீப்பொறி போலக் கிளம்பினான். வீமன் அபிமன்னனை நெருங்காதபடி வீமன் வரும் வழியில் கொன்றை மாலையைக் குறுக்கே போட்டு ஒரு தடையை ஏற்படுத்தினான். அப்போது துரியனின் படைகள் எல்லாம் ஒன்றாய்த் திரண்டு பெருங்கடலைப்போல அபிமன்னனைச் சூழ்ந்து வளைத்துக்கொண்டன; படைகளின் இடையில் சிக்கிய அபிமன்னனை மேலே செல்ல முடியாதபடி மேன்மேலும் வதைத்துக் கொன்றன. இந்தக் கொடிய செயலைறிந்தான் துவாரகாபுரித் தலைவனாகிய கண்ணன். அருச்சுனனுடைய தந்தையாகிய இந்திரனை மனத்தில் நினைத்தான். இந்திரனும் கண்ணன் முன் தோன்றினான். உன் மகன் அருச்சுனன், அபிமன்னன் இறந்து பட்டதை அறிந்தால் உடனே உயிர் விட்டு விடுவான். அதைத் தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்து விடுக என்று கூறினான் கண்ணன். உடனே இந்திரன் அருச்சுனன் போருக்குச் செல்லும் வழியில் ஒரு தீக்குண்டத்தை ஏற்படுத்தினான். தான் ஒரு அந்தணனைப் போல உருவெடுத்தான். அந்தத் தீக்குழியில் விழுந்து இறப்பதற்காக அதனைச் சுற்றி வருவது போலத் தீக்குழியைப் சுற்றி வந்தான். அந்த வழியில் வந்த சுண்ணபிரானும் அருச்சுனனும் அந்தணன் செய்வதைப் பார்த்தார்கள். நெருப்பில் விழுந்து உயிர்விடுவதற்காகவே சுற்றி வருகிறான் என்பதை அறிந்த அருச்சுனன் விரைவாக ஓடி அந்தணன் கைகளைப் பிடித்துக் கொண்டு உனக்கு என்ன குறை நேர்ந்தது என்று கேட்டான். அறிஞனாகிய அந்தணன் அருச்சுனனை நோக்கி, ஐயா! நான் தவஞ்செய்து பெற்ற மகன் இறந்து விட்டான். என்றாவது ஒருநாள் அழியப்போகும் இந்த உடல் இனியும்

இருக்க வேண்டுமா? உயிர்விடவே இங்கு வந்திருக்கிறேன். பிடித்திருக்கிற என் கைகளை விடுங்கள் என்று கூறினான். மகன் இறந்தான் என்பதற்காகத் தந்தை உயிர் விடுவது என்பது தகுமா? இது தர்மமாகுமா? உன் செயலைக் கைவிடுக என்று கூறினான் அருச்சுனன். உடனே அந்தணன் அருச்சுனனை நோக்கி, என்நிலைமை உனக்கு ஏற்பட்டால் நீயும் உயிர் விடாமல் இருப்பாயானால் நான் இப்பொழுது உன் சொற்படி நடக்கிறேன், என்று கூறி, அப்படியே சத்தியம் செய்து கொடு என்று அருச்சுனனின் வலதுகையைப் பிடித்தான். இருவரும் சத்தியம் செய்து பிரிந்தனர். பிறகு அருச்சுனன், அவனுடைய சகோதரர்களாகிய நால்வர், மற்றுமுள்ளவர்கள் ஆகிய அனைவரும் வருந்தினார்கள்; முகம் சோர்வடைந்தார்கள். அந்தணன் சத்தியம் வாங்கிய இந்த நிகழ்ச்சியானது, மேலும் ஏதோ ஒரு துன்ப நிகழ்ச்சி வந்து சேரவிருக்கிறது என்பதற்கு அறிகுறியாகிறது என்று எண்ணினார்கள். என்ன நடக்கவிருக்கிறதோ என்ற எண்ணத்தோடு அண்ணன் திருவடிகளை வணங்கி நின்றான் அருச்சுனன்.

வன்மம் - வைராக்கியம். அமர்க்களம் - போர்செய்யுமிடம். வெகுண்டு - கோபித்து. காலாக்கினி - ஊழித்தீ. ருத்திரன் - சம்மார மூர்த்தி, அழித்தல் தொழிலுக்குரிய இறைவன். கனக்க - மிகுதியாக. சீறுதல் - பெருங்கோபமடைதல். கண்டதுண்டம் - பல துண்டுகள். கிளறல் - ஒளிவிடுதல் வாயுவின்மகன் - பீமன்; வாயுவின் அமிசத்தால் குந்தி - பாண்டு ஆகியோர் மகனாகப் பிறந்தவன். வாயு - காற்று. தேயு - தீ. வனம் - காடு. முனிதல் - கோபித்தல். விரகு - உணர்வு, திறமை. பொறி - தீப்பொறி. கொன்றை - ஒருவகைமரம். பரவை - கடல். அளைதல் - கலக்குதல். துவாரகை வேந்தன் - கண்ணபிரான். இந்திரன் மைந்தன் - குந்தி - பாண்டு ஆகியோருக்கு இந்திரமந்திரத்தால்பிறந்தவன் - அருச்சுனன். பரிகரித்தல் - பரிகாரம் செய்தல், மாற்றுதல். மகவான் - இந்திரன். மறையவன் - அந்தணன். மாயவன் - கண்ணன். பார்த்தன் - அருச்சுனன். கனல் - தீ. துரிதாக - விரைவாக. காண்டிபன் - அருச்சுனன். வித்தகன் - அறிஞன். தனயன் - மகன். மரித்தல் - இறத்தல். இதநீர்ஜென்மம் - அழியும் நீர்மையுடைய உடல். நீர்மை - தன்மை. தாதை - தந்தை. தவிர்தல் - விட்டுவிடுதல். நவிலுதல் - கூறுதல். இசைந்தனன் - இணங்கினான், சம்மதித்தான். வேந்தர் நால்வர் - தருமர், வீமன், நகுலன், சகாதேவன். தாள் - திருவடி.

சுவடிச்சொல் - 1. திரியோதரன் 2. காலாக்கினி 3. அத்தங்கே 4. கதரியே 5. வாட்டமாயிமந்தனை 6. எனதுத்தமர் 7. எதுத்தங்கே 8. சுத்தும் 9. போலசுத்த 10. பாப்பான்11. சுத்துறா 12. னானும் 13. பெத்ததோர் 14. பாக்குறேன் கய்த்தலம் பத்துதல் 15. மகநிறத் திரபெறுந் 16. பாத்தனனாவகந் 17. மத்துளோர் 18. துத்திட 19. சோதினை 20. என்றமேல்.

வசனம் - அப்போ அர்ச்சுனனைப் பார்த்து தர்மபுத்திரரேது சொல்வார். (95)

166. With the intent of capturing Taruman
Turiyōtaṉa summoned him to fight.

On hearing this,
Vīma flew into a rage
Let out a cry
Like Lord Siva on the Armageddon eve,
Fought fiercely like the avenging fire.
Drawing his sword,
He cut the limbs of the advancing men,
Broke their shoulders, scattered the men,
Sliced the trunks of elephants
Slaughtered horses, killed soldiers
Emerged triumphant
After a fierce battle.
Then he was told that young Apiman̲ was in the fray
Which made him sad and furious.
When Turiyōtan̲a saw Vīma,
The son of the wind god
Marching menacingly
He knew that a combination of the two,
Vīma and Arjuna,
Would make them as dreadful and dangerous
As alliance between wind and fire,
And sure defeat for the Kaurava army.
No purpose in lamenting late
It is better to be on guard,
Turiyōtan̲a brought this to the notice of
Karn̲a, King of Aṅka.
Forthwith Karn̲a swept into the battle field
Like a burning ember
Created a block in the path of Vīma
With a *Kon̲rai* garland
So that he can scarcely hope to near Apiman̲.
Meanwhile like a roaring ocean
Soldiers of Kaurava army surrounded Apiman̲,
Did not allow him any space to move,

Dreadfully massacred him limb by limb.
The head of the divine seat at Dwaraka,
Krisna saw the beastly act
And invoked Intira, Arjuna's dad
Who forthwith appeared before him.
If only your son Arjuna
Comes to know of his son's premature end,
He is sure to kill himself.
Take such steps
As would prevent such an occurrence.
Intira materialised
A pit of fire in Arjuna's path
Himself disguised as a brahmin
Going round and round the conflagration
To end his life.
Kannan and Arjunan
Witnessed the act of the brahmin
Attempting self-immolation,
Arjuna caught his hand
And asked him the cause of woe
The sad brahmin said
That he had lost his son
Obtained by prolonged penance.
Henceforth why should he nurture body
Preordained to decay and destruction.
As the brahmin had taken a firm resolve
To put an end to his life,
He wanted Arjuna to leave his hold.
Is it proper to end one's life
For the loss of a son?
Does Dharma and righteousness warrant it,
Give up the act
Beseeched Arjunan.
The brahmin posed a question to Arjuna

Whether he would in a similar predicament
Choose to live.
If the answer was a categorical yes
Confirmed by an oath
The brahmin agreed to abide
By Arjuna's counsel.
Arjuna clasped the extended brahmin's hand
Swore that he would retain life
If his son predeceased him.
When the brahmin departed
Arjuna and his four brothers
Were sunk in inexplicable sorrow
Expressed visibly on their visage.
They thought that the incident
Heralded some mighty catastrophe.
Confused and bewildered.
Arjuna offered salute at his brother's feet.

Prose: What did Taruma tell Arjuna?

167. *(இந்திரன் அருச்சுனனுக்குச் சத்தியத்தை நினைவூட்டிக்காத்தல்)*

தம்பியே அர்ச்சுனா [1]கிரீடி - உன் **திரிபுடை**
தனய னபிமன் [2]பட்டா னெனச்சொல
[3]வெம்பி யேயேனல் வளர்த்திநான் - தீயில்
விழுவனென வேவிசயன் துணிந்திடும் வேளை
மாயவன் மேக வாகனன் - தன்னை
நினைந்திட யிசையு [4]மறையவன்போல் வந்தான்
சேயெனக்கு நீதான் [5]சொன்ன - சொல்
நிறுத்தெனவே தவிர்ந்துதன் சுதனைக்

(அருச்சுனன் சபதம்)

கொன்றிடு [6]மவனை நாளைக்கு - முன்னும்
பொழுதுபோ முன்னென் னிடவிதனந் தீரக்

கொன்றி டாவிடி லெரியில் - விழுந்து
குமுங்கி யேயுயிர் விடுவது நிசமாம்
என்று சபதங்கள் கூறும் - விசயனை
வென்றி நெடுமால்தாங் [7]காக்க வேமன
மெண்ணிய மாயவன் கயிலைக் - கவன்தனைக்
[8]கொண்டுசென் றிடத்திற் குஞ்சிவ
[9]கையி லம்புபெறு வித்துத் - தேவி
யுமையாள் சொல்லுமந் திரமும்
கொள்ளச் சொல்லி
அல்லல் வினைகளை வெல்லு மாவினைச்
செல்வன் விசயனை அழைத்துக்
கொண்டிடஞ் [10]சோர்த்த சேதி

தம்பி அருச்சுனா! கிரீடி! உன் மகன் அபிமன்னன் போரில் இறந்து போனான் என்று தருமர் கூறினார். அருச்சுனன் மிகவும் துயரமடைந்து. நான் தீ வளர்த்தி அதில் விழுந்து உயிர் விடுவேன் என்று முடிவெடுத்துவிட்டான். உடனே கண்ணபிரான் இந்திரனை நினைக்க இந்திரன் முன்போல அந்தண வடிவில் தோன்றி, மகனே! நீ முன்பு என்னிடம் செய்து கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்று தீயில் விழுவேன் என்பதை நிறுத்து என்று கூறினான். அந்தணன் வார்த்தையை ஏற்றுக் கொண்ட அருச்சுனன், என் மகனைக் கொன்றவனை நாளை சூரியன் மறைவதற்குமுன் கொல்லுவேன். அப்பொழுதுதான் என் மன வேதனை தீரும். அப்படிக் கொல்லாவிட்டால் தீயில் விழுந்து உயிர்விடுவது உறுதி என்று சபதம் செய்தான்.

அருச்சுனனின் சபதத்தை நிறைவேற்றத் துணையிருந்து அவனைக் காப்பாற்ற விரும்பினார் திருமாலாகிய கண்ணபிரான். உடனே அருச்சுனனைக் கயிலாயத்திற்கு அழைத்துச் சென்றார். கயிலையில் சிவனால் அளிக்கப்பட்ட அம்பு ஒன்றும் உமையம்மையால் ஓதப்பட்ட மந்திரமும் பெறச் செய்தார். துன்பங்களை வெல்லும் சிறந்த செயல் வீரனாகிய விசயனை இவ்வாறு அழைத்து வந்த செய்தியைத் தருமர் அறிந்தார்.

கிரீடி - அருச்சுனனின் 10 பெயர்களுள் ஒன்று; இந்திரனால் அணியப் பெற்ற முடியை (கிரீடம்) உடையவனாதலின் பெற்ற பெயர். வெம்புதல் - கலங்குதல். விசயன் - அருச்சுனன்; வெற்றியுடையவன். ஆதனால் பெற்றபெயர். மேகவாகனன் - தேவேந்திரன். தவிர்தல் - கைவிடுதல். சுதன் - மகன். விதனம் - துயரம். குமுங்குதல் - பொசுங்குதல். நெடுமால் - திருமாலாகிய கண்ணன். மாவினைச் செல்வன் - பெரும் வெற்றிக்குரியவன்.

சுவடிச்சொல் - 1. கிறிடி 2. படானென 3. வெம்பியேன வளத்தினான் 4. மிறையவன் போலவந்தா 5. சென்ன 6. மவனனாளைக்கு 7. கார்க்கவே மனமென்றி 8. கொன்று சென்றிட 9. கையிலம்பு பெறுபித்து 10. சேத்த சேதி.

167. Brother Arjuna, Kiriti,
Your son Apiman is no more;
The war has taken a toll of his life.
Arjuna resolved forthwith
To light a funeral pyre
And confine his body to it.
Krisna again invoked Intira
Who appeared in brahmin's disguise.
Spoke he, son, keep your promise,
Give up thoughts of self immolation.
On hearing the words of the brahmin
Arjuna took a solemn vow
That he would destroy his son's killer
Ere next evening; otherwise would plunge
Into fire and kill himself.
To help Arjuna keep promise
Kannan took him to Mount Kailas,
Obtained for him Siva's bow
Taught him the sacred words
Of mother goddess Umai.
Taruma soon came to know
Of Krisna's urgent mission
To make Arjuna victorious,
The vanquisher of all woes!

168. *(மீண்டும் போர்)* சம்பை

[1]தர்மபுத் திரர்கேட்டுச் சற்பனை யென்றே
யன்றிதுன் மதியோயென் றறிந்து கொள்ளத்
தூதனுப்பி னானே

[2]அறிந்துதுரி யோதனன் அம்மான் றனக்கு
மோதத் துதியரையுள்ளி நக்கச் சொல்லி
சுற்றிலு மன்னவர்கள் புடைசூழத் - [3]துரி
யோதனனும் மற்றாநா
ளுத்தஞ்செய்ய மகிழ்ந்து வந்தானே.

அருச்சுனன் சபதம் செய்து வந்துள்ள செய்தியை அறிந்தார் தருமபுத்திரர். இது துரியனின் சதித்திட்டம் என்று அறிந்தார். இச்செயல் துரியனுடைய அற்பப் புத்தியால் செய்யப்பட்டதா என்பதை அறிந்து கொள்ளத் தூதுவரை அனுப்பினார். தூதுவர் வந்ததை அறிந்தான் துரியன்; தாய்மாமனாகிய சகுனிக்குச் சொல்லியனுப்பினான்; தூதுவரை நினைத்து எள்ளி நகையாடினான்; இழிவாகப் பேசிவிட்டு, மன்னர் பலரும் தன்னைச் சூழ்ந்துவர மறுநாள் போருக்குத் தயாராகிப் புறப்பட்டான்.

சற்பனை - சதி. துன்மதி - அவமரியாதை. அம்மான் - தாய்மாமன்; துரியனின் மாமன்; சகுனி. ஓதுதல் - எடுத்துச் சொல்லுதல். துதியர் - வணங்கி நிற்கும் தூதுவர். யுள்ளுதல் - நினைத்தல். நக்கச் சொல்லுதல் - ஏளனமாகப் பேசுதல்.

சுவடிச்சொல் - 1. தற்ம 2. அறிந்துதிரியோதரன் 3. திரியோதரனும் மத்தானாளுயித்தியஞ்செய்ய.

168. When Taruma was informed
Of Arjuna's solemn vow
He was anxious to know
Whether scheming Turiyōtaṉa
Had planned a despicable act
To trap his brother Arjuna.
Off he sent a trusted emissary to Turiyōtaṉa,
To ascertain the truth.
When the messenger's arrival was reported,
Turiyōtaṉa sent word to uncle Cakuni,
Ridiculed the emissary
Spoke lowly of him
And set out to fight the next day's battle
Surrounded by fawning vassal kings.

169. (சயத்திரதனைக் கொல்லக் கண்ணனின் சூழ்ச்சி) திரிபுடை

[1]அருச்சுனன் விரிசிலையை வளைத்ததி லம்புபூட்டி
எதிர்ந்த பேர்களைப் பரிச்சதம் பொடியாக்கிச்
சிந்துபதி பன்மகனை அம்புதனக் கிரைகொடுக்க
விசயனு மவனை யாற்றிடக் [2]காண்கிலையா
பைம்பொன் னாழியுள்ளான் முகமதனைப்
[3]பார்த்து மொழிவான்.
பொழுது போகுது சொன்ன சபதமும்
பொள்ளுப் போறாப்போல் [4]இறங்குது
பழியை வாங்கிக் கொள்வோ மென்றாலந்தப்
பாவிதனையுங்
காண்கிலேனினிச் செய்யும் வாறென்ன கண்ணனே நித்தில
[5]வண்ண னேயெனத்
தூண்பிளந்திடத் தோன்றி னானொரு
சூட்ச முடித்தான்
பொன்னின் திகிரியிற் பொழுதை மறைத்திடப்
பொழுது போச்சுதென் றொளித்திடும்
மன்னன் வேடிக்கை பார்க்கவரச் சக்கரம்
வாங்க யிருள்போய்
பகல தாக யிருக்கவே சிந்து
பதிதன் மகனைக் காட்டி வாளியை
அகில நாயக னினித் தொடாயென
அறிந்து விசயன்.

அருச்சுனன் சூரியனைப் போன்று ஒளி பொருந்தியதும், பாசுபதம் என்னும் அம்பையுடையதுமாகிய தனது வில்லை வளைத்தான். அதில் அம்பைப் பூட்டினான். தன்னை எதிர்த்துவந்த அவ்வளவு பேர்களையும் அடியோடு அழித்தான். இறுதியாக, சிந்துதேச மன்னனாகிய விருத்தகூத்திரன் என்பவனுடைய மகனான சயித்திரதனைத் தன் அம்புக்கு இரையாக்க வேண்டும் என்று தேடினான். ஆனால் அவனைப் போர்க்களத்தில் காண முடியவில்லை. பொன் மயமான சக்கராயுதத்தைத் தாங்கிய கண்ணபிரானின் முகத்தைப் பார்த்து, கண்ணபிரானே! நித்தில வண்ணனே! சூரியன் மறையும் நேரம் ஆகப்போகிறது. நான் செய்துள்ள சபதம் பழுதுபடுவதுபோலப் பொழுது இறங்கி வருகிறது.

பழிக்குப் பழி வாங்கி விடுவோம் என்றால் பாவியாகிய சயித்திரதனைக் காணவே முடியவில்லை. இனி என்ன செய்வது என்று வேண்டினான். பிரகலாதனுக்காக நரசிங்க வடிவமாய்த் தூணைப் பிளந்து கொண்டு தோன்றிய கண்ணபிரான் ஒரு சூட்சி செய்யத் தொடங்கியவனாய்ப் பொன்மயமான தனது சக்கராயுகத்தை எடுத்துச் சூரியனை மறைத்து விட்டான். சூரியன் மறைந்தான் என்ற முடிவுக்கு வந்த சயித்திரதன் இனி அருச்சுனன் தீயில் விழப்போகிறான் என்று எண்ணி அந்தக் காட்சியைக் காண வெளியிலே வந்தான். உடனே கண்ணன் தன் சக்கராயுதத்தை எடுத்துக் கொண்டுவிட்டான். இருள் நீங்கியது; முன்போல மாலை நேரமாகவே இருந்தது. அப்போது உலகங்களுக்கெல்லாம் தலைவனாகிய கண்ணன் சிந்துபதியின் மகன் மேல், இனி நீ அம்பை எய்வாயாக என்று கூறினான். சயித்திரதன் எதிரிலே இருப்பதை அருச்சுனனும் அறிந்தான்.

சிலை - வில். விரிசிலை - சூரியனைப்போல ஒளி பொருந்திய வில். பரிச்சதம் - பரிச்சேதம் - முழுவதும். சிந்துபதிபன் - சிந்து தேசாதிபதியாகிய விருத்தக்ஷத்திரன்; சயித்திரதனின் தந்தை. இரை - உணவு. ஆற்றிட - துயர் தீர. ஆழி - சக்கரம். பொள்ளு - விரைவு. வாறு - வழி. நித்திலம் - முத்து. நித்திலவண்ணன் - முத்தைப் போன்ற ஒளியுடையவன். வண்ணம் - நிறம். முத்துப் போன்ற நிறத்தையுடையவன் எனின், பாம்பின் வாயிலிருந்து பிறக்கும் முத்து நீலநிறமுடையது. ஆதி சேடனாகிய பாம்பின் வாயிலிருந்து பிறக்கும் நீலநிறமுத்தை நிகர்த்தவன் என அமையும். தூண்பிளந்திடத் தோன்றியவன் - திருமால்; நரசிங்க அவதாரமாய்த் தோன்றியவன். திகிரி - சக்கராயுதம்; சுதர்சனம் என்னும் பெயரை யுடையது. மன்னன் - சயித்திரதன். வாளி - அம்பு. அகிலம் - பூமி. நாயகன் - தலைவன்.

சுவடிச்சொல் - 1. அற்ச்சுனன் 2. காண்கிலாயா 3. பாத்து 4. இநகதுகுது 5. வற்னனே.

169. Arjuna pulled the strings of his bow
Pācupatam, bright as the Sun God,
Routed every one of the soldiers
Who advanced towards him.
In vain, he searched for Cayittiran,
Son of the King of Sind, Vrittakshattiran,
Where did he disappear,
Whither fled?
Anxiously he addressed Krisna,
The bearer of the disc.
Kanna, the pearl coloured one,

The Sun is threatening to set
And I am yet to fulfill the oath,
How can I wreak vengeance,
When the enemy is not there?
When Arjuna made a fervent appeal,
The Lord who once went to rescue Prahlāta
In the form of a Man-lion,
Covered the Sun with his golden disc.
Mistaking the darkness for sundown
Cayittiran̲ came out of his hide
To witness Arjuna's self immolation.
Kannan̲ forthwith withheld the disc
That shaded the bright sun,
Lo, darkness dispelled without a trace
And evening continued as ever.
Then addressed Kannan̲,
The Lord of the Universe
The son of the King of Sind,
Drop your bow and arrow!
These words of Kannan̲
Made Arjuna surmise
That Cayittaran̲, the evading opponent
Was right in front of him!

170. *(சயத்திரதன் இறத்தல்)* **சம்பை**

வெய்யகணை யேவப்பழி
வேந்தன்தலை யரிந்து தந்தை
கய்யில் [1]வைத்து மீண்டதந்த காண்டீபன் வாளி
[2]நினைத்தபடி முடிந்ததென்று
நெடியோனுந் [3]தனஞ்செயனும்
அனைத்தவரு முளப்பாடி யகமெய்தி னார்கள்
பாடிவீ டெய்தியபின்
[4]பற்குணனு மதிமன் மகன்

வாடியே ஸ்ரீகிருஷ்ணா மாயாவி நோதா
ஸ்ரீதரா கோவிந்தா தேவகி நந்தனா
மாதவா ஸ்ரீகிருஷ்ணா மாயாவி நோதா
[5]அந்தமாய் நடுவுமுதல் ஆனவா முனிவசுரர்
வந்தனா ஸ்ரீகிருஷ்ணா மாயாவி நோதா
என்மகன் அபிமனையென் கண்களிற்
கண்டா லொழிய
என்துயர மிதமெய்தா தென்நெஞ்சு.

அருச்சுனன் கொடிய அம்பு ஒன்றைத் தொடுத்து எய்தான். அந்த அம்பானது பழிவாங்குவதற்கு உரியவனாகிய சயத்திரதனின் தலையைத் துண்டித்து அவனுடைய தந்தையாகிய விருத்தக்ஷத்திரனுடைய கையில் வைத்துவிட்டுத் திரும்பிவிட்டது. திட்டமிட்டபடி முடிந்துவிட்டது என்று கண்ணனும் அருச்சுனனும் மற்றவர்களும் மகிழ்ந்து பாடிவீட்டையடைந்தார்கள். அருச்சுனன் தன்மகனை நினைத்து வருந்தியவனாய்க் கண்ணபிரானைப் பார்த்து.

ஸ்ரீகிருஷ்ணா! மாயாவிநோதா! ஸ்ரீதரா! கோவிந்தா! தேவகி நந்தனா! மாதவா! முதலும் நடுவும் முடிவுமானவா! முனிவர், சுரர்கள் வணங்கத்தக்கவா! என் மகன் அபிமனை நான் நேரில் காணவேண்டும். அப்போதுதான் என்மனம் நிம்மதியடையும் என்று கூறினான்.

வெய்யகணை - கொடிய அம்பு. வாளி - அம்பு. காண்டீபன் - அருச்சுனன். நெடியோன் - திருமால். தனஞ்செயன் - அருச்சுனன். பாடி - பாடிவீடு; பகைமேற்சென்றோர் தங்குமிடம். பற்குணன் - அருச்சுனன். மாயாவிநோதன் - மாயை விளையாட்டுடையவன். ஸ்ரீதரன் - திருமால். நந்தனன் - மகன். அந்தம் - முடிவு. முனி - முனிவர். வந்தனன் - வணங்கத்தகுந்தவன். இதம் எய்துதல் - இன்பமடைதல்.

சுவடிச்சொல் - 1. வத்துமண்டுதந்த 2. நினத்தபடி முடிந்துதென்று 3. தனஞ்சியனும் 4. பார்க்குணனு 5. அந்தமாயினடுவு.

170. Arjuna released an arrow
That sliced Cayattiratan's head
Who deserved it for his wicked act;
The head got neatly seated
On Vruttakṣatra's palms,
The arrow receding to sender.
Arjuna, Krisna and others

Rejoiced over their success,
Singing merrily they reached their residence
Where Arjuna addressed Krisna:
Krishna, the enchanted one, Kōvinta,
Son of Tēvaki, Mātava
The controller of ccosmic life
In all its stages
The one worthy of obeisance
By Gods and saints
I wish to meet my son
Which alone will give me peace.

171. *(அருச்சுனன் தேவருலகில் அபிமனைச் சந்தித்தில்)* **திரிபுடை**

என்மகன் அபிமன்தனைக் [1]கண்ணில்
யானுங் காணாவிடில் ஐயா
இந்தஜென்மம் நிமிஷத்தில் மடியுங்
கவைகள் செய்திடாது
என்றுவிச யன்புலம்ப நடவுமென்
றேகிமே லுலகெய்தி யபிமன்
னன்றான் றேவதைபோ
லுலாவிட நெடியவனுமே
[2]தனஞ்சயா அபிமனிதோ நின்
தனயனை யழையெனத்
[3]தனஞ்சயன் கனிந்து வாமகனேஎன்
றழைத்திடக் கடுக நகைத்து
எப்பிறப்பி [4]லுனக்கு நான்மகன்
ஏதுகாண் பரியாச மோவெனச்
செப்பவே மன்மன மரோசி யவனைச்
செல்லவுட னேயினி வேந்தனை
விசையனெனப் புவிவிளம்பி [5]ராசமகேந்
திரபுரி தனையாண்ட
[6]இராசநரேந்திரா! நீ ரறிகிலீரோ!

உந்தன் மகன் சாரங்க தரன்பழி
[7]உத்தரித் தனன் உன்முன்
[8]வந்தனன் எந்த நாளைக்குஞ்
சித்தருடனே யிருப்பதே தானான்

ஐயனே! என்மகன் அபிமன்னனைக் காணாவிட்டால் சிறிதும் தாமதியாது இந்த உடலிருந்து உயிர் நீங்கிவிடும் என்று கூறிவருந்தினான் அருச்சுனன். உடனே கண்ணன் மேலுலகத்திற்கு அருச்சுனனை அழைத்துச் சென்றான். அங்கு தேவர்களைப் போல உலவிவருகின்ற அபிமன்னனைக் காட்டி அருச்சுனா! உன்மகன் அபிமன் இதோ இருக்கிறான் பார்! மகனை நீயே கூப்பிடு என்று கூறினான். அருச்சுனன் அன்போடு மகனே! இங்கே வா என்று அழைத்தான்.

தேவர்களில் ஒருவனாக விளங்கிய அவன் அலட்சியமாகச் சிரித்தபடியே, நான் எந்தப் பிறவியில் உமக்கு மகனாக இருந்தேன்? என்ன வேடிக்கை செய்கிறீர்களா? என்று கூறினான்.

நான் உலவி இருக்கின்ற இந்தப் பிறவி உங்கள் மகனாகிய பிறவி அல்ல என்பதைச் சுட்டிக் கூறிய அபிமன்னனின் சொற்களைக் கேட்ட அருச்சுனன் மனம் வெறுத்து உடனே அவனைவிட்டு நீங்கிச் சென்றான். சென்ற அவன் உலகத்தில் விசையன் என்றே பெயர் பெற்றிருந்தான். அந்தச் செய்தியை, இராச மகேந்திரபுரியை ஆண்டுவரும் இராசநரேந்திர மன்னவனே! நீர் அறியமாட்டீரா? அதுபோலவே உன்னுடைய மகன் சாரங்கதரன் பழிக்கு உள்ளாகி உனக்கு மகனாய்ப் பிறந்திருந்தான். ஆனால் இனி எந்த நாளைக்கும் சித்தருடனேயே இருக்கும் நிலையை அடைந்து விட்டான் என்று கூறினான் அமைச்சன்.

ஜென்மம் - பிறவி, உடல், கவை - வேலை, தேவதை - தெய்வம். நெடியவன் - திருமால். தனயன் - மகன். கனிவு - அன்பு, களிப்பு. கடுக - விரைவாக, ஏளனமாக. பரியாசம் - கேலி; வெறுத்தல். புவி - உலகம். அறிகிலீரோ - அறியீரோ; அறிவீர். உத்தரித்தல் - அனுபவித்தல், உள்ளாதல்.

சுவடிச்சொல் - 1. கண்ணிர் 2. தனஞ்சியா 3. தனஞ்சியன் 4. லுனக்குனான் 5. றாசமகேந்திர 6. றாசநரேந் 7. உத்தரித்துனன் 8. வந்தனநநெந்தனாளைக்குஞ்.

171. Sir, if I fail to see my son,
Life will cease to be,
Lamented Arjunan.
Kannan forthwith took him
To the celestial regions

And pointed to him his son Apiman̲,
Who looked verily an angel.
See Arjuna̲, see for yourself
Your darling son,
Better you call him by name
Suggested Kannan̲.
Arjuna̲ beckoned his son
Who cast an indifferent look
Smiling rather cynically,
The son earnestly asked,
When was I your son, sir,
Are you really serious?
Know that in this birth
I am not your son
For you to claim any kinship.
Disgusted with his son's reply
Arjuna̲ returned sadder and wiser
To the world below
Where he earned the appellation Vicayan̲.
Oh King of Rājamakēntirapuram,
Are you not familiar with this tale?
Your son Cāraṅkataran̲'s story
Strikes a close parallel;
True, he was born as your son
Thanks to earlier deeds
And fell a victim to slander undeserved.
He shall not come to you again
As elevated to a higher and nobler plane
Destined to live with Cittar eternally.

172. *(நீதிமைந்தனை - இராசநரேந்திரன் மகனாக ஏற்றல்)* சம்பை

வாருமையா நம் மகேந்திர புரமே வந்து
சேருமையா வென்று [1]சிந்தை மிகத்தெளிய

நீதி மைந்தனெனும் மந்திரி
நிசமான வார்த்தை சொல்ல
மாது [2]ரத்தினாங்கி மன்னன்
மனது களித்திடவே
ஆதிசிவ னெனையாண்ட
அய்யர்அவர் முன்புவந்து
போதஒரு புத்திரனைப்
புரியவுள மகிழ்ந்தே
மன்னவ னுந்தேவி
[3]மகனன மந்திரியுமாய்க் கூடி
அன்னதா னகமெய்தியொன்
றட்சயம தாய்வாழ்ந்தார்
மறையவர்க ளாசீர்வதித்திட
மகேந்திர புரியிறையவனுந்
[4]தீர்க்காயுசா யதிவாழ்ந்தனனே
பட்டணத்தி லேயிருந்த பலபேரு மாறாத
[5]அட்டஅயிஸ் வரியமுடன்
[6]அனைவரும்வாழ்ந் திருந்தார்.

நீதி மைந்தன் என்னும் அமைச்சன் அரசனை நோக்கி ஐயனே! வாருங்கள்! நம் மகேந்திரபுரம் வந்து சேருங்கள் என்று உள்ளன்போடு வேண்டிக்கொண்டான். மன்னவனும் தேவி இரத்தினாங்கியும் மனம் தெளிந்து, எங்களை ஆட்கொண்டவனாகிய சிவபெருமானே ! சிறந்தவனாகிய மகனை எங்களுக்கு ஆறுதலாக அருளிச் செய்தீர்கள் என்று கூறி மகிழ்ச்சியோடு இறைவனை வழிபட்டார்கள். பிறகு மன்னனுந் தேவியும், மகனை யொத்த அமைச்சனுடன் கூடி நகரத்தை அடைந்தார்கள். அமைச்சனையே தங்கள் மகனாகத் தங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு சிறிதும் துன்பமின்றி வாழ்ந்து வந்தார்கள். இராச நரேந்திரன் மகேந்திரபுரி மன்னவனாகவே இருந்து அந்தணர்கள் வாழ்த்த நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்ந்து வந்தான். நகரத்திலிருந்து மக்களும் பிற உயிர்களும் எல்லாச் செல்வங்களையும் பெற்று வாழ்ந்து வந்தார்கள்.

நிசம் - உண்மை. போத - ஆறுதலாக. மகனன - மகன்அன; மகனைப்போன்ற. அகம் - மனம். அட்சயம் - வருத்தமில்லாமை. தீர்க்காயுசு - நீண்ட வாழ்நாள்.

சுவடிச்சொல் - 1. நிந்தை 2. றத்தினாங்கி 3. மகனநமந்திரியு 4. திரகாயிச யதிவாழ்ந்தனன் 5. அட்ட அயிஸ்பரியமுடன் 6. அனவரும்.

172. Minister Nītimaintaṉ addressed the King,
Sir, welcome to Rājamakēntirapuram
He was all love and sincerity.
The King and Queen Rattiṉāṅki,
With minds free of delusions
Offered prayer to the Almighty.
Civa, all-knowing!
How kind of you to have blessed us
With a son of sterling merits!
Then the king and the queen
Entered the city
In the company of the minister
Of the same age as their son.
Hence forth, mused they,
The minister shall be our surrogate son.
Thanks to the blessings of brahmins,
Rājanarēntira continued to rule
Makēntirapuram *ad infinitum.*

173. *(வாழ்த்துரை)* **திபதை**

சாரங்க தரன்கதைச் சங்கீதப் பாடல்
சாரங்க ளாயிதைத் தமிழினில் படிப்போர்
ஆசையா யிருந்துகொண் டடவுடன் கேட்ப்போர்
மாசில்லாச் [1]சுற்றமு மய்ந்தர்பாக் கியமுந்
பொன்னுலகக் கலைகளும் பூஷணச் சிறப்பும்
மன்னவ ராகிப்பூ மண்டல மெல்லாம்
காத்துரட் சித்திட கருணையுண் டாகி
கோத்திரங் குலங்கள் குணங்களுந் தழைக்க
[2]ஆயு ளோங்கி யபிவிர்த்தி யுண்டாய்
மாயிரு ஞாலத்தில் வாழ்வார்கள் தாமே.

இசைப் பாடலாகச் செய்யப்பட்ட இந்தச் சாரங்கதரன் கதையைத் தமிழில் ஆழ்ந்து படிப்போரும், மிகுந்த ஆர்வத்தோடு அமர்ந்து இருந்து கருத்தோடு

கேட்ப்பவர்களும் குற்றமற்ற சுற்றத்தினரையும், மக்கட் செல்வத்தையும் பெறுவார்கள். மேலும் அவர்கள் தேவர்களின் சக்திகள் பலவற்றையும் பெறுவார்கள். உயர்ந்த ஆடையாபரணம் முதலான சிறப்புகளோடு அரசப்பதவியைப் பெற்று இந்த நிலவுலகம் முழுவதையும் பாதுகாத்து அருள்புரியும் உள்ளம் உடையவர்களாவார்கள். அவர்களுடைய குலம், கோத்திரம், குணங்கள் யாவும் தழைத்து ஓங்கும்; வாழ்நாள் பெருகும். இவ்வாறு பலவகையிலும் உயர்ந்த பரந்த இந்த நிலவுலகத்தில் வாழ்வார்கள்.

சங்கீதம் - இசை. சாரம் - உட்பொருள். அடவு - நெருக்கம். மாசு - குற்றம். பாக்கியம் - செல்வம். பூஷணம் - ஆபரணம். பொன்னுலகம் - தேவருலகம். பூமண்டலம் - பூமி. ரட்சித்தல் - பாதுகாத்துல். கோத்திரம் - குலமரபு. ஆயுள் - வாழ்நாள். அபிவிருத்தி - பெருகி வளருதல். ஞாலம் - பூமி - இருஞாலம் - மிகப்பரந்த பூமி.

சுவடிச்சொல் - 1. சுத்தமும் 2. ஆயிறறோக்கிய.

173. Whoever reads Cāraṅkataraṉ's tale,
Rendered in mellifluous Tamil verse
Or listens to it with rapt attention
Shall beget worthy sons and kinsmen;
Divine glory shall be theirs
And creature comforts like dress and jewels,
All glory to their lineage and merits
Longevity shall be their's
And a life of fulfillment!

174. *(மங்களம்)*

சோபனமே செய சோபனமே
பூபதி மாபதி [1]போற்றிய வள்ளலு
மாபதிக்கு மந்தி [1a] வாணுத லுக்கும் - சோபனமே.
பங்கய சரண [2]கிருபாகரா - வேதது
ரங்கா வைபோகா லிங்கியதோர்
திங்க ளணிந்திடு வேணி யருள்மொழி
சங்கர ருக்குஞ் சிவசங்கரிக்கும் - சோபனமே
சுரர்பாலகர் [2a]மறையோ ரகோர தவமறி
பெரியோர் முதலடி பரவியசீர்

[3]உரகா பரணத் திரியம்பகர் கயிலையில்
[4]அரனார்க்குங் கிருபை அம்பிகைக்கும் - சோபனமே
தேசங்க ளெல்லாம் புகழிசை விளங்கிய
வசிகர மாம்பசு மாதை யில்வாழ்
பசுபதி [5]நாதர்க்கும் உண்ணா முலையம்மை
பார்வதி யெங்கள் [6]பராபரிக்கும் - சோபனமே
நித்திய சோபனமே.
சோபனம் ஸ்ரீ கிருண சுவாமி
ருக்மணிக்குஞ் சோபனம்
சுகசத்திய பாமினிக்குஞ் சோபனம்
மருவோங்கிய திவ்விய வனமாலி கையணி
அரிகரியென் றாடியவர் திருவேங்கட
செய சேஷாசலபதி [7]வாக நாரணர்
புட்ப வஞ்சியர்க்கு - சோபனம்
நந்தா முகுந்த [8]நாரா யணனுஞ்
சிந்தை மகிழ்ந்திட வந்தருள்[9]கோ
விந்தரான மாதையில் விளங்கிய [10]வாசகர்க்கும்
[11]மகேந்திர நளினத்தி லேந்திழைக்கும் - சோபனம்
சோபனமே - நித்திய - சோபனமே.

மங்களம் உண்டாக; வாழ்த்துக்கள். மன்னரும் மன்மதனும்• புகழும் வள்ளலாகிய உயர்ந்தவனுக்கும், மூத்தவளாகிய ஒளிபொருந்திய நெற்றியையுடைய இலக்குமிக்கும் மங்களம்.

திருவடித்தாமரைகளையுடைய அருளாளனுக்கும், வேதங்களின் தலைவ னுக்கும், பலவகை ஞானங்களைத் தழுவியவனாகி, பிறை சூடிய சடாமுடியும் அருட்குணமுமுடைய சங்கரருக்கும் சிவசங்கரிக்கும் மங்களம்.

தேவர்கள், அந்தணர், கடுந்தவம் மேற்கொண்டுள்ள சான்றோர் முதலான யாவரும் தம் திருவடிகளிலே வணங்கி மகிழும் பெருமைக்குரியவரும், பாம்பை ஆபரணமாக அணிந்தவரும், மூன்று கண்களையுடையவருமாகிய திருக் கயிலாயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கும் அருட்குணமுடைய அம்பிகைக்கும் மங்களம்.

உலகமெங்கும் புகழும் பெருமைக்கு உரியதாகி, அழகு மிக்கதும் வளமை யுடையதுமாகிய மாதையம்பதியில் கோயில் கொண்டுள்ள பசுபதிநாதருக்கும், உண்ணாமுலையம்மையாகிய பராபரி பார்வதி தேவிக்கும் மங்களம்; நித்திய மங்களம். ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கும் ருக்குமணி தேவிக்கும் சத்தியபாமை யென்னும் தேவிக்கும் மங்களம்.

மணம் நிறைந்ததும் மேன்மை பொருந்தியதுமாகிய துளசி மாலையை யணிந்தவரும், அரிகரி என்று துதித்து ஆடிப் பாடி மகிழும் அடியவர்களைப் பெற்ற வரும், சேட அசலம் எனப்படும் திருவேங்கட மலையில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் என அடியவர்களால் துதிக்கப்படுபவரும், திருவருள் பொருந்தியவருமாகிய நாராயணருக்கும் புட்பவல்லி தேவியாருக்கும் மங்களம்.

நந்தன், முகுந்தன் என்னும் பெயர்களைப் பெற்ற நாராயணனாகிய திருமாலின் உள்ளம் பூரிப்படையுமாறு மாதையம்பதியில் எழுந்தருளியிருக்கும் கோவிந்தருக்கும் மகேந்திரபுரியில் செந்தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி தேவிக்கும் மங்களம் - நித்திய - மங்களம்.

சோபனம் - சுபம், வாழ்த்து. பூபதி - மன்னன். மாபதி - மன்மதன். அந்தி - மூத்த. வாணுதல் - வாள்நுதல் - ஒளிபொருந்திய நெற்றி - நெற்றியையுடையவளுக்கு ஆயிற்று. பங்கயம் - தாமரை. சரணம் - திருவடி. கிருபாகரன் - அருளுடையோன். துரங்கன் - குதிரையையுடைவன். வைபோகம் - விவேகம், ஞானம். ஆலிங்கியம் - இசைக் கருவிகளுள் ஒன்று. திங்கள் - சந்திரன் (பிறை). வேணி - சடை. சங்கரர் - சிவபெருமான்; போர் செய்தவராகிற - சங்கார மூர்த்தி. சங்கரி - உமையம்மை. சுரர் - தேவர். அகோரதவம் - கடுந்தவம். பரவுதல் - தொழுதல். சீர் - சீர்மை பெருமை. உரகம் - பாம்பு. திரியம்பகர். மூன்று கண்களையுடையவர். அம்பகம் - கண். வசீகரம் - அழகு, கவர்ச்சி, மாதை - மாதையம்பதி. பராபரி - ஆதரிப்பவள். ருக்மணி - கிருஷ்ணரின் மூத்த தேவி, சத்தியபாமினி - சத்தியபாமை - கிருஷ்ணரின் மனைவியருள் ஒருத்தி. மரு - மணம்; மலை எனவும். திவ்வியம் - இனிமை, மேன்மை. வனமாலிகை - துளசிமாலை. அரி - திருமால். சேஷாசலம் - சேடம் - அடிமை, அடியவர். அசலம் - மலை வாகம் - அழகு. நந்தன் - கிருஷ்ணன் - நந்தகோபரின் வளர்ப்புமகன். முகுந்தன் - திருமால். நளினம் - தாமரை.

சுவடிச்சொல் - 1. பேர்த்திய 1.எ. வானனுதலுக்கும் 2. கிறுபாகரா 2.எ. மறையூரவோரதவமறி 3. உரகாபரணத்திறியம் 4. அரணார்க் குங்கிறுபை 5. நாதற்க்கும் 6. பறாபரிக்கும் 7. வாகனறானபுட்பவஞ்சியற்கு 8. னாறாயணனுஞ் 9. கோவிந்தாரென மாதையில் 10. வாசற்க்கும்11. மஹேந்திற.

துன்மதி வருட்டம், ஆனிமாதம், 6 ஆந்தேதி [1]புதவாரநாள் ச்த்தமியும், பூர நட்சத்திரம், மிதுனலக்கினமுங் கூடின சுபதினத்தில், சோமங்கலமுடையவர், [2]புண்ணிய முடையாரில் அஷ்டகோண மகாரிஷி கோத்திரத்திற் [3]பிரபந்தராயிருக்கப்பட்ட திவாகர பற்புத்திரன் கச்சாலை பிள்ளை. அவர்

புத்திரன் சோமலிங்க வாத்தி[4]கர்னல் ராசுப் பேட்டையிலிருக்குஞ் [5]செகந்நாத லச்சிராமபுத்திரரான கிருஷ்ணதாசு. அவர் புத்திரன் [6]ராம சிங்குக்கு எழுதிக் கொடுத்த சாரங்கதரன் [7]யட்சகானம் எழுதி நிறைந்தது.

சுவடிச்சொல் - 1. புதவாரனார் 2. புன்றிய 3. பிறபந்தறாயிருக்கப் 4. கறணல் றாசுப்பேட்டை 5. சைகன்னாதலச்சிறாம புத்திறறான கிஷ்ணதாசு 6. றாமசிங்கு 7. எக்ஷகானம்.

ஸ்ரீ அகிலாண்டகோடி [1]பிரமாண்ட நாயகராகிய வேங்கடாசலபதி [2]கிருபையினாலே [3]தீர்க்காயுசும் வச்சிர பூசரீரமும் மார்க்கண்டாயுசும் புத்திர மித்திர [4]களத்திரருமாய் சுகத்திலே சந்திராதித்தவரைக்கும், தன, கனக, வஸ்துவாகன [5]முண்டாய் தாய் தகப்பன் பாக்கியவானாய் சுகத்திலே யிருக்கக்கடவது.

தேவிசகாயம்.

சுவடிச்சொல் - 1. பிறமாண்ட நாயகறாகிய 2. கிறுபை 3. தீற்க்காயசும் வச்சிரபூசரீகிரமும், மாற்க்கண்டாயசும். 4. களத்திறருமாயி 5. முண்டாயி தாயிதாப்பனபாக்கியவானாயி.

174. Let there be happiness and light
Let there be bliss
To the generous soul, the elevated one
Eulogised by king and cupid alike.
Let Goddess Laksmi
The eldest with bright forehead
Attain bliss.
Let the one with Lotus feet,
The source of Vētās,
The versatile one
With matted locks and the crescent moon,
Lord Civa enjoy bliss!
Also his spouse Civa Cańkari!
Let Civa with abode in Mount Kailas
And Ambikai enjoy bliss!
Civa at whose feet, the Gods and brahmins
And the virtuous prostrate

Who wears the snake as ornament
And has three eyes!
Let happiness be the lot
Of Pacupatināta and Unnāmulai,
The presiding deities of Mātaiyampati temple
Well-known all over the world.
Let there be bliss
To Lord Krisna and his loving spouses
Rukmani and Catyapāma!
Let happiness and bliss visit
Lord Nārāyana and Puspavalli Tēvi
Residing in Tiruvēṅkata hills
Also known as Cēta Acalam,
Nārāyana, who wears *tulsi* garlands
And eulogised as Arihari,
By the virtuous and devout.
Let there be bliss and glory
To Lord Kōvinta of Makēntirapuri
Who is seated on a Lotus,
To the happiness of Nārāyana
Known as Nantaṉ and Mukuntaṉ and Kōvintaṉ
Who has assumed the role of the presiding deity of
Mātayampati
And is liberally conferring his blessings
On the earnest and devout!
Let there be eternal happiness!

* * *

துணைநூல்கள்

பதிப்பிற்குரிய சுவடி

1. சாரங்கதரன் யட்சகானம், ஓலைச்சுவடி, டி.எண். 501
   அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.

ஒப்பிட உதவிய சுவடிகள்

2. சாரங்கதரன் யட்சகானம், ஓலைச்சுவடி, டி.எண் 505
   அரசினர் சுவடி நூலகம், சென்னை 600 005
3. சாரங்கதரன் வாசகப்பா, ஓலைச் சுவடி, டி.எண். 501
   அரசினர் சுவடி நூலகம், சென்னை 600 005

அச்சு நூல்கள்

4. சாரங்கதர அம்மானை என்னும் சித்திராங்கி மாலை,
   செஞ்சி, திரு. ஏகாம்பரமுதலியார் இயற்றி, திரு. சு துளசிங்கமுதலியார்
   வெளியிட்டது. பூவிருந்தவல்லி 1906
5. சாரங்கதரன் - தமிழ்நாடகம், பம்மல் சம்பந்த முதலியார்
   பி. ஆர். ராமஅய்யர் கம்பெனி, சென்னை (பதி. 2) 1912
6. தமிழகக் கலைச் செல்வங்கள், Dr. துளசி இராமசாமி (பதி)
   உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113 1990
7. தெலுகுலு சாரங்கதரசரித்திர, தெலுங்கு ஆய்வேட்டுப் பதிப்பு
8. நீலி யட்சகானம், டாக்டர் பூ. சுப்பிரமணியம் (பதி)
   ஆசியவியல் நிறுவனம், சென்னை - 600 041 1994
9. Yakshagana, K. Shivarama Karanth,
   The Institute of Kannada Studies,
   University of Mysore - 570 006. 1976

சொல்லடைவு

(பாட்டு எண்; வ = வசனம்)

அகண்டபூரணி 97
அகில நாயகி 97
அக்குரோணி 88, 165
அங்கம் 64, 127, 166
அங்கை 56
அசுரர் 88
அசுவத்தாமன் 165
அடவி 13, 86, 144
அட்ட அய்சுவரியம் 22, 172
அட்டமாசித்தர் 148, 149
அதரபானம் 58
அத்தமனம் வ.24
அத்தினாபுரம் 163
அந்தகன் 155
அந்தணப்பூவை 92
அபகாரம் 102
அபகீர்த்தி 57, 87, 101
அபரஞ்சி 14
அபிமன்னன் 162, 166, 171, வ. 94
அபிமானம் 113
அபிஷேகம் 19
அம்பிகை 13, 137, 174
அரங்கு 6
அரவக்கொடியோன் 163, 164, 165
அரவம் 98
அரன் 130, 174
அரி 86
அரிச்சந்திரன் 30
அரிவை 36, 47, 58
அருச்சுனன் 162, 169, வ. 95
அரைஞாண் 54
அர்த்தராத்திரி 96
அல்லி 42
அல்லும் பகலும் வ. 15
அவதானம் வ. 21
அற்றை நாள் 94
அனவரதம் 115
அன்ன சத்திரம் 16
அன்னம் 31, 107, 110
அஸ்த கடகம் 54
அஸ்தமித்தல் 133
ஆகடியம் 34
ஆகாசவாணி 41, 95, 149, 152, 153, 159
ஆக்கிரமித்தல் 94
ஆக்கினை 78, 100, 114, 119, 120, 121, 127, 136
ஆசரித்தல் 83
ஆணிப் பொன் 31, 127
ஆண்கூத்தி 43
ஆண்பிள்ளை 65
ஆண்மை 81
ஆதவன் 85
ஆதிசங்கரர் 137
ஆதிசிவன் 63
ஆதிசேஷன் 64
ஆபரணம் 16, 72

ஆயன் 163
ஆராதனை 37
ஆரியன் 40, 45, வ. 6
ஆலம் 35
ஆலிலை 31
ஆலோசனை 62
ஆவுடையாள் 64
ஆழி 169
ஆற்றாமை 73
ஆனை 31, 166
ஆஸ்தான சபை 44
ஆஸ்தான மண்டபம் வ. 26
ஆஸ்தி 92
இந்திரசாபம் 31
இந்திரன் 166
இந்து 52
இபமுகன் 139
இரட்சித்தல் 123
இரவலர் 12
இரவிக்கை 73
இரவி 52
இரவு பகல் 34
இராட்சதி 67
இராவணன் 88
இருநிலம் 96
இளங்கோ 24
இளமை 81
ஈசர் 19
ஈடழித்தல் 78
உச்சாயம் 60
உச்சிதங்கள் வ. 22, 23
உண்ணாமுலை 2, 174
உதரபந்தனம் 144
உபச்சாரம் 35
உபாயம் 60
உமையவள் 1, 167
ஊண் 65
ஊர்வசி 44
ஊழி 132
எக்கலாதேவி 3
எச்சரிக்கை 36
எந்தடவு வ. 54, 78
ஏந்திழையாள் 79
ஏனம் 38
ஒப்பனை 129
ஒளிவிளக்கு 24
ஓலை 92, 94
கங்குல் 143
கச்சாயம் 16
கச்சு 69
கடகர் 45
கடல் 86, 93
கடாட்சம் 125
கடாரிகை 7, 94
கடுக்கன் 54
கடுவன் 132
கடூரம் வ. 32
கட்டியம் 22
கணம் 4, 115
கண் 29, 65
கண்ணன் 169
கண்ணாலம் 129
கண்டபேரண்டம் 44
கண்டம் 85
கண்ணமாபுரம் 92
கதிரவன் 44
கத்திரியர் 45
கத்திரி 142
கந்தப்பொடி 54
கந்தையன் 6

கபடம் 80
கபடிகள் 88
கமண்டலம் 144
கரடி 44, 138
கருடகந்தருவர் 13
கர்ணன் 7, 165
கலிகாலம் 59
கலிங்கர் 45
கலியுகம் 100
கலை 16, 69, 73
கவுரி 139
கவை 69, 76, 91, வ. 51
களபம் 43, 48, 117
கள்ளன் 80
கற்பகம் 134
கனற்பொறி 70, 114
கன்னடியர் 45
கன்னி 86, 92, வ. 13
காக்கை 116
காசி 64, 90
காசினி 142
காணி 9
காண்டீபன் 166, 170
காந்தம் 7
காப்பு 23
காமர் 45
காமன் 7, 28, 31, 55, 73
காலாக்கினி 143, 166
காளி அம்பிகை 97
காளை 125, 133
கானகம் 46, 73
கான்நிலவு 139
கிணறு 155
கிரீடி 167
கிருபாச்சாரி 165
கிளி 38, 48, வ. 29
கிளிமொழி 166
கிழவன் 81
கீரி 88, 89, 90, 92
குங்குமம் 144
குச்சிலியர் 45
குடகர் 45
குடோரி 7
குதிரை 166, வ. 13
குபேரன் 47
குமரன் வ. 31
கும்பு 38, 46
குருதி 89
குரும்பு 31
குரும்பை 31
குலங்கோத்திரம் 140
குறத்தி 7
குறும்பர் 45
குன்று 46, 93
கூத்தன் 67
கூத்தி 43, 67
கெடுமதி 52
கெட்டிவராகன் 26
கெண்டை 31
கெம்பு 31
கேளிவிலாசம் 13, 37, வ. 13, 19
கைகேசி 88
கைமருந்து 66
கொழுகொம்பு 13
கொன்றைமாலை 166
கோகுலம் 42
கோசமாபுரம் 142
கோட்டுவாத்தியம் 44
கோட்டைக்கொத்தளம் 19
கோத்திரம் 124

கோபாலர் 165
கோபுரம் 134
கோவிந்தன் 170
சகாதேவன் வ. 94
சகுனி 165
சக்கரவாளம் 31
சக்களத்தி 17, 49, 80, 119, வ. 6
சங்கரர் 139
சங்கரி 97
சங்கை 60, 67
சங்கோசம் 32
சசிமுகன் 104
சஞ்சீவி 31
சண்டாளி 73
சத்தியபாமினி 174
சத்தியவான் 52
சதுரங்கத் தலம் வ. 27, 28
சந்தடி 80
சந்ததி 115
சந்தனம் 54
சந்திர சூரியர் 95
சந்திர சேரன் 1
சந்திர வம்சம் 88
சந்திரன் 7, 13, 31, 95, 147
சந்தோஷம் 15, 14, 47
சபதம் 169
சமயம் வ. 51
சமித்தல் 123
சமுத்திரம் 95
சம்பிரமம் 26
சம்பிரம் வ. 20
சம்பு 137
சரசம் 32, 60, 122
சரணம் 53
சரப்பளி 54
சரஸ்வதி 4, 30
சருவுமுறை 80
சர்க்கரை 19
சர்ப்பனை 17, 123
சர்வாபரணம் 31
சலம் சாதித்தல் 48, 129
சவ்வாது 48
சளிகை 17
சனியன் 77
சாகசம் 47
சாதகம் வ. 5
சாதுரியம் 64
சராங்கதரன் 22 முதல் பலவிடங்களில்
சாரி 40, 76
சாவடி 16
சாஸ்திரசம்பன்னன் வ. 5
சாஷ்டாங்கம் 13
சிகண்டி 164
சிங்கம் 7, 79
சித்தர் 143, 146, 160, 171, வ. 88
சித்திராங்கி பல பாடல்களில் -
சிந்துகவி 43
சிந்துபதி 169
சிரஞ்சீவி வ. 77
சிலம்பு 43
சிலை 128, 169
சிவிகை 45, 132, 134
சிறிய தாயார் 49
சிற்பகன் 139
சிஷ்டசுமங்களம் 22
சீட்டு 91, 92, 94
சீதரம் 59
சீதரன் 59
சீதை 88
சீலை 134

சீவன் 55, 57
சீனர் 45
சுகந்தன் வ. 12
சுண்ணாம்புக்கல் 155
சுதந்திரம் 114
சுதன் 9, 11, 13, 89, 115
சுமுகன் 30
சுரேந்திரன் 7, 37
சூட்சம் 114
சூத்திரம் 108
சூரியவங்கிசம் 88
சூரியன் 13, 40, 42, 88, 95, 147, வ. 19, 24
சூர்ப்பனகை 88
சூறை 75
செங்கோல் 16
செந்தமிழரசர் 5
செண்பகப்பூ 31
செம்பவளம் 19
செம்பொன் 26, 91
செவ்வலரி 31
சேகரன் 47
சேஷாசலபதி 174
சேஷ்டை 73, 114
சொர்ண 19, 49, 107
சொர்ப்பனம் 134
சோங்கு 93, 94
சோபனம் 134, 174
சோரன் 94
சோறீர் 91
சௌபாக்கியம் 26
ஞாலம் 94
தசரதன் 88
தணல் 133
தண்டு 144
தண்ணீர்ப்பந்தல் 16
தத்தடி 27
தபசு 115
தம்பலம் 43
தரளம் 19, 31
தர்மபுத்திரர் 88, 166, 168, வ. 95
தலை ஒடு 86
தவசு 93
தவப்பயன் 82
தவளம் 31
தற்பரன் 15
தனஞ்செயன் 166, 170, 171
தனயன் 92, 94, 115, 127, 166, 171
தாசியர் 34
தாட்சணியம் 123
தாமசம் 76, 80
தாமரைமுகுளம் 31
தாரணி 107, 162
தாலாட்டு வ. 10
தாறுமாறு 64
தாஷ்டீகம் 80
திகம்பரம் 125
திகிரி 169
திங்கள் 109
திரியம்பகர் 174
திருமுறை 58
திருவேங்கடம் 174
திரேகம் 16
துங்கம் 31
துடியிடை வ. 52
துணிச்சல் 65
துந்துமி 13, 19
தும்புரு 44
துரியோதனன் 88, 164, 165, 166, 168
துரைத்தனம் 96
துரோணன் 165

துரோபதை 88
துர்ப்புத்தி 104
துலுக்கர் 45
துவாரகை 166
துற்வசனம் 25
துஷ்டநிக்கிரகம் 22
துஷ்டர் 50
தூண் 169
தூதுவர் 20 முதல் பல பாடல்களில்
தெலிங்கர் 45
தென்றல் 48
தேசபாஷை 8
தேசி 27
தேயு 166
தேர் 165
தேவகி 170
தேவர் 37, 139
தேவி 92
தொட்டில் 21, 89, 90
தொந்தரை 60
தொழும்பு 34
தோகை 91
தோரணம் 19
தோள் 16
தோஷம் 61, 71, 87, 103, 111, 116
நகக்குறி 32
நகரசோதனை 97
நகுலன் வ. 84
நகை 79
நஞ்சு 117, 127, 139
நட்சத்திரம் 134
நட்டணை 32
நந்தன் 174
நமன் 73
நரகம் 56, 58
நரி 159
நரேந்திரன் 7, 10, 13, 44
நவநாதசித்தர் 148, 149
நவரத்தினம் 12, 31
நளினம் 174
நன்மதி வ. 40
நன்னுதல் 89
நாடகம் 66
நாடகசாலை வ. 20
நாதர் 59
நாய் 159
நாரணர் 174
நாரதர் 44
நாராசம் வ. 45
நாராயணன் 174
நாரியர் 88
நாவலர் 5
நாற்றம் 85
நான்மறை 89
நித்திய சம்பூரணன் 13
நித்திரை 98
நித்திலம் 169
நிந்தனை 56, 70
நிருபன் 26, 39, 74, 82
நிர்மூடி 25, 72
நிஷ்டுரம் 139
நீதிமைந்தன் 8, 172, வ. 4 முதல் பல பாடல்களில்
நீலி 6, 67, 133, 154
நுண்ணறிவு 68
நூல் 68
நெஞ்செதக்கம் 114
நெடியோன் 107, 173
நெடுமதி 52
நெடுமால் 167

நெறியாளன் வ. 54
நேமநிஷ்டை 44
பகவான் 166
பங்கம் 82
பங்கயம் 147
பசுபதி 1, 2, 174
பச்சிலை 13
பஞ்சவர் 165
படுக்கை 16
பட்சி 16
பட்டபாடு 100
பட்டர் 36
பட்டாடை 26
பட்டாவளி 21
பண்டாரம் 127
பத்துமாற்றுத்தங்கம் 21
பரதேசம் 92, 93
பரதேசி 40
பரமேஸ்வரன் 47
பராக்கிரமம் 44
பராக்கு 124
பராபரம் 126
பராமுகம் 139
பரி 46
பரிகரி 166
பரிசம் 44
பரிச்சகம் 169
பரிச்சல் 113
பரிமணம் 42
பரிமளம் 22
பலிப்பாச்சு 94
பவளம் 31
பவுசு 119
பழிப்பு 65
பனங்காய் 116
பனை 128
பன்றி 45, 46
பன்னீர் 32, 48, 54
பாகை 54
பாக்கியம் 17, 104
பாண்டவர் 163
பாம்பு 45, 89, 90, 99, 117
பார் 46
பார்வதி 174
பால்பழம் 48
பாவபுண்ணியம் 84
பானு 18
பாஷாணம் 93
பிசகு 87
பிசாசு 67, 159
பிடரி 73
பித்தம் 57
பிரதானிகள் 84
பிரத்தியட்சம் வ. 5
பிரபந்தம் வ. 21, 44
பிரமாணிக்கம் 105
பிரம்மன் 86
பிராச்சிதம் 99
பிராணசிநேகிதன் 50
பிராணநேசி 35
பிராணன் 127
பிராமணர் வ. 60, 78
பிளவு 54
பிறை 94
பிறைநுதல் வ. 46
பீடை 104
பீமசேனன் வ. 84, 166
பீஷ்மர் 165
புடவை 54
புட்பம் 54

புண்ணியம் 94, 123
புத்திர சந்தானம் வ. 5
புத்திர பாக்கியம் 18
புத்திரன் 89
புந்தி 48
புரவலன் வ. 54, 44, 69
புருஷர் 19, 34, 58, 91, 122, 123
புருஷன் 44, 81, 92, வ. 17
புலி 33, 44, 45, 46, 117, 134, 138, 144, 159, 162
புல்குதல் 44
புவனமாபதி 141, 142
புறா 47
புன்மொழி வ. 40
பூச்செண்டு 31
பூசுரர் வ. 9
பூதம் 134
பூபதி 174
பூமன் 28, 37
பூமிதேவி 95
பூரணி 97
பூவடி 32
பூவணை 99
பூனை 38, 162
பூஷணம் 12, 21
பெட்டை 47
பெண்சாதி வ. 26
பெண்ணறிவு 68
பெண்மாதை 6
பெம்பு 84, 96
பேதமை 65, 68
பேய் 57, 67, 82, 87, 159
பேரண்டம் 46
பொதுமாதர் 43
பொய்யும் புரட்டும் 129
பொள்ளுவசனம் 61
பொன்னித்தாய். 3
பொன்னுலகம் 173
மகரக்கங்கணம் 13
மகாபூசை 98
மகாமரம் 88
மகிபன் 37
மகுடமுடி 39
மகேந்திரசித்தர் 158, 159, 160, வ. 85, 86
மகேந்திரன் 37
மச்சரம் 114
மஞ்சம் 47, 63, 94
மணிமுடி 19
மண்டபம் 36
மண்டலிகன் 47, 114, 143, வ. 56
மண்டலேஸ்பரன் 138
மதராசன் 32
மதனதியாகம் 70
மதனன் 8
மதன் 28, 66
மதி 9, 42
மந்திரிபிரதானிகள் 36
மயன் 128
மயில் 39
மரகதம் 19, 31
மராடர் 45
மருமகள் 80
மரை 38, 42
மலடி 119
மல்லிகை 33
மழலை 27, வ. 11
மழுப்படையான் 13
மறி 159
மறுமொழி வ. 18
மனக்கிலேசம் 108, வ. 52

மனஸ்தாபம் 71
மனையாட்டி 74, 91, 122
மன்மதராயன் 48
மன்மதரூபன் 37
மன்மதவிகாரம் வ. 35
மன்மதன் 55, 66
மாங்காய் 92
மாதவன் 170
மாதுளந்துளிர் 31
மாதையம்பதி 1, 3, 174
மாடை 26
மாணிக்கம் 31, 127
மாபதி 174
மாமனார் 80
மாயமான் 88
மாயவன் 164, 166, 167
மாயன் 162
மாயாவினோதன் 170
மாரன் 63
மார்த்தாண்டன் 47
மாளிகை 116
மாற்றவள் 67, 127
மான் 31, 38, 45, 88
மிருகம் 64
மின்னல் 47
மின்னிடை வ. 51
முகுந்தன் 174
முக்காடு 44
முசல்வலை 45
முத்தமிழ் 41
முத்திரியர் 45
மும்மாரி 109
முருகவள்ளல் 3
முல்லை 42
முனிவர் 59
மூடல் 41
மேகவாகனன் 167
மேருமலை 5
மோகம் 17, 49
மோதிரம் 100, 115
யட்சகானம் 1, வ. 2
யாக்கூலம் 127
யாளி 46
யானை 46
யோசனை 60
ரங்கா 174
ரதிமன்மதன் 11
ரத்தினம் வ. 7, 21
ரத்தினாங்கி பலபாடல்
ராகவன் 88
ராசகோளரி 116
ராசசேகரன் 116
ராசநரேந்திரன் வ. 3, 5 பலபாடல்
ர்ராச பூஷணம் 116
ராசமகேந்திரபுரம் வ. 4, 6
ராமர் 88
ருக்மணி 174
ருது காயம் 60
ருத்திர வீணை 44
ருத்திரன் 166
ருத்திராட்சம் 144
ரோஷம் 112
லிங்கம் 13
வச்சிரம் 31
வணிகன் 93
வண்டார்குழலி வ. 7
வர்த்தகம் 92
வழுதளை 15
வளையல் 72
வள்ளி 3, 35

வனசரர் 40
வனமாளிகை 174
வனிதை 58
வன்மம் 76
வஸ்துநாயகன் 52
வாசி 35
வாணிகன் 92, 93, 94
வாத்திமை 26
வாத்தியார் 140
வாயு 166
வாரணம் 6
வாலிபம் 81
வாழை 31, 134
வாளி 169, 170
வாறவேளை 80
வான்மீன் 86
விசயபவன் 37
விசயன் 165, 167, 169, 171
விசாரம் 67, வ. 48
விசித்திரம் வ. 12
விசேஷம் 64, 73, 112
விடாய் 110
விடையம் 54
விண் 47
விதரணிகன் 8
விதி 118, 128
விதுரன் 163
விநாயகன் 1
விபரீதம் 85, 103
விபூதி 44
விமலன் 146
வியாக்கூலம் 16, 42, வ. 37
விரகம் 48, 58, 60, 61, வ. 39, 43
விருது 43
விருத்தப்பா வ. 2
விலைமாதர் 43
வில்வித்தை 37
விவகாரம் வ. 58
விவேகி 92
வினையம் 51, 72
விஷம் 117
விஷரத்தம் 99
வீமன் 37, 158, 165, 166
வீரசைவன் 6
வீரபஞ்சாளர் 20
வெஞ்சொல் 61
வெட்கம் 67, 112
வெண்சாமரம் 36
வெண்டரளம் 13
வெண்ணீறு 13
வெள்ளைவாரணன் 3
வெற்றிலை 54
வேங்கை 39
வேசியர் 34, 35, 43
வேட்டை 48, 73, 74, 80, 81, 82, 85, வ. 26
வேணி 174
வேண்டி விநாயகன் 2, வ. 1
வேதன் 59
வேதியர் 6, 89
வேலன் 35, 48
வேஷநாடகம் 116
வேஷம் 73
ஜென்மம் வ. 5
ஸ்ரீகிருஷ்ணன் 170, 174
ஸ்ரீதரன் 170

பாட்டு முதற்குறிப்பு

(எண் – பாட்டு எண்)

அடுக்குமோ - சம்பை 57
அந்நகர் தனையாளும் - திபதை 7
அமுதே - குறளடித்தரு 24
அம்மாயீதென்ன - தரு 61
அய்யய்யோ - சம்பை 51
அய்யய்யோ - சம்பை 101
அய்யா என் மீதிலே - சம்பை 160
அரகரவென்று - அர்த்தசந்திரிகை 56
அரசனிட தேவி - சம்பை 113
அரசனே நீ - ஏகதாளம் 86
அரியநின் மகன் - சம்பை 80
அருச்சுனன் - திரிபுடை 169
அழுதுபலனென்ன - திரிபுடை 130
அழுதுரத்தினாங்கி - திபதை 159
அறியச்சொல்லென்ன - திபதை 142
அறியாதபிள்ளை - திபதை 123
அன்னமேயெங்கள் - சம்பை 107
அஷ்டமாசித்தர் - திபதை 148
ஆகாசவாணி - சம்பை 152
ஆசையானேனே - சிந்து 60
ஆய்ந்தபுகழ் - சம்பை 21
இக்குடிகேடி - திபதை 84
இடுவந்திக்கொடுமை - சம்பை 156
இதுகேட்டு - திபதை 16
இந்தடவதாகவே - சம்பை 9
இந்தநிர்மூடி - சம்பை 72
இந்நகரிலெந் - சம்பை 98
இப்படிச்சஞ்சலம் - ஏகதாளம் 10
இப்படிமந்திரி - திபதை 52
இருநிலம்புகழ் - சம்பை 96
இவர்களெய்ந்து - சம்பை 165
இவளுக்குப்புத்தி - திபதை 67
இவன் மனத்தில் - சம்பை 14
இறையவனும் - சம்பை 154
இனியிரேன் பூமி - திபதை 114
ஈதுசெய்து - ஏகதாளம் 20
உபகாரஞ்செய்ய - சம்பை 102
உருகியென்ன - சம்பை 136
உரைசெயுந்தமிழ் - கந்தபத்தியம் 4
உள்ளத்தினிற் - திரிபுடை 6
உன்பேச்சை - சம்பை 78
உன்மீதில் - சிந்து 37
உன்வார்த்தை - சம்பை 131
உன்னைநான்கண்டு - சம்பை 55
உன்னைப்பெற்ற - தரு 129
ஊரெங்கும் - திபதை 22
ஊரேது சேர்ந்த - சம்பை 145
எங்களுக்குந் தேகி - சம்பை 121
எண்ணிக்கையாய் - ஏகதாளம் 66
எத்தனை - சம்பை 46

எழுத்துடன் - திபதை	26
எனவேரத்தி - ஏகதாளம்	25
என்மகன் அபிமன் - திரிபுடை	171
என்மனத்தினில் - திபதை	31
என்றிவள் மார்பினி - ஏகதாளம்	120
என்று சித்திராங்கி - திபதை	155
என்று மடவார் - சம்பை	30
என்று மொழிந்திட - திரிபுடை	40
என்றுரைக்கவே - வெண்பா	79
என்றுவகைவகை - சம்பை	141
என்னசெய்வேன் - சிந்து	138
என்ன சொல்ல - திரிபுடை	77
என்ன சொல்லினுந் - ஏகதாளம்	125
என்னடிசொல் - ஏகதாளம்	75
என்னவே துயரம் - அர்த்த சந்திரிகை	112
என்னவேபெரி - திரிபுடை	106
ஒருவயது - சம்பை	27
ஒதுமடவே - சம்பை	115
ஒதுவர்புரி - ஏகதாளம்	89
கடுக்கன்சர - திரிபுடை	54
கண்டுசீறியே - திரிபுடை	70
கள்ளமாயிருக்கு - சம்பை	83
கானகத்தினில் - திபதை	13
கும்பிடுதெய்வ - ஏகதாளம்	63
குலமாதர்க்கு - சம்பை	34
கையில்மோதிரம் - திரிபுடை	100
கொண்டபெண் - திபதை	44
கொற்றவன் சொற்படி - திபதை	143
கோலகோத்திரம் - சம்பை	124
சதிருபாயன் - கந்தபத்தியம்	11
சந்திரசூரியர் - திரிபுடை	95
சரசமாகிய - திரிபுடை	122
சரணமம்மா - சம்பை	53
சாரங்கதரன்கதை - திபதை	173
சாரியதுபோன - சம்பை	76
சித்தரானவர் - திபதை	146
சிலையிலெழுதி - சம்பை	128
சிவன்மகிமை - சம்பை	23
சுமந்தனைத் தழுவி - திபதை	132
சூரியவெங்கிச - திபதை	88
சூரியனேக - ஏகதாளம்	42
செல்காலம் - சம்பை	8
சொல்லவென்ன - திபதை	157
சொன்னசொல் - திரிபுடை	116
சொன்னவள் - திபதை	99
சோபனமேசெய	174
தம்பியே அர்ச்சுனா - திரிபுடை	167
தர்மபுத்திரர் - சம்பை	168
தர்மபுத்திரனையே - திபதை	166
தற்பரனாத - ஏகதாளம்	15
தனக்குப் பிறந்த - திரிபுடை	58
தாங்கிமுலை - தரு	64
தீராதநிந்தை - சம்பை	105
துரியோத்தனன் - திபதை	164
தூதுவரனேகமாய் - திபதை	149
தூதுவர்மனம் - திபதை	137
தேனொழுகிய - ஏகதாளம்	28
தொட்டில்தனில் - சம்பை	90
நகரசோதனை - திரிபுடை	97
நகைத்துலகு - சம்பை	69
நமக்கென்ன - சம்பை	17
நாங்கள் வனத்தில் - சம்பை	39

நினையளித்திடு - திரிபுடை 135
நின்துயரமொரு - சம்பை 158
நீதான் சின்னப் - சிந்து 59
நீயும் நானு - திரிபுடை 82
நுண்ணறிவோர் - ஏகதாளம் 68
பசித்தவர்கள் - திரிபுடை 110
பணமென்றாலந்த - திரிபுடை 151
பாங்காக எந்த - சம்பை 126
பாண்டவர்கள் - சம்பை 163
பாதகிதன் - திபதை 127
பாரநாவலர் - திரிபுடை 5
பாராமல் மந்திரி - சம்பை 117
பாலகன் - சிந்து 18
பிள்ளையானது - சம்பை 111
பிள்ளையென்று - சம்பை 62
பிள்ளையைக்கண்ட - திபதை 94
பின்னையுஞ்சில - திபதை 134
பின்னையொன்று - சம்பை 65
புத்தியில்லையோ - ஏகதாளம் 32
புத்திரனும் - சம்பை 93
பெற்றதாய் - திரிபுடை 50
பேயென்றால்பேயு - சம்பை 87
பொருளும்நவ - திரிபுடை 12
பொறுத்திடமாட்டே - திபதை 139
போறீரல்லோ - சம்பை 91
போனதோர் - சம்பை 49
போனபின் - திபதை 92
போனோர்பெரியோர் - சம்பை 103
மக்களைப்பெற - சம்பை 119
மதியில்லையோ - திபதை 153
மந்திரிகள் - சம்பை 36
மயிரைவகுந்து - அர்த்தசந்திரிகை 33
மறைந்திடவேமதி - அர்த்தசந்திரிகை 161
மனக்கிலேசம் - திரிபுடை 108
மாதுமையவள் - திபதை 1
முத்தமிழை - சம்பை 41
முலைகளில் - திபதை 73
முறைபிசகு - சம்பை 109
மூடியிடு - சம்பை 43
மேலணிந்த விபூதி - திரிபுடை 144
மைந்தன்சார - திரிபுடை 45
மைந்தன்மேலாசை - சம்பை 150
மைபார்வை - தரு 71
ராசாதிராச - திபதை 47
வந்தபாவம் - திபதை 147
வந்தவழிப்படி - திபதை 104
வந்திடும்பிள்ளை - திபதை 162
வலியப்போய் - அர்த்தசந்திரிகை 29
வள்ளிநாயகி - சம்பை 3
வாடியிருப்ப - ஏகதாளம் 81
வாயிடும்பநல்லா - அட்டதாளம் 140
வாருமையா - சம்பை 172
விதியை நம்மாலே - அர்த்தசந்திரிகை 118
விரையுமொளி - திரிபுடை 19
வெய்யகணையே - சம்பை 170
வேசியருக்கு - திரிபுடை 35
வேடரிட - சிந்து 48
வேடர் வனத்தில் - ஏகதாளம் 38
வேடிக்கைபார் - சம்பை 133
வேட்டைக்குப்போன - ஏகதாளம் 85
வேட்டைபோன - திரிபுடை 74
வேண்டியபேர் - ஏகதாளம் 2

Our Publications pertaining to Palm-leaf Manuscripts

1. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume I, Part I, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1990, Rs.177.50 US $ 25
2. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume II, Part II, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1990, Rs.177.50 US $ 25
3. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume II, Part I, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1991, Rs.177.50 US $ 25
4. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume II, Part II, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1992, Rs.225.00 US $ 25
5. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume III, Part I, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1993, Rs.250.00 US $ 50
6. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume III, Part II, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1993, Rs.250.00 US $ 50
7. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume IV, Part I, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1996.
8. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume IV, Part II, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1996.
9. The Wandering Voice: Three Ballads from Palm-leaf Manuscripts, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1987, Rs.120/- US $ 32
10. The Art of Drumming (Mattalaviyal), General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1988, Paperback Rs.90/- US $ 20 Deluxe Rs.140/- US $ 30
11. The Dateless Muse: The story of Veṅkalarāja̲n, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1988, Paperback Rs.80/- US $ 20 Deluxe Rs.120/- US $ 30
12. The Unsung Melodies: The Story of Palavēcam Cērvaikkāra̲n, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1989, Paperback, Rs.75/- US $ 18 Deluxe Rs.100/- US $ 25
13. The Divine Pilgrimage : Perumāl Cāmi Katai, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1992, Rs.200/- US $ 40
14. A Tale of Romance : Sakuntalai Nātakam, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1993, Rs.300/- US $ 50
15. Varma Cuttiram, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1994, Rs.400/- US $ 50
16. Nīli Yaṭcakāṉam, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1994, Rs.150/- US $ 20
17. A Tale of Nemesis : Nili Yatcakāṉam, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1996, Rs.250/- US $ 20
18. Pennaraciyar Katai, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1995, Rs.100/- US $ 20
19. The Valorous Virgins : Pennaraciyar Katai, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1995, Rs.220/- US $ 35
20. The Epic Eternal : Rāmar Katai, Part I, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1996, in print
21. The Epic Eternal : Rāmar Katai, Part II, General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1996, in print